

# சோதிடவியல்



முனைவர். தி. மகாலட்சுமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 0113.

# சோதிடவியல்



முனைவர் தி. மகாலட்சுமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **JOTHIDAVIYAL** |
| Author | : | Dr. T. Mahalakshmi<br>Research Assistant<br>I.I.T.S.<br>Chennai - 600 113. |
| Publisher | : | International Institute of Tamil Studies,<br>C.I.T. Campus<br>Taramani<br>Chennai - 600 113. |
| Publication Number | : | 241 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | November 1996 |
| Paper Used | : | TNPL - 16 kg Creamwove |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing types used | : | 11 pt |
| Number of Copies | : | 1000 |
| Price | : | Rs.70/- |
| Total Pages | : | 14 + 314 |
| Printers | : | Shri Vignesh Prints<br>Chennai - 33.<br>Ph : 484 8486 |
| Binding | : | Paper Pack |
| Subject | : | Astrology |

வெள்ளிவிழா வெளியீடு

டாக்டர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-113.

# அணிந்துரை

**உ**லகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1979இல் சுவடியியல் பிரிவை அமைத்து, முதுகலைச் சுவடியியல் பட்டய வகுப்பையும் தொடங்கியது. ஆண்டுதோறும் பட்டயக் கல்வி பெற்ற மாணவர் உருப்பெற்றதுடன் சுவடிப் பதிப்பு நூல்களும் வெளிவரலாயின. அவ்வாறு நடத்தப்பட்டுவரும் சுவடியியல் வகுப்பில் ஒரு மாணவராகச் சேர்ந்தவர் முனைவர் **தி. மகாலட்சுமி** அவர்கள். அவருக்குச் சுவடிப் பதிப்பில் உள்ள ஆர்வமும், அவரது அயராத உழைப்பும், சுவடியியலுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட திறமும் இன்று அவரை நிறுவனச் சுவடிப் பிரிவின் பொறுப்பாளராகத் திகழச் செய்தன. அவர் இதுகாறும் சோதிட நட்சத்திரமாலை, சித்த மருத்துவ மணிகள் போன்ற நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

சோதிடம் தொடர்பான ஆராய்ச்சி நூல்கள் தெளிவாக, ஆழமாக இல்லாத நிலையில் முனைவர் தி. மகாலட்சுமி அவர்கள் பதிப்பித்துள்ள சோதிடவியல் என்ற ஆராய்ச்சி நூல் ஒரு முன்னோடியாக விளங்குகின்றது. சோதிடத்தையும் ஆராய்ச்சிக்கு உட்படுத்திப் பார்ப்பது ஓர் அரிய முயற்சியாகும். அவ்வகையில் உயர்நிலை ஆய்வாக உருவாக்கப்பட்ட இந்நூல் சோதிட ஆராய்ச்சிக்கு ஒரு மைல்கல் போன்றது. தமிழுலகம் மட்டுமன்றி அனைவரும் பயன்பெறும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இம்முயற்சியில் ஈடுபட்ட **முனைவர் தி. மகாலட்சுமி** அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன். திட்பமும் நுட்பமும் செறிந்த இவரது ஆராய்ச்சித்திறன் போற்றுதலுக்குரியது. அவரது ஆய்வுப் பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

இந்நிறுவனச் செயல்கள் அனைத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறை அமைச்சர் **முனைவர் மு. தமிழ்க்குடிமகன்** அவர்கட்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறைச் செயலாளர் **வை. பழனிச்சாமி** இ.ஆ.ப. அவர்கட்கும் எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக.

இந்நூலினை வனப்பாக அச்சிட்டுத் தந்த ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ் அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி.

**இயக்குநர்**

# முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்மொழியில் பொதிந்துள்ள அளவிடற்கரிய செய்திகளைப் பலதுறைகளின் வாயிலாக ஆய்வுகள் நடத்தி வெளிக்கொணரும் அரும்பெருந் தொண்டினைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்து வருகிறது. இதன் உட்பிரிவுகளில் ஒன்றான சுவடித்துறையில் இலக்கியம், இலக்கணம், மருத்துவம் ஆகியவற்றில் பல்வேறு ஆய்வுகள் செம்மையாக நடத்தப் பெற்றுள்ளன. அவ்வடிப்படையில் சோதிடவியல் தொடர்பாக இவ்வாய்வு வெளியிடப் படுகிறது. சோதிடவியல் துறையில் பலர் புகழ்பெற்று விளங்கினாலும், இத்துறை மக்கள் செல்வாக்குப் பெற்ற துறையாக விளங்கினாலும், சுவடிகளுள் குறிப்பிடத்தக்க அளவில் சோதிடச் சுவடிகள் கிடைத்தாலும் ஆய்வுகள் இதுவரையில் முறையாக நடத்தப்படாத நிலையே இருந்து வருகிறது. இந்நிலையில் சோதிடஞ் சார்ந்த இவ்வாய்வு நூல் வெளியிடப் பெறுகிறது. கற்றறிந்த சான்றோர் பலரிடம் சோதிடவியல் துறையின் மீது அறிவும், ஆர்வமும், சரியான கருத்தும் இல்லாத நிலை நிலவுவதால் அவர்கள் இந்நூலைப் படிக்காமல் ஒதுக்கக்கூடும். அந்நிலையில் அவர்கள் முன்னுரையை மட்டுமே படிக்க நேரிடும் போது சோதிட வியலின் உண்மை நிலையை அறிந்து கொள்ள ஓரளவு வாய்ப்பை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையில் முன்னுரை சற்று விரிவாகவே அமைகின்றது.

1988இல் சுவடியியல் பட்டயம் பயின்றபோது பட்டயத்திற்காக ஓர் ஆய்வேட்டினை அளிக்க வேண்டிய நிலை இருந்தது. இலக்கியம், இலக்கணம், மருத்துவம், மக்கள் இலக்கியம் முதலான துறைகளில் ஆய்வேடுகள் பல அளிக்கப் பெற்றிருந்த நிலையில் சோதிடத் துறையில் ஆய்வேடுகள் நிறுவனத்தின்வழி அளிக்கப் பெற்றிருக்கவில்லை. எனவே, சோதிடம் பற்றித் தெரியாத நிலையிலும், சோதிடச் சுவடிகளும் பதிப்பிக்கப்பட வேண்டியவையே என்றெண்ணி 'நட்சத்திரமாலை' என்ற சுவடியைப் பதிப்பிக்க முனைந்தேன்.

சோதிட அறிவு இன்மையால் இச்சுவடியைப் பதிப்பிப்பதில் ஏற்பட்ட சிக்கல்களைக் காட்டிலும் அதன் தோற்றம், வளர்ச்சி, அடிப்படைச் செய்திகள், நுட்பச் செய்திகள், விளக்கங்கள், அறிவியலின் ஆளுமை முதலானவற்றை அறிவதில் பெரும் இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. பல்வேறு சோதிட நூல்களைப் புரட்டியபோதும் சோதிட அடிப்படைச் செய்திகள் புரிந்ததே ஒழிய, சோதிடச் செய்திகள் சிறப்பு நிலையில் கிட்டவில்லை. ஆய்வுச் சிந்தனைகளை இத்தகைய நூல்களில் காண்பது அரிதாக இருந்தது. எனவே, சோதிடத்தின் வரலாறு, வகைகள், திறனாய்வு, ஒப்பாய்வு என்ற ஆய்வுநிலைச் செய்திகள் நூல்களின்வழி கிட்டுதல் அரிது என்ற முடிவுக்கே வரமுடிந்தது. எனவே இதுபற்றிய ஆய்வில் பின்னர் ஈடுபட வேண்டும் என்ற எண்ணத்துடன் 'நட்சத்திரமாலை' என்ற ஆய்வேட்டினை முடித்துக் கொடுத்துவிட்டேன். இருப்பினும் மனத்தில், சோதிடம் தொடர்பான பல செய்திகள் ஒரே நூலில் தொகுப்பாகக் கிடைக்கப் பெறின் அதுவும் பயனுடையதாக அமையும் என்ற எண்ணம் இருந்துகொண்டே இருந்தது. இத்தகைய சோதிட ஆய்வு நூல்கள் பல வெளிவரின் மருத்துவம் தெரியாத மாணவர் மருத்துவச் சுவடியைப் பதிப்பிக்க முன் வருதல் போல், சோதிடம் தெரியாத மாணவர்களும் சோதிடவியல் துறையைப் பற்றி அறிந்து சோதிடச் சுவடியைப் பதிப்பிக்க முன்வர வாய்ப்பு ஏற்படும் என்ற சிந்தனையும் இருந்தது.

இந்நிலையில் சுவடிப் பட்டய ஆய்வேட்டை 'நர்மதா பதிப்பக உரிமையாளர்' என்னுடைய இரண்டாவது நூலாக வெளியிட்டார். முதல் நூலான 'சிலப்பதிகார ஆய்வுகள் ஓர் ஒப்பாய்வு' என்ற நூலை வெளியிடும்போது இனி தரும் நூல்களைப் பொதுமக்கள் அனைவரும் வாங்கும்படியாக எழுதிக் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டார். இரண்டாவது நூலான நட்சத்திர மாலையை அவர் வெளியிட்டபோது, எவ்வளவு சோதிடச் சுவடிகளை நீங்கள் எழுதிக் கொடுத்தாலும் உடனுக்குடன் வெளியிடுகிறேன் என்று கூறினார். எனவே சோதிடச் சுவடிகளுக்குப் பொதுமக்களிடையே மிகுதியான வரவேற்பு உள்ளது என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது.

சுவடியியல் பட்டயத்தை முடித்த எனக்கு இந்நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்புக் கிட்டியது. அப்போது சோதிடம் தொடர்பான சிந்தனை என்னை மீண்டும் ஆட்கொண்டது. ஆயின் சோதிடத்திற்குக் குறிப்புகள் கிடைப்பதே அரிது என்ற எண்ணம் இருந்ததால் சோதிடம் பற்றிய தனிநூல் எழுதத் துணிவு ஏற்படவில்லை. எனவே நட்சத்திரமாலையைப் பதிப்பித்தது போல் மீண்டுமொரு சோதிட நூலைப் பதிப்பித்து, அதன் முற்பகுதியில் சோதிடம் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கொடுப்போம் என்று முடிவு செய்தேன். அதன்படி இந்து முறையில் பலன் கூறுவதற்கு உயிர்நாடியாக விளங்கும் 'தசாபுத்திப்பலன்கள்' என்ற சுவடியைப் பதிப்பிக்கத் தேர்ந்தெடுத்தேன்.

அந்நூலிற்கென்று சோதிடவியல் பற்றிய செய்திகளைத் தொகுத்தபோது அவை பல நுட்பமான செய்திகளைத் தன்னுள் கொண்டு பரந்து விரிந்து நிற்பதைக் காணமுடிந்தது. ஆதலால் நூலின் ஒரு பகுதியாக இத்தகைய செய்திகளைக் கொடுப்பதைவிடத் தனிநூலாகக் கொடுப்பதே சிறந்தது எனத் தோன்றியது. எனவே 'தசாபுத்திப் பலன்கள்' என்ற நூலைத் தனியாகப் பதிப்பித்துவிட்டு, அந்நூலிற்கென்று திரட்டிய செய்திகளுடன் மேலும் சில கூடுதலான செய்திகளைச் சேர்த்து 'சோதிடவியல்' என்ற தனிநூலாக வெளியிட முடிவு செய்து இம்முயற்சியில் ஈடுபட்டேன். ஒரு நூலின் கிளைப்பகுதி என்ற அளவில் இல்லாமல், தொடக்கத்திலேயே தனிநூலாக வெளியிட வேண்டும் என்ற எண்ணத்துடன் செயலாற்றி இருப்பின் இந்நூல் இன்று தோன்றி இருப்பதைக் காட்டிலும், ஆழமும் விரிவும் செறிவும் நிரம்பிய ஒன்றாகத் திகழ்ந்திருக்கும். சோதிட ஆய்வுகளுக்குத் துணை நிற்கும் என்ற வகையில் இந்நூலினை உருவாக்கமுற்பட்டபோது, ஆய்வுலகிற்கு மட்டுமன்றி மக்கள் சமுதாயத்திற்கும் நேரடியாகப் பயன்தரும் நூலாக இது விளங்கும் என்பதை அறிய முடிந்தது.

மக்கள் வாழ்க்கை முறைகளை, மரபுகளை, பண்பாடு களை, நம்பிக்கைகளைத் தெளிவுபடுத்தும் வகையில் பல ஆய்வுகள் எழுந்திருக்கின்றன. சூழல், தேவை கருதிப் பல் நோக்கு நிலைகளில் நடைபெறும் அனைத்து ஆய்வுகளும் மக்களைச் சென்றடைய வேண்டுமென்ற கட்டாயமில்லை.

இருப்பினும் தனிமனிதனை, மனிதக் குழுக்களைப் பற்றிய சமுதாயவியல் ஆய்வுகள் தோன்றிவிட்டதைப் பார்க்கும் போது மக்கள் பயன்பாட்டில் சிறப்பிடம் பெற்று விளங்கும் இத்துறையில் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாதது என்பது புலனாயிற்று.

மக்கள் சமுதாயத்தில் வாழும் மானிடருக்கு மனவலிமை என்பது இன்றியமையாத ஒன்றாகத் திகழ்கிறது. ஆயினும் அனைவரும் அனைத்து நேரங்களிலும் மனவலிமை உடையவராகத் திகழ்வதில்லை. மனவலிமையை இழந்த நிலையில் அதனை ஈடுசெய்ய யோகம், தியானம் போன்ற பல வழிமுறைகள் இருப்பினும் பலரது மனம் அதில் நாட்டம் கொள்வதைவிட, சோதிடத்திலேயே நம்பிக்கையும், நாட்டமும் கொண்டு திகழ்வதை நடைமுறையில் காண முடிகிறது. மக்கள் வாழ்வில் செல்வாக்கு பெற்ற சோதிடத்தை இல்லாமல் செய்யும் முயற்சியில் ஈடுபட இயலாது. அது அவ்வளவு எளிதில் நடைபெறக்கூடிய செயலன்று. சோதிடம், அது நிலவுகின்ற தன்மையால் பல தவறான கருத்துகளை மக்களிடையே வேரோட விட்டிருக்கிறது. இவற்றிலுள்ள குறைகளைதல் என்பது ஓரளவு நன்மை பெறவாவது வாய்ப்பை ஏற்படுத்தும்.

சோதிடத்திலுள்ள பொய்ம்மைகளை, குறைபாடுகளை, மாற்றங்களை, அறியாமையை, ஒழுக்கக்கேடுகளை, குழப்பங்களை, பொருள் இழப்புகளை, ஏமாற்றங்களை, கண்மூடித்தனமான, முரட்டுத்தனமான போக்குகளை ஆய்ந்து சோதிடம் பற்றிய தெளிவை, உண்மை நிலையை மக்களுக்கு ஏற்படுத்தும்போது மக்கள் இத்தகைய போக்குகளிலிருந்து விடுபட முடியும்.

சோதிட விதிகளையும் கணக்கிடு முறைகளையும் கற்றுத் தேர்தல் என்பது அரிய, கடின பணி. ஆயினும் அடிப்படை விதிமுறைகள் சிலவற்றை அறிந்து கொள்ளுதல் என்பது அனைவருக்கும் எளிதான ஒன்று. இவ்வடிப்படையில் எழுதப்படிக்கத் தெரிந்த அனைவரும் மிகமிகக் குறுகிய காலத்தில் தாமாகவே சோதிடத்தின் அடிப்படை விதிகளைக் கற்றறிந்து கொள்ள முடியும். இந்நிலை ஏற்படின் சோதிடத்தைச் சொல்லி யாரும் மக்களை ஏமாற்றிவிட

முடியாத அளவிற்கு விழிப்புணர்ச்சி பெறவும், தலை எழுத்து என்று சோர்ந்துவிடாமல் செயல்படவும் முடியும். நூல்களைப் படிப்பதற்கென்றே நேரத்தை ஒதுக்கும் மக்களில் சிலர் சோதிட நூல்களைத் தீண்டத்தகாத நூல்களாக ஒதுக்குகின்றனர். பலர் சோதிடவியல் பற்றிய அறிவு உள்ளதோ இல்லையோ பலன் அறியும் நோக்குடன் வாங்கி அதில் கூறப்பட்டுள்ளனவற்றை நம்பிச் செயல்படத் தொடங்குகின்றனர். இந்நிலைகளை மாற்றி அறிவியல் அடிப்படையில் சோதிடவியலின் பலன்களை மக்கள் அறியும்படிச் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

சோதிடம் மக்களுக்குத் தேவையா, தேவையில்லையா, சோதிடம் பொய்யா, மெய்யா என்ற கேள்வி எழுப்பப் படுவதைக் காட்டிலும் இது பொய்யாக இருப்பினும், மெய்யாக இருப்பினும் இதுபற்றிய ஆய்வு தேவை; ஆய்வுக்குப் பின்னரே இதுபற்றிய முடிவு எடுக்கப்பெறுதல் வேண்டும். எந்த ஒன்றையும் ஏற்கவோ, மறுக்கவோ வேண்டுமானால் அதுபற்றிய முழுமையான அறிவுத் தெளிவு இருத்தல் வேண்டும். சோதிடத்தைப் பற்றி அனைவரும் அறிய வேண்டுமென்பதில்லை. ஆயின் அது பற்றி முழுமையாக அறியாத நிலையில் குறை கூறுவதென்பது ஏற்புடைத்தன்று. தங்களுக்குப் புரியாத அனைத்தையும் அர்த்தமற்றவை அவசியமற்றவை எனப் புறக்கணிக்கும் மன நிலையே பலர் சோதிடம் பொய்யென்று கூறுவதற்கு அடிப்படைக் காரணமாகிறது. இத்தகைய வர்களின் அகக் கண்கள் திறக்க வழி ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்நிலை ஏற்பட முதலில் சோதிடச் சுவடிகள் முழுமையாகப் பதிப்பிக்கப்பட வேண்டும். இதற்கெனப் பெரிய அளவில் திட்டம் வகுக்கப்பட்டு ஆழமான பல்துறைக் கலப்பாய்வு, ஒப்பாய்வு முதலானவை நிறுவனங்களின்வழி நிகழ்த்தப்பட வேண்டும்.

தற்போது சோதிடம் குறித்துத் துறை ஆய்வு மேற்கொள்ளப்பட்ட இச்சோதிடவியல் ஆய்வு, பல்வேறு தலைப்புகளின்கீழ் தொகுத்தும், வகுத்தும், ஆய்ந்தும் தரப்பட்டுள்ளன. இதில் இடம்பெற்றுள்ள செய்திகள்

மேலும் பல விரிவுகளுக்கும் விளக்கங்களுக்கும் இடம் தரலாம்; புதிய கருத்து மாற்றங்களுக்கு வழிவகுக்கலாம்; தீர்வான முடிவுகள் தரப்படலாம்; தரப்பட்டுள்ள முடிவுகள் சரியென நிறுவப்படலாம். மேலுமிதில் சில ஆய்வு முடிவுகள் நூலின் இடையிடையே தரப்பட்டு, இனிமேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுகளும் ஆங்காங்கே கோடிட்டுக் காட்டப் பட்டுள்ளன. 'சோதிடமும் சமுதாயமும்' என்ற இயலில் இடம்பெறும் செய்திகளுள் சில, ஆய்வாளர் தம் அனுபவத்தில் அறிதல், சுற்றுப்புறச் சூழலில் நிகழ் வனவற்றைக் கண்டு உய்த்துணர்தல், தகவல் திரட்டும் நோக்குடன் தகவலாளி அறிந்தும் அறியாமலும் திரட்டுதல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தரப்பட்டுள்ளன. நூல்விரிவு கருதி **'இலக்கியத்தில் சோதிடம்'** என்ற பகுதி இந்நூல் வெளிவரும் அதே நேரத்தில் தனி நூலாக வெளிவருகின்றது.

## நூற்பயன்

1. சோதிடம் தொடர்பான பன்நோக்கு ஆய்வுகளை இனங்காட்டுவதாக அமையும்.
2. சோதிடச் சுவடிகளைப் பதிப்பிக்கத் துணைநின்று, சோதிடத்தில் ஆழமான ஆய்வுகள் எழுவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்து, சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதற்கு உறுதுணை புரியும்.
3. காலந்தோறும் நிலவிய கருத்து முரண்பாடுகளையும், கருத்து வகைப்பட்ட குழுக்களையும் இனங்காண இவ்வாய்வு துணைபுரியும்.
4. எடுத்துக்கொண்ட தலைப்பில் கிடைக்கும் செய்திகளைத் தொகுத்து, வகைப்படுத்தி அவற்றை ஆய்ந்து முடிவு கூறும் ஆராய்ச்சிப் பாங்கு முழுநிறைவு பெற மேலும் பல செய்திகளைத் திரட்டி ஆய்வை நிறைவாகப் பெறவும், மேலும் பல ஆராய்ச்சி நூல்கள் எழவும் இந்நூல் துணைநிற்கும்.
5. இத்துறையின்கண் ஆய்ந்து கற்போர் துணிந்து நுழைந்தால் மூடத்தனத்தை நீக்குவதோடு திட்டமிட்ட பாதையை மக்களுக்கு வகுத்துத்தர முடியும்; சிக்கல்கள் தீரும்; நல்வழி பிறக்கும்.

## எதிர்காலத் திட்டங்கள்

1. சோதிடத்தில் சமுதாயம் பற்றிய ஆய்வு செம்மையாக வகைப்படுத்திக் காட்டப்பட வேண்டும். சோதிடத்தினால் ஏற்பட்ட நன்மை தீமை முதலான பொருள் பொதிந்த அனுபங்களை நிகழ்ச்சி ஆய்வுக்கு (Case Studies) உட்படுத்தி மக்களிடம் நிலவுகின்ற சோதிடம் தொடர்பான அனுபவக் கருத்துகள் அனைத்தும் தொகுக்கப் பெறுதல் வேண்டும்

2. பொதுவான சோதிடக் கோட்பாடுகள் உருவாக வேண்டும்.

3. தவறான நம்பிக்கைகளும், அதனால் விளையும் தீய பலன்களும் ஒழிந்து அரிய சோதிடக் கலையின் மேன்மை புலப்பட வேண்டும்.

4. ஏமாற்றுதலும், பணம் பிடுங்குதலும், மூடநம்பிக்கையும், அதனால் ஏற்படும் பாதிப்பும் விலக வேண்டும்.

5. சோதிடத்தை மறைவாகப் பயன்படுத்த விரும்பும் இழிநிலை ஒழிய வேண்டும். சோதிடம் மானுடவியலின் மறைக்க முடியாத பகுதி என்பது உணர்த்தப்பட வேண்டும்.

6. பஞ்சாங்கத்தைப் பயன்படுத்தத் தெரிந்தவரும், சாதகம் கணிக்கத் தெரிந்தவரும், பொழுதுபோக்கிற்காகக் கற்றவரும் நன்முறையில் ஆழமாகச் சோதிடத்தைக் கற்பதற்கு முன்பே சோதிடராக உலவும் நிலை நீங்க வேண்டும்.

7. சோதிடவியல் முறையாகக் கற்பிக்கப்பட வேண்டும். சோதிடப் பாடத்தை நடத்துவதற்கு இப்போதுள்ள சோதிடப் பாடங்கள் மட்டுமன்றி சோதிட ஆய்வு நூல்களும் பாடநூல்களாக அமைதல் வேண்டும்.

8. மருத்துவப் பட்டம் போன்று, சோதிடப் பட்டம் பெற்றவர் மட்டுமே சோதிடம் கூறக்கூடிய நிலை உருவாக வேண்டும்.

9. சோதிடத்திலுள்ள கணக்கிடு முறைகள் பொதுமைப் படுத்தப்பட்டு, சோதிடர் பலரும் ஒரே மாதிரியான கணக்கிடு முறைகளைப் பின்பற்றக் கூடிய நிலை உருவாக வேண்டும்.

10. யோகம், சித்த மருத்துவம் சோதிடம் ஆகிய மூன்றும் இணைந்த உயர்கல்வி முறை உருவாக்கப்பட வேண்டும்.

11. மருத்துவம், இலக்கியம், வானியல், புவியியல், உளவியல் போன்ற பிற துறைகளுடன் இணைந்து சோதிடத்துறை வளர வேண்டும்.

12. சோதிடம் பிற துறைகளைக் காட்டிலும் பயனுடைய சிறந்த துறையாக அமைய வேண்டும்.

13. அனைத்து முறைக் கல்வியிலும் சோதிடம் ஒரு பாடமாக வைக்கப்பட வேண்டும்.

14. சோதிடச் சுவடிகள் அனைத்தும் பதிப்பிக்கப்பட வேண்டும். இதுகாறும் அச்சில் வராத சோதிடச் சுவடிகள் எவையெவை என்பது அறியப்பட்டு முதலில் இவையனைத்தும் வெளிவருதல் வேண்டும்.

15. உயராய்வு நிறுவனங்களில் சுவடித் துறையின் உட்பிரிவாகச் சோதிடவியல் பிரிவு உருவாக்கப்பட வேண்டும்.

16. நாட்டுப்புறப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், வழக்குச் சொற்கள் முதலானவற்றிலுள்ள சோதிடச் செய்திகள் முழுமையாகத் தொகுக்கப்பட வேண்டும்.

17. கோள்கள், நட்சத்திரங்கள் தொடர்பாக இலக்கியங் களிலும், வழக்கிலும் இடம் பெற்ற புராணக் கதைகள் அனைத்தும் தொகுக்கப்பெற வேண்டும்.

18. இந்நூலில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதியும் தனித் தனி நூல்களாக உருவாதல் வேண்டும்.

19. சோதிடப் பயிலரங்குகள், கருத்தரங்குகள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடத்தப்பட வேண்டும்.

# உள்ளடக்கம்

## இயல் ஒன்று

# சோதிடத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

மனித வாழ்வில் நிகழ்வன யாவும் ஆய்வுக்குட் படுத்தப்பட வேண்டும். அவ்வகையில் மக்கள் வாழ்வுடன் இரண்டறக் கலந்து விளங்கும் சோதிடவியலைப் பற்றி முறையான ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஆய்வுகள் இதுபோன்ற துறைகளில் செய்யப்படும்போதுதான் அதன் உண்மைத் தன்மைகள் விளங்கும். இவ்வடிப்படையில் சோதிடவியலைப் பற்றி இதுவரை முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையில் முதல் முயற்சியாக இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதன் தொடர் முயற்சியாகப் பின்னர் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட இவ்வாய்வு வழிவகுக்கும்.

தற்போது ஆய்வு வளர்ச்சியை நோக்கும்போது விரிவடைந்த நிலையைக் காணமுடிகின்றது. அதன் எல்லையும் பொருளும் பரந்துபட்ட நிலையைக் காட்டுகின்றது. தொடக்க காலத்தில் இலக்கிய ஆய்வுகளாக இருந்த நிலை மாறித் தற்போது ஒரு கூட்டத்தை, ஒரு மனிதனை, ஒரு இடத்தைப் பற்றியதுமான ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இந்த வளர்ச்சி யாவும் ஆய்வின் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது. அந்த வகையில் அன்றிலிருந்து இன்றுவரை மக்கள் வாழ்க்கையில் சோதிடம் ஓர் அங்கமாக அமைகின்றது. எனவே சோதிடம் பற்றிய ஆய்வு மிகவும் தேவையான ஒன்றாக அமைகின்றது. 'சோதிடம்' பயனுடையதா? பயனற்றதா? என்பதை முழுமையாக ஆய்வு நிகழ்த்திய பிறகே முடிவு செய்ய வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இந்த அடிப்படையில் உலக நாடுகளில் சோதிடத்தின் தோற்றம் வளர்ச்சி எங்ஙனம் அமைகின்றது என்பதை அறிதல் இன்றியமையாததாகின்றது.

உண்டு உயிர்த்து இனப்பெருக்கம் செய்து கொண்டு விலங்கோடு விலங்காக வேட்டையாடி வாழ்ந்து வந்த மனிதன் தன்னைச் சுற்றி இயங்கி வரும் இயற்கையை ஒரு வியப்போடு காணலுற்றான். சுள் என்று சுட்டெரிக்கும் சூரியன், எழில் பொங்கும் சூழலை ஏற்படுத்தும் வெண்ணிலவின் தண்ணொளி; அச்சத்தை ஏற்படுத்தும் காரிருள்; மின்னிக் கண் சிமிட்டும் விண்மீன்கள்; அதிர்ச்சிக் குள்ளாக்கும் பேரிடி; மின்னல்; திகைப்பை ஏற்படுத்தும் பெருவெள்ளம்; பற்றிக் கொண்டால் அழித்துவிடும் பெருந்தீ; பெருமரங்களைச் சாய்த்து விடும் பேய்க்காற்று போன்ற பல்வேறு விதமான இயற்கையின் சீற்றங்களைக் கண்ணுற்றபோது இவற்றிற்கெல்லாம் காரணம் என்னவாக இருக்க முடியும் என்ற சிந்தனை அவனுள்ளே எழலாயிற்று.

ஆதிமனிதன் சிந்திக்கத் தொடங்கியபின் அவனுக்கு எதைக் கண்டாலும் அது தன் நிகழ்காலத்தை, எதிர்காலத்தைப் பாதிக்குமோ என்ற அச்சம் ஏற்பட்டது. மழை, மின்னல், வெளிச்சம் (பௌர்ணமி), இருட்டு (அமாவாசை) போன்ற 'விண்வெளி அச்சங்கள்' அவனுக்குச் சற்று மிகுதியாகவே இருந்தது. எனவே அவன் விண்வெளி நிகழ்ச்சிகளைச் சகுனங்களாக்கினான். விண்வெளிச் சகுனங்களை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கியதால் இராசிவட்டம் கோள்களின் சுழற்சி முதலியவற்றைக் கண்டறிந்தான். இக் கண்டுபிடிப்புகள் நாளடைவில் சோதிடமாக வளர்ச்சியடைந்தது. 'விதிக் கொள்கை' சோதிடத்திற்கு மேலும் வலுவூட்டியதால் சோதிடம் மக்களிடை யே ஆழமாக வேரூன்றத் தொடங்கியது. இங்ஙனம் தோன்றிய சோதிடம் உலக நாடுகள் பலவற்றிலும் எப்படித் தோன்றிப் பரவியது என்பதும் அறிதற்குரியது.

உலக அரங்கில் வானவியல் பற்றிய சிந்தனை பல்வேறு நாடுகளில் பல்வேறு காலக்கட்டங்களில் அத்துறை அறிஞர்களால் பேசப்பட்டு வந்துள்ளது. இச் சோதிடவியல் தோன்றிய காலம், அதனைத் தோற்றுவித்தவர், தோன்றிய இடம் போன்றவற்றை அறுதியிட்டுக் கூறிவிட முடியாது. ஆயினும் உலக அரங்கில் எகிப்து, பாபிலோனியா, சுமேரியம், இந்தியா முதலிய பழம்பெருமை வாய்ந்த நாடுகளில் அக்காலந் தொட்டே சோதிடம் பற்றிய செய்திகள் காணப்படுவதை அறிய முடிகிறது.

## பாபிலோனியா

பழங்காலத்தில் நாகரிக வளர்ச்சியில் சிறப்புற்றோங்கியிருந்த கலாச்சார இனங்களில் பாபிலோனியா, மெசபடோமியா, சால்டியா முதலியன குறிப்பிடத்தக்கவை. சோதிட நூலும், அதனால் வானநூலின் தோற்றமும் அங்குத்தான் தொடங்கின என்று வரலாற்றாசிரியர் கூறுகின்றனர்.[1] இவ்விடத்தில் இருந்து சோதிடவியலானது மேற்கு முகமாக எகிப்து, கிரேக்கம், உரோம் போன்ற நகரங்களுக்கும், கிழக்கே இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கும் மற்றும் ஐரோப்பாக் கண்டத்திற்கும் பரவியதாக வரலாற்றுச் செய்திகள் எடுத்தியம்புகின்றன.

கிறித்து பிறப்பதற்கு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே மெசபடோமியர் ‘விண்வெளிச் சகுனங்களைத்’ தொகுத்திருந்தனர். எதிர்காலத்தில் நிகழவிருக்கும் வெற்றி தோல்விகளை முன்னறிந்து கூறுவதற்காக இந்த விண்வெளிச் சகுனங்கள் தொகுத்துப் பட்டியலிடப்பட்டன. மெசபடோமிய அரசவையிலிருந்த ‘பாரு’ என்னும் சோதிடர் விண்வெளிச் சகுனங்களைக் கவனித்து, நேர இருக்கும் கெட்ட நிகழ்ச்சிகளை முன்னறிந்து அரசனுக்கு அறிவிக்கும் பணியை மேற்கொண்டிருந்தார். மெசபடோமியாவில் பார்சிகளின் ஆதிக்கம் மேலோங்கியிருந்த காலத்தில் (கி.மு.நான்காம் நூற்றாண்டு) சகுனங்களின் வளர்ச்சி குறையத் தொடங்கியது. ஆயினும் விரைவிலேயே யார் வேண்டுமானாலும் பலனைத் தெரிந்து கொள்ளக்கூடிய ‘டயரிகள்’ தொகுக்கப்பட்டன. இவற்றில் விண்வெளி விநோதங்களுக்கும், பூமியில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கும் இடையிலுள்ள தொடர்புகள் தொகுத்துத் தரப்பட்டன. சந்திர கிரகணங்களும் சகுனங்களாகக் கருதப்பட்டன.

‘மெசபடோமியாவில் சால்தியர்கள் கி.மு.5ஆம் நூற்றாண்டில் வானமண்டலப் பட்டை பற்றி அறிந்திருந்தனர்’ என்று பிளினி கூறுகிறார்.[2]

கி.மு. 2600 ஆண்டுகளுக்கு முன்பு சால்தியர்களின் குருமார்களும் இடையர்களும் ஊக்கமாக ஆராய்ந்து இச்சாத்திரத்தை விருத்தி பண்ணினர். அவர்களின் காலம்

---

1. சோதிடம் அறிவியலா, வே. தமையந்திரன், ப. 40.
2. Encyclopaedia Britanica, Topic Astrology.

'சோதிட சாத்திரத்தின் பொற்காலம்' என்றழைக்கப்பட்டது. ஏனெனில் கோள்களின் பெயர்ச்சிகளை மனித வாழ்க்கையின் அனைத்துவித நிகழ்ச்சிகளுடனும் தொடர்புபடுத்தினர்.[3]

நினைவுக்கெட்டாத காலத்திலிருந்தே சோதிடம் சால்தியரிடமிருந்து தோன்றியது என்பது சிலரின் கருத்து. 'சால்தியர்' என்பதே சோதிடர் என்று பொருள்படுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். இச்சாத்திரத்தைக் கையாண்ட சால்தியர்கள் மகா அலெக்சாண்டர் காலத்தில் மிகப் பெருமதிப்புடன் வைக்கப்பட்டிருந்தனர்.[4]

பாபிலோனியாவில் முதல் அரச பரம்பரைக் காலத்தில் (கி.மு.18 முதல் 16 வரை) விண்வெளிச் சகுனங்கள் மிகவும் புகழ் பெற்றிருந்தது. அப்போது சகுனங்களைத் தொகுத்துக் கூறும் 'எனுமா அனு என்லில்' எனும் முதல் சோதிட நூல் தொகுக்கப்பட்டது. இந்நூலில் நான்கு விதமான சகுனங்கள் தொகுக்கப்பட்டிருந்தன; நிலவு தொடர்பான சகுனங்கள் 'சின்' (Sin) என்றும், சூரியன் தொடர்பானவை 'ஷமாஷ்' என்றும், வானிலை தொடர்பானவை 'அதாத்' என்றும், கோள்கள் தொடர்பானவை 'இஷ்தார்' (வெள்ளி) என்றும் பெயரிடப்பட்டுள்ளன. எதிர் காலத்தில் நிகழவிருக்கும் வெற்றி தோல்விகளைக் கணக்கிட்டு அறிந்து மன்னர்க்குத் தேவைப்படும்போது எடுத்துக்கூற இந்நூல் பெரிதும் பயன்பட்டது. அப்போது நாகரிக வளர்ச்சியில் சிறந்து விளங்கிய மொழிகள் அனைத்திலும் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டது. கி.மு. 10ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நூல் தொகுத்துப் பட்டியலிடுவது நிறைவு பெற்றது.[5]

கி.மு.3ஆம் நூற்றாண்டில் ஒருவர் பிறந்த நேரத்தில் வானத்திலுள்ள கோள்களின் இருப்பிடம், இராசிவட்டம், 12 இராசிகள் முதலியவற்றை வைத்து அவருடைய எதிர்காலத்தைக் கணிக்கும் முயற்சிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இன்று வழக்கிலுள்ள சோதிடத்திற்கும்

---

3. பிரஸன்ன சோதிடம், ப.23. 4. மேலது.ப.24. 5. ஜோதிடம் அறிவியலா, ப.41.

இதற்கும் எவ்வளவோ வேறுபாடுகள் இருப்பினும் சோதிட நூலின் பரிணாம வளர்ச்சியில் இது ஒரு முக்கிய காலக் கட்டமாய் அமைந்தது.

பிரிட்டிஷ் காட்சி சாலைகளில் வைக்கப்பட்டுள்ள பழங்கால நினிவா, பாபிலோன் சோதிடர்களின் சாசனத் தகடுகளில் சில 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[6]

மேல்நாடுகளில் 'சேத்' என்பவரே (கி.மு.3769) முதல் சோதிடராகக் கருதப்படுகிறார். இதனை அராபிய, எகிப்திய, யூத,பெர்சிய ஆசிரியர்களால் பிற்காலத்தில் எழுதப்பட்ட சோதிட நூல்களிலிருந்து அறிய இயலுகிறது. அவரே இராசி மண்டலத்தைப் பன்னிரண்டு சமபாகங்களாகவும், சூரியனின் பாதையைப் பன்னிரண்டு பாகங்களாகவும் பிரித்தவர் என்று கிருஷ்ணமூர்த்தி கூறுகிறார்.[7]

## எகிப்தியர்

கி.மு.3ஆம் நூற்றாண்டில் கிரேக்கர்களின் ஆதிக்கத்தி லிருந்த எகிப்துப் பகுதியில் பாபிலோனியாவின் சகுனங்கள் பரவின. குடிமக்களின் பிற்கால வாழ்க்கையை அமைப்பதில் பொறுப்புடையவர்களா யிருந்த எகிப்தியர் சால்தியர்களைப் போலவே சோதிடத்தி ஊக்கம் செலுத்தியதால் அது அப்போது கூடுதலான மு க்கியத்துவத்தை அடைந்திருந்தது.

பாரோவா மன்ன கள், பேபிலஸ் என்பவரைத் தலைமையாகக் கொண்ட சோதிடப் பண்டிதர்களிடம் மிக மதிப்பு வைத்திருந்தனர். எகிப்தியச் சக்கரவர்த்தியின் சாதகத்தைக் கொண்டு அவருக்குத் தொந்தரவு தரக்கூடிய உள்நாட்டவர் எவராவது இருப்பின் தெரிவிப்பதே பேபிலஸின் கடமையாக இருந்தது. சக்கரவர்த்தி அத்தகையவர்களைக் கொன்றுவிடச் செய்யுமளவிற்குச் சோதிடர்களிடம் மிக நம்பிக்கையுடையவராயிருந்தார்.

---

6. பிரஸன்ன சோதிடம், ப.24 7. மேலது, ப.23

பத்து நாளுக்கு ஒன்றுவீதம் ஆண்டுக்கு 36 விண்மீன்கள் ஒளிபெறுவதை எகிப்தியர் தெரிந்து வைத்திருந்தனர். 30 நாள் கொண்ட மாதம், 12 மாதம், 5 நாள் விடுமுறை கொண்ட ஆண்டு என்னும் முறையிலான நாட்காட்டியினை இவர்கள் பயன்படுத்தி வந்தனர்.[8]

எகிப்தியப் பிரமிடு போன்ற நினைவுச் சின்னங்களை ஆய்வு செய்த தொல்லியல் அறிஞர் அவற்றின் மேல் காணப்படும் வரைபடங்கள் போன்றவற்றைக் கொண்டு சோதிடவியல் கி.மு.5000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனத் தெரியவருகிறது என்று கூறுவர்.[9]

## கிரேக்கம்

கி.மு.நான்காம் நூற்றாண்டை ஒட்டி, சோதிடம் அதாவது விண்வெளிச் சகுனங்கள் பாபிலோனியாவிலிருந்து கிரேக்கத்திற்குப் பரவியது. பித்தாகோரர்கள்(கணிதத் தத்துவ அறிஞர்கள்) சால்தியருடைய முறைகளைப் பின்பற்றி, சோதிடத் துறையினை மேலும் வளர்ச்சி அடையச் செய்தனர்.

அதன்வழி குழந்தை பிறந்த நேரத்தைக் கொண்டு சாதகத்தைக் கணித்துச் செல்வம், குடும்பம், விதி, நல்வாய்ப்பு, பிற்கால நிகழ்ச்சிகள் ஆகியவற்றை முன்னறிந்து தெரிவித்தனர். கி.மு.100 ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்க நாட்டிலிருந்த இம்முறை இன்றும் உலகம் முழுவதும் பல மாறுதல்களுடன் நடைமுறையில் உள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்கர்களால் ‘பைப்பிரஸ்’ தாளில் எழுதப்பட்ட இவ்விதச் சாதகங்கள் பிரிட்டிஷ் அருங்காட்சி அகத்தில் வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.[10]

மகா அலெக்சாண்டர் (கி.மு.4ஆம் நூற்றாண்டு) நாடு பிடிக்க வெளிக் கிளம்பினால் ‘கலிஸ்தேனிஸ்’ என்ற வான சாஸ்திரியைத் தம்முடன் அழைத்துச் செல்வார். அவர் சோதிடத்தின் சிறப்பு அம்சங்களைக் கிழக்கு நாடுகளில்

8. Encyclopedia Britanica, Topic Astrology, 9. பிரஸன்ன சோதிடம், ப.24, 10. மேலது, ப.24

பரப்பினார். அலெக்சாண்டர் இந்திய நாட்டுக்கு வந்தபோது சோதிடம் பற்றிக் கற்றவை, தம்நாட்டில் அதனை மேலும் வளர்ச்சிபெறச் செய்ய உதவியாக இருந்தது. அக்காலத்தில் 'நிடசினுடைய யூடாக்கஸ்' என்பவர் கிரேக்கத்தில் சோதிடம் வேரூன்றக் காரணமாக இருந்தார்.

நெருப்பு, நிலம், காற்று, நீர் ஆகிய நான்கு மூலங்கள் சோதிடத்துடன் இணைக்கப்பட்டன. அண்டம் பற்றிய பிளேட்டோவினுடைய கொள்கையும், அறிவு, உண்மை போன்ற அரும்பொருட்களைப் பற்றிய அரிஸ்டாட்டிலுடைய தத்துவமும் சோதிடத்தைத் தெய்வீக அறிவியலாக உயர்த்தியது. ஈரானிலிருந்து வந்து குடியேறிய மகுசேயின்களும், பாபிலோனியச் சோதிடக் கருத்துகளை கிரேக்கத்தில் பரப்பினர். 'மூத்த பிளினி' என்பவர் மகுசேயின்களின் கருத்துகளைத் தொகுத்துப் பாதுகாத்தார்[11] (சுமார் கி.பி.23-79).

கிரேக்க அறிஞர்கள் வானியலில் சிறந்து விளங்கியிருக்கின்றனர். 'அரிஸ்ட் அர்சுஸ்' கி.மு.300இல் சூரிய குடும்பக் கோள்களைப் பற்றி எழுதினார்.

கி.மு.200இல் 'ஏராடோஸ் தீனஸ்' பூமியின் விட்டத்தைக் காணும் முறைகளை எழுதினார். 'கிப்பார்சுஸ்' கி.மு.160இல் ஆண்டின் நாட்களைக் கணக்கிடும், பூமி சூரியனைச் சுற்றும் காலத்தைக் கணக்கிட்டு எழுதினார். 'ப்டுலெமி' கி.மு.150இல் ஏழு கோள்களின் மண்டலத்தை விளக்கி எழுதினார். இவ்வானியல் நூல்களைத் தழுவி தற்காலத்தில் பல வானவியல் நூல்கள் எழுந்துள்ளன. 500 ஆண்டுகளுக்கு முன், 'கோபர்னிகஸ்' (1530), 'பிராகி' (1590), 'கெப்லர்' (1620), 'கலிலியோ' (1640), 'நியூட்டன்' (1720) முதலியோர் எழுதிய வானவியல் புத்தகங்கள் இவற்றுள் குறிப்பிடத் தக்கவை.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அலெக்சாண்டிரியாவில் வாழ்ந்த புகழ்பெற்ற கிரேக்கச் சோதிடர் 'கிளாடியஸ் டாலமி'

---

11. ஜோதிடம் அறிவியலா, ப.52

இரண்டு நூல்களை எழுதியிருக்கிறார். 'ஆல்மாஜெஸ்ட்', 'டெட்ரா பைபிலோஸ்' என்னும் அந்நூல்கள் தரமான சோதிட நூல்களாக விளங்கின. டெட்ராபைபிலோஸ் என்றால் நான்கு நூல்கள் என்று பொருள். இதன் இரண்டாவது நூலாக 'எனுமா அனு என்லில்' என்ற நூலின் மொழிபெயர்ப்பைச் சேர்த்துள்ளனர்.

கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த 'கிரேக்க, எகிப்தியச் சோதிடர்' தெபசினுடைய 'ஹெபேஸ்ஷன்' என்பவரின் சோதிட நூல் விளக்கமும், கி.பி.ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த 'ஜான் லிடஸ்' என்பவரின் 'ஆண் சைன்ஸ்' எனும் நூலும் குறிப்பிடத்தக்க சோதிட நூல்களாக அமைகின்றன.

இராசிவட்டம் ஒவ்வொன்றும் 30 பாகை அடங்கிய 12 இராசிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வோர் இராசியும் ஒரு கோளத்தின் வீடு ஆக்கப்பட்டன. ஒவ்வோர் இராசியும் மனித உடலின் ஒரு குறிப்பிட்ட பகுதியோடு தொடர்பு படுத்தப்பட்டது. கோள்களினுடைய செல்வாக்கு கிரேக்கச் சமய நூல்களில் அந்தக் கோளை ஆட்சி செய்வதாகக் கூறப்படும் தெய்வங்களின் இயல்புகளை ஒட்டியும் நிர்ணயிக்கப்பட்டது. இவை தவிர இராசிகளுக்கு வேறுசில பண்புகளும் கற்பிதம் செய்யப்பட்டன. அவற்றுள் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவ அறிஞர் பித்தகோரஸ் ஏற்படுத்திய ஆண் இராசி, பெண் இராசி, சர இராசி, ஸ்திர ராசி, உபய ராசி என்ற பிரிவுகள் குறிப்பிடத் தக்கவை.

கோள்கள் ஒன்று மற்றொன்றினுடைய வீட்டின்மீது செல்வாக்குச் செலுத்துவதாகக் கருதப்பட்டு 'கேந்திரம், திரிகோணம், பார்வை, ஏழாமிடம்'[12] ஆகிய நான்கு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றுள் ஏழாமிடம் கேந்திரம் கெட்டதென்றும், திரிகோணம், பார்வை நல்லதென்றும் கருதப்பட்டன. ஒவ்வொரு வீட்டிற்கும்

12. இலக்னம் (ஒன்று), 4, 7, 10 இந்த நான்கும் கேந்திரம். இலக்னம், 5, 9 இவை மூன்றும் திரிகோணம். பொதுவாக அனைத்துக் கோள்களும் தாம் இருக்கும் வீட்டிலிருந்து ஏழாம் வீட்டைப் பார்க்கும். மேலும் குரு 5, 9; செவ்வாய் 4, 8; சனி 3, 10 ஆகிய இடங்களையும் பார்க்கின்றன.

காரகத்துவம் கொடுக்கப்பட்டது. சிறப்பு வாய்ந்த, கோள்களின் அதிபதித் தன்மை அதாவது, அதிகாரம் காரகம் எனப்பட்டது. பிறந்த நேரம், பிறந்த இடம், அப்போது இராசிகள் இருந்த நிலை, கோள்களிடையே குறுக்குக் கோடு நெடுக்குக்கோடு முதலியன கொண்டு சாதகம் கணிக்கப்பட்டு பலனறியப்பட்டது. கி.மு.நூறு ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்க நாட்டில் இம்முறை இருந்து வந்திருக்கிறது. இன்றும் உலகம் முழுவதும் இம்முறை பல மாறுதல்களுடன் நடைமுறையில் உள்ளது.

சோதிடத்தில் மேலும் மேலும் மாறுதல்களை, புதிய வழிமுறைகளை, உத்திகளைச் சேர்த்தவர்களில் ‘ஹெர்மெஸ் பிரிஸ்மெஜிஸ்டஸ்’, கி.பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த சோதிடக் கவிஞர் ‘சிடோனுடை டோரத்தியஸ்’ முதலியோர் குறிப்பிடத் தக்கவர்கள். கிரேக்கருக்குப் பின் வானசாத்திரமும், சோதிடமும், உரோமானியர், யூதர், அரேபியர் ஆகியோர்களால் சிறிது ஆராயப்பட்டன.

மெசபடோமியா அளித்த வானியலைக் கிரேக்கம் தனது வடிவக் கணித உத்தியினால் வளர்த்தது. ஏழு கோள் களுக்குப் பன்னிரண்டு வீடுகள் தரப்பட்டன. கிரக நிலைப் படம் வரையப்பட்டது. இராசிகள் மனித உடலோடும், தெய்வங்களோடும், வேறுசில பண்புகளோடும் தொடர்பு படுத்தப்பட்டன.

## இந்தியா

ஞாயிற்றின் ஒளி நகரும் திசையையும் அதனால் விழும் நிழலையும் வைத்து என்று மனிதன் பொழுதைக் கணக்கிடத் தொடங்கினானோ அன்றே வானியல் அறிவும், எதிர்காலக் கணிப்பும் தொடங்கிவிட்டது எனலாம். மனிதன் நாடோடியாகக் கானகங்களில் அலைந்த காலத்திலும் ஆற்றங்கரை ஓரங்களில் நிலையாகத் தங்கிப் பயிரிட்டு, வாழத் தொடங்கிய காலங்களிலும் நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன் ஆகியவற்றைப் பார்த்து, காலங்களைக் கணக்கிடத் தொடங்கினான். இதுவே சோதிடக்கலை தோன்றத் தொடங்கிய காலக்கட்டம்.

பழமையான நாகரிகச் சின்னங்கள் கிடைத்த இடங்களில் சிந்துவெளிக் கரையில் அமைந்துள்ள 'ஹரப்பா', 'மொகஞ் சதாரா' ஆகியன குறிப்பிடத்தக்கன. இங்குக் கிடைத்த பானை ஓடுகள், முத்திரைகள் ஆகியவற்றில் நட்சத்திரக் குறியீடுகளும், கோள்களின் குறியீடுகளும் காணப்படுகின்றன. தமிழகத்தின் மிகச் சிறந்த துறைமுகமாகப் பண்டைய காலத்தில் திகழ்ந்த கொற்கையை இப்போது ஆராய்ந்த போது இங்குக் கிடைத்த பல பானை ஓடுகளில் நட்சத்திரக் குறியீடுகள் காணப்படுகின்றன. சிந்துவெளிக் கரையில் கிடைத்த குறியீடுகளைப் போலவே கொற்கையில் கிடைத்த குறியீடுகளிலும் காணப்படுகின்றன. கார்த்திகை நட்சத்திரத்தைக் குறிக்க ஆறுமீன்கள் குறியீடாகக் காணப்படுகின்றது. செவ்வாய்க்கோளைக் குறிப்பிடுவதற்கு ஒரு மீனைப் போட்டு அதில் சிவப்பு வர்ணம் தீட்டியுள்ளனர்.[13] இன்று இந்தியச் சோதிடத்தில் சிறப்பிடம் வகிக்கும் நட்சத்திரங்கள், ஹரப்பா கலாச்சார இனம் வழங்கியதாக இருக்கலாம் என்று வரலாற்றாசிரியர்[14] கூறுவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

வேதத்திலிருந்து தோன்றியவை கலைகள். அவற்றுள் சோதிடக் கலையும் ஒன்று. அப்பொழுது வானியலும் சோதிடமும் ஒன்றாயிருந்தன. அனுஷ்டான முறைகளைச் செய்வதற்கு நன்னாளைக் காணவும், ஆயுளை விருத்தி செய்யவும், கண்டுணரவும், கல்வி, தொழில், திருமணம் போன்றவற்றை அறியவும் சோதிட சாத்திரம் ஏற்பட்டது என இருக்கு வேதம் கூறுகிறது. 'வள்ளற்றன்மை பெற்ற மகன் வேண்டின் பூச நட்சத்திரத்தில் அக்கினி ஆதானம் என்ற சடங்கைச் செய்து கொள்ள வேண்டும். பெண் கணவனின் அன்பை முற்றும் பெற விரும்பினால் தகப்பன். அவளைச் சுவாதி நட்சத்திரத்தில் மணம் செய்விக்க வேண்டும். அனுட நட்சத்திரத்தில் உழவேண்டும்[15] என்பன போன்ற பல செய்திகள் வேதங்களில் ஆங்காங்கே வருகின்றன.

இச்சோதிட சாத்திரத்தை வகுத்து நடத்தியவர்கள், சுவாயம்புமனு, சுவாரோசிஷன்மனு, உத்தமன்மனு, தாமசமனு,

---

13. சோதிடக் கலையின் பழமை, ப.18. 14. ஜோதிடம் அறிவியலா, ப.52 15. கலைக்களஞ்சியம், ப.262.

ரைவதன்மனு, சாக்ஷுஷன்மனு, வைவசுதன்மனு, சாவர்ணிமனு, தஷசாவர்ணிமனு, பிர்ம்மசாவர்ணிமனு, தர்மசாவர்ணிமனு, ருத்திரசாவர்ணிமனு, ரவுச்யன்மனு, பவுத்யன்மனு முதலான பதினான்கு மனுக்கள் ஆவர்.

சூரியன், பிரமன், வேதவியாசர், பராசரர், அத்திரி, உரோமகர், வசிட்டர், மரீசி, பௌலசர், யவனர், சௌனகர், மநு, பிருகு, சனகர், ஆங்கிரசர், காசிபர், கார்க்கியர், நாரதர் என்னும் பதினெண்மர் சோதிடத்தின் முதல் நூலாசிரியர் என்றும், இவர்கள் இயற்றிய மொத்தச் சுலோகங்கள் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் என்றும் சாதக அலங்காரம் கூறுகிறது.[16]

துருவன், ஜயமுனி, கர்க்கர், வியாசர், சத்யாச்சாரியார், மணித்தர் என்போர் வரிசையில் சோதிடப் பாரம்பரியம் வந்தது என்று சி.ஜி. இராஜன் குறிப்பிடுகிறார்.[17]

வேதத்தின் ஆறு பாகங்களுள் ஒன்றாக இன்று நமது நாட்டில் பின்பற்றப்பட்டு வரும் சோதிடம், மகரிஷி பராசரரின் வழி முறைப்படி அமைந்தது. பராசரர் வாழ்ந்த காலம் 6000 ஆண்டுகளுக்கு முன்பு என்று சொல்லப் படுகிறது. இதில் கருத்து வேறுபாடும் உண்டு. மயன், மணித்தர், சத்யாச்சாரி ஆகியோர் முதல் பதினெட்டு நூல் ஆசிரியர் உருவாக்கித் தந்த நூல்களின் அடிப்படையில் சோதிடக் கலையைப் பற்றி எழுதினர். இந்நூல்கள் இன்று கிடைக்கவில்லை. இவர்களுக்கு பின் வந்தவரே சோதிடக் கலையின் முன்னோடிகளாக இன்று போற்றப்பட்டு வரும் வராகமிகிரர், பட்டோத்பவர், வெங்கடேசர் போன்றவர்கள். இவர்கள் பராசரரின் வழித் தோன்றலாவர்.

குப்தப் பேரரசுக் காலத்தில் வாழ்ந்த ஆரியபட்டர் என்பவர், உலகத்திலேயே முதன்முதலில் 'பஞ்சாங்கம் போடும்' முறையைக் கண்டறிந்து, முதல் பஞ்சாங்கத்தை வெளியிட்டார். வான சாஸ்திரம், பஞ்சாங்கம் போன்ற துறைகளுக்கு ஆரியபட்டர் ஒரு வழிகாட்டியாக இருந்ததனால்தான்

16. பாயிரம், பா.5, 10, 17. Satyachaareeyam, Introduction.

இந்தியா பறக்கவிட்ட முதன் முதல் விண்வெளிக் கப்பலுக்கு ஆரியபட்டர் என்ற பெயர் சூட்டினர்.[18] பிரம்ம குப்தா, பாஸ்கரா போன்றோர் வானவியல் நூல்களை எழுதியுள்ளனர்.

இவ்வாரியபட்டருடன் பணியாற்றியவர் வராகமிகிரர்[19] என்ற கருத்தும் உண்டு. விக்கிரமாதித்தன் தலைநகரான உச்சயினியிலிருந்து பழங்காலத்தில் இந்தியச் சோதிடர்கள் பஞ்சாங்கம் கணித்திருக்கின்றனர். விக்கிரமாதித்தன் அவையில் இருந்த வராகமிகிரரே இந்தியச் சோதிடத்தைக் கட்டமைத்துக் கொடுத்தவர். அவர் தம் காலம் கி.மு. பதினான்காம் நூற்றாண்டு என்றும், கி.பி. ஆறாம் நூற்றாண்டு என்றும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இந்து மதத்திலுள்ள தெய்வத்தின் பெயர்களும், வர்ணப் பகுப்புகளும் பிறவும் சோதிடத்தில் சேர்க்கப்பட்டதால், இஃது 'இந்து முறைச் சோதிடம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. வராகமிகிரர் தமது 'பிருஹத் சம்ஹிதை' என்னும் நூலில் வேற்றுநாட்டவரால் மேடம் முதல் மீனம் வரையுள்ள 12 இராசிகளுக்கு இடப்பட்ட பெயரைத் தாமும் ஏற்றுக் கொள்வதாகக் கூறியுள்ளார்.[20]

பிருஹத் ஜாதகம், பிருஹத் யாத்திரை, பிருஹத் விவாகப் பொருத்தம், பிருஹத் சம்ஹிதை, பஞ்ச சித்தாந்திகா, லகு ஜாதகம் என்பன வராகமிகிரர் எழுதிய நூல்கள். வராகமிகிரரின் நூல்களுக்கு ஸ்ரீபதிபட்டாச்சாரியார் என்பவர் விளக்கவுரை எழுதியுள்ளார். இது 'ஸ்ரீபதி பத்ததி' (Sripathy System) என்றழைக்கப்படுகிறது. இவருடைய கணித முறைதான் இந்து முறைச் சோதிடக் கணிதத்தில் பின்பற்றப்படுகிறது.

இங்ஙனம் இந்தியாவின் சோதிட வரலாறு அமைய, பாபிலோனியச் சோதிடமும் இந்தியாவிற்குள் நுழைந் திருக்கின்றது. கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் சிந்துநதிச் சமவெளியில் ஆதிக்கம் பெற்றிருந்த ஆர்க்கிமெனிட்களால் (கி.மு.559க்கும் 330க்கும் இடைப்பட்ட காலத்தில் பெர்சியாவை ஆண்டுவந்த அரச பரம்பரை) 'எனுமா அனு

---

18. *அதிர்ஷ்ட சோதிட கணிதம், ப.13*
19. மேலது ப.13
20. தமிழ் சோதிட நூல்களில் சாதக கணிப்பின் அடிப்படை, *பக்.8, 11.*

என்லில்' போன்ற சகுன நூல்கள் இந்தியாவிற்குள் நுழைந்தன. குறிப்பாகப் பௌத்த சமயத்தவர் தொடக்க காலத்தில் சோதிடத்தை ஏற்றுக் கொண்டமையால் இந்தியாவில் முதன் முதலில் பௌத்த சமய நூல்களில் தான் சோதிடம் நுழைந்தது. பின்னர், சீனா, திபெத்து, ஜப்பான், மத்திய ஆசியா, தென்கிழக்கு ஆசியா போன்றவற்றிலெல்லாம் சோதிடம் பரவுவதற்குப் பௌத்த சமயத் துறவிகள் முக்கியக் காரணமாக இருந்தனர். புத்தர் காலத்து இந்தியாவில் சோதிடம் விலக்கி வைக்கப்பட்டிருந்தாலும், திபெத்தில் புத்த மடங்களில் பரம்பரையாகச் சோதிடம் பின்பற்றப்பட்டது. அங்கே 'காலச்சக்கரத்தசா முறை' என்னும் சோதிடமுறை பின்பற்றப்பட்டது.

மெசபடோமியச் சகுன நூல்களின் சமஸ்கிருத மொழி பெயர்ப்புகள்தான் இந்து சமயத்தின் அடிப்படை நம்பிக்கை களுள் ஒன்றாகச் சோதிடம் ஏற்றுக்கொள்ளப் படுவதற்குக் காரணமாக இருந்தன. அவற்றுள் இன்று கிடைக்கும் மிகப்பழைமையான நூல் கி.பி. முதலாம் நூற்றாண்டில் மொழிபெயர்க்கப்பட்ட 'கிரக சம்ஹிதா' என்னும் நூல்தான். தொடக்க காலத்தில் சமஸ்கிருதத்தில் ஆக்கப்பட்ட நூல்கள் அனைத்தும் இராணுவச் சோதிடம், பஞ்சாங்கச் சோதிடம் ஆகியவற்றுடன் தொடர்புடையவை. பிற்காலத்தில் சமஸ்கிருதத்தில் மிகுதியான சோதிட நூல்கள் எழுதப் பட்டன. கி.பி. 10-11ஆம் நூற்றாண்டுகளில் அதர்வண வேதத்தின் பின்னிணைப்பாகச் சோதிடம் சேர்க்கப்பட்டது. கி.பி. 13ஆம் நூற்றாண்டில் விண்வெளிச் சகுனங்கள் பார்சி வழியாக அராபி மொழிக்கு வந்து பின்னர் அதிலிருந்து சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டன.

சாதகக் கணிப்பு முறை கிரேக்க நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்தது. கிரேக்க முறைப்படி நான்காகக் கணிக்கப்பட்ட நிலம், நீர், காற்று, நெருப்பு இந்திய முறையில் ஆகாயம் சேர்க்கப்பட்டு ஐந்தாக மாற்றிக் கொள்ளப்பட்டது. உச்சம், நீச்சம், பகை நட்பு, காரகன், கேந்திரம், தரிகோணம் போன்றவை கிரேக்கச் சோதிடத்தி லிருந்து அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டன. மறுபிறவி, நான்கு வர்ணங்கள் மற்றும் பல புதிய வழிமுறைகளும் இந்தியச் சோதிடத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. நட்சத் திரங்கள், மூன்று வகை யோகங்கள், கோள்களின் கூட்டுகள்,

ஒன்பது தசாக்கள், அஷ்டவர்க்கம், இராசிவட்டம் ஓரைகளாக, சப்தாம்சங்களாக, நவாம்சங்களாகப் பிரிக்கப்படுதல், ஆரோகணம், அவரோகணம், சவ்யம், அசவ்யம் முதலியன இந்தியச் சோதிடத்திற்கே உரியவை.

இன்று கிடைக்கும் நூல்களுள் மிகப் பழைமையானது 'கிரக சம்ஹிதா'. அதன் பின் எழுந்த 'பத்ரபாஹு' என்பவர் எழுதிய 'பத்ரபாஹு ஸம்கிதா' என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இவையல்லாமல் அராபியச் சோதிட நூல்கள் 'டாஜிகா' (Tajika) என்ற பெயரில் சமஸ்கிருத மொழியில் மொழிபெயர்க்கப் பட்டன. 13ஆம் நூற்றாண்டின் பார்சி மொழி வழியாக அராபிய மொழிக்கு வந்து, அதன்பின் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப்பட்டு ஆளுமை பெற்ற இந்நூல்களை இந்தியப் பொது சோதிடத்தோடு மிகவும் ஒப்புமையுடையதாகக் கூறுவர். கி.பி.2ஆம் 3ஆம் நூற்றாண்டுகளில் சமஸ்கிருத மொழிபெயர்ப்புடன் கிரேக்கச் சோதிடம் இந்தியாவிற்குள் கொண்டுவரப்பட்டது. அவ்வகையில் கி.பி.150இல் 'யவனேஸ்வரா' என்பவருடைய மொழிபெயர்ப்பு குறிப் பிடத்தக்கது. இதுவே பின்னர் 'ஸ்புஜிதாவாஜா' என்பவரால் 'யவனஜாதகர்' என்ற பெயரில் கி.பி.270இல் செய்யுள் வடிவில் நூலாக இயற்றப்பட்டது. ஆகவேதான் கிரேக்கச் சாதகக் கணிப்பு முறைக்கும், இந்தியச் சாதகக் கணிப்பு முறைக்கும் அடிப்படைகளில் நெருங்கிய ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

இச்சோதிட வரலாறு தவிர இந்தியச் சோதிட வளர்ச்சி குறித்த கருத்துகளும் கிடைத்திருக்கின்றன. சோதிடம் பிரம்மாவினால் தனக்குப் போதிக்கப்பட்டது என்று கார்க்கி முனிவர் கூறுகிறார். அவரிடமிருந்து மற்ற முனிவர்கள் அதனைக் கற்றதால் அது எங்கும் பரவலாயிற்று. உலகப் படைப்போடே அது சமகாலத்தது என்ற கருத்தும் நிலவுகிறது.[21]

ஆசையும் நேசமும் கொண்டு, மானிடன் தன் நிலை மாறி சீர்மைக்கேட்டை அடைந்து கலங்குவதிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் பொருட்டும், தமக்குறும்

21. பிரஸன்ன சோதிடம், ப.23

வினை அறிந்து தமது பிறப்பின் காரண காரியத்தைத் தெரிந்து வாழ்வை அடையும் பொருட்டும், விஷ்ணு முனியானவர் கோள், நட்சத்திரம் முதலியவற்றை உருவாக்க எண்ணிப், பிரமனை நினைக்கத் தன் முன் தோன்றிய பிரமனிடம் 27 நட்சத்திரங்களையும், ஒன்பது கோள்களையும் உண்டாக்கும்படி கட்டளையிட, பிரமன் அதனை உமையாளிடம் கூற, உமையாள் தானே சூரிய சந்திரர்களாக விளங்க, சதாசிவம் குருவாகவும், மயேசுபரர் சனியாகவும், உருத்திரர் அங்கார களாகவும், திருமால் புதனாகவும், பிரமன் சுக்கிரனாகவும், விளங்கி நிற்க, அவை கட்டளை நியதிப்படி ஒழுக வேண்டி விஷ்ணு முனியானவர் உமையை நோக்கித் தாமே இராகு கேதுக்களாகத் திகழலானார்[22] என்கிறார் அரிமேலழகன்.

சோதிடத்தின் கருப்பொருளை இறைவன் உமையம் மைக்குக் கூறியதாகவும் வரலாறு உண்டு. இறைவனின் முழு அருளைப் பெற்ற மகனீயர்கள், அவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லி உள்ளனர் என்றும், சிவன் பார்வதிக்கு, பார்வதி கணபதிக்கு, கணபதி முருகனுக்கு, முருகன் நந்திதேவருக்கு, நந்தி அகத்தியருக்கு, அகத்தியர் பதினெண் தமிழ்ச் சித்தர்களுக்கு உபதேசித்து - இவ்வாறாகச் சோதிடம் வளர்ந்தது என்றும் கூறுவர்.

சோதிட சாத்திரம் என்பது பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் பூர்வர்களால் அவர்களது உள்ளொளியினால் உலகிற்கு வழங்கப்பட்டது. இன்றைக்கு. இருக்கும் அறிவியல் கருவிகள் ஏதுமற்ற நிலையில், அக்காலத்து ஞானிகள் பலரும் பல்வேறு இடங்களில் இருந்துகொண்டு ஒரே விதமாக இச்சாத்திரத்தைக் கணித்தனர். எனவே இது ஆன்மீகக் கலையாகத் தோன்றி வளர்ந்தது என்கிறார் சிவாமேகநாதன்.[23]

சோதிட சாத்திரத்தின் காலம் வேதங்களின் தோற்றக் காலமாகும். வரலாற்று காலத்திற்கு முற்பட்டே காலனை விழுங்கிய காலருத்திரனே போற்றி உபதேசித்து அருளியது

22. சோதிடம் - யோகம், ப.9 23. ஜோதிடக் கலை ஆன்மீகமா? அறிவியலா? ப.9.

சோதிட சாத்திரம். அன்னை பராசக்தியானவள் நவக்கோள் களையும், அண்டங்களையும் தன்னுள் படைத்து வைத்துத் தன் கட்டுப்பாட்டில் இயக்குகிறாள். ஆகையால் சோதிட சாத்திரம் கால வரலாறு கிடையாத கால சாஸ்திரமாகும் என்கிறார் இராம. தியாகராஜன்.[24]

இந்து சமயம், கோள்களைத் தெய்வங்கள் என்றும், அந்தத் தெய்வங்களுடைய ஆணைகளைப் பூசைகள், தோஷப்பரி காரங்கள், யாகங்கள் செய்வதன் மூலம் மனிதர்களுக்குச் சாதகமானதாக ஆக்கிக் கொள்ளலாம் என்றும் கற்பித்தது. நான்கு வர்ணங்கள், மறுபிறவி போன்ற இந்து சமயக் கொள்கைகளைச் சோதிடமும் ஏற்றுக் கொண்டது. இன்று சோதிடம் இந்து சமய அடிப்படை நம்பிக்கைகளுள் ஒன்றாகக் கருதப்பெறுகின்றது.

## தமிழகம்

சங்க இலக்கியங்களிலும், காப்பியங்களிலும் வான வியல், சோதிடவியல் பற்றிய செய்திகள் மிகுதியாக வருகின்றன. ஆயினும் தமிழகத்தில் சோதிடம் எப்படித் தோன்றி வளர்ந்தது, தமிழகத்தின் முதல் சோதிட நூல் எது, முதல் பஞ்சாங்கம் எது என்று அறிய இயலவில்லை. தொடக்க காலத்தில் தமிழர்களுக்கும், நிமித்தங்களின் மேல் மிகுந்த நம்பிக்கை இருந்திருக்கின்றது. மனித இடர்ப்பாடு களுக்குக் கோள்களே அடிப்படைக் காரணம் என்ற சிந்தனை, கோள்களை வணங்கும் அளவிற்குக் கொண்டு சென்றுள்ளது. அஃதே கோள்களின் தலைமைக் கோளான சூரியன் பெயரில் 'சௌமாரம்' என்ற தனிமதத்தைத் தோற்றுவித்தது. பெருங்கடவுளர்க்குத் தரப்படும் சிறப்பு இக்கோள்களுக்கும் தரப்பட்டது.

வடமொழியில் உள்ள சோதிட மூல நூல்களை, வழி நூல்களை, விரிவுரை நூல்களை மூல நூல்களாகக் கொண்டு, தமிழில் பல சோதிட நூல்கள் இயற்றப்பட்டுள்ளன என்பதை அந்த நூல்களின் பாயிரத்தாலும், வடமொழிக் கலைச் சொற்களாலும் அறிய முடிகிறது. சோதிட நூல்களில் வடமொழிக் கலப்பு காணப்பெறினும் 'குமார சுவாமியம்' தூய தமிழில் எழுதப் பெற்றிருக்கின்றது.

24. வானியலும் ஜோதிடமும், ப.99.

கல்யாண வர்மர், 'சங்கராச்சாரியார் 12,000 சோதிட பராக்கிரமம்' என்ற நூலை இயற்றியுள்ளார். சீமந்தினி என்ற அரச குமாரனுக்கும், சுந்தரானந்தர் என்ற சித்தப் புருடனுக்கும் நடந்த உரையாடலாக இந்நூல் அமைகின்றது. நடராஜன் இயற்றிய 'சாதக அலங்காரம்' தமிழ்ச் சோதிட நூல்களில் தலைசிறந்ததாக விளங்குகிறது. இந்நூலுக்கு சோதிட மேதை 'தெய்வ சிகாமணி' விருத்தியுரை எழுதியுள்ளார். மேலும் சாதக சிந்தாமணி, குமார சுவாமியம், நாரதர் சோதிடம், கார்க்கேயர் சோதிடம் முதலியனவும் குறிப்பிடத்தக்கன. மாணிக்க கணித சோதிடம், கணித முருக சேகரம், நந்திவாக்கியம் முதலிய நூல்கள் மறுபதிப்பின்றி மறைந்து கொண்டிருக்கின்றன. அகத்தியர் காண்டம், சோதிட சங்கரராச்சரியம், ஆயுர்த்தாயக் கணிதங்கள் முதலான சோதிட நூல்கள் கவனிப்பாரின்றிக் கிடக்கின்றன.

சி.ஜி.இராஜன், கடலங்குடி நடேச சாத்திரியார், கே.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இருபதாம் நூற்றாண்டில் இருந்து மறைந்தவர்கள். டாக்டர் பி.வி.இராமனும், கே.எஸ். கிருஷ்ணமூர்த்தி, கடலங்குடி நடேசனார் ஆகிய இருவரின் வழித்தோன்றல்களும் சோதிட நூல்களை வெளியிட்டும், சோதிட நிறுவனங்களை நடத்தியும் வருகின்றனர்.

### ஈரான்

பழங்காலத்தில் நாகரிகத்தில் சிறப்புற்றோங்கியிருந்த நாடுகளில் ஈரானும் குறிப்பிடத் தக்கது. கி.பி.226இல் முதலாவது அர்த்தாஷிர் மன்னன் ஸாஸானியன் பரம்பரையைத் தோற்றுவித்தார். அதைத் தொடர்ந்து ஈரானிய சிந்தனையாளர்கள் நல்ல மதிப்பினையும் சிறந்த வாய்ப்பினையும் பெற்றனர். கிரேக்க சமஸ்கிருத மொழிகளிலிருந்து சோதிட நூல்கள் பெருமளவில் பாலவி மொழியில் மொழிபெயர்க்கப் பட்டன.

'சீடானுடைய டோராத்தியஸ்', 'வெட்டியஸ் வாலன்ஸ்', 'ஹெர்மெஸ்' போன்ற கிரேக்கச் சோதிடர்களுடைய நூல்களின் மொழிபெயர்ப்புகளும், 'பார்மாஸ்ப்' என்னும் இந்தியருடைய மொழிபெயர்ப்பும் 'பாலவி' மொழியில் உள்ளன. ஈரானியர் அவர்களுடைய நம்பிக்கைகளுக்கு

ஏற்பக் கிரேக்கச் சோதிடத்தை மாற்றி அத்துடன் நவாம்சம் போன்ற இந்திய முறைகளையும் சேர்த்துக் கொண்டனர். பெர்சியாவில் சோதிட நிபுணர்களை மன்னர்கள் கௌரவித்தனர். பெர்சிய அரச சபையில் 'ஜமாஸ்ப்' அல்லது 'அல்ஹகீம்' (அறிவாளி) என்பவர், தீர்க்கதரிசிகள் தோன்றும் திவ்விய காலத்தை அறிந்து கூறினார்.

## இசுலாம்

கி.பி.எட்டாம் நூற்றாண்டில் இசுலாமிய மன்னர் 'ஹாரு ஆல் ரஷீத்' 'டாலமியினுடைய ஆல்மாஜெஸ்டை' அராபிய மொழியில் மொழிபெயர்க்க உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து விண்ஆய்வு கண்காணிப்புத் தலங்கள் கட்டப்பட்டன. ஈராக்கில் இன்றும் வாழும் ஒருவகை இனத்தினரான 'மேன்டியன்'களுடைய 'இராசிக்கூட்டம் பற்றிய புத்தகம்' பைபிள் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசி 'டானியல்' எழுதியதாகச் சொல்லப்படும் 'அப்போகாலிப்ஸ்' (இதனுடைய பிரதிகள் அராபிய மொழியில் இன்றும் உள்ளன), 'சிரியாக் (Syrioc) தேனீக்களைப் பற்றிய புத்தகம்' முதலியன குறிப்பிடத்தக்க நூல்களுள் சிலவாக அமைகின்றன.

கிரேக்கம் சிரியாக் ஆகிய மொழிகளிலிருந்து கிரேக்கச் சோதிடமும், சமஸ்கிருதத்திலிருந்து இந்தியச் சோதிடமும், பாலவி மொழியிலிருந்து ஈரானியச் சோதிடமும், அராபிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற சோதிடர் 'அபுமசார்' இசுலாமியச் சோதிடத்திற்கு வேறு சில புதிய அலகுகளைக் கொடுத்தார். இசுலாமியச் சோதிடத்திற்கு ஒரு வடிவம் கொடுத்ததே அபுமசார்தான். இயூகின், தாமூர் ஆகியோர் காலத்தில் இருந்த அப்துல்லா, ஷினுஹ், ஷியூக் போன்றவர்கள் இசுலாமியர் காலத்தில் புகழுடன் விளங்கிய சோதிடர்கள்.

பஞ்சாங்க, நிமித்த, சோதிடங்களில் இசுலாமியர் அதிக கவனம் செலுத்தினர். மனிதனுடைய வாழ்க்கை முறைகளை மனிதன் பிறக்கும்போது இருந்த கோள்களின் நிலைகள் நிர்ணயிக்கின்றன என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. மனித வாழ்க்கை கடவுள் கையில் இருக்கின்றது என்ற நம்பிக்கையுடைய சமயவாதிகள் சோதிடத்தை எதிர்க்கத்

தொடங்கினர். எனவே கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னர் இசுலாமியர்களிடையே சோதிட நம்பிக்கை குறையலாயிற்று. கி.பி.13ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இசுலாமியர்களிடையே சோதிட நம்பிக்கை குறைந்துவிட்டது.

## ஐரோப்பிய நாடுகள்

இன்று ஐரோப்பிய நாடுகளில் வழக்கில் இருக்கும் சோதிட முறைகள் அனைத்துமே கிரேக்கச் சோதிடத்தை அடிப்படையாகக் கொண்டவை. இந்திய, ஈரானிய முறைகளும் பிற்காலத்தில் ஐரோப்பியச் சோதிடத்தை ஓரளவு பாதித்தன.

உரோமப் பேரரசின் காலத்தில் சோதிட நூல்கள் கிரேக்க மொழியிலேயே எழுதப்பட்டன. எனவே சோதிட நூல்கள் இலத்தீன் மொழியில் எழுதப்படாமல் கிரேக்க மொழி யிலேயே எழுதப்பட்டன. இவற்றுள் ஏறக்குறைய கி.பி. இருபதில் எழுதிய மணலியஸ், 'அஸ்ட்ரானமிக்கா' 'பிர்மிகஸ் மேட்டர்னஸ்' (சுமார் கி.பி.335) என்பவர் எழுதிய சோதிட நூல், பெயர் தெரியாத ஒருவர் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் எழுதிய 'ஹெர்மெசினுடைய புத்தகம்' முதலியன இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்ற நூல்களாகும். பின்னர் கிரேக்க மொழிகளில் எழுதப்பட்டிருந்த சோதிட நூல்களின் செல்வாக்கு குறையத் தொடங்கியது. கி.பி.13ஆம் நூற்றாண்டில் கிரேக்க, அரேபிய மொழிகளிலிருந்து சோதிட நூல்கள் இலத்தீனுக்கு மொழி பெயர்க்கப் பட்டதால் சோதிடம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது.

கி.பி.17ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் கோப்பர்னிக்கஸ் (1473-1543), கலிலியோ (1564-1642), ஜோகன்ஸ் கெப்ளர் (1571-1630) போன்ற மிகப்பெரிய வானநூல் அறிஞர்களின் முயற்சிகளால் 'பூமி மையக் கொள்கை' கைவிடப்பட்டு 'சூரிய மையக் கொள்கை' ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும், 'டெஸ்சார்ட்டஸ்' (1596-1650), 'நியூட்டன்' (1642-1727) போன்ற இயற்பியல் அறிஞர் களின் புதிய இயற்பியல் கொள்கைகளின் விளைவாக, சோதிடர் களிடையே சோதிடத்தின் செல்வாக்கு குறையத் தொடங்கியது.

உரோமப் பேரரசின் ஒரு பகுதியான பைசாந்தியாவில் கி.பி.ஆறாம் நூற்றாண்டு வாக்கில் சோதிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. 'ஹெபேஷன்', லாவோடிசியாவைச் சேர்ந்த 'ஜீலியன்', 'புரோக்ளஸ்' என்று பல சோதிடர்கள் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அக்காலத்தில் மனிதச் சிந்தனையைச் சோதிடமே பெரிதும் ஆட்கொண்டிருந்தது.

கி.பி.ஆறாம் நூற்றாண்டிற்குப் பின்னர் சோதிடத்தின் செல்வாக்கு குறையத் தொடங்கியது. கி.பி.ஒன்பதில் அராபிய, சிரியாக் மொழிகளிலிருந்து சோதிட நூல்கள் பல மொழிபெயர்க்கப்பட்டதால் சோதிடம் மீண்டும் உயிர்ப்பிக் கப்பட்டது.

கிரேக்கரின் சோதிடவியலை உரோமானியர் முதலில் வெறுத்தனர். 'அகஸ்தஸ் சீசர்' என்னும் மன்னர் புறக் கணித்தார். பின்னர் 'திரேரஸ்', 'நீரோ' போன்ற மன்னர்கள் ஏற்றுக் கொண்டனர் என்று 'பிரிட்டானிகா கலைக்களஞ் சியம்' கூறுகிறது.[25] உரோமாபுரியை ஆண்ட மன்னர்கள், போர்முனைக்குச் செல்லும் காலங்களில் வெற்றி தோல்விகளைச் சோதிடர் வாயிலாக அறிந்த பிறகே சென்றுள்ளனர். உரோமாபுரியிலுள்ள 'அப்பல்லோனியஸ்' கீழ்த்திசை நாடுகளில் பயணம் மேற்கொண்டு சோதிடக் கலை நுட்பங்களைக் கற்றுப் பல நூல்களை எழுதியுள்ளார்.

தெற்கு மெக்சிகோவில் வாழ்ந்த 'மாயான்' நாகரிகத்தினர் தொல் பழங்காலத்திலேயே வானநூல் அறிவில் சிறந்து விளங்கினர்; சிறந்த காலக்கணிப்பு முறையைக் கண்டு பிடித்திருந்தனர். அவர்களை வெற்றி கண்டபோது ஸ்பெயின் நாட்டினர் கைப்பற்றிய பொருட்களில், பல சோதிட நூல்களும் இருந்தன. இதன்பின்னர் ஐரோப்பியச் சோதிடத்தில் ஓரளவு மாயான் சோதிடத்தின் பாதிப்பு ஏற்பட்டது.

'சராசென்' என்பவர்கள் சோதிடத்தை ஸ்பெயினில் கி.பி.711இல் பரப்பினர். வட ஆப்பிரிக்கரும், மூர் சாதியினரும் இதனை 1237இல் ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்றனர்.

---

25. Topic Astrology

கடவுளின் பேராற்றலைப் போற்றிய கிறித்தவ நாகரிகம் கோள்களின் ஆற்றலை மறுத்தது. எனினும் கிறித்தவம் ஓரளவு சோதிடத்தை ஏற்றுக் கொண்டது. சிரியாவைச் சேர்ந்த கிறித்தவ அறிஞர் பார்டசேனஸ் (கி.பி.154-222), நோஸ்டிக் தத்துவத்தைப் பின்பற்றுபவர். இவர் பருப்பொருள் பாபமானது, ஆன்மா புனிதமானது என்று நம்பினார். அவர், வானத்திலுள்ள கோள்களின் நிலை பருப்பொருள் உலகத்தை மட்டும்தான் கட்டுப்படுத்துகிறது; ஆன்மா நல்லது கெட்டதைத் தேர்ந்தெடுப்பதில் அது தலையிடுவதில்லை யென்று போதித்தார். கி.பி.நான்கில் ஸ்பெயினில் வாழ்ந்த 'பிரிசிலியான்' என்னும் கிறித்தவத் துறவி, 'சோதிட நூலில் வல்லவர்களுக்குக் கோள்கள் கடவுளின் ஆணையை வெளிப்படுத்துகின்றன என்று போதித்தார்.[26] தீர்க்கதரிசிகளுள், சோதிடர்களுள், குறி சொல்பவர்களுள் போலிகள் இருப்பதை அறிந்து கிறித்துவ மதத்தினர் சோதிடத்தை ஊக்குவிக்க மறுத்தனர். இக்கருத்து இசுலாமியர்களுக்கும் ஏற்புடையதாக இருந்தது. சுமார் 1400 ஆண்டுகள் எந்த வானவியல் நிபுணர்களின் புத்தகங்களையும் கிறித்து, இசுலாம் மதத்தினர் வெளிவர விடவில்லை. 'தாந்தேயும்', 'தாமஸ் அகினசும்' 13ஆம் நூற்றாண்டு கிறித்தவத் தத்துவத்தில் சோதிடத்தை ஏற்றுக் கொண்டனர். 1740இல் 'ஹாலி', சூரிய மண்டலத்தில் வால் நட்சத்திரங்களைப் பற்றி எழுதினார்.

கி.பி.1486இல் பிறந்த 'ஹென்றி கொர்னேலியஸ் அக்ரிப்பா' என்பவர் தமது 35ஆவது வயதில் பிரெஞ்சு மன்னரான 'முதலாம் பிரான்ஸிஸுக்குச் சோதிடராயிருந்தார். 'ஜான் டீ' என்பவர் எலிசபெத் இராணியின் விருப்பத்திற்குரிய சோதிடராயிருந்தார்.

1555இல் பிரான்சு நாட்டில் ஒன்பதாவது சார்லஸ் மன்னருடைய அரசவை மருத்துவராக இருந்த 'நாஸ்ட்ரடாமஸ்' என்பவர் எழுதிய தீர்க்க தரிசனங்கள் ஐரோப்பாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. நாஸ்ட்ரடாமஸ் எதிர்கால நிகழ்ச்சிகளை நன்முறையில் கூறுகிறார் என்ற கருத்து உலகப் போரின்போது பரவலாக நிலவியது. இன்றும் இந்நூல் ஒரு சிறந்த தீர்க்கதரிசனமாகக் கருதப்படுகிறது.

---

26. சோதிடம் அறிவியலா, ப.69

1770இல் லிசென்டில்' எனும் பிரெஞ்சு அறிவியல் அறிஞர் சென்னை, திருவெள்ளூரிலிருந்து 3000 ஆண்டுகட்கு முற்பட்ட பழைய பஞ்சாங்கங்களை ஆராய்ந்து சூரிய நட்சத்திர மண்டலங்களைப் பற்றிக் கூறினார். 1810இல் 'ஹார்செல்' என்ற பிரெஞ்சு அறிவியல் அறிஞர் 'லீ சென்டில்' கருத்துப்படி ஸ்டெல்லர் சிஸ்டம்' பற்றி எழுதினார்; யூரெனஸ் எனும் புதிய கோளைக் கண்டுபிடித்தார். 1910இல் 'லியா விட்' ஸ்டெல்லர் ரொட்டேசன் பற்றி எழுதினார்.

கி.பி.17ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் சூரிய மையக் கொள்கையும், இயற்பியல் கொள்கையும் சோதிடத்தின் செல்வாக்கை ஓரளவுக்குக் குறைத்த போதிலும் இன்று அமெரிக்கா போன்ற நாடுகளில்கூட சோதிடம் வேகமாகப் பரவி வருகிறது.

1820ஆம் ஆண்டிற்கும், 1822ஆம் ஆண்டிற்கும் இடையில் 'டெட்ராபைபிலோஸ்' என்ற புத்தகத்தின் இரண்டு ஆங்கில மொழிபெயர்ப்புகள் வெளிவந்தன. இவை சோதிடத்தில் பல அறிவியல் கூறுகளை இணைக்கும் முயற்சியின் வித்தாக அமைந்தன. அறிவியல் கூறுகளை இணைத்துப் பார்க்கும் முயற்சி காரணமாய் சோதிடம் 'நவீன சோதிடம்' என்ற பெயரைத் தாங்கி நின்றது. இந்நவீன சோதிடத்தின் தொடக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்கியது எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் 'தியோசோபி' (Theosophy) இயக்கம் மலரத் தொடங்கியது. இந்த இயக்கம் சோதிடத்தைத் தன் அடிப்படை நம்பிக்கைகளுள் ஒன்றாக ஏற்றுக் கொண்டது.

பின்னர், இங்கிலாந்தில் ஆலன்லியோவின் நூல்கள் வெளியிடப்பட்டன. இந்நூல்கள் இங்கிலாந்தில் சோதிட நம்பிக்கை பரவுவதற்கு வழிவகுத்தது. அதே நேரத்தில் அமெரிக்காவில் புகழ்பெற்றுக் கொண்டிருந்த 'ரோசிகுரிசியனிசம்' (Rosicrucianism) என்னும் இயக்கமும் சோதிட நம்பிக்கை பரவுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தது. இந்த இயக்கம் பெருமளவில் பிரச்சார வெளியீடுகளை அச்சிட்டு வினியோகித்தது. இவ்வெளியீடுகள் சோதிடப் பிரச்சார ஊடகங்களாகவும் செயல்பட்டன. இதே காலக்கட்டத்தில் ஏறக்குறைய அனைத்து மொழிகளிலும்

அச்சு இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப் பெற்றன. சோதிட நூல்கள் மிகுதியும் வெளிவரத் தொடங்கின. எனவே இந்தியா உட்பட பல நாடுகளிலும் சோதிடம் மக்களது வாழ்க்கையில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுவிட்டது.

***சீனா***

சீனர்கள் கி.மு.3000 ஆண்டுகளுக்கு முன்னரே கோள்கள், விண்வெளி நிகழ்வுகள் பற்றி அறிந்திருந்தனர். தொல் பழங்காலத்திலேயே சிறந்த காலக் கணிப்பு முறையை அவர்கள் உருவாக்கி இருந்தனர். ஃபூசி என்பவர் கி.மு. 3328ஆம் ஆண்டிலேயே ஓர் எளிய காலண்டர் முறையைக் கண்டுபிடித்து விட்டதாகவும் 'மஞ்சள் பேரரசர்' என்றழைக்கப்படும் 'வாங்டி' என்னும் மன்னர் கி.மு.2698இல் காலண்டர் முறையில் வேண்டிய சீர்திருத்தம் செய்ததாகவும் கூறப்படுகிறது.[27] சீனாவில் சுமார் கி.மு.2752இல் 'ஃபோஹி' அரசர் காலத்திலிருந்து, சோதிடத்தைக் கற்பதற்காகவும் அவர்கள் வான சாத்திரத்தை விருத்தி பண்ணினர். சோதிட அறிவுள்ளவர்களைக் கொண்டு சக்கரவர்த்திகளைத் தெரிவு செய்தனர். இந்த முறையில் கி.மு.2513இல் 'சுயூனி' என்பவர் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.[28]

சீனர்களிடம் சோதிட நம்பிக்கை தொடக்க காலத்திலேயே வேரூன்றி இருந்தது. சீனர்களைப் பொறுத்த வரையில் சோதிடம், வானநூல், சமயம் என்ற இவை மூன்றும் ஒன்றாகவே கருதப்பட்டன. 'டியென் வென்' என்னும் சீனமொழிச் சொல் இம்மூன்று பொருள்களையும் குறித்திருக் கின்றது. எனவே இம்மூன்றும் கலந்தே அவர்களுடைய தொடக்ககால நம்பிக்கைகள் விளங்கின. விண்வெளி நிகழ்வுகள், மனிதர்களுக்குக் கடவுள் தெரிவிக்கும் எச்சரிக்கை என்று சீனர் நம்பினர். இவ்வெச்சரிக்கைகளைத் தெரிந்து கொண்டு தங்களுடைய வாழ்க்கையைச் சரி செய்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இவர்கள் விண்கோள்களை நோக்குவதில் அதிகக் கவனம் செலுத்தினர்.

---

27. மேலது, ப.59, 28. பிரஸன்ன சோதிடம், ப.25.

சீனர்கள் இந்தியரைப் போன்றே 60 ஆண்டுகள் கொண்ட காலச் சுழற்சியைப் பயன்படுத்துகின்றனர். சீனர்கள் தங்கள் இராசி மண்டலத்தை எலி, எருது, புலி, முயல், வேதாளம், பாம்பு, குதிரை, ஆடு, குரங்கு, வான்கோழி அல்லது சேவல், நாய் ஆகிய இவற்றின் பெயரால் வழங்குகின்றனர். அத்துடன் பஞ்ச பூதங்களான காடு, நீர், நெருப்பு, இரும்பு, மண் என்ற அடிப்படையிலும், ஒவ்வொன்றுக்கும் வண்ணம், உடல், உறுப்பு, காரகத் துவம், ஆண் பெண் என்ற பால் அடிப்படையிலும் ஆண்டுகளைப் பிரித்துள்ளனர்; சந்திரமான ஆண்டையே பின்பற்றுகின்றனர். இம்முறையை கி.மு.2367இல் 'ஹவாங்டி' என்ற சீனப் பேரரசர் தொடங்கி வைத்தார். இந்த 60 ஆண்டுகளில் 78ஆவது சுழற்சி (Cycle) இப்பொழுது நடைபெறுகின்றது.

மேலும் இராசிவட்டம் 28 சியுகளாக (Sins) பிரிக்கப்பட்டது. சீனச் சோதிடத்திலுள்ள இச் ''சியு''களும் இந்தியச் சோதிடத்திலுள்ள நட்சத்திரங்களும், இசுலாமியச் சோதிடத்திலுள்ள மனாஜில்களும் கிட்டத்தட்ட ஒரே அடிப்படையில் ஆனவை. இம்முறை இந்தியாவில் தோன்றி, சீனாவிற்குப் போயிருக்கலாம் என்பர். ஆனால் நட்சத்திரங்களைப் போல் அல்லாது 'சியு'கள் வான மையக் கோட்டில் குறிக்கப்படுகின்றன. குறைந்தது சில 'சியு' களாவது நட்சத்திர முறை தோன்றுவதற்கு முன்னால் தோன்றியிருக்கும் என்பதற்குக் காட்டுகள் உள்ளன. இந்திய நட்சத்திர முறை சீனர்களுக்கு அறிமுகமானதும் ஏற்கனவே இருந்த 'சியு' முறையில் சில மாறுதல்களைச் செய்திருக்கலாம் என்பர்.[29]

கி.பி.27இல் சீனாவில் 'வாங்கசுங்' என்பவர் மனித வாழ்வின் மீது மேலுலக ஆதிக்கம் என்பது பற்றி விளக்கியிருந்தார்; ஷ்யுசுங்' என்பவர் சீன சோதிடத்தை நெறிப்படுத்தினார். புத்தமதத் துறவிகளும் மெசபடோமியச் சகுனங்களைச் சீனாவுக்குக் கொண்டு சென்றிருக்கின்றனர்.

29. சோதிடம் அறிவியலா, ப.60

பிற்காலத்தில் இந்தியச் சோதிடமும் சீனாவில் பரவி, சீனச் சோதிடத்தில் சில பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றது. இங்ஙனம் சோதிடச் சாத்திரம் அறிமுகமாகி, அது பூமியின் மீதுள்ள செல்வந்தர், குருமார், அரசர் ஆகியோர் மீது ஆதிக்கம் செலுத்தியது. சோதிடச் சாத்திரம் தன் காலத்தில் உலகத்தின் எசமானியாக இருந்தது என்று 'மாஸ்பரோ' என்பவர் கூறியுள்ளார்.[30]

அக்கேடியன்களும் சுமேரியர்களும் வானத்தையும், வானத்தில் உலாவும் பொருள்களின் போக்குகளையும் கவனிக்க முயன்றனர் என்று டாக்டர் 'தாம்ஸன்' கூறுகிறார்.

5000 ஆண்டுகளுக்கு முன் மத்திய ஆசியாவில் ஒன்றாக (இந்தியா, சீனா, ரஷ்யதாஷ்கண்ட்) வாழ்ந்த மனிதர்கள், சீனர், இந்தியர், திராவிடர், உரோமானியர், கிரேக்கர், யூதர், அரேபியர், ஐரோப்பியர் என உலகெங்கும் பிரிந்து சென்று விட்டனர் என்று வரலாறு கூறுவதால் சோதிடம் ஓரிடத்தில் தோன்றிப் பல இடங்களுக்கும் பரவி இருக்கின்றது.

## பஞ்சாங்கத்தின் தோற்றம்

ஆண்டுதோறும் வெளிவரும் நாட்காட்டி (காலண்டர்) முதன் முதலாக எகிப்தில் கி.மு.4236இல் வெளியானதாகத் தெரிகிறது. 6000 ஆண்டுகளுக்கு முன்பு வெளியான அந்த ஆண்டு நாளேடு ஒருசில மாற்றங்களோடு இன்றும் பயன்படுகின்றது. ஐரோப்பாவில் முதல் பஞ்சாங்கம் வியன்னாவில் 1457இல் ஜார்புர்பாக் என்ற வானியல் பண்டிதரால் வெளியிடப்பட்டது. 1493இல் பாரிசிலிருந்து ஒரு பஞ்சாங்கம் வெளிவந்தது. அதன் ஆங்கிலப் பதிப்பு, 'காலண்டர் ஆஃப் ஷெப்பர்ட்ஸ்' என்ற பெயரில் 1503இல் தொடங்கி 17ஆம் நூற்றாண்டு இறுதிவரை வெளியானது. புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் ரெபலே 1535, 1548, 1550ஆம் ஆண்டுகளில் தனது பஞ்சாங்கத்தை வெளியிட்டார்.'

---

30. பிரஸன்ன சோதிடம், ப.24

'உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சு சோதிட மேதை நோஸ்ட்ரடாமஸ் என்பவரின் மிகச்சிறந்த, சிறிதும் பிழையற்ற அரசியல் கணிப்புகள், அவரது புகழைப் பெருகச் செய்ததோடு அரசியல் சோதிடம் கூறும் பஞ்சாங்கங்களின் எண்ணிக்கை புற்றீசல்போல் பெருகவும் வழிகோலியது. அதனால் 1579இல் பிரெஞ்சு மன்னன் மூன்றாம் ஹென்றி பஞ்சாங்கங்களில் அரசியல் சோதிடம் வெளிவருவதைத் தடை செய்தார். 1628இல் பதிமூன்றாம் லூயி மன்னர் இத்தடையை மீண்டும் செயல்படுத்தினார். அமெரிக்காவில் 'பெஞ்சமின் பிராங்க்ளின் ரிச்சர்ட்' என்ற புனைப்பெயரில் 'ஏழை ரிச்சார்டின் ஆல்மனாக்' என்று 1664இல் வெளியிட்டார். அது 160 ஆண்டுகள் வெளிவந்தது. 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்காவில் ஆண்டுக்கு ஐந்து லட்சம் படிகள் பஞ்சாங்கம் விற்பனையாயின. இந்த நூற்றாண்டின் பஞ்சாங்கம் இன்றைய பத்திரிகைகளுக்கு, சஞ்சிகைகளுக்கு முன்னோடியாக இருக்கிறது. 1767 முதல் வெளிவரும் 'நாட்டிகல் ஆல்மனாக்', 1937இல் தொடங்கப்பட்ட 'ஏர் ஆல்மனாக்' இரண்டும் மிகச்சிறந்த வானநூல் பஞ்சாங்கங்கள்'[31]. இனிவரும் நாட்களில் கணினிகளின் துணையொடு பஞ்சாங்கங்கள் செயல்படும் போது காலக் கணக்கை மேலும் செம்மைப்படுத்த வாய்ப்பு மிகுதி.

இதுகாறும் கூறியவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது, பின்வரும் சில தெளிவுகளைப் பெறமுடிகின்றது. சோதிடம் சகுனங்களிலிருந்து தோன்றிய ஒன்று சோதிடம். கி.மு.500க்கும் கி.மு. 200க்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றிவிட்டது.

'எனுமா அனு எனிலில்' என்னும் சோதிட நூல் பாபிலோனியாவில் தோன்றியது. கோள்களின் பெயர்ச்சிகளை மனித வாழ்க்கையோடு தொடர்புபடுத்தியவர்கள் சால்தியர்கள். மேலைநாடுகளில் 'சேத்' என்பவரே முதல் சோதிடராகக் கருதப்படுகிறார். கி.மு.3இல் 'பிறந்த நேர சாதகம்' பாபிலோனியாவில் தோற்றம் பெற்று, கிரேக்கத்தில்

---

31. பஞ்சாங்கம் ஏன்? எதற்கு? எப்படி? மு. ஸ்ரீனிவாசன், பக்.I, III

வளர்ச்சியடைந்தது. சோதிடத்தைப் பிரம்மாவிடமிருந்து 'கார்க்கி முனிவர்' கற்றதால் உலகமெங்கும் பரவிற்று என்ற கருத்தும் இது போன்ற பிற புராணக் கருத்துகளும் ஏற்புடையனவாகத் தோன்றவில்லை. இந்தியச் சோதிடத்தைக் கட்டமைத்துக் கொடுத்தவர் வராகமிகிரர். தமிழகத்தில் சோதிடம் எப்படித் தோன்றியது என்பது ஆய்வுக்குரியது. தமிழ்மொழியிலுள்ள பல சோதிட நூல்கள் வடமொழி நூல்களிலிருந்து எழுந்துள்ளன. இசுலாமியர்களிடையே சோதிடம் நிலைபெறவில்லை; கிறித்தவம் ஓரளவு ஏற்றுக்கொண்டது. தீர்க்க தரிசனங்களும், சூரிய மையக் கொள்கையும் சோதிடத்தின் வளர்ச்சியைப் பாதித்துள்ளன. வானமண்டல நிகழ்ச்சிகளைச் சோதிடப் பலன் கூறும் அறிகுறிகளாகச் சோதிடவியல் தீர்மானிக்கிறது. பழங் காலத்தில் முனிவர்களும் சோதிடர்களும் வான மண்டலத்தைக் கணித்து, மனித வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கணிக்கும் விதி முறைகளை வகுத்து உள்ளனர். இந்தியச் சோதிடவியல் வளர்ச்சிக்குக் கிரேக்கர்களின் வடிவக் கணித முறையினைத்தான் தமிழ்ச் சோதிட நூல்கள் பின்பற்றிப் பலன் கூறுகின்றன.

மேற்கூறிய சோதிட வரலாற்றை நோக்கும்போது சோதிடம் எப்பொழுது தோற்றம் பெற்றது என்பதை அறுதியிட்டுக் கூறவியலாது. எனினும் மனிதன் தோற்றம் பெற்று வானியல் நிகழ்வுகளைக் கண்டு அஞ்சி அதுபற்றி சிந்திக்கத் தொடங்கிய காலந்தொட்டே 'சோதிடவியல்' எனும் துறைக்கு அடிக்கல் நாட்டப்பட்டு விட்டது என்று கூறலாம்.

பாபிலோனியாவில் முதன் முதலில் வானியல் சகுனங் களை அடிப்படையாகக் கொண்டு சோதிடம் தோன்றியது என்று கூறுவர். ஆயினும் பாபிலோனியர் மட்டுமன்றி, உலகில் வாழும் அனைத்து மக்களும் வானியல் சகுனங்களைக் கொண்டு தங்களுக்கு இசைந்த வகையில் சோதிட முறைகளை உருவாக்கியே வந்துள்ளனர். அவற்றின் முறைகளும், வளர்ச்சி நிலைகளும் வேண்டுமானால் இடத்திற்கிடம் மாறுபட்டிருக்கலாம். அவ்வகையில் பாபிலோனி யாவில் இதன் வளர்ச்சி நன்முறையில் இருந்திருக்கிறது.

பாபிலோனியாவில் வளர்ச்சி பெற்ற 'சோதிடவியல்' பின்பு இந்தியா, கிரேக்கம் போன்ற நாடுகளைச் சென்றடைந்து, அங்கு முன்பே நிலவி வந்த சோதிட முறைகளுடன் கலந்து உருநிலை மாறியது. இங்ஙனம் புதிதாக உருக்கொண்ட சோதிட முறைகள் கிரேக்கத்திலிருந்து இந்தியாவிற்கும், இந்தியாவிலிருந்து கிரேக்கத்திற்கும் பரிவர்த்தனை செய்யப்பட்டு மேலும் வளர்ச்சி நிலையினை எட்டியது. இந்நிலையில் பல நாடுகளிலும் பாபிலோனியச்சோதிடக்குறிப்பு களின் கூறுகள் காணப்பட்ட காரணத்தால் பாபிலோனியா விலிருந்தே சோதிட முறை தோன்றியது என்ற கருத்தும் உருவாகி இருக்கிறது.

ஈரான் நாட்டைச் சேர்ந்த மகுசேயின் இனத்தவர் கிரேக்கத்திற்குக் குடிபெயர்ந்த போது பாபிலோனியச் சோதிடத்தைக் கிரேக்கத்தில் பரப்பியுள்ளனர். ஈரான் நாட்டின் சோதிட வளர்ச்சியைப் பார்க்கும்போது கிரேக்க, இந்திய நாடுகளிலிருந்து பாபிலோனியச் சோதிடம் ஈரானுக்கு வந்திருக்கிறது. ஆயின் பாபிலோனியச் சோதிடம் இவர்களிடமிருந்து ஈரானுக்குப் புதியதாக வரவில்லை. ஈரானியரிடம் முன்பே பாபிலோனியச் சோதிடம் இருந்துள்ளது. கிரேக்கத்திற்குக் குடியேறிய மகுசேயின் இனத்தவர் கிரேக்கத்தில் பாபிலோனியச் சோதிடத்தைப் பரப்பினார் என்ற கருத்து இதனை அரண் செய்கிறது. கிரேக்கர்கள் தங்களிடம் முன்பே இருந்த சோதிடம், பிற நாடுகளின் வழிவந்த பாபிலோனியச் சோதிடம், மகுசேயின்கள் மூலம் வந்த பாபிலோனியச் சோதிடம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு இதில் பல வளர்ச்சி மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். இந்த வளர்ச்சி மாற்றம் பெற்ற சோதிடம் தான் ஈரானுக்கு வந்திருக்கிறது. தங்களிடம் உள்ள பாபிலோனியச் சோதிடத்தை உணராத ஈரான் நாட்டினர், இப்புதிய முறையை ஏற்றுச் சோதிடத்தை வளர்த்துள்ளனர். எனவே, சோதிடம் ஒரே காலக்கட்டத்தில் உலகின் பல இடங்களில் தோன்றியுள்ளது. அத்துடன் பாபிலோனியாவில் தோன்றிய சோதிடம் உலகின் பல பகுதிகளுக்குப் பரவி ஒவ்வொரு நாட்டிலுமுள்ள சூழலுக்குத் தக்க வகையில் வளர்ச்சி மாற்றம் அடைந்துள்ளது.

இங்ஙனம் சோதிடவியலின் தோற்ற வளர்ச்சியினை ஆய்வு செய்யும்போது உலகின் பல பகுதிகளிலும் ஏறக்குறைய ஒரேநேரத்தில் தொடங்கினாலும், அவ்விடங்களில் வாழும் மக்களின் மனப்போக்கிற்கும் சூழலுக்கும் ஏற்ற வகையில் பல்வேறு வகைகளில் தோன்றிப் பின்னர் மனிதக் குழுக்கள் ஒன்றுடன் ஒன்று இடம் பெயர்ந்து கலக்கத் தொடங்கிய நிலையில் பரிமாற்றங்கள் நிகழ்ந்து வெவ்வேறு பரிமாணங்களைப் பெற்று, புத்துருக் கொண்டு புதிய வளர்ச்சி நிலையினை அடைந்துள்ளது.

★ ★ ★

## இயல் இரண்டு

# சோதிடத்தின் வகைகள்

**உ**லகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த மக்கள் அவரவர் தம் வாழ்க்கைச் சூழலில் தாம் காணும் நிகழ்வுகளின் அச்சம், நிலையற்ற தன்மை ஆகியவற்றின் காரண காரியங்களுடன் கூடிய அல்லது அவையல்லாத செய்திகள் யாவும் சோதிட முறை உருவாகக் காரணமாக அமைந்துள்ளன.

மேலும் எதிர்காலத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற மனிதனுடைய இயற்கை ஆர்வமும் ஒரு புதிய அறிவியலின் தோற்றத்திற்கே வித்திட்டு இருக்கிறது. கிரேக்கச் சிந்தனையாளர்களின் முயற்சியினால் ஓர் அறிவியல் கலை என்று கூறுமளவிற்குச் சோதிடம் வளர்ந்திருக்கின்றது. இச்சோதிடம் உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் ஏதோ ஒரு முறையில் பயன்பாட்டில் இருந்து வந்திருக்கின்றது. இத்தகைய சோதிடத்தில் பல்வேறு வகைகள் தோன்றி வளர்ந்து வரலாயின. அவற்றுள் தொடக்க காலத்தில் தோன்றிய சோதிட வகைகள் அவற்றின் வளர்ச்சியால் ஏற்பட்ட புதிய சோதிட வகைகள், இவ்விரண்டிலும் தோன்றிய உட்பிரிவுகள் ஆகியன பற்றியும், மக்கள் வாழ்வில் மிகுதியும் பயன்பாட்டிலுள்ள சில சோதிட வகைகளின் விளக்கங்கள், தெளிவுகள் ஆகியன பற்றியும் இப்பகுதி உரைக்கின்றது.

### தொடக்ககால முறைகள்

தொடக்ககால சோதிடத்தை, சோதிட நூல்களின் உதவியுடன் வானநூல் வரலாற்றாசிரியர்கள் இயற்கைச் சோதிடம், கணிப்புச் சோதிடம் என இரண்டு வகையாகப் பிரித்திருக்கின்றனர்.

## இயற்கைச் சோதிடம்

விண்மீன்கள், சூரியன், சந்திரன் முதலியன தொடக்க கால மனிதனுக்கு மிகுந்த வியப்பை ஏற்படுத்தியிருக்காது. ஆயின் சூரியன் ஒவ்வொரு நாளும் காலையில் கிழக்கே தோன்றி மாலையில் மேற்கே மறைதல், சந்திரனில் பிறைகள் ஏற்பட்டுப் பௌர்ணமியும், அமாவாசையும் தோன்றுதல் ஏன் என்ற ஆர்வத்தைக் கேள்வியை எழுப்பாமல் இருந்திருக்க முடியாது. அதேபோல எப்போதாவது ஒருமுறை திடீரென வால்மீன் தோன்றுதல், பகலிற் சூரியன் மறைக்கப்படுதல் (கிரணங்கள்), பௌர்ணமியன்று நிலவு மறைக்கப்படுதல் முதலியன மனித மனத்தில் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கும். எனவே இவையனைத்தும் மனித வாழ்வில் நிகழப் போவதைக், குறிக்கும் சகுனங்களாக்கப் பெற்றன.

நேரவிருக்கும் நன்மை தீமைகளை முன்கூட்டியே அறிந்துகொள்ள வானத்தைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கியதன் விளைவாக இராசிவட்டம், கோள்கள், கோள்களின் பெயர்ச்சி, கிரகணங்கள் நிகழும் காலம் இவையெல்லாம் கண்டறியப்பட்டிருக்கின்றன. இவ்வறிவு ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் செல்லும்போது சில வட்டார மாற்றங்களையும் ஏற்றுக் கொண்டது.

இராசிவட்டம் பற்றிய, கோள்கள், சந்திரன் சூரியன் முதலியவற்றின் நகர்ச்சி பற்றிய அடிப்படை விதிகளை உணராமல் மனிதன் அறிந்து வைத்திருந்த இச் செய்திகளே 'இயற்கைச் சோதிடம்' என இன்றைய வானநூல் வரலாற்றாசிரியர்களால் வகைப்படுத்தப் பெற்றிருக்கின்றது. எனவே இயற்கைச் சோதிடம் என்ற பிரிவு தொடக்கத்தில் இருக்கவில்லை. ஆயின் பிரிவு என்று மக்கள் உணரவில்லையே ஒழிய மக்கள் பயன்பாட்டில் இம்முறை இருந்திருக்கின்றது. கணிப்புச் சோதிட நூலோடு விரவிக் கிடந்த வானநூல் உண்மைகள் அடங்கிய செய்திகள் பிரித்தெடுக்கப்பட்டு 'இயற்கைச் சோதிடம்' என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## கணிப்புச் சோதிடம்

இயற்கைச் சோதிடத்திலுள்ள வானநூல் உண்மைகளை மனித வாழ்க்கை முறையோடு தொடர்பு படுத்திப் பார்க்கும் பிரிவு 'கணிப்புச் சோதிடம்' எனப்படுகிறது. இம்முறையில் இயற்கைச் சோதிடம் அடிப்படையாக அமைய, அதில் சில செயற்கையான முறைகள் பயன்படுத்தப்பட்டு மக்களின் எதிர்காலம் பற்றி அறிய முயற்சிக்கப்பட்டது. காட்டாக, ஒருவர் பிறந்தபோது கிழக்கு அடிவானத்தில் என்ன இராசி, கோள்கள் முதலியன இருந்தன என்பனவற்றை அறிவதன் வழி அவரது எதிர்காலத்தை அறியலாம் என்று கருதப்பட்டது.

## சாதகச் சோதிடம் (மனித வாழ்வியல் சோதிடம்)

கணிப்புச் சோதிடத்திலிருந்து சாதகச் சோதிடம் என்று ஒரு கிளை தோன்றியது. இது செனனகாலச் சோதிடம், பிறந்தகாலச் சோதிடம், சாதகக் குறிப்புச் சோதிடம் என்று பல்வேறு பெயர்களால் குறிப்பிடப் பெறுகின்றது. சோதிட முறைகளுள் இம்முறையே புகழ்பெற்றுத் திகழ்கிறது. மனிதனின் குண இயல்புகளை, வாழ்வியல் கூறுகளை அறிய உதவும் இச்சோதிடம் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளை உடையதாகவும், நாடறிந்த கலையாகவும் இருக்கின்றது. இச்சோதிடம் பிறந்தகாலம், நேரம், இடம் ஆகியவற்றைக் கொண்டு கணிக்கப் பெறுகிறது. தனி ஒருவர் பிறந்த நேரத்தைக் கொண்டு அவருடைய பிறப்பு முதல் பொருளாதாரம், உடன்பிறந்தோர், பெற்றோர், புதல்வர், திருமணம், ஆயுட்காலம், பகை, செலவினங்கள் முதலிய வாழ்க்கைப் பலன்களை இச்சோதிடம் கூறுகின்றது. இந்தியச் சோதிடத்தைப் பொறுத்தவரையில் சாதகம் அமைத்தல், தசாபுத்தி, அட்டவர்க்கம், நவாம்சம் அமைத்தல் முதலியன இப்பிரிவில் அடங்கும். இச்சோதிடத்தில் சில வட்டார மாறுதல்கள் அந்தந்த நாடுகளின் தன்மைக்கேற்ப இடம் பெற்றுள்ளன. இச்சோதிடத்தில் பல உட்பிரிவுகள் தோன்றி வளர்ந்துள்ளன. பஞ்சாங்கச் சோதிடம், மருத்துவச் சோதிடம் முதலியன இவற்றுள் முக்கியமானவை.

### பஞ்சாங்கச் சோதிடம்

ஒரு குறிப்பிட்ட நேரம் சோதிடப்படி நல்ல நேரமா, அந்த நேரத்தில் செய்யும் செயல் வெற்றி பெறுமா என்பன பற்றிய சோதிடம் 'பஞ்சாங்கச் சோதிடம்' எனப்படுகிறது. இவ்வகையில் முகூர்த்தம் குறித்தல் சிறப்பிடம் வகிக்கின்றது. இந்தியாவில் இவ்வகைச் சோதிடம் 'முகூர்த்த சாஸ்திரம்' என்றுதான் வழங்கப்படுகிறது. இம்முறையில் திருமணம், புதுமனை புகுதல், வியாபாரம், புதுக்கணக்கு முதலியவற்றிற்கு நல்ல நேரம் குறித்துக் கொடுக்கப்படுகின்றது.

### மருத்துவச் சோதிடம்

பிறந்த நேரத்தில் இருந்த கோள்களின் அமைப்பினைப் பார்த்து நோயாளியைப் பற்றியும், மருத்துவத்தைப் பற்றியும், மருந்துகளைப் பற்றியும் அறிய உதவுவது மருத்துவச் சோதிடம். நோயின் தன்மை, குணப்படுத்தும் முறை, நோய் தோன்றும் காலம், குணமாகும் காலம், நோய் ஏற்படுத்தும் மனநிலை முதலியவற்றை அறிந்துகொள்ளும் வகையில் இச்சோதிட முறை அமைகிறது.

### ஆன்மீகச் சோதிடம்

இது ஆன்மீகம் அல்லது சமயம் தொடர்பானவற்றை அறியப் பயன்படுகிறது.

### பொதுநிலைச் சோதிடம்

கோள்கள், கோள்களின் சேர்க்கைகள் முதலான விண்வெளி நிகழ்வுகள், ஒரு சமுதாயத்தையும் நாட்டையும் மனித இனத்தையும் எந்த வகையில் பாதிக்கும் என்பது பற்றிய சோதிடம் 'பொதுநிலைச் சோதிடம்' எனப்படும். சகுனங்கள் அனைத்தும் இப்பிரிவில் அடங்கக் கூடியனவாகும். இப்பொதுநிலைச் சோதிடத்திலிருந்து உலகியல் சோதிடம், அரசியல் சோதிடம் என்பன கிளைத்தன. இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையே. நாட்டைப் பற்றி, நாட்டின் அரசியல் சூழல் பற்றி, ஆட்சி மாற்றம், நிதி நெருக்கடி, அரசியல் தலைவர், பொருளாதார மற்றும் வேறு

முன்னேற்றங்கள் பற்றிக் கூறுவது 'அரசியல் சோதிடம்' எனப்படுகின்றது. இப்பலன் உலக அளவில் பார்க்கப் படும்போது அது உலகியல் சோதிடமாகிறது. நாட்டினுடைய சாதகத்தின்வழி முன்பு நடந்த நிகழ்ச்சிகளின் சாதகங்களை ஆராய்ந்து பார்த்து நாட்டிற்கு, உலகிற்கு ஏற்படும் நன்மை, தீமை, குழப்பம், போர் முதலிய உலக நிகழ்ச்சிகளைக் கணக்கிட்டு வெளிப்படுத்துவது இவற்றின் பயன்பாடாகும். பூமி நடுக்கம், பஞ்சம், இயற்கை உட்பாதம் பற்றியும் இச்சோதிடம் கூறுகின்றது. ஒரு நாட்டைப் பற்றி, நாட்டின் பொருளாதாரம், முன்னேற்றம் பற்றி அறியும் தேசியச் சோதிடம், அரசியல் சோதிடத்தோடு பெரும்பாலும் ஒத்துக் காணப்படுகிறது. எனவே இங்குக் கூறப்பட்ட நான்கு முறைகளும் தமக்குள் ஒற்றுமையுடையனவாய் உள்ளன. பொதுநிலை, உலகியல் சோதிடங்கள் உலக அளவில் பலன்களையும், தேசிய, அரசியல் சோதிடங்கள் நாட்டளவில் பலன்களையும் காண முயற்சிக்கின்றன.

வானியல் மாற்றங்களின் காரணமாகவே பூமியில் பல இயற்கை மாறுபாடுகள் தோன்றுகின்றன என்ற கருத்து சோதிடரிடையே நிலவுகிறது. யுரேனஸ் என்னும் கோள் பூமத்திய ரேகைக்கு மிக அருகில் வந்து, குரு, சனி, செவ்வாய் ஆகியவற்றுடன் சச்சதுரமாகத் தொடர்பு கொள்ளும் சமயம், பூமியில் அதிர்ச்சி, பூகம்பம் முதலியவை நிகழ்கின்றன.

நவரத்தினங்களின் தோற்றத்திற்கு உலக சோதிடத்தைக் காரணமாகக் கூறுவோர் உளர். காட்டாக முத்துவின் தோற்றத்தைப் பற்றிக் கூறும்போது நல்முத்து விளையும் காரணத்தைக் 'கிருஷ்ண கர்ணாப்ருதம்' எழுதிய 'லீலாசுகள்' அளிக்கும் சோதிட விளக்கத்திலிருந்து, கோள்களும் நட்சத்திரங்களும் பூமியிலுள்ள சில பொருட்கள் விளையக் காரணமாகி இருப்பதை அறியலாம். 'சுவாதி நட்சத்திரம்' வானத்தின் உச்சியில் இருக்கும் பொழுது அதிலிருந்து தெறிக்கும் சுடர் கடலை நோக்கி விழும். அப்பொழுது எந்தச் சிப்பிகளின் மீது அச்சுடரின் தாக்கம் ஏற்படுகிறதோ அந்தச் சிப்பிகளில் நல்முத்து பிறக்கும்.

## பிரசன்ன சோதிடம்

சாதகக் குறிப்பில்லாதவர்களின் பலனை அறிய பிறந்த ஆண்டு, மாதம், தேதி, நேரம் கிடைக்காதபோது, அவர் கேட்கும் கேள்விக்குரிய நேரத்திற்கு இலக்னம் கண்டறிந்து, கோள்நிலைகளை அறிந்து, கேள்விகளுக்குப் பதிலளிப்பது 'பிரசன்ன சோதிடம்' எனப்படுகிறது. இது மேற்கூறிய பிரிவுகளின் பலன்களை உறுதிப்படுத்துவதற்கும் பயன்படுகிறது. இப்பிரிவு, கணிப்புச் சோதிடத்திலிருந்து தோன்றியதாகும். சோதிடம் கேட்பவர் நின்ற இடம், உட்கார்ந்த திசை, சோதிடர் உட்கார்ந்துள்ள திசை முதலியவற்றை அறிந்து பலன் கூறும் 'ஆருடம்' என்னும் சோதிடமும் இவ்வகையினைச் சார்ந்ததுதான். இவை 'ஹோரார் சோதிடம்' என்றும் அழைக்கப்படுகிறது. ஸ்பெயின் நாட்டினரின் ஆக்ரமிப்பிற்குப் பின்னர், அரேபிய நாட்டில் இப்பிரிவு மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. இவை தவிர 'இராணுவச் சோதிடம்' என்ற வகையும் உள்ளது. இச்சோதிட முறைகளை அடிப்படையாகக் கொண்டு அறிவியல் தாக்கத்தினால் சோதிடத்தில் பல புதிய பிரிவுகள் தோன்றின.

## புதிய சோதிட முறைகள்

பழங்காலத்திலிருந்து இன்றுவரை இருந்து வருகிற மேற்கூறிய சோதிடப் பிரிவுகளுடன் புதிய அறிவியல் பிரிவுகளையும் இணைத்துப் பல புதிய பிரிவுகள் உருவாயின. இதற்கு 'நவீன சோதிடம்' என்ற பெயர் ஏற்பட்டது. பழைய முறைகளுக்கும், புதிய முறைகளுக்கும் அதிக வேறுபாடுகள் கிடையாது. இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா முதலிய நாடுகள் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், சோதிடம் அறிவியல் என்பதை உறுதிப்படுத்த முயன்றதன் விளைவாகத் தோன்றியனவே இப்புதிய பிரிவுகள் எனலாம். மேலைநாட்டினர் புள்ளிவிவரத் தகவல்களைத் திரட்டி, சோதிடமும் ஓர் அறிவியல் என்பதை நிலைநாட்ட முயன்றனர்.

உலகப் போருக்குப்பின், அமெரிக்காவில், பாபிலோனிய இயற்கைச் சோதிடத்தை அடிப்படையாகக் கொண்டு 'சோதிட இயற்பியல்' (Astrological Physics), 'சோதிட வானிலையியல்' (Astrological Meteorology) என்னும் இரண்டு சோதிடப் பிரிவுகள் தோன்றின. பின்னர் இதே முறையில் 'சோதிட உளவியல்' (Astrological Psychology), 'சோதிட உயிரியல்' (Astrological Biology) போன்ற பிரிவுகளும் ஏற்படுத்தப் பெற்றன.

## சோதிட இயற்பியல்

இப்பிரிவு, கோள்களின் இயல்புகளுக்கும், மனித வாழ்க்கை முறைகளுக்கும் இடையிலுள்ள தொடர்பைக் காரண காரிய அடிப்படையில் விளக்குகின்றது. மின்விசை (Electro Dynamics) விதிகளின் அடிப்படையில் சோதிடம் விளக்கப் பெறுகின்றது. பூமி, மனிதன், சூரியன், விண்மீன்கள், கோள்கள் முதலியன மின்னூட்டம் பெற்ற பொருண்மைகள். இவை வெவ்வேறு அளவுள்ள காந்தப் புலன்களைக் கொண்டவை. எனவே சூரியன், சந்திரன், கோள்கள் முதலியவற்றின் ஒப்புமையான நகர்ச்சி மற்ற பொருண்மைகளின் (மனிதனையும் சேர்த்து) காந்தப் புலங்களைப் பாதித்து, அதன்வழி மற்ற தொடர்புகளையும் பாதிக்கின்றது என்பதே இப்பிரிவு தரும் விளக்கம்.

## சோதிட வானிலையியல்

'வானிலைச் சோதிடம்' எனப்படும் இம்முறை தொடக்ககால முறையிலுள்ள ஒன்றேயாகும். இது வளிமண்டலத்தின் விளைவுகளை முன்கூட்டித் தெரிவிக்கிறது. சூரியனும், சந்திரனும் அவற்றின் ஈர்ப்பு விசையின் காரணமாகப் பூமியிலுள்ள கடலில் ஓதங்களை உண்டாக்குகின்றன. இதை விளக்குவதே 'சோதிட வானிலையியல்'. கோள்களிடையே துரத்தல், மோதல், வெளியேறுதல் பற்றி இவ்வானிலைக் கணிப்புக் கூறுகின்றது. புயல், மழை, குளிர், வெப்பம், வெள்ளம், வறட்சி முதலான வானியல் நிகழ்வு பற்றி இன்று அறிவியல் அறிஞர்கள் அறிவிப்புத் தருகின்றனர். இருப்பினும் தொன்றுதொட்டு இப்பணியைச் சோதிடர் செய்து வருகின்றனர்.

## சோதிட உயிரியல்

இதனைச் சோதிட இயற்பியலின் ஓர் உட்பிரிவு என்று கூறலாம். பழைய முகூர்த்த சாஸ்திரம், வளர்ச்சியும் மாற்றமும் பெற்று இப்புதிய வடிவம் தோன்றியிருக்கிறது என்று கூறலாம். இராசிகளுக்குப் பூதங்கள் சொல்லப்படுவது போல, சூரியன், சந்திரன், கோள்கள் முதலியவற்றிற்குச் சில தாது உப்புகள் சொல்லப்பெறுகின்றன. இந்தத் தாது உப்புகளின் இயல்புகளுக்கேற்றாற்போல இவை பூமியின் பரப்பில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன என்பன போன்றவற்றை விளக்குவதே இப்பிரிவு. காட்டு: சந்திரன் ஒரு குறிப்பிட்ட இராசியில், ஒரு குறிப்பிட்ட பிறையில் இருக்கும்போது பயிர்களை நட்டால் பயிர் நன்றாக வளரும்.

## சோதிட உளவியல்

'சோதிட உளவியல்' என்பது கோள்கள் முதலியன ஒரு மனிதனுடைய உள்ளத்தை எங்ஙனம் பாதிக்கிறது என்பது பற்றியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல உளவியல் அறிஞர் தோன்றி பல புதிய உளவியல் கொள்கைகளை வெளியிட்டனர். இவ்வுளவியல் கொள்கைகளைக் கோள்நிலைகளோடு தொடர்புபடுத்திக் காண முயன்றதன் விளைவாக இப்பிரிவு தோன்றியது 'ஆல்பிரட் ஆட்லர்' என்னும் உளவியல் அறிஞர் தாழ்வு மனப்பான்மை, உயர்வு மனப்பான்மை போன்ற சில உளவியல் கொள்கைகளை வெளியிட்டார். 'காரல் ஜங்' என்னும் அறிஞர் மனிதர்களை உளவியல் அடிப்படையில் நான்கு பிரிவுகளாகப் பிரித்தார்; வேறுசில கொள்கைகளையும் வெளியிட்டார். இங்ஙனம் பல உளவியல் அறிஞர் புதிய கொள்கைகளை வெளியிட்டனர்.

சோதிடர் இவ்வுளவியல் கொள்கைகளைச் சோதிடத்தில் சேர்த்துக் கொண்டனர். காட்டாகச் சுக்கிரன் காதல் வாழ்க்கைக்குக் காரணமான கோள் என்றும், ஒரு சாதகத்தில் ஒரு குறிப்பிட்ட நிலையில் சுக்கிரன் இருந்தால் காதலில் ஈடுபடுவார் என்றும் கூறிவந்த சோதிடர், அதை உளவியலின் அடிப்படையில், அந்தச் சாதகர் நெகிழ்ந்த மனமும் இரசனை உள்ளமும் படைத்தவர், சார்ந்து நிற்கும்

இயல்புடையவர், தமது இரசனைக்கு ஏற்ற எதிலும் எளிதில் தீவிர ஈடுபாடு கொண்டு விடுவார் என்றும் கூறத் தொடங்கினர்.

## ஆழ்ந்த அல்லது இரகசிய சோதிடம்

இப்பிரிவு சோதிட உளவியலை ஒத்து அமைந்த ஒன்றே. இது மனிதனின் உள்மன வளர்ச்சிகளைப் பற்றியும், மனிதனுடைய அகத்தின் (Ego) வெவ்வேறு தன்மைகளைப் பற்றியும் உணர்த்துவது. ஒவ்வொரு பிறவியிலும், மனிதனின் அகம் தன்னுடைய முற்பிறப்பு எண்ணங்களுக்கு, ஆசைகளுக்கு, செயல்களுக்கு உரிய பலன்களை அனுபவித்து, அடுத்த பிறவி வராத வண்ணம் விதியை மாற்ற முயற்சிப்பது இப்பிரிவு. ஒளியுள்ள கோள்கள் எனப்படும் சூரியனும், சந்திரனும் மனிதனின் ஆத்மாவையும் மனத்தையும் கட்டுப்படுத்துகின்றன. புதன் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் ஆதிக்கம் செலுத்துகின்றது. சாதகத்தில் இம்மூன்றின் இருப்பிடமும், பார்வையும் இரகசிய சோதிடத்தை அறிதற்கு இன்றிய மையாதன. இலக்னம் மனிதனின் திட உடம்பையும், சந்திரன் திட உடலுக்கு உரிய ஆவி உடலையும், செவ்வாய் ஆகாய உடலையும், சுக்கிரன் ஆசைக்குட்பட்ட உணர்ச்சி உடலையும், சனி, புதன் மனத்தின் உடலையும், குரு இவற்றையெல்லாம் சுமந்து நடத்திச் செல்லும் தலைமையினையும் பெற்றுத் திகழ்கின்றன. இதில் நீர், நிலம், நெருப்பு, காற்று என்ற இராசிகளுக்கு ஏற்ப அகத்தின் நிலை உய்த்துணரப்படுகிறது.

## கேபலச் சோதிடம்

பிறந்த நேர சோதிடத்தையும், எண்குறி இயலையும் ஒருவாறு இணைத்துப் பலன் கூறுவது 'கேபலச் சோதிடம்'. இதற்கென்று தனிநூல் வந்திருக்கின்றது. 'செபாரியல்' எனும் மேனாட்டுச் சோதிடர் இதன்படி பலன் எழுதுகிறார்.

இவ்வனைத்து வகைகளுள்ளும் 'மனித வாழ்வியல் சோதிடமே' பெரும்பங்கு வகிக்கின்றது. ஏனெனில் மக்கள் இதற்குத்தான் முதலிடம் தருகின்றனர். 'சாதகம்' இல்லாத

நிலையில், சோதிடத்தின் பாலுள்ள ஈடுபாட்டிலிருந்து நீங்க முடியாத நிலையில், பிற சோதிட வகைகளை நோக்கி மக்களில் பலர் செல்லுகின்றனர். அதுமட்டுமன்றி, சாதகம் உள்ள பலரும் சோதிடத்தின் பாலுள்ள மிகு விருப்பம் காரணமாகப் பிறவகைச் சோதிடங்களையும் நாடிச் செல்லுகின்றனர். சாதகக் குறிப்பின்படி பலன் அறிந்தும், வேறு மனநிலைகள் இவர்களை இங்ஙனம் உந்தச் செய்கின்றன. எனவே மனித வாழ்வியல் சோதிடத்திற்கு அடுத்த நிலையில் மக்கள் வாழ்வில் இடம் பெறும் எண் கணிதம், கைரேகை, நாடி சோதிடம், ஆரூடம் பற்றிய விளக்கங்கள் ஓரளவு இங்கு விளக்கப் பெறுகின்றன. மனைசாத்திர விதிகளைக் கடைப்பிடிக்க இயலாத சூழ்நிலை இருப்பினும் இன்றும் மக்களில் பலர் ஓரளவு மனைசாத்திர விதிகளைக் கடைப்பிடிப்பதோடு, அத்தகைய நூல்களை வாங்கிப் படிப்பதிலும் ஆர்வம் உடையவர்களாகவே இருக்கின்றனர். எனவே 'மனையடி சோதிடம்' இங்கு ஓரளவு தொட்டுக் காட்டப்படுகின்றது. 'சகுனம்' என்பதும் மக்களை விட்டு நீங்கமுடியாத ஒரு பிணைப்பாகவே இருப்பதால் அதுபற்றியும் மேலோட்டமாகக் கூறப்படுகின்றது.

## எண் கணிதம்

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது ஆன்றோர் வழக்கு. எண் கணிதம் நம் நாட்டில் தொன்று தொட்டு வழக்கில் காணப்படுகிறது. சமஸ்கிருத மொழியிலும் எண்கணித முறை காணப்படுகிறது. இம்முறை 'கடபயாதிஸமக்ஞை' எனப்படும். இம்முறையை நம் நாட்டினரிடம் கற்றறிந்த 'கீரோ' எனும் மேல்நாட்டறிஞர் எண்களுக்குக் கீழ்க்கண்டவாறு கோள்களை அமைத்தார்.

| எண் | கோள் | எண் | கோள் |
|---|---|---|---|
| 1. | சூரியன் | 6. | சுக்கிரன் |
| 2. | சந்திரன் | 7. | நெப்டியூன் |
| 3. | குரு | 8. | சனி |
| 4. | யுரேனஸ் | 9. | செவ்வாய் |
| 5. | புதன் | | |

நம் நாட்டில் எண்கணிதத்தில் சிறந்தவராகக் கருதப்படும் பண்டிட் சேதுராமன் உட்பட பலரும் கீரோ முறையையே பின்பற்றுகின்றனர். ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்கள் மனிதனின் வாழ்வில் ஆதிக்கம் செய்வதைச் சோதிட அறிஞர் கண்டறிந்ததன் விளைவாக எண் சோதிடம் தோன்றியது.

எண் கணிதப்படி 'பிறந்த எண்' என்பது ஒருவர் பிறந்த தேதியைக் குறிக்கின்றது. 'விதி எண்' என்பது பிறந்த தேதி, மாதம், ஆண்டு ஆகியவற்றின் கூட்டுத்தொகை ஆகும். ஆங்கில உச்சரிப்பில் வருகிற பெயர் எழுத்துகளின் கூட்டுத் தொகை 'பெயர் எண்' ஆகும். இவையே எண் கணிதத்திற்கு அடிப்படையாகின்றன.

கீரோ நம்நாட்டு எண் கணிதத்தைப் பயின்றாலும் தம் நாட்டிற்கு ஏற்றாற்போல் மாற்றி அமைத்துக் கொண்டுள் ளார். யுரேனஸ், நெப்டியூன் ஆகிய இரண்டை எடுத்த இவர் புளுட்டோவை எடுக்கவில்லை. நம் நாட்டினர் இம்மூன்று கோள்களையுமே எடுப்பதில்லை. மாறாக நம் நாட்டினர் இராகு, கேதுவை எடுத்துக் கொள்கின்றனர். பண்டிட் சேதுராமன் எண் நான்கிற்கு, யுரேனசுக்குப் பதிலாக இராகுவையும், எண் ஏழுக்கு நெப்டியூனுக்குப் பதிலாக கேதுவையும் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளார். ஆனால் யுரேனஸ், நெப்டியூன் ஆகிய கோள்கள் இராகு கேதுவுக்கு இணையானவை அல்ல. இதனால் கீரோ முறைப்படி கூறப்படும் பலன்களில் தவறுகள் ஏற்பட வாய்ப்புகள் மிகுதி என்று கூறுகிறார் தமிழ்வாணன்.

மேலும், தமிழகத்தில் தமிழ் மொழியின் ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வோர் எண் உண்டு. இதன் சிறப்புகளை 'வச்சணந்திமாலை' போன்ற நூல்களில் காணலாம். தமிழ்வாணன் முறைப்படி தமிழ் எழுத்துகளுக்கும் எண்கள் தரப்படுகின்றன. இவர் கோள்களுக்குக் கொடுத்துள்ள எண்கள்: சந்திரன் - 1, புதன் - 2, சுக்கிரன் - 3, சூரியன் - 4, செவ்வாய் - 5, குரு - 6, சனி - 7, இராகு - 8, கேது - 9. இவர் இம்முடிவுக்கு வரக்காரணம் பூமியை அடுத்துள்ள கோள்களுக்கு வரிசையாக எண்கள் தரப்பட வேண்டும் என்பதாகும். சந்திரன், புதன், சுக்கிரன், குரு ஆகியன

நற்கோள்களாகவும், மற்றவை தீய கோள்களாகவும் கொள்ளப்படுகின்றன.

கீரோ தமது நூலில் பிறந்த எண்ணை மட்டுமே முக்கியமாகக் கொள்கிறார். சேதுராமன் – பிறந்த எண், விதிஎண் இரண்டையும் எடுத்துக் கொள்கிறார். பிறந்த எண், விதி எண் இவற்றிற்குத் தகுந்தாற்போல, பெயரெண் வைத்துக் கொண்டால் வாழ்வில் முன்னேற்றம் வரும் என்பது இவர் கருத்து. கீரோவின் எண் சோதிட ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்ததுதான் இன்று நடைமுறையில் நிலவுகின்ற எண் சோதிட முறையாகும்.

ஒவ்வொரு மனிதனின் குண இயல்புகள், அவனிடம் அமைந்திருக்கும் சிறப்பு, ஆற்றல் ஆகியவற்றைத் தனக்குத்தானே எளிதாக அறிந்து கொள்ளவும், பிறரைப் பற்றிய உண்மைகளை விளங்கிக் கொள்ளவும் எண் கணிதம் உதவுகிறது. எண்களின் பொதுவான குணங்கள், அவற்றால் உண்டாகும் விளைவுகள், நன்மை தீமைகள் முதலியன பற்றி அமைவது எண் சோதிடம். பெயர் எண்ணும், விதி எண்ணும் ஒருவரை மேலுக்கு வளர முடியாமல் தடுத்து நிறுத்தினாலும் தகுந்த பெயர் எண்ணைக் கொண்டு அவர் வாழ்க்கையில் நன்கு முன்னேறி, வெற்றி பெறலாம்.

திருமணப் பொருத்தம் பார்த்து, முகூர்த்த நாள் குறித்தால் மட்டும் போதாது. அம்முகூர்த்த நாள் இருவரது பிறந்த நாளுக்கும் ஒத்து நன்றாக அமைய வேண்டும். எனவே திருமணம், தொழில், உடல் நலம், நண்பர், அதிர்ஷ்ட வாய்ப்பு முதலியவற்றைப் பற்றி அறிய எண் சோதிடம் வழிவகுக்கின்றது. எண்களின் அமைப்பு களுக்கேற்ப வாழ்க்கைப் போக்குகள் மாறுபட்டு அமையும் என்பதை வரையறுக்க ஏற்பட்ட ஒரு திட்டமான நடைமுறையே எண் கணிதமாகிறது. தொழிற்சாலை, நிறுவனங்கள் முதலியவற்றிற்குப் பலன்தரக் கூடிய பெயரை அமைப்பது, பொருந்தும் எண், நட்புஎண், பொருந்தா எண், பகைஎண் எனப் பாகுபாடு செய்து தருவது முதலியனவும் எண்சோதிடத்தில் இடம் பெறுகின்றன.

பிறந்த தேதியை மட்டும் கணக்கில் கொள்ளாது இராசிக்கும், இலக்னத்துக்கும் பொருத்தமாக எண்ணைத் தேர்தல் வேண்டும். எந்தக்கோள் வலிமையுடன் சாதகத்தில் உள்ளதோ, அந்தக் கோள், இலக்னம், இராசி, பிறந்த தேதி இவையனைத்திற்கும் நட்புக் கோளாக வரும் எண்ணையே தேர்தல் வேண்டும். காட்டு: மேட லக்னம், சிம்மராசி, 2ஆம் தேதியில் பிறந்தவர்கள் இருப்பின், இவர்களுக்கு 1, 2, 3 ஆகிய எண்களே சிறப்பாக இருக்கும் இவை முறையே சூரியன், சந்திரன், குரு ஆகியவற்றின் எண்கள். இவை மூன்றும் இலக்னத்திற்கும், இராசிக்கும், பிறந்த எண்ணிற்கும் நட்பாகின்றன.

இம்மூன்றிலும் சிறப்பானது எது என்று பார்க்கும்போது குருவே முதலிடம் பெறுகிறது. அடுத்துச் சந்திரன், அதற்கடுத்துச் சூரியன் வரும். இப்படியாக வரும் குரு வலுவுடன் இருந்தால் குருவின் எண்ணில் இருத்தல் நலமளிக்கும்; வலிமையுடன் இல்லையெனில் மற்ற இரண்டில் எது வலிமையோ அந்த எண்ணைப் பின்பற்றுவது சிறப் பளிக்கும். இராசியும், இலக்னமும் சாஷ்டாஷ்டமாக (ஆறும் எட்டுமாக) பகைராசியும், பகை இலக்னமாகவும் அமைந்து விட்டால், இராசிக்கு வேலை செய்யும் எண் இலக்னத்திற்கு வேலை செய்யாது; இலக்னத்துக்கு வேலை செய்யும் எண் இராசிக்கு வேலை செய்யாது. காட்டாக, மிதுனலக்னமாக, தனுசு இராசியாக வருமானால் இரண்டுக்கும் பொதுவான சூரியனைத் தேர்ந்தெடுக்க வேண்டும், சூரியன் புதனுக்கும் குருவுக்கும் நட்பு. இடப ராசியும், தனுசுலக்னமும் வருமானால் சஷ்டாஷ்டம் (ஆறுக்கும் எட்டு) சனி இரண்டுக்கும் பொது. பிறந்த தேதியையும் கணக்கில் கொள்ள வேண்டும். எனவே, "வெறும் பிறந்த எண்ணைக் கொண்டு எண் அமைப்பதைக் காட்டிலும் இராசிக்கும், இலக்னத்துக்கும் பொருத்தமான எண் அமைப்பது சிறந்த பலனளிக்கும். சாதகம் இல்லாதவர்களுக்குக், கைரேகையைப் பயன்படுத்த வேண்டும்.[1]

சாதகச் சோதிடம், எண் சோதிடம் இரண்டையும் ஒன்றோடு ஒன்று தொடர்பு படுத்திக்கூறும் கலப்புச் சோதிடப்

1. சோதிட ஆராய்ச்சித் திரட்டு, பக்.179, 180

பலன்களுக்குச் 'சாதக-எண் கணிதச் சோதிடம்' (Astro-Numerology) என்று பெயர். பரவலாகத் தற்காலத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் இம்முறையில் பலன் கூறுபவர் 'சாதக - எண் கணிதச் சோதிடர்' (Astro-Numerologist) என்றழைக்கப்படுகின்றார். இதுபோல எண் கணிதத்தையும் கைரேகையையும் இணைத்துக் கூறும் சோதிடர் 'எண் கணித - கை ரேகைச் சோதிடர்' (Numero-palmist) என்றழைக்கப் படுகிறார்; இவ்வகைக்கு 'எண் கணித - கைரேகைச் சோதிடம்' (Numero-palmistry) என்று பெயர்.

சாதகம், எண்கணிதம், கைரேகை ஆகிய மூன்றையும் பலன் கூற எடுத்துக் கொள்வது 'சாதக-எண்கணித-கைரேகைச் சோதிடம்' (Astro-Numero-palmistry) என்றும் அவ்வாறு பலன் சொல்லும் சோதிடர்களைச் 'சாதக-எண்கணித-கைரேகைச் சோதிடர்' (Astro-Numero-Palmist) என்றும் கூறுவர். இன்று பல சோதிடர்கள் தங்களை இவ்வாறு சாதக-எண்கணித-கைரேகைச் சோதிடர் என்று விளம்பரப்படுத்திக் கொள்வதைக் காண முடிகிறது. இம்மூன்று வகைச் சோதிடங் களில்எண்கணித சோதிடக் கணிப்பு எளிமையானதாக உள்ளது. எனவேதான் சோதிடரல்லாத பலரும் கூட இக்கணிதத்தைக் கற்றறிந்து தாம் பயன்படுத்துவதோடு பிறருக்கும் கூறிவருகின்றனர்.

## கைரேகை

'சாமுத்ரிகா சாஸ்திரம்' என்னும் வடமொழி நூல் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று அங்க சாஸ்திரம், மற்றொன்று கைரேகை சாஸ்திரம். இவ்விரண்டும் சேர்ந்ததே 'சாமுத்ரிகா லட்சணம்'. ஒவ்வொருவரின் எதிர்காலப் பலன்களைக் கூறுவதில் சாமுத்திரிகா லட்சணம் முக்கியப் பங்கு வகிக்கின்றது. அங்க லட்சணங்களைக் கொண்டு வரப்போகும் நன்மை தீமைகளை எடுத்துரைக்கும் வழக்கம் தொன்றுதொட்டு வந்துள்ளது. இந்தச் சாமுத்திரிகா லட்சணத்தில் முக்கியப் பங்கு வகிப்பது கைரேகை சாத்திரம்.

மனிதனின் பாதம் முதல் தலைமுடி வரை உள்ள உடலின் இலட்சணங்களை, உடல் அமைப்பு, அளவு, நிறம் ஆகியவற்றைக் கொண்டு பலனறிய முற்படுவது 'அங்க சாமுத்திரிகம்' எனப்படும். அங்கசாஸ்திரம் என்பது

மணிக்கட்டு முதல் விரல் நுனிவரையுள்ள கைகளின் அமைப்பு, விரல்களின் தன்மை, புறங்கையின் அமைப்பு, உள்ளங்கையில் அமைந்துள்ள கிரக மேடுகள் மற்றும் இரேகைகள், குறியீடுகள் ஆகியவற்றைக் கொண்டு பலனறிவது. இது 'கைரேகைச் சாத்திரம்' எனப்படுகிறது. இதனை 'ஹஸ்த சாமுத்திரிகம்' என்பர். இக்கைரேகைச் சோதிடம் மனிதனின் விதியை நிர்ணயிக்கின்றது; வாழ்வியல் கூறுகளை வெளிப்படுத்துகின்றது. வள்ளியின் கைரேகை களைப் பார்த்து அவளுக்கு வரப்போகும் கணவனான முருகனின் பெருமையைக் கந்தபுராணம் கூறுகிறது.

கைரேகைச் சாத்திரம் உருவானது இந்நாட்டில். எனினும் இதனைப் பற்றிய ஆய்வினை மேலைநாட்டினர் பலர் மேற்கொண்டு ஏராளமான நூல்களை வெளியிட்டுள்ளனர். அவர்களுள் 'கீரோ' என்பவர் முன்னோடியாகத் திகழ்கிறார். அவருக்கு முற்பட்ட அரிஸ்டாட்டில் போன்றோரும் கைரேகைச் சாத்திரத்தைப் பற்றிக் கூறியிருந்தாலும் கீரோவையே 'கைரேகைச் சாத்திரத்தின் தந்தை' எனப் போற்றுகின்றனர். அவரைத் தொடர்ந்து நோயல் ஜாக்பின், செயின்ட் ஜெர்மெயின், வில்லியம் ஜிபென்காம், அடால்ப்டெஸ் பரோல்ஸ், யூசுகேமியாமோடா போன்றோரும் கைரேகையைப் பற்றி வெவ்வேறு கோணங்களில் ஆராய்ந்து நூல்களை வெளியிட்டுள்ளனர்.

நம்முடைய விரல்களில் காணப்படும் குறிகளைக் கொண்டு பலன்களைக் கூறுவது வழக்கில் காணப்படுகின்றது. கைவிரல்களில் வலைக்குறி, வட்டக்குறி, சதுரக்குறி, முக்கோணக்குறி முதலிய குறிகளும், குறுக்குக்கோடு, செங்குத்துக் கோடு முதலிய கோடுகளும் காணப்படுகின்றன. நேர் ரேகை, அலைரேகை, இணைரேகை, தீவுரேகை, சங்கிலிரேகை முதலிய இரேகைகள் காணப்படுகின்றன. கைரேகை மூலம் பலன் கூறும்போது, நகங்களின் அமைப்பு, கைகளின் அமைப்பு, கட்டை விரல் அமைப்பு, கிரக மேடுகள், உள்ளங்கை இரேகைகள், இருதயரேகை, புத்திரேகை, ஆயுள்ரேகை, விதிரேகை, புதன்ரேகை, சூரியரேகை, அருள்ரேகை, சந்தானரேகை, கங்கணரேகை ஆகியன கருத்தில் கொண்டு கூறப்படுகின்றன. அவற்றிற்குப்

பொதுப்பலன்கள் கூறப்படுகின்றன. பொதுவாகக் குழந்தை பிறந்தது முதல் 5 வயது வரை இரேகைகள் மாறுதலடைகின்றன. 6 வயது முதல் 15 வயது வரை பெரிய மாறுதலின்றி அப்படியே காணப்படும். பொதுவாகக் கைரேகைகளில் ஆறு மாதம் முதல் ஒன்பது மாதங்களுக்குள் மெல்லிய சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய மாற்றங்கள் மனிதனின் எண்ண அலைகளுக்கு ஏற்றவாறு அமைகின்றன. விரல்களின் அமைப்பு, கைகளின் அமைப்பு இவற்றிற்கும் பொதுப்பலன்கள் கூறப்படுகின்றன.

இராகு, கேது தவிர ஏனைய ஏழு கோள்களுக்குக் கையின் குறிப்பிடப்பட்ட பகுதிகள் என ஒதுக்கப்பட்டுள்ளன. சுண்டு விரலுக்குப் புதனும், மோதிர விரலுக்குச் சூரியனும், நடுவிரலுக்குச் சனியும், ஆள்காட்டி விரலுக்குக் குருவும் என விரல்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கட்டை விரலுக்குக் கீழும் மணிக்கட்டுக்கு மேலும் உள்ள பகுதி 'சுக்கிர மேடு' எனப்படும். அவ்வாறே சுண்டு விரலுக்குக் கீழ்ப்பட்ட மணிக்கட்டை ஒட்டிக் காணப்படுவது சந்திர மேடாகும். உள்ளங்கை 'செவ்வாய்ச் சமவெளி' எனப்படும். புதன் மேடுக்குக் கீழும், சந்திர மேடுக்கு மேலும் உள்ள பகுதி 'மேல் செவ்வாய் மேடு' எனப்படும். குரு மேடுக்குக் கீழும், சுக்கிர மேடுக்கு மேலும் உள்ள பகுதி 'கீழ் செவ்வாய் மேடு' எனப்படும். இந்த மேடுகள் உயர்ந்து காணப்பட்டால் நற்பலன்களைத் தரும்; தாழ்ந்து காணப்பட்டால் நற்பலன்களைத் தர இயலாதனவாகவும் கருதப்படும்.

பொதுவாக ஆணுக்கு வலக் கையும், பெண்ணுக்கு இடக் கையும் கைரேகை பார்க்க எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஆணின் இடக் கைரேகை அவரது மனைவியைப் பற்றியும், பெண்ணின் வலக் கைரேகை அவளது கணவனைப் பற்றியும் அறியப் பயன்படுத்தப் படுகின்றன. தற்போது ஆண், பெண் இருவருக்கும் வலது கையைக் கொண்டு பார்க்கும் வழக்கம் நிலவுகிறது. மேலும் வலக் கைப் பழக்கமுள்ளவர்க்கு வலக் கையும், இடக் கைப் பழக்கமுள்ளவர்க்கு இடக் கையும் பலனறிய எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

வலக் கையிலுள்ள இரேகைகள் அவர்களது வாழ்க்கை, ஆயுள், மனத்தின் இயல்பு முதலியவற்றையும், இடக் கையிலுள்ள இரேகைகள் வம்சப் பாரம்பரியத்தின் சிறப்பு, உள்ளுணர்வு, மனத்தின் தன்மை முதலியவற்றையும் அறிந்து கொள்ள உதவுகின்றன. எந்தக் கை பழக்கத்தில் உள்ளதோ அந்தக் கையை முதன்மையானதாகக் கொள்ள வேண்டும். பிறவிக் குண இயல்புகளையும், வாழ்க்கையில் ஏற்படப் போகும் மாறுதல்களையும் சரியாக அறிந்து கொள்ள இரண்டு கைகளையும் கவனித்து ஆராய்ந்து ஒப்பிட்டுப் பார்த்த பின்பே பலனறிய முற்பட வேண்டும்.[2] ஊர்நை என்னும் சுழி, இதய ரேகை, துவச ரேகை, கலச ரேகை முதலியன உலகை ஆளுதற்குரிய இராச சின்னங்களென்ற செய்தி சீவகசிந்தாமணியில் (304) இடம் பெற்றிருப்பதாக உ.வே.சா. குறிப்பிடுகிறார்.

## கைரேகையும் சாதகச சோதிடமும

சாதகச் சோதிடம், கைரேகைச் சோதிடம், எண்கணித சோதிடம் என மூன்று பெரும் பிரிவுகளாகச் சோதிடம் அமைகின்றது. கைகளில் உள்ள இரேகைகளுக்கும் சாதகத்திற்கும் தொடர்பு உள்ளது. நாடி சோதிடம், அல்லது காண்ட சோதிடங்கள் விரல் ரேகையின் அடிப்படையில்தான் உள்ளன. கைரேகையைக் கொண்டு சாதகம் எழுதப் பட்டுள்ளது என்பதை,

"அருள்காட்டும் அத்தனவன் அடியைப் போற்றி
அறிவிப்பேன் மகனோரவன் கரத்தின் ரேகை"

என்ற சுக்ர நாடிப் பாடல் காட்டுகிறது.[3]

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கக் கைரேகையும் கட்டை விரல்ரேகையும் பயன்படுகின்றன. பன்னிரெண்டு இலக்னங்களுக்குப் பன்னிரெண்டு வகையான கட்டை விரல் அமைப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. இன்று கணிப் பொறியின் உதவியோடு, பலகோடி நபர்களுடைய கைரேகைப் பதிவுகள் பாதுகாக்கப்பட்டு, அந்த இரேகைப் பொருத்தம் மூலம் குற்றவாளிகளைக் கண்டறிய முயல்கின்றனர். இத்தகைய உத்தியைக் கைரேகைச் சோதிட ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தி கைரேகைச் சோதிடத்தை மேலும் சிறப்பாக வளர்த்திட முடியும்.

---

2. கைரேகை சாஸ்திரம், ப.16. 3. சோதிட ஆராய்ச்சித் திரட்டு, ப.193.

இரட்டைக் குழந்தைகளுக்குச் சாதகச் சோதிடத்தில் பலன் அறிவது கடினம்; எண் கணித சோதிடத்திலும் எண்கள் இரட்டைக் குழந்தைகளுக்கு ஒரே மாதிரி அமைவதால் பலன் அறிவதில் இடர்ப்பாடு எழுகிறது. ஆயின் இரட்டைக் குழந்தையின் தோற்றம் ஒத்திருப்பினும் கைரேகைகளைக் கொண்டு வேறுபடுத்தி அறியலாம்.

பிறந்த நேரம் சரியாகக் குறிக்கப்படாமை, தவறான கணக்கீடு போன்றவற்றால் சாதகப் பலன்களில் தவறு ஏற்பட வாய்ப்பு உண்டு. ஆனால் கைரேகையில் துல்லியமாக இரேகைகளை ஆராய்ந்தால் சரியான பலன்களைக் கூறவியலும். அனைவரும் கைரேகையின்வழி முழுமையான பலனறிய முடியும். சாதகம் இல்லாதவர் பிரசன்ன ஆரூடத்தின் வழி மட்டுமே ஓரளவு பலனறிய முடியும். "கைரேகைகள் ஆறு முதல் ஒன்பது மாதத்திற்கு ஒருமுறை மாறும் இயல்புள்ளன". எனவே ஒரே நேரத்தில் வாழ்க்கை முழுமைக்குமான பலனைத் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் சாதகத்தின் வழி ஒரே நேரத்தில் முழுமையான பலன்களைத் தெரிந்து கொள்ள முடியும்.

சாதகத்தில் இலக்னாதிபதியின் நிலையைக் கவனித்து ஆயுள் பலம் கவனித்தல் போல, ஆயுள்ரேகையைக் கொண்டு ஆயுள் பலத்தைக் கணக்கிட்டுக் கொள்ளலாம். திறமையை, அறிவுக்கூர்மையை, புத்தி ரேகையைக் கொண்டும், உடல்நலத்தை, குணத்தை இருதய ரேகையைக் கொண்டும், தொழில் வலிமையை விதி ரேகையைக் கொண்டும், பொருளீட்டை, செல்வாக்கை சூரிய ரேகையைக் கொண்டும், வியாபாரத்தை, தொழில் வெற்றியை புதன் ரேகையைக் கொண்டும் சோதிடர் அறிகின்றனர்.

இதுபோல் சுக்கிரமேடு, குருமேடு, சனிமேடு, சூரியமேடு, புதன்மேடு, செவ்வாய்மேடு, சந்திரன்மேடு இவற்றைக் கொண்டும் பலன், பிறந்த சாதகத்திற்குக் கூறப்படுவது போலவே கூறப்படுகிறது. 12 கட்டங்கள் மனிதனின் வாழ்க்கையை உணர்த்துவது போல, கையில் உள்ள மேடுகளும் இரேகைகளும் மனிதனின் வாழ்க்கை நிலையை உணர்த்துகின்றன. சாதகங்களின் அமைப்பு ஒன்றிற்கொன்று மாறுபட்டு இருப்பது போலவே ஒவ்வொருவருடைய கைரேகையும் மாறுபட்டே இருக்கும்.

ஏழு கோள்களின் ஆதிக்கத்தில் 12 இலக்னங்களும் உள்ளது போலவே, ஏழு மேடுகளின் ஆதிக்கத்தில் 12 இலக்னங்களும் அடங்குகின்றன. மேடுகளின் உயர்வுகளைக் கொண்டு ஒருவர் எந்தக் கோளின் ஆதிக்கத்தைக் கொண்டுள்ளார் என அறியலாம். பெரும்பாலும் சாதக அமைப்பும் கைரேகை அமைப்பும் ஒத்து வருகின்றன.

இக்கைரேகைச் சோதிடத்தை அனுபவ வாயிலாக அல்லது நூல்களின் வழியாக அறிந்து பலர் பலன் கூறிவருகின்றனர். பெரும்பாலோர் ஆழமான பயிற்சிக்கு முன்னரே பலன் கூறத் தொடங்கிவிடுகின்றனர். அதுவே அவர்களுக்குப் போதிய நிறைவை ஏற்படுத்தி விடுவதால் மேன்மேலும் அறிந்து கொள்வதில் ஈடுபாடு காட்டுவதில்லை. நேரடியாக இரேகையைக் கண்டறிந்து பலன் கூறும் சோதிடமாக இவ்வகை இருப்பதனால் இது பற்றிய முழுமையான, துல்லியமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டால், இது உண்மையான செய்திகளைத் தரவல்லதா, சமுதாயத்திற்குப் பயன்தரக் கூடியதா என்பனவற்றைத் தெளிவுபடுத்த இயலும்.

## நாடி சோதிடம்

முன்பே முனிவர்களால் எழுதி வைக்கப்பட்ட சாதகங்களை உள்ளடக்கிய சோதிட நூல்களும் உள்ளன. அவற்றில் சாதகருக்குப் பொருந்தும் நிலையில் உள்ள பகுதியை எடுத்துப் பலனைக் கூறுவது நாடி சோதிடம் எனப்படுகிறது. ஒருவர் பிறந்த நேரத்திற்குச் சோதிடரால் எழுதப்பெறும் சாதகத்திலுள்ள கோள்நிலைகள், நாடியிலும் அமையுமானால் சாதகருக்கு அப்பலன்கள் உரியதாக அமைகின்றன.

ஒருவரின் பெயர், அவருடைய பெற்றோர்களின் பெயர்கள், தொழில்கள், திருமணம், வாழ்நாளில் ஏற்படவிருக்கும் நிகழ்ச்சிகள், வெளிநாட்டுப் பயணம், சொத்துக்கள், வாகனங்கள் முதலியவற்றை இந்நாடி சோதிடத்தின்வழி அறிய முடிகிறது. அகத்தியர், வசிஷ்டர் முதலான ஏழு வேதரிசிகளும், நந்தீஸ்வரன் முதலான பதினெண் சித்தர்களும் கல்லால மரத்தடியில் சிவசக்தி முன் அமர்ந்து சோதிடத்தை விவாதித்ததே 'சப்தரிசி நாடி' என்று கூறப்படுகிறது.

மனிதனின் வேட்கையில் மிகப்பெரிய வேட்கை தன் எதிர்காலத்தை, மற்றும் நெருங்கியவரின் எதிர்காலத்தை அறிய முயல்வதே. முனிவர்கள் எதிர்காலத்தை உணர்ந்து அதை எழுதி வைத்துச் சென்றுள்ளனர். இவ்வாறான வியக்கத்தக்க எதிர்காலத்தை உய்த்துணர்ந்து அவற்றை எழுத்து வடிவில் ஆக்கி இருப்பது நாடி சோதிடம்.

முற்பிறப்புப் பற்றியும், அப்பிறப்பில் எதுவாக இருந்தனர், என்னென்ன செய்தனர் என்பன பற்றியும் நாடி சோதிடம் கூறுவதால் மக்களில் சிலர் இவ்வகை சோதிடத்தை விரும்பிக் கேட்கின்றனர். யோக சக்தியைப் பெறும் ஒருசில யோகிகள் தங்களுடைய உள்ளுணர்வின் ஆற்றலால் முக்காலத்தையும் கூறவல்ல நிலையை அடைகின்றனர். இத்தகைய மகான்களுள் ஒருசிலர் பிறந்தவரின், பிறக்கப் போகிறவரின் பெயரையும் விதியையும் கண்டுணர்ந்து எழுதி வைக்கும் தன்னலமற்ற பணியைச் செய்துள்ளனர். எத்தனை மகான்கள் என்ன காரணத்தினால், எவ்வளவு காலம் எடுத்துக்கொண்டு எத்தனை பேருக்கு அவ்வாறு எழுதினர், அவை எவ்வாறு பாதுகாக்கப்பட்டன, அவற்றுள் எவ்வளவு விழுக்காடு இன்று கிடைக்கின்றன என்பன ஆய்வுக்குரியவை.

அகத்திய முனிவர், வசிஸ்டர் முதலியோர் இத்தகைய நாடி சோதிடத்தைப் படைத்தவர்கள். அக்கால குருகுலப் பள்ளியில் சோதிடமும் கற்பிக்கப்பட்டது. பிறகு யோகப் பயிற்சியின் வழி சீடர்கள் எதிர்காலத்தை உய்த்துணரும் நிலையை அடைகின்றனர். இந்நிலையை அடைந்த இரண்டு மூன்று சீடர்கள், தம் குருவுக்கு முன்னால் உட்கார்ந்து எதிர்காலத்தை எழுதுவர். மிகக் குறுகிய நேரத்தில் யோக சமாதி நிலையில் பத்துப் பன்னிரெண்டு பேர்களின் எதிர்காலத்தைக் கண்டுணர்ந்து எழுதிவிடுவர். பனை ஓலைகளை வேதியயில் பொருட்கள் (Chemicals) கொண்டு பதப்படுத்தி எழுதுவதற்குப் பயன்படுத்துவர். எழுத் தாணியைக் கொண்டு தமிழில் எழுதுவர்.

இவ்வாறு எழுதப்பட்டவை கட்டுக்கட்டாகக் கட்டப் பட்டு, கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்படும். இலட்சக் கணக்கான நபர்களின், விதியைப் பற்றிய குறிப்புகள், பல நூற்றாண்டு களாக இவ்வாறு எழுதப்பட்டவையே. இத்தகைய

குருகுலங்கள் மறைந்து விட்டமையாலும், இருந்த நாடி ஏடுகளில் பல சூழல் காரணமாக அழிந்து போனமையாலும், இந்நாடி ஏடுகள் பெரிதும் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டன. இன்று உள்ள நாடி ஏடுகள், பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன. நாடி கேட்பவர்களுக்குப் படித்துக் காட்டும் இடங்கள் நகர்ப்புறங்களிலும், சிற்றூர்களிலும் உள்ளன. அக்காலத்தில் ஒருசில இடங்களிலிருந்த இந்த நாடி ஏடுகள் பல்வேறு நபர்களால் இன்று சொந்தம் கொண்டாடப்பட்டு வரப்படுகின்றன. இவை இக்குறிப்பிட்ட நபர்களின் பரம்பரைச் சொத்தாகவும், வருவாய் தரும் தொழிலாகவும் ஆகிவிட்டன.

'தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்' எனும் நூலில் மதமும் மந்திரமும் என்னும் உட்தலைப்பில் 'சோமலெ' நாடி சோதிடம் பற்றி எழுதியுள்ளமை ஈண்டு சுட்டப்பெறுகின்றது (பக்.190-91). நாடிச் சுவடிகள் என்ற மிகப் பழைய பனை ஓலைச் சுவடிகளிலிருந்து படிப்பது மரபு. இவற்றுள் ஒவ்வோர் ஏடும் ஒரு குறிப்பிட்ட நபருக்காக எழுதப் பெற்றது. தன்னைப் பற்றிய ஏடு எவனுக்குக் கிடைத்து விடுகிறதோ, அவன் அதிர்ஷ்டக்காரன் என்று சொல்லலாம். சில சமயம் ஒரு கூட்டத்தாரான பலருக்கும் சேர்ந்து, ஒரு பொதுவான நாடி அகப்படலாம்.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள அச்சிறுபாக்கம் வள்ளுவர்கள் நாடி ஏடுகளைப் படிப்பதில் வல்லவர்கள். ஏனைய ஊர்களிலும் நாடி சோதிடர்கள் இருக்கின்றனர். அச்சிறுபாக்கம் வள்ளுவர்களைப்பற்றிப் பலரும் நம்பும் கதை ஒன்றுண்டு. பழங்காலத்தில் ஒரு வகையான வாகனம் வானத்தில் சென்றது. அது ஏராளமான பூக்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அது அச்சிறுபாக்கத்தில் சிக்கிக் கொண்டது. அங்குள்ள வள்ளுவர்களின் துணையால் அது செப்பனிடப்பட்டு, மீண்டும் பறக்கவிடப்பட்டது. அதற்கு நன்றி செலுத்தும் வகையில் நாடி ஏடுகளைப் படிக்கும் ஆற்றலை, இறைவன் வள்ளுவர்களுக்கு வழங்கியிருக்கிறான்.

நாடி ஏடுகளைப் படிப்பவர்கள் தங்கள் கடவுளருக்கு விரதமும், பிரார்த்தனையும், பூசையும் செய்து, ஏடுகளைப்

படிக்கும் சக்தி என்றென்றும தங்களிடம் நிலைபெறச் செய்கின்றனர். அந்த ஏடுகளில் இருப்பது எல்லோர் கண்ணுக்கும் தெரியாது. அனைவரும் அவற்றைப் படித்து விடவும் முடியாது. படிப்பு, முயற்சி, ஒழுக்கம், நாணயம், கடவுள் நம்பிக்கை அனைத்தும் ஒருங்கே கூடியவர்கள்தான் அந்த ஏடுகளைப் படிக்க முடியும். ஏடுகளை விரைவாகத் தங்குதடையின்றிப் படிப்பர். ஏடுகளைப் படிக்கும் நேரத்தில் ரிசிகள் அல்லது ஞானிகள் அந்த வரிகளுக்கு முன் நிற்பதாக நம்பப்படுகிறது.

கேள்விகள் கேட்பது, அவற்றுக்குப் பதில் சொல்வது என்பனவற்றுக்கு நாடியில் இடமில்லை. கவலை நிறைந்தவன் எந்தக் கேள்வியைத் தன் உள்ளத்தில் நினைக்கின்றானோ, அதற்கு ஏற்ற பதில் அந்த ஏட்டில் தானே அடங்கியிருக்கும். அந்த ஏடு எல்லா வகையிலும் முழுமை பெற்றதாக நிறைவுடையதாக இருக்கும். எதிர்காலத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் எப்படி நடந்து கொள்ள வேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என்பவையெல்லாம் விவரமாக எழுதப்பட்டிருக்கும். இன்ன கோயிலுக்குத் திருவிழாவுக்குப் போ, பரிகாரங்களாக இவற்றைச் செய் என்றெல்லாம் அதில் சொல்லப்பட்டிருக்கும்.

நாடிகள் பலவகை. அகத்தியர் நாடி, வசிஷ்டர் நாடி, புஜங்கர் நாடி, சோதி நாடி, குமர நாடி என்பவை ஒவ்வொன்றும் ஒரு கூட்டத்தாருக்கு ஏற்றவை. ஏட்டின் முற்பகுதி பிரார்த்தனை, இரண்டாம் பகுதி, குறிப்பிட்ட அன்பரின் சென்ற கால, வருங்கால வரலாறுகள், மூன்றாம் பகுதி ஆசீர்வாதம்.

இடங்களையும் தனிநபர்களையும் நாடி ஏடுகள் சுருக்கமாகக் குறியீட்டுச் சொற்கள் போன்ற பெயர்களால் சுட்டும். இலட்சுமணன் என்பவரை இராமபிரானின் தம்பிமார்களின் ஒருவருடைய பெயரை உடையவர் என்று அடையாளம் காட்டும். பலன்களை நினைவாக வைத்திருந்து அல்லது எழுதிவைத்துக் கொண்டு நிகழ்ச்சிகள் நடந்த பின்னர் கூர்ந்து ஆராய்ந்தால் நன்றாகப் புரியும்.

தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையில் தூண்டப்படுபவன், நாடி படிப்பவர்கள் பலரைக் காண்பான்.

முதலில் ஒருவர் படித்த ஏட்டின் தொடர்ச்சியாக அவர் விட்ட இடத்திலிருந்து அடுத்தவர் படிக்கும் அளவுக்கு நாடி ஏடுகளில் தொடர்ச்சி உண்டு. பௌர்ணமி நாட்களிலும் திருவிழாக் காலங்களிலும் நாடி ஏடு படிக்கக் கேட்டால் அவை மிகவும் சரியாக இருப்பதாயும், பயனுடையதாக அமைவதாயும், அதன் பிறகு அவற்றைக் கேட்பவர் நாடி சோதிடக் கலைக்கே அடிமையாகிவிடுவர் என்றும் சொல்லுகின்றனர். அதுமட்டுமன்றி அவன் வாழ்நாள் முழுவதும் இந்தக் கலைக்கு அடிமையாக மாறிவிடுவான். பேராசைக்காரர்கள், நாணயமும் நேர்மையும் இல்லாதவர்கள் ஆகியோருக்கு வருங்காலம் சரியானபடி சொல்லப்பட மாட்டாது, அவர்களுக்குரிய நாடி அகப்படாது என்பர். நாடி பற்றிய சோமலெயின் தெளிந்த சிந்தனை மேற்கூறியதன் வழி பெறப்படுகின்றது.

இந்நாடி சோதிடம் ஒருவரைப் பற்றிய செய்திகளைச் சரியான முறையில் அறிய உதவுவது. ஆயின் அனைவருக்கும் அவர்களுக்குரிய ஏடு கிடைப்பது என்பது இயலாத ஒன்று. எனவே பணத்தை முதன்மையாகக் கருதி இத்தொழில் புரிகின்றவர்கள் ஏதோ ஒரு வழியில் சோதிடம் கேட்க வருகின்றவர்களைச் சரிக்கட்ட முயல்வதால் இந்நாடி சோதிடம் பற்றிய தவறான பல கருத்துகள் நிலவ வழி ஏற்பட்டுவிட்டது. 'சோதிடக்கலை ஓர் ஆய்வு' என்ற நூலில் சி.ஜி. ஜெயராமன் நாடி கூறும் சோதிடர் என்னென்ன உத்திகளைக் கையாளுகின்றார் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றார்.

### முதல் வகை

முகவரி, பிறந்த நேரம், மாதம், ஆண்டு முதலியவற்றைக் கேட்க வந்தவர் எழுதிக் கொடுக்க வேண்டும். பிறகு முன்பணம் கட்டியபின் நாடி சோதிடர் ஒரு தேதியைக் குறிப்பிட்டு அந்தத் தேதியில் வந்து பார்க்கச் சொல்வார். இதற்குமுன் ஏராளமானவர்கள் பெயர், பணம் கொடுத்துச் சென்றுள்ளதால் வரிசைப்படி இவருக்குப் பார்க்க இவ்வளவு நாள் ஆகும் என்பது வெளிப்படையாகத் தெரியும் பொருள். ஆனால் இதற்கிடையில் சோதிடர்களின் ஆட்கள் சிலர் அந்த

நபரின் ஊருக்கு வந்து, அவருக்குத் தெரியாமல் அவரைப் பற்றி, அதாவது தாய், தந்தை, உடன்பிறந்தோர், மற்றும் கடந்தகால நிகழ்கால நிலைமைகளைத் தெரிந்து கொண்டு வந்துவிடுவர். பின்னர் குறிப்பிட்ட நாட்களில் அவர் வந்ததும் பாடல்களாகப் பாடி விளக்கம் தருவர்.

## இரண்டாம் வகை

நாடி சோதிடரைப் பார்ப்பதற்கு முன், பார்க்க வந்தவர்களைப் போல நாடி சோதிடரின் ஆட்கள் சிலர் பேச்சுக் கொடுத்துக் கேட்க வந்தவர்களைப் பற்றிய குடும்ப விவரம், பிரச்சனை முதலியவற்றைத் தெரிந்து நாடி சோதிடர்களிடம் அச்செய்திகளை ஒப்படைப்பர். மேற்கூறிய இரண்டு முறைகளில் கிடைத்த செய்திகளும் சுவடியில் கவிதையாக எழுதப்பட்டு அவரவர்களுக்குத் தக்க படிக்கப்படும்.

## மூன்றாவது வகை

சிறு தேவதைகளின், அதாவது எட்சனி, மாடன் போன்றவற்றின் உதவியினால் கடந்தகாலப் பலன்களை அறிந்து கூறுதல். கடந்தகாலப் பலனைக் கேட்டு வியந்து நிற்பதால், எதிர்காலப் பலனாக எது சொன்னாலும் கேட்கக் கூடிய மனநிலைக்குப் பலன் கேட்பவர் வந்துவிடுகிறார். சி.ஜி.ஜெயராமன் கூறிய இம்முறைகள், உண்மைக்குப் புறம்பானவையாகச் செயல்படுகின்றன என்பது தெரிகிறது.

## நான்காவது வகை

இரேகையைப் பதிவு செய்து பார்த்து மலர்ச்சுழி, புள்ளி, இரட்டைச்சுழி, இருபுள்ளி, நேர்க்கோடு, பலபுள்ளி என்பன போன்ற குறிப்புகளை நாடி பார்ப்பவர்கள் எடுத்துக் கொள்கின்றனர். பின் அதற்குரிய சுவடி என்று கொண்டுவந்து படிக்கின்றனர். பொதுக் காண்டம், சாந்தி காண்டம், தீட்சை காண்டம், ஆரூட காண்டம், கல்வி, தொழில், திருமணம் எனப் பல உட்பிரிவு நாடி சோதிடத்தில் உண்டு. ஒவ்வொரு காண்டத்திற்கும் தனித்தனியே கட்டணம் ரூபாய் 50, 100 என்று வாங்குகின்றனர். பெரிய

தொகை வாங்கும் நாடி சோதிடர் பலர் இன்றும் உள்ளனர். கொண்டு வந்து படித்துக் காட்டுவது பொருந்தவில்லை எனில் வேறு ஒரு கட்டைக் கொண்டுவந்து படிப்பர். இம்முறையிலும் பலருக்கு, அவர்களுக்கான ஏடு கிடைக்கா மலே சோதிடர் திறமையால் சரிக்கட்டப்படுகிறது.

## ஐந்தாவது வகை

கேட்க வந்தவரின் விவரங்களைப் பெற்று வைத்துக் கொண்டு கிடைக்கவில்லை எனப் பலமுறை அவர்களைத் திருப்பி அனுப்பி இறுதியாக ஒரு சுவடிக்கட்டைக் கொண்டுவந்து அதில் சில ஏடுகளை அவர்களிடம் கொடுப்பர். அதனை அவர்களே எழுதிக் கொள்ளலாம் அல்லது அங்கு இருப்பவர் எழுதிக் கொடுப்பார்.

சோதிடச் சுவடியை வைத்துப் படிப்பினும், 'மாணிக்கவாசகர் அம்மானை' போன்ற இலக்கியச் சுவடியை வைத்துப் படிப்பினும் அதிலுள்ள செய்திகள் பல நேரங்களில் படிக்கப்படுவதில்லை. அதனைப் பார்த்துப் பார்த்துப் படிப்பது போல் நடித்து, அவரவர்க்குரிய சோதிடச் செய்திகளைப் பாடல் வடிவில் படிக்கின்றனர். எனவே வேறு ஓலைச் சுவடியைக் கையில் வைத்துக்கொண்டு அவர்களாகப் பலன் கூறுகின்றனர் என்பது தெரிகிறது. செய்திகளை முன்கூட்டியே எழுதி வைத்துப் படிப்பதும் உண்டு.

நாடியின் வழி சோதிடம் பார்க்கும் பலருக்கும் ஒருவரின் பிறப்பு முதல், அவர் சோதிடம் பார்க்கும் காலம் வரை அனைத்துப் பலன்களும் சரியாய் இருக்கும்போது அவரின் எதிர்காலப் பலன்களைக் கூறுவதில் தவறு ஏற்படுகிறது. நாடி ஓலை படிப்பவர்கள் தங்களது அனுபவத்தின் வாயிலாக எதிர்காலத்தைத் தங்கள் விருப்பப்படி படித்திருக்கலாம். ஏனெனில் நடந்து முடிந்தவற்றில் இவர் தன் சுவையைக் காட்டினால் சாதகர் கண்டுபிடித்துவிடக் கூடும். எதிர் காலத்தைப் பற்றி எது படித்தாலும் சாதகரால் ஒன்றும் செய்ய முடியாது.

நாடி சோதிடத்தை ஒரே சோதிடர் கூறுவதில்லை. 20 வயது முதல் பலர் இப்பணியை மேற்கொள்கின்றனர்.

ஒருவர்க்குப் பலன் கூறும்போது இடையில் சோதிடர் உள்ளே செல்ல நேரிட்டால் வேறு ஒருவரிடம் இப்பணி ஒப்படைக்கப்படுகிறது.

## பிருகு சமிதா

தென் இந்தியாவில் 'நாடி சோதிடம்' என்று இருப்பதைப் போல், வடநாட்டில் 'பிருகு சமிதா' என்ற சோதிடம் இருக்கின்றது. அத்துடன் 'ராவன் சமிதா', 'வருண் சமிதா', 'ருத்ர சமிதா', 'பத்ர சமிதா', 'அருண் சமிதா' என்ற வகைகளும் உள்ளன. இலக்னோவுக்கு அருகில் பிருகு மகாராஜா என்று கூறப்படுகிறவர்கள் இந்தப் 'பிருகு சமிதா' என்ற சோதிடத்தைக் கூறுகின்றனர். தமிழ்நாட்டில் பனை ஓலைகளில் எழுதப்படுவது போல, அங்குப் பிருகு இலைகளில் இச்சோதிடம் எழுதப்படுகிறது. நூறு, நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்குள் எழுதப்பட்ட இவை சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வோர் இலையிலும் 15-18 வரிகள் இருக்கும். ஒரு வரியில் ஏறக்குறையப் பத்துச் சொற்கள் இருக்கும்; இருபக்கமும் எழுதப்பட்டிருக்கும்.

நாடி சோதிடத்தில் கேட்பது போலவே கேட்பவரின் விபரங்களைக் கேட்டுக் கொண்டு, பிருகு இலை தேடப்படும். பல கட்டுகளில் தேடியும் ஒரு சிலருக்குப் பிருகு இலை கிடைப்பதில்லை. அது சமயம் ஆரூட முறையில் சோதிடம் கூறி, கேட்க வந்தவரை நிறைவுபடுத்துவர். பிருகு முனிவர், இலட்சுமியிடம் போட்டி போட்டு சோதிடப் பண்டிதர்களைத் திறமையாளர்களாக ஆக்க எடுத்துக்கொண்ட முயற்சியின் பலன்தான் இந்தப் 'பிருகு சமிதா' என்பர். கங்கை நதியை ஒட்டிய பகுதியில் உள்ளவர்க்கு மட்டும் அவரவர்க்குரிய பிருகு இலை கிடைக்கிறது. மனைவிக்கென்று தனிப்பலன்கள் இல்லை. மனைவி வேலையில் இருப்பவர் அல்லது பொருள் ஈட்டுபவர் ஆகில் பலன் உண்டு.[4] ப்ருகுசமிதா வடநாட்டில் இருப்பினும் நாடி சோதிடம் தமிழ்நாட்டில் பல இடங்களில் காணப்படுகிறது.

---

4. Researching the Brighu Samhita, Bandhu, PP.25, 26, Star Teller, 1995

**சுக்ரநாடி கிரந்தா**

பெங்களூரிலிருந்து 176 கி.மீ. தூரத்திலிருக்கிறது ஆர்னஹள்ளி என்னும் கிராமம். அதிலிருந்து மிக அருகில் நடைதூரத்தில் 'கோடிமடம்' உள்ளது. இம்மடம் தோற்று விக்கப்பட்டு 1062 ஆண்டுகள் ஆகின்றன. இப்போதிருக்கும் ஸ்ரீசிவானந்த சிவயோகி ராஜேந்திர மகாஸ்வாமிகள் இம்மடத்தின் 57ஆவது பீடாதிபதி. இம்மடத்துப் பீடாதிபதிகளுள் ஒருவரான சிவலிங்க மகாஸ்வாமிகள் எழுதி 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட 'சுக்ரநாடி கிரந்தா' ஒன்று பழைய கன்னட மொழியில் இம்மடத்தில் உள்ளது. இக்கிரந்தம் சுமார் 500 பக்கங்கள் கொண்டது. யாரொருவர் வந்து பலன் கேட்பினும் அதிலிருந்து ஒரு பக்கத்தை எடுத்துப் படிப்பின் பலன்கள் துல்லியமாக இருக்கும்.

சுமார் 500 பக்கங்களே கொண்ட அதில் யாருக்கு வேண்டுமானாலும் சோதிடம் பார்க்க முடியுமாம். எப்படி இது இயலுகிறது என்ற வியப்பிற்கான முழு விளக்கம் அதைப் படிக்கக்கூடிய ஒரே யொருவரான நீலகண்ட சாஸ்திரிக்குத்தான் தெரியுமாம்.

அந்தக் கிரந்தம் இப்போது மடத்திலிருந்து சுமார் 30 கி.மீ. தொலைவிலுள்ள 'மாடாளு' என்னும் இடத்தில் இருக்கிறது. அங்குக் கொண்டுபோய் பத்து ஆண்டுகள் ஆகின்றன.

நீலகண்ட சாஸ்திரிக்கு வயதாகி, கண்பார்வையும் சரியில்லை என்பதால் முன்புபோல் படிக்க முடிவதில்லை. அதனால்தான் அங்குக் கொண்டுபோய் விட்டனர். இப்போது ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் பார்வையாளர்களுக்குப் பார்த்துச் சொல்கிறார். அதுவும் மிக மிக முக்கியமான புகழும் செல்வாக்கும் நிறைந்தவர்களுக்கு மட்டுமே கூறுகிறார்.

இந்திராகாந்தி, மொரார்ஜி தேசாய் முதலான பெருந்தலைவர்கள் சந்தித்த இவரை இன்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் சந்தித்துள்ளார். தமது எதிர்காலம் பற்றி இந்த நாடியின்வழி அறிந்த பிரதமர் அறிந்த பலன்; சாதகமான பலன் இல்லை; ஆபத்துக்கள் நிறைய உண்டு; பிரதமர் விரிவாகப் பார்ப்பதற்கு அடுத்தமுறை வருவதாகக்

கூறியிருந்தார். கல்கி இதழ் சார்ந்த நிருபர் நீலகண்ட சாஸ்திரியை நேரில் சென்று பார்த்து நாட்டின் நிலைமை பற்றிக் கேட்டபோது, குருஜி கூறிய பலன், “இந்திய நாடு மிகவும் கடுமையான சோதனைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்நாடு எப்போதோ சிதறுண்டு போயிருக்கும். நமது மகரிசிகளின் ஆசீர்வாதம் இருப்பதால் தான் இந்த அளவுக்காவது நலமாக இருக்கிறது. தமிழ்நாடும் இதேபோல்தான்”[5] என்பதாகும்.

புகழ் பெற்றவர்கள் மட்டுமல்ல, இதிலுள்ள பலனை மிக எளிதில் சிரமமின்றி அனைவரும் அறியலாம் என்ற நிலை ஏற்படுத்தப்படுமாயின் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களைப் பற்றி அறிய முன்வருவர். எனவே, இத்தகைய கலைகள் அழிதல் என்பது ஏற்புடைத்தன்று. இதற்கு முன்னோடியாக குருஜியின் உதவியுடன் சுக்ரநாடி கிரந்தாவைப் படிக்கும் முறையும், அது பலருக்கும் பொருந்தும் முறையும் அறியப்படுதல் வேண்டும். இத்தகைய பயன்பாட்டு ஆய்வுகளுக்கான வழிமுறைகளை இந்திய அரசு விரைந்து மேற்கொள்ளுதல் வேண்டும்.

## நாடி சோதிடம் கூறுமிடம்

நாடி சோதிடம் நாகப்பட்டின மாவட்டத்திலுள்ள வைத்தீஸ்வரன் கோவிலில் சிறப்பாக மிகப்பெருமளவில் பார்க்கப்படுகிறது. வ.உ.சி. மாவட்டம், தூத்துக்குடியிலுள்ள தெய்வச்செயல்புரம், வட ஆற்காடு மாவட்டம், வேலூர், வந்தவாசியை அடுத்த நாவல் பாக்கம், சென்னை, தியாகராய நகர், தாம்பரம், அடையாறு ஆகிய இடங்களிலுள்ள (அகத்தியர் ஆலயம்) அகத்தியர் நாடி சோதிடம் முதலிய இடங்களில் நாடி சோதிடம் சொல்லப்படுகிறது. மேலும் கௌசிகர், காக்கை புசுண்டர், வால்மீகி, ஸ்கந்த, மீனாட்சி, சண்முக, கணபதி எனச் சித்தர்களின் பெயர்களால் தமிழ்நாட்டில் பல நாடி சோதிட நிலையங்கள் உள்ளன. இந்நிலையங்களைப் பற்றிப் பல ஆங்கில இதழ்கள் சிறப்பித்து

5. கல்கி இதழ், பக்.32-35. 24.3.96

எழுதியதால் தமிழ் நாட்டினர் மட்டுமின்றி இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் பல மொழி பேசும் பல இனத்தைச் சேர்ந்தவர்களும் வெளிநாட்டவரும், குறிப்பாகச் சப்பாணி யரும் நாடி சோதிடரை அணுகிப் பலன் கேட்கின்றனர்.

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் 12 இலக்னங்களுக்கும் 12 ஸப்தரிஷி நாடி சோதிடச் சுவடிகள் உள்ளன. அவற்றுள் மேடம் முதல் கன்னி வரையுள்ள ஆறு இலக்னங்களுக்கு நாடிகள் நூல்கள் வடிவில் வெளிவந்துவிட்டன. தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் திரு. 'விஷ்ணுராம் மேதி' தாம் பதவியில் இருந்த பொழுது மீதமுள்ள ஆறு இலக்னங்களுக்கும் நூல் விரைந்து வருதல் வேண்டும் என்று கூறினார். அதன்படி ஏழாவது இலக்னமான துலாராசி எழுதி முடிக்கப்பெற்றது. ஆயின் ஆளுநர் வேறு இடத்திற்கு மாற்றலாகி விட்டதால் அதன்பின் இவ்வெளியீடு தொடர்பான வேலைகள் சரிவர நடை பெறவில்லை. முடிக்கப்பெற்ற துலாலக்னமும் வெளி வரவில்லை, என்கிறார் அந்நூலகத்தில் பணிபுரிந்த முன்னாள் காப்பாட்சியாளர் முனைவர் பூ. சுப்பிரமணியம். மேலுமவர் கூறியது, தெ.பொ. மீனாட்சி சுந்தரம் இந்நூலகத்தில் தன்னுடைய சாதகம் உண்டா எனத் தேடியபோது, அவருடைய இலக்னத்திற்குரிய சாதகம் கிடைத்தது மட்டுமன்றி பலனும் மிகச் சரியாக இருக்கிறது என்று தம்முடன் இருந்த முனைவர் க.த. திருநாவுக்கரசு அவர்களிடம் கூறியுள்ளார்.

இவர் மட்டுமன்றி மற்றும் பலர் தங்களுக்குப் பலன் சரியாக அமைந்தது என்று கூறுகின்ற நிலையுள்ளதால், நாடி சோதிடமே பொய் தொடக்க காலத்தில் பலருக்கும் எழுதப் பட்ட நூற்றுக்கணக்கான சாதகங்கள் தொகுக்கப்பட்டு, இலக்ன வாரியாகப் பிரிக்கப்பட்டு நாடி சோதிடங்களாக மாற்றப்பட்டுவிட்டன என்ற ஒரு சிலரது கருத்து ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உண்மை நிலை தெளிவு படுத்தப்பட வேண்டும்.

நாடி சோதிடக் கணிப்புகளின்வழி அறியப்படும் பலன்கள் பல அரிய செய்திகளை, உண்மைகளைத் தன்னுள் கொண்டிருப்பதைத் 'தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம்' எனும் நூலில் உண்மை நிகழ்ச்சிகளின்வழி நிறுவப் பட்டிருக்கிறது (இணைப்பு - I). பஞ்சாங்கம் கணிக்கப்பட்டு அதன்வழி பின்னர் நடக்கவிருக்கின்ற பல நிகழ்வுகளை அறிவது போல்தான் நாடிசோதிடமும் கணித அடிப்படையில் கணிக்கப்பட்டு பின்வருபவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கலாம்.

உண்மையான நாடி சோதிடம் என்று ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அதில் முன்பே எழுதப்படுவது மட்டுமன்றி, அதனைப் படிப்பவர்களும் உள்ளுணர்வின் அதாவது அடிமனத்தின் ஆற்றல் மிக்கவராகவே உள்ளனர். அத்தகைய நாடி சோதிடர்கள் பணத்தைப் பெரிதாக மதிப்பவர்கள் அல்ல; அதில் வரும் பரிகாரங்களும், எதிர்காலப் பலன்களும் சரியாகவே இருக்கும். இம்முறையில் நாடி சோதிடம் கூறுபவர்கள் இன்று மிகக் குறைவாகவே உள்ளனர். இந்த உண்மையினை அறியாத பலர் இன்றும் பணத்தை வீணாக்குவதுடன் தேவையில்லாமல் தங்கள் காலத்தை வீணடிக்கின்றனர். உண்மையை அறிந்தவர்கள் கூடத் தங்களுடைய பலவீனத்தின் காரணமாக நாடி சோதிடத்தை அணுகுகின்றனர். இன்றும் ஒருசிலர் அதில் பொய், புரட்டு இருக்கின்றது என்பதை அறிந்தும் நமக்குச் சரியாக ஏடு கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில் செல்கின்றனர். எனவே, மக்கள் எத்தகைய மன உணர்வு உடையவர்கள் ஆயினும் இதன்பால் ஈர்க்கப்படவே செய்கின்றனர்.

உன்னதமான நிலையில் இருக்கவேண்டிய இக்கலை இன்று பொருள் ஈட்டும் நோக்கில் செயல்படுபவரிடம் அகப்பட்டுவிட்ட காரணத்தினால் தன் செல்வாக்கை இழந்து கொண்டிருக்கிறது. இன்றைய சூழலில் நாடி சோதிடம் பார்க்கப்படுமானால், எந்த அளவிற்குப் பலன் சரியானதாக இருக்கும்; எத்தனை விழுக்காடு மக்களுக்குப் பயன்படும் என்பன போன்ற செய்திகளைத் துல்லியமாக அறிய, தனியாரிடம் உள்ள நாடி சோதிடச் சுவடிகள் எல்லாம், தொல்பொருள் என்னும் அடிப்படையில் அரசாங்கம்

கைக்கொண்டு, அதனை ஆய்வியல் அறிஞர்களைக் கொண்டு ஆய்வு செய்ய வழிவகை ஏற்படுத்த வேண்டும். இத்திட்டத்தின்வழி சுவடிகளைப் பாதுகாத்து நூல் வடிவில் கொண்டுவரவும், ஆய்வுகள் மேற்கொண்டு நம் பழம்பெரும் கலையைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். மக்களை ஏமாற்றுதல்களிலிருந்து காப்பாற்ற அரசும் ஆய்வாளரும் விரைந்து இத்திட்டத்தினை மேற்கொள்ள வேண்டும்.

## மனையடி சோதிடம்

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நம் முன்னோர்கள் சோதிடம், கைரேகை, தந்திரம், எந்திரம், மந்திரம் போன்றவற்றில் தாம் கண்ட அறிவை நமக்கு அளித்துள்ளதுபோல், "வாஸ்து சாஸ்திரம்" என்னும் மனையடி சோதிட அறிவையும் நமக்கு அளித்துச் சென்றுள்ளனர். மனையடி சாத்திரம் என்பது திட்டமிடுதலும் கட்டிடக் கலையும் என்பதைக் கூறும் அறிவியல் எனலாம். மாய வஸ்து, விஷ்வகர்ம வஸ்து, பிரகத் சமிக்த்தா, வஸ்தபுது மாணிக்கிய என்ற பழம் நூல்கள் மனையடி சோதிடத்தைப் பற்றி எழுதியுள்ளன. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்கள் ஒரு கட்டிடம் கட்டுவதில் குறிப்பிடத்தக்க பங்கை ஏற்கின்றன. அவற்றின் சரிவிகித அமைப்பில் குறை ஏற்படின் தீமை விளையும்.

'சர்வார்த்தா சிற்ப சிந்தாமணி' என்ற சிற்ப சாஸ்திர நூலில் கூறப்பட்டுள்ள விதிகள் மனையடி சோதிடத்திற்கு அடிப்படையாகின்றன. சிற்ப சாஸ்திரம் என்பது வீடு கட்டுவது, சிறு சிறு ஆலயங்கள் அமைப்பது பற்றியது. கள சாஸ்திரம் என்பது பெரிய பெரிய ஆலயங்கள் அமைப்பது பற்றியது. பூமியானது பூமாதேவிக்குச் சொந்தம் என்பர். பூமாதேவிக்கும் அகண்ட முனிவருக்கும் பிறந்தவர் 'வாஸ்து புருசன்' என்று சொல்லப்படுகின்ற நித்திரை தேவன். இந்து வாஸ்து புருசன் எப்பொழுதும் உறக்கத்தில் இருந்து கொண்டு மாதம் ஒருமுறை விழித்து எழுந்து 5 நாழிகை வரையில் தனது காலைக் கடமைகளை முடித்துக்கொண்டு தெய்வ வழிபாடு செய்து, பின் உணவு உண்டு தாம்பூலம் தரித்து, அரசு செய்யும். இவ்விதம் தனது ஐந்து வகையான

கடமைகளை முடித்துக்கொண்டு மீண்டும் பன்னிரண்டு வீடுகளில் சூரியன் இருக்கும் இராசியில் காலை நீட்டிக்கொண்டு, அதற்கு நேர் எதிரான ஏழாவது இராசியில் தலையை வைத்துக்கொண்டு, தலையின் கீழ் இடக் கரத்தை தலையணை போல் வைத்துக்கொண்டு, வலக் கரத்தைத் தொடை வரை நீட்டிக்கொண் டு உறக்கத்தில் ஆழ்ந்து விடுவார். இவ்வைந்து நாழிகைகளில் கடைசி இரண்டு நாழிகையில் வீடுகட்ட, அஸ்திவாரம் போட வேண்டும் என்று மனையடி சாத்திரம் கூறுகிறது.

நிலம், மனை தேர்வு செய்து அஸ்திவாரம் போடுவது முதல், வீடு கட்டிக் குடிபுகும் வரை சோதிட நெறிமுறைகள் பல மனை நூல்களில் கூறப்பட்டுள்ளன. அஸ்திவாரம், வாயிற்படி, தலை வாயிற்படி, பூசையறை, சமையலறை, குளியலறை, படுக்கையறை முதலியன எங்ஙனம் அமைய வேண்டும் என்பது பற்றி விரிவாக மனையடி சோதிடத்தில் விளக்கம் பெறுகின்றன. மேலும் இதில் மாதம், இராசி, கிழமை, நட்சத்திரம், கரணம், யோகம், திதி போன்ற அனைத்தும் எப்படி அமைய வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

வீடு கட்ட, குடிபுக சிற்சில கோள்கள், சிற்சில கதியில், சிற்சில நட்சத்திரங்களில் இருந்தால் அது தீய பலன்களைத் தரும் என்பது மனைசாத்திர விதி. குடிபுகும் நாள், குடி புகுபவருடைய இராசிக்கு 4ஆவது 8ஆவது இராசியாக இருக்கக்கூடாது. பிறப்பு இலக்னத்திற்கு 8ஆம் இராசியும் 12ஆம் இராசியும் எந்த ஒரு கோளும் இல்லாமல் சுத்தமாக இருக்கவேண்டும்.

வீடு கட்டும் போது துலாராசியில் ஒரு கோளாவது இருக்க வேண்டும். வெள்ளி கிழக்கே இருக்கும் போது வீடு கட்டும் உரிமையாளர் மேற்பக்கம் சென்று வீடுகட்டும் பணியில் ஈடுபடக்கூடாது. அஸ்தங்ககாலம், சந்திராஷ்டம நாட்கள், கீழ்நோக்கு நட்சத்திரங்கள், அபிசித்துக் காலங்கள் முதலியன ஆகாது. என்பன போன்ற பல விதிகள் இம்மனையடி சாத்திரத்தில் இடம் பெறுகின்றன. கட்டப் பட்ட வீடுகள் சரிவர அமையவில்லை எனில் மாறுதல்களை அமைத்துக் கொடுக்கும் வழிமுறைகளும் மனையடி சோதிடத்தில் கூறப்பட்டுள்ளன.

மனையடி சாத்திர நூல்கள் பல வெளிவந்திருப்பினும் பதிப்பிக்கப்படாமல் சுவடி வடிவில் பல நூல்கள் உள்ளன. இவையனைத்தும் பதிப்பிக்கப்பட்டு, இவற்றிலும், இதுவரை வெளிவந்த நூல்களிலும் உள்ள செய்திகள் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். மனை நூல்களில் கூறப்பெற்றுள்ள நூற்றுக்கணக்கான விதிமுறைகளை வெறும் நம்பிக்கையின் அடிப்படையிலானவை என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இதிலுள்ள கணக்கிடு முறைகள் சிறப்புற அமைந்துள்ளன. இன்று கட்டட வல்லுநர்களால் கட்டப்படும் கட்டடங்களில் நீள, அகல விதிமுறைகள் உட்பட சில விதிமுறைகள் மனைநூல் செய்திகளை ஒத்தே பின்பற்றப்படுகின்றன. எனவே மனைநூல் குறித்த செய்திகளனைத்தும் ஆய்வுக்குட் படுத்தப்படுமானால், காலத்திற்கேற்ப இவ்விதி முறைகளில் ஏற்புடையனவற்றை ஏற்றும், தேவைக்கேற்ப மாற்றிக் கொண்டும், இன்றைக்குச் சாத்தியமற்ற விதிமுறைகளைக் கைவிட்டும் மனைநூல் விதிமுறைகளில் மாற்றங்களைக் கொணர முடியும். இதனை அறிவுப்பூர்வமாக ஆராய்ந்து, சிந்தித்துச் செயல்படுகின்றபோது மனைநூலில் கூறப்பட்டுள்ள பல செய்திகள், வழிமுறைகள், உத்திகள், நுட்பமான கணக்கிடு முறைகள் முதலியன இன்றைய கட்டடப் பொறியாளர்களுக்குப் பெரிதும் உதவும் வகையில் அமையும். இதனால் மனித சமுதாயம் பயனடையும்.

"வாஸ்து சாஸ்திரம் பல அரசியல்வாதிகளைப் பிடித்து ஆட்டுகிறது. கிண்டி ராஜ்பவனில் வாஸ்து சாஸ்திரப்படி ஆளுநர் பல மாறுதல்கள் செய்தார். காங்கிரஸ் கட்சியின் சத்தியமூர்த்தி பவனில் கூடக் காம்பௌண்டை (மதிற்சுவர்) இடித்துப் புதிதாக இன்னொரு நுழைவாயில் வைத்தனர். பகுத்தறிவுவாதி என்று சொல்கின்றவர்கள் கூடக் கட்டடத்தின் அமைப்பைச் சோதிட சாதக முறைப்படி மாற்றுவது வழக்கமாகிவிட்டது. தற்போது முதல்வர் ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வீட்டில் வாயிலை இடித்து அகலமாக்கும் பணி நடக்கிறது"[6] என்ற செய்தி, மனை சாத்திரம் பல்தரப்பட்டவர்களிடையேயும் பெற்றுள்ள செல்வாக்கைத் தெற்றெனக் காட்டுகிறது.

## ஆரூடம்

ஆரூடம் என்பது இருமுறைகளில் கூறப்படுகின்றது. ஒன்று வானியலோடு தொடர்புடையது. இது பிரசன்ன

6. ஆனந்த விகடன் ப.13, 21.4.96

சோதிடம் எனப்படுகிறது. இன்னொரு முறை வானியலைத் தொடர்புபடுத்தாமல் கேள்வி கேட்கும் நேரம், கணிக்கும் நேரம் போன்றவற்றைப் பயன்படுத்துவது. அவ்வப்போது ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டிய சூழ்நிலையில், பொருள் களவு போதல், உறவினர் காணாமல் போதல், தொழில் மந்த நிலை, புதுத்தொழில் தொடங்குதல், பண முதலீடு செய்வதற்கான நல்ல நேரம் முதலிய பல நிலைகளில் ஆருடப் பலன்கள் மூலம் விடை காணமுடிகிறது. எனவே ஆருடப் பலன்கள் பலவிதப் பிரச்சனைக்கும் எளிதில் தீர்வு அளிக்க வல்லது.

## பிரசன்ன சோதிடம்

ஒரு கேள்வி கேட்கப்பட்ட நேரத்தில் கோள்களின் நிலை எப்படியிருக்கிறது என்பதைக் கவனித்து அந்தக் கேள்விக்குப் பதில் கூறுவது பிரசன்ன சோதிடம். இது நிமித்தச் சோதிடம் என்றும் கூறப்படுகிறது. ஒருவனுடைய பிறந்த நேர சாதகக் குறிப்பைப் போன்றே கேள்வி கேட்போரின் நேரத்திற்குச் சரியான அப்போதைக்குரிய இலக்னத்தைக் கோள்களைக் கணக்கீடு செய்து, வந்த கோள்களின் நிலைகளைக் கட்டத்தில் குறித்துக்கொண்டு இம்முறையில் பலன் கூறப்படுகிறது. இவ்வானியல் கணக்கீட்டிற்கு ஒருசில வகைகள் கையாளப்படுகின்றன. அதில் ஒன்றுதான் மேலே கூறிய கேள்வி கேட்கும் நேரத்தைக் கொண்டு அறியும் முறை.

கேள்வி கேட்போர் 108 எண்ணிற்குள் ஓர் எண்ணையும் தங்களுடைய கேள்வியையும் கூறவேண்டும். அவ்வெண்ணிற் குரிய நவாம்ச இடத்தை இலக்னமாகக் கொண்டு, கோள்கள் கட்டத்தில் குறிக்கப்பட்டு பதில் கணக்கிடப்படும். இது பிரசன்ன முறையில் அமைந்த வேறு ஒரு முறையாகும்.

பன்னிரெண்டு எண்களுக்குள் ஓர் எண்ணைக் கூறச் சொல்லி அதை இலக்னமாகக் கொண்டு கோள்களைக் குறித்து விடை கணக்கிடுதல். இவை இரண்டும் மரபுவழி இந்து முறைச் சோதிடத்தில் கூறப்படுகின்றது. 'கிருஷ்ணமூர்த்தி பத்ததி' என்ற முறையில் 249க்குள் கேள்வி கேட்போர் ஓர் எண்ணைக் கூற, அந்த நேரத்திற்குரிய கோள்களைக்

குறித்துக்கொண்டு விடை அறிதல். இம்முறையில் இராசி மண்டலம் 249 பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. இதில் கோள், துணைக்கோள், பாவகட்டம் ஆகியன கணக்கீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இம்முறையைக் கே.எஸ். கிருஷ்ணமூர்த்தி என்பவர் ஏற்படுத்தியதால் இதற்குக் 'கிருஷ்ணமூர்த்தி பத்ததி முறை' என்று பெயர்.

இப்பிரசன்ன முறையில், கேள்வி கேட்போரின் பெயருக்கு உரிய நட்சத்திரத்தைக் கொண்டு, கோச்சார கோள் நிலையை, குறிப்பாகக் குரு, சனி நிலையைப் பயன்படுத்தியும் பலன் அறியப்படுகிறது.

சோதிடர் ஒருவர் தன்னுடைய ஆன்மீக மனவலிமையின் உதவியால் பிரசன்ன கேள்விகளுக்குப் பதில் அளிப்பார். கேட்பவருக்கு அப்பொழுது நடக்கும் சூரியகலை, சந்திரகலை, சுழுமுனை என்ற மூச்சோட்டத்தின் துணையால் சோதிடர் பலன் கூறுவர். கேள்வி கேட்போர் வந்து உட்காரும் திசை, அவர்கள் உச்சரிக்கும் முதல் வார்த்தை இவற்றைப் பிரசன்ன கணிப்பிற்கு எடுத்துக்கொள்ளும் வழிமுறையும் உண்டு. கேள்வி கேட்கும் நேரத்தில் நடக்கும் கிரக ஓரையைக் கொண்டும் பலன் கூறலாம்.

இவை தவிர எண்களைக் கொண்டு வானியலைத் தொடர்புபடுத்தாது ஆருடப் பலன் கூறுவது அக்காலத்தி லிருந்தே வழக்கில் உள்ளது. ஏதேனும் ஓர் எண்ணைக் கூறச் சொல்லி அந்த எண்ணுக்குரிய பலன்களைக் கூறுவது ஒரு முறை. அத்துடன் அவர்க்குப் பிடித்த மலர், கடவுள் பெயர், நாள், கிழமை ஆகியவற்றைக் கேட்டறிந்து பலன் கூறுவது முண்டு. 108 எண்களுக்கு முறையே 108 கேள்விகளும் அதற்குரிய பலன்களும் இடம்பெற்ற ஏட்டிலிருந்து கேள்வி கேட்போரின் கேள்விக்குரிய எண்ணைச் சில கணித உத்தி களுக்குட்படுத்தி அதற்குரிய பலனைப் படிக்கும் ஆருட முறையும் உண்டு. இந்த எளிய கணித உத்தி முன்னுரையில் தரப்பட்டு வெளிவரும் நூல்களை மக்கள் தாமே பயன்படுத்திக் கொள்ள முடியும்.

எண்கள் அடங்கிய கட்டத்தைக் காட்டித் தாம் நினைத்து வந்த காரியத்தை மனத்தில் நினைத்துக் கொண்டு, ஓர் எண்ணைத் தொடச் செய்து, அந்த எண்ணுக்குரிய பலன்களைக் கூறுவது வேறு ஒரு முறை. ஸ்ரீராமர் சக்கரம், சீதா சக்கரம்

என்பவையும் தொடுகுறி ஆரூட வகையைச் சார்ந்தவையே. வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் ஆகியன பஞ்சபட்சிகள். பிறந்த பெயரின் எழுத்துக்குரிய பட்சி, பிறந்த நட்சத்திரத்திற்குரிய பட்சி இவற்றைக் கொண்டு பலன் அறிவது 'பஞ்சபட்சி சாத்திரம்' எனப்படுகிறது.

இவ்வாரூடம், கணித ஆரூடம், சொல் ஆரூடம், தொடுகுறி ஆரூடம், எழுத்தாரூடம் என்ற முறைகளில் தமிழகத்தில் அன்றும் இன்றும் நடைமுறையில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பிரசன்ன சோதிடத்தில் சோதிடக் கணிதத்தை உள்ளடக்கிய 'கிருஷ்ணமூர்த்தி பத்ததி முறை' ஓரளவு சிறந்த முறை எனலாம். வானியலோடு தொடர்புடைய பிரசன்ன முறைகள், பிற ஆரூட வகைகளைக் காட்டிலும் துல்லியமான பலன் களைத் தரவல்லனவாய் உள்ளன. எனவே வானியலோடு தொடர்புடைய பிரசன்ன சோதிடம், பிற ஆரூடங்களி லிருந்து பிரித்து, சிறப்புடன் நோக்கப்பட்டால் அதன் இன்றியமையாமை புலனாகும்.

## சகுன சோதிடம்

பழங்காலத்தில் சோதிடக் கலையின் ஒரு பகுதியான நிமித்தம் பார்ப்பதுடன் சகுனம் பார்ப்பதையும் தொடர்புபடுத்தியுள்ளனர். இதனை அறிவிப்போரையும், சகுனத்தின் பலன்களைக் கூறுவோரையும் 'நிமித்திகர்' என்றும் வழங்கி வந்துள்ளனர். சகுனம் பார்த்தலும், அவற்றின் நன்மை தீமைகளை அறிதலும் சோதிட முறையையே சார்ந்திருக்கிறது. சோதிடத்தின் கூறுகளுள் ஒன்றாக அமைந்த இச்சகுனம் மக்களிடையே மிகுந்த செல்வாக்கைப் பெற்ற ஒன்று. உலகம் முழுவதும் இச்சகுனம் பார்த்தல் இருப்பினும் இச்சகுனத்திற்குரிய நிகழ்ச்சிகள் இடத்திற்கு இடம், நாட்டிற்கு நாடு மாறுபடுகின்றன. ஒரு செயலைச் செய்யத் தொடங்கும்போது, அது பற்றிப் பேசத் தொடங்கும்போது ஏற்படும் ஏதேச்சையான ஒருசில நிகழ்வுகள் 'சகுனம்' எனக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறு ஏதேச்சையாக ஏற்படுவதிலிருந்து நன்மை, தீமையைக் கண்டறிவதால் இது சகுன சோதிடமாயிற்று. கிரக ஓரைச் சகுனம் என்பது அந்தந்தக் கிரக ஓரையில் செய்யக்கூடியவையும், கூடாதவையும் பற்றிக் கூறுவது.

மறவர் குறிபார்க்கும் மரபும் அக்காலத்தில் இருந்தது. குறி பார்த்தல் என்பது வாய்ப்புள், உன்னம், புள், விரிச்சி என நால்வகைப்படும். வாய்ப்புள் - எதிர்பாராத வகையில் பிறர் வாயினின்று வெளிப்படும் நல்ல சொல்லைக் கேட்கப் பெறுதல்.

''றென்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்கும்'' (புற : 280 : 6)
''புள்ளும் ஓராம்; விரிச்சியும் நில்லாம்'' (குறுந். 218:3)

உன்னம் என்பது ஒருவகை மரம். அந்த மரம் தழைத்தால் மன்னன் வெற்றி பெறுவான் எனவும், பட்டுப் போனால் தோல்வியுறுவான் எனவும் மறவர் குறித்துக் கூறுவர்.

வல்லூறு, ஆந்தை, காகம், கரிக்குருவி, காடை, மயில் முதலிய பறவைகளின் குரலையும், இவற்றின் இயக்கத்தையும் கொண்டு நேரப்போகும் நன்மை தீமைகளைக் கணித்துக் கூறுவது 'புள் சகுனம்' அல்லது 'பட்சி சகுனம்' ஆகும்.

''உண்ணீர் மருங்கின் அதர்பல வாகும்
புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை'' (புற. 204:9.10)
''நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்'' (புற. 124:1)
''புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்'' (புற. 20:18)

விரிச்சி என்பது மறவர் சென்று தங்கியிருக்குமிடத்தில் நள்ளிரவில் கேட்கும் வானச் சொல் ஆகும். கட்டுவிச்சி என்னும் வெறியாடுபவளால் முறத்தில் நெல்லை வைத்து எண்ணிப் பார்த்து நன்மை தீமையை அறியும் பழக்கத்திற்குக் 'கட்டுப்பார்த்தல்' அல்லது 'நெற்குறி' என்று பெயர். வெறியாடுபவனாகிய வேலனால் கழங்கு பார்த்த நிமித்தங்களை அகத்திணை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

பல்லியின் ஒலி வரும் திசை, இடம் ஆகியவற்றை நோக்கி அதனால் நேரவிருக்கும் நன்மை தீமைகளை உணர்தல் 'பல்லி சகுனம்' எனப்படும். 'பத்து திக்கு பல்லி சொல்லுக்குப் பலன்' என்று இது பஞ்சாங்கத்தில் குறிக்கப்பெற்றிருக்கும்.

''தென்குரற் கணிவாய்ப் பல்லி'' (அக. 151:15)

உடம்பின் உறுப்புகளின் மீது பல்லி விழுவதற்கு அறியப்படும் பலன் 'பல்லி விழும் பலன்' என்று

கூறப்பெறுகின்றது. உடம்பின் பல உறுப்புகளின் துடிப்பிற்கேற்ப பலன்கள் அறியப்படுகின்றன. 'நல் எழில் உன்கணும் ஆடுமால் இடனே' (கலி. 11:21). பெண்களுக்கு இடக் கண் துடித்தலும் (ஐந். 70:41), ஆண்களுக்கு வலது கண் துடித்தலும் நன்மை தரும். இடக் கால் இடறினால் நன்மை பயக்கும்; வலக் கால் இடறினால் தீமை பயக்கும் என்றும் கூறுவர்.

மந்திரவாதிகள் தேவதைகளைத் தன் வசப்படுத்தி 'மைகள்' எனப்படும் அஞ்சனங்கள் தயாரித்து அவற்றைக் கைவிரல், நகம், வெற்றிலை போன்றவற்றில் தடவி அவற்றில் காட்சிகள் கண்டு குறி சொல்வர்.

குறி கேட்கும் வழக்கம் இருந்தமையைத் திணைமாலை (150:90) காட்டுகிறது. பைபிள் பழைய ஏற்பாட்டிலும் இதற்குச் சான்று இருக்கிறது. "குறி சொல்கிறவனும், நாள் பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறி கேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம்".

நிலைக்குறி, சுவடிக்குறி, நேர்ந்த நிகழ்ச்சிக் குறி, கோடிழைத்தற் குறி, மூச்சுவிடற் குறி எனப் பல்வேறு குறிகளால் நன்மை தீமைகளை உணரும் பழக்கம் அக்காலத்தே இருந்தது. தமிழகத்தின் தெற்கே 'அழகர் கோயில் மாட்டுக் காரன் குறி' எனவும், வடபகுதியில் 'பூம்பூம் மாட்டுக்காரன் குறி' எனவும் கூறப்படும் இம்முறை மாட்டின் தலை அசைப்பின் மூலம் அறியப்படுகிறது. கம்பளத்துக்காரன் என்று மக்களால் சொல்லப்படும் குடுகுடுப்பைக்காரன் கூறுவதும் குறி வகையைச் சேர்ந்ததே.

தெய்வமேறியவர் கூறும் அசரீரி, பலன் கேட்க வந்தவர்க்குப் பின் நிகழப்போவதை உள்ளுணர்ந்து கூறும் 'பொறிச்சம்' என்னும் 'வெளிப்பாடு', வருங்காலக் காட்சி மெய்யுணர்வினால் எதிர்காலத்தில் நிகழ்வனவற்றை உள்ளுணர்ந்து முன்னுரைக்கும் தீர்க்கதரிசனம் இவை யாவும் குறி வகையைச் சார்ந்தவையே.

கண்பார்வையினால் ஏற்படும் இடர்ப்பாடுகளுக்குக் 'கண்ணேறு' என்று பெயர். கோவிலில் இறைவன் முன்

பூக்கட்டிப் போட்டு, வந்த பூவின் நிறத்தைக் கொண்டு நன்மை தீமை அறிதல் 'பூக்கேட்டல்' எனப்படும். காகம், பூனை முதலியன குறுக்கே செல்லுதல் முதலிய இயற்கை நிகழ்ச்சிகளைக் கொண்டு காரியத்தின் வெற்றி, தோல்வி அறியப்படுகின்றது. தூக்கத்தில் கண்ட கனவுகளுக்குப் பலன் அறியப்படுகின்றது. அட்டைகளைக் கலைத்துப் போட்டு கிளி சோதிடம் பார்க்கப்படுகின்றது. இன்னும் பலவாறாகச் சீட்டுக் கணித முறையில் பலன்கள் பார்க்கப்படுகின்றன. ஓணான் சகுனம், மங்கல மங்கையர் சகுனம், வளையல் சகுனம், தும்மல் சகுனம், தேங்காய்ச் சகுனம் எனப் பல்வேறு சகுனங்கள் அன்று முதல் இன்றுவரை நடைமுறையிலுள்ளன.

சோதிட வகைகள் பல இருப்பினும், இவை பற்றிய (குறிப்பாக ஆருடம், சகுனம்) தெளிவான முறையான கணக்கீடுகள் வகுக்கப்படவில்லை. சோதிட முறைகள் அனைத்திற்கும் தெளிவான கணக்கீடுகள் அவ்வத்துறை சோதிட அறிஞர்களைக் கொண்டு தொகுக்கப்பட்டு வரையறை செய்யப்படின் அவை மக்களுக்குப் பயன்தரும் வகையில் அமையும். சோதிடம் என்னும் துறை 'வானவியல்' என்னும் அறிவியல் துணையுடன் முறையாக வளர்ந்து வந்திருக்கிறது. சோதிடம் தன்னுள் கிளி சோதிடம், பல்லி சோதிடம் முதலிய பல பிரிவுகளைக் கொண்டிருந்தாலும் கோள்களை அடிப்படையாகக் கொண்ட சோதிடம் கணித அடிப்படை யிலும், ஓரளவு அறிவியல் அடிப்படையிலும் அமைந் துள்ளதால் அதனைப் பிரித்து அறிதல் நலம் பயக்கும்.

இதுகாறும் கூறப்பட்ட சோதிட முறைகளில் மனிதக் குழுக்களின் பரிமாற்றங்கள் இயல்பாக நிகழ்ந்துள்ளன. இனி உலகிலுள்ள சோதிடர் அனைவரும் ஒன்றிணைந்து சோதிட ஆய்வரங்கங்களை உருவாக்கித் திட்டமிட்ட முறையில், அனைத்துச் சோதிட முறைகளிலும் உள்ள சிறந்த எளிய முறைகளைத் தொகுத்து, உலக மக்களுக்குப் பொதுவான ஒரு சோதிட முறையிலான நன்முறையினை உருவாக்கித் தருதல் வேண்டும்.

★ ★ ★

## இயல் மூன்று

# இந்திய மேனாட்டுச் சோதிட முறைகள்

**சோ**திடம் என்பது, மனிதர்கள் அனைவருக்கும் ஒரே தன்மையுடையதாக விளங்கினாலும், அவன் வாழ்கின்ற நிலப்பகுதிகளின் தன்மை, வானியலின் தன்மை, வாழ்வியல் முறை இவற்றிற்கேற்பப் பல மாறுதல்களைக் கொண்டு விளங்குகிறது. சோதிடத்தைப் பற்றிய ஆய்வுகளைப் புறச்சூழலின் அடிப்படையில் நோக்கும்போது ஒற்றுமை யில் வேற்றுமை என்ற போக்கில் அமைந்துள்ளன.

ஒருவருக்கு அவரது வாழ்க்கையில் நிகழவிருக்கும் செய்திகளை முன்கூட்டி அறிந்து சொல்லுவது சோதிடம். பிறந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டு கோள்களின் அமைப்புகளைச் சோதித்து ஏற்ற பலனைக் கூறுவதால் சோதிடம் எனப்படுகிறது. சோதிடம் கூறுவதில் பெருவாரியாக ஐந்து அமைப்புகளைக் கொள்ளலாம். பிறந்த நேரத்திற்குரிய சோதிடம் முன்கூட்டி அறிந்திருக்கின்ற நாடி சோதிடம், பிறந்த காலம் முதலியன அறியாத விடத்துக் கணிக்கும் ஆருடச் சோதிடம், எண்கணிதம், கைரேகை என்பன இந்த ஐந்து அமைப்புகள். இந்திய முறையிலுள்ள இந்த அமைப்புகளில் நாடி சோதிடம் தவிர்த்த பிற நான்கு முறைகளும் மேனாடுகளிலும் கையாளப்படுகின்றன. இந்த நான்கு அமைப்புகளிலும் மேனாட்டு முறைக்கும் இந்திய முறைக்கும் பல ஒற்றுமை வேற்றுமைகள் உள்ளன. பல நூற்றாண்டுகளாக இந்தியாவிலும் மேல்நாடுகளிலும் சோதிடம் வெற்றிகரமாகக் கையாளப்பட்டு வருகிறது. இந்தியாவிற்கும், மேலைநாட்டிற்கும் பலவற்றில் வேறுபாடு இருப்பது போல் சோதிடத்திலும் வேறுபாடு உண்டு. ஆனால் அடிப்படையில் இந்துமுறைச் சோதிடமும் மேல்நாட்டுச்சோதிடமும் ஒத்து உள்ளன. இவை கையாளப்படும் முறைமையில்தான் பல வேறுபாடுகள்

இருக்கச் செய்கின்றன. இதனை விரிவாகக் காணுதல் ஏற்புடைய ஒன்றாகும். அதாவது இந்திய முறைச் சோதிடம், மேனாட்டு முறைச் சோதிடம் என்றால் என்ன என்ற விளக்கம் முழுமையாகச் சுட்டப்பெறுதல் வேண்டும். இருப்பினும் விரிவு கருதி இப்பகுதி, இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாடுகளையே சிறப்பாக முன்வைக்கிறது.

## இந்தியச் சோதிடம்

பொதுவாகச் சோதிட முறைகள் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை: 1. மகரிசி பராசரரின் வழிவந்த முறை. 2. மகரிசி ஜெய்மணியின் முறை (சைமினி முறை), 3. தாஜக முறை (தாஜிக் முறை) என்பனவாம். இம்மூன்றில் இரண்டு அழிந்துவிட்டன. அந்த இரண்டு வழிமுறைகளின் நுட்பங்கள் பற்றிய செய்திகள் முழுமையும் கிடைக்க வழியில்லாமல், காலத்தால் அழிந்துபோய்விட்டன. எனவே பராசரரின் வழிவந்த சோதிடம்தான் இன்று நமது நாட்டில் பின்பற்றப்பட்டு வருகிறது. ஜெய்மணி முறை மறைந்துவிட்டதெனினும் சில வழி முறைகள் பின்னர் கிடைத்துள்ளன. இம்முறை பராசரமகரிசியின் முறைக்கு முற்றிலும் மாறுபட்டது. இம்முறை இன்று பரவலாகப் பின்பற்றப்படாவிட்டாலும், நம் நாட்டில் ஒருசில பகுதிகளில் இம்முறை வழக்கத்தில் இருக்கிறது. குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் ஒருசிலரால் இம்முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

இதுபோலவே தாஜக முறைச் கிரகணம், யோகம் போன்றவற்றைத் தெரிந்துகொள்ளப் பயன்படுகிறது; அந்தந்த ஆண்டுப் பலன்களைச் சூரியனின் நிலையைக் கொண்டு, நட்சத்திரங்களின் அமைப்பைக் கொண்டு கணித்தறிய உதவுகிறது; கோசாரத்திற்குத் துணைபுரிகிறது.

வராகமிகிரர் ஏற்படுத்திக் கொடுத்த ‘இந்து முறைச் சோதிடம்’ இன்றைய சோதிட முறைமைகளுக்கு அடிப்படையாக விளங்குகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு ‘ஸ்ரீபதி’ என்பார் அமைத்துக்கொடுத்த கணித முறையைத்தான் ‘இந்து முறைச் சோதிடக் கணிதம்’ என்னும் பெயரில் தமிழ்ச் சோதிட நூல்கள் பலவும் பின்பற்றி வருகின்றன.

அண்டகோளத்தில் சுற்றிவரும் சூரியனது பாதை, இப்பாதையிலுள்ள தொடக்கப் புள்ளியான ஓர் இலக்கு, இதனைத் தொடக்கமாகக் கொண்டு வானமண்டலத்தில் கணிக்கப்பெறும் தூரம், சூரியனது பாதை அமைந்த இராசிச் சக்கரம், அதிலுள்ள இராசிகள், கோள்கள், நட்சத்திரங்கள், இராசிச் சக்கரம் கிழக்குத் தொடுவானத்தைச் சந்திக்கும் 'இலக்னம்' எனும் புள்ளி, இதனைத் தொடக்கமாகக் கொண்டு கணிக்கப்பெறும் 'பாவகச் சக்கரம்', இராசிச்சக்கரம் முதலியன இராசிச் சக்கரத்தில் பயணிக்கும் ஒன்பது கோள்கள், உபகோள்கள் முதலியன சோதிடத்தின் கூறுகளாக அமைகின்றன. தென்னிந்தியாவில் மேடம் முதல் **12** இராசிகள் வலசாரியாகவும், வட இந்தியாவில் இடசாரியாகவும் எண்ணப்படுகின்றன.

கோள் நிலையினை இராசிச் சக்கரத்தில் காட்டும் சதுரக் கட்டத்திற்குச் 'சாதகச் சக்கரம்' என்று பெயர். ஒரு கோளானது ஒரு நட்சத்திரத்தில் நான்கு பாதங்களில் எந்தப் பாதத்தில் நிற்கின்றதோ அதற்கு 'நட்சத்திரப் பாதசாரம்' என்று பெயர். சாதகர் பிறக்கும் போது அமைந்த உதய இலக்னம் அமைந்த பாகை, நிமிடம் என்னும் தூரம் 'இலக்ன ஸ்புடம்' எனப்படும். ஒன்பது கோள்கள் தரும் பலன் கோள்களின் 'காரகத்துவப் பலன்' எனப்படும். சூரியன் - பிதுர், சந்திரன் - மாதுர், செவ்வாய் - பூமி, சகோதரர் , வாகனம், புதன் - கல்வி, குரு - புத்திரன், சுக்கிரன் - களத்திரம், சனி - ஆயுள் என்றவாறு ஒவ்வொரு கோளும் காரகத்துவம் வகிக்கின்றன. கோள்கள் இக் காரகத்துவப் பலன்களை அவற்றினுடைய தசாகாலங்களில் அளிக்கும். கோள்கள் குறிக்கும் பொருள்கள் தொடர்பான வியாபாரம், இலாபநஷ்டம் இவற்றையெல்லாம் அவரவர் நிலைக்கேற்றபடி ஊகித்துக் கொள்வதற்கு இப்பகுதி மிகவும் உதவும். ஒவ்வொரு கோளும் ஒன்றும், ஒன்றுக்கு மேற்பட்டும் பலன்களைத் தரவல்லவை.

ஓர் இராசிக்குரிய முப்பது பாகையைக் கூறுகளாகப் பிரித்துப் பலனறியப்படுகிறது. இங்ஙனம் பலனறியச் 'சட்வர்க்கம்' பயன்படுகிறது. சட்வர்க்கத்தில் சேத்திரம், ஓரை, திரேகாணம், நவாம்சம், துவாதசாம்சம், திரிம்சாம்சம் ஆகிய ஆறும் அடங்கும். 'சேத்திரம்' என்பது இராசிச்

சக்கரத்தை வைத்துப் பலனறிவது. 'ஒரை' என்பது ஒரு மணி; 24 ஒரை ஒரு நாள். ஓர் இராசியின் முதல் 15 பாகைக்குச் சந்திரன் ஒராதிபதி. பின் 15 பாகைக்குச் சூரியன் ஒராதிபதி. 'திரேகாணம்' ஓர் இராசியை மூன்றாகப் பிரித்தும், 'நவாம்சம்' என்பது ஒன்பதாகப் பிரித்துப் பலனறிவன. ஓர் இராசியை 12 ஆகப் பிரித்துப் பலனறிவது 'துவாத சாம்சம்'. இம்முறையில் ஓர் இராசியைப் பிரிக்கும்போது கோள்கள் எந்தப் பிரிவில் அடங்குகின்றனவோ அதைக்கொண்டு பலனறிவது. செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி ஆகிய ஐந்து கோள்களுக்கும் ஓர் இராசியைப் பிரித்தளிப்பதே 'திரிம்சாம்சமாகும்'. இங்ஙனம் பிரித்தறியப்படுவதற்குச் 'சப்தவர்க்கம்' என்று பெயர். ஓர் இராசிக்குரிய முப்பது பாகையைப் பத்துக் கூறுகளாகப் பிரித்து ஓர் இராசிக்கு மூன்று பாகை என வரிசையாகப் பிரித்துப் பலனறிவது 'தசாம்சம்' என்றும், 16 ஆகப் பிரித்தறிவது 'சோடசாம்சம்' என்றும், 60 ஆகப் பிரித்தறிவது 'ஷஷ்ட்யம்சம்' எனவும் கூறப்படுகின்றன.

12 இராசிகள், 27 நட்சத்திரங்கள், 108 நட்சத்திர பாதங்கள் ஆகியன அடிப்படையாக அமையினும் பலனறியப் பல நுட்பங்கள் சோதிடத்தில் பயன்படுத்தப் பெறுகின்றன. கோள்களின் ஆட்சி, உச்சம், நீச்சம், பகை முதலிய உறவுகள், பார்வைகள், கேந்திரம், திரிகோணம், பணபரம், ஆபோக்லீபம், சர, ஸ்திர, உபய இராசிகள், திதி, கரணம், யோகம், அயனம், நிறம், சாதி, வடிவம், உறுப்பு, உலோகப் பொருள், மொழி, இரத்தினம், ஆடை, தூபதீபம், வாகனம், சமித்து, சுவை, திக்கு, அதிதேவதை என்றவாறு சோதிடத்திலுள்ள கூறுகள் பரந்தும் விரிந்தும் செல்லக் கூடியன.

பலனறிவதில் 'தசாபுத்தி' முறை மிகவும் பயனுடைய தாய் இந்துமுறைச் சோதிடத்தில் அமைகிறது. மனிதனுடைய வாழ்நாட்களில் ஒன்பது கோள்களும் மும்மூன்று நட்சத்திரச் சக்திகளை வாங்கி வெவ்வேறு காலக்கட்டங்களில் ஆட்சி செலுத்துதல் தசாபுத்திப் பலன் எனப்படுகிறது. 12 கோள்களின் தசாகாலம் 120 ஆண்டுகள். தசாபுத்தியில் 'புத்தி' என்பது ஒரு குறிப்பிட்ட தசாவில் மீண்டும் ஒன்பது

கோள்கள் உள் ஆட்சி செலுத்துவது. எனவே தசாவின் உட்பிரிவு 'புத்தி' எனப்படுகின்றது. இப்புத்தியின் உட்பிரிவே 'அந்தரம்'. இவ்வாறாக மிக நுட்பமாய் ஒரு கோளின் தசாவைப் பிரித்துப் பலன் அறியப்படுகின்றது. இந்தியாவில் பரவலாக விம்சோத்தரி தசா முறைப்படி பலன் கூறப்பெறுகின்றது.

கோள் ஆதிபத்தியம், பிறந்த இலக்னம், சந்திர இலக்னம், கோள்கள் நின்ற நட்சத்திர உப அதிபதிகள், கோள்களின் அமைப்பு, தன்மை, உறவு, பார்வை, வலிமை, துணைக்கோள்கள், தியாச்சியம் என்னும் நச்சு நேரங்கள், சட்வர்க்க அமைப்பு, தசாபுத்திப் பலன், போதகன் முதலிய நால்வர், கோச்சாரப் பலன், கோச்சார வேதை, முக்குணவேளை, கிரக ஓரை, பொதுப்பலன், சிறப்புப்பலன் முதலியவற்றைப் பார்த்துச் சோதிடப் பலன் கணித்தறியப் படுகிறது. இராசி, பாவகம், கோள்கள் முதலியவற்றால் பொதுப்பலன் கூறப்படுகிறது. குறிப்பிட்ட கோள்களா னவை குறிப்பிட்ட இராசிகளில் அல்லது பாவகங்களில் குறிப்பிட்ட கோள் சேர்க்கை மற்றும் பார்வை பெற்று இருந்தால் குறிப்பிட்ட வகையான பலன்கள் நடக்கும். இவை சிறப்புப் பலன்களாகக் கூறப்பெறுகின்றன.

இந்துமுறைச் சோதிடத்தின்படி பலன் கூறுவதற்கு இந்துமுறைக் கணிதமும், மேற்கத்திய முறைச் சோதிடத்தின் படி பலன் கூறுவதற்கு மேற்கத்திய முறைக் கணிதமும், கிருஷ்ணமூர்த்தி முறையில் பலன் கூறுவதற்கு கிருஷ்ண மூர்த்தி முறையான 'நட்சத்திர அதிபதி உப அதிபதி' கணிதமும் இந்திய முறைச் சோதிடத்தில் பின்பற்றப்பட்டு வருகின்றது.

## மேனாட்டுச் சோதிடம் (WESTERN ASTROLOGY)

சோதிடவியல் உலக நாடுகளில் பழங்காலந்தொட்டு இருந்து வந்துள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் அதன் வளர்ச்சியை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது தொடக்கத்தில் அதன் வளர்ச்சி மிகுதியாகவும், பின்னர் மத நம்பிக்கை காரணமாக (கிறிஸ்தவ இசுலாமிய) இறை நம்பிக்கைக்கு எதிராக விளங்குவதாகக் கருதுகோள் உருவாகி

தேய்வினையும் அடைந்தது. அதன் பின்னர் அறிவியல் அடிப்படையில் சோதிடவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப் பெற்று மறுமலர்ச்சியைப் பெற்று வளர்ச்சியடைந்ததைக் காணமுடிகிறது. சோதிடம் பார்க்கும் நோக்கம் ஒன்றாக இருப்பினும், பார்க்கின்ற முறை ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு வகையில் பின்பற்றப்படுகிறது. ஒரு பகுதியிலேயே பல்வேறு கிளை வழிமுறைகளிலும் சோதிடம் பார்க்கப்படுகிறது. 12 இராசி மண்டலங்கள், 9 கோள்கள், 27 நட்சத்திரங்கள் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு பாவகப் பலன், பார்வை போன்ற பலன்களையும், உத்திகளைப் பயன்படுத்தி முன்னறிவிப்புச் சோதிடப் பலன்களையும் கூறுவது மேல்நாட்டுச் சோதிடம் ஆகும்.

### இந்திய மேனாட்டுச் சோதிட முறைகளிடையே வேறுபாடுகள்

### சாயன நிராயன முறை

மேனாட்டு முறை, இந்திய முறை ஆகிய இரண்டிலும் இராசி மண்டலமே கோள்களின் மேடைப்பாதையாக அமைகிறது. இராசி மண்டலம் மேனாட்டு முறையில் சாயனராசி எனவும் இந்திய முறையில் நிராயனராசி எனவும் வழங்கப்படுகிறது. கி.பி.285 வரை இந்தச் சாயன நிராயன முறைகள் ஒரே தொடக்கத்தில் கணக்கிடப்பட்டன.

வானவியல் ஆய்வின்படி இராசி மண்டலம் ஆண்டிற்கு 50.25 விநாடி பின்னோக்கிச் செல்வதாகக் கணக்கிடப் படுகிறது. எனவே வானமண்டல அளவைகளில் தொடக்கப் புள்ளியாகக் கொள்ளப்படும் மேட இராசித் தொடக்கப் புள்ளியானது, ஒரு நிலையான வேகத்தில் பின்னோக்கி நகர்ந்த வண்ணம் இருக்கிறது. எனவே இராசிச் சக்கரமே பின்னோக்கி நகர்கிறது. மேட இராசித் தொடக்கப் புள்ளி என்னும் இராசிச் சக்கரத் தொடக்கப் புள்ளியானது பின்னோக்கி நகர்வதால், சூரியனது வருடாந்திரப் பயணம் தொடங்கும் இடம் முன்னோக்கி நகர்வதாக அமைகிறது.

இப்படி நகர்ந்த தூரத்திற்கு ‘அயனாம்சம்’ என்பது பெயர். அதாவது சித்திரை 1ஆம் நாளில் மேட இராசித் தொடக்கப் புள்ளிக்கு வரவேண்டிய சூரியன் பங்குனி 7ஆம் நாளிலேயே வந்துவிடுகிறது. இராசி மண்டல நேரத்தின்படி

கி.பி. 285இல் 1996ஆம் ஆண்டு வரை இருபத்து மூன்று பாகை 48 கலை 21 விகலை (ராஷ்ட்ரீய பஞ்சாங்கம்) பின்னோக்கிச் சென்றிருப்பதாகக் கணக்கிடப்படுகிறது. வானவியலார் இந்த அயனாம்சத் தூரத்தை, இராசிச் சக்கரமாகிய வட்டத்தின் நடுமத்தியில் உள்ள 'ஸ்பைகா' என்னும் விண்மீனை இலக்காகக் கொண்டு கணிக்கின்றனர். இப்படி நகரும் 'அயனாம்சத்தூரம்' எவ்வளவு என்பது பற்றி வானவியலாரிடையே கருத்து வேறுபாடு உள்ளது.

அயனாம்சத்தூரம் கழிக்கப்படாத இராசி மண்டலம் 'சாயன இராசி மண்டலம்' எனப்படும். சாயன முறை தற்கால கோள் நிலையை உள்ளடக்கியது. சூரியன் அடிப்படையில் சொல்லப்படும் அயனாம்சத் தூரம் கழிக்கப்பட்ட இராசி மண்டலம், 'நிராயன இராசி மண்டலம்' எனப்படும். வானவியலார் கணித்த சாயன இராசி மண்டலத்திலிருந்து அயனாம்சத்தைக் கழித்தால் நிராயன இராசி மண்டலம் கிடைக்கும். நிராயன முறை சந்திரனின் சுழற்சியை - சந்திரன் உள்ள இடத்தைக் கொண்டு கணிக்கப்படுகிறது.

மேனாட்டு முறையில் இராசிகளின் தொடக்கம், மேட இராசி சைபர் டிகிரியிலிருந்து பின்னோக்கிச் செல்லும் சாயன முறை. இந்திய முறையில் சோதிடக் கணக்குக்காக இராசிகள் எப்போதும், சித்திரை மாதத்திலிருந்து மேடத்தில் தொடங்கும் நிராயன முறை. எனவே இந்தியர்க்கு மேடமாக இருக்கும் இராசியானது தற்போது மேல்நாட்டவருக்கு இடபமாகும். இந்தக் கணக்கீட்டு முறையின்படி பல நூற்றாண்டுகளுக்குப் பின் நமக்குத் தொடக்கப்புள்ளி மேடமாகவே இருக்க, அவர்களுக்கு மிதுனமாக மாறிவிடும். இம்மாற்றம் தொடர்ந்து நடைபெறக் கூடிய ஒன்று.

இந்திய முறைச் சோதிட வசதிக்காக மேட முதல் புள்ளியை நிலையானதாக எடுத்துக்கொண்டாலும் அயனாம் சத்தைக் கழித்து வானவியல் கணக்கீட்டைச் சரிசெய்து கொள்ள முடிகிறது. எனவே இராசி மண்டலத்தைப் பன்னிரண்டு பாகங்களாகப் பிரிப்பதில் இரண்டு முறையிலும் ஒற்றுமை காணப்படுகிறது. ஆனால் காலக்கட்டத்தில் அக்கட்டம் மாறும் முறை சாயன முறையில் மட்டுமே கையாளப்படுகின்றது. நிராயன முறையில் என்றுமே முதல்

வீடு எனக் கொள்ளப்படுகிறது. இரண்டு முறையிலும் இராசியின் அமைப்புநிலை வேறுபடினும் பாகை, நேரம் ஆகியவற்றைக் கழித்துக் கணக்கிடும் நிராயன முறை சாயன முறையில் கூறப்படும் பலன்களைப் போன்றே ஒத்துள்ளது.

## இராசி மண்டலம்

வானமண்டலம் வட்டமாக இருந்தாலும் பல்வேறு கணித வசதிகளின் பொருட்டுச் சாதகச் சக்கரமானது சதுரமாக இந்திய முறையில் வரையப் பெறுகின்றது; மேனாட்டு முறையில் வட்டமாகவே வரையப் பெறுகின்றது. தொடக்க காலத்தில் சோதிடம் முதலியன சுவடியில் எழுதப்பட்ட காரணத்தால் வட்ட அமைப்பை விடச் சதுர அமைப்பில் வரைவது எளிமையானதும் வசதியானதுமாக இருந்திருக்கக் கூடும்.

## இராசிச் சக்கரம்

இந்திய முறையில் பிறந்தநேரத்தின் அடிப்படையில் வரையப்பெறுகின்ற இராசிச்சக்கரமாகிய கோள்நிலைப் படம் ஒன்றே பிறந்தது முதல் இறுதி வரையிலும் பலன் சொல்லப் போதுமானது. மேனாட்டு முறையில் பிறந்த நாள் முதல் ஒவ்வொரு நாளிலும் உள்ள கோள் அமைப்பானது பிறந்த ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டின் பலனைச் செய்யும் என்று கொள்ளப்பெற்று, எத்தனை ஆண்டுகட்குப் பலன் தேவையோ அத்தனைக் கோள்நிலைப் படங்கள் வரையப்பெறுகின்றன. இதன்படி ஒரு சாதகரின் ஐம்பதாம் ஆண்டின் பலனை அறிவதற்குப் பிறந்த நாள் முதல் ஐம்பதாம் நாளின் கோள் அமைப்பினைப் பார்க்க வேண்டும். அதாவது சாதகர் பிறந்த 50ஆம் நாளில் ஒரு கோள் உச்சமடைந்தால் சாதகரின் 50ஆம் ஆண்டில் செல்வாக்குப் பெறுவார் என்றும் இம்முறையில் பலன் கூறப்படும்.

## நவாம்சச் சக்கரம்

ஒரு சாதகத்தைக் கணித்துப் பலன் கூற இராசி, பாவம், நவாம்ச நிலை ஆகியவற்றிற்கு இந்திய முறையில் முக்கியத்துவமளிக்கப்படுகிறது. மேலும் நவாம்ச சக்கர

மானது துவாதசாம்ச சக்கரம், திரிசாம்சசக்கரம் என மேலும் உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பலனறியும் முறையும் வழக்கத்திலுள்ளது. மேனாட்டு முறையில் இராசிகளுக்கும், பாவங்களுக்கும் மட்டுமே முக்கியத்துவ மளிக்கப்படுகிறது. நவாம்சச் சக்கரம் என்பது இல்லை.

## பஞ்சாங்கம்

இந்திய முறையில் 'வாக்கியப் பஞ்சாங்கம்', 'திருக்கணிதப் பஞ்சாங்கம்' என்ற இரண்டு பஞ்சாங்கங்கள் பயன்படுத்தப்படுவதால் இவற்றைக் கொண்டு கணிக்கும் சாதகங்களில் வேறுபாடுகள் தோன்றுகின்றன. மேனாட்டு முறையில் பயன்படுத்தப்படும் எபிமெரிசில் இத்தகைய வேறுபாடு தோன்ற வாய்ப்பு இல்லை. பஞ்சாங்கத்திலுள்ள வாரம் (கிழமை), நட்சத்திரம், திதி, கரணம், யோகம் என்னும் ஐந்திற்கும் இந்திய முறையில் பலன் கூறப்படுகிறது. ஆனால் மேனாட்டு முறையில் இன்ன கிழமைகளில் பிறந்தவர்களுக்கு இன்னின்ன பலன்கள் என்பது மட்டுமே கூறப்படுகின்றது.

## நாள் தொடக்கம்

ஒரு நாள் என்பது குறிப்பிட்ட ஊரில் சூரியன் உதிக்கும்நேரம் தொடங்கி அடுத்த சூரிய உதயம் வரை நீடிக்கும் கால வரையறை ஆகும். காலை 4.30 மணி முதல் 7.40 மணிவரை சூரியன் தோன்றும் நேரம் இடத்திற்கு இடம் மாறுபடக்கூடியது. இம்மாறுபாட்டைச் சரியாகக் கணக்கீடு செய்து சூரிய உதயம் சோதிடக்கணிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேல்நாட்டு முறையில் நள்ளிரவு 12 மணி நாள் தொடங்கும் நேரமாகும். இவ்விரு நேர முறைகளைக் கொண்டு சாதகங்கள் கணிக்கப்படும்பொழுது ஒருசில சாதகங்களில் கிழமை, தேதி மாறுபடுகின்றன. ஆயின் இது பலன் கூறுவதில் பாதிப்பை ஏற்படுத்து வதில்லை.

## விதி - மதி - கதி

இராசிச் சக்கரத்தில் இலக்னம் நின்ற இராசியிலிருந்து பலன் பார்ப்பது 'விதி' என்றும், சந்திரன் நின்ற

இராசியிலிருந்து பார்ப்பது 'மதி' என்றும், சூரியன் நின்ற இராசியிலிருந்து பார்ப்பது 'கதி' என்றும் சோதிடத்தில் கொள்ளப்படுகின்றன. இந்திய முறையிலுள்ள இம்மூன்றில் கதி என்பது பற்றிக் கூறப்படுகின்றதே ஒழிய தெளிவானதும் வெளிப்படையானதுமான விதி முறை கூறப்படவில்லை. மேனாட்டு முறையில் விதியுடன் 'கதி'யும் நன்முறையில் கையாளப்பட்டு 'மதி' ஒதுக்கப்படுகின்றது.

## கோள்கள்

இந்திய முறையில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது ஆகிய ஒன்பது கோள்கள். மேல்நாட்டு முறையில் இராகு, கேது தவிர்த்த ஏழு கோள்கள். இக்கோள்களுக்கு ஆட்சி வீடுகள் இரண்டு முறையிலும் பொதுவாக அமைகின்றன. இந்திய முறையில் குளிகன் அல்லது மாந்தி, காலன், எமகண்டன், அர்த்தப்பிரகரன் என்னும் குளிகாதியர் நால்வர். தூமன், வியத்பாதன், பரிவேடன், இந்திர தனுசு, தூமகேது என்னும் தூமாதியர் ஐவர் என்ற ஒன்பது உபகோள்களும் பலன் கூற எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மேல்நாட்டு முறையில் இவை சேர்க்கப்படுவதில்லை. ஆனால் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட 'யுரேனஸ்' நெப்டியூன், புளூட்டோ என்னும் கோள்கள் பலன் கூற எடுத்துக்கொள்ளப்படுகின்றன; யுரேனஸுக்குக் கும்பமும் நெப்டியூனுக்கு மீனமும் ஆட்சி வீடுகளாக அமைகின்றன. இந்து முறையில் இம்முறை பின்பற்றப்படவில்லை என்றாலும் சில கணிப்பொறிச் சாதகங்களில் இப்புதிய கோள்கள் சாதக இராசிக்கட்டத்தில் இடம் பெற்றிருக்கும். ஆயின் இவை பலன் கூற பெரும்பாலும் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. ஒருசில சோதிடர் பலன் கூறுவதற்கு இதனையும் எடுத்துக் கொள்கின்றனர். இந்து முறையில் சூரியன் தீய கோளாகவும், மேல்நாட்டு முறையில் நற்கோளாகவும் கொள்ளப்படுகிறது. இந்து முறையில் இராகு, கேது, உபகோள்களுக்குப் பலன்களும், மேற்கத்திய முறையில் யுரேனசு, நெப்டியூன், புளூட்டோ ஆகிய புதுக்கோள்களுக்குப் பலன்களும் கூறப்பெறுகின்றன.

## கோள்களின் பார்வை

அனைத்துக் கோள்களும் ஏழாம் வீட்டைப் பார்க்கின்றன. இதைத்தவிர சனி, தான் நின்ற வீட்டிலிருந்து ஏழாம் வீட்டோடு மூன்று, பத்தாம் வீடுகளையும் பார்க்கும். அதுபோல குரு, ஐந்து, ஒன்பதாம் வீடுகளையும்; செவ்வாய், நான்கு, எட்டாம் வீடுகளையும் கூடுதலாகத் தனிப்பார்வை பார்க்கக்கூடியன. குரு, சந்திரன், சுக்கிரன் போன்ற நற் கோள்களின் பார்வை நன்மை பயக்கும். சூரியன், சனி, செவ்வாய் போன்ற தீய கோள்களின் பார்வை தீமை பயக்கும் என்று இந்திய முறையில் பலனறியப்படுகிறது. மேலும் 7 ஆம் பார்வை (180) சுக்கிரன், குரு, வளர்பிறைச் சந்திரன், நன்மை தரும் புதன் ஆகிய நற்கோள்கள் பார்ப்பின் நற்பலன் தரும். மேனாட்டு முறையில் 7ஆம் பார்வை பொதுவாகத் தீய பார்வையாகவே கருதப்படுகிறது.

மேனாட்டு முறையில் கோள்களிடையேயுள்ள சரியான தூரத்தை அதாவது பாகையைக் கணித்துக்கொண்டு பலன் கூறப்படுகிறது. ஒரு கோளிற்கும் மற்றொரு கோளிற்கும் இடையேயுள்ள தூரம் இருபத்திரண்டரை பாகையால் மீதமின்றி (22, 45, 67) வகுபடுமேயானால் அதனால் ஏற்படும் பார்வை தீமையானதாகக் கூறப்படும். இதேபோல் பதினெட்டு, முப்பது பாகைகளால் மீதமின்றி வகுபடுவதனால் அப்பாகை நன்மையானதாகச் சொல்லப்படும். இந்திய முறையைப்போல் இங்குப் பார்வை இராசிக்கு இராசி கணக்கிடப்படுவதில்லை. அதற்குப் பதிலாக கோள்களுக்கிடையேயுள்ள சரியான தூரம் கணிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. எனவே கோள்களின் பார்வை மேற்கத்திய முறையில் பாகை தூர வித்தியாசத்தினாலும், இந்திய முறையில் இராசி எண்ணிக்கையினாலும் கணிக்கப் பெறுகின்றது.

## கோள்களின் வலிமை

சட்பலம், அட்டவர்க்கம், கோள்களின் கூட்டு முதலியவற்றைக் கொண்டு பலவிதக் கணிப்பிற்குப் பிறகு கோள்களின் வலிமை இந்திய முறையில் முடிவு செய்யப்படுகிறது. மேனாட்டுக் கணிப்புகள் மிக எளிதாக,

குறைவானதாக இருக்கின்றன. இம்முறையில் கோள்களுக் கிடையே ஏற்படும் உறுதியான பார்வையைக் கொண்டு கோளின் பலம் உறுதி செய்யப்பெறுகின்றது. இந்திய முறையில் ஒரு கோளினுடைய வலிமை ஆட்சி, உச்சம், பகை, நீச்சம், நட்பு, திரிகோணம், மூலத்திரிகோணம், கேந்திரம் என்ற அமைப்பைப் பொறுத்து உறுதி செய்யப்படுகிறது. அட்டவர்க்க முறை இந்துக்கள் மட்டும் அறிந்த முறையாயினும் இரட்டைக் குழந்தைகளுக்கும், சிறுசிறு கால வேறுபாட்டில் வெவ்வேறு தாய்மார்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கும் பலன் கூறும்போது மிகச் சரியான முறையில் பயனளிப்பதில்லை. ஒரு சாதகத்தின் வலிமையை முடிவு செய்ய 10ஆம் வீட்டின் அமைப்பு அதாவது பாவக முனையில் இடம்பெற்றுள்ள கோள்கள் மிகவும் முக்கியமானதாக அமைகிறது. இந்து முறையில் வலிமையை முடிவு செய்ய அனைத்துப் பாவத்திற்கும் முக்கியத்துவம் தரப்படுகின்றது. கோள்கள் வக்கிரகதி (பின்னோக்கி நகர்தல்) அடையும்போது அக்கோள்கள் வலிமை பெறுவதாக இந்திய முறையில் கொள்ளப்படுகிறது. மேனாநாட்டு முறையில் வலிமை இழப்பதாகக் கொள்ளப்படுகிறது. இந்திய முறையில் கணிக்கப்பெறும் ‘சட்வர்க்கம்’ மேனாட்டு முறையில் இல்லை; முக்குண வேளை, கோள் ஓரை, கரணம் இவற்றிற்குப் பலன் கூறப்படுவதில்லை.

## நட்சத்திரங்கள்

இந்திய முறையில் இருபத்தேழு நட்சத்திரங்களும் அவற்றிற்குரிய 108 நட்சத்திரப் பாதங்களும் உள்ளன. ஒவ்வொரு நட்சத்திரமும் குறிப்பிட்ட கோளினால் ஆளப்படுகிறது. இராசிச் சக்கரத்தில் இராகு கேதுவிற்குத் தனித்தனி வீடுகள் இல்லையெனினும் நட்சத்திரங்களுக்கு அதிபதியாக விளங்குகின்றன. மேட முதல் புள்ளியிலிருந்து 12 இராசிகளும் இருமுறையிலும் சரிசமம் ஆன பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இச்சரிசமப் பகுதி இந்து முறையில் நட்சத்திரம் என்றும், மேல்நாட்டு முறையில் நட்சத்திரக் கூட்டம் என்றும் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு

முறையிலும் 27 நட்சத்திரங்களும் வெவ்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்டு வருகின்றன. அசுவனி முதல் இரேவதி முடிய இந்து முறையிலும் பீட்டா ஏரிட்டீஸ் (Betqurieties) முதல் ஜீட்டாபிஸ்கம் (Zeeta Biscum) வரை மேனாட்டு முறையிலும் உள்ளன. கோள்கள் இந்த 27 நட்சத்திரம் அல்லது நட்சத்திரக் கூட்டம் ஒன்றில் அல்லது இன்னொன்றில் இருப்பதாகக் குறிக்கப்படுகிறது.

ஒருவர் பிறக்கும்போது சந்திரன் எந்த நட்சத்திரத்தில் இருக்கிறதோ அது அவரின் பிறந்த நட்சத்திரம். பொதுவாகப் பலரும் பிறந்த நட்சத்திரத்தைத் தெரிந்து வைத்திருப்பர். ஒருவருக்குச் சாதகக் குறிப்பு விவரங்கள் கிடைக்காதபோது இந்த நட்சத்திரத்தைக் கொண்டே பலன் அறியப்படுகின்றது. இந்த நட்சத்திரத்திற்குத் தசாபுத்தி, அந்தரம் என்றவாறு காலக் கணக்கீடு செய்து வாழ்நாள் முழுவதற்குமான பலன் அறியப்படுகிறது. இந்து முறையில் நட்சத்திரங்களுக்கு அளிக்கப்பெறும் இத்தகைய சிறப்பு மேனாட்டு முறையில் இல்லை; ஆண்டிற்கு 36 விண்மீன்கள் (Decan stars) ஒளி பெறுதல் என்னும் முறை உள்ளது.

## திதி

இந்து முறையிலுள்ள திதிக்குப் பதிலாக, மேனாட்டு முறையில் 'பார்ச்சுனா' (Fortuna) பயன்படுத்தப்படுகிறது. சந்திரனுக்கும் சூரியனுக்கும் ஏற்படுகின்ற தூரமே 'திதி'. இலக்னப் பாகையையும், சந்திரன் நின்ற பாகையையும் கூட்டிச் சூரியன் என்ற பாகையை அதிலிருந்து பெறுவது பார்ச்சுனா எனப்படுகிறது. இவ்விரண்டும் மொத்தத்தில் சூரியன் சந்திரனுடைய தூரங்களுக்குக்கிடையிலுள்ள தொடர்பைக் குறிப்பனவே. இவை சோதிடத்தில் காந்தப்புள்ளிகளின் அளவு எனக் கருதப்படுகின்றன. மேனாட்டு முறையில் பார்ச்சுனா பாவகப்பலன் கூறப் பயன்படுகிறது. இவ்வகையில் திதி இந்து முறையில் பயன்படுத்தப்படுவதில்லை. பாவகமுறையில் பார்ச்சுனாவிற்கு அயனாம்சத்தைக் கழித்து நிராயன முறைக்கு வந்து பயன்படுத்தும் சோதிடர் ஒருசிலர் இங்கு உள்ளனர்.

## தசாபுத்தி

சோதிடப்பலன் கூறுவதற்கு இந்திய முறையில் தசாபுத்திக்காலம் என்னும் முறை சிறப்பாகப் பின்பற்றப் படுகின்றது. ஒருவனுடைய வாழ்க்கையில் தனக்கோ, தன் உறவினர்களுக்கோ, மற்றவர்களுக்கோ பலன் கூறுவதற்கு இம்முறை பெரிதும் உதவுகிறது. இந்தத் தசாபுத்தி முறைகள் விம்சோத்தரி அல்லது மகாதசா, காலச்சக்கரதசா, அஷ்டோத்தரிதசா, நைசர்க்கிகத்தசா என்று பலவகையாக உள்ளன. இவற்றுள் விம்சோத்தரி பெருமளவிலும், காலச்சக்கரதசா மிகமிகக் குறைந்த அளவிலும் பயன்பாட்டிலுள்ளன. விம்சோத்தரிதசா முறையில் தசாபுத்தி - அந்தரம் - சூக்சுமம் - பிராணன் என்று ஒன்றினுள் ஒன்றாக உட்பிரிவுகள் அமைகின்றன. இவற்றின் உதவியுடன் ஆண்டு, மாதம், நாள் பிரித்துத் துல்லியமான முறையில் பலன் கூறப்பெறுகின்றது. மேனாட்டு முறையில் இன்ன ஆண்டில் இன்ன பலன் இருக்கும் என்று மேற்போக்கான முறையில் பலன் கூறப்படுகின்றது. அதாவது ஓராண்டின் பொதுப்பலன் கூறப்பெறுகிறது. அதில் தசாபுத்தி முறை இல்லை.

## கோச்சாரம்

கோள்கள் ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்கு இடம்பெயர்தல் 'கோச்சாரம்' எனப்படும். அவ்வப்போது நிகழும் கோச்சாரத்தின் பலனைக் கூறுவதற்கு இந்திய முறை நிராயன இராசி மண்டலத்தில் சந்திரன் நின்ற இராசியிலிருந்து கணிக்கின்றது. மேனாட்டு முறை சாயன இராசி மண்டலத்தில் சூரியன் நின்ற இராசியிலிருந்து கணிக்கின்றது. மேலும் கோள் மாற்ற வீடுகளைக் கையாளாமல் கோள் மாற்றம் அடைந்த இராசியின் படிக்கு இந்துக்கள் பலன் உரைக்கின்றனர். ஆனால் மேல்நாட்டவர் கோள் மாற்றத்திற்குப் பல கோள்களுடன் தொடர்புபட்ட இராசிகள், பாவங்கள் இரண்டையும் கணிக்கின்றர். அத்துடன் பாகைக்குரிய நிச்சயமான தூரத்தையும் கவனிக்கின்றனர்.

இந்திய முறையில் குறிப்பிட்ட ஓர் இராசியில் பிறந்த அனைவருக்கும் கோச்சாரப்பலன் பொதுப்பலனாக

அமையும். காட்டாக, 1995ஆம் ஆண்டு டிசம்பர் 7ஆம் தேதி குருப்பெயர்ச்சியினால் குரு விருச்சிக இராசியிலிருந்து தனுசு இராசிக்கு மாறியது. மேட இராசிக்காரர் அனைவருக்கும் குரு ஒன்பதாம் வீட்டிற்கு உரியதாகின்றது. ஓராண்டு கழித்துக் குரு பத்தாம் வீட்டிற்குச் செல்லும் வரை ஒன்பதாம் வீட்டிற்குரிய பலனே பொதுப்பலனாக அமையும்.

மேனாட்டு முறையில் கோச்சாரப் பலன் கூறும்போது ஒரே தேதியில், ஒரே மாதத்தில் பிறந்தவர்களுக்கு எந்த ஆண்டில் பிறந்திருந்தாலும் அனைவருக்கும் பலன் பொதுவாகக் கூறப்படுகின்றது. இந்திய முறையில் கோச்சாரப் பலனோடு மகாதசாக்குரிய பலன்களும் ஒப்பு நோக்கப்பட்டு பலன் சொல்லப்படுகின்றது. இராசி மண்டலத்தில் கோள்கள் இடம்பெயர்வதால் ஏற்படும் சாதகப் பலன்களைக் கூறுவதில் இரண்டு முறைகளும் ஒன்றுபட்டு நிற்கின்றன. ஆனால் இந்திய முறையில், பிறந்தபோது சந்திரன் நின்ற இராசி அடிப்படையாக அமைவது போல மேனாட்டு முறையில் தேதியும், மாதமும் அடிப்படையாக அமைகின்றன.

திருமணப் பொருத்தம், ருது சாதகம், திருமணம், சாந்தி முகூர்த்தம், புதுமனை புகுவிழா, இறுதிச்சடங்கு முதலியவற்றிற்கு நாள், நேரம் பார்த்தல் ஆகியவை இந்திய முறையிலுள்ள சிறப்புக் கூறுகள். மேனாட்டார் இவற்றிற்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. அன்று முதல் இன்று வரை குடும்ப வைத்தியர் இருப்பது போல சோதிடம் பார்ப்பதற்கும் குடும்பச் சோதிடர் இருக்கின்றனர். சோதிடம் கேட்கத் தொடங்குமுன் பழம், வெற்றிலை, பாக்கு, பூ, காணிக்கை முதலியன சோதிடருக்கு வைத்தல் இந்து முறையில் நடைமுறையில் இன்றும் உள்ளது. பரம்பரைச் சோதிடர் அல்லாத படித்து வேலையிலுள்ள பலரும், பிறரும் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பதால் இம்மரபு முறையில் மாற்றம் ஏற்பட்டுக் ‘கட்டணம்’ என்ற பெயரில் வாங்கும் நிலையும் தற்போது உருவாகியிருக்கிறது. மேல்நாட்டிலும் நம் நாட்டிலும் ‘ஆலோசனைக் கட்டணம்’ என்று சோதிடர் வசூலித்துக் கொள்வதும் உண்டு. இந்திய முறையில் மனைநூல், கூவநூல் (கிணறு எடுக்க) ஆகியவற்றில்

சோதிடமே உயிர்நாடியாக விளங்குகிறது. மேல்நாட்டு முறையில் அத்தகைய நூல்களுள், சோதிடக் குறிப்பும் அவற்றை நடைமுறையில் பின்பற்றுதலும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்திய இதழ்களில் வாரப்பலன், மாதப்பலன் கூறும்போது இரண்டு முறையிலும் கூறிவருகின்றனர். பலன்களை எளியமுறையில் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்பதற்காக மட்டுமல்லாமல், மக்கள் பெரிதும் இம்முறையால் ஈர்க்கப்படுகின்றனர் என்பதற்காகவும் பொதுப்பலன் கூறுவதற்குக் கூட மேனாட்டு முறையைப் புகுத்துவதில் நம் நாட்டினர் கவனம் செலுத்துகின்றனர்.

**பிரசன்ன சோதிடம் (Horary)**

பிறந்த நேரம், நாள், ஆண்டு தெரியாதவர்களுக்குப் பலன் கூறுகின்ற சோதிட முறைகளில் ஒன்று பிரசன்ன சோதிடம். மேனாட்டு முறையில் பிரசன்ன முறையில் பலனறிய விரும்பி, கேள்வி கேட்போர் கேள்வி கேட்ட நேரத்திற்கு இராசிச்சக்கரம், பாவகத் தொடக்க முனைகள் போடப்பட்டு, இலக்னம், கோள்கள் அது சமயம் எப்படி இருக்கின்றன எனப் பார்த்துப் பலன்கள் கூறப்படுகின்றன. இந்திய முறையில் கேள்வி கேட்கும் நேரத்தில் 1-12க்குள் அல்லது 1-108க்குள் அல்லது 1-249க்குள் கேள்வி கேட்போர் கூறும் ஓர் எண் கேள்வியுடன் சேர்த்து எடுத்துக் கொள்ளப் படுகிறது. சோதிடர் கணிக்க உட்காரும் நேரமும், எண்ணும் மேற்படி கணிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது (வினாக்களைச் சோதிடர் முன் கூறுதல், வினாவிற்குரியவரே கேட்டல், சோதிடம் கணிக்கும்போதுதான் கூறுதல் என்ற வரையறை இரண்டு முறையிலும் இல்லை.). மேனாட்டு முறையில் இரண்டு நபர்கள், ஒரே நேரத்தில் ஒரே கேள்வியைக் கேட்பின் பதில் ஒன்றாக அமையும். இந்திய முறையில் எண்ணும், சோதிடர் கணிக்கத் தொடங்கும் நேரமும் எடுத்துக் கொள்ளப் படுவதால் மேற்படி கேள்வி அமையினும் பதில் வெவ்வேறாக அமையும்.

## எண் சோதிடம்

பிறந்த தேதியின் கூட்டு எண், அல்லது தேதி, மாதம், ஆண்டு ஆகியவற்றின் கூட்டுஎண் (ஒற்றை எண்ணாகக் கூட்டுதல்) அல்லது பெயருக்குரிய (தலைப்பு எழுத்து உட்பட) எண்களின் கூட்டு எண் இவற்றின் அடிப்படையில் பலன் கூறுவது 'எண் சோதிடம்' எனப்படுகிறது. மேனாட்டு முறையில் கோள்களுக்கு எண்கள் - சூரியன் -1, 4, சந்திரன் -2,7, குரு - 3, புதன் -5, சுக்கிரன் - 6, சனி - 8, செவ்வாய் - 9 என்று கொடுக்கப்படுகின்றன. இம்முறை இந்திய முறையிலும் உள்ளது. ஆனால் இராகு கேதுவுக்கு முறையே 4,7 என்ற எண்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு முறைகளில் இந்திய முறையில் ஒன்பது எண்களுக்குரிய ஒன்பது கோள்கள் முறையாக அமைந்து விடுகின்றன. ஆனால் மேனாட்டு முறையில் 1, 4இல் பிறந்தவர்களுக்கு சூரியன் என்ற ஒரு கோளைக் கொண்டு பலன் பார்க்கின்றபோது அந்த இரு எண்ணையுடையவர்களுக்கும் ஒரே பலன் அமைகிறது. ஆனால் இந்திய முறையில் ஒன்றிற்குச் சூரியனுடைய பலனும், நான்கிற்கு இராகுவின் பலனும் என்ற முறையில் பலன் வேறுபடுகிறது. இம்முறையில் மேனாட்டினர் தற்போது மாற்றத்தை ஏற்படுத்தி, நான்காம் எண்ணிற்கு யூரேனசையும், ஏழாம் எண்ணிற்கு நெப்டியூனையும் கொண்டு பலன் கூறுகின்றனர்.

## கைரேகை

கைரேகைப் பலன் கூறுவது இரண்டு முறையிலும் ஏறக்குறைய ஒன்று போலவே இருக்கின்றது. ஆனால் ஒருவரின் இரண்டு கைகளையும் பார்த்தல் மேல்நாட்டு முறையாகிறது. இம்முறை இங்கு மிகக் குறைவாகவே இருக்கிறது. இந்து முறையில் பெரும்பாலானோர் ஆணிற்கு வலது கையையும், பெண்ணிற்கு இடது கையையும் பார்த்தலாக அமைகிறது.

## கிளி சோதிடம்

பழைய சுவடிகளில் இருபத்தேழு நட்சத்திரங்களுக் குரிய இருபத்தேழு கடவுளர் உருவங்கள் அல்லது பெயர்கள்

தனித்தனி ஏடுகளில் இடது ஓரம் இருக்கும். வலப் பக்கத்தில் அதற்குரிய பலன், பாடல் வடிவில் அல்லது உரையாடல் வடிவில் எழுதப்பட்டிருக்கும். இச்சுவடி யிலுள்ள கயிற்றை அல்லது குத்தூசியைச் சோதிடம் கேட்க வருவோர் சுவடிக்கட்டில் போட குறிப்பிட்ட ஏட்டைப் பிரித்துச் சோதிடர் பலனைச் சொல்லும் முறையும் சோதிட வகைகளில் ஒன்றாக முன்பு இருந்தது. அச்சு ஏற்பட்ட காலத்து ஒரு பக்கம் படமும் மறுபக்கம் பாடல் அல்லது உரையும் கொடுக்கப்பட்டு இச்சுவடிகள் பதிப்பிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து அதனைத் தனித்தனி ஏடுகளாக்கி அட்டையில் ஒட்டி அடுக்கி வைத்து, பழக்கி வைத்துள்ள கிளியை விட்டு ஓர் அட்டையை எடுக்கச் சொல்லிப்பலன் கூறப்பட்டது. இது பிற்காலத்தில் 'கிளி சோதிடம்' எனப்பட்டது. ஏசு, சாத்தான், சிவன் போன்ற படங்களும் பலனும் அடங்கிய கட்டில் இடக் கையால் குத்தூசி போட்டுப் பார்த்துப் பலன் கூறும் முறை மேனாடுகளில் வழக்காற்றில் உள்ளது. இது டோரா (Torat)சோதிடம் எனப்படுகிறது. இது இந்திய முறையோடு ஒத்துக் காணப்படுகிறது.

இந்திய முறையிலுள்ள அசையாத நிராயன முறையும், சதுரமான இராசிச் சக்கர அமைப்பும் பயன்பாடு நோக்கின்றி வசதி கருதி அமைந்துள்ளன. தசா புத்திப் பலன் கூறும் முறை இந்திய முறைக்குரியதொன்று என்பர். ஆனால் மேனாட்டு முறையில் தேதிகளுக்கு ஏற்ப ஆண்டுகளைக் கணக்கிடும் இராசிச் சக்கர முறையில் கூறப்படும் பலன்கள் ஓரளவு தசாபுத்திப் பலன்களை நிகர்த்ததே. இந்திய முறையில் சோதிடக் கணிப்பிற்கு மிகுதியான காலம் ஆகிறது. மேனாட்டு முறையில் எளிமையாகக் கால விரையமின்றிக் கணிப்புக் குறைத்துக் கொள்ளப்படுகிறது. இதேயடிப்படையில் மேலும் காலவிரையத்தைக் குறைக்க எண் சோதிட முறையை மிகுதியாக மேனாட்டினர் பயன்படுத்துகின்றனர்.

இந்திய முறையில் எந்த ஒரு சிறு செயலையும் மேற்கொள்ளக் காலமும், நேரமும் பார்த்தல், திருமணப் பொருத்தம் பார்த்தல், பூப்புச் சாதகம் அமைத்தல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. இவையனைத்தையுமே கால விரயம் கருதி மேனாட்டினர் மேற்கொள்வதில்லை. சோதிடக்

கலையை இந்தியர்களாகிய நாம் கையாளும் முறையும் நமது தேவையும், மன நிலைப் பயன் கருதி அமைவதால் பிறநாட்டவர் சோதிட முறையிலிருந்து இது மாறுபட்டதாக அமைகிறது.

கே.எஸ். கிருஷ்ணமூர்த்தி என்னும் சோதிடர் இந்திய மரபு முறையை அடிப்படையாகக் கொண்டு 'பாவகத் தொடக்க ஸ்புட முறை, பார்வை, கோள்களின் வக்கிரகதி' ஆகிய மேனாட்டு முறை மூன்றையும் உடன் சேர்த்துக்கொண்டு சோதிட முறையில் மாற்றம் செய்து பலன்களைக் கூறுவதில் வெற்றி கண்டார். இம்முறைக்கு, 'கிருஷ்ணமூர்த்தி பத்ததி முறை' என்று பெயர். இம்முறையைப் பயன்படுத்தும் சோதிடரும் உள்ளனர்.

வயதானவர்களின் சாதகங்கள் பலவற்றை இருமுறை யிலும் போட்டுப் பலன்களைச் சீர்தூக்கிப் பார்த்து நடந்து போன பலன்களில் பெரும்பான்மையை எந்த முறை தெளிவாகக் காட்டுகிறது என்பதையுணர்ந்து சரியான முறை என்று நியமனம் செய்யப்பட்டதைச் சோதிடர் பின்பற்றத்தக்க நிலையினை உருவாக்கலாம்.

ஆழ்ந்த கணிப்பையுடைய இந்திய முறையை அடிப்படையாக வைத்துக் கொண்டு, மேனாட்டு முறை களிலுள்ள எளிய சிறந்த முறைகளை இணைத்துச் சோதிடக் கணிப்பு செய்யும் முயற்சி விரிவடையும்போது, இந்திய முறைச் சோதிடம் மேலும் சிறப்படையும். சோதிடப் பகுதிகளுக்கு இடம் அளிக்காது இருந்த இந்து நாளிதழ் இந்திய மேனாட்டு முறைகளை விளக்கியும், இரண்டு முறைகளில் வாரப் பலன் கூறியும் வருவது உய்த் துணரத்தக்கது. சோதிடம் உலக நாடுகள் அனைத்திலும் தோற்றம் கொண்டுள்ள ஒரு துறையாக இருப்பதால் இதன் வரலாறு, வகைமுறை போல்வன தெளிவாக அறியப்படுதல் இன்றியமையாத ஒன்று. இருப்பினும் இவை பற்றி, ஓரளவு செய்திகள் இங்குச் சுட்டப்பெற்றமை, இவை பற்றிய முழுமை வெளிப் படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கும் பொருட்டே ஆம்.

★ ★ ★

## இயல் நான்கு

# சோதிடமும் அறிவியலும்

எங்கும் எதிலும் அறிவியல் கூறுகளே நிறைந்து காணப் பெறும் நிலையினது இன்றைய காலக்கட்டம். எந்தத் துறையையும் அறிவியல் கண்கொண்டு நோக்கும்பொழுது, புதிய பாதைகளை, திருப்பங்களைத் தவறாது காணமுடிகிறது. செழிப்பின்றி இருந்த பல துறைகள் அறிவியல் பார்வையினால் தழைக்கின்றன. அதன் விளைவுதான், மனித வாழ்வின் முன்னேற்றம். அறிவியலால் உருப்பெறும் எந்தக் கருவியும் செயலும் பயன்படுத்துவோரின் மன நிலைக்கேற்ப நன்மை தீமைகளை விளைவிக்கும்.

இம்முறையில், பயன்பாட்டிற்குப் பெரிதும் துணைபுரியும் அறிவியல் கூறுகள் இன்று, நேற்று தோன்றியவை அல்ல; மக்கள் தோன்றி, அவர்களிடத்து நம்பிக்கை உருப்பெற்ற காலத்தே தோற்றம் பெற்றுவிட்டன. இதை இதற்காகச் செய்கிறோம் என்று அறிவியல் பூர்வமாக உணர்த்தும் தெளிவு பெறாத மக்கள் அறிவுரை கூறுவது போல் சொல்லிச் சென்றனர். அவர்களின் அந்த நம்பிக்கைகளை வளர்ந்துவரும் இன்றைய அறிவியல் கருத்தோடு ஒப்பு நோக்கினால் அறிவியலின் தோற்றம் பற்றி அறிவதோடு நம்பிக்கை, அறிவியலோடு இணைந்துள்ள முறையையும் அறியமுடியும்.

ஒப்புநோக்கிப் பகுத்து ஆய்ந்து காணும் இயல்பு இல்லாததால், இன்றைய அவசர நிலையில் எதையும் எளிதில் செய்து முடிக்கும் துடிப்புக் கொள்கிறோம். பெரியோர்களின் மரபுவழிச் செயல்களை உணர்ந்து தெளிவு பெற மறுக்கின்றோம்; மறக்கிறோம். அவற்றை மூடநம்பிக்கைகள் என்று கூறித் தவறான பாதையை வகுத்துக்கொண்டு வழி தெரியாமல் தவிக்கவும் செய்கின்றோம்.

"இன்றைய மனிதன் தன்னையும் நம்புவதில்லை, பிறரையும் நம்புவதில்லை, கடவுளையும் நம்புவதில்லை. பகுத்தறிவு, பகுத்தறிவு என்று கூறிக்கொண்டு சந்தேகக் குட்டையில் தாழ்ந்துவிட்டான்"[1] என்ற கூற்றையும் சிந்தித்துப் பார்த்தல் நலம்மிக்கது.

மனிதனுடைய வாழ்க்கை முறைகள் அனைத்திலும் நேரம் (காலம்) பெரும்பங்கு வகிக்கின்றது. துல்லியமான நேரத்திற்கிணங்க வாழ்க்கை முறை ஒழுங்குகளின் மூலம் மனிதன் தன்னுடைய சமூகக் கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள முடிகிறது. இயற்பியல் அறிஞர்கள் நேரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தவராக உள்ளனர். விவசாயி விதைக்க வேண்டிய சரியான நேரத்தையும், அறுவடை செய்ய வேண்டிய சரியான நேரத்தையும் அறிந்திருத்தல் இன்றியமையாதது. இவ்வாறு மனிதனுடைய பல்வேறு வாழ்க்கை நிகழ்வுகளில் செயலாற்றும் நேரத்தின் அடிப்படையில்தான் சோதிடமும் ஆக்கப்பட்டுள்ளது. நேரத்தின் அடிப்படையிலான இந்தச் சோதிடம் அறிவியல் அடிப்படையில் ஆனதா எனக் காண்பது இன்றைய நிலையில் தேவையான ஒன்று.

மனிதனின் பல்வேறு நம்பிக்கைகளிலும் அறிவியல் கூறுகள் இழையோடுவதைக் காணும்போது வானியலோடும், கணக்கிடு முறைகளோடும் தொடர்புபடும் சோதிடத்தில் அறிவியல் கூறுகள் மிகுதியாக இருத்தல் கூடும் என்பது மறுத்தற்கியலா ஒன்று. கோள்கள், நட்சத்திரம், இராசி, அமாவாசை, பௌர்ணமி, கிரகணங்கள், நேரக் கணக்கீடு, கணிதம், அறிவியல் விதிகள் முதலான கூறுகளை அடிப்படையாகக் கொண்டு சோதிடம் அறிவியலோடு எங்ஙனம் ஒன்றிணைந்து செயல்படுகிறது என்பதனை அறிதல் இயலும். அறிவியல் அறிஞரும், பிறரும் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து நோக்கும்போதும் எங்ஙனம் அறிவியல் அடிப்படையில் சோதிடம் செயல்படுகிறது என்றுணர இயலும்.

1. நாட்டுப்புறப் பாடலும் பண்பாடும், ப.61.

சோதிடக்கலை அறிவியலாகிய வானியலோடு தொடர்புடையது. வானியல் ஓர் அறிவியல். சோதிடவியலும் அறிவியலே. எனினும் சோதிடவியல் அறிவியலுக்கு அப்பாற்பட்ட ஞான இயலாக - தத்துவ இயலாக - உளவியலாகக் கொள்ளத்தக்கது. சுழன்று கொண்டே பூமிக்கருகில் வரும் ஒவ்வொரு கோளுக்கும் ஒரு வேகம் உண்டு. இந்த வேகத்தை ஒட்டி இன்னின்ன கோள்கள் வானமண்டலத்தில் உள்ள இராசிச் சக்கரத்திற்கு நேராக உலவிக்கொண்டிருக்கும் கணக்கு 'வானியல்'. அறிவியலார் தோன்றி நட்சத்திரங்களை வானவியல் அடிப்படையில் பகுத்துணர்ந்து, 'வான சாஸ்திரமாக்கினர்'. மகரிஷிகள் தோன்றி வானமண்டலத்தையும் பூமண்டலத்தையும் தொகுத்துணர்ந்து சோதிடம் ஆக்கினர்.

1. நட்சத்திரங்களைப் பற்றிய அறிவை இரண்டாகப் பிரித்துக் காணும்போது வானியல் என்பது வான் உலகிலுள்ள பொருட்கள் தொடர்பானது.சோதிடவியல் விண்ணுலகப் பொருட்கள், மனிதன், விலங்கு மற்றும் தாவரங்களின் மீதான செல்வாக்கை அறிந்துகொள்வது.

2. கோள்களின் இடம், தூரம், சுழற்சி, தட்பவெப்பம் போன்ற இயற்கைத் தன்மைகளை வானியல் தெளிவாக விளக்குகின்றது. கோள்கள் மனித வாழ்க்கையில் ஏற்படுத்து கின்ற மாற்றங்கள், ஏற்றத்தாழ்வுகள், சிக்கல்கள், பிரச்சனைகள், யோகங்கள் போன்ற பலன்களையும் பரிகாரங்களையும் சோதிடவியல் விளக்குகின்றது.

3. வானியல் அறிஞர் தங்கள் ஆய்வால் கோள்களின் அசைவைத் துல்லியமாக உணர்கின்றனர். சோதிடவியல் அறிஞர் அவ்வசைவுகளின் பலன்களைத் துல்லியமாகக் கூறுகின்றனர்.

4. வானியலார் அறிவியல் அடிப்படையில் கோள்களின் சுழற்சி விதிகளைக் கூறுகின்றனர். சோதிடவியலார் இறையருள், யோகம் ஆகியவற்றின் அடிப்படையில் கோள்களினால் ஏற்படும் சுழற்சியின் விளைவுகளைக் கூறுகின்றனர்.

5. கோள்களையும் நட்சத்திரங்களையும் இயற்கையின் படைப்பு என்றும், அவற்றின் இயற்கையான சுழற்சியிலிருந்து விலக்கவோ, மாற்றவோ முடியாது என்றும் வானியல் கூறுகிறது. கோள்களும் நட்சத்திரங்களும் இறைவனின் படைப்பு, அவற்றின் பலன்களை அவற்றின் இயற்கையான போக்கிலிருந்து மாற்றவும் விலக்கவும் முடியாது என்று சோதிடவியல் தெளிவாக உணர்த்துகிறது.

17ஆம் நூற்றாண்டில் 'கெப்ளர்' என்பவர் வானியல் கருத்துகளில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தினார். முன்னோர் கருத்தை மறுத்து, சூரியனைப் பூமியும் பிற கோள்களும் சுற்றுகின்றன என்ற உண்மையை வெளிப்படுத்தினார். அதன்பின் நடந்த வானியல் ஆராய்ச்சிகளின் விளைவாக 1969 ஜூலை 21ஆம் நாள் 'ஆம்ஸ்ட்ராங்' குழுவினர் சந்திரனில் இறங்கி வந்தனர். இன்றுவரை வானியல் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**கோள்கள்**

கோள் எனும் சொல்லுக்கு வடமொழியில் 'கிரஹம்' என்று பெயர். சோதிடவியலில் ஒவ்வொரு கோளும் நிறம், குணம், ஆட்சிவீடு முதலிய தன்மைகளையுடையன. சோதிடவியலில் சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி, இராகு, கேது என்ற ஒன்பது கோள்கள் கூறப்படுகின்றன. புதனும், வெள்ளியும் அகக்கோள்களாக அதாவது மனிதர்களின் அகவாழ்வை குறிப்பிடக்கூடிய கோள்களாகச் சுட்டப்பெறுகின்றன. இதைப்போலவே, வானவியலும் சூரியனைச் சுற்றி ஒன்பது கோள்கள் இயங்குவதைக் கூறுகிறது. அவை புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ என்பவையாகும். இவற்றில், புதனும் வெள்ளியும் பூமியின் இயங்கு பாதைக்கு உட்புறம் தங்கள் இயங்கு பாதைகளைப் பெற்றுள்ளன. இவ்விரு கோள்களை 'உட்கோள்கள்' (Inner Planets or Interior Planets) எனக் குறிப்பிடுகிறோம். பூமிக்கு வெளியில் தங்கள் இயக்கப் பாதைகளைக் கொண்ட மற்ற கோள்களைப் புறக் கோள்கள் (Outer planets or Superior Planets) எனக் குறிப்பிடுகின்றோம்.[2]

---

2. வானவியல், ப.390.

இன்ன நேரத்தில் வானமண்டலத்தில் கற்பிக்கப்பட்டுள்ள இராசி எல்லையின் கீழ் இன்ன இடத்தில் ஒரு கோள் உலவிக்கொண்டேயிருக்கும் என்பதற்கான கணக்கை வானியல் கூறுகிறது. குறிப்பிட்ட ஒரு கோள் இன்ன இடத்தில் நிற்கிறது என்ற கணக்கைச் சோதிடம் கூறுகிறது.

## சூரியன்

ஒன்பது கோள்களுள் முதன்மையானது சூரியன். சூரியன் பூமியிலிருந்து சுமார் 9,28,30,000 மைல்கள் தூரத்தில் உள்ளது. இதன் குறுக்களவு சுமார் 8,70,000 மைல்கள். இதன் கன அளவு பூமியைப் போல 18,00,000 மடங்குகளாகும். சூரியன் வான மண்டலத்தில் தன்னைத் தானே சுற்றி வருகின்றது. சூரியன் தன்னைத் தானே சுற்றி வருவதற்குச் சுமார் ஒரு மாத காலமாகிறது. 12 இராசிகளையும் 365 நாள், 15 நாழிகை, 32 வினாடிகளில் சுற்றி வருகிறது.

## சந்திரன்

இக்கோள் பூமியிலிருந்து 27,38,000 மைல்களுக்கு அப்பாலிருந்து பூமியைச் சுற்றி வருகிறது. இதன் சுற்றளவு 6,800 மைல்கள். குறுக்களவு சுமார் 2,162 மைல்கள். சந்திரன் 27 நாட்கள் 8 மணியளவில் தன்னைத் தானே சுற்றி வரும். இது பூமியை 29 நாட்கள் 12 மணி, 441 விநாடிகளில் சுற்றி வரும். சந்திரமண்டலம் சூரிய மண்டலத்திற்குக் கீழே உள்ளதென்ற சோதிட நூலார் கொள்கையினை உ.வே.சாமிநாதையர் சீவகசிந்தாமணியின் உரையில் (532) எடுத்துக் காட்டுவர்.

## செவ்வாய்

சூரியனுக்கு நான்காவது வட்டத்தில் சுமார் 14,10,00,000 மைல்களுக்கப்பால் இருந்து கொண்டு சூரியனைச் சுற்றி வருகிறது. 24 மணி, 37 நிமிடம் 23 விநாடிகளில் தன்னைத்தானே சுற்றி வரும். சூரியனை 6879 நாட்களில் சுற்றி வரும். இக்கோள்களின் குறுக்களவு 4,230 மைல்கள். ஆண்களுக்கும், பெண்களுக்கும் வாழ்க்கையில்

சோதனையை உண்டாக்குகின்ற கோளாகச் சோதிடவியலில் செவ்வாய் கருதப்படுகிறது. பெண்கள் பூப்படையும் செயல் இராசி அல்லது இலக்னத்துடன் தொடர்பு ஏற்படும் நேரத்திலும், சந்திரன் இலக்னத்திற்கு 1,2,4,5,7,8,9,12 ஆகிய இடங்களில் வரும் போது செவ்வாயுடனோ, இலக்னத்துடனோ சேர்க்கை அல்லது பார்வை மூலம் தொடர்பு கொள்ளும்போதும் நிகழ்கிறது. இது பூப்படையும் நிகழ்விற்கான சோதிட விதிகளுள் ஒன்றாக அமைகிறது. போர்க்கடவுளான முருகன் இதன் அதிபதியாக விளங்கு கிறான். 'பூமிக்கு மிக அருகில் உள்ள செவ்வாய்க் கோளைப் போர்க்கடவுள்' [3] என்று வானவியலார் சுட்டுகின்றனர்.

## புதன்

சூரியனை அடுத்துச் சுற்றி வரும் கோள் புதன். சூரியனுக்கு 60,00,000 மைல்களுக்கப்பால் இருந்து 24 மணிநேரத்தில் தன்னைத்தானே சுற்றி வரும்; 88 நாட்களில் சூரியனைச் சுற்றி வரும். இதன் சுற்றளவு சுமார் 9,500 மைல்கள்; குறுக்களவு சுமார் 3000 மைல்கள்; பூமியிலிருந்து 5,70,00,000 மைல்கள் தூரத்தில் உள்ளது. சோதிடவியலில் வித்தைக்கு அதிபதியான புதன், இராசிக்கட்டத்தில், சூரியனுடன் சேர்ந்தோ அல்லது சூரியனுக்கு முன்னோ, பின்னோ தான் இருக்கும். வானவியலில் புதன் சூரியக் குடும்பத்தில் சூரியனுக்கு மிக அண்மையில் உள்ள கோளாகும். இது மற்ற கோள்களைவிடச் சூரியனை மிக வேகமாகச் சுற்றி வரும் கோளாகும். அதனால் இக்கோளை 'இறைத் தூதன்' (Messenger of God)[4] என்று சிறப்புப் பெயரால் அழைக்கின்றனர்.

## வியாழன்

இக்கோள் சூரியனுக்கு ஐந்தாவது வட்டத்தில் உள்ளது. சூரியனுக்குச் சுமார் 68,00,00,030 மைல் தூரத்திற்கப்பால் இருந்துகொண்டு பன்னிரெண்டு ஆண்டுகளில் சூரியனைச் சுற்றி வருகிறது. இது தன்னைத்தானே சுற்றிவர 9 மணி 55

---

3. மேலது 4. மேற்படி, ப.391

நிமிடங்கள். இதன் குறுக்களவு சுமார் 56,000 மைல்கள். சோதிடவியலில், இக்கோள் மிகப்பெரியதாகக் கருதப்படுகிறது. இதனைக் 'குருபகவான்' என்றே குறிப்பிடுகின்றனர். இதனுடைய பார்வை பட்டால் பிற கோள்கள் தம் சக்தியில் குறைகின்றன. கோள்களில் மிகப் பெரிய கோளாக வானவியலில் சுட்டப்படுவதும் இதுவே. இது பன்னிரண்டு துணைக்கோள்களைக் கொண்டு இயங்குகிறது. வியாழனுக்கு இழுப்பு ஆற்றல் அதிகம்.

**சுக்கிரன்**

இக்கோள் சூரியனுக்கு இரண்டாவது வட்டத்தில் சுற்றி வருகிறது. சூரியனுக்குச் சுமார் 6,70,00,000 மைல்களுக்கு அப்பால் உள்ளது. இக்கோள் 23½ மணி நேரத்தில் தன்னைத்தானே ஒருமுறை சுற்றி வருகிறது. இது சூரியனை 225 நாட்களில் சுற்றி வருகிறது. இதன் சுற்றளவு சுமார் 23,200 மைல்கள். குறுக்களவு சுமார் 7,700 மைல்கள். வாழ்க்கைக்கு ஒளி தரும் மனைவியைக் குறிக்க களஸ்திரகாரகனாகச் சுக்கிரன் சோதிடவியலில் சுட்டப்படுகிறது. வானவியலில் வெள்ளியே மற்ற எல்லாக் கோள்களையும் விட ஒளியுடையதாகக் கூறப்படுகிறது. இதனை 'விடிவெள்ளி' என்றும் கூறுவர்.

**சனி**

இக்கோள் சூரியனுக்கு ஆறாவது வட்டத்தில் உள்ளது. சூரியனுக்கு 88,60,00,000 மைல் தூரத்திலிருந்து 29½ ஆண்டில் சூரியனைச் சுற்றி வருகிறது. இது தன்னைத்தானே 10 மணி 14 நிமிடம் 24 வினாடிகளில் சுற்றி வரும். இதன் குறுக்களவு சுமார் 75,000 மைல்கள். சோதிடவியலில் சனி பகவான் எனப் பெயர் பெறுகின்ற இது தீயவர்களுக்குத் தலைவனாகக் கருதப்படுகின்றது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் வேகத்தைக் குறைக்கக் கூடிய கட்டுப்பாட்டு வளையத்தை (Speed Braker) இதுவே உருவாக்குகின்றது. இதனுடைய முழுமையான குணம் இதுவரை முழுமையாகச் சோதிட அறிஞர்களால் அறியப்படவில்லை.

இந்தக் கோளை ஞாயிற்றுக் குடும்பத்தின் அணிகலன் என்கின்றனர். இதற்கு ஒன்பது துணைக் கோள்கள் உள்ளன. வானவியல் வல்லுநர்கள் இக்கோளைச் சுற்றி தங்கமயமான ஒளி வட்டங்களைக் கண்டுபிடித்துள்ளனர். எனினும் இவ்வளையங்கள் எவ்வாறு ஏற்பட்டன? இதன் தன்மைகள் என்ன என்பன இதுவரை நிபுணர்களால்அறிய முடியாத புதிராகவே உள்ளன. அமெரிக்க விண்வெளிக் கலம் சனியின் எல்லையை நெருங்கியபோது கருநீலக் கதிர்கள் தென்பட்டன. சனி - கரிய நிறம். செவ்வாயை நெருங்கிய போது இடி மின்னல் தாக்கிற்று. மின்னலின் சிவந்த நிறம் செவ்வாய். சனி, செவ்வாய் சூரியனுக்கு மிக அருகிலுள்ள கோள்கள் என வானியலார் கூறியுள்ளது சோதிட முறையிலும் உள்ளது. பூமியிலிருந்து மிகவும் விலகி யிருப்பது சனிக்கோள். குரு, செவ்வாய், சூரியன், சுக்கிரன், புதன், சந்திரன் இவை முறையே ஒன்றன்பின் ஒன்றாய் விலகி இருப்பவை. பூமியை விட்டுத் தொலைவில் செல்லச் செல்ல கோள்களின் வேகம் குறைகிறது.

## இராகு கேது

இவை சூரியனுக்கு 13,000 விஸ்தார யோசனையுள்ள மண்டலத்தில் உள்ளன. இவை சூரியனை ஒரு முறை அபிரதட்சணமாகச் சுற்றிவரப் பதினெட்டரை ஆண்டுகளாகும். இராகு கரும்பாம்பு உருவமுடையது. கேது செம்பாம்பு உருவமுடையது. சோதிடவியலில் இராகு, கேது ஆகிய இவையிரண்டும் பிறவற்றிற்கு அடங்காத சர்வாதிகாரிகளாகத் திகழ்கின்றன. இவற்றுள் ஒன்று நின்ற இடத்திலிருந்து, ஏழாவது இடத்திலேயே மற்றொன்று எப்போதும் இருக்கிறது. இராகு, கேது என்பன உண்மையில் கோள்கள் அல்ல. சூரியனைச் சுற்றியமைந்துள்ள பூமியின் பாதையில், பூமியைச் சுற்றியமைந்துள்ள சந்திரனுடைய பாதை குறுக்கிடும் புள்ளிகள் (Nods of Moon's Orbit) கோள் சந்தி எனப்படுகின்றன. இவற்றுள் ஏறு கோள் சந்தியை (Asending nod) இராகு என்றும், இறங்கு கோள் சந்தியைக் (desending nod) கேது என்றும் சோதிடவியல் கூறுகிறது. இராகு கேதுக்களுக்குப் பௌர்ணமி, அமாவாசை மற்றும் கிரகணக் காலங்களில் வலிமை அதிகமாக இருக்கும்.

## யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ (நிருதி, வருணன், குபேரன்)

இவை சூரியனிலிருந்து மிக நீண்ட தூரத்திலுள்ளன. யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகியன முறையே 1781, 1846, 1930இல் கண்டுபிடிக்கப்பட்டன. இவை மேல்நாட்டுச் சோதிடத்தில் பலன் கூற எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

பொதுவாக வானவியலிலும், சோதிடவியலிலும் கோள்கள் ஒன்பது என்று கூறப்பட்டாலும், எண்ணிக்கைதான் ஒன்றாக இருக்கின்றதே தவிர, சில கோள்கள் மாறியமைந் திருக்கின்றன. செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஐந்து கோள்களும் இருதுறைகளிலும் ஒத்துள்ளன. பூமி, யுரேனஸ், நெப்டியூன், புளூட்டோ ஆகியன வானவியலில் மட்டும் கோள்களாகச் சுட்டப்படுகின்றன. மேல்நாட்டினரும், நம்நாட்டில் சிலரும் இதனைச் சோதிடக் கணக்கிற்கு எடுத்துக் கொள்கின்றனர். சூரியன், சந்திரன், இராகு, கேது ஆகியன சோதிடவியலில் மட்டும் கோள்களாகச் சுட்டப்படுகின்றன.

## நட்சத்திரங்கள்

சோதிடவியலில் மொத்த நட்சத்திரங்கள் இருபத்தி யெட்டு. அவற்றுள் 'அபிசித்து' என்னும் நட்சத்திரம் தற்போது வழக்கில் இல்லை. எனவே இருபத்தியேழு நட்சத்திரங்களைக் கொண்டுதான் பலன்கள் கூறப்படுகின்றன. செயல்கள் தொடங்க நாள் குறிப்பதில் நட்சத்திரங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

மொத்தம் 360 பாகைகள் கொண்ட இராசி மண்டலத்தில் ஒவ்வொரு நட்சத்திரமும் 13 பாகை 20 கலைகள் கொண்டது. ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் நான்கு பாதங்கள் எனக் கொண்டு 27 நட்சத்திரங்களுக்கும் 108 பாதங்கள் கணக்கிட்டுள்ளனர். இராசிகள் மொத்தம் பன்னிரெண்டு என்பதால் இந்த இருபத்தியேழு நட்சத்திரங்களையும் ஒவ்வோர் இராசிக்கும் பிரிக்கும் பொழுது ஒவ்வோர் இராசிக்கும் ஒன்பது பாதங்கள் வரும் (2¼ நட்சத்திரங்கள்

கொண்டது ஓர் இராசி). ஒவ்வொரு நட்சத்திரமும் உருவ அமைப்பு, இருப்பிடம், குணம், நிறம் முதலிய தன்மைகளைப் பெற்றுள்ளன.

இருபத்தியெட்டாவது நட்சத்திரம் அபிசித்து வானிலிருந்து மறைந்துவிட்டது, விழுந்துவிட்டது என்பர். இதிலிருந்து சோதிடர் என்றோ எழுதி வைத்த ஒன்றைக் கூறிக்கொண்டிராமல் வானவியலையும் கவனிக்கின்றனர் என்பது தெரிகிறது.

## இராசிகள்

சோதிடவியலில் கோள்கள், நாள்களுக்கு அடுத்தாற்போல் முக்கியத்துவம் வாய்ந்தவை இராசிகள். வானமண்டலம் 360 பாகைகள் கொண்ட ஒரு வட்டமாகக் கருதப்படுகிறது. இதனைப் பன்னிரண்டு இராசிகளாகப் பிரிக்க ஒவ்வோர் இராசியும் 30 பாகைகள் கொண்டதாக ஆகிறது. இந்த இராசிகள் ஒவ்வொன்றும் உருவம், நிறம், அங்கம், வளமை, பார்வை முதலிய தன்மைகளைக் கொண்டுள்ளன.

ஒவ்வோர் இராசியும் 30 பாகை வீதம் 12 இராசிகளும் 360 பாகையாக உள்ளன. மேடம் முதலாக 12 இராசிகளும் முறையே ஆடு, காளை, இரண்டு குழந்தைகள், நண்டு, சிங்கம், கன்னிப்பெண், தராசு, தேள், வில், சுறாமீன், குடம், இரண்டு மீன்கள் என்ற பெயர்களை அவற்றின் தோற்றத்தைக்கொண்டு பெறுகின்றன. 12 இராசிகளும் ஏழு கோள்களுக்கு ஆட்சி வீடுகளாகின்றன. சூரியன் மேட இராசியில் இருக்கும்போது அந்த மாதம் மேடமாதம் எனப்படும். இம்மாதத்தைச் சித்திரை என்பர். இம்முறையில் வைகாசி இடபமாதம் எனத் தொடர்ந்து பங்குனி மீன மாதத்தில் முடியும். சூரியன் ஒவ்வோர் இராசியிலும் ஒரு மாத காலம் தங்கும்போது அந்தந்த இராசிகளின் பெயராலும் பெயர்பெறுகின்றன.

கோள்கள் ஒரு குறிப்பிட்ட அகல வான மண்டலப் பட்டைக்குள் இடம் பெயர்ந்து சுழல்கின்றன.கோள்கள் இப்பட்டை எல்லையை மையக் கோட்டிலிருந்து இருபக்கமும் தாண்டிச் செல்வதில்லை. இவ்வகைச் சுழற்சி எல்லாக் கோள்களுக்கும் பொருந்தும். இவ்வாறு சூரியன்

மேற்கொள்ளும் சுழற்சிக்கோடு 'எக்லிப்டிக்' (Ecliptic) எனப்படுகிறது. இந்தக் கோட்டிற்கு இருபக்கமும் 9 பாகை அளவிற்கு 'வான மண்டலப்பட்டை' ஏற்படுகிறது. இந்தப் பட்டை சோதிடத்தில் இராசி மண்டலம் (Zodiac) எனப்படுகிறது.

இதுகாறும் 12 இராசிகளே இராசி மண்டலத்தில் இருப்பதாகக் கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் 13ஆவது இராசி ஒன்றும், இராசி மண்டலத்தில் இருப்பதை வானியல் அறிஞர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இராசி மண்டலத்தில் 'ஓபியச்சுஸ்' என்னும் இந்த 13ஆவது இராசி விருச்சிகத்திற்கும், தனுசிற்கும் இடையில் காணப்படுகிறது. ஒருசில மேனாட்டுச் சோதிடர் தங்கள் கணக்கீட்டில் 'ஓபியச்சுஸ்' இராசியைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். இவர்களால் இப்பதிமூன்றாவது இராசிக்கு எல்லாப் பலன்களும் பாகுபாடுகளும் கூறப்பட்டுள்ளன. எனவே நாளடைவில் சோதிடர் பலரும் இதனைப் பயன்படுத்த இயலும். எனவே வானியியலில் ஏற்படும் மாற்றங்களைச் சோதிடம் ஏற்கின்றது.[5] பூமியின் மேற்பரப்பு (பெரிய இந்தியா - ஆஸ்திரேலியப் பகுதி உடைந்தபிறகு) 13 பெரிய பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. வானத்திலும் இதேபோன்று 13 இராசி மண்டலம் பலகாலமாக இருந்திருக்கலாம்.

## கெப்ளர் விதி

வானியல் அறிஞர் கெப்ளரின் கோள் இயக்க விதிகள் மூன்று.

## முதல் விதி

ஒவ்வொரு கோளும் கதிரவனை வட்டமாகச் சுற்றாமல், ஒரு குவியமாகக் கொண்ட நீள்வட்டப் பாதையின் ஒழுங்கில் சுற்றி இயங்குகிறது.

## இரண்டாம் விதி

ஒவ்வொரு கோளும் கதிரவனைச் சுற்றி வரும் பாதையில் கதிரவனையும், அக்கோளையும் சேர்க்கும் நேர்க்கோட்டில் சமமான நேரங்களில் சம பரப்புகளைக் கடக்கிறது.

5. Researching the Brigu Samhita, Star Teller, P.25 Nov.1995

அதாவது வேகமாய்ச் சுழன்றும், சற்று வேகம் குறைந்தும், நேரத்திற்குத் தக்கபடி சூரியனை நெருங்கியும், விலகியும் சுழலும் போது பரப்பு வேகத்தை ஒரே சீராக வைத்துக் கொள்வதால் சூரியனில் விழாமல் பாதுகாத்துக் கொள்கிறது.

## மூன்றாம் விதி

கோள்கள் கதிரவனைச் சுற்றி வரும்பொழுது ஏற்படும் கால அளவுகளின் இருபடிகளும் (மடங்குகள்), அக்கோள்களின் சராசரி தூரங்களின் மதிப்பின் மூப்படிகளும் ஒரே நேர் விகிதத்தில் உள்ளன. கதிரவன் தன்னை நோக்கி எக்கோளையும் ஈர்க்கும் விசையின் விகிதமானது ஒரு மாறிலியாக உள்ளது என்பதாகும்.

இரண்டாம் விதிப்படி சோதிடத்திலும், கோள்களானது, மற்ற கோள்களைத் தன்னுடைய கிடைமட்ட நேர்பார்வை யான ஏழாம் இடத்துப் பார்வையே கோள்களின் அதிசக்தி பார்வையாகக் கருதப்படுகிறது. ஆகவேதான் எல்லாக் கோள்களுக்கும் பொதுப்படையான ஏழாம் பார்வை சக்தி வாய்ந்த பார்வையாகக் கருதப்படுகிறது. சாதகக் கட்டத்தில் ஏழாம் பார்வை என்பது நேர்கோட்டுப் பார்வையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நியூட்டனின் பிரபஞ்ச ஈர்ப்பு விதி

நியூட்டனின் இவ்விதியைக் கொண்டு கோள்களின் குவிமையப் பிறழ்வு விகிதம் கணக்கிட்டு ஒவ்வொரு கோள்களுக்கும் எண்கள் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வெண்ணைப் பொருத்துப் பூமியின் பாதை அமைவதால் பூமியில் தட்பவெப்பநிலைகளும் பருவகாலங் களும் ஏற்பட்டு உயிரினங்களின் இயக்கத்தைப் பாதிக்கச் செய்கிறது. இதனை ஒட்டியே சோதிடம் அமைகிறது. நியூட்டனின் பிரபஞ்ச ஈர்ப்புச் சமன்பாட்டின்வழி சூரியனின் எடை இரண்டு கோடியே நாற்பத்திமூன்று இலட்ச நட்சத்திரங்களின் எடை. இந்த எடையுள்ள சூரியனின் விசை பூமியையும் சந்திரனையும் இழுத்து அசைக்கிறது. இத்தகைய சூரியன் உயிரினங்களை அசைப்பது என்பது எளிது. எனவேதான் சோதிடப்படி ஒருவரின்

வாழ்க்கையைப் பூமி (இலக்னம்), சூரியன், சந்திரன் ஆகிய மூன்று கோள்கள் நிர்ணயிக்கின்றன. பிற கோள்களின் பாதிப்பு இவற்றிற்கு அடுத்த நிலையிலேயே அமைகின்றன.

## கோள் சுழற்சி

ஒவ்வொரு கோளும் சூரியனை நெருங்காமலும் நீங்காமலும் இருந்தபடி நீள்வட்டமாக, ஒரு வட்டமான பாதையில் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. சூரியனைச் சுற்றி வர பூமிக்கு ஓர் ஆண்டு, வியாழனுக்குப் பன்னிரண் டாண்டு, சனிக்கு 29 ஆண்டு, புளூட்டோவுக்கு 248 ஆண்டு, புதனுக்கு 88 நாட்கள், செவ்வாய்க்கு 687 நாட்கள், சுக்கிரனுக்கு 225 நாட்கள் ஆகின்றன. இவ்வாறு சுற்றுகின்ற போது பூமியில் ஒரே இடத்தில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு தட்பவெப்பநிலைகள் அமைகின்றன.

சோதிடத்தில் எல்லாக் கோள்களும் பன்னிரெண்டு இராசிகளையும் சுற்றி வருகின்றன. ஒவ்வோர் இராசியை யும் சூரியன் ஒரு மாதத்திலும், செவ்வாய் 1½ மாதத்திலும், புதனும் சுக்கிரனும் ஒரு மாதத்திலும், இராகு கேது 1½ ஆண்டிலும், சனி 2½ ஆண்டிலும், சந்திரன் 2½ நாட்களிலும் சுற்றி வருகின்றன. அவ்வாறு சுற்றுகின்றபோது பன்னிரெண்டு இராசிகளுக்கும் வெவ்வேறான பலன்கள் ஏற்படுகின்றன.

## நேரக்கணக்கீடு

பூமியானது சூரியனைச் சுற்றி வருகின்ற போது பயண இடத்தின் தன்மைக்கேற்பப் பகல் இரவு நேரங்கள் மாறுதல் அடைகின்றன. வடவெப்ப மண்டலங்களில் மார்ச் 21 மற்றும் செப்டம்பர் 23இல் பகலும் இரவும் சமமாக இருக்கும். ஜூலை 2இல் நீண்ட பகல், குறைந்த இரவு என்றும், டிசம்பர் 22இல் நீண்ட பகல், குறைந்த இரவு என்றும் கணக்கிட்டுள்ளனர்.

சோதிடவியலில் சூரிய உதய நேரம், சூரிய அஸ்தமன நேரம் என்று குறிப்பிடப்படுகிறது. சென்னை, மதுரை, கோவை போன்ற இடங்களில் சூரிய உதயாதி நாழிகை வெவ்வேறாகக் கணக்கிடப்பட்டு பஞ்சாங்கங்களில்

குறிப்பிடப்பட்டுள்ளன. அறிவியலில் இரவு 12 மணி முதல் மறுநாள் இரவு 12 மணி வரை ஒரு நாளாகக் கருதப்படுகிறது. சோதிடவியலில் சூரிய உதயாதி நாழிகை (காலை 6.00 மணி) முதல் மறுநாள் சூரிய உதயாதி நாழிகை வரை (காலை 6.00 மணி) ஒரு நாளாகக் கணக்கிடப்படுகிறது.

நிர்வாக ஆண்டு 365 சூரிய நாட்கள் கொண்டது. ஒவ்வொரு நான்காவது ஆண்டும் 366 நாட்கள். இதனை நெட்டாண்டு (Leaf Year) என்கிறோம். இந்த நிர்வாக ஆண்டு 'ஜூலியஸ் சீசர்' என்பவரால் கி.மு. 45இல் உரோமாபுரியில் கொண்டுவரப்பட்டது. இதேபோல் சோதிடத்திலும் திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்ற பஞ்ச அங்கங்களின் அடிப்படையில் ஆண்டு கணக்கிடப்பட்டு பஞ்சாங்கம் எழுதப்பட்டுள்ளது.

அறிவியலின்படி ஒரு நாள் என்பது 24 மணி நேரம் அல்லாமல் அதற்கும் குறைவான 23 மணி 56 நிமிடம் 4 விநாடி. இதேபோல் சோதிடத்தின்படி ஒரு நாள் என்பது 60 நாழிகைக்குக் குறைவாக (சென்னையிலுள்ளபடி) 59 நாழிகை 51 விநாடிகள். இவ்விரண்டு விதக் கணக்குகளும் சரியானவையே (இணைப்பு.2). அறிவியலின்படியும் சோதிடத்தின்படியும் கால அளவுகள் ஒன்றாகவே அமைகின்றன (இணைப்பு.3). மேலும் அறிவியலின்படி இன்றைய பூமியின் வயது தோராயமாக 450 கோடி ஆண்டுகள் எனப் பூமியிலுள்ள யுரேனியத் தாதுவின் கதிர்வீச்சுக் காலப்படி கணக்கிட்டுக் கண்டறிந்துள்ளனர். அதேபோல் சோதிடத்தில் பூமியின் வயது 432 கோடி ஆண்டுகள் என மனிதனின் மூச்சு (சுவாசம்) அளவினை வைத்துக் கணக்கிட்டுக் கண்டறிந்துள்ளனர்.

அதாவது ஒரு சதுர்யுகம் (4 யுகம்) என்பது 432 இலட்ச ஆண்டுகள். இதுவரை ஆயிரம் சதுர் யுகங்கள் கடந்துள்ளதால் 432 கோடி ஆண்டுகள் உருண்டோடி விட்டன. சூரியனின் வயது 500 கோடி ஆண்டுகள். அறிவியலின்படி ஒரு 'காஸ்மிக் ஆண்டு' என்பது 25 கோடி ஆண்டுகள். இது சூரியன் ஒரு முறை அண்டத்தைச்சுற்றி வர ஆகும் காலம். இதுவரை நமது சூரியக்குடும்பம்

அண்டத்தை இருபது முறைகள் சுற்றியிருக்கிறது எனலாம். இவ்வாறாக அறிவியலின்படியும், சோதிடத்தின்படியும் கால அளவுகள் குறுகியும், பெருகியும் சமமாய் உள்ளன.[6]

## கிரகணங்களும் முன்னறிவிப்பும்

கிரகணங்கள் ஏற்படுவதை வானியல் கருவிகளால் கண்டு, நாள், நேரம் அறிவிக்கப்படுகிறது. சோதிடவியலில் கோள்களின் சுழற்சி கணக்கிடப்பட்டு சந்திர கிரகணம் ஏற்படும் காலம் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுள்ளது. புயல், காற்று, பெருமழை, உருவாவதை வானியலால் சில நாட்களுக்கு முன்பே கண்டு அறிவிக்கின்றனர். ஆனால் துன்பம், தோல்வி, விபத்து, நன்மை, தீமை, வசதி வாய்ப்பு, யோகம் போன்ற தன்மைகள் ஏற்படுவதைச் சோதிடர் பல ஆண்டுகளுக்கு முன்பே (குழந்தை பிறந்த உடனேயே) அறிவிக்கின்றனர். திருமணம், பிரசவம், மரணம் பற்றித் தெள்ளத்தெளிவாகச் சோதிடவியலால் கூறமுடியும். மழைப்பொழிவு, இயற்கைக் கோளாறுகளால் ஏற்படும் அழிவு ஆகியன சோதிடத்தில் கணக்கிடப்பட்டு பஞ்சாங்கமாக்கப்படுகின்றன.

## அமாவாசை - பௌர்ணமி

சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் இருக்கும்போது சூரியனின் நிழலானது சந்திரனை மறைக்கின்றது. இது 'அமாவாசை' எனப்படுகிறது. சந்திரன் சூரியனுக்கு வெகு தூரத்தில் நேர் எதிராகச் சூரியன் நின்ற வீட்டிலிருந்து 180 பாகையில் இருப்பது 'பௌர்ணமி' எனப்படுகின்றது. பௌர்ணமி திதி முதல் சந்திரனின் ஒளியானது சிறிது சிறிதாக மறைக்கப்படுகின்றது. இதனைத் தேய்பிறை என்கிறோம். அமாவாசைக்குப்பின் சந்திரனின் ஒளி சிறிது சிறிதாக வெளிப்படுகின்றது. இதனை வளர்பிறை என்கிறோம். சோதிடவியலில் சூரியனும் சந்திரனும் ஒரே பாகத்தில் வந்தால் அமாவாசையில் பிறந்தவன் என்று கூறிவிடலாம். சூரியனும் சந்திரனும் நேர்க்கோட்டில் அமைந்தால் அமாவாசை என்று வானவியலும், இவையிரண்டும் ஒரே

---

6. வானியலும் ஜோதிடமும், பக். 110-113

பாகத்தில் வருவது அமாவாசை என்று சோதிடவியலும் கூறுவது குறிப்பிடத்தக்கது.

சூரியன் நின்ற வீட்டுக்கு ஆறு இராசிக்குள் சந்திரன் நின்றால் வளர்பிறையில் பிறந்தவர் என்றும், 7ஆம் இராசி முதல் 12ஆம் இராசி வரை சந்திரன் நின்றால் தேய்பிறையில் பிறந்தவர் என்றும் சொல்லலாம். வளர்பிறைச் சந்திரன் சுபராகவும், தேய்பிறைச்சந்திரன் பாவியாகவும் கருதப்படு கின்றனர். அமாவாசையும் பௌர்ணமியும் புனித நாட்களாகக் கருதப்படுகின்றன. இந்த நாட்களில் நல்ல காரியங்களையும் கெட்ட காரியங்களையும் செய்தால் அதற்கு அதிக ஆற்றல் உண்டு என மக்கள் நம்புகின்றனர்.

பௌர்ணமியன்றும், அமாவாசையன்றும், சூரியன், பூமி, நிலவு ஆகிய மூன்றும் கிட்டத்தட்ட ஒரே நேர்க்கோட்டில் இருப்பதால் பூமியின் பரப்பில் ஈர்ப்பு விசையின் பாதிப்பு சற்று அதிகமாகவேயிருக்கும். அமாவாசை, பௌர்ணமி நாட்களில் கடல் ஓதம் அதிதீவிரமாக இருக்கும். உயிரினங்களின் அன்றாட வாழ்க்கையிலும் சில மாறுபாடுகள் காணப்படுவது அனுபவப்பூர்வமான உண்மை.

சந்திரனுடைய சுழற்சியால் அமாவாசை, பௌர்ணமி 28 நாட்களுக்கு ஒரு முறை ஏற்படுகிறது. இச்சுழற்சியைப் போன்று பெண்களுக்கு 28 நாட்களுக்கு ஒருமுறை ஏற்படும் மாதாவிடாயும், குழந்தையின் கரு வளர்ச்சிக் காலம் பத்து மாதம் என்று மருத்துவர்கள் கூறும் 280 நாட்களும் இங்கு உணர்தற்குரியது.

## செவ்வாய்த் தோடம்

சில ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவர்களது உடல் மரபுத் தன்மைகளாலும் (Heredity), விரைவான இரத்த ஓட்டத்தினாலும் உடல் வெப்பம் அதிகமாக உள்ளது. அவ்வாறு வெப்பமுடைய இருவரது (ஆண் பெண்) உடல் சேர்க்கையால் ஏதும் விபரீதம் ஏற்படுவதில்லை. அதே சமயம் அதிக வெப்பமுடைய ஒருவரது உடலும், வெப்பமற்ற ஒருவரது உடலும் (ஆண் பெண்) சேருகின்ற சேர்க்கையின்போது பொருத்தமற்ற இரத்த அணுக்களின் சேர்க்கைகளினால் நாளடைவில் நோயும் மரணமும் ஏற்பட

வாய்ப்புண்டு. இது அறிவியல் உண்மையாகும். செவ்வாய் வலுவாக அமையப்பெற்றவர்களுக்கு உடல் வெப்பம் அதிகம் என்பதைச் சோதிடவியல் தெளிவாகக் கூறுகின்றது.

சாதகத்தில் செவ்வாய் பிறந்த (சென்ம) இலக்னத்துக்கு 1,2,4,7,8,12இல் எங்கு நின்றாலும் செவ்வாய்த் தோடம் எனப்படும். "இத்தகையோர் ஆண் அல்லது பெண் யாராக இருந்தாலும் இது போலவே தோடம் அமைந்த கணவர் அல்லது மனைவியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படித் தேர்ந்தெடுத்தால் தோடமில்லை. அவ்வாறின்றி ஒருவர்க்குத் தோடம் இருந்து மற்றவர்க்குத் தோடம் இல்லாமல் போனால் தோடம் யாருக்கு இல்லையோ அவர்களுக்கு நிறைந்த ஆயுள் இருக்காது.[7]

செவ்வாய்த் தோடம் உள்ளவர்கட்குப் பெரும்பாலும் காலதாமதம் ஏற்பட்டு அல்லது வயது கடந்து திருமணம் நடக்கும்.[8] செவ்வாய்த் தோடம் இருப்பினும் பிற கோள்களின் வலிமை இருப்பின் மரணம் நிகழாது. மண முறிவு ஏற்படும். ஆண்குழந்தை இருக்காது. இதனைக் கோள் பரிகாரங்களினால் நிவர்த்தி செய்யலாம் என்று சோதிடர் கூறுகின்றனர்.

மதவாதிகளும், மெய்ஞானிகளும் கி.பி. 2000 அளவில் உலகம் அழியும் என்பதான கருத்தை வெளியிட்டு வந்திருக்கின்றனர். பிரஞ்சுப் பேரறிஞர் 'நாஸ்ட்டர்டாம்' என்பவர் வருமுன் நிலைமைகளை முன்கூட்டி எடுத்துச் சொல்லும் ஒரு தீர்க்கதரிசி. இவர் 2000 ஆண்டுகளுக்குப் பிறகு உலக நிலைமை என்ன என்பது பற்றிப் புத்தகம் எழுதியும், வீடியோ மூலம் எப்படி உலகு அழியும் என்பது பற்றிப் படம்பிடித்தும் காட்டியுள்ளார்.

கி.பி. 2000 ஆண்டில் நிகழக்கூடிய சூரிய சந்திர கிரகணங்களினால் பூமியில் பெருமளவு பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்றும், அதன் விளைவால் பூமி, சூரிய சந்திரனின் பாதைகளை விட்டு மாறி, பூமியின் இருசானது ஓரளவு விலகவே செய்யும் என்றும், அதன் காரணமாகச்

---

7. சுலப வழியில் சோதிடம், ப.138. 8. மேலது ப.342

சூரிய சந்திரனின் கதிர் வீச்சுகளில் பெருமளவு மாற்றம் ஏற்படும் என்றும், இதனால் கால நிலை, வாழ்வின் ஆதார நிலைகள் ஏற்றத்தாழ்வு கொள்வதால் பிரளயம் உலகில் ஏற்படச் செய்யும் என்றும் வானியல் கருதுகிறது. அதுவும் உலகப் பரப்பில் தென்கிழக்கு ஆசியாக் கண்டத்திற்கே பெரிதும் பாதிப்புகள் ஏற்படலாம் என்று அறிவியலார் கருதுகின்றனர்.

வானியல் இப்படிக் கூறினும் இன்றைய சோதிடர் பாதிப்புகள் குறைவாகவே இருக்குமெனக் கருத்துத் தெரிவிக்கின்றனர்.[9] மேற்கூறப்பெற்ற மூன்று வகையான கருத்துகளையும் நடந்து முடிந்த சூரிய கிரகணம் சார்ந்த அறிவியல் அறிஞரின் கருத்துகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவர்கள் எதிர்பார்த்ததுபோல் சூரிய கிரகணத்தை நேரில் காண்பவர்களுக்கு அதிக பாதிப்புகள் நேர்ந்ததாகத் தெரியவில்லை. அதேபோல் அன்றைய அன்றாட வாழ்விலும் தடையேதும் இல்லாமல் என்றும் போல் வாழ்க்கை நடந்தது. இதனை வைத்துப் பார்க்கும் போது அறிவியல் அறிஞர்களின் எதிர்பார்ப்பை விட சோதிடர்களின் கணிப்பு ஓரளவு உண்மையாக இருக்கலாம் என்ற கருத்திற்கு வரமுடிகிறது. வானியலார் வாழ்க்கையில் முன்னெச்சரிக்கை தேவை என்ற நோக்கில் விழிப்புடன் செயல்படுவதால் சற்று மிகைப்படுத்தியும் கூற வாய்ப்புண்டு.

## கணிதம்

கணிதம் என்ற சொல் ஆங்கிலப்பதத்தின்படி 'கற்கத்தக்க அறிவு' என்ற பொருள்பட அமைந்துள்ளது. 'கணியம்' என்பது தொடர்பு என்ற பொருளாகும். மனத்தளவான எண்ணங்களைத் தொடர்புபடுத்தி முடிவுகாண்பது கணிதமே. அறிவை, பட்டறிவு (கூர்த்த அறிவு), உய்ப்பறிவு (சிந்தனை அறிவு) எனப்பிரித்து உய்த்த அறிவு கணக்கியலாகவும், கூர்ந்த அறிவு அறிவிய லாகவும் ஆக்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் வாழ்வியலில்

---

9.விஞ்ஞான அறிவியலோடு கூடிய சோதிட சாஸ்திரத்தின் அரிய ஆராய்ச்சிப் புதினங்கள், பக்.29,30.

ஒன்றுக்கொன்று இணைந்தே செயல்படுபவை. கணிதம் அறிவியலின் மொழி நுட்ப அறிவு என்பது கணித அளவை வைத்தே கணிக்கப்படுகிறது. கணிதம் அறிவியல் என்று வரையறுக்கப்படும்போது கணித முறையில் சோதிடம் கணக்கிடப்படுவதால் சோதிடமும் அறிவியல் சார்ந்த துறை எனக் கொள்ளலாம்.

சோதிடம் என்பது கணிதத்தைக் குறிக்கும். முற்காலத்தில் சோதிட நூல்கள் அனைத்தும் கணித நூல் களாகவே எழுதப்பட்டன. சான்றாகச் சாதகக் கணிதம், சோதிட கிரக சத்பலம், ஆயுள் கணிதம், சுத்த திருக்கணிதப் பஞ்சாங்கம் போன்றவற்றைக் கூறலாம். கோள்களின் அமைப்பு, காலநிலை முதலியவற்றைக் கணித்துச் சொல்லுவதுதான் சோதிடம். பிறந்த நேரத்தின்போது 'சாதகக் குறிப்பு' மட்டுமன்றி பலன்களைப் பார்க்கும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் கணிதம் பயன்படுவதால் சோதிடம் பார்ப்பது என்று கூறுவதைக் காட்டிலும் 'சோதிடம் கணித்தல்' என்பதே பொருத்தமாகிறது.

ஒவ்வொரு கோளின் வலிமையையும் அறிய ஆழமாகக் கணித்துப் பார்த்தல் இன்றியமையாதது. ஒரு கோளின் வலிமை ஆறுவகைப்படும். அவையாவன 1. ஸ்தான பலம், கிரக திருஷ்டி பலம், 2. காலபலம், 3. அயன பலம், கிரக யுத்த பலம், 4. நைசர்க்கி பலம், 5. திக்கு பலம், 6. சேஷ்டா பலம். இந்த ஆறு வகை வலிமையினுள்ளும் 16 வகையான உட்பிரிவுகள் உள்ளன. எனவே ஒரு கோளினுடைய வலிமை 24 நிலைகளால் ஏற்பட்டது. இந்த நிலையை அறிவதற்குக் கணிதத்தில் அடிப்படை அறிவு பெற்றிருத்தல் அவசியமாகிறது. மேலும் சாதகப் பலன்கள் யாவும் சரியாக அமைய 'ஸ்புட ஜாதகம்' பெரிதும் துணைபுரியும். இதில் பெரிதும் கணிதமே இடம்பெறுவதால் இது 'ஸ்புட கணித ஜாதகம்' என்றே கூறப்படுகிறது.

'சாதகத்தில் திரிகோண இடம் 1,5,9 ஆம் வீட்டினைக் குறிக்கும். 12 வீடுள்ள சாதகக் கட்டத்தில் 1,5,9ஆம் இடங்களைத் தொட்டு நேர்க்கோடுகளை வரைந்தால் முக்கோணம் கிடைக்கும். ஆகவே முக்கோணம் எனும் திரிகோணப்படியும் கோள்களின் கூட்டுப் பார்வை

கணக்கிடப்படுகிறது. முன்னொரு காலத்தில் எகிப்தியர் நிலத்தை முக்கோணப்படி பங்கிட்டு, பங்களவிகள் கண்டனர். 'பிதாகரஸ்' அதற்கு ஒரு விதி கண்டுபிடித்து இரண்டு பக்கம் தெரிந்தால் மூன்றாவது பக்கத்தின் அளவும், ஏன் கோணமும்கூட அறிவிக்கலாம் என்றார். இது 2000 ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட செய்தி எனலாம். ஆனால் 5000 ஆண்டுகளுக்கு முன்பே சோதிடப்படி முக்கோணம் 1,5 இடங்கள் சாதக கட்டத்தில் குறிப்பிட்டு அதற்கு அடுத்து 9ஆவது வீட்டை இணைத்தால் சர்வ முக்கோணம் கிடைக்கும் என்றும், நிலத்தின் அளவைப்போல சோதிட வீட்டைக் கண்டு திரிகோணப் பலனைக் கணித்தனர். இதில் ஆழமான வரை வடிவக் கணக்கு (Geomentry) உள்ளது. [10]

சோதிடத்தில் கணிதத்தின் இந்த இன்றியமையாமையை அறியாதவர்கள் சாதகங்களைப் பார்த்து மேற்போக்காக மதிப்பிடுவதால்தான் தவறுகள் ஏற்படுகின்றன. ஓர் இராசியில் குரு, சனி என்ற இரண்டு கோள்களும் தொடர்புபட்டிருக்கும் போது இதைப் பார்க்கின்ற இருவேறு சோதிடர்களில் ஒருவர் சனியைவிட குரு வலுவாய் இருக்கிறார் என்றும், மற்றொருவர் குருவை விட சனிதான் வலுவாய் இருக்கிறார் என்றும் சொல்வது தற்போது சாதாரணமாகக் காணப்படும் சான்றாகும். இப்படி வேறுபட்டுச் சொல்லுவதற்குக் காரணம் இவ்விரண்டு கோள்களின் வலிமையைக் கணிதத்தின் அடிப்படையில் இருசோதிடர்களும் கணித்துப் பார்க்காமல் சாதகத்தைப் பார்த்துவிட்டு மேலோட்டமான கணிதத்தின் அடிப்படையில் அவரவர் மனத்திற்குத் தோன்றியபடி கூறுவதுதான். இப்படிச் செய்யாமல் கணித அடிப்படையில் சரியாகக் கணித்துப் பார்த்தால் இவ்விரண்டு சோதிடர்களும் வேறுபாடின்றிக் கணிக்க முடியும்.

கணிதத்தில் ஒரு விடையைக் காண்பதற்குப் பல வழிமுறைகள் காணப்படுகின்றன. இதுபோல் சோதிடத்தில் அட்டவர்க்கம், தசவர்க்கம், சட்பலம் முதலிய பல வழிமுறைகளில் தீர்வு காணப்படுகிறது. ஒரு குழந்தை பிறந்தவுடன், அது பிறந்த நேரத்தைச் சரியாகக் கணக்கிட்டு

---

10. வானியலும் ஜோதிடமும், ப.119

அந்த நேரத்தில் கோள் அமைப்பைக் கணிக்கவும், இதனைக் கணிப்பதற்குப் பயன்படுகின்ற பஞ்சாங்கத்தை எழுதவும் கணிதமே பயன்படுகிறது.

இவ்வாறு எழுதப்பட்ட சாதகத்தை அடிப்படையாகக் கொண்டு தசாபுத்தி, கோச்சாரம், ஏற்றம், வீழ்ச்சி வரும் ஆயுட்காலம், குறிப்பிட்ட காலக்கட்டத்தில் வரும் கண்டங்கள் முதலியவற்றை அறிவதற்குக் கணிதம் தேவையானதாகவும், அடிப்படையானதாகவும் அமைகிறது. தற்காலத்தில் எண்களின் அடிப்படையில் கணிக்கப்படும் எண்கணித சோதிட முறைக்கும் அடிப்படையாவது கணித அறிவே. இதனால்தான் நம் முன்னோர் சோதிடரைக் கணி, கணியன் என்றும் குறித்தனர்.

தற்காலத்தில் அறிவியல் அடிப்படையிலான சோதிடமுறை பரவலாக்கப்பட்டு வருகிறது. அறிவியல் அடிப்படையில் சோதிடக் கணிதமுறை ஒழுங்குபடுத்தப் படும்போது கணித்தல் தவறுதல் இன்றி நிகழும். அதன் அடிப்படையில் காணும் பலனும் சரியான முறையில் அமையும். பலன் கூறுவதில் கணக்கீட்டு முறைக்கு முக்கியத்துவம் தரப்படும்போது எந்தச் சோதிடரிடம் கேட்டாலும் பலனில் அதிக மாறுபாடு இருக்காது. இந்நிலை ஏற்படும்போது மீண்டும் மீண்டும் சோதிடம் பார்த்தல் என்ற நிலையோ பலனில் ஐயப்பாடோ பெரும்பாலும் ஏற்படுவது இல்லை. ஏமாற்றுதல் என்பது நீங்கி உண்மையான சோதிட முறையை மக்கள் நம்பிக்கையுடன் பெறமுடியும்.

கோள்களை, இராசிகளை வைத்துச் சாதகம் கணிப்பது வரை கணிதச் சார்புடைய இக்கலை, பலன்கூறும்போது, கணிதத்தைப் பயன்படுத்தினாலும் சோதிடத்திலுள்ள பல விதிமுறைகளைத் தன்னுள் ஏற்கும் நிலையில் அறிவியலிலிருந்து பிரிகிறது. மேலும் சோதிடர் மக்கள் மனநிலை கருதிக் கூறுவதாலும் அறிவியலிலிருந்து இது வேறுபடுகிறது.

## சோதிடம் பற்றிய அறிவியல் அறிஞரின் கருத்துகள்

மனிதரின் வாழ்க்கை நிகழ்ச்சிக்குப் பயன்படும் பொருட்டு பூமிக்கு எடுத்துவரப்பட்ட வானவியலே சோதிடம் என்கிறார் டாக்டர் 'ரால்ப் வால்டோ எமர்ஸன்'.[11]

மனிதனுடைய அனைத்து நடத்தையையும், இயற்பியல் மற்றும் வேதியியல் மூலம் விளக்கிவிட முடியும் என்பது 'தாமஸ் மார்கனின்' கருத்தாகும். மனிதனின் முதல் காதலை இயற்பியலும் வேதியியலும் விளக்க முடியாது என்று மறுத்துக் கூறுகிறார் அறிவியல் அறிஞர் 'ஐன்ஸ்டீன்'.[12] எனவே மனிதனின் உடல் அமைப்பை இயற்பியல் மற்றும் வேதியியல் மூலம் தெளிவுபடுத்திவிட முடியும் என்றும், ஆனால், இவற்றுக்கப்பாற்பட்ட, மனத்தில் நடைபெறுவனவற்றை உளவியல் துறை மூலம் மட்டுமே அறிய முடியும் என்றும் தெளிவாகின்றன.

"ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நிகழும் பிறப்பு அல்லது செய்யப்படும் செயல் அந்த நேரத்திற்கு ஏற்ப குண நலன்களைப் பெறும்" என்று, உளவியல் அறிஞரும் சோதிடருமான 'காரல்ஜங்' கூறுகிறார்.[13] நிகழும் நேரத்தைப் பற்றிய மிகத் துல்லியமான அறிவு மனிதனின் வாழ்க்கை நிகழ்வுகளை அறிய இன்றியமையாததாகிறது. இங்கு நேரத்தைப் பற்றிய அறிவு, என்பது வானுலகில் காணும் கோள்களின் நிலையைப் பற்றிய, அந்த நேரத்திற்குரிய துல்லியமான அறிவு நிலையைக் குறிக்கிறது.

மேலை நாட்டினர் சோதிடத்தை, அஸ்ட்ராலஜி (Astrology) ஜெனித்திலியாலஜி (Genethiliology) என்ற சொற்களால் குறிக்கின்றனர். நட்சத்திரங்களைக் கொண்டு விளக்கப்படும் அறிவியல் என்பது இதற்குப் பொருள். அதாவது இங்கு ஜீன் (Gene) என்பது நட்சத்திரத்தைக் குறிக்கிறது. எனவே, விண்ணுலகில் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் நடைபெறுகின்ற சுழற்சியான செயல்களைத் தொடர்புபடுத்தி மனிதனுடைய வாழ்க்கை அனுபவங்களை அறிவதே சோதிடம்.[14]

---

11. Casting the Horoscope, Introduction, P.IX. 12. Mahabala's Advance Ephemeris Intrduction, P.E, 13. Ibide, Preface, p.a.. 14. Ibide, Introduction, P.C.

சோதிடத்தைப் பற்றிய அறிவியல் அறிஞரின் கருத்துகள் சில இங்கு உணரத்தக்கன. தனிப்பட்ட மனிதனுடைய மூளை, நரம்பு, பாகங்களைச் சூரியன், கோள்கள், விண்மீன்கள் போன்றவற்றிலிருந்து வரும் மின்காந்த அலைகள் நுட்பமாகப் பாதிக்கின்றன.[15] என்ற நியூயார்க் பல்கலைக்கழக அறிஞர் 'இராபர்ட் ஒபெக்கரின் (Robert OBeckar) ஆய்வு மனித இனத்திற்கும் விண்ணுலகிற்கும் இடையிலான உறவை வெளிப்படுத்துகின்றது.

'ஜியார்ஜ்ஜியோ பிக்கார்டி' (Giorgiopiccardi) என்ற அறிஞரும் 'மாகி டகாதா' என்ற உயிரியலாளரும் மேற்கொண்ட ஆய்வின் முடிவுகள் இங்குக் குறிப்பிடத்தக்கன. இவர்களின் முடிவு பின்வருமாறு:

விண்ணுலகில் இருந்து வருகின்ற அலைகள் அல்லது கதிர்கள் மனித உடலிலுள்ள நீர், இரத்தம் மற்றும் வேதியியல் பொருட்களின் அமைப்பை (Structure) மாற்றவல்லன.[16] மனித உடலில் 60 விழுக்காட்டிற்கு அதிகமாக நீர் இருப்பதும் வேதியியல் பொருட்களோடு அது மனிதனுடைய அடிப்படை அமைப்பை உருவாக்குவதும் இங்கு உணரத்தக்கது.

நுண்ணுயிரிகளைப் (பாக்டீரியாக்களைப்) பற்றி ஆராய்ந்த ஜெர்மன் அறிஞர் எச் போர்ட்டல் (H. Bortel) என்பவர் வேதியியல் மற்றும் கிருமிகளின் செயல்கள் கதிரவனின் கதிர்வீச்சைப் பொறுத்தே மாறுகின்றன என்கிறார்.[17]

நுண்ணுயிரிகள், விண்ணிலிருந்து பூமியில் உள்ள உயிரினங்களைத் தாக்குகின்றன என, நோபல் பரிசு பெற்ற 'ஃபிரட்ஹாயில்', 'சந்திர விக்கிரம சிங்கா' ஆகியோர் தெரிவித்திருக்கின்றனர்.[18]

நோயை அறிவதற்கும் குணப்படுத்துவதற்கும் நோயாளியினுடைய சாதகம் வியக்கத்தக்க வகையில் பயன்படுகிறது என்று 'இ.ஜெ. ஸ்கீமன்' (E.J.Scheiman) என்னும் அமெரிக்க மருத்துவ நிபுணர் நிருபித்துள்ளார்.[19]

---

15. Ibids p.d 16. Ibide, p.d , 17. Ibide P.E., 18. சோதிடமும் அறிவியலும், ப.44. 19. Mahabala's Advance Ephemeris Introduction P.e

நோய்களை அறியச் சாதகம் பெரிதும் பயன்படுகிறது என்று, ஜோஸபைன் ஃபவினி (Josephina Favini) என்னும் மருத்துவ நிபுணரும் கண்டறிந்துள்ளார். [20]

கோள்களின் செயல்பாடுகளை அறிந்து செயல்படுவதன் மூலம், அறுவைச் சிகிச்சையோ, மாத்திரையோ இன்றிக் குடும்பக் கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்த முடியும் என்று 'ஆஸ்டிராண்டர்' என்னும் அறிஞர் 'புதிய அறிவியல் கிரகங்களின் தாக்கம்' எனும் தமது நூலில் கூறியுள்ளார்.[21]

இந்த உலகம் ஒரு மிகப் பெரிய முழுமையான பொருள். இதில் இருப்பவை அனைத்தும் ஒன்றிற்கொன்று தொடர்புபட்டுள்ளன என்ற நியதியின்படி ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு கோளும், ஒவ்வொரு தாவரமும், ஒவ்வொரு கனிமப்பொருளும் ஒன்றிற்கொன்று தொடர்புபட்டு அதன் மூலமாக அவற்றின் உடன்பாடும், அந்த உடன்பாட்டின் மூலம் ஓர் எதிரியக்க அதிர்வும் ஏற்படுகிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்று 'இ.எப்.டபிள்யூ. பெ...ல்' கூறுகிறார். மனித உடலிற்கு மிகத் தேவையானது பன்னிரண்டு உயிர் உப்புகள். இப்பன்னிரண்டு உயிர் உப்புகளுக்கும் வானத்தில் இருக்கும் பன்னிரண்டு இராசி மண்டலத்திற்கும் தொடர்பு இருப்பதை டாக்டர் 'ஜி.டபிள்யூ. கேரி' கண்டறிந்தார். [22]

'அரிலான் டி ஸ்டென்ட்சன்' (Harian T. Stentson)என்பவர் மண்ணுலக விண்ணுலகத் தொடர்பினை அறிந்து கொள்வதன் மூலம் உலகத்தில் ஏற்படும் நிலநடுக்கம், விபத்து, புயல் வணிக ஏற்றத் தாழ்வு, பஞ்சம் போன்ற பலவற்றை முன்னறிவிக்க முடியும் என்று காட்டியுள்ளார்.[23]

மேற்கூறிய அறிவியல் அறிஞரின் கருத்துகளிலிருந்து பின்வருபவை தெளிவாகின்றன.

விண்வெளியில் ஏற்படும் பாதிப்புகளுக்கு மனிதன் தொடர்ந்து ஆளாகி வருகிறான். தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் நாடுகளில் ஏற்படும் நிகழ்வுகளையும் விண்ணுலகப் பொருட்களுக்குத் தொடர்பு

---

20. Ibide, P.e., 21.சோதிடமும் அறிவியலும் ப. 441. 22.சோதிட சாஸ்திரமும் ஹோமியோபதியும், ப.12. 23. Mahabala's Advance Ephemeris, Introduction, p.e.

படுத்திச் சோதிடத்தால் அறிய முடியும்; பூமியின் பரப்பில் கோள்களின் பாதிப்பை அறிவியல் அறிஞர் உணர்ந்து கொள்வதற்கு முன்னரேயே சோதிடம் உருவாகியுள்ளது; சோதிடம் அறிவியல் அடிப்படையில் ஆனது.

## சோதிடம் தொடர்பான கருத்துகள்

கருவிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு பிறவியிலும் உள்ள அந்த நேரத்தில், எலக்ட்ரான் அணுக்களுக்கும் அதே நேரம் கோள்கள், நட்சத்திரங்கள் ஆகியவற்றில் இருந்து வந்துகொண்டிருக்கும் காஸ்மிக் கதிர்களுக்கும் ஏற்படும் தொடர்பாலேயே அதன் அதன் நிலைக்கு ஏற்ப வாழ்க்கை அமைகிறது. எனவே, மக்கள் வாழ்வில் கோள்களின் ஆதிக்கம் பெரும்பங்கு வகிக்கின்றது.[24]

கோள்களின் சுழற்சி நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. கோள்களிடமிருந்து காந்த அலையின் குண இயல்புகள் வானமண்டலத்தில் குறிப்பிட்ட இராசியின்கீழ் வரும்போது அந்த இராசியில் அடங்கியுள்ள நட்சத்திரங்களின் காந்த அலைகளுக்கு ஏற்பவும், சுற்றி வரும் பொழுது ஏற்படும் காந்த அலைகளுக்கு ஏற்பவும், மாறுபடுகின்றன. அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குழந்தை பிறக்கும்பொழுது அதன் உடலில் கோள்களின் காந்த அலையிலிருந்து வெளிப்படும் இரசாயன விளைவுகளை உருவாக்குகின்றன. இந்த விளைவுகளின் தன்மைதான் ஒரு குழந்தையின் எதிர்கால நிகழ்ச்சியாகிறது.

கோள்களின் மின்காந்த அலைகள் ஒரு குழந்தை பிறந்த நேரத்தில் அதன் உடலில் பதிவாகி, அதற்கேற்ற குணங்களையும், உணர்ச்சிகளையும் உண்டாக்குகின்றன. அதன்பின் மரணம் வரை எந்தெந்தக் கோள்கள், எந்தெந்தச் சமயத்தில், தனது சுழற்சியில், பூமியின் அருகில் வருகிறதோ அந்தந்தச் சமயங்களில் அந்தந்தக் கோள்களின் மின்காந்த அலைகள் நம் உடலில் படிந்து, அதற்கேற்ற குணங்களையும், செயல்களையும் உண்டாக்குகின்றன.[25]

---

24.வானியலும் சோதிடமும், ப.3. 25. தெய்வீக வாழ்வில் விஞ்ஞான ரகசியங்கள், ப.27.

சோதிடம் காலத்தை நிர்ணயிப்பது; இன்னதுதான் திட்டவட்டமாக நடக்குமென்பதைக் கூறுவது. 'அஸ்ட்ராலஜி' என்ற வார்த்தையே அஸ்டர் + லோகாஸ் என்ற வார்த்தைகளால் ஆனது (Astrology = Aster+Logas) அஸ்டர் என்றால் நட்சத்திரம் (கோள்); தத்துவம் என்பதே 'அஸ்ட்ராலஜி' ஆயிற்று. இது சமஸ்கிருதத்தில் 'சோதிடம்' எனப்படுகிறது. 'காலத்தின் விஞ்ஞானம்' என்பதே இதன் பொருள். நமக்கும் கோள்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.[26]

கோள்களின் இயக்கத்துக்கும், தட்பவெப்பநிலை மாறுதலுக்கும், மனித இன இயக்கத்திற்கும் தொடர்பு உண்டு. மன இயல்புகட்கும் கோள்களுக்கும் உள்ள தொடர்பை ஓரளவு சோதிடர் குறிப்பிட்டுள்ளனர். காட்டாக, மிதுன இராசியில் பிறக்கும் மக்களின் மனநிலை அடிக்கடி மாறுதலுக்கு உட்படும் எனச் சோதிடர் கூறுகின்றனர்.

இப்படி ஒவ்வோர் இராசிக்காரர்களுக்கும் மன இயல்புகள் கூறப்படுகின்றன.[27]

## சோதிடமும் ஆன்மீகமும்

தீர்க்கதரிசிகள், யோகிகள், குறி சொல்லுவோர், அருள்கூறுவோர் முதலியோர் 'சாதகம்' இல்லாமலே பலன்களைக் கூறியிருக்கின்றனர். சோதிடப் பலன் கூறுவதற்கும் உள்ளுணர்வின் ஆற்றல் பயன்படுத்தப் படுகின்றது. இறையருளில் நாட்டம் உடையோர் இவ் வுள்ளுணர்வின் ஆற்றலுக்கு இறையருளே காரணம் என எண்ணியதால் சோதிடம் ஆன்மீகத்தோடும் தொடர்பு படுத்தப் பெறுகின்றது.

சோதிடம் ஒரு 'தெய்வீகமான விஞ்ஞானம்'[28] என்கிறார் கே.எஸ்.கிருஷ்ணமூர்த்தி. சோதிடம் என்பது ஓர் ஆன்மீகக் கலைதான். இது அறிவியல் என்ற முடிவுக்கு யாரும் வந்துவிடாதீர்கள் என்கிறார் திரிகால ஞானி 'சுவாமி ராஜகோபால்'. மேலும் அவர் எவ்வித அறிவியல் கருவிகளின்

---

26. சோதிட போதினி, பக்.8,14, 27. மன இயல்பும் கோள்களும், ப.41, 28. பிரஸன்ன சோதிடம், பக்.21,22

துணையுமின்றி நமது முன்னோர் சோதிடச் சாத்திரத்தை இவ்வளவு துல்லியமாக வகுத்து வைத்திருக்கின்றனர் என்றால் அது ஆன்மீகப் பலமின்றி வேறு என்ன? அறிவியலின் துணைகொண்டு சோதிடத்தை அலசிப் பார்க்கலாமே தவிர சோதிடம் வெறும் அறிவியல் ஆகிவிடாது என்கிறார்.[29] இதே கருத்தினைக் கூறும் 'சிவா. மேகநாதன்' பூர்வர்களால் அவர்களது உள்ளொளியால் உலகிற்கு வழங்கப்பட்டது என்றும் கூறுகிறார்.[30]

'சோதிடம் அறிவியலாக - அதன் விதிகளுக்குக் கட்டுப்பட்டும் - கட்டுப்படாமலும் செயல்படுகிறது. இக்கலை அறிவியலைத் தனக்குப் போர்வையாகப் போர்த்துக்கொண்டு ஆன்மீக உடலையும் ஜீவனையும் கொண்டுள்ளது. எதிர்காலத்தைத் துல்லியமாகக் கூறுவதில் சோதிடத்திலுள்ள கணிதம், ஞானம், அறிவு, பிராப்தம் ஆகியவை பெரும்பங்கு கொள்கின்றன. சோதிடத்தின் அருள்பெற்ற இக்கலையைத் தெய்வத்தின் அருளோடு அணுகி பொருள் தேடவேண்டும். எனவே உள்ளொலி சக்தி உள்ள சோதிடரே, சிறந்த பலன்களைக் கூறுதல் இயலும்.[31] என்கிறார் ஜோதிடத் தாமரை என்ற கட்டுரையில், பி.வி. ஜகன்னாதன். தனிநிலை ஆய்வு செய்து பார்க்கும்போது, பழம்பெரும் சோதிட நூல் கூறும் பலன்கள் உண்மை போலத் தோன்றுகின்றன. 'பரிணாமக் கொள்கை' மற்றும் 'இயக்கவியல் பொருள் வாதம்' இவற்றைக் கருத்தில் கொள்ளும்போது சோதிடவியலுக்கு அறிவியற் காரணம் உறைக்க இயலவில்லை. எனவே சோதிடவியல் 'ஆன்மீகப் புதிரியல்' (Spiritual Mysticism) என்னும் பிரிவில் சேர்க்கப்பெற்றுள்ளது[32].

## சோதிடமும் அறிவியலும்

சோதிடம் என்பது அறிவியல்தான் என்ற உண்மை அண்மைக் காலத்தில் அறிஞர்களாலும், விஞ்ஞானிகளாலும் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது. சோதிடத்திலுள்ள அறிவியல்

---

29. சோதிடக்கலை ஆன்மீகமா, அறிவியலா, ப.8. 30. மேலது ப.9. 31. ஜோதிடத்தாமரை, பக்.16,17. 32. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-9, ப.644.

உண்மைகளை உலகிற்குத் தெரியவைத்ததன் பயனாக இன்று உலகெங்கும் படித்தவர்களிடையே சோதிடத்திற்குத் தனிமதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலைநாடுகளில் சோதிட சாத்திரத்தை விஞ்ஞான சாத்திரத்தின் ஒன்றாகக் கருதி ஏற்றுக்கொண்டுள்ளனர். பகுத்தறிவுவாதிகள் பலரும் கடவுள், மதம் போன்றவற்றைப் பற்றிக் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும் சோதிடம் ஒரு விஞ்ஞானம் தான் என்று ஏற்றுக்கொள்ளுமளவிற்குப் பல உண்மைகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.என்கிறார் கே. பார்த்தசாரதி[33].

சோதிடம் என்பது தோற்றத்தில் அறிவியல் போன்ற ஒன்று என்கிறது 'பிரிட்டானிகா கலைக்களஞ்சியம்'.[34]

வான மண்டலமும் அம்மண்டலப் பொருள்களும் காலத்தைக் கணிக்கப் பயன்படுவதுடன், காலத்தில் நிகழ்வனவற்றையும் கணி 'பிற்குப் பயன்படும் அறிகுறிகளாகும் என்று கருதி, காலக் கணியர் சில விதிமுறைகளை வகுத்தனர். அவை வானவியல் கணிதம் வரை அறிவியலாகவும், வாழ்க்கை நிகழ்ச்சி என்னும் பலனைக் கணித்துரைக்கும்போது அறிவியலை ஒத்தும் உள்ளன.[35]

சோதிடம் ஒரு செயல்முறை வானவியல் என்கிறது ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி.[36]

இராம. தியாகராசனின் 'வானியலும் சோதிடமும்' என்ற நூல் வானியலும் சோதிடமும் ஒன்றே என்ற அளவில் முயற்சி செய்து உருவாக்கப்பட்டுள்ளது. வானியலுக்கும் சோதிடத்திற்கும் உள்ள உறவுகளையும், அதன் மூலம் பெறப்படும் உண்மைகளையும் குறிப்பிடுகிறது. 'வானியலும் சோதிடமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. சோதிடம் கோள்களுக்கும் மனிதர்களுக்கும் இடையேயுள்ள உறவைச் சித்திரிக்கின்றது. வானியல் கோள்களின் அறிவியல் தன்மைகளை விளக்குகின்றது என்பன போன்ற செய்திகள் நூலில் இடம்பெறுகின்றன'.

---

33. வானியலும் சோதிடமும், அணிந்துரை, 34. Topic, Astrology, 35. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி -9,ப.641. 36. ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி, ப.71.

தற்போது சோதிடர் பலர் இது எப்படி அறிவியலாகிறது என்று ஆழ்ந்து சிந்திக்காமல், சோதிடம் அறிவியலே என்று தங்கள் நூல்களில் எழுதிவருவது சிந்தித்தற்குரிய ஒன்று.

## சோதிடம் போலி அறிவியலா?

'சோதிடம் என்பது, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவை நிலைகொண்டுள்ள இடத்திற்கேற்ப மனித இனத்தைப் பாதிக்கிறது. இதனைக் கற்று அறிவதன் மூலம் எதிர்காலத்தின் நிகழ்ச்சிகளை முன்கூட்டி அறியமுடியும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் வளர்க்கப்பட்ட ஒரு போலி - அறிவியல் துறை' என்று 'வெப்ஸ்டர் ஆங்கில அகராதி'யில் குறிப்பிடப்பட்டுள்ளது.[37]

இந்தியா, எகிப்து, அரேபியா, சீனா, பாபிலோனியா, உரோம், கிரேக்கம் முதலிய நாடுகளில் சோதிடம் பன்னெடுங்காலமாக வழங்கிவருகிறது. சோதிடம் அறிவியல் அடிப்படையில் ஆனதல்ல; அது ஒரு போலி அறிவியல் என்று அவ்வப்பொழுது இந்நாட்டவர் கூறிவந்துள்ளனர். பூமியிலுள்ள மனிதனுக்கும் பிற வான்பொருள்களுக்கும் இடையேயுள்ள மிகுதியான தூரம் மனிதன்மீது குறிப்பிடத்தக்க பாதிப்பு எதனையும் ஏற்படுத்த முடியாது எனும் நம்பிக்கையை இவர்கள் இவ்வாறு கருதினர்.

மனிதனுக்குப் பலன் கூறுவதுபோல் ஏன் மற்ற உயிரினங்களுக்குக் கூற முடியவில்லை என்கிறார், ம. சிங்காரவேலு[38].

சோதிட நூல் பூமி மையக் கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. அதாவது சூரியன் பூமியைச் சுற்றி வருவதற்கு ஓர் ஆண்டு ஆகிறது என்று சோதிட நூல் கணக்கிட்டுக் கூறுகின்றது. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த வானநூல் அறிஞர் 'கோப்பர் நிக்கஸ்', பூமி சூரியனைச் சுற்றிவர ஓர் ஆண்டு ஆகிறது எனும் உண்மையை -சூரிய மையக் கொள்கையை முதன்முதலாக அறிவித்தார். தவறான பூமி மையக்கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள சோதிட நூல்,

---

37. அறிவியலும் சோதிடமும் பி.எஸ்.டி., ப.8.
38. தத்துவஞான விஞ்ஞானக் குறிப்புகள், பக்.51-54.

அறிவியலாக முடியாது என்று நிறுவ முயன்றுள்ளார், வே. தமையந்திரன்.[39] அக்காலச்சோதிட அளவுகள் சிறிதும் பிறழாமல் விண்ணியலில் (ஒருசில கோள்கள் தவிர) இன்றும் ஒத்துவருகின்றன. எனவே மேற்கூறிய காரணத்தால் சோதிடக் கணக்கில் கோள்களின் நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படுத்துவதில்லை என்று கூறுமிவர் டைக்கோ, பிராஹே, கெப்ளர், காஸெண்டி முதலிய வானநூல் அறிஞர் சோதிடத்தின் அடிப்படையையே தகர்த்துவிட்டதாகவும் தெரிவிக்கிறார்.

'விண்வெளியில் அசுவினி முதல் இரேவதி வரையிலான நட்சத்திரங்கள் பிரபஞ்ச எக்ஸ்ரே டெலஸ்கோப் போட்டோக்களில் காணப்படவில்லை' என்ற செய்தி 1993 டிசம்பர், டெல்லி பிரிட்டிஷ் தூதரக விஞ்ஞான இதழில் (ப.11) வெளிவந்த கட்டுரையில் இடம்பெற்றது. இதனை, 1994 சனவரி 3ஆம் சனிக்கிழமை தினமணி, 'அறிவியல் மதமா?' என்று மொழிபெயர்த்து வெளியிட்ட கட்டுரையில் சுட்டியது. பல வானியல் உண்மைகள் வெளிப்படுத்தப்பெற்ற இந்நிலையில் இதனை ஏற்றுக்கொள்ளுதல் என்பது இயலாது. இச்செய்தி மேலும் ஆய்விற்குரிய ஒன்று.

மேற்கூறிய கருத்து களும் சோதிடத்தில் சில அறிவியல் சாராத அடிப்படைகள் இ ருப்பதைக் காட்டுகின்றன. எனவே சோதிடவியல் என்ப । எண்கணிதம், காலக்கணிதம், வானவியல், பஞ்சா கக் கணிதம், எதிர்காலத்தைக் கணித்தல், வடமொழிக் கலைச்சொற்கள், யாப்பிலக்கணம், இலக்கியக் கூறுகள் முதலிய பலவும் விரவி வரும் ஒரு தனித்துறையாகும்.[40]

வானவியலும் சோதிடவியலும் ஆழங்காண முடியாத இரண்டு மாபெரும் கடல்கள் போன்றன. சோதிடம் அறிவியலா என்ற வினாவிற்கு, தெள்ளத்தெளிவான வரையறுக்கப்பட்ட விடையைக் காணமுடியாத நிலையே உள்ளது. வானவியல் என்ற அறிவியல் கணக்கீடுகளை அடிப்படையாகக் கொண்டு சோதிடம் செயல்பட்டாலும் இது தான் செயல்படும் விதத்தில் பலன்களை முடிவுசெய்யப்

---

39. ஜோதிடம் அறிவியலா?, ப.164. 40. சோதிட நூல்களில் சாதகக் கணிப்பின் அடிப்படைகள், ப.14.

பல விதிமுறைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்து முறையில் சோதிடப்பலன் கூற உட்பிரிவு முறைகளைச் சோதிடர் கடைப்பிடிக்கின்றனர். அறிவியலில் ஒரு முடிவை, ஒரு விடையைக் காண ஒரு நெறிப்பட்ட வழிமுறையோ அதற்கு இணையான வேறு வழிமுறையோ பயன்படுத்தப் படுகிறது. இவ்வழிமுறை யார் பயன்படுத்தினாலும் ஒரே முடிவு அல்லது விடை கிடைக்கும். காரணம் இவ்வழிமுறைகள் குறிப்பிட்ட விதிகளுக்கு உட்பட்டு இருப்பதுதான்.

சோதிடத்தில் உள்ள வழிமுறைகளுக்கு வரையறுக்கப்பட்ட விதிகள் பயன்படுத்தப்படுவதில்லை. ஒவ்வொரு விதியும், கிளைவிதிகள், மாற்று விதிகள், விதிவிலக்குகள் என விரிந்து கொண்டே செல்லும். ஆகவே வெவ்வேறு சோதிடர் ஒரு பலனுக்கு, ஒரே முடிவுக்கு வருவதை எதிர்பார்க்க முடியாது. ஒன்றிற்கும் மேற்பட்ட அல்லது முற்றிலும் மாறுபட்ட முடிவுகளும், பலன்களும் கிடைக்கலாம். இக்காரணத்தினால் சோதிடம் அறிவியல் என்று ஏற்றுக்கொள்ள முடியாத நிலையை அடைகிறது.

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் என்பதே அறிவியல் உண்மை. அதாவது Each Human - being is a Finger Print என்பர். அப்படி இருக்கும்போது ஒருவரின் எதிர்காலத்தை அறியக்கூடிய துறை சோதிடம் என்று கூறலாம். இதற்கு வேறு துறை இருப்பதாகவும் தெரியவில்லை. எதிர்காலத்தை அறிய முயலும் சோதிடம் மக்களைப் பெருமளவில் ஆக்கிரமித்தும், ஆட்சி செய்தும் வருகிறது. மக்கள் வாழ்வியலோடு ஒன்றிவிட்ட சோதிடத்தைப் புறக்கணிப்புச் செய்யாமல் உயர் ஆய்வுக்குட்படுத்தி அதிலுள்ள குறை நிறைகளை வெளிப்படுத்தி, நெறிப்படுத்துவது தற்போது அவசியமான ஒன்றாகத் தெரிகிறது. ஏனெனில் சோதிடம் மனிதனுக்குத் தேவையில்லை என்பது உண்மையாக இருந்தால்கூட அக்கருத்தை மக்களிடையே கொண்டுவருதல் என்பது அவ்வளவு எளிதான செயல் அன்று. எனவே முதலில் உள்ளதைச் சரி செய்தோமானால் இது தேவையா, இல்லையா என்ற தெளிவை ஆய்வுகள் மட்டுமன்றி மக்களுக்கும் வெளிப்படுத்த இயலும்.

பல அறிவியல் துறைகள் வேகமாக வளர்ச்சியுற்று வரும் வேளையில் சோதிடத்துறை மட்டும் போதிய வளர்ச்சியின்றிக் காணப்படுகிறது. சோதிடத் துறைக்கும் முக்கியத்துவம் வழங்கப்படும்போது இதுவும் ஓர் அறிவியல் துறையென ஏற்கப்படலாம். சோதிடத்துறையில் ஆழமான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு, தேர்ச்சிபெற்ற சோதிட அறிஞரால் சோதிடம் கையாளப்படும்போது இதுவும் அறிவியல் பூர்வமானதுதான் என்பது நிலைநாட்டப் படலாம். இந்நிலை உருவாக ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட வேண்டும். அவை, கீழ்க்கண்டவாறு அமையலாம்.

இன்று கணிப்பிகளின் மூலம் சாதகத்தைக் கணிக்க முடிவதால் பிழைகள் பெருமளவு தவிர்க்கப்படுகின்றன. இவ்வாறு கணித்த சாதகத்திற்குக் கூறப்பட்ட பலன்கள் ஒத்துவராதபோது அதற்கான காரணங்களை ஆய்வு நிலையில் கண்டறிய வேண்டும்.

சோதிடத்தில் நூற்றுக்கணக்கான விதிகள் பலன் கூறுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இப்பலன் ஒத்துவராத நிலையும் காணப்படுகின்றது. இவ்விதிகள் எவ்வாறு ஆக்கப்பட்டன; வரையறுக்கப்பட்டன என்ற விளக்கங்களும் காரண காரியத் தொடர்புகளும் சோதிட நூல்களில் காணப்படவில்லை. எடுத்துக்காட்டாக ஒருவருடைய சாதகத்தில் ஆறாம் இடத்தில் சந்திரன் இருந்தால், அவருக்கு நீடித்த வயிற்றுவலியை ஏற்படுத்துகிறது என்பதற்குப் போதிய விளக்கம் இல்லை. எனவே இன்றைய வானநூல் ஆராய்ச்சிகளால் குவிந்துள்ள புள்ளிவிவரத் தகவல்களைப் பொதுமைப்படுத்திச் சோதிடப் பொதுவிதிகளை உருவாக்கவேண்டும். கணிதம், அறிவியல் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் அறிஞர், சோதிடப் புலமையும், அனுபவமும் உடைய சோதிடரின் உதவியுடன் அறிவியல் விதிகளை, கொள்கைகளை ஆய்வுக்கு உட்படுத்துவதுபோல சோதிட விதிகளையும் ஆய்வுக்கு உட்படுத்துதல் வேண்டும்.

'நிருதி' (யுரேனஸ்) 'வருணான்' (நெப்டியூன்) 'குபேரன்' (புளூட்டோ) [41] ஆகிய கோள்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அவையும் சோதிடத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டன. ஆனால் குறுங்கோள்கள் (Astroids) சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இவை சோதிடத்தில் சேர்த்துக் கொள்ளப்படக் கூடியவையா என்ற நோக்கிலும் ஆய்வு அமையலாம்.

'அபிசித்து' என்ற 28 ஆவது நட்சத்திரம் முன்பு இருந்து இப்பொழுது இல்லையாகையால் அதற்குத் தக கணக்கீட்டில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதா, செய்யப்பட்டதால் தவறுகள் நிகழ, இதுவும் ஒரு காரணமா என்பது தெளிவுபடுத்தப்படவேண்டும். அதேபோல் 13ஆவது இராசி மண்டலமான ஒபியசச்சுஸ் பற்றியும் அதில் சூரியன் தங்கும் காலமும் (நவம்பர் 30 - டிசம்பர் 17) (இணைப்பு. 4) கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதால் அதைச் சோதிடத்தில் புதிதாகச் சேர்ப்பதால் ஏற்படும் மாற்றங்கள் சரி செய்யப்படவேண்டும்.

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும், இராசி இலக்னத்திற்கும், கோள் களுக்கும் அளிக்கப்பட்டுள்ள வாழ்வியல் பண்புகளை ஆய்ந்துணர வேண்டும். ஒரு மனிதனுக்கு உள்ள கோள்களின் அமைப்பு மற்றொரு மனிதனுக்கு இருக்காது. அப்படி இருப்பின் அவ்விருவருக்கும் சோதிடப் பலன்கள் ஒன்றாகத்தான் இருந்தாக வேண்டும். இக்கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் 1820ஆம் ஆண்டு இதழில் வெளியான ஒரு செய்தி அமைகிறது. 'மூன்றாம் ஜார்ஜ் மன்னரின்' பிறந்த நேரமும், 'சாமுவேல் என்னிங்ஸ்' என்னும் தொழிலதிபரின் பிறந்த நேரமும் ஒன்றுபோல் (4-6-1738) இருந்தன. இவர்கள் 8-9-1761 அன்று திருமணம் செய்துகொண்டனர். இவ்விருவருக்கும் சம எண்ணிக்கையில் (ஆண்/பெண்) குழந்தைகள் இருந்தனர். இருவரும் 2-9-1820 அன்று ஒரே நேரத்தில் இறந்தனர்.[42]

சோதிடத் துறையில் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு மற்றும் முனைவர் பட்டம் போன்ற உயர்கல்வி அளிக்கப்படும்

---

41. ஞாயிற்றுக் குடும்பத்தைப் பற்றிய ஓர் ஆய்வு, ப.17 42. Horary Astrology, P.14.

போது சோதிடத்தின் உண்மையான வாழ்வியல் பயன் பாட்டை அறிய முடியும். சோதிடம் தொடர்பான ஆராய்ச்சிக் கட்டுரைகள், நூல்கள் அனைத்து மொழிகளிலும் அனைத்து நாடுகளிலும் வெளிவருதல் வேண்டும். நியூயார்க் சோதிட ஆராய்ச்சி மன்றத்தினர் சார்பில், 'சார்லஸ் ஜென்' (Charles Jayne) என்ற ஆசிரியர் காலாண்டு இதழ் நடத்தி வந்தார். இதில் ஆராய்ச்சியாளர் கட்டுரைகள் பல எழுதிவந்தனர்.[43]

சோதிடத் துறையில், 'நிகழ்ச்சி ஆய்வை' (Case study) ஏற்படுத்தலாம். பல ஆண்டுகளாக, பலருடைய சாதகங்களைக் கொண்டு அவர்களுடைய அன்றாட நடவடிக்கைகளைக் குறித்து வைத்து, அவற்றில் எத்தனை பேருடைய நடவடிக்கை சோதிடப் பலனுக்கு ஒத்துவருகிறது என்று கணக்கெடுத்து, அந்தக் கணக்கு பரிசோதிக்கப்பட்டு அதில் வரும் தீர்மானத்தைக் கொண்டு, மற்ற ஊர்களில் பலருடைய நடவடிக்கைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து, சரிப்பட்டு வருகின்றதா என்ற 'நிகழ்ச்சி ஆய்வின் போக்கில்' முயலலாம். இதன் வழி ஆராய்ச்சி, திறமை மிக்க சோதிட மாணாக்கர் பலரை உருவாக்க வேண்டும்.

இன்று சோதிடம் என்பதில் வானவியலின் ஒருசில கூறுகள் - சூரியன், சூரியக் குடும்பம் மற்றும் பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்களில், 27 நட்சத்திரங்கள் மட்டுமே இடம்பெறுகின்றன. இந்த 27 நட்சத்திரங்கள் மட்டும் சோதிடத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டமைக்கு அறிவியல்பூர்வமான விளக்கம் காணப்படுகிறது. எனவே, கோள்களையும் நட்சத்திரங்களையும் கொண்டு கூறப்படும் சோதிடம் அறிவியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க இயலாது. அதே நேரத்தில் அனைத்து அறிவியல் அடிப்படைகளையும் சோதிடம் பெற்றிருப்பதாகவும் கூறிவிடமுடியாது. எனவே, அறிவியல் என்று ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையைச் சோதிடம் அடையவில்லை. சோதிடம் முழுமையும் அறிவியல் அடிப்படையில் அமையாததாக இருக்கலாம். ஆயின் இதிலுள்ள அறிவியல் கூறுகள் நன்முறையில் தெளிவுபடுத்தப்பெறின், மனிதனுக்குப் பிற துறைகளைக் காட்டிலும் மிகவும் பயனுள்ளதாகச் சோதிடம் அமைந்துவிடக் கூடும்.

---

43. Fundamental Principles of Astrology, P.7

## இயல் ஐந்து

# சோதிடமும் மருத்துவமும்

**சோ**திடக்கலை இந்தியநாட்டின் பழம்பெரும் கலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. அண்டத்தில் இயங்கும் கோள்கள் உலகில் இயங்கும் உயிர்கள்மீது செலுத்தும் ஆதிக்கத்தை விளக்குவதே சோதிடக்கலை. தமிழகச் சித்தர்கள் இக்கலையை மருத்துவத்துடனும் இயைபுபடுத்தினர். அக்காலத்தில் சோதிடரே மருத்துவ வல்லுநராகவும் திகழ்ந்தனர். சோதிடமும் மருத்துவமும் ஒன்றோடொன்று இணைந்து பல ஒற்றுமைகளை உணர்த்தின. நாளடைவில் இவ்விரண்டு கலைகளும் பிரிந்து மருத்துவக்கலை வளரத் தொடங்கியது. சோதிடக்கலை மங்கத் தொடங்கியது. தற்காலத்தில் சோதிடக்கலை மீண்டும் புத்துணர்ச்சி பெற்றுள்ளது. இன்று மருத்துவத்தில் சோதிட முறைகளைப் பின்பற்றி நோயினை வருமுன் அறியவும், அதற்குரிய மருத்துவத்தினை மேற்கொள்ளவும், நோய் தீராதெனில் அதனைக் கண்டறியவும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கணிப்பொறியின் துணையோடு சோதிடத்தினை அறிவியல் அடிப்படையில் துல்லியமாகக் கணித்து மருத்துவர்கள் பயன்படுத்தி வருவதையும் காணமுடிகின்றது. ஆதலால் மருத்துவமும் சோதிடமும் இணைந்து நின்று வளர்ச்சி பெற்று வரும் நிலை மீண்டுமிங்கு உருவாகியுள்ளது.

கோள் ஆராய்ச்சியின் வழி மனிதனைப் பாதிக்கும் வியாதிகளை உறுதியாகக் கூறமுடியும் என்கிறது சோதிடம். பிறக்கும்போதே சில குழந்தைகள் வியாதியுடன் பிறக்கின்றன. பலருக்கு வாழ்க்கையில் பல்வேறு காலங்களில் வெவ்வேறு வியாதிகள் ஏற்படுகின்றன. சில நோய்கள் சிகிச்சைக்குக் கட்டுப்பட்டவை என்றும், சில வியாதிகள் தீராத வியாதிகள் என்றும் கூறப்படுகின்றன. இவற்றைக் கோள் ஆராய்ச்சியின் வழி உறுதிப்படுத்த முடியும் என்கிறது சோதிடம். தற்காலத்தில் உலகின் பல நாடுகளில் சாதக

ஆராய்ச்சியின் வழி நோய்களைக் கண்டுபிடிக்கும் முறைகள் வளர்ந்து வருகின்றன; சோதிட முறைப்படி சிகிச்சை முறைகள் கூறப்பட்டுள்ளன. அண்மைக்காலத்தில் 'நாடி சோதிடம் எனும் மருத்துவ சோதிட இயல்' கோள்களின் இயக்கம் - மனித வாழ்வியலைக் கட்டுப்படுத்துகின்றது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் செயல்படுகிறது. வானவெளியில் இயங்கும் கோள்களின் கண்ணுக்குப் புலன் ஆகாத சக்திகள் மனித உடலின்மேல் நேரடியாக இயங்காமல், உடலிலுள்ள முக்கியச் சத்துப் பொருள்களின் மேல் ஊடுருவி மாறுதல்களை உண்டாக்குகின்றன. அதுவே 'கோள்நிலைக் கோளாறு' எனப்படுகின்றது.

பஞ்ச பூதங்களின் இயக்கத்தால் உலகம் இயங்கு கின்றது. வான மண்டலத்தில் நிலவும் நவக்கிரகங்களும் பஞ்ச பூதங்களின் பிரதிநிதிகளே.

| | |
|---|---|
| பிரிதிவி (மண்) | - செவ்வாய் |
| அப்பு (நீர்) | - சந்திரன், சுக்கிரன் |
| தேயு (நெருப்பு) | - குரு, சூரியன் |
| வாயு (காற்று) | - புதன் |
| ஆகாயம் (வெளி) | - சனி, இராகு, கேது |

வானவெளியில் இயங்கும் கோள்களுக்கும், மனித உடல் இயக்கத்திற்கும் தொடர்புண்டு என்பதை,

''அண்டத்தில் உள்ளதே பிண்டம்
பிண்டத்தில் உள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்துதான் பார்க்கும்போதே'' (சட்டமுனி ஞானம்)

என்ற சித்தர் பாடல் காட்டுகின்றது. உலகம் ஓர் அண்டம். மனிதன் அதிலொரு சிறிய பிண்டம். எனவே அண்டத்தில் இயங்கும் சக்திகளனைத்தும் பிண்டத்தில் இயங்குகின்றன என்பது தெரியவருகின்றது.

இந்தச் சக்தியானது மிக அதிகமாக இயங்குமாயின், நோய் ஏற்படுகின்றது. செவ்வாய் என்ற கோளிலிருந்து

வெளியாகும் காணமுடியாத கதிர் இயக்கங்கள் எத்தன்மை யானதோ, அத்தன்மையை, மனித இரத்தத்தின் மூலப் பொருள்கள் ஊடுருவ இயங்குவதால் உண்டாகும் உடல் நிலையும் ஒத்திருக்கிறது. சுக்கிரனின் பார்வையால் மனிதனும், பிராணிகளும் தம் இனத்தைப் பெருக்கும் இயற்கை ஜீவ சக்தியைப் பெற முடிகிறது. மண்ணின் குணங்கள் அனைத்தும் மனித உடலில் இருக்கின்றன. 'மைக்கேல் கேங்கினிலின்' என்னும் அறிவியல் அறிஞர் கோள்நிலை இயக்கத்தால் உடல்நிலை பாதிக்கப்பெறும் என்ற கருத்தை நிறுவுகின்றார்.[1]

'செவ்வாய்க்கோள் அண்டத்தில் இயங்கும் மிகப்பெரிய சக்தி. இக்கோளிலிருந்து வெளியாகும் கண்ணுக்குப் புலனாகாத சில கதிர் இயக்கங்களின் தன்மை மனித உடலிலுள்ள இரத்தத்தில் காணப்படும் சில மூலப்பொருள்களின் தன்மையுடன் ஒத்துள்ளது'.[2]

'பூமியிலுள்ள உயிர்களின் இனப்பெருக்கத்திற்கும் அண்டத்திலுள்ள சுக்கிரன் என்னும் கோளிற்கும் தொடர்புண்டு.'[3]

'அண்டத்தில் இயங்கும் சக்திகளின் இயக்கத்திற்கும், மகளிரின் மாதவிலக்கிற்கும் தொடர்புண்டு'.[4]

இம்மேற்கோள்கள் ஆகாயத்திற்கும், மனித உடலுக்கும் உள்ள தொடர்பினைப் புலப்படுத்துகின்றன. இக்கருத்து, பண்டைத் தமிழ் மருத்துவத்தினைப் படைத்ததாகக் கருதப்படும் சித்தர்களுக்கும் உடன்பாடுடையது. எனவே, மனிதனின் உடல்நிலையைக் கோள்கள் கட்டுப்படுத்து கின்றன என்றும், கோள்களும் நோய்களும் ஒன்றோடொன்று தொடர்புடையன என்றும் அறிய முடிகின்றது.

---

1. For the first time in history a scientist (Micheal Gangneilin of Psycho-Psysiological Laboratory at transbourg had produced evidence that the planets actually influence or indicate an influence on our lives. This gives science a point of vital context with the old beliefs of Astrology., Indian Express, (Madras Edition), September, 13, 1975 (Letters),

2. Tamil-English Cyclopaedia Dictionary P.12

3. Ibid, P.13, 4. Ideal sex life, p.4

உயிரினங்களுக்கும் காந்தச் சக்திக்கும் ஓரளவிற்குத் தொடர்பு உண்டு. இக்காந்தச் சக்தி இவ்வண்டம் முழுவதும் நிறைந்து இருப்பதால்தான் புயல், வெள்ளம், பல்வேறு பருவகால மாற்றங்கள் ஆகியன நிகழ்கின்றன. இவ்வாறு இவ்வுலகில் இயற்கையைப் பாதிக்கின்ற இந்தக் காந்தச் சக்தியே மனித உடலையும் பாதிக்கின்றது. சூரியனில் ஏற்படும் காந்த விளைவுகள் ஏனைய கோள்களின் காந்த ஈர்ப்புச் சக்திகளுடன் கலந்து தாயின் கருவில் உருவான நாள் முதலே நம்மை வந்தடைகின்றன. இந்தச் சக்தி கருவை அடையும் போதுள்ள கோள்களுக்கேற்ப அக்குழந்தையின் உடலில் காணப்படும் வீரியம் ஏற்றத்தாழ்வுடையதாக இருக்கும்.

எனவே குழந்தை பிறக்கும் நேரத்தைச் சரியாகக் கணக்கிட்டு அந்நேரத்தில் கோள்களின் ஆட்சியினைத் தெளிவாகக் கணித்தால் உடலில் தோன்றியுள்ள நோய்களையும் அவற்றிற்கான மாற்றினையும் கூறமுடியும். காந்த ஆற்றல் நம்மைச் சுற்றி இயங்கி வருவதுடன் நம் உடலிலும் காணப்படுகிறது. அச்சக்தி சில உறுப்புகளில் குறையும்போதே நோய் நம்மைத் தாக்குகிறது. ஆதலால்தான் தற்காலத்தில் அத்தகைய குறைபாட்டினை நீக்க காந்தங்களைப் பயன்படுத்தும் வழக்கு காணப்படுகிறது. சித்த மருத்துவத்தில் அயகாந்தப் பற்பம், காந்தச் செந்தூரம் முதலிய மருந்துப் பொருட்களைக் காந்தங்களைக் கொண்டு தயாரித்து வருவதும் இவ்வடிப்படையில்தான். 'காந்த மருத்துவம்' இயற்கை மருத்துவத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றது.

சூரியனில் கரும்புள்ளிகள் அமைவதை ஒட்டி தொத்து நோய்களும், இதயப் பாதிப்புகளும் நேருவதாக மருத்துவர் கூறுகின்றனர். சூரியனின் சுழற்சியை ஒட்டி விளைச்சல்கள் அமைவதாக விவசாயத்துறை அறிஞர் கூறுகின்றனர். பூமியின் அதிர்ச்சி, வெள்ளம், பனி பெய்தல் முதலிய பல இயற்கை மாறுதல்கள் கோள்களின் சேர்க்கையையும் சுழற்சியையும் பொறுத்தது என வானியல் அறிஞர் கூறுகின்றனர். அவ்வாறு இன்று முன்னேறிய அறிவியல் கண்டுபிடிப்புகள் பலவற்றிலும் கோள்களை மையமாகக்

கொண்ட சோதிடம் பங்கு வகிக்கின்றது. ஒவ்வொரு கோள் இராசியின் பார்வையும் மனித உடலில் ஒரு குறிப்பிட்ட உறுப்புடன் தொடர்புடையது. இவை உறுப்புகளின் மேல் ஒரு தனி வரம்புடன் ஆதிக்கம் பெற்று அவ்வகையில் ஏற்படும் பார்வையினால் உறுப்புகளின் மாறுதலுக்கு இணங்க உடல் நிலையில் வாத பித்த சிலேத்துமம் என்று மூன்று நாடிகளின் அடிப்படையில் வியாதி உண்டாகிறது. குரு, புதன், சனி வாத நோயுடன், சூரியன், செவ்வாய் பித்த நோயுடன், சந்திரன், சுக்கிரன் சிலேத்தும நோயுடன் தொடர்புடையன.

கோள்கள் ஒவ்வொன்றும் மனித உடலின் ஒவ்வோர் உறுப்புகளுடனும் தொடர்புடையன. சூரியன் மனிதனுடைய முகத்தின் வலது கண்ணையும், சந்திரன் இடது கண்ணையும், செவ்வாய் மூக்கினையும், புதன் வாயினையும், சுக்கிரன் முகவாய்க்கட்டையினையும், குரு வலக்காதினையும், சனி இடக்காதினையும் குறிக்கின்றன. இதைப்போலவே சாதகத்தில் பன்னிரண்டு இராசிகளும் உடலில் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. காட்டு: மேட இராசி - முகம், கழுத்து; துலாம் - சிறுநீரகங்கள் (இணைப்பு.5). இங்ஙனம் கோள் இராசிகளின் பார்வையானது மனித உடலில் ஒரு குறிப்பிட்ட உறுப்புடன் தொடர்பு கொண்டுள்ளது.

பன்னிரண்டு இராசிகளும் உடலின் பல உறுப்புகளைக் குறிப்பது போலவே, இலக்னத்திற்கு 12 வீடுகளும் குறிப்பிட்ட நோய்களுக்குக் காரணமாக அமைகின்றன. சான்றாக ஒருவருக்குக் கடக இலக்னம் எனில் கடகம் 12ஆம் வீடு, சிம்மம் 2ஆவது வீடு என்றவாறு அமையும்.

காட்டு:

இரண்டாவது வீடு - சித்தப்பிரமை, தலைவலி, மலேரியா

ஒன்பதாவது வீடு - பக்கவாதம் (இணைப்பு.6)

இலக்னம் முதலாகக் கொண்டு அமையும் பன்னிரண்டு வீடுகளும், உடலில் பல வியாதிகளை நிர்ணயிப்பதைப் போலவே ஒவ்வொரு கோளும் குறிப்பிட்ட வியாதிக்குக்

காரணமாக அமைகின்றன. காட்டு: சூரியன் - கண் பாதிப்பு; புதன் - ஆண்மைக் குறைவு (இணைப்பு-7).

இதன்வழி ஒன்பது கோள்கள், 12 இராசிகள், இலக்னம் முதலாகிய 12 வீடுகள் ஆகியன சாதகத்தில் மனித உடலின் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன என்பதும் உடல் உறுப்புகளை மட்டுமல்லாது உடலில் ஏற்படும் பல வியாதிகளையும் இவை குறிக்கின்றன என்பதும் தெரிய வருகிறது. இதைப் போலவே 27 நட்சத்திரங்களும் பலவகையான நோய்களுக்குக் காரணமாக அமைகின்றன.

சோதிட நூற்படி ஒருவனை நோய் வந்தணுகுவதற்குச் 'சோதிடப் பீடிதம்'[5] என்று பெயர்.

பண்டைய சோதிடர் ஒரு மனிதனின் சாதகத்தைக் கொண்டு அந்தந்தக் காலக்கட்டத்தில் கோள்களின் பயணத்தைப் பொறுத்தே நோய்களைக் கண்டறிந்து குணப்படுத்தினர். சாதகத்தின் துணைகொண்டு ஒருவருக்கு உடல்நலம் சரியில்லாமல் போகப் போவதையும், எந்த மாதிரியான நோயாக இருக்கும் என்பதையும் முன்கூட்டியே அறியமுடியும். சோதிடர் மருத்துவமும் தெரிந்தவராக இருப்பது சிறப்பு. முன்கூட்டி நோய் அறியப்படின் முன்யோசனையுடன் தகுந்த பாதுகாப்புகளைச் சாதகர் மேற்கொள்ள முடியும். சாதகத்திலுள்ள கோள்களின் உச்சநிலை, நீச்சநிலை, இதர கோள்களுடன் சேர்ந்திருக்கும் நிலை, நடைபெறும் தசாபுத்தி இவற்றைக் கொண்டு நோய் அறியப்படுகிறது.

'நோயை அறிவதற்கும் குணப்படுத்துவதற்கும் நோயாளியினுடைய சாதகம் வியக்கத்தக்க வகையில் பயன்படுகிறது, என்று 'இ.ஜெ.ஸ்கீமன்' (E.J.Scheiman) என்னும் அமெரிக்க மருத்துவ நிபுணர் நிரூபித்துள்ளார்.

நோய்களை அறிய சாதகம் பெரிதும் பயன்படுகிறது என்று 'ஜோசபைன்ஃபவினி' (Josephine Favini) என்னும் மருத்துவ நிபுணரும் கண்டறிந்துள்ளார்.[6] உடல்நலம்

---

5. Tamil-English Cyclopaedia Dictionary of medicine, p.2503.
6. Casting the horoscope, Introduction, P.IX.

என்பது அனைவரும் விரும்பும் ஒன்று. உடலைப் பேணுவதற்குப் பொறுமை, விருப்பம், செயல்பாடு இல்லாதவர்கள்கூட உடல்நலம் நன்கு இருத்தல் வேண்டும் என்ற உணர்வில் மாற்றம் இல்லாதவர்களாய் இருப்பர். ஒருவர் பிறந்த இலக்னத்திற்கு ஏற்ப உடல் நலம் மாறுபடும். முதலில் இலக்னாதிபதி, இராசியாதிபதி, இருவரின் ஆதிக்கத்தில் உள்ள நோய்களின் வலிமையைப் பொறுத்து அந்நோய்களின் கடுமை இருக்கும்.

ஒருவன் பிறக்கும்போது சூரியன் எந்த இராசியில் இருக்கின்றதோ அந்த இராசியின் ஆதிக்கத்தைக் கொண்டும் நோய் ஏற்படும். காட்டாகக் கன்னி இராசியில் சூரியன் இருக்கும்போது பிறப்பவர்க்குக் குடல்நோயும், மேடராசியில் சூரியன் இருக்கும்போது பிறப்பவருக்குத் தொண்டை நோயும் உண்டாகும்.[7]

அடுத்து அவற்றோடு இணையும் தீய கோள்களின் ஆதிக்கத்தில் உள்ள நோயும் அவற்றின் வளமைக்கேற்றவாறு தாக்கும். அடுத்து ஆறாமிடம் அது அமர்ந்த, அதோடு இணைந்த கோள்களில் எது வலிமையோ அதற்குரிய நோய் கடுமையைக் காட்டும். ஆறில் அமர்ந்த கோள்களின் வலிமை, ஆறாமிடத்தைப் பார்க்கும் கோள்களின் வலிமை ஆகியவற்றிற் கேற்றவாறு நோயின் கடுமை இருக்கும். அடுத்து பதினொன்றாமிட அதிபதி, அது நின்ற இடம், அது பெறும் வலிமை, அதனைப் பார்க்கும் கோள்களின் வலிமை ஆகியவற்றைக் கொண்டு எந்தக் கோள் மொத்தத்தில் வலிமையுடன் உள்ளதோ அதற்குரிய நோய், எந்த இடத்தில் அமர்ந்ததோ அந்த இடங்களுக்குரிய மற்றும் பார்க்கப்பட்ட இடங்கள் எவையோ அந்த இடங்களுக்குரியவற்றையும் நோய் தாக்கும்.

இலக்னம், நான்காம் இடம், இலக்னாதிபதி, அவரோடு இணைந்த கோள்கள், அதனைப் பார்த்த கோள்கள், அதேபோல் இராசி, இராசியாதிபதி, அதனுடன் இணைந்த கோள்கள் ஆகிய அனைத்தையும் கவனிக்க வேண்டும். இராகு கேதுக்களால் திடீர் விபத்து, விடம் தொடர்பான

7. சோதிட மருத்துவம், எஸ்.வி.ராஜையா, ப.8

பொருட்களால் ஏற்படக்கூடிய திடீர் பாதிப்பு ஆகிய வற்றைச் சரிசெய்வது குருவின் வேலை. குருவுக்கு நோய் களை அளிக்கும் ஆதிபத்தியம் இருப்பினும் மருத்துவம் செய்தால் குணப்படுத்தும் அமைப்பு குருவுக்கு மட்டுமே உண்டு. விபத்தில் செவ்வாய்க்கும் பங்குண்டு.

உடல் நலம் என்றவுடன், இலக்னாதிபதி அல்லது இலக்னத்தைக் குறிப்பவர்கள் 1, 4, 5, 11 மற்றும் 3, 9 வீடுகளில் இருந்தால் அந்தச் சாதகருக்கு உடல்நலம் மிகவும் நன்றாக அமையும். ஆனால் இவர்களுடன் ஆறாம் இடத்தின் தொடர்பு ஏற்படின் உடல்நலம் பாதிக்கப்பெறும். அத்துடன் எட்டாமிடம் குறிக்கப்பெறின் (1, 6, 8) பாதிப்புச் சற்று அதிகமாக இருக்கும். பன்னிரண்டாம் இடமும் குறிக்கப்பெறின் (1, 6, 8, 12) அதிக மருத்துவச் செலவும், மருத்துவ மனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுதலும் நேரிடும். இலக்னாதிபதியையும் ஆறாம் இல்லத்தையும் கொண்டு உடலில் எந்தப் பாகம் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதை ஓரளவு தெரிந்து கொள்ளலாம். ஆறாம்வீடு மட்டும் எனில் நோய், எட்டு எனில் அபாயத் தன்மை, பன்னிரண்டு எனில் அறுவைச் சிகிச்சை என்ற நிலையில் நோயின் தன்மை அமையும்.

ஆயுள் காரகன் (சனி), ஆயுள்பாவ அதிபதி (8ஆம் வீட்டு அதிபதி), இலக்னாதிபதி நன்றாக இருப்பின் நீண்ட ஆயுள் கிட்டும்.

பலமற்ற சந்திரன் சந்திர தசாவிலும், கேது தசா, புத புத்தியிலும், சனி தசா இராகு புத்தியிலும் இருந்தால் காய்ச்சல், குளிர்சுரம், டைபாய்டு போன்றவற்றை ஏற்படுத்தும். இராசி, இராசியாதிபதி, இலக்னம், இலக்னாதிபதி, இராகு, கேது, செவ்வாய், சூரியன், சனி ஆகிய தீய கோள்களால் பார்க்கப்பட்டாலும் சனி ஏனைய தீயவருடன் சேர்ந்தாலும் மரணகண்டம் ஏற்படும்.

தீய கோள்களின் தசாக்கள் மரண கண்டங்களை (ஆபரேசன்) உண்டாக்கினாலும் நற்கோள்களின் பார்வை மரணத்தைத் தடுக்கும்.

மலடி இராசிகளான மேடம், மிதுனம், கன்னி ஆகியவை ஐந்தாம் பாவமாக அமைந்து, ஐந்தாம் பாவ அதிபதியும் இலக்னாதிபதியும் பாதிக்கப்பட்டிருப்பின் குழந்தை இருக்காது.

பெண்களுக்கு ஐந்தாம் வீட்டில் குரு, செவ்வாய், இராகு போன்ற கோள்கள் சேர்ந்திருப்பின் குழந்தை பிறப்பு தொடர்பான அறுவைச் சிகிச்சை ஏற்படும்.

இலக்னாதிபதி சூரியன் சுக்கிரனுடன் சேர்ந்து 6, 8, 12ஆம் வீடுகளிலொன்றில் இருப்பின் பிறவிக் குருடராக இருப்பர்; பன்னிரண்டாம் வீட்டில் செவ்வாய் இருப்பின் இடக் கண்ணையும், சனி இருப்பின் வலக் கண்ணையும் பாதிக்கும்; இலக்னத்திற்கு இரண்டில் சூரியனும், சுக்கிரனும் பலம் குன்றிக் காணப்பட்டால் கண் தொடர்பான பாதிப்புகள் ஏற்படும். சந்திரனும் சுக்கிரனும் இணைந்து பாதிக்கப்பட்ட நிலையில் இலக்னத்தில் இருந்தால் சித்தப்பிரமை, மனோவியாதி ஏற்படும். சந்திரன் நீச்சமாயின் இந்தப் பாதிப்பு தீவிரமடையும். சந்திரன், சுக்கிரன், புதன், சனி ஆகிய கோள்கள் இணைந்தும் பலம் குறைந்தும் இருப்பின் பைத்தியம் பிடிக்கின்ற நிலைமை ஏற்படும். ஐந்தாம் வீடும், அவ்வீட்டு அதிபதியும் பலம் குன்றினால் அல்லது ஐந்தில் சூரியன், சந்திரன், குரு சேர்ந்திருந்து பாதிக்கப்பட்டிருந்தால் இதய நோய்கள் ஏற்படும்.

ஐந்தில் சந்திரன், புதன், இராகு, சனி ஆகிய கோள்கள் சேர்ந்து இருப்பின் தீவிரமான தோல் வியாதிகள் தோன்றும்.

ஐந்தில் சூரியனும் குருவும் பாதிக்கப்பட்டிருப்பின் மஞ்சள் காமாலை, வயிறு தொடர்பான பாதிப்பு, நரம்புத்தளர்ச்சி போன்றவை உண்டாகும்.

செவ்வாய், சனி சேர்ந்திருப்பின் இரத்த அடைப்புகள், சிறுநீரக அடைப்புகள் தோன்றும்; புதன், சந்திரன் ஆகியவை ஆறாம் வீட்டில் இணைந்து, அந்த வீட்டிற்குச் சனி பார்வை ஏற்பட்டு இருந்தால் சிறுநீரகத்தில் கோளாறு ஏற்பட்டு, அறுவை சிகிச்சை மூலம் சிறுநீரக மாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். ‘டயாலிஸிஸ்’ முறையில் மருத்துவச் சிகிச்சை செய்ய நேரிடும்.

சூரியன் செவ்வாய் சேர்ந்தால் இரத்தச்சோகை ஏற்படும். சனிக்கு நடுவில் கேது இருப்பின் வாத பித்த நோய் ஏற்படும்.

நற்கோள்களான குரு, சந்திரன், சுக்கிரன், தனிப்புதன் இவர்களால், இலக்னமும் இலக்னாதிபதியும், இராசியும், இராசியாதிபதியும் சனியும் பார்க்கப்பட்டால் நோய் எதிர்க்கும் தன்மை உண்டாகும்.

இங்ஙனம் சாதகத்தில் கோள்களின் சேர்க்கை அவையுள்ள வீடுகள், கோள்களின் வலிமை ஆகியன நோய் தோன்றக் காரணமாகின்றன. ஒருவர் எவ்வளவு முன்னெச்சரிக்கையாக உணவு விசயத்திலிருந்தாலும் குண்டாகப் போய்க் கொண்டிருக்கிறார்; ஒருவர் கட்டுப்பாடின்றிச் சாப்பிட்டும் ஒல்லியாகவே இருக்கிறார். சிலர் எவ்வளவு முன்னெச்சரிக்கையாக வாழ்க்கையில் இருந்தாலும் அடிக்கடி சிறுசிறு நோய்களினால் அவதிப்படுகின்றனர். சிலர் உடல்நலத்தைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் இருந்தாலும் உடல் நலத்துடன் இருக்கின்றனர். மேலும் சிலர் குறிப்பிட்ட சுவையை விரும்புகின்றனர்; சிலர் வெறுக்கின்றனர். இவற்றிற்குக் காரணம் பரம்பரை என்று கூறுவாரும் உண்டு. ஆனால் சில கோள்கள் மனித உடலில் சில உறுப்புகளை ஆட்சி செய்யும் சக்தியைப் பெற்றுள்ள தன்மையே காரணமாகிறது என்பர் சோதிடர்.

பலவிதமான நோய்கள் ஒரு மனிதனைத் தாக்கக் கூடிய வாய்ப்பு அனைத்துச் சாதகங்களிலும் இருக்கிறது. ஆயின் மிகுதியான நோய்களுக்கு உட்படுவது, குறைந்த நோய்களுக்கு உட்படுவது, மிகச்சிறு அளவில் பாதிப்பு ஏற்படுவது என்பன போன்ற நிலைகள் சாதகத்தில் கோள்கள் அமையும் நிலையைப் பொறுத்தே அமைகின்றன.

## மருத்துவச் சோதிடம்

அண்டத்தில் இயங்கும் கோள்கள் உலகில் இயங்கும் உயிர்கள் மீது செலுத்தும் ஆதிக்கத்தை விளக்குவதே சோதிடக்கலை. இக்கலையை மருத்துவத்துடன் இயைபு படுத்தியதன் விளைவாக நோய், மருந்து கணிக்கும் முறைகளிலும் சோதிடப்புலமை பயன்படுவதாயிற்று.

கோள்களின் தாக்கம் உடலை இயக்குவதால், அக்கோள்களின் பெயர்ச்சிகளுக்கு ஏற்ப உடல்நலம் மாறுபடுகிறது. அம்மாறுபாட்டைச் சரிசெய்ய மேற்கொள்ளும் முறையே சோதிட மருத்துவமாகிறது. அம்மருத்துவ முறையும் கோள்களின் இயக்கத்தை அறிந்து அக்கோள் களுக்கே பரிகாரம் செய்கின்ற முறையில் மேற்கொள்ளப் படுகின்றது. நம் வழக்காற்றிலுள்ள சித்த மருத்துவம், ஓமியோபதி மருத்துவம், நவீன மருத்துவம் ஆகிய மூன்றிலும் சோதிடத்தை அடிப்படையாகக் கொண்ட மருத்துவ முறைகள் ஒருசில மேற்கொள்ளப்படுகின்றன. இதன்வழி பிணி என்பது மனித சக்தியை ஆளும் புறச்சக்திகளின் தாக்கம் காரணமாகத் தோன்றுகிறது என்பது தெரிகிறது.

## சித்த மருத்துவம்

வானமண்டலத்தில் இயங்கும் கோள்களின் இயக்கம் பூமியில் வாழும் உயிரினங்களைப் பாதிக்கிறது என்பது முன்னரே சுட்டப்பெற்றது. சித்த மருத்துவ நூல்களின் கூற்றுப்படி உடலும், உலகமும் ஐம்பெரும் சக்திகளால் இயங்கி வருகின்றன. ஐம்பூதங்களின் தன்மைக்கும் மனிதனின் ஐம்புலன்களுக்குமிடையேயுள்ள நெருங்கிய பிணைப்பினைக் கீழ்க்கண்ட அட்டவணை புலப்படுத்தும்.[8]

| ஐம்பூதங்கள் | பொறிகள் | புலன்கள் |
|---|---|---|
| விண் | காது | ஒலி |
| காற்று | மூக்கு | நுகர்வு |
| தீ | கண் | ஒளி |
| நீர் | நா | சுவை |
| நிலம் | தோல் | ஊறு |

சித்த மருத்துவத்தின் இக்கருத்தினைப் ‘பரிபாடல்’,
‘‘சுவைமை இசைமை தோற்ற நாற்றமும்
அவையு நீயே யடுபோ ரண்ணால்
அவைசுவை கொள்ளும் கருவியு நீயே

8. A Siddhar's Science of Longevity and Kalpa Medicine of India, P.35.

முந்தியாய் கூறிய ஐந்த னுள்ளும்
ஒன்றனிற் போற்றிய விசும்பு நீயே
இரண்டின் உணரும் வதியு நீயே
மூன்றின் உணரும் தீயு நீயே
நான்கின் உணரும் நீரும் நீயே
ஐந்துடன் முற்றிய நிலமு நீயே'' (13, 14, 25)

என்ற பாடலில் அழகுற விளக்குகின்றது. இதன் வழி சங்கப்பாடல்கள் சித்தமருத்துவ, சோதிடக் கோட்பாடுகளுக்கு அரணாகவும், கரு முதலாகவும் திகழ்வதை அறிய முடிகிறது.

எனவே இவ்வுலகமும், மனித உடலும், ஐம்பெரும் மூலங்களால் ஆனவை' என்பது தெளிவாகிறது. அண்டமாகிய இவ்வுலகத்தில் இயங்கும் சக்திகள் அதனதன் அளவில் இயங்கும்வரை உலகில் ஏதும் துன்பம் இல்லை. மாறாக, அவற்றின் அளவில் மாறுபடும்போது பூகம்பம், புயல், வறட்சி, பெருமழை ஆகிய கொடுந்துயரங்கள் எழுகின்றன. அதுபோல் மனித உடலாகிய பிண்டத்தில் இயங்கும் சக்திகள் அவற்றினளவில் இயங்கும் வரை நோயற்ற வாழ்வும், மிகுதல், குறைதல் ஏற்படும்போது நோயுற்ற வாழ்வும் அமைகின்றன.

அண்டம், பிண்டம் ஆகிய இரண்டிற்கும் மூலாதாரமாக அமையும் மண், விண், நீர், தீ, காற்று என்னும் ஐம்பெரும் மூலங்களைத் தமிழ் மருத்துவ நூலோர் 'ஐம்பூதக் கொள்கையாக' வகுத்து அதனை 196 தத்துவக் கட்டளை எனும் தொகுப்பில் முதல் தத்துவமாகச் சேர்ப்பர்.[9]

அண்டத்திலுள்ள இவ்வைந்தும் மனித உடலிலுள்ள இயக்கச் சக்திகளாக உருமாறி அமைகின்றன. இச்சக்திகளுள் மூன்று பெரும் உயிர்ச் சக்திகள் கூட்டுறவாக இயங்கும். தமிழ் மருத்துவத்தில் இம்மூன்று பெரும் சக்திகளே உயிர்த் தாதுக்கள் (Humours) என அழைக்கப்படுகின்றன. அவை வாதம், பித்தம், கபம் என்பன. விண்ணும் காற்றும் இணைந்து வாதமாகவும், தீ பித்தமாகவும், மண்ணும் நீரும் இணைந்து கபம் ஆகவும் செயல்படுகின்றன. இம்மூன்றும்

9. Tamil-English Encyclopaedia Dictionary, P.200

4:2:1 என்ற விகிதத்தில் இயங்கும்போது உடல் இயங்குதற்குரிய சக்தி தோன்றுகிறது. இம்மூன்றின் அளவுகள் பல்வேறு காரணங்களால் மாறும்போது, உயிர் ஒடுக்கம் அல்லது உறக்க நிலைக்குச் செல்லத் தொடங்கும். ஒடுங்கத் தொடங்கும் நிலையே 'நோய்' எனப்படும்.

''நிலம்நீர் தீவளி விசும்பொ டைந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்'' (தொல்.மர.644)

என்ற நூற்பாவில் நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என ஒன்றுடன் ஒன்று அடங்கும் என்பதைத் தொல்காப்பியமும் காட்டுகிறது. இதில் 'கலந்த மயக்கம்' என்பது சித்தமருத்துவம் குறிப்பிடும் விகிதக் கலப்பினையே ஆதல் வேண்டும். தமிழ் மருத்துவத்தின் வழி, நோய் வருவதற்குரிய மூல காரணங்களை ஐந்து வகைகளாகப் பிரிப்பர். அவை:

1. கோள்களின் தாக்கம்
2. நச்சுப் பொருட்கள்
3. மனநிலைக் காரணங்கள்
4. செய்வினை, தீய எண்ணங்கள், செயல்களின் தாக்கம்
5. கால்வழிக் குற்றங்கள்

எனவே, நோய் தோன்றுவதற்குரிய காரணங்களுள் கோள்களின் பாதிப்பும் ஒரு காரணமாதலைச் சித்த மருத்துவம் சுட்டுகிறது.

இன்று தமிழில் கிடைக்கப்பெறும் சித்த மருத்துவ நூல்களை வகை தொகை செய்து ஆராய்ந்தால் அவை நோய், மருந்து பற்றிய நூல்களாக மட்டுமன்றி மருத்துவத்துடன் இணைந்த சோதிடம், மந்திரம், இரசவாதம், யோகம் போன்றவற்றுடன் தொடர்புடையனவாக இருத்தலை அறியலாம். சித்தமருத்துவத்தில் தேர்ச்சிபெற மேற்குறிக்கப் பட்ட நூல்களில் புலமை இன்றியமையாது தேவைப் படுகிறது. இதனைப் பதினெண் சித்தர்கள் நாடி சாத்திரத்திலுள்ள,

"சோதிடம் பஞ்ச பட்சி கலங்கிய கரநூல் மார்க்கம்
கோதறு வகார வித்தை குறுமுனி ஓது பாடல்
தீதிலாக் கக்கி லங்கள் செப்பிய கன்ம காண்டம்
ஈதெல்லாம் கற்று வளர்ந்தோர் இவர்களே வைத்தியராவர்" (7)

என்ற பாடல் வலியுறுத்துகிறது. இப்பாடலுக்கேற்ப தமிழகச் சித்தர்கள் இவற்றில் ஆழ்ந்த புலமையைப் பெற்றிருந்தனர்.

எனவே, பண்டைக்காலத்தில் சித்த மருத்துவர் சோதிடமும் கற்றவராயிருந்தனர் என்பது தெரிகிறது. மருத்துவம் செய்வதற்காக 'நாட்குறித்தல்' போன்றன அவர்களால் பின்பற்றப்பட்டன. மருத்துவம் பார்க்கச் செல்லுகையில் நற்சகுனங்கள் நிகழின் நோய் குணமாகுமென்பதையும், தீயசகுனங்கள் நிகழின் நோய்கள் குணமாகாதென்பதையும் கருத்தில் கொண்டு மருத்துவர் செயல்பட்டனர். நோயாளி இறக்கும் தருவாயில் மருத்துவரை அணுகின், நோயாளியின் ஆயுள் பலமாக இருப்பின், மருத்துவரால் நோயாளிக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. நோயாளி பெரிய நோய்களால் தாக்கப்படும்போது அவனுக்கு மருத்துவம் செய்வதற்கு, முதற்படியாக அவனது ஆயுள் பார்க்கப்பட்டது. எனவே பழங்கால மருத்துவர் சாதாரணக் காய்ச்சல், தலைவலி, வயிற்றுவலி முதலியவற்றைத் தவிர பிறவற்றிற்கு மருத்துவம் செய்வதற்கு முன்பு சாதகக் குறிப்பைப் பார்த்து மருத்துவம் செய்வதா வேண்டாமா, செய்வதாயின் எப்படி எம்முறை என்றெல்லாம் அறிந்து செயல்பட்டிருக்கின்றனர்.

நோயாளியின் பொருட்டு மருத்துவரைக் காணவந்த தூதன், கிழக்கு, வடக்கு, வடகிழக்குத் திசைகளிலிருந்து மருத்துவரை அழைப்பின் நோய் தீரும்.

தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்குத் திசைகளிலிருந்து அழைப்பின் மரணம் ஏற்படும். மேற்கில் இருந்து அழைப்பின் நோய் நீங்குவது மத்திமம். வடமேற்குத் திசையிலிருந்து அழைப்பின் நோய் தீராது.

மருத்துவரைப் பார்த்தபின் தூதுவன் திரும்பிப் போகும்போது வடமேற்கு, தென்கிழக்கு, மேற்குப் பக்கங்களில் போனால் நோய் நீங்கும்; கிழக்குத்

திசையாயின் நோயுறுவர். தென்மேற்குத் திசையாயின் சிறிய பயத்தைத் தரத்தக்கது.

மேடம், இடபம், கடகம், விருச்சிகம், மகரம், மீனம் போன்ற இராசிகள் நடக்கும்போது தூதுவர் மருத்துவரையழைக்க வரின் நோய் தீராது மரணம் ஏற்படும்.

மருத்துவரை அழைக்க வந்தவன், நோயாளி இவர்கள் இருவரின் பெயர்களிலுள்ள முதலெழுத்து, வளர்பிறை, தேய்பிறை, அன்றைய கிழமை இவற்றைக் கொண்டும், தூதன் வந்துநின்ற இலக்னத்தைக் கொண்டும் பிரசன்ன முறையில் கணக்கிடப்பட்டு நோய் தீரும், தீராது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

பிணியாளியின் பொருட்டு, மருத்துவரை அழைத்துவர அனுப்பப்படும் தூதனின் அமைப்பு, செயல் முறைகளிலிருந்து பிணி தீரும், தீராதென வரையறுத்துள்ளமை சிந்தனைக்குரியது.

மருத்துவம் செய்ய, 'மாதம், நாள், நட்சத்திரம், திதி, இலக்னம், இராசி' (இணைப்பு-8) இவற்றை மருத்துவர் கடைப்பிடிக்க நற்பயன் கிட்டும் என நம்பப்பட்டு சித்த மருத்துவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

## நாடி

நாடி பார்ப்பதற்குக் கூட நாள், நேரம் பார்க்கப்பட்டு இருக்கின்றது. மனித உடலில் 72,000 நாடிகள் இருப்பதாக அறியப்படினும் வாதநாடி, பித்தநாடி, சிலேத்துமநாடி என்ற மூன்றை மட்டுமே கொண்டு அனைத்து வகையான நோய்களையும் அறிய முடிந்ததால் சித்தர்கள் இம்மூன்றை மட்டுமே நாடியெனக் கருதினர். நாடிகளை அறியும் சிறப்பான காலமாக சில மாதங்களைத் தமிழ் மருத்துவர் குறித்துள்ளனர். ஆடி முதல் ஐப்பசி மாதங்களில் வாதமும், பங்குனி முதல் ஆனி வரை பித்தமும், கார்த்திகை முதல் மாசி வரை சிலேத்துமமும் வளர்ச்சி பெறும்.

| | |
|---|---|
| திங்கள், புதன், வெள்ளி | - வாதம் |
| சனி, ஞாயிறு, செவ்வாய் | - பித்தம் |
| வியாழன் சுக்கில பட்சம் | - வாதம் |
| வியாழன் கிருஷ்ண பட்சம் | - பித்தம் |

என்பது எந்த நாட்களில் எந்த நாடி மிகுந்து நடக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஒவ்வொரு மாதத்திலும் எந்த நேரத்தில் நாடி பார்க்க வேண்டும் என்பதைக் காட்டும் மருத்துவப் பாடல் காலம், நேரம் இவற்றை மனத்தில் கொள்ள வேண்டும் என்பதனை,

'சித்திரை வைகா சிக்கும் செழுங்கதிர் உதயம் தன்னில்
அத்தமாய் ஆனி ஆடி ஐப்பசிக் கார்த்தி கைக்கும்
மத்தியா னத்தில் பார்க்க மார்க ழிதை மாசி
வித்தகன் கதிரோன் மேற்கில் விழுகின்ற நேரம் தானே''
''தானது பங்கு னிக்கு தனதுநல் ஆவ ணிக்கும்
மானமாம் புரட்டா சிக்கும் அத்தராத் திரியில் பார்க்க
தேனென மூன்று நாடி தெளிவாகக் காணு மென்று
கானமா முனிவர் சொன்ன கருத்தை நீகண்டு பாரே''

என்ற பாடல் காட்டுகின்றது.

இம்மூன்று நாடிகளின் நடையாலும், நடை மாறு பாட்டால் உண்டான குணங்களாலும் மனிதனுக்கு மரணம், நாழிகை, நாட்கள், மாதங்கள், நட்சத்திரங்கள் போன்ற எந்தெந்தக் காலக்கட்டங்களில் நிகழும் என்பதைச் சித்த மருத்துவர் அறியும் திறன் பெற்றிருந்தனர். அதாவது உடம்பில் நோய்க்கான பலவித அறிகுறிகள் தோன்றும் போது அவ்வறி குறிகளுக்கேற்ப மூன்று நாடிகளும் எப்படிச் செயல் படுகின்றன என்பதைக் கொண்டு இரேவதி, பரணி, சுவாதி, ஆயில்யம் போன்ற நட்சத்திரத்தில் எவ்வகை நட்சத்திரத்தில் மரணம் என்பதை அறிந்தனர். காட்டு: சிலேத்தும நாடியானது பச்சோந்தி போல் அடிக்கடி நடக்குமானால், சுரம், மயக்கம், தாகம், கோபம், வலி, வீக்கம், விலாவில் குத்தல், ஆகமம் போன்றவை இருக்குமானால் ஆயில்ய நட்சத்திரத்தில் பகல் மதிய வேளையில் மரணம் ஏற்படும்.[10]

கட்டுதல், பற்று, ஒற்றடம், பூச்சு, வேது, களிம்பு, ஊதல் முதலிய புற மருந்துகள் 32இல் 'அட்டைவிடல்' என்பதும் ஒன்று. ஒருவரது உடலிலுள்ள கெட்டநீர், கெட்ட இரத்தம் ஆகியவற்றை வெளியேற்ற நினைக்கும் சித்த

10. மரணக்குறிகள், பக்.132-33.

மருத்துவர் அட்டையை விட்டு உறிஞ்சச் செய்தல் 'அட்டைவிடல்' எனப்படுகின்றது. இந்திந்தத் திதிகளில் இவ்விவ்விடங்களில் அட்டை விடக்கூடாது. அவ்விடங் களில் அமிர்தம் நிற்கின்றபடியால் அட்டை விடில் மரணம் ஏற்படும்.

**அட்டையை விடக்கூடாத இடங்களும் திதிகளும்**

| திதி | இடம் | திதி | இடம் |
|---|---|---|---|
| 1. பிரதமை | பெருவிரல் | 9. நவமி | கழுத்து |
| 2. துதியை | உள்ளங்கால் | 10. தசமி | அதரம் |
| 3. திரிதியை | முழங்கால் | 11. ஏகாதசி | நாக்கு |
| 4. சதர்த்தி | தொடை | 12. துவாதசி | நெற்றி |
| 5. பஞ்சமி | குய்யம் | 13. திரயோதசி | புருவம் |
| 6. சஷ்டி | நாடி | 14. சதுர்த்தசி | பிடரி |
| 7. சப்தமி | தனம் | 15. பூரணம் | உச்சி[11] |
| 8. அஷ்டமி | கரம் | | |

**மேற்குறிப்பிட்ட இடங்களில் அமைந்துள்ள வர்மங்கள்**

| | |
|---|---|
| 1. கால்பெருவிரல் | பூமிக்காலம் |
| 2. உள்ளங்கால் | வெள்ளைவர்மம் |
| 3. முழங்கால் | சன்னிவர்மம் |
| 4. தொடை | ஆமைக்காலம் |
| 5. நாபி | அன்னக்காலம் |
| 6. மார்பு | தூசிக வர்மம் எட்டு |
| 7. கழுத்து | சங்கு திரிக்காலம் |
| 8. நெற்றி | மூர்த்தி வர்மம் |
| 9. புருவம் | மேல்மந்திரக் காலம் |
| 10. பிடரி | பிடரிக்காலம் |
| 11. உச்சி | கொண்டைக்கொல்லி வர்மம்[12] |

11. குணபாடம், தாதுசீவ வகுப்பு, ப.430.
12. சித்த மருத்துவ ஆய்வுக்கோவை, ப.20

என இவ்விடங்கள் வர்ம இடங்களாகவே உள்ளன. இதனால் இக்குறிப்பிட்ட திதிகளில் ஒவ்வொரு வர்மத்தையும் சுற்றியுள்ள துணை வர்மங்கள் முக்கிய வர்மங்களுக்கு உதவாது. மேலும் முக்கிய வர்மங்கள் (அமிர்த கலைகள்) மேலெழுந்த வாரியாகக் காணப்படும். இதனால் அத்திதிகளில் அவ்விடங்களில் அட்டைவிடல் மிகுந்த உதிரப் போக்கையும், பக்க விளைவையும் ஏற்படுத்தும்.

இங்ஙனம் நாள் நேரம் கடைப்பிடிக்கப்பட்டமைக்குக் காரணத்தை ஆய்ந்தால் அறிவியல் சார்ந்த உண்மைகள் வெளிப்படுத்தப்பட வாய்ப்பு உண்டு. காட்டாக, மாதங்களில் சித்திரை, வைகாசி மாதங்கள் மருத்துவம் செய்ய ஏற்புடைய மாதங்களாகக் கொள்ளப்படுகின்றன. இம்மாதங்களில் அசுத்தங்கள் உடலிலிருந்து வெளிப்படு மாகையால் இக்காலங்களில் மருந்துண்பதால் இயற்கை ஆற்றலுடன் மருந்தின் ஆற்றலும் கூடி விரைவில் நோய் நீங்கி உடல் நலமடைகிறது.

ஒவ்வொரு மாதத்திலும் சில குறிப்பிட்ட நாட்கள் மிகக் கெடுதலான நாட்களாகக் கருதப்படுகின்றன. காட்டு: வைகாசி, *3*, *16*, *17* ஆகிய நாட்கள்; ஆனி *1*, *6* ஆகிய நாட்கள். அந்நாட்களில் காயம், நோய், கருச்சிதைவு போன்றவை ஏற்படும்; பெண் பூப்படைந்தால் திருமண நிகழ்ச்சியில் துன்பம், மலடியாதல், கருச்சிதைவு, கணவனை இழத்தல், நோயால் மரணம் போன்றவை ஏற்படும் என்று கூறப்படுகின்றது (இணைப்பு. *9*). எனவே, இந்நாட்களை அறிந்து முன்னெச்சரிக் கையுடன் செயல்படவும் சோதிடம் துணைபுரிகின்றது.

அசுவினி முதல் இரேவதி வரையுள்ள 27 நட்சத்திரங்களுக்கும் நான்கு பாதங்கள் சோதிடத்தில் கூறப்பட்டுள்ளன. நோய் உண்டான காலத்து எந்த நட்சத்திரம் நடக்கின்றதோ அந்த நட்சத்திரத்தையும் நட்சத்திர பாதத்தையும் கொண்டு நோய் தீரும் நாள், நோய் தீராதாயின் கொல்லும் நாள் ஆகியன சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளன.

ஒரு குறிப்பிட்ட நட்சத்திரமும் நட்சத்திரப் பாதமும் இருக்கும் நாளில் காய்ச்சல் (சுரம்) வரும் எனில் இத்தனை நாளில் தீரும் எனக் கணக்கிட்டுக் கூறப்பட்ட செய்தி 'புலிப்பாணி வைத்தியம்' என்ற நூலில் காணப்படுகிறது. இச்செய்தி பல சித்த மருத்துவ நூல்களில் இடம் பெற்றுள்ளது.

காட்டு:

| | | |
|---|---|---|
| முதல் பாதம் | - | ஒன்பது நாளில் நோய் தீரும் |
| இரண்டாம் பாதம் | - | மரணம் |
| மூன்றாம் பாதம் | - | 15 நாளில் நோய் தீரும் |
| நான்காம் பாதம் | - | மரணம் (இணைப்பு.10) |

குறிப்பிட்ட நட்சத்திரத்தைக் கொண்டு காய்ச்சல் வரும் எனில் இத்தனை நாளில் தீரும், தீராது என்ற செய்தி 'அகத்தியர் காவியம்' (1086-1096) என்ற நூலிலும் காணப்படுகிறது. இந்நூலில் 27 நட்சத்திரங்களுக்கு மட்டுமே காய்ச்சல் பற்றிக் கூறப்பட்டு நட்சத்திர பாதங்களுக்குக் கூறப்படவில்லை.

எக்கிழமையுடன் எந்நட்சத்திரம் கூடின் ஆகாது என்ற செய்தியும் 'புலிப்பாணிவைத்தியம் 500'இல் கூறப்பட்டுள்ளது. ஞாயிறும் பரணியும், திங்களும் சித்திரையும், செவ்வாயும் உத்திராடமும், புதனும் அத்தமும், வியாழனும் கேட்டையும், வெள்ளியும் பூராடமும், சனியும் இரேவதியும் கூடிய நாட்களில் நோய் வந்தால் தீராது. ஒவ்வொரு கிழமையிலும் வரும் இராகு காலம், எமகண்டம் போன்ற நேரங்களில் நோயாளியைச் சென்று பார்க்காது இருப்பது நல்லது.

''ஆதிரை பரணி கிருத்திகை ஆயில்யம் முப்பூரம்
கேட்டை தீதுறும் விசாகம் அவிட்டம் சுவாதி
மகம் ஈறாறில் பாயினில் படுத்தோர் தேறார்
மாதரைப் புணர்ந்தோர் தேறார்; வழிநடை
சென்றோர் மீளார், பாம்பின்வாய் தேரை தானே''

என்பது பண்டைய மருத்துவப் பாடல். இது தீய நாள் தீய கோள்களைப் பற்றிய செயதிகளை விளக்குகிறது. இப்பாடல்வழி மானிட உடல் இயக்கத்திற்கும் கோள்நிலை இயக்கத்திற்கும் உள்ள உறவு பற்றிய அக்கால

நம்பிக்கையை அறிய முடிகிறது. இந்த நம்பிக்கையில் ஆழ்ந்த உண்மை இருப்பதை அண்மைக்கால ஆய்வியல் அறிக்கைகள் உறுதிப்படுத்தி வருகின்றன. எனவே முன்னோர்கள் இப்பனிரெண்டு நாட்களையும் நற்செயல்களுக்கு விலக்கினர் என்பது தெரியவருகின்றது. தொடர்ந்து கார்த்திகை, உத்திரம், உத்திராடம் ஆகியவை காலற்ற நாட்கள்; மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் - உடலற்ற நாட்கள்; புனர்பூசம், விசாகம், பூரட்டாதி - தலையற்ற நாட்கள் என்று வகைப்படுத்துகிறது சோதிடம். எனவே இந்நாட்களில் கருத்தரித்தால் அக்குழந்தைகள் குறையுள்ளவர்களாக இருப்பர் என்று அந்நாட்களைப் புணர்ச்சிக்கு ஒதுக்கினர்; மேலும் அப்பெண் மலடாகவும் ஆதல் கூடும்.

இக்கோள்கள் வரும் நாட்களில் மனித உடலில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்து, அந்நாட்களில் புணர்வதால் கருத்தரிக்காமல் போகுமா என்பதையும் ஆய்ந்தால், முன்னோர் அறிந்த இம்முறை சிறந்த முறையாக அமையும்.

'யூகி முனிவர் வைத்திய சிந்தாமணியில்' பன்னிரண்டு மாதங்களில் வரும் கரிநாட்கள் கணித்தறியப்பட்டு அந்நாட்களினால் ஏற்படும் தீய பலன்கள் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு பாடலாக 12 பாடல்களில் கூறப்பட்டுள்ளன. மாதந்தோறும் கரிநாட்கள் வந்தபோது அந்நாட்களில் பூப்படைந்த மங்கையர்க்கும், அத்தகைய நாளில் பிறந்த குழந்தைகளுக்கும் ஆகாது என்பன போன்ற செய்திகள் இதில் இடம் பெறுகின்றன.[13]

ஒருவர் பிறந்த நேரத்திற்கு ஏற்றாற்போலவே அவர்களுடைய உடல்நலமும் அமைந்திருக்கும். பிணியுற்றவர்களுக்குப் பிறந்த நாள் ஆகாது. பிறந்த கிழமை, நாள்மீன், பிறந்த நாள் மீனிலிருந்து வரும் ஒன்று, இரண்டு, எட்டு ஆகிய நாட்கள் உடம்புக்கு ஆகாத நாட்கள் என்று திருமந்திரம் (723) கூறுகிறது. மருத்துவத்திற்குரிய நாளும் கோளும் அறிவது போல கோள்கள், நட்சத்திரங்கள், இராசிகள் போன்றவற்றிற்கு ஏற்ப மருந்துப் பொருள்களும் தேர்ந்து

13. யூகி முனிவர் வைத்திய சிந்தாமணி ப.13-18.

கையாளப்படுகின்றன. 27 நட்சத்திரங்களுக்கும் 17 வகையான மருந்துப் பொருட்கள் சித்த மருத்துவத்தில் கூறப்படுகின்றன.

'அசுவினி - அட்டுப்பூ
மிருகசீரிடம் - தாளகம்
திருவாதிரை - வீரம்
உத்திரம் - இரசகற்பூரம்
உத்திராடம் - சீனம்
இரேவதி - சிப்பிநீர்' (இணைப்பு.11)

ஒவ்வொரு கோளிற்கும் உரிய கற்கள், உலோகங்கள், நவதானியங்கள், மலர்கள், சமித்துகள் உண்டு. எந்தக் கோள்களினால் நோய் ஏற்படுகின்றதோ அந்தக் கோள்களுக் குரியவற்றை உள்ளுக்குக் கொடுத்தலும் அணியச் செய்தலும் நோய் தீர்க்கும் முறைகளாகப் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. (இணைப்பு.12). சமித்துகளில் கேதுவிற்குரிய தாவரம் - தர்ப்பை, கிரகண காலங்களில் தர்ப்பை போடப்பட்ட பொருட்கள் விடத்தன்மை இல்லா மலும், போடப்படாத பொருள்கள் நச்சுத் தன்மையுடைய தாகவும் உள்ளன. கிரகணம் என்பது இராகு, கேது இவற்றின் ஆதிக்கமே. இந்த ஆதிக்கத்தைக் கேதுவிற்குரிய தர்ப்பை தடுப்பதால் கேதுவிற்குரிய செடி தர்ப்பை எனச் சோதிட முறையில் கூறப்பட்ட செய்தி அறிவியல் உண்மையாக உள்ளது. இந்தத் தர்ப்பையைப் போடும் வழக்கு மக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது. சோதிடத்தில் கூறும் செய்திகள் நடைமுறையில் பின்பற்றப்பட்டுள்ளதை இதனால் அறிய முடிகிறது. இங்ஙனம் சோதிடம் பற்றிய பல அரிய அறிவியல் செய்திகள் காரண காரியம் அறியாமல் மக்களால் வழக்கில் பின்பற்றப்படுவதைக் காணமுடிகிறது.

## இரசமணி மருத்துவம்

"வானிலையொட்டிய கோள்களின் உச்ச, தாழ்ந்த தன்மை, அவற்றின் ஆதிக்கம் முதலியவற்றைக் கருதி நோயாளியின் நோய் குணமாவதற்கான மருந்தினைத் தரும் முறையே 'ரசமணி மருத்துவம்'[14] என்று கருதுவர்.

14. சித்தர்கள் கட்டுரை, இரா.மாணிக்கவாசகம், ப.158

வரலாற்றுக்கு முற்பட்ட கால முதலே, தமிழகத்தில், கோள் நிலைத்தாக்கம் பற்றிய செய்திகள் உள்ளன என்று கூறுகின்றார் அறிஞர் பூரணலிங்கம்பிள்ளை''.[15]

மணி, மந்திரம், ஔடதம் என்பதில் மணி என்பது சோதிடத்தைக் குறிக்கிறது. அதாவது ஒரு நோயாளியின் நோயைத் தீர்ப்பதற்குச் சோதிடம், மந்திரம், மருந்து இம்மூன்றும் தேவைப்படும் என்று சித்த மருத்துவம் கூறுகின்றது. மணி என்பது சோதிட முறையில் நவமணிகளை நோய் தீர்க்க அணிதல். மணிகளைப் போலவே ஸ்வர்ணம், வெள்ளி, தாமிரம், பாதரசம் முதலான உலோகங்களைக் கொண்டு சோதிட முறையில் நோய் தீர்த்தலும் இவ்வகையில் அடங்கும்.

நவரத்தினங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வியாதியைப் போக்கும் குணமுண்டு. நவரத்தினங்களில் அதற்குரியதை மோதிரமாக, மாலையாகச் செய்து போட்டுக் கொள்வதால் நோய் தீரும். எனவே கோள்களுடைய வலிமைக் குறைவினால் நோய் ஏற்படின் அந்நோயைத் தடுக்க அந்தந்தக் கோளுக்கு அணிய வேண்டிய இரத்தினம் முதலியவை சோதிடத்தில் குறிக்கப் பட்டுள்ளன.

நவரத்தினங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வர்ண ஒளிவீசும் தன்மை உண்டு. வான மண்டலத்திலுள்ள கோள்களின் இயற்கைத் தன்மை, அந்தக் கோள்களுக்குத் தொடர்புடைய வர்ணமுடைய இரத்தினத்தில் கோள்களின் இரேகை விழுவதால் திரட்டப்படுகிறது. காட்டாகப் புட்பராகம் எனும் இரத்தினம் மஞ்சள் நிறமுடையது. இதனை வெகுகாலத்திற்கு முன்பிருந்தே நோய் தீர்க்கும் சஞ்சீவியாகப் பயன்படுத்தி வந்தனர். இயற்கையில் மஞ்சள் நிறமுடைய இந்த இரத்தினம், உடலில் அணியப்படுவதால் உடல் நோய்வாய்ப்பட இருக்கும்போது திடீரென நிறம் மாறிக் காட்சியளிக்கும். இதனால் நோய் வரவிருக்கின்றது என அறிந்து தொடக்கத்திலேயே மருத்துவம் செய்து கொள்ள முடிந்தது.

சனிக்கோளின் தீய சக்திகளை மிகுதியாகக் குறைக்க நீலநிறமுடைய நீலமணி உதவுகிறது. சனிக்கோளினின்று

---

15. Tamil India, Chapter X, P.125

வரும் இரேகையின் ஒளி நீலம். அந்நீல நிற இரத்தினத்தில் இதன் ஒளி திரட்டப்பட்டிருப்பதால், இதனை அணிபவருக்குச் சனியின் தீய சக்தியைத் தாங்கும் ஆற்றல் உண்டாகிறது என்று 'இபின் பட்டூடா' கூறியிருக்கிறார்.[16]

மன்னர்களும் செல்வந்தர்களும் தங்கள் சாதகங்களைத் தங்கத் தகட்டில் எழுதி வைத்திருந்தனர். இராசியில் ஒன்பது கோள்கள் இடம் பெற்றுள்ள இடத்தை, அந்தக் கோளுக்குரிய நவரத்தினத்தால் அலங்கரித்தனர். தாங்கள் அணியும் கிரீடங்கள், அமரும் சிம்மாசனம் போன்றவற்றில் கோள்களுக்குரிய நவரத்தினங்களை இழைக்கச் செய்து தோடம் பரிகாரம் செய்துகொண்டனர்.[17]

பண்டைத் தமிழ் மன்னர்கள் பகலில் மாணிக்க மாலைகளையும் இரவில் முத்துமணிமாலைகளையும் அணிந்தனர். இதற்குக் காரணம் அழகுணர்ச்சியைவிட மேலான வேறொன்றும் உண்டு. மாணிக்கமானது சூரியனில் இருக்கின்ற ஆற்றலை மனித உடலுக்கு எடுத்துத் தருகிறது. முத்தானது சந்திரனில் இருக்கின்ற குளிர்ச்சியினை உடலுக்குப் பெற்றுத் தருகிறது.

ஒன்பது கோள்களுக்கு உள்ளது போலவே 12 இராசிகளுக்கும் நவரத்தினங்கள் உள்ளன. காட்டு: மேடம், விருச்சிகம் - நற்பவளம்; சிம்மம் - சிவப்பு மாணிக்கம், கார்னெட் (இணைப்பு. 13). நவரத்தினங்களை அணிந்து கொள்வது பற்றிச் சோதிடர் பல மாறுபட்ட கருத்துகளைக் கூறுகின்றனர். எனவே ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட சோதிடரை அணுகும்போது எக்கல்லை அணிவது என்ற குழப்ப நிலைக்கு உள்ளாகிறார். பிறந்த தேதியில் என்ன இலக்னமோ அதற்குரிய கல்லை அணியலாம். நவரத்தினங்களில் அனைத்தையும் அனைவரும் அணியலாம்; கோள்களால் ஏற்படும் பாதிப்பைத் தடுக்க அக்கோள்களுக்குரியவற்றை மட்டும் அணியலாம். சாதகத்தில் எந்தக் கோள் உச்சமோ அதற்கேற்ற அதிர்ஷ்ட இரத்தினம் அணியலாம். இராசிக்குரிய கற்களைப் பயன் படுத்தலாம். நவரத்தினங்களை ஒரே மோதிரத்தில் அணியலாம்;

---

16. இயற்கை தரும் இன்மருந்துகள், ப.250
17. ஜோதிடம் - கிரக பாவ பலன்கள், ப.13.

நடப்பு தசா மோசமாயின் அக்கோளுக்கு விருப்பமான உலோகத்தில் கல்லைப் பதித்து அணியலாம் என்று பலவிதமான கருத்துகளைச் சோதிடர் கூறுகின்றனர்.

இவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது சில தெளிவுகளைப் பெற முடிகின்றன. அவை, இலக்னாதி பதியின் கற்களைக் கையில் தொடர்ந்து அணியலாம். அத்துடன் தற்போது நடக்கும் தசாவுக்குரிய கோளின் கல்லையும் அணியலாம். தசா மாறியதும் அடுத்துவரும் தசாவுக்குரிய கல்லை அணிய வேண்டும். தசா தீமை செய்யும் கோளாயின் அத்தசாவுக்குரிய கல்லை அணியக் கூடாது. மோசமான தசா நடக்கும்போது எவ்விதக் கல்லையும் அணியாமல் இருந்து விடலாம். அணியும் கற்கள் குற்றமற்றதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அணியத் தேர்ந்தெடுத்த கல்லை ஓரிரு மாதங்கள் தன்னுடன் வைத்துச் சோதித்துப் பார்த்து எவ்விதத் தீய நிகழ்வுகளும் ஏற்படவில்லை எனில் அதன்பின் மோதிரத்தில் பதிக்கலாம்.

பொருத்தமில்லாத கற்களைத் தேர்ந்து அணிந்து கொள்வது என்பது நன்மை அளிப்பதற்குப் பதிலாகத் தீமையையே விளைவிக்கும். நவரத்தினங்களை அணியும் போது அவற்றிற்குரிய கோள்களின் செயல்பாட்டுச் சக்தியை ஊக்குவிக்கின்றது. நன்மை செய்ய வேண்டிய கோள் எனில் நன்மை செய்யும் சக்தியை அதிகப்படுத்துகின்றது. தீமை செய்ய வேண்டிய கோள் எனில் தீமை செய்யும் சக்தியை அதிகப்படுத்துகின்றது.

இங்ஙனம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான இரத்தினக் கற்களை அதிர்ஷ்டமுடையதாகச் சோதிடத்தில் கூறுவதை அறிவுப்பூர்வமாகப் பார்க்கும்போது அவற்றின் மருத்துவக் கூறுகள் புலனாகின்றன.

மூலிகை பறிப்பதற்கு உரைக்க வேண்டிய மந்திரங் களும், பறிக்கும் முறைகளும், கற்பவகைகளும், அப்போது கடைப்பிடிக்க வேண்டிய திதி, இராசி, நட்சத்திரம், வாரம், நல்ல நேரம் ஆகியனவும் மருத்துவ மந்திர முறைகளில் பெரும்பாலும் கையாளப்படுகின்றன.

மூலிகையை எந்த நாளில் பறிக்க வேண்டும், பறிக்குமுன் எந்நாளில் காப்புக் கட்ட வேண்டும் என்பவை நாள், கோள் ஆகியவற்றில் இருந்த மிகுதியான நம்பிக்கையைப் புலப்படுத்துகின்றன. கோகுல அட்டமி நாள், வெள்ளிக்கிழமை கிருஷ்ணன் பிறந்த நாள் இந்த நல்ல நாளில் துளசிக்குக் காப்புக் கட்டி மந்திரம் செபித்தால் தொட்டது அனைத்தும் சித்தியாகும்[18] என்ற காட்டு நல்ல செயல்களுக்கு நல்ல திதி, நட்சத்திரம், வாரம், நேரம் போன்றவற்றைக் கடைப்பிடித்தலைக் காட்டுகின்றது. அதேபோல் தீமைகளிலிருந்து விடுபட தீயநாளைக் கடைப்பிடித்தனர் என்பதை, 'சிறிய நங்கைச் சமூலம் வாங்கக் கரிநாளில் காப்புக் கட்டி நண்பகலில் பறித்து மந்திரம் ஓதினால் தீய சக்திகளை வெல்லலாம்'[19] என்ற எடுத்துக்காட்டு உணர்த்துகின்றது.

'விசாகத் திருநாளன்று வட்டத்துத்தியின் பெருவேரில் காப்புக்கட்டி சுவாதியில் மந்திரம் ஓத தீயிலும் நடக்கலாம்'[20] என்ற குறிப்பும், மேற்சொன்னவையும் காப்புக்கட்ட, காப்புக்கட்டி மந்திரம் ஓத, நல்ல நாளில் காப்புக் கட்டியபின் மீண்டும் நல்லநாள் பார்த்து மந்திரம் ஓத என ஒவ்வொரு நிலையிலும் சோதிடம் பயன்படுத்தப்படுகின்றதைக் காட்டுகிறது. சித்திரை, வைகாசி மாதங்களில் திரட்டப்படும் வெள்ளெருக்கன் செடியின் வடக்குப்புற வேர் பெருநோய்ப்புண் ஆற்றும்[21] என்பது மூலிகைகளைத் திரட்ட நல்ல மாதங்களைப் பயன்படுத்தினர் என்பதைக் காட்டுகிறது.

இங்ஙனம் எதிரியை அழித்தல், பெண்டிரை வசியப் படுத்துதல், நடக்கும் நிகழ்ச்சிகளை அறிதல், நீரில் மிதத்தல், தீயில் நடத்தல், புதையல் எடுக்கும் முறைகள் முதலிய வற்றை அறிய உதவும் மருத்துவ மந்திர முறைகள் பலவற்றிலும் காப்புக் கட்ட, மூலிகைகளைத் திரட்ட, மந்திரம் ஓத நாள், திதி, இராசி, மாதம், வாரம், நேரம் முதலியன பெரும்பாலும் கடைப்பிடிக்கப்படுகின்றன.

---

18. கருவூரார் பலதிரட்டு, ப.204, 19. மேற்படி, ப.205
20. மேற்படி, ப.205
21. பொருட்பண்பு நூல், க.ச. முருகேச முதலியார், ப.366

நெருங்கிக் கொண்டிருப்பவனுக்கு மருத்துவம் செய்வது பயன்தராது என்பர். 'சாப்பிணி மருந்தேற்காது' என்னும் பழமொழி இதனை உறுதிப்படுத்தும். மரண அறிகுறிகளைக் கொண்டுவிட்ட பிணி, எத்தகைய மருந்து களைக் கொடுத்தாலும் ஏற்காது என்பதே இப்பழமொழியின் கருத்தாகும். தமிழ் மருத்துவத்தில் எந்த ஒரு பிணிக்கும் தீரும்நிலை, தீரா நிலைகளை வகுத்துக் கூறியுள்ளனர். தீராத அறிகுறிகளைக் கொண்டுள்ள நோய்களைச் 'சாப்பிணி' என்பர். அதற்கு மருந்து கொடுக்கக் கூடாது என்றும் கூறுவர்.

''பித்தமது அடங்கினால் பேசாதே போய்விடு
எத்தியது எழும்பினால் கிட்டாதே - எத்திய
வாதம் எழும்பிடில் மருந்து செய்''

என்பது பிணிக்கு மருந்தளிக்கும் விதியினை வகுக்கும் பதினெண் சித்தர் நாடி நூற்பாடலாகும். பித்தநாடி அடங்கி விட்டால் மரணம் நிகழும்; ஐயம் எனும் கபநாடி அதிகமாகத் துடிக்கத் தொடங்கினால் மருத்துவம் பயனளிக்காது; வாத நாடி எழும்பினால் அது நோய் தீரும் அறிகுறி. எனவே அப்போது மட்டும் மருந்து செய் என்ற இப்பாடற் கருத்து நாடி நிலைத் தேர்வு நோய் தீரும், தீராது என அறிதற்குப் பயன்படுதலைக் காட்டுகிறது. சோதிடத்தின் வழி மரணத்தை அறியும் முறையினைக் கூடலூர் கிழாரின் பாடல் புலப்படுத்துகிறது. இவர் கோச்சேரமான் யானைகட் சேய்மாந்தரஞ் சேரலிரும் பொறையின் மரணத்தை ஏழு நாட்களுக்கு முன்னதாகவே, கோள்நிலை இயக்கத்தின் வழி அறிந்து பாடியதாக இப்பாடல் அமைகின்றது.

பாம்பு, தேள் போன்ற விசக்கடிகளால் துயருறு வோருக்கும், எதிர்பாராதவிதமாக விபத்து அடைந் தோருக்கும், குழந்தைப்பேறு, சன்னி, வாந்தி, பேதி முதலான நோயுற்றோருக்கும், குன்மம், கடின சுரம், இரத்தப் போக்குடைய நோயாளிகள் முதலானோர்க்கும் மருத்துவம் செய்ய நாளும், கோளும் பார்க்க வேண்டிய தேவையில்லை.

பாம்புக்கடி

பாம்பு ஒருவனைக் கடித்திட்டால் அவர் பிழைப்பாரா என அறிய அவனுடைய பிறப்பு சாதகத்தைக் கொண்டு, ஆயுள்பலம் இருப்பின் பிழைத்துக் கொள்வான் என்றும், ஆயுள்பலம் இல்லையெனில் இறந்துவிடுவான் என்றும் அறிந்து அதற்கேற்பவும் சிகிச்சை முறையை மேற்கொள் கின்றனர். அவனுக்கு ஆயுள்பலம் குறைவாக இருப்பின் இறப்பிற்கு வாய்ப்பு மிகுதி என்பதால் பாம்புக்கடிபட்டவர் சிகிச்சை தொடங்கும்போது மோசமான நிலையில் இல்லாவிட்டாலும் அவருக்குத் தீவிர சிகிச்சை அளிப்பதுடன் மருத்துவரின் கவனம் முழுவதும் அவன் நன்கு குணமாகும்வரை அவர்மீதே இருக்கின்றது. அவருக்கு ஆயுள்பலம் இருப்பின் சித்த மருத்துவர் முறையான மருத்துவ சிகிச்சையைத் தாமதமின்றி அதே நேரத்தில் வேகம் காட்டாமலும் செய்கின்றார்.

மற்ற நோய்களைவிட, பாம்புக்கடியில் மட்டுமே கோள்களின் தாக்கம் மிகுதியாக இருக்குமெனச் சித்தர்கள் நம்பினர். செவ்வாய் தனது பகையான சந்திரனது வீட்டில் (எட்டாமிடம்) மேலாதிக்கம் பெற்று, சந்திரன் ஏழாம் வீட்டில் இருந்தால், செவ்வாய்க்கு உரியவர் (அதாவது செவ்வாய் உச்சநிலையில் இருக்கும்போது பிறந்தவர்) பாம்பு கடித்துச் சாவார் எனச் சோதி— நூல்கள் குறிப்பிடுகின்றன. அதேபோல் புதன் அல்லது வெள்ளி உச்சநிலையில் இருக்கும்போது பிறந்தவர் ஏதாவது ஒருவகை நஞ்சால் மரணமடைவர் என்றும் சோதிட நூல்கள் குறிப்பிடுகின்றன. சோதிடத்தில் இராகு கேது பாம்புகளின் பெயர்கள் முக்கிய இடம் பெற்றுள்ளது என்பது கிரகணத்தன்று பாம்பு ஒருவனைக் கடித்தால் தெய்வத்தால் கூட அவனைக் காப்பது கடினம் என்பதும்,[23] ஏழுமாதம் நிறையும் முன் எந்தக் கிரகணத்தைக் கண்ணால் பார்த்தாலும் கருச்சிதைவு ஏற்படும் (நம்பிக்கை) என்பதும் ஒப்பு நோக்கத்தக்கது.

எனவே, பாம்பு கடிப்பதற்கு ஊழ்வினை மட்டுமன்றி, ஒருவன் பிறக்கும்போது உச்சநிலையில் இருக்கும் கோள்களும் காரணம் எனச் சித்தர்கள் நம்பினர். அதன் காரணம் பாம்பு கடித்தவனுக்குப் பிறந்த நேரத்தில் கோள்

---

23. சீவக. 1280

நோய் வருவதற்கான காரணங்கள் சோதிடத்தில் கூறப்பட்டுள்ளன. இவை எளிதில் மக்களைச் சென்றடையப் புராணக் கதைகளையும் பயன்படுத்தியுள்ளனர்.

சந்திரனின் குரு வியாழன். வியாழகுருவின் மனைவி தாரையின்மீது சந்திரன் மோகம் கொண்டு புதன் என்ற பிள்ளையைப் பெற்றான். குரு துரோகியைச் சயரோகம் பற்றவேண்டுமென்று குரு சாபம் இட்டதால் தேய்பிறை வந்தது. சென்னை திருவான்மியூரில் மூழ்கியே சாப நிவர்த்தி பெற்றான் சந்திரன். இச்சந்திரனுக்கு அருளியவர் மருந்தீசர். வளர்பிறைச் சந்திரன் வியாழனுடன் கூடிய குருசந்திர யோகத்தில் அறிவு, செல்வம் முதலியன வருதலும், தேய்பிறைச் சந்திரன் குருவுடன் கூடியதாலும் வியாழன், சந்திரன், புதன் ஆகியோர் கூடியதாலும் ஆஸ்துமா, சயரோகமாகிய டி.பி. ஆகியன வருதலும் சோதிடத்திலுள்ள செய்திகள். குரு, புதன், சந்திரன் ஆகிய கோள்கள் ஒன்றாகக் கூடிய சாதகத்தை உடைய வர்கள் மருந்தீசரை வழிபட்டால் சயரோகம், ஆஸ்துமா முதலிய நோய் இருப்பின் குணமாகும். நோய் இல்லையென்றால் அந்நோய் தோன்றாது 'இருக்கும் என்ற புராணக் கதையும் இவ்வகையில் எழுந்ததே.

நோய் குறித்த பல பாடல்கள் சோதிட நூலில் இடம்பெறுகின்றன.

> ''உண்டென யீரார் ரண்டு யெட்டு நாலாறு பத்தில்
> கண்டிட சோம நிற்க கருதிவ மனையாள் பிள்ளை
> விண்டிட வயிறு நோயும் வளருமே மூல விருத்தி
> பண்டெனப் பலருஞ் சேதம் பழியது விளையு மென்றே''

இது ஒரு பழம் சோதிடப் பாடல். சந்திரன் 12, 2, 8, 4, 6, 10 இடங்களில் நிற்க மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் வயிற்றுக்கோளாறு தொடர்பான பல நோய்கள் வரும். உடல் நலம் கெடும் என்பது இதன் பொருள். இது சந்திரன் பற்றியது. இது போலுள்ள பல சோதிடப் பாடல்கள் நோயைப் பற்றிக் கூறுகின்றன.

**ஓமியோபதி**

உயிரியல் இரசாயனம் என்ற பகுதி ஒவ்வொரு மனிதனின் அடிப்படை இரசாயனத் தாதுப் பொருட்கள் எவையென்று விளக்குகின்றது. மனிதன் என்பவன் அகிலத்தின் சுருக்கமே ஆவான். அவனது உடலில் பூமியில் இருக்கும் எல்லாத் தாதுப்பொருட்களும் கலந்திருக்கின்றன. இவற்றுள் குறிப்பிடத்தகுந்தது 'உயிர் உப்பு' என்பது.

பன்னிரண்டு இராசிகளை ஒன்பது கோள்கள் ஆள்வதைப் போல் இந்தப்பன்னிரண்டு இராசிகளில் பிறந்தவர்களைப் பன்னிரண்டு உயிர் உப்புகள் ஆதிக்கம் செய்து வருகின்றன. ஓமியோபதி மருத்துவ முறையில் 12 இராசிகளுக்கும் 12 உயிர் உப்புகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. காட்டு: மேடராசி - காலி பாஸ்பாரிகம்; கன்னிராசி - காலி சல்ப் (இணைப்பு. 14). மனித உடலில் இயல்பாகவே இப்பன்னிரெண்டு உப்புகளும் சமநிலையில் அமைந்துள்ளன. ஒருவர் எந்த இராசியிற் பிறந்தவரோ அந்த இராசிக்குரிய உப்பே அவருடைய உயிர் உப்பு. அந்த உப்பே அவருடைய உடலை ஆட்சி செய்கிறது. மற்ற உப்புகளைக் காட்டிலும் உயிர் உப்பை ஒவ்வொருவரும் மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். மற்ற உப்புகள் அந்த உப்பிற்குத் துணை நிற்கின்றன. எனவே இவ்வுப்பு குறையும்போது உடலில் எதிர்ப்புச் சக்திக்குறைவதால் நோய் தோன்றி, அது வேறுபல நோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாகின்றது. எனவே, நோய் தோன்றியவுடன் உயிர் உப்பைக் கொடுத்தால் நோய் குணமாகும் என்கிறது 'ஜி.டபிள்யூ. கேரி' அவர்களது ஆய்வு.

போலிஷ் தேச புகழ்பெற்ற அறிவியல் அறிஞர் 'எம்.டீசர் போவிகி' தன்னுடைய Spectro-Biological Mapஇல் ஒருவன் பிறக்கும்போது வானத்திலே எந்த ஒரு கோளின் அதிர்வுச் சக்தி அதிகமாக இருக்கிறதோ, அந்த அதிர்வுதான் அக்குறிப்பிட்ட நபரின் வாழ்நாள் முழுதும் மற்ற அதிர்வுகளை ஆட்சி செய்யும் தன்மை பெற்றதாக இருக்கும் என்று கூறுகிறார்.[28]

---

28. சோதிட சாஸ்திரமும் ஹோமியோபதியும், ப.11

ஆராய்ச்சியாளர் அறிவித்துள்ளனர்; இரத்த ஒழுக்கு அதிகமாகிறது என்றும், வெட்டு, வலிப்பு முதலியன அடிக்கடி ஏற்படுகிறது என்றும் மருத்துவமனை ஆய்வுகள் கூறுகின்றன. நியூயார்க் நகரில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் முழு நிலவு நாட்களில் குற்றங்கள் நூறு சதவீதம் அதிகரிக்கின்றன என்பது வெளியாகியுள்ளது. பிஹார் மாநிலத்திலுள்ள பாட்னா மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள் மேற்கொண்ட ஆய்வில் முழு நிலவு அன்று நஞ்சு உண்பது மிகுதியாக இருக்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.[30]

அமாவாசை அல்லது முழுநிலவுக் காலங்களில் சந்திரனின் கதிரியக்கத்தால் நோயாளிகளின் நோய் வேகம் அதிகரிக்கின்றது. மேலும் அந்நாட்களில் கர்ப்பக் கோளாறு; காம உணர்வு மிகுதியாதல்; கால் கை வலிப்பு, மூளைக் கோளாறு, வாத வலிப்பு போன்ற நோய்களின் வேகமும் அதிகமாகின்றது. சூரிய கிரகணம், சந்திர கிரகணம் போன்ற நாட்களில் புணர்ச்சியில் ஈடுபடுவதால் ஆண், பெண் இருவரின் உடல்நிலை, மனநிலை பாதிக்கப்படுவதுடன், அந்நாட்களில் கருத்தரிக்கும் குழந்தையும் பாதிப்புக்குள்ளா கின்றது என மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

அமெரிக்காவில் (நியூயார்க்கில்) அமாவாசையை யொட்டிய நாட்களில் நோயாளிகளுக்கு மூளைக்கொதிப்பு ஏற்பட்டு இரத்த நாளங்கள் வெடிக்கும் நிலைகள் நிறைய ஏற்பட்டன. இதை டாக்டர் பெக்கரிடம் அவருடைய நர்ஸ் கண்டுபிடித்துச் சொன்னாள். அதிலிருந்து அமாவாசையை ஒட்டி அவர்கள் அவசர சிகிச்சைக்குத் தயாராக இருப்பது வழக்கம். அமாவாசை - பௌர்ணமி நாட்களை ஒட்டி, மனித உடலில் 'வோல்டேஜ்' வித்தியாசம் ஏற்படுகிறது என்று அவர் கண்டுபிடித்திருக்கிறார்.[31]

தமிழக மக்களிடையேயும், அமாவாசை பௌர்ணமி நாட்களில் நோயாளியின் நோய் நிலை தீவிரமடையும் எனும் நம்பிக்கை நிலவி வருகிறது.

---

30. சோதிடம் அறிவியலா, ப.86.

31. பி.வி.ராமன் அளித்த பேட்டி, இதயம் பேசுகிறது. 'வார இதழ்', ப.58, 15-11-81.

''அம்மாவாசி போயிருச்சி - கண்ணேநீ
அஞ்ச வேண்டாம் ஒண்ணுக்குமே''

என்ற பழமொழியும் இவ்வடிப்படையில் தோன்றியது தான். இந்நம்பிக்கை அறிவியல் சார்ந்த உண்மை என்பதை மேற்சுட்டிய காட்டு உறுதியாக்கிறது.

தமிழ்மருத்துவம் நோய் வருவதற்குரிய மூல காரணங்களுள் கோள்களின் தாக்கமும் ஒன்று என்று கூறுவது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

ஒருவருடைய சாதகத்தில் அமாவாசை, பௌர்ணமி நாட்களில் கோள் நிலை சரியில்லாத நிலையில் பிறந்தவர்க்குக் கொலை வெறி, காமவெறி, இரக்கமில்லாத் தன்மை ஆகியன ஏற்படும்.

இந்தப் பாதிப்புகள் மனித வாழ்க்கையில் குறிப்பிட்ட விளைவுகளை அல்லது மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்றும், கோள் நிலைகளைக் கவனிப்பதன் மூலம் இந்த விளைவுகளை அல்லது மாற்றங்களை முன்கூட்டியே அறிந்துகொள்ளலாம் என்றும் சோதிடம் கூறுகின்றது.

சோதிடவியலை அடிப்படையாகக் கொண்டு நிலவுக்கும் மனித உடலுக்குமுள்ள தொடர்பு, மற்றக் கோள்களின் பாதிப்பு அறிவியல் முறைப்படி ஆராயப்படும்போது அது மருத்துவத் துறையில் நல்ல முன்னேற்றத்தை விளை விக்கும்.

## அறுவைச் சிகிச்சையில் மருத்துவம்

புலமை பெற்ற சித்தமருத்துவர் நோயாளியின் இயம்பியத்தை (சாதகத்தை) அடிப்படையாகக் கொண்டே மருத்துவம் செய்வர். சித்தர்களின் சோதிட மருத்துவப் புலமையைக் காட்ட 'சத்திர விதிவிலக்கு' என்றொரு விதி சித்த மருத்துவத்திலுள்ளது. இவ்விதிப்படி அமாவாசைக்குப் பின்பு குறிப்பிட்ட திதிகள் வரும் நாட்களில் மனித உடம்பில் சில இடங்களில் அறுவை செய்தல் கூடாது. அவையாவன:

| | | |
|---|---|---|
| பிரதமை | - | பெருவிரல் |
| துதியை | - | உள்ளங்கால் |
| திரிதிகை | - | முழங்கால் |

சோதிடம் தெரிந்த டாக்டர்களின் தந்தை என்று அழைக்கப்பெறும் கிப்போகிரைட் என்ற கிரேக்க மருத்துவர் சோதிட அறிவு இல்லாமல் மருத்துவம் செய்வது தவறு என்கிறார். மேலும் அவர் கூறுவது: எந்த உடற்பகுதிக்குக் காரகம் உள்ள இராசியில் சந்திரன் சஞ்சரிக்கிறாரோ அந்த உடற்பகுதியைக் கத்தியால் தொடக்கூடாது என்கிறார்.

இடபராசியில் சந்திரன் இருக்கும் இந்த 2½ நாட்களிலும் தொண்டை, கழுத்து தொடர்பான அறுவைச் சிகிச்சை செய்தல் கூடாது. சந்திரன் விருச்சிகராசியில் இருக்கும் நாட்களில் கர்ப்பப் பை தொடர்பான மற்றும் மர்ம உறுப்புகளில் அறுவைச் சிகிச்சை செய்யக் கூடாது. செய்தால் புண் ஆறாது. புதுப் பிரச்சனைகள் ஏற்படும். உயிருக்கும் கூட ஆபத்து நேர்ந்து விடும்.[35]

"சிக்கல் நிறைந்த அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய மருத்துவ நிபுணர்கள் சோதிடர்களைக் கலந்து ஆலோசித்து அறுவைச் சிகிச்சைக்குரிய நேரத்தைத் தேர்வு செய்யலாம். இதற்கு வெட்கப்பட வேண்டாம்."[36] எனப் பிரபல அறுவைச் சிகிச்சை நிபுணர் 'என்.வி.மந்த்கே' கூறுகிறார்.

மதுரை மீனாட்சி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் சோதிடம் தெரிந்த மருத்துவர்கள் பணிபுரிகின்றனர். மருத்துவர் பிடிக்கு அடங்காத வியாதியைக் கண்டறியவும், அறுவைச் சிகிச்சைக்கு நேரம் குறிக்கவும் இச்சோதிடர் உதவுகின்றனர். வடநாட்டிலும் பல மருத்துவ மனைகளில் சோதிடர் இருக்கின்றனர்.

மேலை நாடுகளில் சோதிடத்தையும் மருத்துவத்தையும் இணைத்துப் பல புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் சில நூல்களைச் சிறந்த மருத்துவர்களாக விளங்கும் மருத்துவர்களே எழுதியுள்ளனர். சாதகம் மூலமாக ஒருவரது உடல்நலம்எப்படி இருக்கும்; எந்த மாதிரியான நோய் அவருக்கு வரக்கூடும்; எப்போது குணமடைய முடியும் போன்ற செய்திகளை உள்ளடக்கி வெளிவந்துள்ள இந்நூல்கள் மருத்துவம் பற்றிப் பேசினும் சோதிடத்தின் ஒரு பிரிவாகவே அமைகின்றன.

---

35. மருத்துவ ஜோதிடம், டாக்டர், ஹனீபா, ஜோதிடச்சுடர், ப.4
36. தினமணி நாளிதழ், 6.1.1993, ப.7

சில நேரங்களில் சிறு அறுவைச் சிகிச்சையின்போது கூட உயிரிழத்தல், எதிர்பாராத பாதிப்புகள் ஏற்படுதல் போன்றன நிகழ்கின்றன. அறுவைச் சிகிச்சை நல்ல முறையில் முடிந்து, பின் சில நாட்களில் திடீரென மரணம் ஏற்படுகின்றது. அறுவைச் சிகிச்சைகள் பலனளிக்காது என்று கூறி மேற்கொள்ளப்படுபவை வெற்றி பெறுகின்றன. இது போன்ற பல நிலைகளைக் கருத்தில் கொள்ளும்போது உடனே அறுவைச்சிகிச்சை செய்தாக வேண்டும் என்பனவற்றைத் தவிர பிறவற்றிற்குச் சோதிடரின் உதவியை நாடி நோயாளியின் சாதகத்தைக் கொண்டு காலத்தைத் தேர்ந்தெடுப்பதால் தீமைக்கான வாய்ப்புகளைக் குறைக்கலாம். நோய் இருப்பினும் உடனடிச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய நிலையில் இல்லாதவர்கள் மருத்துவ சிகிச்சையை மேற்கொள்வதற்குரிய மாதம், நாள், நட்சத்திரம், திதி, இராசி போன்றவற்றைக் கடைப்பிடித்தால் நற்பயன் விளைய வாய்ப்புண்டு. இன்று உடல்நலத்துடன் உள்ள ஒருவர் சில ஆண்டுகளில் உடல் நலனற்றவராக ஆவதை மருத்துவர்கள் அறிய முடியாத நிலை இருக்கின்றது. ஆனால் சோதிடம் இதனை அறிந்து கூறுகின்றது.

நவீன மருத்துவத்தில் அறுவைச் சிகிச்சைக்கான நாள், நேரம் குறிக்கப்பட்டபின் அந்நாளில், நேரத்தில் மாற்றம் வேண்டுமாயின் செய்து தருகிறோம் என மருத்துவர் கேட்கும் நிலை இருக்கின்றது. நோயாளி அல்லது நோயாளியின் குடும்பத்தவர் அறுவைச் சிகிச்சை நடை பெறும் நாள் நல்லதாக அமைய கவனம் செலுத்துகின்ற நிலையும் காணப்படுகின்றது. அறுவைச் சிகிச்சை செய்துதான் குழந்தையை எடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்படும்போது குடும்பத்தவர் கூறும் நல்ல நாளில் நல்ல நேரத்தில் மருத்துவர் அறுவைச் சிகிச்சையை வைத்துக் கொள்வது இன்று நடைமுறையிலுள்ளது. மேலும் மருத்துவம் செய்யத் தொடங்குமுன் அமாவாசை, அட்டமி, நவமி, சனிக்கிழமை முதலியவற்றைத் தவிர்த்தலும் பரவலாக உள்ளது.

என்பதற்கு ஏற்ப மருத்துவர் மனிதனின் உடலிற் தோன்றியுள்ள நோய் என்ன என்பதை அறிந்து அது தோன்றிய காரணத்தினையும் ஆராய்ந்து பின்னர் அந்நோய்க்கு மருந்து கொடுத்து நீக்குகிறார். இதுபோலவே சோதிடரும் தன்னை நாடி வருபவரின் சிக்கலைக் கேட்டறிந்து அச்சிக்கல் தோன்றியுள்ள காரணத்தைச் சோதிடத்தின்வழி ஆராய்ந்து அச்சிக்கல் நீங்குவதற்குரிய வழிமுறைகளையும் பரிகாரத்தையும் எடுத்தியம்புகின்றார். மருத்துவர் மனிதனின் உடலை ஓம்புகிறார்; சோதிடர் மனிதனின் வாழ்க்கை யினைப் பேணுகிறார்; இவ்விரண்டு துறைகளும் சரியான முறையில் பார்க்கப்பட்டால் நன்மையினையும், தவறான முறையினில் பார்க்கப்பட்டால் தீமையினையும் நல்கும் இயல்புடையன. எனவே மருத்துவத்துறை போன்றே சோதிடத் துறையிலும் மிகுதியான கவனத்துடன் ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ளது. மேலும், இவ்விரண்டு துறைகளும் தனித்தனியாகவும் இணைந்தும் ஆய்வினை மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சரியான முறையில் மருத்துவத்துறையில் சோதிட முறைகளைப் பின்பற்றினால் வியத்தகு முன்னேற்றங்கள் பல இவ்விரு துறைகளிலும் ஏற்படக்கூடும். சோதிடமும் மருத்துவமும் ஒன்றிணைந்து செயல்பட்டால் மருத்துவத்தின் செயற் பாடுகள் பலவற்றிலும் சோதிடத்தின் ஆளுமை சிறப்புற்று விளங்கும். மேலும், 'சோதிடம் பார்த்தல்' என்பது தன்னம்பிக்கை அற்றவனும், பொழுது போகாதவனும், கோழையும் நாடிச் செல்லும் சமுதாய வளர்ச்சிக்குத் தேவையில்லாத ஒரு நிகழ்வு என்பதும், ஒருசிலர் மக்களை ஏமாற்றிப் பணம் பிடுங்கும் தொழில் என்ற நிலையும் மாறி, மனிதகுல மேம்பாட்டிற்குச் சோதிடம் தேவையான ஒரு துறை என்ற நிலை உருவாகும். சித்த மருத்துவம், ஆயுர்வேதம், ஹோமியோபதி, நவீன மருத்துவம் ஆகியவற்றின் பாடத்திட்டங்களில் சோதிடமும், ஒரு பாடமாக வைக்கப் பெறும்போது மருத்துவத் துறையின் வளர்ச்சி நன்முறையில் அமையும்.

✶ ✶ ✶

## இயல் ஆறு

# சோதிடமும் யோகமும்

மனித வாழ்வினை மேம்பாடடையச் செய்கின்ற கலைகளையெல்லாம் சித்தர்கள் ஆர்வங்கொண்டு வளர்த்து வந்தனர். சோதிடம் வாழ்வைப் பேணுகின்ற கலையாகவும், யோகம் உடலையும், மனத்தையும் பேணி வாழ்நாளை நீட்டுகின்ற கலையாகவும் உள்ளன. இவ்விரு கலைகளும் ஒன்றுடன் ஒன்று சார்ந்தும் ஒன்றிணைந்தும் பிரிக்கவியலாத தன்மையுடன் காணப்படுகின்றன. இதனால்தான் சித்தர்கள் இவ்விரு கலைகளையும் பேணிப் பாதுகாத்து வந்தனர். அவர்தம் கூற்றுகள் பலவும் நேரிடையாகவும் மறைமுகமாகவும் இவ்விரு கலைகளைப் பற்றிப் பேசுவனவாக அமைந்துள்ளன. இப்பகுதி சோதிடம் எவ்வாறு யோகத்தோடு இணைந்து செயல்படுகின்றது என்பதை உணர்த்தும் வகையான் அமைகின்றது.

### யோகம்

தொடக்க காலந்தொட்டு இந்துக்களிடையே வழங்கி வரும் யோகக் கலையானது மனிதன் தன்னுடைய உடலையும் உள்ளத்தையும் இறுதியில் இயற்கை முழுவதையும் தன்வயப்படுத்துவதற்கான வழியை வகுக்கும் அறிவியலாகத் திகழ்கின்றது. ஆதி வேத நூல்களான உபநிடதங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றில் யோகம் கூறப்பெற்றுள்ளது. இவ்யோகமானது கால வளர்ச்சிக்கேற்ப, அவரவர் தத்துவ அமைப்பிற்கேற்ப விளக்கங்களையும் விரிவுகளையும் பெற்றது.

என்று'ம் உள்ளதும் எங்கும் நிறைந்ததும் இயக்கமற்றது மானது பிரகிருதி. எங்கும் நிறைந்ததும், நனவு நிலையி லுள்ளதும் புருடர்கள். பிரகிருதியுடன் கட்டுண்டிருக்கும் புருடனை நன்முயற்சியின் வழி விடுவிக்கும் முறையைக்

கூறுவதே யோகம். மூலப்பிரகிருதி செயலற்ற சடப்பொருள். இது இப்பேருலகத்தை வெளிப்படுத்த இயலாது. எனவே மூலப் பிரகிருதியை இயக்கி, பேருலகத்தை வெளிப்பட வைப்பது புருடன் என்னும் இயக்கச்சக்தி. இப்புருடன் என்பது உயிர்ப்பியக்கம். இப்புருடன் பிரகிருதியில் சேர்வதன் விளைவாகவே பிற தத்துவங்கள் யாவும் தோன்றுகின்றன. பேருலக வெளிப்பாட்டால் புருடன் பிரகிருதியோடு ஐக்கியப்பட்டு விடுகிறான். பேருலகத் தத்துவங்களால் சிறைப்படுத்தப் பெறுகின்றான். பிரகிருதியி லிருந்து புருடன் என்றழைக்கப்பெறும் ஆன்மாவைப் பிரித்தல் வேண்டும். மாயை வலையில் சிக்குண்டு அறியாமையில் சிறைப் பட்டுக் கிடக்கும் ஆன்மாவை விடுவித்துப் பூரணமாய் இருக்கும் பிரம்மத்தில் கலக்கச் செய்வதே யோக நெறியின் குறிக்கோள். 'ஆன்மா' தன் இறைமை இயல்பை, வரம்பின்மையை உணர்ந்து, வரம்புகள் அனைத்திலிருந்தும் வீடுபெற வேண்டும் என்பதே யோக நெறியின் அடிப்படை நோக்கம்.

எனவே யோகம் என்பது ஆன்மா விடுதலை பெறும் வழிகளைக் கூறுவதாகிறது. யோகத்திற்கு அடயோகம், லயயோகம், மந்திரயோகம், பக்தியோகம், ஞானயோகம், அட்டாங்கயோகம் என்பவை அடிப்படையாக அமை கின்றன. பதஞ்சலி வகுத்த யோகம் வீடுபெறுவதற்கான எட்டுறுப்புக்களைக் கூறுகின்றது. அவை:

1. இயமம் : நல்ல எண்ணங்களைக் கடைப் பிடிப்பது
2. நியமம் : நன்னடத்தை கொண்டு வாழ்வது
3. ஆதனம் : அசையாமல் அமர்ந்தபடி மனத்தை ஒருநிலைப்படுத்துவது
4. பிராணாயாமம்: மூச்சுப் பயிற்சி செய்வது
5. பிரத்தியாகாரம்: ஐம்புலனடக்கி மனத்தை ஒரு வழிப்படுத்தி பிறவற்றில் எண்ணம் போகாதிருக்கச் செய்தல்.
6. தாரணை : மனத்தைத் தன்வயமாக்குதலும் ஒரு பொருளைப் பற்றியே எண்ணுதலும்

7. தியானம் : ஒரு குறித்த பொருள் பற்றியே இடைவிடாது எண்ணுதல்

8. சமாதி : முற்றும் உணர்ந்த அசைவற்ற நிலை.

யோக முறையிலுள்ள இவ் எண்வகை அங்கங்களும் மனிதன் மனித நிலையிலிருந்து தன்னுடைய உண்மையான தேவநிலையை அடைவதற்காக உள்ள, ஏணியிலிருக்கும் படிகள். இந்த ஏணியில் தூலத்திலிருந்து சூக்குமத்துக்கு ஏறும்போது புருடன் பிரகிருதியுடன் பிணித்துள்ள கட்டுகள் அனைத்தும் அகன்று, புருடன் வீடுபெற்று மோட்சம் பெறுவான்.

## சித்தர் இலக்கியம்

சங்க காலத்துக்கு முன்பு தொடங்கி, வரையறை செய்து தெளிவாகக் காணக்கூடிய வரலாறு பொதிந்த 2000 ஆண்டுகளாகத் தமிழகத்தில் உலவிவருகிற சித்தர்களின் தமிழிலே, ஒரே பண்போடு கூடிய தனித்தன்மை, ஒருமைப்பாடு, மாறுபடாத கோட்பாடு நிலவி வருவதைக் காணமுடிகிறது. இது, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதே சித்தர் தத்துவம். இது 'சரியை' என்கிற தொண்டிலும், 'கிரியை' என்கிற வழிபாட்டிலும், 'யோகம்' என்கிற பயிற்சியிலும் 'ஞானம்' என்கிற மன ஒடுக்கத்திலும் ஆக நான்கு நெறிகளிலும் கிளைவீசிப் படர்ந்துள்ளது. இந்த நான்கு நெறிகளையுமே பேரறிவின் கலமாகிய உள்ளத்தைக் கொண்டு மன ஆற்றலால் இயக்குவதே சித்தர் தத்துவத்தின் அடிப்படை.

சித்தர் இலக்கியம் உலகநாடுகள் அனைத்திலும், உலக மொழிகள் அனைத்திலும் ஒரே குரல் கொடுத்து ஒரே சுருதியில், ஒரே பாங்கில் பேசுகிறது. இதுவே இந்த இலக்கியத்தின் தத்துவத்தின் மாண்பாகும். உலக நாடுகளில் ஏதேனும் ஒரு வடிவிலோ பெயரிலோ யோகப் பயிற்சி இடம் பெறுகின்றது. இத்தகைய சித்தர் இலக்கியங்களில் இன்றைய அறிவியல் உலகம் ஆய்வு நிலையில் சுவைக்க வேண்டிய, நுணுகி ஆராய வேண்டிய பல வியப்பான செய்திகள் உண்டு. இவற்றில் சில, மக்கள் சமுதாயத்தின் பழக்க வழக்கங்களிலும், வழிவழியாக வழங்கி வருகிற நம்பிக்கைகளிலும் பின்னிப் பிணைந்துள்ளன.

நவீன அறிவியற் கருவிகளைக் கொண்டு இன்றைய அறிவியல் உலகம் சித்தர் இலக்கியங்களில் காணப்படுகின்ற பல நிகழ்வுகளை ஆய்வு செய்து அதன் உட்கூறுகளாக விளங்கும் அறிவியல் உண்மைகளை எடுத்துக்காட்டு களோடு உறுதி செய்துள்ள காரணத்தால், இன்னும் பகுத்தறிவுக் கண்கொண்டு நோக்கி, மேலும் ஆராய வேண்டிய செய்திகளும் அவற்றில் பல்கிக் கிடக்கின்றன. அவற்றுள் சிலவற்றை இவ்வறிவியல் பார்வையுடன் பார்க்கும்போது அவை சோதிடவியலோடு ஒப்புமைப்பட வருகின்றன. எனவே சித்தர் இலக்கியங்களிலுள்ள செய்திகளுள் பல சோதிடத்தோடு தொடர்புடையவை என்பதை ஆய்வின்வழி வெளிப்படுத்த இயலும். அத்தகைய பரந்த ஆய்வை நிகழ்த்த வழிவகுக்கும் வகையில் இங்குச் சித்தர் இலக்கியத்திலுள்ள ஒருசில சான்றுகள் யோகத்தைச் சோதிடவியலுடன் இணைத்துப் பார்க்கின்றன.

### சரசாஸ்திரம்

சோதிடத்தின் அடிப்படைக் கூறுகளான இராசிகள், கோள்கள் முதலியன எங்ஙனம் யோக நெறியோடு தொடர்புபடுகின்றன? யோகநெறிகளை மேற்கொள்ள நல்லநாள், கெட்ட நாள் முதலியவற்றைச் சோதிட விதியின் உதவியுடன் எங்ஙனம் தேர்ந்தெடுக்கின்றனர்? சோதிடவியலி லுள்ள பல நுட்பமான கணக்குகள், எம்முறையில் சித்தர் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன என்பனவற்றை அறிவதற்கு முன் சோதிடத்தில் பலன் அறிதல் போலவே யோகத்தின் வழி பலனறியும் முறையான 'சரசாஸ்திரம்' பற்றி முதலில் சுட்டப்பெறுகின்றது.

மனிதன் சிந்திக்கத் தொடங்கிய போதே விண்வெளிச் சகுனங்கள் சோதிடமாகத் தோற்றம் பெற்றுவிட்டன. இச்சோதிடம் பதினெண்சித்தர்களாலும், பிறராலும் வளர்ச்சி யடைந்திருக்கிறது. சித்தர்களால் பல சோதிட நூல்கள் எழுதப்பெற்றுள்ளன. சித்தர்கள்தான் சோதிடத்தை உருவாக்கி வளர்த்தனர் என்று அறுதியிட்டுக் கூறுவதற் கியலாதெனினும் சோதிடத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியிருக்கின்றனர் என்பது தெளிவு. சித்தர் இலக்கியத்தில் ஒன்பது கோள்களையும் ஆராய்ந்து சாதகம்

என்கிற சாரத்தைக் கணக்கிட்டுப் பலன் சொல்லுகிற பகுதி விரிவாகவே அமைந்துள்ளது. இப்போது பழக்கத்தில் பயின்று வருகிற சோதிடவியல் பற்றிய பல சூத்திரங்களும் கணக்கு முறைகளும் சித்தர்களின் பாடல்களாகவே வழங்கி வருகின்றன.

அகத்தியர், கோரக்கர், போகர் இவர்களுடைய சீடர்களாகிய பல சித்தர்கள் ஆகியோரின் பெயரில் வழங்கி வருகிற வைத்திய நூல்களைப் போலவே, பல சோதிட நூல்களும் தமிழகத்திலே பரந்து வழங்கி வருகின்றன. அகத்தியர், திருமூலர், வள்ளலார் முதலிய மகான்களுக்கு வானியல் அடிப்படை ஆதாரமாக விளங்கியிருக்கிறது. இவை தவிர, பல முனிவர்களின் பெயரால் வழங்குகின்ற இரேகை இயல் நூல்களும் பல உள்ளன. நாடி சோதிடம் சித்தர்களுடைய சோதிடப் புலமைக்கு அரணாக அமைகிறது. இது ஒருவரது எதிர்காலம் பற்றி முன்கூட்டியே எழுதி வைக்கப்பெறுவது. யோகப் பயிற்சியில் சித்தர்கள் பெற்றிருந்த ஆற்றலின் விளைவே நாடி சோதிடம். எனவே சித்தர்களால் யோக நிலையிலிருந்து எழுதப்பெற்றவையே இது என்பது பெறப்படுகின்றது. நாடி ஏடுகளில் வியத்தகு மெய்மைகள் உண்டு. பொய்யான ஓலைகளை வைத்துக்கொண்டு நாடி சோதிடம் கூறும் நிலை ஏற்பட்டுவிட்டதால் உண்மையான நாடி சோதிடத்தின் உயரிய நிலை புறக்கணிக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இங்ஙனம் சோதிடக் கலையில் ஈடுபட்ட சித்தர்கள் தமது யோக முறைகளைப் பலன் கூறுவதற்குப் பயன்படுத்தத் தொடங்கியதன் விளைவாக யோகப் பயிற்சியின் வழி மூச்சினால் பலன் கூறும் ‘சரசாஸ்திரம்’ என்ற ஒருவகை சாஸ்திரம் தோன்றியிருக்கிறது. சரசாஸ்திரம், சோதிடம் இரண்டும் தெரிந்த சித்தர்கள் பலர் இருந்து இருக்கலாம். ஆயின் சோதிடம் தெரிந்தவர்கள் மட்டுமே சரசாஸ்திரத்தை அறிந்திருந்தனர் என்று கொள்ளுதற்கியலாது. ஏனெனில் சரம், சோதிடம் இரண்டும் பயிற்சிக்கு வந்தபின் பல சித்தர்கள் சோதிடத்தைக் கற்க விரும்பவில்லை யெனினும், சரப்பயிற்சியினை அறிய ஆர்வம் உடையவர்களாய் இருந்திருப்பர். சரசாஸ்திரம் யோகத்தோடு முற்றும்

தொடர்புடையதால், யோகம் கைவரப்பெற்ற சித்தர்களுக்கு அதில் ஈடுபாடு மிகுதியாகவே இருந்திருக்கும். சோதிடப் பலனை அறியும் ஆற்றலை யோகம் மிகுவிக்கலாம். மேலும் பல முறைகளில் சோதிடமும் யோகமும் ஒன்றுபடலாம். ஆயின் சோதிடம் முழுமையாக யோகத்தோடு தொடர் புடையது என்று கூறுதற்கியலாது. எனவே சோதிடம் பயிலாத சித்தர்கள் பலர் சரசாஸ்திரத்தைப் பயின்றிருப்பர்.

மனிதன் சிந்திக்கத் தொடங்கியபோதே சோதிடம் தோற்றம் பெற்று விட்டது என முன்னர் கூறப்பட்டது. எனவே சிந்திக்கத் தொடங்கிய பின்புதான் அவனுக்கு யோகம், ஞானம் போன்றவை கைவரப் பெற்றிருக்கும். எனவே சோதிட சாத்திரம் தோன்றிய பின்தான் சரசாஸ்திரம் தோன்றியிருத்தல் கூடும். சோதிடம் தெரிந்த சித்தர்களே கூட சரசாஸ்திரத்தைத் தோற்றுவித்திருக்கலாம். ஆயின் சரசாஸ்திரம் தெரிந்த சித்தர் அனைவரும் சோதிட சாத்திரம் அறிந்தவர்களாய் இருந்திருத்தல் இயலாது. சோதிடத்தின் இலக்கணத்தை அறியாதவர்கள், தத்தம் மனநினைவினாலே தம்மைப் பற்றிய பலன்களை அறிந்துகொள்ள உதவும் நூலாக 'சரசாஸ்திரம்' இருக்கிறது என்பதனை,

''சந்திரபா னிலக்கணமுங் கோளு நாளுந்
தயங்கிய பக்கங்கரண மியோகம்வாரம்
வந்துசொல்லுஞ் சோதிடத்தை யறியாதார்கள்
மனைநினைவா யறியும்வகை யுளதோவென்ன
வந்தவுட லுயிர்நிலையை யறியாதருக்
கியாமறிய வியம்புவகை யாதோவென்னிற்
பைந்தொடியே யான்சொலுஞ் சரநூ றன்னைப்
பரிந்துநீ பாரென்று பரமன் சொல்வான்''

(ஞான. சாஸ். 1)

என்ற பாடல் காட்டுகின்றது. எனவே சோதிடக் கணக்கிடு முறையை அறியாதவர்களும் சரப்பயிற்சியின் வழி பலன் கூறும் வழியை அறிந்திருக்கின்றனர் என்பது தெளிவு. சோதிடம் அறியாதவர் இப்பயிற்சியின் வழி பலனறிய முயன்றமைக்கும் சோதிடம் உந்துதலாக இருந்திருக்கின்றது என்பதும் தெரியவருகிறது.

சரம் என்பது காற்று, மனம், சீவன், சுவாசம், மூச்சு, பிராணன், ஆவி, உயிர், உயிர்ப்பு என்று பல சொற்களில் அழைக்கப்படுகிறது. சரம் என்பதற்குச் 'சுவாசம்' என்ற பொருளினை லெக்சிகன் *(1314)* தருகின்றது. 'சரமியங்குதோ விலையோவென' (தனிப்பா.*1.332, 37*) என்ற வரி சுவாசம் என்ற பொருளைச் சரத்திற்குத் தருகின்றது. சித்தர் இலக்கியங்களிலே மிகவும் முக்கியமான ஒரு பகுதி 'சரம்' என்ற மூச்சுநிலை பற்றிய ஆய்வே. உட்சென்ற மூச்சு ஆத்மாவோடு கலந்து வெளிவருவதால் அது சரமெனப்படுகிறது.

'சரசாஸ்திரம்' ஆரூட வகைகளுள் ஒன்றாகவே கருதப்பெறுகின்றது. இன்று வழக்கில் பலருக்குச் சரம் பார்த்தல் என்பது, பொருள் தெரியாத ஒன்றாய் இருக்கிறது. ஏதோ ஒரு சோதிட வகை என்ற அளவில்தான் தெரிந்து வைத்திருக்கின்றனர். 'சரம் பார்த்தவனைச் சருகாதே' என்ற பழமொழி பழங்காலந் தொட்டுச் சரம் பார்த்தல் வழக்கில் இருத்தலைக் காட்டுகிறது. இன்றும் வழக்கில் சரசாஸ்திரப்படி பலன் கூறுகின்றவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். ஆயின் இம்முறையில் பலன் கூறுகின்றவர் அருகியே காணப்படுகின்றனர். அதேபோல் சரசாஸ்திர நூல்கள் சுவடி வடிவிலே மிகுதியாகக் காணப்பட, நூல் வடிவிலே குறைவாகவே உள்ளன. சரம் பார்ப்பவனைக் 'குறி சொல்பவன்' என்று சரநூல்கள் குறிப்பிடுகின்றன (ஞான.சாஸ்.*18*).

சித்தர்களால் தோற்றுவிக்கப்பெற்று, பலன் அறியும் வகையில் மக்கள் பயனடைந்து வந்த ஒரு கலை இன்று சரியாக வளர்ச்சி இன்றி மூலையில் உறங்கிக் கொண்டிருக்கிறது. சரநூல் தொடர்பாக உள்ள சுவடிகள் அனைத்தும் தொகுத்து, நூலாகப் பதிப்பிக்கப்பெற்று, ஆய்வுக்குட்படுத்தப்பெற்று வெளிவருமாயின் மக்கள் சிறந்த பலனை அடையமுடியும்.

சோதிடமும் மருத்துவமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன என்று கூறி வருகிறோம். ஆயின் சோதிடமும், யோகமும், மருத்துவமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன என்று கூறுவதே பொருத்தமானது.

பண்டைக் காலத்தில் சோதிடம், யோகம், மருத்துவம் என்ற இம்மூன்றையும் ஒருவரே அறிந்து நன்முறையில் பணியாற்றிய நிலை இருந்திருக்கின்றது. சூரியகலை, சந்திரகலை, சுழிமுனை இவற்றைப் பார்த்து மருத்துவர் மருந்து கொடுத்தல், நோயாளி மருந்து சாப்பிடுதல், சூரியகலையில் சாப்பிடத் தொடங்கினால் விரைவில் குணம் ஏற்படுதல், மூச்சு ஓடும் தன்மையைக் கொண்டு நோய் தீரும் தீராதெனச் சுட்டுதல் என்றவாறு சரநூல் மருத்துவம் தொடர்பான பல செய்திகளைக் கூறுதல் இன்றைய மருத்துவத்திற்கும் பலன் தரும் என்பதைக் காட்டுகின்றது. இன்று இம்மூன்றும் மிக அருகிய நிலையில் தொடர்புபடினும் பெரும்பாலும் தொடர்பின்றியே இயங்குகின்றன. சித்த மருத்துவத்திற்குப் பல்கலைக் கழகம் பட்டப்பிடிப்பினை ஏற்படுத்தி டாக்டர் பட்டம் அளிக்கிறது. எனவே அதனோடு தொடர்புடைய மற்ற இரண்டிற்கும் இந்நிலை உருவாக்கப்படுதல் வேண்டும். மேலும், சித்த மருத்துவம் படிக்கும் காலத்து, சோதிடக் கல்வியும், யோகக் கல்வியும் அதற்கிணையாகப் பயில வேண்டிய கல்வி முறைகளாகும். இம்மூன்றையும் பற்றிய செய்திகள் வெளிவராத ஓலைச்சுவடிகளில் புதைந்து கிடப்பதால் ஓலைச்சுவடிப் பயிற்சியும் சித்த மருத்துவ மாணவர் பயில வேண்டிய ஒன்றாகும். இந்நிலையில் உருவாகி வெளிவரும் மருத்துவர் மக்களுக்கு நன்முறையில் தொண்டாற்ற இயலும்.

யோகத்தில் மூச்சின் ஓட்ட நிலையை வைத்து யோகப் பயிற்சி செய்வது அடிப்படை. அதாவது மூக்கின் இரு துளைகளில் ஒரு துளையின் வழியே உள் இழுத்து மூச்சை உள்ளடக்கிப் பின்னர் அடுத்த துளையின் வழி மூச்சை வெளிவிடுதல் போன்ற மூச்சுப் பயிற்சிகள் யோகம் பயில்வோரால் மேற்கொள்ளப் பெறுகின்றன; நன்மை, தீமை என்னும் இயக்கங்கள் நம்முடைய மூச்சின் இயக்கத்தினால் தொழிற்படுகின்றன என்பதே சரஞான இரகசியம். சரமாகிய இந்தப் பயிற்சியைச் செய்வதற்கு முன்சுட்டியது போன்ற சில விதிமுறைகள் சித்தர்களால் கூறப்பெற்றுள்ளன. அதாவது இன்னின்ன ஆசனங்களில் அமர்ந்து இந்தப் பயிற்சியைச் செய்தால், இன்னின்ன பயன்கள் ஏற்படும் என்று கூறுகிறது.

மனிதனுக்குச் சாதாரணமாக 72 ஆயிரம் நாடி நரம்புகள் இருக்கின்றன. இந்நாடிகள் உடம்பில் நிற்கும் நுட்பத்தை உணரப் 'பிராணாயாமம்' உதவுகிறது. இவற்றுள் இன்றியமையாதவை 24 நாடிகள். இவை எப்போதும் உறங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றைக் 'குண்டலினி சக்தி' என்பர். இந்த 24 நாடிகளுக்குள் பத்து நாடிகள் இன்றியமையாததாக எடுக்கப்பெறுகின்றன. அவை இடகலை, பிங்கலை, சுழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குகுநாடி என்பனவாம். இந்த 10 நாடிகளில் 3 நாடிகளையே சிறப்பானதாக எடுத்திருக்கின்றனர். இம்மூன்றின் வழியாகத்தான் சரம் என்ற இயக்கத்தை எளிதிலே காணமுடியும். இந்தச் சரங்கள் நடக்கும்போது, குறி பார்ப்பது, சோதிடம் சொல்லுவது, வருங்காலப் பலன்களைச் சரத்தின் தன்மைகளைக் கொண்டே சொல்வது ஆகியன பற்றிச் சித்தர் இலக்கியங்களில் சிறப்பான முறையில் சொல்லப் பெற்றுள்ளன.

இடப் பக்க மூக்கிலே வரும் மூச்சுக்கு இடகலை என்று பெயர். அதுவே சந்திரன் என்று அழைக்கப்பெறுவதால் 'சந்திரகலை' என்றும் கூறப்பெறும். வலப் பக்கத்தில் வரும் மூச்சிற்குப் 'பிங்கலை' என்று பெயர். இது சூரியன் என்றும் பெயர் பெறுதலால் 'சூரியகலை' என்றும் கூறப்பெறும். சுழுமுனை என்று சொல்லப்படுவது நடுமூச்சாகிய நெருப்பு அல்லது 'அக்கினி' எனப்படும். இது இரண்டு மூக்கிலும் வரப்போகவுமிருக்கிற மூச்சாகும்.

சந்திரகலையாகிய இடப்பக்கத்து மூச்சு 'அமுதம்' என்றும், எப்பொருளையும் உண்டாக்கும் வல்லமை படைத்தது என்றும், இதன் நிறம் கறுப்பு என்றும் இது திரராசி என்றும் சொல்லப்பெறுகின்றது. வலப்பக்கத்து மூச்சாகிய சூரியன் தூய்மையான வெண்மை நிற மூச்சு. இது சரராசியாகும். 'வில்லுஞ் செழுஞ் சரமும்' (விதான. தீவினை:8) என்ற அடி சரம் என்பதற்குச் சரராசி என்ற பொருளும் இருத்தலைக் காட்டுகின்றது. சுழுமுனை என்னும் நடுமூச்சு அழிவாற்றலாகும். அனைத்துச் செயல்களையும் அழிக்கக்கூடிய வல்லமை உடையது. இது நெருப்பின்

நிறமுடையது. சரம், திரம் என்ற இரண்டு இராசியும் இணைந்தது இதன் இராசி. இது உபயம் என்று பெயர் பெற்றது. சூரியன், சந்திரன், சுழுமுனை ஆகியன சரம், திரம், உபயம் எனப் பெயர் பெறுதலை,

''நிகழ்புவிக்கு மூலநீர் வாயுசீவ
நெறிதாது கனல்விண்ண நினைக்குங்காலை
புகழுடனே பூதத்திற் குளவேசொல்க
பொருவில்சர ராசிவெய்யோன் புதுவெண்டிங்கள்
மகிழ்கொள்திர ராசியா முபயராசி
மறங்கிளருஞ் சுழிமுனையாம் வாரந்தோறு
பகுதல்படர் துயர்பலிக்கு நிலைமைதன்னைப்
பங்கயவர் தனத்திலிருந்து பரிந்துபாரே''

(ஞான. சாஸ்.45)

என்ற பாடல் காட்டுகின்றது. சரராசி, திரராசி, உபயராசி ஆகிய இம்மூன்றின் தன்மையினையும் பிங்கலை. இடகலை, சுழுமுனை ஆகிய மூன்றும் ஒத்துள்ளதால், சோதிடப் பெயரினையே யோகத்திலும் பெறுகின்றன. சரமாகிய மூச்சின் மூன்று பிரிவுகளான இடகலை, பிங்கலை, சுழுமுனை என்பனவற்றில் சந்திரகலை பெண்பால், சூரியகலை ஆண்பால், சுழுமுனை (உபயகலை) அஃறிணை. இதனை அலி என்றும் சித்தர் இலக்கியம் அழைக்கிறது.

இடகலையாவது சுக்கில பட்சமாகிய அமாவாசையில் பிரதமை முதல் 3 நாளைக்குக் காலையில் (சூரியன் தோன்ற ஐந்து நாழிகை இருக்கும்போது) தொடர்ச்சியாய் குறிப்பிட்ட கால அளவு (சுமார் இரண்டு மணி நேரம்) வரவேண்டும். சதுர்த்தி முதல் 3 நாளைக்குப் பிங்கலை நடக்க வேண்டும். இதேபோல் சுக்கில பட்ச முழுமையும் 3 நாளைக்கு இடகலையும், 3 நாளைக்குப் பிங்கலையும் நடக்க வேண்டும் (ஞான.சாஸ்.24). இவ்வண்ணமாகச் சுக்கில பட்சத்தில் சந்திரகலை வராவிடில் அவனுக்கு உடல்நலமின்மை, கவலை மிகுதிப்படுதல் முதலியன ஏற்படும். கிருஷ்ணபட்சம் அதாவது பௌர்ணமி பிரதமை முதல் 3 நாட்களும் பிங்கலை நடக்க வேண்டும். பின் மூன்று நாளைக்கு இடகலை நடக்க வேண்டும். இத்தன்மையில் இரண்டு கலைகளும் மும்மூன்று நாட்களுக்கொருமுறை மாறி மாறி நடக்க வேண்டும்.

சுழிமுனை நடக்கும் காலத்தில் எந்த நல்ல செயலையும் செய்தல் கூடாது. எண்ணத்துக்கு மாறாக நடக்கும் இந்த வாயுவின் காலத்தில் ஆத்ம தியானம், பூசை, மூச்சுப்பயிற்சி ஆகியன மேற்கொள்ளலாம்.

இங்ஙனம் வளர்பிறை, தேய்பிறை இவற்றின் கணக்கிற்கு உட்பட்டு இந்த மூச்சு இயங்குகிறது என்பது அளந்து கூறப்பட்டிருக்கிறது. முழுநிலா கழிந்த மறுநாளிலிருந்து அமாவாசைவரை உள்ள தேய்பிறைக்கும், அமாவாசையிலிருந்து முழுநிலா வரையிலான வளர்பிறைக்கும் என்றென்று எவ்வெப்போது எந்த மூக்கில் மூச்சு இழைகிறது என்ற நுட்பமான கணக்கீட்டு முறையைச் சித்தர் இலக்கியம் பேசுகிறது.

திருமந்திரத்திலுள்ள 'வாரசரம்' என்னும் அதிகாரம் வாரத்தின் எந்த எந்த நாட்களில் எவ்வெவ்வாறு சரவோட்டம் நடைபெறும் என்பதை உணர்த்துகிறது (770-776). வெள்ளி, திங்கள், புதன் ஆகிய கிழமைகளில் இடது மூக்கின் வழியாகவும், சனி, ஞாயிறு, செவ்வாய் ஆகிய கிழமைகளில் வலது மூக்கின் வழியாகவும் மூச்சு ஓடுதல் வேண்டும். வளர்பிறை வியாழக்கிழமையானால் இடது மூக்கு வழியாகவும், தேய்பிறை வியாழக்கிழமை யானால் வலது மூக்கின் வழியாகவும் மூச்சு இயங்க வேண்டும். இங்ஙனம் மூச்சு நடப்பின் செயல்கள் அனைத்தும் சித்தியாகும். இவற்றுள் வெள்ளி, திங்கள், புதன் ஆகிய நாட்களில் இடகலை நாசியின் வழியாக மூச்சு இயங்குமானால் உடலுக்கு அழிவில்லை. திங்கள், ஞாயிறு மூச்சு இயல்புக்கு மாறாக இயங்கினால் உயிருக்கு இடர் வரலாம்.

இவ்வாறு குறிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு மாறாக ஒருவனுடைய சரம் நடக்குமானால், ஞாயிறு - மாற்றம், வறுமை; செவ்வாய் - சண்டை, மரணத்திற்கு அறிகுறி; புதன் - சரம் பார்க்கின்ற யோகி வாழ்கின்ற ஊரில் முக்கியமான ஒருவனுக்குக் கேடு; வியாழன் - விபரீதம், தன் தலைவனுக்குக் கேடு; வெள்ளி - ஊர்விட்டு ஊர் செல்வது, மனைவிக்குக் கேடு முதலியன ஏற்படும். மேற்கூறியவை ஞானசரநூல் சாஸ்திரத்திலும் (24) இடம் பெற்றுள்ளன.

நட்சத்திரங்களுக்குரிய சரநிலையையும் சித்தர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம் அனுடம், கேட்டை, மூலம், உரோகிணி, சதயம், உத்திரட்டாதி ஆகிய இப்பன்னிரண்டு நட்சத்திரங்களில் சூரியகலையும், மற்ற 15 நட்சத்திரங்களில் சந்திரகலையும் நடக்க வேண்டும் (ஞான. சாஸ். 25).

ஊர்விட்டு ஊர் செல்லும்போது, அந்தப் பயணம் இருபது காதத்துக்கு மேற்பட்டால், பயணத்தைச் சந்திரகலை ஓடும்போது தொடங்கி, சூரியகலை ஓடும்போது பயணத்திற்குரிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும். அப்படிச் செய்தால் அந்தப் பயணம் வெற்றிபெறும் என்று சித்தர்கள் ஒரு பெரிய இரகசியத்தைக் கூறியிருக்கின்றனர். எந்தெந்த மூச்சு நம்முடைய உடம்பில் நடக்கும்போது என்னென்ன செயல்கள் செய்ய வேண்டும் என்பதையும் சித்தர் இலக்கியம் விரிவாகப் பேசுகிறது. கயிலாசநாதர் சதகமும் சூரியகலை (84), சந்திரகலை (85), உபயகலை (86) இவற்றில் மேற்கொள்ள வேண்டிய செயல்கள் பற்றிக் கூறுகிறது.

சந்திரகலை இயங்கும்போது ஒரு முக்கிய நிகழ்வுக்குக் கடிதம் எழுதலாம்; தூதனுப்பலாம்; ஒருவரோடு கலந்து பேசினால் அம்முயற்சி வெற்றி தரும்; திருமணம், கிணறு, குளம் முதலியன வெட்டலாம்; வீடு மனை வாங்கலாம்; புது வீடு போகலாம். சூரியகலை இயங்கும்போது பயிர் விளைத்தல், வியாபாரஞ் செய்தல், மருந்து சாப்பிடுதல், கல்வி கற்றல், கற்பித்தல், ஒருவராலும் தீர்த்தற்குரிய வழக்குப் பேசல் முதலியன செய்ய நன்மை பயக்கும். சுழிமுனை நடக்கும்போது எந்தச் செயலும் நன்மை தராது. அது சமயம், இருநாசியிலும் காற்றானது ஒத்து ஓடுகிறது. சுழிமுனை நடக்கும்போது ஒருவன் வந்து இழந்த பொருள் கிடைக்குமா என்று கேட்பின் உறுதியாகக் கிடைக்காது என்று கூறமுடியும். சுழினை (சுழுமுனை) ஓடும்போது சமாதி யோகம் மேற்கொள்ள நலம் பயக்கும். சித்தர் இலக்கியங்களில் இடம்பெறும் இச்செய்திகளுக்கு திருமந்திரம், ஞானசரநூல் சாஸ்திரம் ஆகியன காட்டாக அமைகின்றன.

சோதிடத்தின் வழி மக்கள் பலனறிந்து செயல்படுவது போலவே, சரசாஸ்திரத்தின் வழியும் மக்கள் பலனறிந்து செயல்பட முடியுமென்பதை மேற்கூறியதன் வழி அறிய முடிகின்றது. சோதிடத்திற்கும் சரசாஸ்திரத்திற்கும் பல்வேறு வகைகளில் வேறுபாடுகள் காணப்பட்டாலும், பலனறிதல், பலனறி விதிமுறைகளில் சோதிட விதிகளை ஒத்து அமைதல், கிழமை, திதி, நட்சத்திரம் முதலியவற்றைப் பயன்படுத்துதல் என்ற பல நிலைகளில் சரசாஸ்திரம் சோதிடத்துடன் ஒத்து அமைகின்றது.

**சரசாஸ்திரமும் சோதிடமும்**

சோதிடத்திலுள்ள பல செய்திகளை ஒத்துச் 'சரம் பார்த்தல்' அமைதலைப் பின்வருவதன் வழி நன்கறிய முடிகின்றது.

சோதிடத்தில் வார நாட்களில் எந்தெந்தத் திக்குகளில் பயணம் கூடாது என்று கூறப்படுவது போல், யோகத்தில் எந்தக் கலை ஓடும்போது எந்தெந்தத் திக்குகளில் பயணம் செய்யக் கூடாது என்பது கூறப்படுகிறது. மேற்றிசை, தென்திசை - சந்திரன் திசை, வடக்கு, கிழக்கு - சூரியன் திசை, சந்திரகலை ஓடும்போது சந்திர திசையிலும் சூரியகலை ஓடும்போது சூரிய திசையிலும் போகலாம். மாறாகச் செல்ல வேண்டி இருப்பின் தீய பலன் ஏற்படும். அவசியம் செல்ல வேண்டுமெனில் இதற்குப் பரிகாரங்கள் கூறப்பெறுகின்றன. காட்டாகச் சந்திரகலை ஓடும்போது போக வேண்டிய திசை சூரிய திசையாக இருந்தால், வலப்பக்க மூச்சை உள்ளே இழுத்து, பூரணமாக்கி, அம்மூச்சு நடக்கும்போதே மூன்றடி முன்னே வைத்துப் பின்பு நேராக வழியிலே சிறிது தூரம் நிற்காமல் செல்ல வேண்டும். (ஞான சாஸ்.11). சோதிடத்தில் போகக் கூடாத திக்குகளில் பயணம் செய்ய வேண்டியிருப்பின் தயிர், வெல்லம், கொள்ளு முதலியன பரிகாரமாகப் பயன்படுத்தப்படுதல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இங்ஙனம் பயணம் செல்வதற்கு மட்டுமன்றி வேறு செயல்களுக்கும் 'சரசாஸ்திரத்தில்' 'உபசாந்தம்' என்ற பெயரில் பரிகாரம் கூறப்பெறுகின்றது.

சரசாஸ்திரம், சோதிடம், நாடி சோதிடம் ஆகியவற்றின் தோற்றக் கொள்கையைப் புராணவியல் அடிப்படையில் கூறும்போது உமையாளுக்குச் சிவனாரால் கூறப்பட்டது.[1]

---

1. ''சரசாஸ்திரம் பற்றி உமையவள் கேட்கச் சங்கரனார் சொன்னார்''

- ஞானசரநூல் சாஸ்திரம், 1.

என்று சொல்லப்படுவதால் இம்மூன்று கலைகளும் அடிப் படையில் பல ஒற்றுமைக் கூறுகளை உள்ளடக்கியதாக அமைகின்றன.

சரம் பார்ப்பவருக்கு முதலில் வெற்றிலை, பாக்கு முதலானவை கொடுத்து மரியாதை செய்து பின் பலன் கேட்டால், சரம் பார்க்க வந்தவர் வந்து நின்று கேட்கும் திசை, சொல்பவர் நிற்கும் திசை, வந்தவன் முதலில் வாய் திறந்து சொன்ன வார்த்தையின் எழுத்தை எண்ணிப் பார்த்து அதனைக் கொண்டு பலன் கூறல், சரம் பார்க்க ஆசனவிதி கூறுதல், பார்க்க வருபவர், கூறுபவர் உட்காரும் திசை, நிலை, சரம் பார்ப்பவரை ஒருவர் வந்து அழைப்பின் சூரியகலை இயங்கும்போதே போதல், வந்தவருக்கு, கூறுபவர்க்கு ஓடும் மூச்சை வைத்துப் பலனறிதல் முதலான பல கூறுகள் சோதிட முறைகளை ஒத்தனவாகவே அமைகின்றன. ஆரூட வகைகளுள் ஒன்றான பிரசன்ன முறையில் பலன் கூறும்போது, தாங்கள் மேற்கொள்ளும் பல வழிமுறைகளுள் சரசாஸ்திரத்திலுள்ள மூச்சுக் கணக்கீட்டையும் ஒரு கூறாகப் பயன்படுத்தியுள்ளனர். கேள்வி கேட்பவருக்கு, கேள்வி கேட்டபோது நடக்கும் மூச்சு சூரியகலையா, சந்திர கலையா, சுழு முனையா என அறிந்து கூறும் இம்முறையினைப் பற்றிக் கூறும்போது சரசாஸ்திர விதியினைப் பின்பற்றிக் கூறுவதாகக் கூறப்படுவதில்லை. சோதிடரின் ஆன்மீக மன வலிமையின் உதவியால் கூறப்படுவதாகக் கருதப்பெறுகின்றது.

குரு, புதன், சனி வாத நாடி (இடகலை)யையும், சூரியன், செவ்வாய், பித்த நாடி (பிங்கலை)யையும், சுக்கிரன், சந்திரன், சிலேத்தும நாடி (சுழுமுனை)யையும் குறிக்கின்றன. யோகத்திற்கும் அதன் உட்கூறுகளுள் ஒன்றான சரசாஸ்திரத்திற்கும் ஆதாரமாக அமையும் நாடிகள் சோதிடத்திற்கும் ஆதாரமாக அமைதலைக் காணமுடி கின்றன. கோள்கள் ஒன்பதும் ஐம்பூதக் கூறுகளோடு யோக முறையில் பின்வருமாறு தொடர்புபடுத்தப் பெறுகின்றன.

| | |
|---|---|
| **சந்திரன், சுக்கிரன்** | **- நீர்** |
| **செவ்வாய்** | **- நிலம்** |
| **குரு, சூரியன்** | **- நெருப்பு** |
| **புதன்** | **- காற்று** |
| **சனி, இராகு, கேது** | **- ஆகாயம்** |

மூக்கிலிருந்து வருகிற சரம் அம் மூக்குத் தண்டைச் சார்ந்து வந்தால் நிலத்தின் கூறு; கீழ்நோக்கி ஓடினால் நீரின்

கூறு; மேலாகப் பாய்ந்தால் நெருப்பின் கூறு; மூக்குத் தண்டிற்கு நேராகிய மற்றொரு புறத்தைச் சார்ந்து வீசினால் காற்றின் கூறு; இந்நான்கு பக்கங்களும் அல்லாமல், நான்கு பக்கங்களும் கலந்து நடந்தால் வானத்தின் கூறு என்றவாறு ஐம்பூதக் கூறுகள் 'சரசாஸ்திரத்தில்' கூறப்படுகின்றன. சோதிடத்தில் மேட, சிம்ம, தனுசு இராசிகள் நெருப் பெனவும்; இடபம், கன்னி, மகர இராசிகள் நிலமெனவும் மிதுனம், துலாம், கும்ப இராசிகள் காற்று எனவும்; கடகம், விருச்சிகம், மீனம் ஆகியன நீர் எனவும் பிரிக்கப்படும் முறையோடு மேற்கூறிய முறை ஒப்புநோக்கத்தக்கதாக அமைகின்றது.

**சித்தர் இலக்கியங்களில் கணக்கிடு முறைகள்**

கர்ப்ப சோதிட முறைப்படி சோதிடர் கணக்கிட்டுக் குழந்தை பிறப்பதற்கு முன்பே பலன்களைக் கூறினர். இம்முறையிலுள்ள கணக்கிடு முறைகள் பல, நுட்பமாகச் சித்தர் இலக்கியங்களில் ஆங்காங்கே கையாளப் பெற்றுள்ளன.

''நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தாண்டி ஓர் தோண்டி''

என்ற கடுவெளி சித்தரின் பாடலில் உள்ள ஆண்டி என்பது உயிரைக் குறிக்கின்றது. நாலாறு மாதம் என்று கூறப்படுவது சந்திரனுடைய கணக்குப்படி பத்து மாதங்கள் கொண்ட திதி கணக்காகிய 270 நாட்களே. இன்றைய அறிவியல் கணக்கின்படியும் ஒரு கருவின் வளர்ச்சிக்காலம் ஏறத்தாழ 267 நாட்கள் என்றே கூறப்பெறுகின்றது.

பொழுது புலவர்தற்கு முன்னுள்ள 1½ மணி நேரம் (பின்னிரவு) மூக்கின் வலப்பக்கம் மூச்சு ஓடும். அதுவே புணர்ச்சி கொள்வதற்குரிய நேரம். முன்னிரவில் புணர்ச்சி கொண்டால் வலிமை இழப்பர். பின்னிரவில் கொண்டால் புணர்ச்சியால் வரும் உணர்ச்சியைப் பெறுவர் (திரு.1941).

ஒரு குழந்தையின் கரு உருவாவதற்குத் தாய் தந்தையரின் உயிர் ஆற்றல்களோடு சேர்ந்து, வேறு ஆற்றல்களும் இணைய வேண்டியதிருக்கிறது. இந்த ஐம்பூத ஆற்றல்கள் எவ்வெப்போது தாய் தந்தையரின் ஆற்றல்களோடு இணைகின்றன என்பதற்கும் ஒரு கணக்கு சித்தர்களால் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கு, ஒரு பெண் மாதவிடாயாகிக் குளிக்கின்ற நாளுக்கும், வளர்பிறை, தேய்பிறை ஆகிய திதிகளின் கணக்குக்கும் இணைந்த

முறையில் அமைந்திருக்கிறது. கருத்தரிக்கிற நாட்களின் கணக்குகளைக் கூறுகின்ற சித்தர்கள், பிறக்கும் பிள்ளைகளின் இயல்புகளைப் பற்றியும் கூறுகின்றனர்.

அமாவாசையன்று கூடித் தரிக்கின்ற கரு கறுப்பாகவும், நான்கு அல்லது ஆறு விரல்கள் உள்ளதாகவும் பிறக்கும். அமாவாசை கழிந்த பிரதமையில் கூடித் தரிக்கின்ற கரு பொய் பேசும் பிள்ளையாகப் பிறக்கும். அமாவாசை கழிந்த மூன்றாம் நாள் கூடிப் பிறந்த குழந்தை, நீண்ட நாள் வாழாது. முழுநிலவன்று கூடிப் பிறந்த குழந்தை தண்டியாக, மடமாக இருக்கும். இதனை 'ஆனை வடிவு' என்று சித்தர் இலக்கியம் வருணிக்கிறது. முழு நிலவு கழிந்த பிரதமையில் கூடித் தரிக்கும் குழந்தை, சிறுவயதில் பல கண்டங்களைத் தாண்டிப் பின்னர் நீண்ட ஆயுள் வாழக்கூடியதாக இருக்கும். பதினைந்தாம் நாள் கூடிப் பிறக்கும் பிள்ளை பித்தம், கருங்குட்டம், வெண்குட்டம் அல்லது முயலகன் எனும் நோயால் பாதிக்கப்பெறும். பிறை கண்ட 3, 5, 8, 10 ஆகிய நாட்களில் எந்த மாதத்திலும் ஆடவனும் பெண்ணும் உடலுறவு கொள்ளுதல் கூடாது. வெள்ளிக்கிழமை பகல் நேரத்தில், மூன்றாவது சாமத்தில் உடலுறவு கொண்டு அதன் பலனாய்ப் பிள்ளை பிறந்தால் அதற்கு மாறுகண் இருக்கும்.

புணர்ச்சிக் காலத்தில் மூச்சின் இயக்கத்தைக் கொண்டு குழந்தை ஆணா, பெண்ணா என அறிதல், ஆயுள் அறிதல், உடற்கூறு பற்றி அறிதல் ஆகியன திருமந்திரத்தில் (436-474) கூறப்பெறுகின்றன. புணர்ச்சிக் காலத்தில் ஆணின் ஜீவ அணு பெண்ணின் கர்ப்பப் பையில் விழும்போது மூச்சு சூரியகலையில் இயங்குமாயின் ஆண் குழந்தையும், சந்திரகலையில் இயங்குமாயின் பெண்குழந்தையும் பிறக்கும். பிராணவாயுவுடன் அபானவாயு எதிர்க்குமானால் இரட்டைக் குழந்தைகள் பிறக்கும். சூரிய கலையிலும் சந்திர கலையிலும் மூச்சு சமமாக இயங்குமானால் அலியாகும் (திரு.482). கலவியின்போது ஆண்பெண் இருவருக்குமே மூச்சு சமமாக இயங்குமானால் கருவிலுள்ள குழந்தை அழகாக இருக்கும். 'புணர்ச்சியின்போது சுக்கிலம் அதிகமானால் ஆணும், சுரோணிதம் மிகுமானால் பெண்ணும், இரண்டும் சமமானால் அலியும் பிறக்கும். சுக்கிலம் அளவில் மிகவும் கூடுமானால் அரசன்போல ஆண்மையுடைய குழந்தை பிறக்கும்' (திரு.462).

ஆண்பெண் கூட்டுறவின்போது ஏற்படும் சுக்கில சுரோணிதக் கலப்பில் சுக்கிலம் எதிர்த்துச் சென்றால், தாமச

குணத்துடன், சுரோணிதம் எதிர்த்துச் சென்றால் சத்துவ குணத்துடன், இரண்டும் சமமாக இருப்பின் இராஜச குணத்துடன் குழந்தை பிறக்கும் (திரு.458).

விந்தானது கருப்பையுள் பாய்ந்தபின் தாய் தந்தையர்க்கு ஐந்து மாத்திரை அளவு மூச்சு ஓடினால் குழந்தைக்கு ஆயுள் நூறு. நான்கு மாத்திரை அளவு ஓடினால் குழந்தைக்கு எண்பது ஆண்டு. யோகியால்தான் இப்படி மூச்சைப் பகுத்தறிந்து விந்தினைப் பாய்ச்ச இயலும். மூச்சு நான்கு மாத்திரைக்கும் குறையுமானால் குழந்தை குட்டையாகும்; மூச்சு இளைக்குமானால் மூடமாகும்; காற்று ஓடும்போது இடையில் தடைபடுமானால் கூனாகும்; கருத்தரிக்கும் காலத்தில் பெண்ணின் வயிற்றில் மலம் மிகுமானால் குழந்தை மந்தமாகும்; நீர் மிகுமானால் ஊமை; இவை இரண்டும் மிகுமானால் ஊமை, குருடு, செவிடு (திரு.481).

இனி குழந்தை பிறக்கின்ற நாழிகையை வைத்தும் சில கணக்குகளைச் சித்தர்கள் கூறியுள்ளனர். இந்தக் கணக்கின்படி பகல் இரண்டாம் சாமத்திற்கும், இரவின் இரண்டாம், நான்காம் சாமங்களுக்கும் மிகச் சிறப்பான பல இயல்புகள் கூறப்பெற்றுள்ளன. இந்தச் சாமங்களோடு அந்தந்த மாதத்தில் சூரியன், சந்திரன், பிற கோள்கள் ஆகியன நிற்கின்ற நிலைகளை விரிவாக ஆராய்ந்து குழந்தையின் பிறப்பு, வளர்ப்பு, இயல்பு, ஆயுள், வாழ்வில் அடைகின்ற சாதனைகள் முதலியவற்றை விரிவாகப் பேசுகிறது சித்தர் இலக்கியம்.

உடலியக்கம் பற்றிய சித்தர்களின் இத்தகைய நுட்பமான புலமை பெரிதும் வியப்பிற்குரியது. திருமந்திரத் திலுள்ள கரு உற்பத்தி, அமுரிதாரணை, ஆயுள்பரிட்சை, காயசித்தி, உபாயம், தியானம், பரியங்க யோகம், பிராணாயாமம், விந்துற்பனம், விந்துசயம், போகசர வோட்டம் என்ற அதிகாரங்களில் உடலியங்கியல் பற்றிய நுட்பமான செய்திகள் பல காணப்படுகின்றன. கரு உற்பத்தி எனும் பகுதியில் திருமூலர் கூறும் முப்பத்தொன்பது பாடல்கள் கருவிலே அமையும் குழந்தையின் குணம், பால் வேறுபாடு, ஆயுள்நிலை பற்றியெல்லாம் மிகமிக நுட்பமாகக் கூறப்பட்டுள்ளன. இப்பகுதிகள் சோதிடவியலோடு மிக நுணுக்கமாக ஒப்புநோக்கப்பட வேண்டிய பகுதிகளாகும்.

**ஆயுள் சோதனை**

எந்தெந்த நாட்களில், எந்த எந்த நேரத்தில், இந்த உயிர்ப்பின் இயக்கம் எப்படி எப்படி உள்ளது என்பதற்கு ஒரு விரிவான பட்டியலைச் சித்தர்கள் தந்திருக்கின்றனர். இந்தப் பட்டியலோடு நம்முடைய உடம்பு நாழிகை ஒன்றுக்கு மூன்னூற்றறுபதுமுறை காற்றை உள்ளிழுத்து வெளிவிடுகிறது என்றும் கூறியிருக்கின்றனர். ஒரு நாளைக்கு அறுபது நாழிகைகள் இருப்பதால், நாள் ஒன்றுக்கு 21,600 முறை மூச்சு இயங்குகிறதென அறிந்திருக்கின்றனர். சூரியன் தோன்ற ஐந்து நாழிகை இருக்கும்போது சரம் பார்க்கப் புகுந்த யோகி வளர்பிறை, தேய்பிறை இவற்றின் கணக்குக்கு உட்பட்டு என்றென்று எவ்வப்பொழுது எந்த எந்த மூக்கில் மூச்சு இழைகிறது என்பதைக் கூறியுள்ளார். ஒருநாளின் உட்பிரிவு நேரங்கள் இந்துமுறைச் சோதிடத்திலும் இவ்வாறே கணிக்கப்பெற்றுள்ளன.

இராசிச் சக்கரத்திலுள்ள 360 பாகைகளில் பாகையின் உட்பிரிவான நிமிடக் கணக்கான தூரத்தில் 21,600 புள்ளிகள் (360 பாகை 60 நிமிடம் = 21,600 நிமிடம்). ஒருநாளில் ஒரு மனிதன் 21,600 முறை மூச்சு விடுகிறான். ஒரு நாளின் 21,600 மூச்சு நேரத்தில் இராசிச் சக்கரத்தில் பன்னிரண்டு இராசிகளிலுள்ள 21,600 நிமிடப் புள்ளிகளும் கிழக்குத் தொடுவானத்தைச் சந்திக்கும் வண்ணம் ஒரு மூச்சுக்கு ஒரு புள்ளி வீதம் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. கிழக்குத் தொடுவானத்தை இராசிச் சக்கரத்தின் எந்தப்புள்ளி சந்திக்கின்றதோ அந்தப் புள்ளிக்கு 'இலக்னம்' என்பது பெயர். எனவே, 21,600 மூச்சைக் கொண்டு கணக்கிடு முறை யோகம், சோதிடம் இரண்டிலும் உள்ளது என்பது தெரிகின்றது. 'மனிதர்களுக்கு 21,600 மூச்சு நடக்குமெனில் அவன் 120 ஆண்டுகள் உயிர் வாழ முடியும்' என 'சிவயோகசாரம்' என்ற சித்தர் இலக்கியம் கூறுகிறது. இப்போது மனிதர்கள் 21,600 சுவாசத்திற்கு மேல் விடுகின்றனர். ஓடுவது, நடப்பது, தூங்குவது, போகம் செய்வது போன்றவற்றால் மூச்சு அதிகரித்து, 120 வயதுக்குக் குறைவு நேரிடுகிறது. எனவே மனிதர் விடும் மூச்சு எவ்வளவு குறையுமோ அவ்வளவு வயது அதிகமாகி வரும். அதற்காகத் திடீரென மூச்சை அடக்கக் கூடாது.

1 முதல் 33 வயது வரை அற்ப ஆயுள், 34 முதல் 66 வரை மத்திம ஆயுள், 67 முதல் 99 வரை தீர்க்காயுள், 100 முதல் 120 வரை முழுமையான ஆயுள் என்றவாறு சோதிட நூல்களில் ஆயுட்காலம் கணக்கிடப்பட்டுள்ளது. தசாபுத்தி முறையிலும் கோள்களுக்கு 120 ஆண்டுகளே பகிர்ந்தளிக்கப் பெற்றுள்ளன. சூரிய தசா - 6 ஆண்டுகள், சந்திரன் - 10, செவ்வாய் - 7, இராகு - 18, குரு - 16, சனி - 19, புதன் - 17, கேது - 7, சுக்கிரன் - 8 என்றவாறு மனிதனுடைய ஆயுட்காலம் 120 என்பதில் சோதிடமும் யோகமும் ஒன்றுபடுகின்றன. 120 ஆண்டுகள் வாழ முடியாவிட்டாலும் மூச்சை இடது வலது மூக்குகளின் வழி கிரமப்படி செலுத்திப் பயிற்சி செய்தால் கண்டிப்பாக நூறு ஆண்டுகள் வாழலாம் என்கிறார் திருமூலர் (திரு. 753).

இத்தகைய சிறப்பு மிக்க மூச்சின் இயக்கத்தைக் கொண்டு சித்தர்கள் பலவழி முறைகளில் ஆயுள் பரீட்சை செய்திருக்கின்றனர். அவற்றுள் சில முறைகள் இங்குச் சுட்டப்பெறுகின்றன. ஒரு மனிதனுக்கு இரவு முழுவதும் இடகலை அல்லது பிங்கலை இடைவிடாமல் நடந்தால் 3 ஆண்டில் அவனுக்கு மரணம்; இதேபோல் பிங்கலை இரண்டு இரவு, இரண்டு பகல் இடைவிடாமல் நடந்தால் இரண்டு ஆண்டில் மரணம்; இரவு முழுவதும் இடகலையும், பகல் முழுதும் பிங்கலையும் மாறாமல் இழையுமே யானால் ஆறுமாதத்தில் மரணம்; பிங்கலை இடைவிடாமல் ஒரு பட்சம் நடக்க 15 நாளில் மரணம்; இடகலை இதேபோல் ஒரு மாதம் நடந்தால் உடனடியாக மரணம். 'புருவத்தைப் பார்த்தால் தெரியாதவர்களுக்கு 9 நாளில், காது கேளாதவர்களுக்கு 7 நாளில், நட்சத்திரம் தெரியாதவர் களுக்கு 3 நாளில், இருகண்களையும் கையால் அமுக்கினால் தண்ணீர் வராதவர்களுக்கு 10 நாளில் மரணம் ஏற்படும்' என்று 'சிவயோகசாரம்' என்ற நூல் கூறுகிறது.

திருமூலரும், 'ஆயுள் பரிட்சை' என்ற பகுதியில் மரணம் வருவது குறித்து இதுபோன்ற சில கணக்குகளைக் கூறுகின்றார். கையைத் தலைமீது முகத்திற்கு நேராக வைத்தால் அந்தக்கை சிறிது பெரிதாகத் தோன்றாமல் அளவாகத் தெரிய வேண்டும். அங்ஙனமின்றிப் பெரிதாகத் தோன்றினால் ஆறு

மாதங்களிலும், இரண்டு மடங்காகத் தோன்றினால் ஒரு மாதத்திலும் மரணம் அடைவர் (750). பிராணவாயு ஆறுவிரல் அளவு பூரகமாக இருப்பின் 80 ஆண்டும், ஏழு விரல் அளவு பூரகமாக இருப்பின் 60 ஆண்டும், 8 விரல் அளவு இடகலையில் இயங்குமானால் 50 ஆண்டும், ஒன்பது விரலளவு இயங்குமானால் 30 ஆண்டும், 10 விரல் அளவு இயங்குமானால் 25 ஆண்டும் வாழ்வர். (754-756).

பிராணன், அபானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், உதானன் என்னும் இவ்வொன்பது வாயுக்களும் இடகலை, பிங்கலை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குகு என்னும் ஒன்பது நாடிகளில் சமமாக இருந்தால் உடலும் உயிரும் ஒத்து நீண்ட காலம் இருக்கும். தனஞ்செயன் என்னும் வாயு நடுநாடியாகிய சுழுமுனையில் இருக்கும். உடலில் இக்காற்று இல்லையானால் உடலானது வீக்கமுற்று வெடித்து விடும். தனஞ்செயன் என்னும் வாயுவின் திரிபால் சிரங்கு, குட்டம், சோகை, கண் நோய்கள் முதலியன உண்டாகும். கூர்மன் என்னும் வாயு சேர்ந்திராவிட்டால் கண்ணொளி விளங்காது. இன்ன முறையில் இன்னின்ன நாடிகள் பொருந்தியிருந்தால் இன்னின்ன நோய் அணுகாது என்றும் திருமூலர் வரையறை செய்து கூறுகிறார் (635, 636).

'ஞானசரநூல் சாஸ்திரம்' என்னும் நூல் ஒருவனது ஆயுட்பரிட்சை, ஆயுட்காலம் பற்றிப் பலவிடங்களில் பேசுகின்றது (36-38). தைமாதம் முதல் தேதியில் பொழுது விடிய ஐந்து நாழிகையிருக்கையில் சரம் பார்க்க, ஐந்து நாழிகைகளும் சிதறாமல் சரம் ஓட வேண்டும். இதுபோக ஆடிமாதம் முதல் தேதியில் இதேபோல் பார்க்க, அப்போது சரம் வலது பக்கத்திலோட வேண்டும். ஓடும் சரம் ஐந்து நாழிகையும் சிதறாமல் ஓடினால் அன்று தொட்டு நூறாண்டு வாழ்ந்திருப்பன். இங்ஙனமின்றிக் குறைந்தால் அவ்வைந்து நாழிகையை நூற்றொருமா ஐந்தாக நூறாக்கிக் குறைந்த நாழிகை ஒருமாவோ இரண்டு மாவோ அல்லதன்மேல் தொகைப்பட்டவையோ அதற்கு ஒவ்வோர் ஆண்டையும் கூட்டிப் பார்த்துக் குறைந்த ஒவ்வொருமா நாழிகையின் பேரில் கணக்காக்கிக் கொள்ள வேண்டியது. முழுவதுமே

தப்பிச் சரம் இடத்திற்கு வலமாகவும், வலத்திற்கு இடமாகவும் ஓடில் அவனுக்குச் சீனகாலமென ஞானசரநூல் சாஸ்திரம் கூறுவதனை,

"பற்றினாஞ் சொன்னபடி மயானமுன்னாட்
பாலொருபோ துண்டுபரி சுத்தனாகி
மற்றைநா ளுத்தரமா மயானந்தன்னின்
மாறியிடந் தனிலோடும் வலந்தெற்காகும்
பெற்றதொரு நான்கைதா னைந்நூறாகும்
பெறுங்கடிகை தனிற்குறையிற் பிராணனில்லை
முற்றொருமா நாழிகைக்கோ ராண்டுதொழு
மும்மையேநான் சொன்னகணக் குண்மைதானே" (33)

என்ற பாடல் காட்டுகிறது. சோதிடத்திலுள்ள கணக்கிடு முறைகளோடு இம்முறைகள் ஒப்புநோக்கத்தக்கன. இந்தச் சோதனைகளைச் செய்து தெரிந்து கொண்டால், சித்தர்களின் பயிற்சி முறைகளிலே இப்படி ஒரு நெருக்கடி முன்னறி விப்பாகத் தெரியுமானால் உடனே சரப்பயிற்சி முதலான வழிகளைக் கையாண்டு மாற்றுகளைச் செய்து உடம்பைச் சரிசெய்து கொள்ள இயலும் என்பதையும் சித்தர் இலக்கிய யோகப்பகுதி உணர்த்துகின்றது. இங்ஙனம் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆன்ம வளர்ச்சிக்கும் கேடு ஏற்படாத வகையில் இந்த மூச்சு இயக்கத்தைச் சரிசெய்து கொள்ள வேண்டிய அவசியத்தையும் முறைகளையும் சித்தர்கள் கூறியுள்ளனர்.

இங்குச் சுட்டப்பட்டவற்றிலும், இதுபோன்ற பிறவற்றிலு முள்ள சித்தர் இலக்கியங்களிலுள்ள கணக்கிடு முறைகள் சோதிடவியலின் நுட்பமான கணக்குகளோடு பொருந்தி அமைந்திருக்கிறது. எனவே இத்தகைய செய்திகள் முழுமை யும் தொகுக்கப்பட்டு ஆய்வுக்குட் படுத்தப்பட வேண்டும். இன்றைய அறிவியலில் 'காஸ்மோ பயாலஜி' என்று கூறப்படுகின்ற அறிவியல் துறையின் நுட்பங்களை ஆராய்கின்ற மேனாட்டு அறிவியல் அறிஞர்கள், புதிதுபுதிதாகக் கண்டு பிடித்து வருகின்ற பல உண்மைகளோடு இந்தக் கணக்கு வியக்கத்தக்க முறையிலே பொருந்தி வருகின்றது. இந்த நவீன ஆராய்ச்சி முன்னேறும் பொழுது ஐம்பூத ஆற்றல்களும் கோள்களின் இயக்கங்களும் உயிர்களின் பிறப்பு இறப்புகளை எப்படி வகைப்படுத்துகின்றன, வாழ்வை

எவ்வாறு இயக்குகின்றன, வாழ்வின் போக்கை எப்படி யெல்லாம் பாதிக்கின்றன என்ற அறிவியலின் உண்மைகள் மேலும் தெளிவடைய இடமிருக்கிறது.

## சித்தர் இலக்கியத்தில் சோதிட விதிகள்

### கண்டங்கள்

சோதிடவியலிலுள்ள கணக்குகளுடன் சித்தர் இலக்கியங் களிலுள்ள கணக்கிடு முறைகள் ஒத்துச் செல்வனவாய் இருப்பது மட்டுமன்றி 'சோதிட விதிமுறைகள்' பல அப்படியே சித்தர் இலக்கியங்களில் எடுத்தாளப் பெற்றிருக்கின்றன. சோதிடத்தில் ஒருவனுக்கு எந்தெந்த வயதில் கண்டங்கள், எதனால் ஏற்படுகின்றது என்பவை விரிவாகக் கூறப்பெற்றிருக்கிறது. திருமந்திரமும் 28, 33, 62, 100 ஆக இவ்வயதுகளில் மனித உடலிற்குக் கண்டங்கள் வருமெனக் குறிப்பிடுகின்றது (722). இப்பாடற்கு 25-28, 30-33, 60-62, 100 என்ற ஆண்டுகளில் கண்டங்கள் வருமென வேறுவகையாகவும் உரைப்பர்.[2]

### புற உலக இயக்கங்கள்

'அண்டத்தில் உள்ளது பிண்டத்தில்' என்ற கொள்கையே யோகநெறியின் அடிப்படை. பேரண்டத்தில் காணப்பெறும் பொருள், இயக்கங்கள், விதிமுறைகள் யாவும் பிண்டமாகிய மனித உடலிலும் இருக்கின்றன. அண்டப் பெருவெளியில் நடைபெறும் பௌதிக இரசாயன மாற்றங்களும் அவற்றுக்கான விதிகளும் மனித உடலிலும் உண்டு. அண்டத்தின் சுருக்கமாகப் பிண்டமும், பிண்டத்தின் விரிவாக அண்டமும் இருக்கிறது. எனவே அண்டத்தைப் பிண்டத்தில் காணமுடியும் என்றும், பிண்டத்தை அண்டமாக மாற்ற முடியும் என்றும் யோகியர் நம்பு கின்றனர். யோகப் பயிற்சியில் வல்லவர்களும், சோதிடரும் அண்டத்தில் உள்ள அனைத்தையும் பிண்டத்தில் காணுகின்றனர்.

---

2. கழகப் பதிப்பு, பகுதி - 1, ப.314.

வெளிநாடுகளிலே புதிய அறிவியல் கருவிகளின் வழி நடத்துவரும் அண்டம் பிண்டம் பற்றிய ஆய்வு அறிவியல் துறைக்குக் 'காஸ்மோ பயாலஜி' என்று பெயர். இந்த ஆய்வின்வழி அவர்கள், அண்டத்திலுள்ள கோள்களின் இயக்கங்கள் அனைத்தும் மனித உடம்பையும், உள்ளத்தையும், வாழ்வையும் பாதிக்கின்றன என்கின்றனர். சித்தர்களின் சோதிடவியலிலே குறிப்பிட்டுள்ள பல பேருண்மைகளுக்கு இந்தக் 'காஸ்மோ பயாலஜி' என்ற அறிவியல் துறை சான்று பகர்கின்றது. பௌர்ணமி, அமாவாசை இரவுகளில் விண்ணிலே சில இயல்பாற்றல்கள் ஏற்படுகின்றன என்று சித்தர்கள் கூறுகின்ற உண்மையை இந்த ஆய்வு உறுதிப்படுத்துகின்றது.

**வாரசூலம்**

நமது உடம்புக்குள் உயிரும் உள்ளமும் இயங்குவது போலவே புற உலகிலும் பேருயிரும் பேருள்ளமும் இயங்குகின்றன. இவற்றின் அதிர்வு முறைகளிலே, நமது தனிப்பட்ட உடல் அதிர்வுகளும், வெளி அதிர்வுகளும் இசைந்து இயங்குமானால் நன்மை எனவும், இவற்றில் முரண்பாடு கண்டால் கேடு எனவும் சித்தர்கள் கண்டனர். இக்காலத்தில் அறிவியலில் 'காஸ்மோ பயாலஜி' என்ற முறையில் நடந்துள்ள ஆய்வுகள், புற உலக இயக்கங்கள் நம்முடைய தனி இயக்கங்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைச் சோதித்துக் கண்டு சொல்ல, அவற்றின் இயைபுக்கு முக்கியத்துவம் தந்து பேசியுள்ளன.

சித்தர்களும் சூலம் என்ற எதிர் அலை வீச்சுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர். என்னென்ன கிழமைகளில் எந்த எந்தத் திசைகளில் இந்த எதிர்முரண் செயற்படுகிறது என்பதைக் கண்டு, இந்த எதிர் அலைகளை எதிர்த்து எதிர்நீச்சல் போட வேண்டாம் என்று எச்சரிக்கை தருகின்றது சித்தர் இலக்கியம். நமது சமுதாயத்தில் பழக்கத்திலுள்ள 'சூலம் பார்த்தல்' திருமந்திரத்தில் 'வாரசூலம்' என்ற அதிகாரத்தில் (797, 798) கூறப்பெறுகிறது. சோதிடத்திலுள்ள இவ்விதி சித்தர் இலக்கியத்திலும் பொருள் மாற்றமின்றி இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.[3]

---

3. சித்தர் இலக்கியம், தொகுதி-1, ப.254.

சோதிடவியலிலும், சித்தர் இலக்கியங்களிலுமுள்ள பௌர்ணமி, அமாவாசை இரவுகளில் விண்ணிலே சில இயல்பாற்றல்கள் ஏற்படுதல், சூலம் பார்த்தல் என்ற நிகழ்வுகளைக் 'காஸ்மோ பயாலஜி' ஆய்வுகள் உறுதிப் படுத்தியுள்ளமை தெரிகிறது. இதன்வழி சோதிடத்திலுள்ள பல செய்திகள் சித்தர் இலக்கியங்களில் இடம் பெறுவதுடன் இவை காஸ்மோபயாலஜி என்ற அறிவியலுடன் ஒத்துச் செல்வதையும் அறிய முடிகின்றது.

## யோகத்தில் சோதிடத்தின் தாக்கம்

சோதிடம் பார்த்து நிகழ்வுகளை மேற்கொள்ளும் முறை யோகத்தில் காணப்படுகின்றது.

யோகாப்பியாசத்திற்கு ஆகும், ஆகாத (திரு.743) நாட்கள், வேதம் ஓதுவதற்குரிய காலம், ஓதுவதற்குதவாத காலம், குருவிடம் அறிவுரை பெறுதற்கு உகந்த நாட்கள், உகந்ததல்லாத நாட்கள், தியானம் மேற்கொள்ளும் முறை, எந்தத் திதியில் எப்படி, எப்பக்கம் தியானிக்க வேண்டும் (திரு.1291) என்பன போன்ற செயற்பாடுகளுக்குச் சோதிடம் துணை நிற்றலையும் இலக்கியங்களின் வழி அறிய முடிகின்றது. எனவே யோகமும் சோதிடமும் ஒன்றிணைந்து காணப்படுவதோடன்றி, தனித்தனியாக நின்றும் ஒன்றை ஒன்று சார்ந்து அமைதலைக் காண முடிகின்றது.

சோதிடவியலிலுள்ள கணக்குகளுடன் சித்தர் இலக்கியங் களிலுள்ள கணக்குமுறைகள் ஒத்துச் செல்வனவாய் உள்ளன. இவ்விரு கணக்கு முறைகளும் இன்றைய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளுடன் சரிவரப் பொருந்தி வருவதைக் காஸ்மோ பயாலஜி ஆய்வுகள் உறுதிப் படுத்துகின்றன. எனவே சோதிடவியலிலுள்ள, சித்தர் இலக்கியங்களிலுள்ள கணக்கிடு முறைகள் முழுமையாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அதனை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு வழிவகுத்தல் வேண்டும். சோதிடக் கணக்கிடு முறைகள் சோதிட நூல்களின் வழி எளிதில் கிடைக்கப் பெறும். ஆயின் சித்தர் இலக்கியங்களிலுள்ள கணக்கிடு முறைகள் அரிதின் முயன்று தொகுக்கப்படுவது மட்டுமல்ல, அக்கணக்கிடு முறைகளை அனைவரும் புரிந்து

கொள்ளத்தக்க நிலையை ஏற்படுத்த வேண்டும். இந்நிலை ஏற்படும்போது இவ்விரண்டிலுள்ள கணக்கிடு முறைகள் பல வியத்தகு அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்தும் வண்ணம் அமையும்.

யோகம் இறைத் தத்துவத்தோடு தொடர்புடையது; கடவுள்களே கோள்களாக உருவெடுத்துள்ளனர்; கடவுளால் படைக்கப்பட்டதே சோதிடம் என்பன போன்ற கருத்துகள் சோதிடத்தையும் இறைத் தத்துவத்தோடு இணைக்கின்றது. சோதிடத்தின் அடிப்படைக் கூறுகளான கோள்கள், நட்சத்திரங்கள், இராசிகள் முதலியன யோகத்திலுள்ள இடகலை, பிங்கலை, சுழுமுனை முதலியவற்றோடு இணைந்து செயல்படுகின்றன என்பதற்கு யோகத்திலுள்ள பல செய்திகள் காட்டாக அமைகின்றன. சோதிடத்திலுள்ள கோள்கள், நட்சத்திரங்கள், இராசி வீடுகள் முதலியன உடலுயிர் விளைவுகளைக் குறிக்கும் துணைக் கூறுகளாகக் (உப லட்சணங்கள்) கொள்ளப்படுகின்றன.

## 'சோதிடம் - யோகம்' என்ற நூல் தரும் செய்தி

சோதிடமும் யோகமும் என்ற தலைப்பில் இவ்விரு கலைகளையும் ஒப்புமைப்படுத்தி ஆய்வு மேற்கொண்ட போது, அதற்கான குறிப்புகளோ, தனிப்பட்ட நூல்களோ கிடைக்காத நிலையில் 'சோதிடம் - யோகம்' என்ற 60 பக்க அளவிலமைந்த சிறுநூல் கிடைக்கப் பெற்றது. இந்நூல் சோதிடத்திலுள்ள பெரும்பான்மைக் கூறுகளை யோகத்தின் கூறுகளோடு இணைத்துக் காண்கிறது. இம்முயற்சி அரிய கடின முயற்சியாயினும் நூல் முழுமையினையும் புரிந்து கொள்ளுதல் என்பது கடினமானதாக மட்டுமன்றி, இது பற்றிய தெளிவுக்கு மேலும் பல விளக்கங்களை அறிய வேண்டிய நிலையே உள்ளது. அது மட்டுமன்றிச் சோதிடம், யோகம் இவ்விரண்டிலும் முழுமையான ஆழங்கால் பட்டு அறிந்தவர்களும்கூட இடர்ப்பாடும், மயக்கமும் எய்தும் வாய்ப்பே உள்ளது. இருப்பினும் சோதிடத்திற்கும் யோகத்திற்கும் அடிப்படையான ஒற்றுமைக் கூறுகள் இல்லாத நிலையில், ஆசிரியர் இம்முயற்சியினைக் கைக் கொண்டிருத்தல் இயலாது என்பதை இவ்வாய்வின்

முற்பகுதிச் செய்திகளும், குறிப்பாக, 'அண்டத்திலுள்ளதே பிண்டம்' என்ற செய்தியும் தெளிவுறுத்துகின்றன. இவ்விரு கலைகளிலும் சிறந்தவர் இந்நூலையோ, இங்குத் தரப்பட்டுள்ள இப்பகுதியையோ கண்ணுறும்போது இதுபற்றிய சிந்தனையில், ஆய்வில் ஈடுபடுதல் கூடும். இத்தகைய வாய்ப்பினை ஏற்படுத்தவும், இந்நூலில் கூறப்பட்டுள்ள செய்திகள் தெளிவாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் வெளிவரவும் வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில், இந்நூலிலுள்ள செய்திகள் ஆய்வுக்குப் பயனுள்ள வகையில் சுருக்கித் தரப்பட்டுள்ளன. இந்நூலை முதல் முயற்சியாகக் கொண்டு இதன்வழி இதுபற்றிய விரிந்த, தெளிவான ஆய்வு ஏற்படுதல் சோதிடமும் யோகமும் பற்றிய ஆய்வுக்கு உறுதுணை புரியும்.

யோகமுறையில் நமது தலையே அண்டம்; தலையிலுள்ள முடி எனும் மயிர்க்கால்கள் தான் பத்தாயிரம் கோடி சூரியன்கள்; உடம்பே பூத மண்டலம். தூல நிலையில் அக்கினிமண்டலம் மூலாதாரத்திலும், சுவாதிட்டானத்திலும் பொருந்தியிருக்கிறது. சூரிய மண்டலம் விருத்தியையும், அநாகதத்தையும் பொருந்தியிருக்கிறது; சந்திர மண்டலம் விசுத்தியையும் ஆக்ஞையையும் பற்றி உள்ளது. இதே அமைப்பு சூக்கும வடிவத்தில் நம்முடைய உடம்புக்குள் செயல்புரிகின்ற சூக்கும உடலாகிய நுண்உடலில் எவ்வாறு தொழில் புரிகிறது என்பதைச் சித்தர் இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. அக்கினி பிடரிக் கண்ணையும், சூரியன் வலது கண்ணையும், சந்திரன் இடக் கண்ணையும் பொருந்தி உள்ளன. ஒரு திசுவை எடுத்தாய்ந்தால் அதில் ஏழு தாதுவின் கூறும், பஞ்ச பூதக் கூறும், உயிர்க் கூறும், புலன் கூறுமாக அடங்கி இருத்தலைக் காணலாம்.

**கோள்கள்**

உடலுயிரின் கூறுகளை விளக்கிக் கூறப்பெற்ற கோள்களே சூரிய சந்திரர் எனப்படுபவை. உயிர் சூரியனாகவும், அவ்வுயிரால் ஒளிரும் உடல் சந்திரனாகவும் கூறப்பெறுகின்றன. சூரியன் ஆன்மாவை எதிரொலித்து ஒன்பது கோள்களின் தலைவனாக விளங்குகிறது; காயத்திரி

மந்திரத்தின் உட்பொருளாக உள்ளது. காயத்திரி என்பது சுழிமுனை. ஒருவரின் பிறப்பு இலக்னத்திற்குக் காரணமா யுள்ளது; தனித்தொன்றாகப் பயணிக்கும் இயல்பினை யுடையது; சூரியன் ஓரியக்க நிலையாக உள்ள சுழிமுனையின்கண் அமர்ந்து பன்னிரண்டு கலைகளையும் உடலகத்துக் காணும் ஏழு தாது மற்றும் ஐம்பொறிகளில் கூடும்படி பயணிக்கின்றான். ஏழு தாதுக்களே இரத்தம், கொழுப்பு, நரம்பு, எலும்பு, நீர், தசை, சுக்கிலமும் சுரோணிதமும் என முழுமையான உடலாக விளங்குகின்றது. கோள்கள் ஏழாக இருந்தாலும் அவற்றில் சூரிய சந்திரர்களே தாய் தந்தையர்களைப்போல் பிற கோள்களின் எழுச்சிக்குக் காரணமாக விளங்குகின்றனர்.

சந்திரன் உடலுக்குக் காரகன். சோதிடக் கணிப்புப் பலன்களுக்கு இது மூலமாக இருக்கிறது; வேதங்களில் சோமன் என்று கூறப்படுவது. பாற்கடலிலே பிறந்தது. பால் என்பது உயிரின் தத்துவவுவமை. உயிரே ஈண்டு சுடராக உள்ளது. சுடரானது மூலாதாரத்தில் திருநீராய் விளங்கும் காலை, அச்சுடர் பற்றி நின்ற சுழினையானது தோற்றமாவதால், அதனைப் பாற்கடலில் பிறந்ததாகக் கூறுவர். இச்சுழினையின் சுடரால் சந்திரனைப் போல் பிறப்புற்றுக் காண்பதால் அதனைச் சோமன் என்று கூறுவர். சூரிய சந்திர கலைகள் இரண்டும் இரு நாட்டமாக உள்ளன. மூன்றாம் நாட்டமாக உள்ளது, சுழினை நெற்றிக் கண் ஆகும். இது பிறப்பு எனும் உயிரெழுச்சியையும், இறப்பையும் தரும் சுவாச சக்தி மூலமாக விளங்குகிறது.

செவ்வாய், பூமி தேவியின் கர்ப்பத்துள் உதித்தது; மின்னலைப் போன்ற ஒளியினையுடையது; முக்கோண மண்டலத்தில் அமரும் இயல்புடையது. உயிர் விளைவை உடையது. அதுபோல் விளைவுள்ள சுழினை அடிபூமி எனப்பட்டது. பூமி எனும் சுழினையின் அந்தகாரமான கர்ப்பத்துள் நின்ற காலாக்கினியை ஒத்த சுடரே அங்காரகன் எனப்படுவது. ஊழித் தீயாக உள்ள இது 'குமரன்', 'வான்மகன்' என்று கூறப்படுவதெல்லாம் சுழினையில் நின்ற சுடரைக் குறிப்பதாகும். உடலுக்கு உயிராய் நின்று இவ்வுடலை மங்களமுறச் செய்வதால் 'மங்களகாரகன்'

என்று கூறப்பெறுகின்றது. இது இட கலை, பிங்கலை, சுழினை எனும் மூன்று கலைகளை ஒன்றாக்கிச் சூலாயுதமாகக் கொண்டு வினை செய்து வருதலால், சக்தி ஆயுதம் தரித்தது என்றும், சுழினை முக்கலை கூட்டாக உள்ளதால் முக்கோண மண்டலத்தில் அமரும் இயல்புடையது என்றும் கூறப் பெற்றது. சுவாச கதியான காலால் தானாட புவனமாட ஆடுவது அங்காரகன்.

சுழிமுனையாலே வாயுகதி எழுச்சியுற்று விளங்குவதால் அந்த வாயுவான புதன் சந்திரனின் குமரனாகக் கூறப்பெறுகின்றது. சுடரில் கலந்தேறி வருதலால் சுடரின் துணைக் கூறான சிம்மத்தை வாகனமாக உடையது. வாயுகதியினாலே உடலக நரம்பு மண்டலங்கள் தோற்றம் காண்பதால் அவற்றிற்கு ஆதாரமானது. உடலில் புதையுண்ட அறிவை வெளிப்படுத்தும் இயல்பு வாயுவினாலே வெளிப்படலால் அறிவிற்கு ஆதாரமான அதனை 'ஞானி' எனக் கூறினர். சுழினை இரு கூறாகக் கூறப்படும்போது மணிநாபகுதி சுழியில் காணும் அடிப்பகுதி சுழிமுனை எனப்பெறும். அதன் மேல் பகுதி சுழினை எனப்படும்.

சுழினை அனைத்துவித அறிவிற்கும் காரணமாக நிற்க, அதில் அடங்கிய வாயுக்கலை குரு எனப்பட்டு யானை வாகனம் உடையதாகக் கூறப்படுகிறது. யானை என்பது சுழினையின் துணைக் கூறாகும். குரு விஷ்ணு தத்துவார்த்தமுடையதாதலால் உடலுக்கும் திருவாசிக்கும் ஆதாரமாக விளங்குதலால், அதற்கேற்பத் துணைக்கூறான இரதம், குதிரைகளைச் சித்தரிப்பவன் என்று கூறப்படுகிறது. புதன் உடலில் அறிவை ஊட்டுபவனாக விளங்க, விளங்கிய அறிவனைத்தும் அறியும் பேரறிவாளனாகக் குரு முதன்மை பெறுவதால் அது 'ஞானத் தலைவன்' எனக் கூறப்பெற்றது.

சுழினைச் சுடரில் அடங்கிய வாயுக் கனல் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பெற்று ஒன்று குரு, மற்றது சுக்கிரன் எனக் கூறப்படும் சுடர் 'முச்சுநிலை' (சுவாச கதி) வடிவமாக விளங்கி ஆற்றலுக்கு – அறிவிற்குக் காரணமாக விளங்கும் போது அது சுக்கிர தத்துவமாகக் கூறப் பெறுகின்றது. முச்சு நிலையில் ஆற்றல் சந்திரனில் தோன்றுதலால் அதற்கு ஒப்பத்

தோன்றும் விளைவு போகமான குழுதத்தைத் துணைக் கூறாகக் கூறி வெண்டாமரை மலரோனாகக் கூறப்பட்டது. சந்திரனில் தோன்றும் விளைவு போகமான வாயு, தீ கருடனைப் போல நீல நாட்டமுடையதாக உள்ளதால் அக்கதி 'கருடன்' எனப்பட்டது. 'அசுரகுரு' எனப்படும் சுக்ரன் மூச்சு நிலையில் விளங்கும் சுடராகும்.

சுழினையிலிருந்து தோன்றும் வாயுக்கனலை ஐம்பூதக் கூற்றுகளின்படி பகுப்பாய்வு செய்து வகைப்படுத்தப் பட்டதில், ஆதாய நிலையாகக் கொண்ட சுடர்க் கூறு சனிக் கோள். ஆகாயம் அனைத்து வித வாழ்வு நிகழ்வுகளுக்குக் காரணமாக உள்ளதற்கு ஒப்பச் சனியின் கூற்றும் உள்ளதால் அதனைச் சூரியனின் குமாரனாக, ஆயுளுக்கும் காரகனாகக் கூறப்பட்டது. மூச்சுநிலை ஒன்றே பிறப்பு இறப்பு எனும் காரண காரியத்திற்குக் காரணமாக உள்ளது. பூரேக ரேசகத்தால் சனிக்கு ஒற்றைக்கால் எனப்பட்டது. இடது காலான மூச்சுநிலை சனியெனக் கூறப்பட்டுச் சுடரே ஒரு சில நேரத்தில் இறத்தலுக்குக் காரணமாக விளங்குவதால் எமனின் தமையனாகவும், மல உடல் பற்று நாட்டமுற்றுக் காகத்தைப் போல் நாட்டம் உடையதாகக் காணப்படு வதனால் காகத்தை வாகனமாக உடையதென்றும் கூறப்படுகிறது. கால், கண், மூக்கு என்பவை மூச்சைக் கொண்டு விளங்குவதால் மூச்சே அம்மூன்றாகக் கூறப்படுகிறது.

பாதி உடல் உடையது என்றும், சந்திர சூரியர்களைப் பிடிப்பது என்றும் கூறப்படும் இராகு சிம்மவாகனமுடையது. கோள்களின் தோற்றக் கற்பனையில் விஷ்ணுவானவர் சக்தியை நோக்கித் தானே இராகுகேதுக்களாக விளங்கினார் என்று கூறப்படுகின்றது. சுடரோடு கூடிய தன்மாத்திரைப் பாம்புகளே இருகூறாக இராகு கேதுக்களாகக் கூறப்பெறு கின்றன. இதில் இராகு என்பது மேல்மூலத்தில் சுடரோடு கூடிய சுழினை இடத்திலுள்ள நிலையாகும். நடுநாடியை இருபாகமாக மேல், கீழ் எனப் பகுத்து, அதில் அடங்கி நின்ற புலன் எழுச்சியை நிலைநாட்ட, சுழினையின் இடை நின்ற புலன் இராகு எனக்கூறி சூரிய சந்திரர் இடை அமர்ந்ததாகக் கூறப்படுகிறது. தன் மாத்திரை எழுச்சியே கீழ் நோக்கத்திற்குக் காரணமாவதாலும், சுழினை, பெண்ணாக உருவகப்படுத்திக்

கூறப்பட்டதாலும் அதில் விளங்கிய இராகு அசுரப் பெண்ணின் கர்ப்பத்தில் தோன்றியதாகச் சொல்லப்படுகிறது. சுடரைப் பிடித்துக் கொண்டு பயணிப்பதால் சுடருக்குத் துணைக்கூறாகச் சிம்மம் இராகுவின் வாகனமாகக் கூறப்பெற்றது. சுழினை அடி சந்திரனாகவும் கூறப்படுவதாகும்.

ஒரு தண்டின் இரு முனைகளில் தாமரை உள்ளது போன்ற அமைப்பில் விளங்குவது சுழினை. தண்டின் மேல் முனை தாமரைச் சுடராகும். இது போக விளைவிற்குக் காரணமானது போல விளைவைத் தண்டின் வழியே பெற்று, கீழ்முனையில் கவிழ்ந்த தாமரையின் வாயிலாக விளைவு போகத்தை விளைவித்து வருகின்றது. போக விளைவிற்கும், விளைவு போகத்திற்கும் காரணமான சுழினைத் தண்டின் மேல் பகுதியில், சுடரான அமுதைத் தன் மாத்திரையான இராகு உண்டு கீழ்ப் பகுதியாக உள்ள சுழினைத் தண்டு அடிப்பகுதியின் வாயிலாக அதனை உடலகத்துத் தோற்று விக்கின்றது. இவ்விளைவிற்குக் காரணமான சுழினைத் தண்டின் அடி கேது எனப்படுகிறது. சுழினையில் சலனமின்றி ஒடுங்கிய சுடரைத் தன் மாத்திரைப் பாம்புகளின் தூண்டுதலால் சுழினை அடிப்பகுதி வாயில் வழியாக மூச்சு வடிவமாக உடலகத்துச் செலுத்தி இயக்கமுறும் காலத்தில் ஏற்பட்டவையே ஒளிக்குழல்களான நட்சத்திரங்களும் கோள்களும் ஆகும். ஆதலால் கேது அவற்றின் தலைவனாகக் கூறப்பெறுகின்றது. மூச்சுநிலை கண்டத்திலும், அதன் எழுச்சி அண்டத்திலும் நடப்பதால் அண்டம் எனும் ஆகாய வழி பறக்கும் கழுகும், மூச்சு நிலைக்கு நம்மோடு வாழும் காகமும் துணைக்கூறாகக் காட்டப் பெற்றன.

## இராசி வீடுகள்

இராசி வீட்டில் ‘உயிர்’ வாழுகின்றது. உடல் ஏழும், ஐம்பொறிகளும் இராசிகளாகும். உடல் என்பது ஏழு தாதுக்களின் ஒரு கூட்டுத் தோற்றம். இரத்தம் முதலாக விந்து வரையிலான ஏழு தாதுக்களும் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றி தனித்துவம் கொண்டு விளங்குவதால், அவை ஏழும் ஏழு பிறப்பாகக் கூறப்பெறுகின்றன. இவ்வேழு தாதுக்களும் ஏழு இராசி வீடுகளாகச் சோதிடத்தில் கூறப்பெறுகின்றன.

இவ்வேழு வீடுகளும் மேடம், இடபம், மிதுனம், கடகம், சிம்மம், மகரம், மீனம் என்னும் கோள்களின் ஆதிபத்திய வீடுகளாகும்; மீதமுள்ள ஐந்து இராசிகளும் ஐம்பொறிகளாகும். இந்தப் பன்னிரண்டு வீடுகளிலும் கூடிய சுடர்க் கூறு மானிடனின் அகப்புற விளைவுகளை விளைவித்து வருகின்றது.

சுழினையின்கண் இராசி வீடுகள் அனைத்தும் அடங்கும். சுழினையின்அடி இடம் சந்திரன். அதனின்று வீணை நாடி போன்று விளங்கும் சப்த நாடி ஏழு வீடுகளுடன் தொடர்பு பட்டதாக உள்ளதால் அவை ஏழும் ஏழு இராசிகள். ஏழு இராசிகளில் உண்டாகும் எழுச்சியை அடுத்து விளங்கும் ஞான இந்திரியங்கள் ஏனை ஐந்து இராசிகளாகும். சுழினையிடத்து இராசி வீடுகள் அமைந்து, சுழினை அவ்வீடுகளின் நடுக்கோடாக, பூமியின் நடுக்கோடு போல உள்ளது. சுழினை முப்பகுதிகளாக இருத்தற்கு ஒப்ப இராசி வீடுகளும் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்படுகின்றன. சுழினையின் தலை, இடைப்பகுதி, கடைப்பகுதி என்ற மூன்றின் தத்துவார்த்தமே இராசியின் மூன்று பகுதிகள். இவ்விதி கீழிருந்து மேலாக வகுக்கப்பட்டது. மூலாதாரத்துள் விளங்கும் முகுளத் தொடக்கத்தினைத் தலைப் பகுதியாகக் கொண்டே மூச்சு நிலை நடப்பதால், அம்மூச்சு நிலையே மனிதனின் உயிராக விளங்குதலால், அதனைத் தலைப்பகுதி என்கிறோம். கண்டத்திற்கு மேல் மணிநாவாயில் உள்ள பகுதியே நமது தலைப்பகுதியானதால், அங்குக் குடைபோல் விளங்கும் ஓட்டுப்பகுதி 'கபாலம்' எனப்படுகிறது.

சுழினையின் இடைப்பகுதியிலே வாழும் இராகு கேதுவாகிய தன்மாத்திரைகளின் இடம் நடுமனை எனப்படும் சுயம்புலிங்கம். இதனை 'ஆத்மா' குண்டலினி சக்தி என்றும் கூறுவர். மிதுனராசியானது சுழினையின் இடைப்பகுதியில் ஈரியக்க உயிராற்றலை விளைவிக்கும் வீடாக உள்ளது. எனவே அவ்வாற்றலுக்குக் காரணமான வாயு (புதன்) அவ்வீட்டிற்கு அதிபதியாகக் கூறப்படுகிறது. கன்னிராசி ஞான இந்திரியங்களிலே பரிசத்தைக் காட்டுகிறது; பரிசமே கன்னிராசியாகக் கூறப்பட்டுள்ளது. தாதுப் பொறிகளின் குண இயல்பிற்கு ஏற்ப அவற்றின் நிறமும் பிறவும் பிரித்துக் கூறப்பட்டுள்ளன. சுழினை, கதிரால்

ஒளிபெற்று அதனை உடலகத்து எதிரொலிக்கின்றது. தன்னுள் பல உயிர் பிறப்புகளைப் பிண்டமெனும் மூலம் கொண்டுள்ளதால் அதன் துணைக் கூறான சந்திரன் வீடு கடகம் எனப்படுகிறது.

சிம்மமானது விலங்கினங்களுக்குத் தலைவனாக உள்ளதுபோல், கதிரானது தலையானதாக விளங்குவதால் அதன் விளக்கமாகச் சூரியனது வீட்டின் சின்னம் சிம்மமாகக் கூறப்பட்டுள்ளது. இவ்விதமே ஒவ்வோர் இராசிச் சின்னமும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏழு பிறப்பிற்குக் காரணமான ஏழு தாதுக்களின் நிலையைப் பொருத்தே மானிடனின் குணச் செயல்கள் விளங்கும். திருக்கோயில்கள் யாவும் மானிடனின் திருவுருவையே எதிரொலிப்பதாக அதன் துணைக்கூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இராசிகளின் கூட்டமைப்பை உடலாக, திருக்கோயிலாக யாவரும் அறிந்து பிறவிக் கீழ்மையைச் சீர்மை செய்ய, வழிபடல் வேண்டும். சனியின் வீட்டமைப்பே அரைவட்டப் பிறைவடிவாக கோபுரங்களில் உள்ளது. எனவே சனியைப் (ரேசகத்தைப்) பிடித்தாண்டு ஆலய தெய்வமாகத் திகழ வேண்டும். இந்நூலாசிரியரின் கருத்திற்கு ஒப்பத் திருமந்திரமும் இராசி வீடுகளைப் பற்றி எடுத்தியம்புகின்றது. அண்டத்து இராசிகளைப் பிண்டத்து ஆதாரங்களின் பொருந்தத் தியானிக்க ஒளியும் ஒலியும் தோன்றும் என்றும், ஆதாரம் ஒன்றுக்கு இரண்டு இராசியும் நான்கு நட்சத்திரமுமாகப் பிரித்தமைக்க வேண்டும் என்றும் திருமந்திரம் கூறுகிறது (1243-1247). மேலும் இந்நூல் அகமுகத் தியானத்தில் இராசிச் சக்கரம் நிலைபெறும் வழியைக் கூறுகிறது. ஆறு ஆதாரங்களிலும் பன்னிரண்டு இராசிகளும் பொருந்தத் தியானித்தால் ஒளியும் ஒலியும் நிறைந்து தோன்றும் என்பதை,

"இராசியுட் சக்கரம் எங்கும் நிறைந்தபின்
இராசியுட் சக்கர மென்றறி விந்துவாம்
இராசியுட் சக்கர நாதமும் ஒத்தபின்
இராசியுட் சக்கரம் நின்றிடு மாறே" (1270)

என்ற பாடல் காட்டுகிறது.

**காலம்**

உயிர்க் கூற்று அடிப்படையில் ஏற்படுத்தப் பெற்றது கால நியதி. தோன்றி அழியும் பொருட்கள் கால நியதிக்குக் கட்டுண்டவை. ஏழு கோள்களால் உடலினிடத்துத் தோன்றும் ஏழு பிறப்புகளே நாட்களுக்குக் காரணம். மூச்சு நிலையினால் உடலடையும் தன்மைக்கு ஒப்ப இரவு பகல் கால நிலையே நாள் எனப்படுகிறது. சுழினையின் வழி விளையும் மூச்சுநிலையான நாள், மூச்சு நிலையிலே ஒடும் நிலைக்கு ஏற்ப ஏழுநாட்களும் அது ஒடுங்கும். அந்தக் காரணத்திற்கு ஏற்ப நான்கு வாரங்களும் வகுக்கப்பட்டன. இடகலை, பிங்கலை எனும் மூச்சுநிலை இயக்கங்கள் நாள், வாரங்களுக்குக் காரணமாக அமைக்கப்பட்டன. இடகலை, பிங்கலைகளுக்குக் காரணமான சுழினை 'மாதம்' எனப்பட்டது. சுழினையின் வழி சுடர் பன்னிரண்டு பாகத்திற்கும் செல்வதால் அதன் தன்மைக்கு ஏற்ப ஆண்டாகிறது. சுழினையின் வழி சுடர் உடம்பின் 60 தத்துவார்த்தங்களைச் சார்ந்து விளங்குதல் 60 ஆண்டுகளாகும்.

நாழிகைக் கணக்கு உடலின் தத்துவார்த்தங்களினால் ஏற்படும் நாழி, வினாடி, தற்பரை என்னும் கால அளவாகும். சுடர் விளை என்பது மூன்று நிலைகளாக முக்காலங்களைத் தோற்றுவித்து வருகின்றது. சக்தி எனும் சுழினைக்கும், திருவாசி எனும் விஷ்ணுவிற்கும் நாளும் கோளும் கட்டுண்டவை.[4]

இந்நூலாசிரியரின் கருத்திற்கு ஒப்புமையுடைய காலம் தொடர்பான செய்திகள் திருமந்திரத்திலும் காணக் கிடக்கின்றன.

கதிரவன் தோன்றும் நாட்கள் 360. பதினைந்து திதிகள் கொண்டது பக்கம். ருது ஆறாகவும் மாதம் பன்னிரண்டாகவும் வரும். இவையெல்லாம் சிவ சூரியன் தோற்றத்தால் வந்தன. என்று கூறுவது சிவசூரியன் வருகையால் நாள், ஆண்டு முதலியன தோன்றியுள்ளதைக் காட்டுகிறது. இதனை,

"ஆவின மானவை முந்நூற் றறுபது
மாவின மப்பதி னைந்தினை மாயுறு

4. சோதிடம் - யோகம், ப.6

மாவின மப்பதி னெட்டுட னாயுறு
மாவின மக்கதி ரோன்வல வந்தே'' (திரு.1267)

என்ற பாடல் காட்டுகிறது. மேலும் கதிரவனது சுழற்சியால் அழிவின்றி மாறி வருகின்ற முப்பது நாழிகையும், பன்னிரண்டு இராசியும், ஆண்டுகளும் முறைப்படி வந்திடும் என்றும் திருமந்திரம் கூறுகின்றது.

மேலும் இந்நூல் விசுத்தி, ஆக்ஞை சக்கரங்கள் 18 எழுத்துகளுடன் விளங்குவதால் இச்சக்கரங்களைக் கடந்து மேலும் துவாதச சாந்தத்தை அடைந்தபின் சந்திர மண்டலத்தைக் கடந்த நிலை தோன்றும். இப்படிக் கடந்து நின்ற சிவமே கால தேவதையாகி 360 நாட்களும், பட்சங்களும், ருதுகளும், மாதங்களும், ஆயுளும், நாட்களும் ஆகிய காலமாயிற்று (1268) என்றும் கூறுகிறது.

காலம் என்பது விநாடியைக் குறிக்கிறது. விநாடி 60 கொண்டது ஒரு நாழிகை. பகலுக்கு 30 நாழிகை, இரவுக்கு 30 நாழிகை. 360 காலம் என்பது பகல் முப்பது நாழிகை. பகலில் படைப்புக் (சிருஷ்டி) கோளாகிய ஆகாயம், அக்கினி, அப்பு, பூமி என்ற முறையில் ஒவ்வொரு பூதகாலமும் ஆறு நாழிகை. ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் எனும் பஞ்ச பூதங்களுக்குப் பகுக்க ஒவ்வொன்றும் ஆறு நாழிகைகளாகும். அந்த ஆறு நாழிகைகளுக்கும் விநாடி 360 (இது படைப்புத் தோற்ற முறை). இரவுக்கும் ஒடுக்க முறையாகச் சூரிய அஸ்தமனம் தொடங்கும் பிரிதிவிக் காலம் முதலாக அமைத்துக் கொள்ளலாம். இவ்விதம் பஞ்ச பூதங்களுக்கும் உரிய காலத்தை அறிகின்றவர்கள் சோதி தரிசனம் செய்தவர்களாவர் என்றும் திருமந்திரம் கூறுவதனை,

''முந்திய முந்நூற் றறுபது காலமும்
வந்தது நாழிகை வான்முத லாயிடச்
சிந்தைசெய் மண்முதல் தேர்ந்தறி வார்வல
ருந்தியுள் நின்று வுதித்தெழு மாறே'' (65)

என்ற பாடலால் அறிய முடிகின்றது.

சோதிடத்திலே சூரியன் பயணிக்கும் வழியைக் குறிப்பிடுவதனையே 'சூரிய வீதி' என்பர். வடக்கு தெற்காகப் பூமியின் மத்தியரேகை போல் உள்ளது சுழினை. சுழினையின் மேல் பகுதியானது வடக்கு என்றும் கீழ்ப்பகுதி தெற்கு என்றும் கூறப்படும். அண்டச் சூரியனாக விளங்கும் சிவமானது சுழினையின் தலைப்பகுதியில் கூடி, சுழினையின் அடிவரை தன் சுடரை வியாபகம் செய்து வரும். இச்சுடர் வியாபகமே 'சூரியவீதி' எனப்பட்டது. சூரியன் குறித்த வழி பயணிக்கக் கதிராதிக் கோள்கள் இராசி வீடுகளில் பயணித்து விளைவுகளைத் தோற்றுவிக்கும். சோதிடத்திலே கூறும் கதிர் என்பது கோளாகக் கூறப்பட்ட சூரியன் மூச்சு நிலை கண்ட சுடர். இது காரியம்; மற்றது காரணமான மூலச்சுடர்.

வாசியை அடிப்படையாகக் கொண்டு 'திதி' வகுக்கப் பட்டுள்ளது. தசமி எனும் பத்தாவது திதியை முதலாகக் கொண்டு திதிகள் வகுக்கப் பெற்றுள்ளன. சிவனுமையாகி நின்ற அர்த்த நாரித் தத்துவமான உடலே 'தசமி'; தசமி எனும் உடலிலே தோன்றும் ஒன்பது நிலைகளே 'நவமி'; ஒன்பது நிலையிலிருந்து அட்ட சக்திகள் தோன்றியதால் 'அட்டமி'; உடலானது ஒன்பது நிலை கொண்டு அட்ட சக்தியோடு கூடிநின்றகாலை அதில் தோன்றியதே 'சப்தமி' எனும் ஏழுபிறப்புகள்; ஏழு தோற்றத்திலிருந்து 'சஷ்டி' எனும் ஆறு ஆதாரம் உண்டாகி அந்தச் சஷ்டியிலே 'பஞ்சமி'யாகிய பஞ்சகர்த்தாக்கள் தோன்றியுள்ளன; பஞ்ச கர்த்தாக்களால் நால்வேதம் உண்டாக, அது 'சதுர்த்தி' ஆனது; நால் வேதங்கள் மூன்று தேவர்களும் தோற்றம் கொள்ள, அதனைத் 'திரிதியை' என்றும் திரிதியையிலே பிரதானமாகச் சக்தி சிவம் தோன்ற அதனைத் 'துவதியை' என்றும், துவிதியையாகச் சக்தி சிவமாக விளங்கிய இரண்டும் கூடி 'பிரதமை' ஆகியது.

பிரதமையான ஒன்று ஏகமான ஒன்றாய் மேல் விளங்க, 'ஏகாதசி' என்றாகிப் பின் 'துவாதசி' என இரண்டாக விளங்கி, விளங்கிய துவாதசி திருப்பாதமான 'திரியோதசி'யாகி திரியோதசியானதில் நாலானதும் ஒடுங்கி துவாதசியாகி முழுமையாக ஒளிர, அது பௌர்ணமியாகவும் அடங்கி அமாவாசையாகத் திகழ்கின்றது.[5] இங்ஙனம் திதி முதலான காலக்கூறுகள் யோகத்தோடு தொடர்புபடுத்தப் பெறுகின்றன.

5. சோதிடம் - யோகம், ப.5.

**கோச்சாரம்**

சோதிடத்தில் வகுத்துக் கூறப்பெற்ற இராசி, கோள், காலம் முதலியன உடலோடு தொடர்புபட்ட உயிரின் பல நிலைத் தோற்றத்தால் எழுப்பப்படும் விளைவு பயன்களாகும். சோதிடத்தில் சுட்டப்பெறும் 'கோச்சாரம்' என்பதில் இருபொருட்கள் அடங்கியுள்ளன. அவை 'கோ-சாரம்' என்பவையாகும். இதில் 'கோ' என்பது சுழினை. அடி பூரணமான அகர உகர மகரங்களுடன் விந்துடன் பசுவின் முலைக்காம்பு என நின்ற நிலையில், அதன் வழியே ஒன்பது நிலையுடைய சுடர் கூடி நின்ற நிலையாகும். பிறப்பினை உண்டாக்கும் நிலையில் விளங்கும் சந்திரனே 'கோ' எனப்படுவது. இந்தச் சந்திரனின் வழியே மூச்சு வடிவமாக ஓடும் ஒன்பது கோள்களின் கூற்றே 'சாரம்' எனப்படும். மூச்சு நிலையே நாளுக்குக் காரணமாகி நிற்றலால், அதற்குக் காரணமான சந்திரன் நாளதிபனாக விளங்கி, விளங்கும் நாட்களிலே நவகோள்களால் தோற்றுவிக்கப் பெறும் விளைவுப் போகமே 'கோச்சாரம்' எனப்படும்.

**பாதசாரம்**

பசுபதியோடு 27 நட்சத்திரங்களிலும் வழித்தடமாகக் கொண்டது சுழினை. இவ்வழியே ஊருகின்ற ஒன்பது கோள்களும் 'பதி' என்னும் மூலத்தில் 'பசு' என்னும் சந்திரனிலிருந்து ஒளிக்குழல்களாக விளங்கும் நட்சத்திரங்களின் வழியே இருளான உடம்பின்கண் விளைவுகளைத் தோற்றுவிக்க மூச்சு வடிவமாகச் செல்லுகின்றன. ஒவ்வொரு நட்சத்திரமும் அந்தக்கரணங்களை உடலினிடமாகத் தோற்று விக்கக்கடிய தன்மையுடன் திகழ்கின்றது. இந்த நான்கு குணச் சிறப்புத் தன்மையே நட்சத்திரங்களின் பாதமாகக் கூறப்படுகிறது. கோள்கள் தமக்கும், தாம் கூடும் இடத்திற்கும் உள்ள தன்மையைக் கொண்டு நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீச்சம் ஆகியவற்றை அடைந்து அதற்குரிய குண எழுச்சி செயல் முனைப்போடு வினைப்பயன் தோற்றுவித்து மக்களுக்கான நல் வாய்ப்புகளை நிர்ணயித்து வருகின்றது. கோள்கள் நட்சத்திரங்களின் பாத வழி செல்வதே 'பாதசாரம்' என்று கூறப்படுகிறது.

**தசாபுத்தி**

ஒன்பது கோள்கள் உடலின் ஏழு பாகத்தில் நின்றியங்கும் தன்மைக்கு ஏற்பவும், அவற்றின் சுடர்க்கூற்றுக்கு ஒப்பவும் மாதம், ஆண்டு முதலான காலங்கள் வகுக்கப் பெறுகின்றன. சூரியகதியாய் ஆறாதார நிலையில் நின்று விளங்குவதற்கு ஏற்ப ஆறு ஆண்டுகள் தசாவுடையதாகவும், சந்திரன் தசா இயக்கத்திற்குக் காரணமாகும் சுடர்க் கூறாய் விளங்குவதற்கு ஏற்பப் பத்து ஆண்டுகள் தசாவுடையதாகவும் வகுக்கப் பெற்றுள்ளன. சூரிய சந்திரரின் சுடரானது ஊழித் தீயாகி கால பைரவத் தத்துவ மடைந்து மூச்சு வடிவமைகிறது. இதுவே ஏழு பிறவிக்கும் காரணமாக விளங்குவதால், செவ்வாய்க்கு ஏழு ஆண்டுகள் தசா வகுக்கப்படுகிறது. இங்ஙனமே ஏனைய கோள்களின் தசாக்களும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. ஒன்றுக்குள் மற்றவை ஒடுங்கித் தோற்றுவிக்கும் பயனே 'புத்தி' என்று கூறப்பெறும்.

சோதிடத்திலே கூறப்பெற்றுள்ளவற்றை, ஒரு மானிடத் திசுவிலே அடங்கியுள்ள பஞ்சபூத நிலை, ஏழு தாது நிலை, ஒன்பது தோற்ற நிலை, மூன்று இயக்க நிலை, மூன்று சுடர் நிலை இவற்றாலும், இவற்றிலிருந்து உருவாகும் அந்தக் கரணமான தோற்றத்தாலும் அறிய முடிகின்றது.

ஐம்பூதக் கூறிலே நிலம், நீர் எனும் இரண்டும் சேர்ந்தது மனித உடம்பு. இவ்வுடலில் நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய மூன்று கூறுகளால் துன்பமும் வலியும் இயக்கமும் குணமும் விளைந்து கொண்டிருக்கின்றது. நெருப்பைச் சூரியனாகவும் காற்றைச் சூரியனாகவும் கண்டுகொண்டு அந்த இரண்டையும் ஆகாயக் கூடான அக்கினியில் கூட்டுவிப்பதே 'சிவமய' என்பதை ஓதும் வழியாகும். மூச்சு வடிவிலே உள்ள உயிர் ஐம்பூதக் கூற்றுகளை உடையதாக இருக்கின்றது.

உடலாகவும், உயிராகவும் உள்ள மூச்சுநிலை உயிருடலுக்குக் காரணமாக உள்ளது. ஆய்வுச் சிந்தனை என்பது எளிதில் புலப்பட்டு விடக் கூடியதும் தெளிவை ஏற்படுத்தி விடக்கூடியதும் அன்று என்ற நிலையில், மேல் ஆய்வுக்கு வழிவகுக்கக் கோள்கள், இராசிவீடுகள், காலம்,

கோச்சாரம், பாதசாரம், தசாபுத்தி ஆகிய தலைப்புகளில் இதுகாறும் பல செய்திகள் விளக்கம் பெற்றன.

### வற்கடகமும் இடைக்காட்டுச் சித்தரும்

அண்டத்தின் இயக்கம் உடம்பினுள்ளும் நடைபெறுகிறது என்பதை மேற்கூறியவற்றின் வழி அறிய முடிகின்றது. இடைக்காடர் என்ற சித்தர், 'காஸ்மோ பயாலஜி' என இன்று அழைக்கப்பெறும் விண்கோள்களின் பாதிப்புகளை நன்கு ஆராய்ந்தவர் என்பதைக் காட்டுவதாக அமைந்த கதையின் சுருக்கம் இங்குத் தரப்படுகின்றது. ஒருமுறை மழை இல்லாது நாடு 12 ஆண்டுகள் வற்கடகமாகுமென முன்னறிந்த இடைக்காடர், தமது ஆடுகளுக்கு எருக்கிலை முதலியன கொடுத்துப் பழக்கி குருவிரகு என்னும் தானியத்தைச் சேற்றோடு கலக்கிச் சுவர் வைத்துக் குடிசையொன்று கட்டி அதில் தம் ஆடுகள் எருக்கிலை தின்னும் ஊறலாற் சுவரில் தேய்க்க, உதிர்ந்த சிறிது தானியத்தைப் புசித்து வாழ்ந்து வந்தார். நாடு வற்கடகமாகி உயிர்கள் அனைத்தும் அழிந்துபட, இவரும் இவர் ஆடுகளும் மாத்திரம் பிழைத்திருப்பதைக் கண்ட வானிலுள்ள ஒன்பது கோள்களும், இது எப்படி இயலும் என்று அறிய அவரிடத்து வந்தன. இடைக்காடர் இவர்களை மகிழ்வுடன் வரவேற்று ஆட்டின் பாலில் குருவரகைப் பாகஞ்செய்துகொடுக்க ஒன்பது கோள்களும் உறங்கிவிட்டன. உடனே இடைக்காடர் கோள்களை மழை பெய்தற்கு வேண்டியபடி வானில் மாற்றியிருத்தினார். உடனே நல்ல மழை பெய்தது. கோள்கள் விழித்துக்கொண்டு மழை பெய்வதை அறிந்து அதற்கான காரணத்தை உணர்ந்தன.

முந்தி நிற்கின்ற ஊழையும் அறிவின் ஆற்றல் வென்றுவிடும் என்ற வள்ளுவரின் பொய்யா மொழிக் கேற்பவும், திண்ணிய நெஞ்சமுடையவர் எண்ணியது எண்ணியபடி முடிப்பர் என்ற கருத்தை நிலைநிறுத்தவும், என்னதான் கோள்களின் மாற்றம் பெரிதும் வக்கிரத்தன்மை அடையினும் முயன்றால் முடியாதது இல்லை என்று உலகியலுக்கு நம்பிக்கையூட்டவும் இக்கதை சமுதாய நலன் கருதித் தரப்பட்டிருக்கிறது என்று கொள்ளுதற்கியலும். மேலும், அன்பாக விருந்தோம்புதலின் வழி காரியங்களைச் சாதித்தல் எளிது என்பதும் பெறப்படுகிறது. இன்றும்

தெய்வங்களைப் பாலில் முழுக்காட்டுதல் என்ற நிகழ்வு சிறப்பாக நடத்தப்பெறுதலுக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். தெய்வத்திற்குப் பால் ஊற்றியோ, தெய்வங்களைப் பக்திப் பாடல்களால் பாடியோ, தெய்வத் தலங்களைச் சுற்றி வந்தோ கோள்களால் ஏற்படும் தீமையான பாதிப்புகளிலிருந்து தப்பித்துக் கொள்ள முயலும் மனித மனத்தைக் குறைகூறுதல் என்பது இயலாது. ஏனெனில் இப்படிச் செய்வதால், ஏற்படவிருக்கும் தீயபலன் நீங்கி நன்மை விளையும் என்ற நம்பிக்கை மன வலிமையை ஏற்படுத்துகிறது. மேலும் இறைத்தலங்களில் ஆறுகாலப் பூசை முதலியன நடைபெறுவதால் அவ்விடங்களில் காந்த சக்தி மிகுந்திருக்கும். எனவே வழிபடும்போது காந்தப்புலன் ஆற்றல் நம்மை அடைவதால் கோள்களினால் ஏற்படும் தீய விளைவுகளின் தாக்குதல்கள் குறைய வாய்ப்பு ஏற்படுகிறது. ஆயினும் இன்று பரிகாரம் என்ற பெயரில் பல முறை கேடுகளும், மூடத்தனமான போக்குகளும் நிலவி வருதல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

இப்பொருள் மட்டுமன்றி இக்கதையை ஆழ்ந்து நோக்குகின்றபோது, அதன் ஆழ்ந்த உட்பொருளும் வெளிப்படுகிறது. இக்கதையில் புற உலகிலே கோள் நாயகர்கள் வந்ததாக அமைந்துள்ள நிகழ்ச்சியானது உடம்புக்குள் அகலிடம் என்று சித்தர்கள் அழைக்கிற உள்ளுடலின் சூக்கும நிகழ்ச்சி. வானத்தில் இருந்து கீழே இறங்கி நடந்து வந்தனர் என்றால், பேரண்டத்தில் உள்ள கோளியக்கம் இந்த உடம்பின் அக உலகிலும் நடைபெறுகிறது என்பதே பொருள். இதனையே,

> **"தன்னை அறிந்திடும் தத்துவ ஞானிகள்**
> **முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்**
> **பின்னை வினையைப் பிடித்துப் பிசைபவர்கள்**
> **சென்னியில் வைத்த சிவனரு ளாலே (2611)**

என்ற திருமந்திரப் பாடலின் உட்பொருளும் விளக்குகிறது. எருக்கன்பால் என்பது உடற்சுரப்பி களிலிருந்து சுரந்து வருகிற நீருக்குரிய குழூஉக்குறியே; ஆடுமாடுகள் திரிகிற காடு என்பது, மனமாகிய வனத்தின் உருவகம்; இந்த மனக்காடுதான் ஞானிகளின் அகச் செயல்களுக்குரிய களமாகும். மற்றபடி, கதையின் கட்டுக்கோப்பிற்கு ஏற்ப, நிகழ்ச்சிகள் உலக நடப்புகளைப் போலக் கூறப்பெற்றுள்ளன.[6]

---

6. சித்தர் இலக்கியம், முன்னுரை, ப.XIII

இந்த நிகழ்ச்சியானது இடைக்காடரின் வாழ்வில் நடந்ததாக ஒரு செவிவழிச் செய்தி உண்டு. அபிதான சிந்தாமணி (ப.149)யிலும், வேறு சில நூல்களிலும் இது பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. 'விதியின் விதி' என்ற தலைப்பில் சித்தர் மாண்பைச் சித்தரிக்கும் சித்தர் இலக்கியம் முதல் தொகுதியின் பின்னிணைப்பிலும் (ப.324-330) இக்கதை கூறப்பட்டுள்ளது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆனந்த விகடன் தீபாவளி மலரிலும் இக்கதை சிறுகதையாக அச்சாகி வெளிவந்துள்ளது.

சித்தர் இலக்கியத்திலுள்ள கோட்பாடுகளில் எவையும் மூடநம்பிக்கைகள் அல்ல. பகுத்தறிவின் ஆழ்ந்த பார்வைக்கு உட்பட்ட கண்கூடான உண்மைகளே எனலாம். அவர்களால் கையாளப்பட்ட சோதிடமும் அறிவு கொண்டு, உய்த்துணரும் பார்வையோடு காணவேண்டிய அறிவியல், மெய்ஞானப் பேரறிவுக் களஞ்சியமே. மனிதன் சோதிட அறிவால் மரபுக்கூறு, சுற்றுச்சூழல் ஆகியவற்றால் அவதியுறாமல் தப்பிக்கக்கூடும். இதற்காக ஏற்படுத்தப்பட்டவையே உடற்சுத்தி அனுஷ்டானங்களும், யோகமும் ஆகும். மக்கள் உடற்சுத்தி அனுஷ்டானங்களால் உடல் தூய்மையும் யோகத்தால் உயிரியக்கத் தூய்மையும் அடைய முடியும். இவ்விரு தூய்மையாலும் உடலுயிரில் தோன்றும் எழுச்சிச் செயற்பாடு மானிடனை மேம்பாடடையச் செய்வதால் அவன் முழுமையான மனிதனாக விளங்க முடியும். ஆத்ம சுத்தி எனப்படுவது உடல், உயிர், புலன் தூய்மை கொண்ட நிலையே.

சோதிடத்தின்வழி தனது உடலியல், உயிரியல், உளவியல் நிலைகளை அறிந்து, நன்நிலையடைய உடற் சுத்தி அனுஷ்டானங்களோடு கூடிய யோகத்தை நமது வாழ்வியலாகக் கொண்டு விளங்குபவனே மானிடன் என்ற தகுதியுடையவனாகின்றான். ஒருவன் தனது உடலைச் சோதித்துக் குறித்துக்கொண்டு, 'தமக்கு ஏற்படுத்தித் தரப்பெற்ற வாழ்வியல் நெறிமுறைகளைத் தவறாது கடைப்பிடித்து வந்தால், முன்புகண்ட அவனது நிலை சிறப்புற்றிருப்பதை அறிய முடியும்' என்ற அறிவியல் ஆய்வு இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

உடலைக் கட்டுப்படுத்தி மனத்தை ஒருமுகப்படுத்தி வீடுபேறெய்த யோக நெறி உதவுகிறது. உடலைக் கட்டுப்படுத்துவதன் வழி மனத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்ற அடிப்படையில் யோகப்பயிற்சிகள் வகுக்கப் பட்டுள்ளன. யோக நெறியைச் சிறுவயது முதற்கொண்டே முறையாகப் பயில்கின்றவர்கள் வளமான உடலும், நலமான உணர்வும், கூரிய அறிவும், பொலிவான தோற்றமும் உடையவர்களாக வாழ்வர். ஒன்பதாம் வீட்டிற்குரிய கோள் பலம் பெற்று குரு சுக்கிரன் ஆகியவற்றுடன் சேர்ந்தோ, அல்லது அவையிரண்டின் பார்வை பெற்றோ ஐந்தாமிடத்தில் இருந்தால் சாதகர் சிறந்த பக்தராக, யோகப் பயிற்சி செய்வதில் வல்லவராக இருப்பார்.

சோதிடத்தின் வழியும் யோகத்தின் வழியும் மனிதன் தன்னையும், தன்னைச் சார்ந்த உலகினையும், வானவியலை யும் உள்ளதுள்ளபடி அறிந்துரைக்க முடியும். மானுட வாழ்வின் அமைதிக்கும் நிறைவுக்கும் காரணமாக அமையும் இவ்விரண்டு பற்றிய தெளிந்த சிந்தனை ஏற்படுதல் வேண்டும் என்ற நோக்கில் இவ்விரு கலைகளும் தொடர்புபடுத்திக் காட்டப்பெற்றன. இதன்வழிச் சித்தர் இலக்கியங்களில் காணும் செய்திகளும், குறிப்பாகச் 'சரசாஸ் திரத்தில்' காணப்படும் கருத்துகளும் சோதிடத்தோடு தொடர்பு டையனவாய் அமைகின்றன என்பதனை அறியமுடிகிறது.

சோதிடத்தின்வழி பலனறிதல் போலவே 'சரசாஸ் திரத்தின் வழியும் மானிடருக்குரிய பலன்களை அறிய முடிதல் தெளிவாகின்றது. முக்காலங்களையும், அதன் விளைவுகளையும், முத்தோடங்களையும், ஐம்பூத நிலைகளையும் மூச்சு ஓட்டத்தின் வழி குற்றமில்லாமல் கூறும் சரகலையானது சோதிடவியலை அடியொற்றி எழுந்ததாகவே தெரிகிறது. எனவே இன்றைய சோதிடர் அனைவரும் சரப்பயிற்சியினை அறிந்து செயல்பட்டால் சோதிடப் பலன்களை நன்முறையில் உறுதிப்படுத்த இயலும்.

சோதிடவியலிலுள்ள பல நுட்பமான கணக்கீட்டு முறைகளுடன் சித்தர் இலக்கியங்களில் ஆங்காங்கே இடம்பெற்ற யோக நெறியிலுள்ள பல கணக்கீட்டு முறைகள் பொருந்தியும், ஒத்தும் அமைகின்றன. சோதிட விதிகள் சில பொருள் மாற்றமின்றி எடுத்தாளப் பெற்றுள்ளதையும், சோதிட விதிகளுடன் ஒத்து அமைதலையும் சித்தர்

இலக்கியங்களில் காணமுடிகின்றன. சோதிடத்தின் அடிப்படைக் கூறுகள் யோகநெறியோடு தொடர்பு படுவதோடு மட்டுமன்றி ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத நிலையில் இருத்தலைக் காணமுடிகிறது. யோக நெறியில் மேற்கொள்ளப்பெறும் செயற்பாடுகளுக்குச் சோதிடம் பயன்படுத்தப்படுவது தெரியவருகிறது. சித்தர் இலக்கியத்திலுள்ள சோதிடக் கூறுகள் அனைத்தையும் ஒருசேரத் திரட்டுவதும், ஒப்புநோக்கி இவற்றின் உட்கிடைகளைக் காணுவதும் சிறந்த பயனுடைய பணியாய் அமையும்.

சோதிடக் கணக்கீடு முறைகளை மூல சோதிட நூல்களின் வழி எடுத்தல் எளிது. ஆயின் சித்தர் இலக்கியங்களிலுள்ள கணக்கீடு முறைகளை அரிதின் முயன்று ஆய்ந்து தொகுக்கப்பட வேண்டியுள்ளது. இந்நிலையினை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும் ஒரு சில கணக்கீடு முறைகள் சித்தர் இலக்கியங்களில் இடம்பெற்றிருத்தல் இனங் சுட்டப்பெற்றது. மனித நல்வாழ்விற்கான பயன்களைக் கூறும் சோதிடம், யோகம் பற்றிய ஆய்வு என்பது ஆய்வுலகம் மட்டுமன்றி மக்கள் சமுதாயமும் பயன்பெறும் தன்மைத்தாய் அமைவதால் இன்றைய சூழலில் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையுள்ளது.

சோதிட விதிகளையும் சித்தர் இலக்கியங்களையும் ஆய்வுக்குட்படுத்தினால் பல அறிவியல் உண்மைகள் வெளிப்படும் என்பதைக் 'காஸ்மோ பயாலஜி ஆய்வு' உறுதிப்படுத்துகின்றது. சோதிடம், யோகம் என்ற இவ்விரு துறையிலுள்ள கணக்கீடு முறைகளை முழுமையாகப் புரிந்து கொள்ளத் தக்க நிலை ஏற்படும்போது இவற்றிலுள்ள கணக்கீடு முறைகள் பல வியத்தகு அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்தும். இவை பொருட் செலவைக் குறைத்து சில அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்துவதுடன் இன்றைய அறிவியல் ஆய்வுகளுக்குத் துணைநின்று, அவ்வாய்வுகள் கண்டுபிடித்த உண்மைகளை அறுதியிட்டு நிறுவுவதற்கும் பயன்படும்.

இன்பம் துன்பம் என்ற இரண்டிற்கும் காரணம் மனிதனுடைய செயற்பாடுகளே. மானுடம் நன்முறையில் வாழவேண்டும் என்ற நோக்கோடு ஏற்படுத்தப் பட்டவையே ஒழுக்க நெறி முறைகள். இவ்வொழுக்க

நெறிமுறைகளுடன் மக்கள் வாழ யோகமும் சோதிடமும் துணைபுரிவனவாயுள்ளன. ஆயின் இவற்றை மேலோட்டமாகக் கடைப்பிடித்தல் எளிதாக இருக்கின்றதே ஒழிய, மிகச் சரியான முறையில் கடைப்பிடித்தல் என்பது பலருக்கும் இயலாத ஒன்றாகவே இருக்கிறது. எனவேதான் இன்றைய சூழலில் மக்களின் வாழ்க்கைத் தடம்புரண்டு ஓடிக்கொண்டிருக்கிறது. இவற்றைக் கடைப்பிடிக்க இயலாதெனு எண்ணும் மனிதன் ஒவ்வொரு நாளும் தன்னுடைய பல கடமைகளை ஓடியாடிச் செய்துகொண்டு தான் இருக்கிறான். வாழத்துடிக்கும் மனிதன் வாழ்க்கையை எளிமையாக்கித் தரும் வழிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தனக்கு நேரமில்லை என்று கூறி தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வதோடு பிறரையும் ஏமாற்றுகிறான். இவன் சோதிடம், யோகம் போன்றவற்றில் போதிய கவனம் செலுத்தி அவற்றை முழுமையாக அறிந்தால் இவனது கடமைகளைச் செய்வதில் நேரம் குறைக்கப்பெறும்; பதற்றம், அச்சம் என்பவை இருக்காது; மனச்சுமை குறையும்; சிந்தனையில் தெளிவும், சரியான மனநிலையும் அமைந்து நிம்மதியான வாழ்வை ஏற்படுத்தும். காலச் சூழலில் ஏற்படும் அன்றாட மன உளைச்சலுக்கு இவை அருமருந்தாக அமையும். மனிதனின் வாழ்வியலை நிறைவு செய்யத் தேவையானவை இவற்றிலுள்ளன. இவை உலகியலால் பாதிக்கப்படாமல் உலகியலில் வாழ்ந்திட வழி கூறுகின்றன. எனவே மனிதச் சிந்தனையை ஒழுங்கு படுத்தும் இவை, மக்கள் வாழ்வில் சரிவரக் கடைப்பிடிக்கப் பெறும்போது, இவை மனித சமுதாயத்தை நன்முறையில் நெறிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. எந்தச் செயலையும் என்ன பயனுடைத்து என்று ஆராய்வதும் கணக்கிடுவதும் உலக வழக்கு. அந்நிலையில் இவ்விரண்டையும் மக்கள் விரிவாக, ஆழமாகச் சிந்தித்துப் பார்ப்பார்களேயானால் மக்கள் பலராலும் இவை பின்பற்றப்பட்டு மக்கள் சமுதாயத்தை நன்முறையில் நடத்துகின்ற ஆற்றலுடையதாக விளங்கும்.

★ ★ ★

இயல் ஏழு

# சோதிடமும் சமுதாயமும்

சோதிடவியல், தனி மனிதனோடு சமுதாயத்தையும் சமுதாயத்தோடு நாட்டையும் நாட்டுடன் உலகையும் இணைத்துப் பார்த்து அவரவர்க்கு வேண்டிய தெளிவான முடிவுகளைத் தரவல்லது. தனி மனிதனின் மரண பயம் அவனைக் கூட்டு வாழ்க்கைக்கு உந்துகிறது. இவ்வாறு அமைந்த வாழ்க்கையில் ஏற்படும் இடர்ப்பாடுகள், இன்னல்கள், சொல்லொணாத் துயரங்கள் முதலியவை தன்னை நெருக்கும்போது அவற்றைத் தீர்க்க வல்ல ஆற்றல் சோதிடத்திற்கு உண்டு என்று நம்புகிறான். இங்ஙனம் மானுடம் நம்பும் பல்வகையான எண்ணச் சிக்கல்களைத் தீர்க்க வல்ல சோதிடம் சமுதாயத்தோடு எவ்வாறு இணைந்து செயல்படுகிறது என்பது இங்கு விரித்துரைக்கப்படுகிறது. மேலும் சோதிடம் மக்கள் வாழ்வில் உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துகின்ற அளவிற்கு நெருங்கிக் காணப்படுவதால் சோதிடவியலில் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாததாகிறது. மக்களிடையே சோதிடத்திற்குள்ள செல்வாக்கும், அதனால் உண்டாகின்ற நன்மை தீமைகளும் சோதிடத்தின் உண்மையான இன்றைய நிலையும், அதன் வளர்ச்சிகளும் அதன் மூலம் மனிதகுல வளர்ச்சிக்கு ஆற்ற வேண்டிய பணிகளையும் கருத்தில் கொண்டு சமுதாயத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இப்பகுதி அமைகிறது.

சோதிடம் என்பது மனித நம்பிக்கையைச் சார்ந்த கலை. பொதுவாக இலக்கியம், இசை, ஓவியம் முதலான கலைகள் மனித மனத்தின் அழகுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமையும். சோதிடம் மனிதனின் நம்பிக்கையைச் சார்ந்து அமைவதால் அவற்றினின்றும் வேறுபட்டு அமைகிறது. அதே நேரம் இசை, ஓவியம் முதலான கலைகள் மனிதன் அறிவு நிலையினின்று விலகி உணர்வு நிலையில்

நின்று உணரத்தக்கதாக விளங்க[1] சோதிடமும் வானில் உலவும் நாள் மீன்கள், கோள்கள் ஆகியவற்றின் இயக்க அடிப்படையில் அவற்றோடு உலகின் உயிர்களுக்குள்ள அறிவியல் அடிப்படையிலான தொடர்பினைக் கொண்டு இயற்றப்பெறும் கலை. இவ்வறிவு சார்ந்த கலை, உணர்வு சார்ந்த பிறகலைகளினின்றும் வேறுபட்டு நிற்கிறது.

மனித வாழ்விலுள்ள மூன்று காலங்களில் இறந்த காலத்தை மட்டுமே அவனால் முழுமையாக அறிய முடிகிறது. நிகழ்காலமும் ஓரோவழி அவனுடைய ஆளுமைக்கு உட்படாததாக விளங்குகிறது. ஆனால் எதிர்காலம் அவனால் அறியப்படாதவாறு அடுத்த நிமிடம் என்ன நிகழும் என்ற வினாக்குறியோடு அவன் முன் நிற்கிறது.

நிகழ்காலம் கூட ஒரு செயலின் கோர்வையில் முடிந்துவிட்ட பகுதியைத்தான் உணர்த்தும். மறுபகுதி நிகழ்ந்தால்தான் கூறமுடியும் என்ற நிலையில் ஒரு கேள்விக் குறியைத் தன்னுள் அடக்கி விளங்குகிறது. வாழ்க்கை என்பது இறந்த காலத்தை அசை போடுவதன்று. இறந்த காலத்தின் தொடர்ச்சியாக நிகழ்கால நடை பாதையில் எதிர் காலத்தின் ஊடே செல்வது. எனவே மனிதனுக்கு எதிர்காலத்தை அறியக் கூடிய ஆவல் இயல்பாகவே அமைந்து விளங்குகிறது. இந்த உணர்வு மனித இனத்திற்கு இன்றியமையாதது என்பதை வள்ளுவர்,

> "எதிரதா காக்கும் அறிவினார்க் கில்லை
> அதிர வருவதோர் நோய்" (குறள். 429)
> "வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
> வைத்தூறு போலக் கெடும்" (குறள். 435)

என்ற குறட்பாக்களால் விளக்குகின்றார்.

மனிதன் தன் எதிர்கால நிகழ்ச்சிகளைத் தன் அறிவைக் கொண்டு சிந்தித்து வகுத்துக் கொள்ள இயலும். எனினும் அது முழுமையாகக் கொள்ளப்படுவதன்று. ஏனெனில் மனிதன் சூழ்நிலையால் இயக்கப்படுபவன்; சூழ்நிலையின் கைதி. எனவே, சூழ்நிலையின் போக்கில் சென்றுதான் அச் சூழ்நிலையை வெல்ல முடியும். அச் சூழல் வெள்ளம், புயல், நோய் முதலான இயற்கைச்

---

1. பூ - அழகு, மகரந்தம் - அறிவு, மு.வ. இலக்கியத்திறன், பக்.2-3.

சூழலாகவும், எதிர்பாராத விபத்து, மனமாற்றம், பிறர் குறுக்கீடு முதலிய செயற்கைச் சூழலாகவும் அமையலாம். இவ்வாறு மனிதனுடைய எதிர்கால நிலைக்கு அடிப்படையாக அவனுடைய அறிவுக்கு எட்டாத இத்தகு புறச் சூழல்கள் காரணிகளாக அமைகின்றன. இதன் காரணமாக அவனுடைய எதிர்காலத்தைத் தன் அறிவைக் கொண்டு மட்டும் முழுமையாக அறிய இயலாமல் போகிறது. தன்னளவில் தன்னறிவைக் கொண்டு தன் எதிர்காலத்தை அறிய இயலாத நிலையில் அதற்குரிய கருவியென அவனால் உருவாக்கப்பட்ட கலையே சோதிடம்

தற்கால அறிவியல் முறைகள் அனைத்தும் தனி மனித வாழ்க்கைக்கு ஏதோ ஒரு வகையில் நன்மை பயக்கத் தக்கதாய் அமைந்துள்ளது. வானவியலும் மனிதனுக்குக் காலம் பருவம் போன்றவற்றைக் கணக்கிடுவதற்குப் பயன்படுகிறது. வான நூலானது சோதிடத்தின் துணை கொண்டு தனி மனித வாழ்க்கை இயக்கங்களை அறியவும் விளக்கவும் பயன்படுத்தப்படும்போது அறிவியல் துறையைப் போன்றே இதுவும் மக்களுக்குப் பயன் தரும் துறையாக அமையும்.

சோதிடமும் வானவியலும் ஒன்றாக இருந்த நிலை மாறி, இன்று வானவியலில் இருந்து சோதிடத்தைப் பிரித்து 'வானவியல், என்றும் 'சோதிடவியல்' என்றும் இருக்கின்றது. அனைத்து அறிவியல் துறைகளைக் காட்டிலும் தொடக்க காலத்தில் இருந்து வழங்கி வந்த ஒரு துறை சோதிடத் துறை. இதனை மிகச் சிறிய அளவிலோ மிகப் பெரிய அளவிலோ ஏதோ ஒரு வகையில், நாகரிகத் தாக்கத்திற்கு மிகுதியும் உட்படாத பண்டைய மனிதர்கள் அறிந்திருந்தனர். இன்றும் நாகரிகத் தாக்கம் மிகவும் குறைந்து காணப்படுகின்ற பழங்குடி மக்களிடையே கூட ஏதோ ஒரு வகையில் சோதிட நம்பிக்கை ஆழமாகப் பதிந்துள்ளதைக் காண முடிகிறது.

மனிதனைச் சமூக விலங்கு எனக் கூறுவர். மனிதன் இயற்கையால் தன்னைச் சுற்றியுள்ள விலங்குகளால் தன்னுயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்ற அச்சத்தால் கூடிவாழப் பழகினான் சிந்தனை வளர வளர இயற்கையை, விலங்கினத்தை அடிமைப்படுத்தும் முயற்சியில் இறங்கினான் அதன்காரணமாக விண்வெளியை, அண்டத்தைக் கூர்ந்து நோக்கலுற்றான். மனித எண்ணங்களுக்கும் கோள்களுக்கும்

தொடர்புண்டு என்றும், கோள்களின் ஈர்ப்பு விசைக்கும், பூமியின் ஈர்ப்புவிசைக்கும் உள்ள ஏற்ற இறக்கங்களே பூமியில் வாழும் உயிரினங்களின் கர்ம வினைகளைச் செயல்படுத்துகின்றன என்றும் நம்பினான். பிறப்பிலிருந்து இறப்பு வரை மனிதனின் வாழ்க்கை கோள்களாலேயே நடத்திச் செல்லப்படுகின்றது என்று நம்பியதால்தான் 'திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது' என்ற பழமொழியும் ஏற்பட்டிருக்கும் எனத் தோன்றுகிறது.

சோதிடம் மக்களின் பழக்க வழக்கங்களிலும் நம்பிக்கைகளிலும் பழமொழிகளிலும் பின்னிப்பிணைந்து காணப்படுகிறது. தமிழ்நாட்டில் தமிழக மக்களிடையே பல்வேறு பட்ட சடங்கு முறைகள் இருந்த போதிலும் இவையனைத்தும் சோதிடத்தின் துணையுடனே செயல்படுத்தப் படுகின்றன. நாளை என்ன நடக்கக் கூடும். இப்போது நாம் செய்வது சரியான செயலா, இன்றைய பிரச்சனைக்கு நேற்றைய வினைதான் காரணமா என்பன போன்ற மனப் போராட்டங்களுக்குத் தெளிவு தரும் மருந்தாகச் சோதிடத்தை மனிதன் நம்பினான். எந்த ஒரு செயலையும் நாள், கிழமை, திதி, நேரம் ஆகியவற்றை ஆராய்ந்து செய்தால் வாழ்க்கையில் மனப் போராட்டங்களுக்கு இடமில்லை என்றும், அச்செயல் நன் முறையில் முடியும் என்றும் நம்பினான். ஆதலால் தன்னுடைய செயல்கள் யாவற்றுக்கும் சோதிடத்தின் துணையை நாடினான்.

நாகரிகம் வளர்ந்தாலும், அறிவியல் துணையால் அளப்பறிய கண்டுபிடிப்புகளை வெளிக்கொணர்ந்தாலும், பட்டறிவின் துணை கொண்டு சிந்தனையை ஒருநிலைப்படுத்தி ஆன்மீகத்தைக் கற்றுக் கொண்டாலும், அவ்வான்மீகப் பாதைகளுக்குத் துணை செய்யும் யோகப் பயிற்சி முறைகளைக் கற்று இறை அருளைப் பெற்றாலும் மரண பயத்தை மானுடத்தை விட்டு அகற்ற முடியாது. சுவாமி விவேகானந்தர், 'மரண பயம் உள்ளவரை இறை நம்பிக்கை இருக்கும்' என்று கூறியதற்கு ஒப்பச் சோதிடமும் நிலைத்து இருக்கும். கோள்களைக் காரகன், கடவுள், வெற்றுக்கோள் என எப்படி மதிப்பீடு செய்தாலும் சோதிடத்தைச் சமுதாயத்திலிருந்து வேரறுத்து விட முடியாது. எந்தப் பொருளாக இருந்தாலும் அது எந்தவகையில் பயன்படும் என்று எண்ணிப் பார்ப்பது மனித மனோபாவம். எனவே

பயன்பாட்டு நோக்கு அடிப்படையிலும் சோதிடம் நிலைபெற்று வாழ்கிறது.

பிறந்த குழந்தையின் வளர்ச்சிநிலை, இளைஞனின் எதிர்காலம், குடும்பத் தலைவனின் எதிர்பார்ப்பு, நாட்கள் தள்ளிச் செல்லும் பிள்ளைகளின் திருமணம், நோய் நீங்கும் காலம் என்பன போன்ற அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளுக்குத் தீர்வுகள் சோதிடத்தை அன்றி வேறு எவ்வகையிலும் தெரிந்து கொள்ள முடியாதென மனித சமுதாயம் நினைக்கிறது.

பிறந்த குழந்தையின் அங்க அமைப்பைப் பார்ப் போமானால் தலை - செவ்வாய், முகம் - சந்திரன், கழுத்து - புதன், தோள் - சுக்கிரன், மார்பு - சூரியன், வயிறு - குரு, தொடை - சனி, மூட்டுகள், கீழ்கள் - இராகு, உள்ளங்கால்கள் - கேது என்ற அமைப்பில் சோதிடநூல் கூறுகிறது. இங்ஙனம் கர்ப்பத்தில் கரு வளர்ச்சி முதற்கொண்டே கோள்களின் ஆதிக்கம் இன்றியமையாத இடம் பெறுகிறது.

முதல் மாதம், ஒரு தாயின் கர்ப்பத்தில் சுக்கிலமும், சுரோணிதமும் இரண்டறக் கலக்கும்; இரண்டாம் மாதம் கருப்பிண்டம் செந்நிறக் கலவையாய் இளகி இருக்கும்; மூன்றாம் மாதம் உடல் உறுப்புகளான கை கால் உண்டாகும்; நான்காம் மாதம் எலும்பும் நரம்பும், ஐந்தாம் மாதம் சதையும் தோலும், ஆறாம் மாதம் முடியும், நகமும், ஆண் பெண் என்ற தோற்றமும் ஏழாம் மாதம் உயிரும் மூச்சும் உண்டாகும்; எட்டாம் மாதம் கருவின் உடல் வளர்ச்சி பெருகும். ஒன்பதாம் மாதம் உடல் வலுவடைகிறது. பத்தாம் மாதம் குழந்தையின் தலை திரும்ப தாய் வயிற்றிலிருந்து பூவுலகை அடையப் பயணிக்கும்.

முதல் மாதத்திலிருந்து பத்து மாதம் வரை முறையே சுக்கிரன், செவ்வாய், குரு, சூரியன், சந்திரன், சனி, புதன், இலக்னாதிபதி, சந்திரன், சூரியன் ஆகிய கோள்கள் அதிபதிகளாகின்றன. கரு வளர்ச்சியின் போது கோள்களுக்கும் கருவிற்கும் உள்ள தொடர்பைப் பார்ப்பின் மனித சமூகத்தோடு சோதிடம் பின்னிப் பிணைந்திருப் பதற்கான காரணத்தை உய்த்துணர முடிகிறது. கருவில் செவ்வாய் அதிபதியாகி செந்நிறத் தன்மையை ஈந்து இரத்தத்தின் வழி அப்பிண்டத்தைக் காப்பாற்றும் பணியைப்

பார்க்கும்போது சோதிடம் என்பது ஓர் அறிவியல் அறிவு என்பதோடு மட்டுமல்லாது, மனித சமூகத்திற்கும் கோள்களுக்கும் தொலைநோக்குக் கண்ணாடி போல் விளங்குகிறது எனலாம்.

மனித சமுதாயத்தில் 120 வயது நிறையப் பெற்றவர்களையே நிறைந்த ஆயுளை உடையவர்கள் என்று கூறுகிறோம். மனிதனுடைய வாழ்நாளுடன் கோள்களுக்குள்ள தொடர்பைப் பார்ப்போமானால் அவை மனித வாழ்க்கையில் வந்து போகும் காலக்கட்டத்தைத் தசா புத்தி என்று அழைப்பர். இவை முறையே கேதுவிற்கு ஏழு ஆண்டுகள், சுக்கிரனுக்கு இருபது ஆண்டுகள், சூரியனுக்கு ஆறு ஆண்டுகள், சந்திரனுக்குப் பத்து ஆண்டுகள், செவ்வாய்க்கு ஏழு ஆண்டுகள், இராகுவுக்குப் பதினெட்டு ஆண்டுகள், சனிக்குப் பத்தொன்பது ஆண்டுகள், புதனுக்குப் பதினேழு ஆண்டுகள் என அமைகின்றன. இவற்றின் கூட்டுத்தொகை 120 ஆண்டுகள் வருவதைக் காணலாம். ஆயிரம் பிறையைக் கண்ட பெருமைக்குரியவர்கள் இவ்வயதுடையவர்களே. இங்ஙனம் குழந்தையின் கருவிலிருந்து அதனுடைய ஆயுட்காலம் முழுவதும் சோதிடத்தின் வழி நடத்தப்படுவதனை அறிய முடிகிறது.

இருவேறுபட்ட கோள்களின் அமைப்பையுடைய ஆண், பெண்ணின் இணைவாகத் திருமணம் அமைகின்றது. திருமணத்திற்கு அதிக முக்கியத்துவம் தருவதால் இதனை 'ஆயிரங்காலத்துப் பயிர்' எனப் பெரியோர்கள் கூறுகின்றனர். தினம், கணம், மகேந்திரம், யோனி, இராசி, இராசி அதிபதி, வசியம், ரஜ்ஜு, வேதை, நாடி, ஆயம், வர்ணம், பட்சி, யோகினி, லிங்கம், கோத்திரம், பஞ்சபூதம், விருத்தி, பால்விருட்சம், ஆயுள் என்றவாறு திருமணத்திற்குப் பார்க்க வேண்டிய பொருத்தங்கள் இருபதுக்கும் மேற்பட்டு அமையினும் பொதுவாகப் பத்துப் பொருத்தங்களே வழக்கில் பார்க்கப்படுகின்றன. அதிலும், இன்றியமையாத ஐந்து பொருத்தங்கள் இருந்தாலே திருமணம் நிகழ்த்துகின்றனர்.

இவற்றின்வழி ஆயுள், மாங்கல்ய வலிமை, குழந்தைப்பேறு, உடற் பொருத்தம், பொருளாதாரச் செல்வாக்கு முதலியவற்றைப் பற்றி அறிய முடிகின்றது.

புத்திர தோடம், எதிர்பாராமல் இறத்தல், பயணத்தின்போது இறத்தல் போன்ற தீய பலன்கள், ஒருவருக்குத் திருமணத்திற்குப் பின் ஏற்படக் காரணம் 'ரச்சுப் பொருத்தம்' சரிவர அமையாததே.

நல்ல பொருத்தங்கள் அமையப்பெற்றபின் திருமணத்திற்குரிய நாளினைத் தேர்ந்தெடுப்பது இன்றும் நடைமுறையில் காணுகின்ற வழக்காகும். பொன் உருக்குதல், மங்கல நாண் புனைதல் என்ற திருமணச் சடங்குகளின்போது நிறைந்த சுமங்கலியர் தகுந்த நேரம் பார்த்து ஆசாரியிடம் கூறி மங்கல நாணுக்குரிய பொன்னை உருக்குவர். இப்படிப் பலவகையான சடங்கு முறைக்கு உட்படும் திருமணத் திற்குரிய நாள் குறிக்கப்படும் பொழுது நாள், கிழமை, திதி, மாதம், நட்சத்திரம் முதலியனவற்றைத் தேர்ந்தெடுப்பது மரபு. புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகளும் துவிதியை, திரிதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, திரயோதசி என்ற திதிகளும் சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, தை, பங்குனி என்ற மாதங்களும் உரோகிணி, மிருகசீரிடம், மகம், உத்தரம், உத்திராடம், உத்திரட்டாதி, அத்தம், சுவாதி, அனுசம், மூலம், இரேவதி ஆகிய நட்சத்திரங்களும் திருமணத்திற்கு ஏற்றவையாகக் கருதப்படுகின்றன.

பிராமணர்கள் மார்கழி மாதத்திலும், இரண்டாம் திருமணம் செய்து கொள்பவர்கள் ஐப்பசி, கார்த்திகை மாதங்களிலும் திருமணம் செய்து கொள்கின்றனர். சந்திராஷ்டமநாள், கரிநாள், இரண்டு அமாவாசைகள், இரண்டு பௌர்ணமிகள் வருகின்ற பல மாதங்கள், மணமக்களின் பிறந்த தேதி, பிறந்த கிழமை போன்றவை திருமணத்திற்கு ஏற்றவை அல்ல. திருமண நாளில் குருவும், சுக்கிரனும், திருமண இலக்னத்திற்கும், மணமக்களின் பிறந்த இராசிக்கும் 6-8ஆம் இடத்தில் இடம் பெற்றிருக்கக் கூடாது. முகூர்த்த இலக்னத்திற்கு ஏழாமிடம் எந்த ஒரு கோளும் இல்லாமல் சுத்தமாக இருக்க வேண்டும். கிறித்தவரும் நன்னாள், நல்ல நேரம் குறித்துத் திருமணம் செய்கின்றனர். இசுலாமியரிடையேயும் நல்ல பிறை, நல்ல நாள், நல்ல மாதம் என்பன கணிக்கப்பட்டு மதக்குருமார்களின் தலைமையில் துவா செய்யப்பட்டு (இறைவனை வேண்டுதல்) நிக்ஹா என்ற திருமணச் சடங்கு நடைபெறுவதைக் காணமுடிகின்றது. இங்ஙனம் திருமணம் என்ற நிகழ்வில்

நாள், நேரம் முதலியவற்றிற்குத் தந்துள்ள முக்கியத்துவத்தின் வழி சோதிடம் சமுதாயத்தில் ஊடுருவியுள்ள தகைமையைத் தெற்றென அறியமுடிகிறது.

## சமுதாயமும் சோதிடத் தாக்கமும்

சோதிடத்தில் நூற்றுக்கணக்கான விதிமுறைகள் உள்ளன. அவற்றுள் ஒருசில மட்டும் அவை செயல்படும் தன்மையால் மக்களது வாழ்க்கையில் இடம் பிடித்துவிடுகின்றன. இதன் விளைவாகச் சமுதாயத்தில் சோதிடம் தொடர்பான பல கருத்துகள் நிலவுவதைக் காணமுடிகின்றன.

பத்துப் பொருத்தங்கள் இருப்பதனால் சிறப்பான வாழ்க்கை அமையும் என்பது உறுதியல்ல. அது கணக்கீடு முறையில் ஒரு சாதகமான நிகழ்வு என்ற அளவில் மட்டுமே அதனை எடுத்துக் கொள்ள வேண்டும். 'பொருத்தம் பார்த்தல்' என்பது பிறந்த நட்சத்திரப்படி பெயர் வைத்தவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்பது பலர் அறியாத ஒன்றாகவே இன்றும் இருக்கிறது. ஒருவருக்கு இரண்டு பெயர் எனில் ஒரு பெயருக்குப் பொருத்தம் வரவில்லை யெனில் இன்னொரு பெயருக்குப் பொருத்தம் பார்க்கின்றனர். இது தவறு. இரண்டும் நட்சத்திரப்படி சூட்டப்படவில்லையாயின், இரண்டு பெயரைக் கொண்டு பார்ப்பதும் சரியான முறை என்று கூறமுடியாது. 'சர்க்கரை இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை' என்பதுபோல வேண்டுமானால் நட்சத்திரப்படி சூட்டப்படாத பெயர்களுக்குப் பொருத்தம் பார்ப்பதை எடுத்துக் கொள்ளலாம்.

ஆண் பெண் இருவருக்கும் குருபலம் இருக்கும்போது திருமணம் எளிதில் கைகூடுகிறது. ஒருவருக்கு இருப்பின் சிரமத்தின் பேரில் கைகூடி வருகிறது. இருவருக்கும் இல்லையெனில் மிகமிக அரிதாகத்தான் திருமணம் கூடிவரும். அப்படிக் கூடி வந்தால் வாழ்க்கையில் இறுதிவரை பண நெருக்கடியும், போராட்டமும் இருக்கும் என்ற அளவிற்கு மக்கள் தெரிந்து வைத்துள்ளனர். குருபலம் இல்லையெனில் பெரும்பாலும் திருமண முயற்சியில் ஈடுபடுவதில்லை. பெண்ணையோ, ஆணையோ பேசி முடிக்க விருப்பம்

இல்லையெனில் சாதகப் பொருத்தம் இல்லையெனக் கூறித் தப்பிக்கின்றனர். இதனைப் புரிந்துகொண்ட எதிர்த்தரப் பினரும் விலகிக் கொள்கின்றனர். மக நட்சத்திரமும் அவிட்ட நட்சத்திரமும் பொருந்தியவர்கள், மணம் புரிந்துகொண்டால் 40 வயது முடிந்தபின் யாராவது ஒருவர் இறப்பர்; சிம்ம ராசிக்குத் திருமணம் தாமதமாகும்; மணவாழ்க்கை சிறக்காது. செவ்வாய்த் தோடம், நாகதோடம், சகட தோடம், புத்திரதோடம், களத்திரதோடம், ஆயுள் தோடம் முதலியன ஒருவர்க்கு உண்டு, இல்லை என்பதில் கருத்து வேறுபாடுகள்; அப்படியென்றால் என்ன என்பதில் கருத்து வேறுபாடுகள் (குருவும் சந்திரனும் 6, 8, 12 என்ற அமைப்பில் வருவது சகட தோசம் என்றும் சந்திரனுக்கு 12இல் குரு இருப்பின் தோடம் இல்லை என்றும் கூறப்படுதலைச் சான்றாகக் கூறலாம்) என்பன போன்ற பல கருத்துகள் சமுதாயத்தில் நிலவுதலைக் காணமுடிகின்றது.

காலசர்ப்ப தோடம் என்பது சாதகத்தில் இராகு கேதுவிற்குள் பிற கோள்கள் அடங்குவது. இத்தோடம் இருப்பவர் ஆந்திர மாநிலத்திலுள்ள காளஸ்திரி சென்று தோடப் பரிகாரம் செய்து கொள்கின்றனர். திருமணம் முடிந்தவுடன் அல்லது பிறந்தபோது சனி எங்கிருந்தாரோ அதே வீட்டிற்கு வந்தவுடன் (30 ஆண்டு) தோடம் நீங்கி நற்பலன் ஏற்படுகிறது என நம்புகின்றனர்.

தந்தையின் நட்சத்திரமும் குழந்தையின் நட்சத்திரமும் (மகன் அல்லது மகள்) ஒரே நட்சத்திரமாக இருந்தால் இருவரில் ஒருவருக்கு இறப்போ அல்லது துன்பமோ ஏற்படும் என்று குழந்தையைப் பாட்டி வீட்டில் விடுதல், படிக்கும் காலத்தில் 'தங்கும் விடுதியில்' விடுதல் முதலான செயல்களை நடைமுறையில் காணமுடிகிறது. இன்றும் வழக்கில் தன் பெண்ணிற்கு உரோகிணி நட்சத்திரத்தில் குழந்தை பிறப்பின் தன் மகன்களுக்குத் துன்பமோ இறப்போ வருமெனப் பெண்ணின் தாயார் வருந்திப் பதற்றப்படும் நிலை உள்ளது. இதன் அடிப்படையாகக் கண்ணன் உரோகிணி நட்சத்திரத்தில் பிறந்த கம்சனைக் கொன்ற நிகழ்வு அமைந்திருக்கலாம். கண்ணனின் பிற சாதக அமைப்புகளும் ஒத்து வந்ததால் கம்சன் இறக்கிறான். எனவே உரோகிணியில்

பிறந்தாலே தாய்மாமனைக் கொல்லும் என்ற அச்சம் தேவையற்றது. அமாவாசையில் பிறந்தவன் திருடனாக, திருடினாலும் எளிதில் சிக்காதவனாக, எதிலும் தப்பித்துக் கொள்பவனாக, சுயநலமிக்கவனாக இருப்பான் என்ற கருத்தும் நிலவுகிறது.

தன் மகனின் சாதகம் சரியில்லை என்பதை அறிந்த பெற்றோர் அவனுக்குத் திருமணம் முடிந்தபின் இனி பையன் சாதகத்தைப் பார்த்துப் பலன் அறிதலாகாது, அவனது பிள்ளையின் சாதகத்தை வைத்துத்தான் பையனின் எதிர்காலத்தைப் பார்க்க வேண்டும் என்று கூறுகின்றனர். இதன்வழி விரும்பத்தகாத பலன்களைக் கேட்டு மனம் கலங்கக் கூடாது என்ற அடிப்படையில், சாதகத்தை நெகிழ்வுத் தன்மையுடையதாக்கி மனத்தைத் தேற்றிக் கொள்கின்ற நிலையினை அறிய முடிகின்றது.

சாதகங்கள் சரியில்லாமல் இருந்தால் அத்தகைய சாதகங்களைப் பல இடங்களில் மறைத்துவிடுகின்றனர். குறையை நீக்கி நல்ல சாதகமாக மாற்றிவிடுவதையும் காணமுடிகின்றது. சோதிடம் கற்றறிந்த ஒருவர் தன்னுடைய சாதகத்தைக் கணித்து அறுபது வயதுவரை தனக்குப் பலன் எழுதி வைத்திருந்தார். தம் பிள்ளைகளிடம் நான் அறுபது வயதுக்குப் பின் உயிரோடு இருக்க மாட்டேன் என்று பல முறை கூறி இருந்திருக்கிறார். உயில் எழுதுதல் போன்ற பல செயல்களைத் தான் இறந்துவிடுவோம் என்ற எண்ணத்தில் முன்கூட்டியே செய்து வைத்துள்ளார். காட்டாகத் தன்னுடைய நான்கு பெண்களில் இரண்டு பெண்களுக்குத் திருமணமான பிறகு மற்ற இரண்டு பெண்களின் திருமணத்தின்போது தான் இருக்க மாட்டேன் என்பதால், 'வீட்டை விற்று அந்தப் பணத்தில் திருமணத்தைச் செய்ய வேண்டியது. இல்லையெனில் அவரது இளைய மகன் நல்ல முறையில் திருமணம் செய்துவிட்டு அந்த வீட்டை வைத்துக் கொள்வது' என முன்பே உயில் எழுதி வைத்துவிட்டார். அறுபது வயதில் மாரடைப்பால் அவர் கூறிவந்தபடியே இறந்துவிட்டார். அறுபது வயதில் இறந்துவிடுவோம் எனப் பல ஆண்டு காலமாக எண்ணியதால் அந்த நினைப்பே பெரியவருக்கு மரணத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இந்தப்

பெண்ணைப் பெரியார் இயக்கத்தில் தீவிரப் பற்றுடையவராக, இருந்த ஒருவர் மணந்து கொண்டதால் 'சாதகம்' குறித்து எதுவும் அவர் அப்போது கேட்கவில்லை. ஆனால் இன்று தீவிர சோதிட நம்பிக்கையுடையவராய், வெளிவருகின்ற பெரும்பான்மை சோதிட நூல்களை வாங்குகின்ற மனநிலை யுடையவராய் மாறிய நிலையில், தம் மனைவியின் பிறந்த நேரம், ஆண்டு முதலானவற்றைச் சோதிடரிடம் கொடுத்துப் புதிதாகச் சாதகம் எழுத வைத்து அதில் மனைவிக்குச் செவ்வாய்த் தோடம் இருப்பதை அறிந்தார். இதனால்தான் மனைவியின் தாய்வீட்டார் மிகுந்த சோதிட நம்பிக்கை உடையவராக இருந்தாலும் சாதகத்தை மறைத்துவிட்டனர் என்று இப்பொழுது அவர் கருதுகிறார். அதனால்தான் தங்கள் மணவாழ்வில் மனம் ஒத்து ஒருநாள் கூட வாழ முடியவில்லை என்றும் கூறுகிறார். மேலும் அவர் என் மனைவிக்குச் சோதிடர் கணித்த சாதகத்தில் செவ்வாய்த் தோடம் இருக்கிறது; ஆனால் அச்சோதிடர் செவ்வாய்த் தோடம் இல்லாத பல சாதகங்களுக்கு இத்தோடம் இருப்பதாகக் கூறி, பரிகாரம் செய்ய முற்பட்டதை நானே பார்த்திருக்கிறேன் என்றும் கூறினார்.

'பாரு பாரு பட்டணம் பாரு' என்ற திரைப்படம் சாதகம் திருத்தி மாற்றி எழுதப்படுவதையும், இன்றைய இளைஞரிடம் சோதிட வேகம் இருப்பதையும் காட்டுகிறது. இதுபோல் சோதிட நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் தந்து பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் சோதிடம் பற்றிய செய்திகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் அமைய 'நவக்கிரக நாயகி' என்ற தமிழ்ப்படம் சோதிடத்தைக் கருவாகக் கொண்டு அமைவது குறிப்பிடத்தக்கது. கோள்களின் வலிமை, அவை மனிதனை ஆட்டுவிக் கின்றமை, இயல்பான நிகழ்வுகளில் கோள்களின் இடமாற்றத்தால் முரண்பாடு நடக்கின்றமை என்பன போன்ற விரிவான செய்திகள் இதில் இடம் பெறுகின்றன.

மணவாழ்க்கை சரியாக அமையாதபோது திருமணத்தை முன்நின்று முடித்தவர்களையும் தன்னையும் நொந்து கொள்ளும் நிலை காணப்படுகின்றது. தன் விருப்பப்படி மணவாழ்க்கையை அமைத்துக்கொண்ட ஒருவர் மண

வாழ்க்கை சரியாக அமையாததால், தான் சொந்தத்தில் பெண் எடுக்காதது மாபெரும் தவறு என மிகவும் மனம் நொந்து வேதனைப்பட்டிருக்கிறார்! குருப்பெயர்ச்சி, சனிப்பெயர்ச்சி எனத் தொடர்ந்து சோதிட நூலைப் படித்ததன் விளைவாய் ஒரு சோதிடரை அணுகி தனக்குச் சாதகம் எழுதவைத்துப் பலனும் பார்த்திருக்கிறார். கும்ப ராசியான அவருக்குச் சந்திரனுடன், இராகு, கேது சேர்க்கை போன்ற இன்னபிற காரணங்களால் யாரை மணந்திருந்தாலும் மணவாழ்க்கை சரியாக அமையாது என்பதைச் சோதிடர்வழி அறிந்து 'நான் தவறு செய்யவில்லை என் விதி அவ்வளவுதான், என்ற பக்குவத்திற்கு மனத்தைத் தேற்றிக் கொண்டுவிட்டார்.

சோதிடம் மனிதனைப் பலவழிகளில் பக்குவமாகச் செயல்படுத்தக்கூடிய ஓர் உளவியல் காரணியாக விளங்குகிறது. படிப்பு, வசதி, அழகு நிறைந்த இளைஞன் சோதிடத்தின்வழி தனக்குத் தாமதத் திருமணம் நடைபெறுவதுடன், திருமணம் நடந்து முடிவதற்குள் அது தொடர்பான பல இடையூறுகள் ஏற்படும் என அறிகிறார். திருமணம் நடைபெறாமல் தள்ளிப்போனதால் துன்பமும், மனக்கலக்கமும் ஏற்படினும் திருமணம் கண்டிப்பாக நடக்கும் என்ற நம்பிக்கை காரணமாய் நிகழ்காலத் துன்பம் அவரை மிகுதியாகப் பாதிக்கவில்லை. தன் குடும்பத்திலுள்ளவர்களிடம், என் சாதகப்படி தாமதமாக நடப்பதுதான் நல்லது என்று கூறி அவர்களையும் பக்குவ நிலையை அடையச் செய்கிறார். ஆனால் சோதிடம் பார்க்காத ஒருவருக்கு இந்நிலை ஏற்படும்போது அவர் மிகுந்த மனப்பாதிப்புக்கு ஆளாகிறார். அதேபோல் அவரது பெற்றோரும் தேவைக்கதிகமான மனக்கவலை கொள்கின்றனர்.

ஒருவர்க்குத் திருமணம் ஆவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு என்று அறிந்த சோதிடர், உங்களுக்குத் திருமணத்திற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதால் இரண்டு ஆண்டிற்குள் நடக்கச் சிறிதே வாய்ப்புள்ளது என்று கூறுகிறார். அது இவரது சாதகப்படி திருமணம் அமையும் வேளை; ஆனால் அவ்வமைப்பை வேறு கோள்கள் கெடுப்பதால் நடப்பதற்கான வாய்ப்பு மிகக் குறைவதால் இரண்டாண்டிற்குள் நடக்காவிட்டால், அடுத்து நான்கு

ஆண்டுகளுக்குள் திருமணம் நடந்துவிடும் என்று கூறுகிறார். இதனைக் கேட்டு ஆறு ஆண்டுகளையும் ஓரளவு நம்பிக்கையுடன் கழித்த அவர் ஆறு ஆண்டுகள் கழிந்தும் திருமணம் ஆகாததால் சோதிடரை அணுக, நடக்கும் வாய்ப்பு குறைவாகவும், நடக்காததற்கான வாய்ப்பு மிகுதியாகவும் இருப்பதால் நடக்கவில்லை என்று சோதிடர் கூறுகிறார். பலமுறை நம்பிக்கையுடன் எதிர்பார்த்து ஏமாற்றம் ஏற்பட்ட நிலையில் நடந்தால் நடக்கட்டும் நடக்காவிட்டால் போகட்டும் என மனத்தைப் பக்குவப்படுத்திக் கொண்டதால் 'இனி திருமணம் ஆகாது' என்பது மிகுந்த மனநிலைப் பாதிப்பை அவருக்கு ஏற்படுத்துவதில்லை.

அறியாமை, விழிப்புணர்ச்சியின்மை, கவனக்குறைவு போன்றவற்றையுடைய மக்கள் பலர் இருப்பதால், ஏமாளிகள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள் என்பதற்கிணங்க சோதிடம் பல தவறுகளுக்குத் துணைநிற்பதை அறிய முடிகிறது. சாதகத்தைப் பார்க்காமலே கோடங்கி, குறி சொல்பவர் முதலியோர் நாகதோடம், மாங்கல்ய தோடம், கருட தோடம் என்று கூறுவதைக் கேட்டு அவர்கள் கூறியபடி பரிகாரத்தை அவர்களிடமே செய்வது அன்று முதல் இன்றுவ்வரை பெரும்பான்மைக் கிராமங்களில் நடைமுறையிலுள்ளது. உண்மையில் பலருக்கு இத்தோசம் எதுவுமே சாதகப்படி இருக்காது. அதிலும் பெண்ணிற்குத் திருமணம் தடையாகிறது என்பதைக் குடும்பத்தினர் வாயிலாகத் தெரிந்து கொள்ளும்போதும், பெண்ணை நேரில் பார்த்துத் திருமண வயது தாண்டி வருவதை அறியும்போதும் இத்தோடத்தில் ஒன்று இருப்பதாகக் கூறுவதில் இவர்கள் பின்வாங்குவதில்லை. ஒருமுறை ஒருவர் வந்து பரிகாரம் செய்தபின் இன்னொருவர் வந்து தோடம் இருக்கிறது பரிகாரம் செய்ய வேண்டும் என்று கூறுவார். பரிகாரம் செய்தோமே என்று பதில் கூறினால் உடனே அவர் தப்பித்துக் கொள்ள நினைப்பது மட்டுமன்றி, இவர்களிட மிருந்து பெற விரும்பும் பொருளைப் பெறாமல் செல்ல விரும்பாத நிலையில் பரிகாரம் சரியாகச் செய்யப்படவில்லை என்று கூறி இரண்டாவது முறையாகப் பரிகாரம் செய்வார்; இரண்டாம் முறை என்று தெரிந்தவுடன் மிகுதியான பூசை செலவுகளுக்கும் வழிவகுக்கிறார். அப்பொழுது முன்பு பூசை

செய்வித்தவர் நினைப்பார். முதலில் செய்தவர் கேட்ட பணத்தையும், பூசைக்குரிய பொருட்களையும் குறைவாகக் கொடுத்தோம். எனவே செய்யவேண்டிய பூசைக்குரிய விதிமுறைகளைக் குறைத்துச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் நம்மால் அவருக்கு ஏற்பட்டதால் பூசையினால் தோடம் நீங்கவில்லை. இம்முறையாவது தோடம் நீங்கட்டும் என நினைத்து அவர் எதிர்பார்த்தபடி தருவதில் சிரமம் இருப்பினும் தர முன்வருகின்றனர். இதுபோன்ற பூசைகள் ஏமாற்று வேலையோ என்ற சந்தேகம் ஏற்பட்டால்கூடப் பொருள் தானம் கொடுப்பதே ஒரு பரிகாரம் என்ற நம்பிக்கையுடைய பலர் இவை போன்றவற்றைச் செய்ய முன்வருவதில் பின்வாங்குவதில்லை.

தனக்குப் பிடிக்காத நிலையில், மணமக்கள் விரும்புவார்களேயானால் சோதிடரின் உதவியுடன் நீ அவளை (அவனை) மணம் புரிந்து கொண்டால் அவள் (அவன்) இறப்பாள் என்று கூறுதல். அதாவது தான் இறந்து விடுவோம் என்றால்கூட எங்கே மணம் புரிய முன்வந்துவிடுவார்களோ என அஞ்சி மணப்பவர் இறப்பார் என்று அச்சுறுத்தல்; பிடிக்காத மருமகள் கிடைத்தபோதும், சீர்வரிசை கொண்டு வராத போதும் மணமக்கள் சேர்ந்து வாழ நேரம் சரியில்லை என்று கூறித் தங்களால் இயன்ற காலம் வரை பிரித்து வைத்து வஞ்சித்தல், மாமியார், மாமனார், மாப்பிள்ளையின் சகோதரர் ஆகியோருக்கு மணமகளால் பாதிப்பு ஏற்படும் என்று அச்சுறுத்தல், பொய்யாகப் பொருத்தம் வரவில்லை என்று கூறுதல், திருமணம் முடிந்த குறுகிய காலக்கட்டத்தில் இறப்பு, சிறுவிபத்து, இடையூறு, பொருள் இழப்பு முதலானவை ஏற்படின் மருமகள் வந்தவேளை என்று கூறிப் பழித்தல் இவை போன்ற எண்ணப் போக்குகளுக்கு அடிப்படை, மக்களிடையே ஊடாடும் தவறான போக்குகளே. இன்றும் நடைமுறையில் பல இடங்களில் இயல்பான நிகழ்வுபோல் இத்தகு விபரீதங்கள் நாளும் நடந்துகொண்டுதான் உள்ளன.

தாமதமாகத் திருமணமான, திருமணம் தடைப் படுகின்ற நூற்றுக்கணக்கான சாதகங்களை எடுத்து ஆய்வாளர் பார்த்தபோது தாமதத்திற்கான காரணங்கள்

அவரவர் சாதகங்களில் தெளிவாகக் காணப்படுகின்றன. இதேபோல கணவன் மனைவி ஒற்றுமையின்றிச் சேர்ந்து வாழ்தல், இவ்வொற்றுமையின்மை காரணமாகப் பிரிந்து வாழ்தல், சரியான காரணம் எதுவுமின்றியே ஒருவருக் கொருவர் அன்புடன் வாழாமை, சரியான காரணமின்றியே தனித்தனியாக வாழ்தல், இருவரு! நல்லவர்களாக இருந்தும் பிரிந்து வாழ்தல், பிரிந்து வா{ க்கூடிய பல கணவன் மனைவியர் குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குப் பின் பெருமுயற்சியின்றியே ஒன்றாகச் சேர்ந்து தொடர்ந்து வாழும் நிலைமை இதுபோன்ற பலவும் அவரவர் சாதகங்களிலுள்ள சோதிட விதிப்படி சரியாகவே அமைவதை ஆய்வாளர் காணமுடிந்தது. நடைமுறையில் நடந்த, நடந்து கொண்டிருக்கிற பல நிகழ்வுகளைச் சிக்கலுக்குட்பட்டவர்கள் வாயிலாகவே கேட்டறிந்து, பின்னர் அவர்களது சாதகங்களைக் காணும்போது அவற்றிலுள்ள கோள் அமைப்புகள் சிக்கல்களைத் தன்னுள்ளே கொண்டுள்ளதாகக் காணப்படுவதால் அவர்தம் வாழ்வும் அதற்கொப்பவே அமைந்திருத்தலை உணர முடிந்தது.

தவறுகள் நிகழ்வதற்குப், பல நிலைகளில் வாய்ப்புகள் அமைவதைத் தவிர்க்க முடியாத, தவறுகளுக்கு வழிவகுக்கும் இன்றைய நடைமுறையிலுள்ள சோதிட விதிகளே இவ்வளவு சரியாக அமைதல் சிந்தித்தற்குரியது. எனவே சோதிடவியல் துறை முறையாகப் பல்கலைக் கழகங்கள் வாயிலாகப் பயிற்றுவிக்கப்பட்டு, ஆய்வுகள், குறிப்பாக 'நிகழ்ச்சி ஆய்வுகள்' பல மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இதன்வழி பெறப்படும் உண்மைகள் மக்களுக்கு உணர்த்தப்பெற்று, சோதிடக்கலையில் அறிவியல் சார்ந்த உண்மைகள் பரவலாக்கப்பட்டு, இதுபற்றிய தெளிவினை மக்கள் பலரும் பெறும்போது ஏமாற்றுகள் குறைக்கப்பட்டு சமுதாயம் சீர்பெறுவதோடு, மக்கள் பயன்பாட்டு ஆய்வுகள் மேலும் பல பெருகவும் வழிவகுக்கும்.

சோதிடரில் சிலர் இரட்டைக் குழந்தைகளுக்குச் சாதகம் எழுத விரும்பவில்லை. காரணம் அக்குழந்தைகள் குறைவான ஆயுளை உடையதாகவும் இருந்துவிடலாம் என்ற நம்பிக்கையே. இந்நம்பிக்கை மைசூர், கோவைப் பகுதிகளில் ஒருசில இடங்களில் பரவலாக நிலவுவதைக்

காணமுடிகிறது. கொடுத்த கடனைத் திருப்பி வாங்க, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க என்ற நிலையில்தான் இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன என்ற நம்பிக்கையே ஆயுள் குறைபாடு பற்றிய அச்சத்திற்கு அடிப்படையாகிறது. சோதிடர் ஒருவருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. இத்தகைய குழந்தைகளுக்குச் சாதகம் கணித்தல் கூடாது என்ற கருத்தில் நம்பிக்கை உடையவரான அவர் தன் குழந்தைகள் என்பதால் சாதகங்களைக் கணிக்கிறார். ஒரு குழந்தை ஒரு படி எண்ணெய்க் கடனைத் திருப்பி வாங்கவும், மற்றொரு குழந்தை 1000 ரூபாயைத் திருப்பிக் கொடுக்கவும் வந்திருப்பதாகச் சாதகங்கள்வழி அறிகிறார். அவருக்குக் குழப்பம் இது உண்மைதானா என்று. இரண்டு சொம்புகளில் ஒவ்வொரு படி எண்ணெயை வைத்துத் தன் மனைவியிடம் இதனை இரு பிள்ளைகளுக்கும் தனித்தனியே பயன் படுத்தும்படிக் கூறுகின்றார். எண்ணெய் தீர்ந்தபின் ஒரு பிள்ளை இறந்துவிடுகிறது. ஒரு படி எண்ணெய்க் கடனைத் திருப்பி வாங்க வந்த பிள்ளை இறந்துவிட்டது என்பதை உணர்ந்த சோதிடர், தன் இரண்டாம் பிள்ளையை மிகக் கவனமுடன் வளர்க்கின்றார். அவனுக்குத் தேவையானதைச் செய்யுமவர் அவனிடமிருந்து சிறு பொருளுதவியையும் பெற்றுக் கொள்ளாமல் கவனமாகச் செயல்படுகிறார். பையன் வளர்ந்தபின் சிறப்பாகத் தொழில் புரிந்து மனைவியுடன் வாழும் நிலையில், பெற்றோர் பிள்ளையிடம் எந்த உதவியையும் பெற மறுப்பது அவனுக்கு மிகுந்த மனவருத்தத்தைப் பலமுறை ஏற்படுத்தியது. தன் தந்தைக்கு அறுபது வயது நிறையும்போது ஒரு சிறு கைத்தடியைத் தந்தையிடம் கொண்டுவந்து கொடுக்கிறான். அவரும் விலை மிகக் குறைவாகத்தானே இருக்கும் என்று கைத்தடியை வாங்கிக் கொள்கிறார். ஆனால் கைப்பிடியின் உட்புறம் ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமான தங்கத்தால் செய்யப் பட்டிருந்தது. அப்போது குளியலறைக்குச் சென்ற மகன் வழுக்கி விழுந்து இறந்துவிடுகிறான். சோதிடத்தில் இத்தனைத் துல்லியமான நிகழ்வுகளைக் கூறுகின்ற அளவிற்கு வழிமுறைகள் இருக்கின்றனவா என்பதை ஆய்வு முடிவுகளே வெளிப்படுத்த வேண்டிய நிலையுள்ளது. எனினும் இக்கருத்தை நம்பவைக்க கற்பனையால் உருவாக்கப்பட்டதே மேற்கூறப்

பட்டுள்ள கதை. ஒருவேளை இக்கதை உண்மையில் நடைபெற்ற நிகழ்வாக இருப்பினும் இக்கருத்து உண்மையா என்பது மேலும் ஆய்வு செய்து தெளிவுபடுத்த வேண்டிய நிலையிலேயே உள்ளது.

சோதிடத்தின் வழி ஒருவருக்கு நூறு வயது என்று அறிந்ததால் நோய் வந்தபோது மருத்துவரிடம் காட்டாமல் இருத்தல் கூடாது என்பதைப் பின்வரும் நிகழ்வு காட்டுகிறது. ஒரு வயதான பெரியவர் தன் மகனுக்கு நீண்ட ஆயுள் என்று சோதிடர் கூறியதால் அவனுக்கு நோய் வந்தபோது மருத்துவரிடம் கூட்டிச் செல்வதில் கவனம் செலுத்தவில்லை. மகனுக்கு உடல்நிலைப் பாதிப்பு மிகுதியாக ஏற்பட்டபின் வேறுவழியின்றி மருத்துவரிடம் கூட்டிச் சென்றார். மருத்துவர் இது மஞ்சள் காமாலை. உடனே வந்து இருந்தால் குணப்படுத்தி இருக்கலாம் என்று கூறி மருத்துவம் பார்த்தார். ஆயினும் சில நாட்களில் அவரது மகன் இறந்துவிட்டான். எனவே நன்மை, தீமை எதுவாயினும் சோதிடக் கணிப்பு மிகச் சரியாக நடக்கும் என நம்பவுது முட்டாள்தனமும் அறியாமையும் ஆகிவிடும். சோதிடர் மிக்க கவனத்துடன் பார்த்துக் கூறியபோதிலும், அப்பலன்களைக் கேட்டுச் செயல்படும் காலத்து விழிப்புணர்ச்சி என்பது இருத்தல் வேண்டும். எனவே மனிதன் எந்நிலையிலும் தன் கடமையை விழிப்புணர்வுடன் செய்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறது.

மக்கள் சோதிடர் கூறும் செய்திகளைக் கேட்டு வியத்தல், சோதிடர் ஒன்றைக் கூறத் தொடங்குவதற்கு முன்பே தலையசைத்து அவர்களது கருதுகோளுக்கு வழிவிடுதல், சோதிடம் கேட்கும்போது தன் சூழலை இடையிடையே அழகாக விவரித்தல் போன்ற நிலைகள் வழக்கில் உள்ளன. மக்களின் இந்நிலையை உணர்ந்த சோதிடர் முதலில் அவர்களைத் தன்வயம் இழுக்கும் உத்தியைக் கையாள்வதில் கவனமுடன் இருக்கிறார். இது தவறு இல்லையெனினும் இதுபோன்ற பயனற்ற உத்திகள் கேட்பவர்க்கு நிறைவைத் தந்துவிடுவதால், கணக்கிட்டுப் பலன் கூறும் முயற்சியை அவர் குறைத்துக் கொள்கிறார்.

பாட்டன் முதல் உடன்பிறப்பு வரை எழுதப்படும் வம்சாவளிக்குத் 'துருவ கணிதம்' என்று பெயர். சாதக நோட்டுகளில் 'துருவ கணிதம்' அல்லது 'வள்ளுவர் கணிதம்' எனப் பலவகையான சுருக்கெழுத்துகளில் வம்சா வழியைப் பற்றி எழுதப் பெற்றிருக்கும். சோதிடர் சாதகம் கணிக்கும் பொழுது நோட்டில் 'துருவ கணிதம்' என்ற இதனைச் சங்கேத மொழியில் எழுதி வைப்பர். இக்குறிப்பு சாதகருடைய வம்சாவளி பற்றிய செய்தியாக அமையும். மக்களுடைய பயன்பாட்டில் குழூஉக்குறிச் சொற்கள் இருப்பது போலவே, சோதிடரும் பல குழூஉக்குறிச் சொற்களை வம்சாவளியைக் கூறப் பயன்படுத்துகின்றனர். இதனைக் கேட்பவர்களுக்கு ஒன்றும் புரியாது. ஆனால் சோதிடர் அந்தக் குறிப்பு மொழியைப் பார்த்துச் சாதகருக்கு எத்தனைச் சகோதர சகோதரிகள், பாட்டன், பாட்டி, தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனைப் பேர், பாட்டனுக்கு எத்தனைப்பேர் என வம்சாவளி பற்றிய முழுமையான வரலாற்றைக் கூறி வியக்கச் செய்துவிடுவார். துருவக் கணிப்பு எழுதும் நிலையில் குறைந்த பட்சம் முப்பது விழுக்காடு தானாகவே கணித்துவிடும் திறமை வெகு சிலருக்குண்டு. சாதகம் கணிக்க வந்தவரைக் கேட்டே பரம்பரையைப் பற்றித் தெரிந்து கொள்வதுமுண்டு.

இங்ஙனம் ஏதோ ஒரு வகையில் சாதகனைப் பற்றிய உண்மைகளைச் சுருக்கெழுத்தில் எழுதி வைத்துவிடுவதால் எழுதுபவர்க்கே இது சமயத்தில் கை கொடுக்கும். முன்பு சாதகம் பார்த்தவர் மீண்டும் வரும்போது கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூற இது உதவியாக இருக்கும். வந்தவர்க்கு இதைக் கூறியதும் திகைப்பு, வியப்பு ஏற்படுவதால் அதன்பின் சோதிடர் எதைக் கூறினாலும் அவர் முழுமையாக நம்பிக் கேட்டுச் செல்லவேண்டியுள்ளது. இவர்கள் தங்களுக்காக எழுதுவது பிற சோதிடர்க்கும் பலன் கூறப் பயன்படுகிறது. இந்தத் துருவக் கணிப்பு முறை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விதமாக எழுதப்படுகின்றது. தமிழ்நாட்டில் பெரும்பாலும் அனைத்து மாவட்டங்களிலும் கீழ்க்கண்ட சங்கேதக் குறிப்பு மொழியில் துருவக் கணிப்பு எழுதப்படுகின்றது.

'சூ.ரா உச் - கே உச் - சந்:ரா நீ - கே உச்'

## இதன் விளக்கம்

| | |
|---|---|
| சூ | - தந்தை (சூரியன்) |
| ச | - தாய் (சந்திரன்) |
| ரா | - பாட்டன் (இராகு) |
| கே | - பாட்டி (கேது) |
| உச் | - உச்சம் - உயிருடன் இருக்கிறார் |
| நீ | - நீச்சம் - உயிருடன் இல்லை |

தந்தையைப் பெற்ற பாட்டனும் பாட்டியும் உயிருடன் உள்ளனர். தாயைப் பெற்ற பாட்டன் இல்லை; பாட்டி மட்டும் இருக்கிறார் என்று பொருள்.[2]

அரசியல்வாதிகள் சோதிடம் பார்ப்பதை வழக்கமாக வைத்துக் கொண்டாலும், வெளியே சொல்வதில்லை. ஆயின் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனால்டு ரீகன் அவரது சோதிடர் திரு. காரல்ரைட்டர் சொல்லியபடிதான் முக்கிய அரசியல் நிகழ்ச்சிகளை நடத்துவார். கலிபோர்னியா மாநிலக் கவர்னராக அவர் பதவி ஏற்றது நடு இரவிலாகும். சோதிடர் சொல்லியபடி அவர் அவ்வாறு செய்தார். அதன் முடிவு கவர்னர் ஆக இருந்தவர் உலக வல்லரசான அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டார். திரு. ரொனால்டு ரீகன் வெள்ளை மாளிகையிலும் ஒரு தனி நிகழ்ச்சியில் நெருங்கியவர்கள் முன்னிலையில் நண்பகல் 11.57 மணிக்கு அவரது சோதிடர் குறித்துக் கொடுத்த சரியான நேரத்தில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். பின்னர் அவர் இரண்டாவது முறையாக அனைவர் முன்னிலையிலும் உலகிலுள்ளோர் எல்லாரும் தொலைக்காட்சியில் பார்க்கும் வகையில் பதவி ஏற்றார். ஆபிரகாம் லிங்கன், பிராங்களின் ரூஸ்வெல்ட், ஜார்ஜ் வாஷிங்டன் (அவரே ஒரு சோதிடர்) போன்ற அமெரிக்க ஜனாதிபதிகள் பலர் சோதிடம் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.[3]

---

2. நடைமுறை சோதிடம், பக்.90-94. 3. ஜோதிடச் சுடர், ப.25, 1993.

'இலக்னாதிபதி இலக்னத்தில் 1, 5, 9 க்குரிய கோள்களின் சேர்க்கை, பார்வை அல்லது நட்சத்திரக் காலங்களில் பயணிப்பது முதல் தரமான அமைப்பாகும். மேற்கண்ட அமைப்பு ஐந்து அல்லது ஒன்பதிலிருந்தாலும் இதே பலன்தான். 4, 10, 11இல் ஏற்பட்டால் ராஜயோகம். 2, 11இல் ஏற்பட்டால் தனயோகம். இப்படி அமைப்புடைய சாதகத்திற்குத் தசாயோகங்களும், சாதகத்தில் விசேஷமான ராஜயோகங்களும் அமைந்திருக்கும். முன்வினைப் பயன் நல்வினையாக உள்ள அமைப்பு இவை. இப்படிப்பட்ட சாதகங்களைச் சோதிடர் பார்க்க நேரிட்டால் அந்தச் சாதகத்தில் உள்ள (இராசிச் சக்கரத்திலுள்ள) நவக்கிரகங்களை வணங்கிப் பின் பலன் சொல்வது இன்றும் கேரளாவில் வழக்கத்தில் உள்ளது.'[4]

இத்தகைய நிகழ்வுகள் மக்களிடையே ஏராளமாகப் பொதிந்து கிடக்கின்றன. இவை அனைத்தையும் திரட்டித் தொகுத்து வெளிக்கொணரும்போது இத்தகைய செய்திகளிலிருந்து பெறப்படும் முடிவுகளும், தெளிவுகளும் மக்களின் எதிர்கால வாழ்க்கைக்கு மிகவும் பயனுடையதாக அமையும்.

## சோதிடத்தின் செல்வாக்கு

இருள் சூழ்ந்த எதிர்காலத்தை உணர்ந்து நடக்க ஒளி தரும் விளக்காக விளங்கும் சோதிடம், "தெரு விளக்கில் கைரேகை பார்ப்பது முதல் பத்திரிகைகளில் உங்கள் நட்சத்திரம் என்ன சொல்கிறது" என்ற பகுதிவரை மக்கள் வாழ்வில் முக்கிய இடம் பெறுகிறது. எடை கூறுகின்ற இயந்திரங்கள்கூடப் பலன் கூறுகின்ற நிலையினைப் பார்க்க முடிகிறது. தற்போதைய நடைமுறை வாழ்க்கையில் கோள்களின் பெயர்ச்சி பற்றி எழுதப்படும் கோச்சாரப் பலன்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. நாட் பலன்கள் கூட செய்திப் பத்திரிகைகளில் ஒரு வரிப் பலன்களாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

4. வானுயர்ந்த வாழ்விற்கு வழிகாட்டும் சோதிடம், ப.39.

மேலும் எண்கணித வழியில் அதிர்ஷ்டத்தைக் கூறும் பல நூல்கள் விற்பனையாகின்றன. லாட்டரி, குதிரைப் பந்தயம் ஆகியவற்றில் இந்த எண்களின் பலன்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. நல்ல நேரம், காலம் அருமையான தசா புத்திகள் முதலியன வரும்போது பெயர் எண்ணை மாற்றி யதற்கான பலன் முழுமையும் கிட்டும் என்று கூறி ஒருவருக்குப் பெயர் எண்ணை மாற்றுவது, குறிப்பிட்ட எண்ணைப் பயன்படுத்தும்படி கூறுவது நடைமுறையில் உள்ளது. ஒரு சோதிடர் ஓர் எண்ணைக் குறித்துக் கொடுப்பது, இது சரியில்லை என்று கூறி வேறு ஓர் எண்ணை இன்னொரு சோதிடர் குறித்துக் கொடுப்பது என்ற குழப்ப நிலைகளும் இதில் உள்ளன.

ஒரே இராசி பல கோடிக்கணக்கான மக்களுக்கு உரியதாக இருந்தாலும் அனைவருக்கும் ஒரே விதமான பலன்களாக நடக்காது. ஒவ்வொருவரின் சாதக அமைப்பிலும் மாற்றம் இருக்கும். இதனால்தான் வார, மாத, இதழ்களில் வெளியிடப்படும் இராசிப்பலன்கள் ஒரு வாரத்தில் சரியாக அமைந்தால் மறுவாரத்தில் சரியாக அமையாது. சிலருக்குப் பலன்கள் ஒத்துவரும்; சிலருக்கு ஒத்துவராது. குரு, சனி, இராகு, கேது முதலிய பெயர்ச்சிகளை முன்னிட்டு எழுதப்படும் பலன்களும் இதுபோல் தோராயமாகத்தான் அமையும். சில சமயம் பலன் ஒத்து வருவதாலும், இதில் என்னதான் எழுதி இருக்கிறது பார்ப்போமே என்பதாலும் இப்படி அமையும் பலன்கள் கூட மக்களை ஈர்க்கவே செய்கிறது. நாளிதழ், வார இதழ், மாத இதழ் முதலிய எந்த இதழ்களைக் கையில் எடுப்பினும் சோதிடப் பகுதி இருக்கிறதா, அதில் தன்னுடைய இராசிக்கு என்ன பலன் என்று பார்ப்பவர்கள் மிகுதி. சோதிடம் பற்றிய அறிவு இல்லாதவர்களும் கூட, தாங்கள் என்ன இராசி என்று தெரிந்து கொண்டு குருப்பெயர்ச்சி, சனிப்பெயர்ச்சி, இராகு கேது பெயர்ச்சி தொடர்பாக வெளிவரும் நூல்களை வாங்குகின்றனர். கோச்சாரம் நடைபெறும் காலங்களில் பல்வேறு ஊர்களிலுள்ள பல கோவில்களில் விழாக்கள் நடத்தப் பெறுவதும் கோள்களின் பெயர்ச்சியில் மக்களின் ஈடுபாட்டை மிகுவிக்கின்றன.

தற்சமயம் (1996) கோள்கள் எந்த இராசியில் இருக்கின்றன (குரு-தனுசு; சனி-மீனம்) எனத் தெரிந்து, பிறந்த இராசியை முதல் வீடாகக் கொண்டு எண்ணினால் சனி, குரு முதலியன எந்த வீட்டில் இருக்கின்றன என்பது தெரிந்துவிடும். குரு 1, 5, 7, 9, 11லும் சனி 3, 6, 11லும் வரும்போது நன்மையைத் தரும். பிற எனில் தீமையைத் தரும் என்ற அளவில் கோச்சாரப் பலனைத் தெரிந்து கொண்டால் போதுமானது. இதற்காக மக்கள் ஒவ்வோர் இராசிக்காரருக்குரிய பெயர்ச்சிப் பலன்களைப் பக்கம் பக்கமாய், நூல்வழி படித்தறிய வேண்டியதில்லை. அது மட்டுமன்றி இப்பலன்கள் நடைபெறுவது அவரவரது தசாபுத்தியைப் பொறுத்தும் அமைகிறது. இத்தெளிவு மக்களுக்குக் கிட்டுமாயின் பல வேண்டாத வெளியீடுகள் வருவது தவிர்க்கப்படும். காட்டாக ஒவ்வோர் ஆண்டும் 12 இராசிகளுக்கு வெளிவரும் குருப் பெயர்ச்சி தொடர்பான 12 நூல்கள் அந்த ஆண்டோடு பலனற்றதாகி விடுகின்றன. 12 நூல்களைப் பல பதிப்பகங்கள் வெளியிடுவதால் ஆண்டிற்கு நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவருகின்றன. இவ்வனைத்துப் பெயர்ச்சிப் பலன் தொடர்பான நூல்களும் விரைவில் பயனற்ற நிலையை அடைகின்றன.

சோதிட நூல்களைப் படிக்கும் இன்றைய தலைமுறையினரில் பலர் சோதிடச் செய்திகளைப் புரிந்து கொள்பவராக உள்ளனர்; சோதிடம் என்ற பெயரில் எந்த நூல் வந்தாலும் வாங்கும் மனநிலை உடையவர்களாய் உள்ளனர்; வாங்கிய பின் பல செய்திகள் அல்லது நூல் முழுமையும் தனக்குப் புரியாவிட்டாலும், பயன்படா விட்டாலும் மீண்டும் இதுபோன்ற நூல்களை வாங்குவதில் பின்வாங்குவதில்லை. இவர்கள் மூல நூல்களைக் காட்டிலும் நாளும் வந்து கொண்டிருக்கிற நூல்களையே பெரிதும் விரும்பிப் படிக்கின்றனர். காட்டாக 'மதி நின்ற இராசிக்கு இருபுறமும் கோள் இல்லையெனில் சாதகர் வறுமை நிலையும் துன்பமும் அடைவர்' என்று நூல் கூறியிருக்கும். ஆயின் 'நல்ல கோள்கள் சந்திர கேந்திரத்திலிருந்தால் மேற்கூறிய பலன் நடக்காது' என்ற விளக்கமும் மூலநூல் களில் இடம் பெற்றிருக்கும். எனவே எந்த ஒரு விதியைக் கூறினாலும் அது தொடர்பான முழுமையான செய்திகள்

தரப்படல் வேண்டும். 'பழைய கள்ளு புது மொந்தை' என்ற வகையில் பழைய செய்தியைப் புதுப்பெயரால் தருதல் என்ற நிலையிலேயே இன்று சோதிட நூல்கள் பலவும் வெளிவருகின்றன. இந்நிலை மாறி, ஆய்வுப் போக்குடைய புதிய செய்திகளைத் தாங்கிச் சோதிட நூல்கள் வெளிவர வேண்டும்.

தமிழ்நாட்டுச் சோதிடர்களிடமிருந்து சிறியதும் பெரியதுமான, செய்யுளிலும் உரைநடையிலுமான சோதிட நூல்களைத் தொகுப்பின் ஏறக்குறைய ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களைத் தொகுக்க இயலும். இவை தவிர குடும்ப சோதிடம், அநுபவ சோதிடம், சோதிடம் பார்ப்பது எப்படி முதலான சோதிட நூல்கள் பல அச்சாகியுள்ளன. தினமணி, தினமலர், தினத்தந்தி முதலிய நாளிதழ்கள் நாள், வார, ஆண்டுப் பலன்களை எழுதி வருகின்றன. இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணிக் கதிர் போன்ற இதழ்கள் மார்ச் 24 முதல் முப்பது முப்பது நாட்களுக்குப் பிறந்தவர்களுக்கு மேடம் முதல் மீனம் வரை 12 இராசிகளாகப் பிரித்து ஐரோப்பிய முறையில் இராசி பலன் வெளியிடுகின்றன. இதே ஐரோப்பிய (மேற்கத்திய) முறையில் இதுவரை சோதிடச் செய்திகளுக்கு இடம் தராத 'இந்து' நாளிதழ் தற்போது பலன் எழுதி வருகிறது. அத்துடன் இந்து முறையிலும் பலன் எழுதுகிறது. இங்ஙனம் இரண்டு முறைகளில் பலன் கூறுவதோடு மட்டுமன்றி, இதில் சோதிட விளக்கங்களும், கேள்வி பதில்களும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் பயன்படு தப் பெறும் மேற்கத்திய முறை இரஃபேல் என்னும் மேனாட்டுச் சோதிடர் ஏற்படுத்திய முறையாகும். ஆலன் லியோ, பீட்டர் விட்டால் என்போர் இம்முறையில் பலன் எழுதுகின்றனர். சில ஆங்கிலச் செய்தி இதழ்களும் இம்முறைப்படி பலன்களை எழுதி வருகின்றன. எண்கள் சாரபல சோதிடம், எதிர்காலம், கால ஓலை, சுபயோகம், திங்கள் சோதிடம், நல்ல காலம், பாக்கியவான், பார்க்கவன், பால சோதிடம், பொய்யா மொழி, மாத சோதிடம், முருகு சோதிடக் கலை, ராஜயோகம், வாணி சோதிடம், விதி, ஜாதக உபயம், ஜோதிடக்கடல், சோதிடக்கலை, சோதிடச் சுடர், ஜோதிடத்தாமரை, ஸ்ரீ சக்ரவாணி, ஸ்டார் டெல்லர் (ஆங்கிலம்) முதலிய இதழ்களுள்

பல இன்றும் வெளிவந்து கொண்டுள்ளன. மலிவு விலைச் சோதிட நூல்கள் ஊருக்கு ஊர், வீட்டுக்கு வீடு சோதிடர்களை, சோதிட ஆர்வலர்களை உருவாக்கியுள்ளது. இதனால் சோதிடம் அன்றாட வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகிவிட்டது.

இராமநாதபுரம் பஞ்சாங்கம், ஆற்காடு சர்வ முகூர்த்தப் பஞ்சாங்கம், யாழ்ப்பாண பஞ்சாங்கம், வாசன் திருக்கணிதப் பஞ்சாங்கம் முதலிய பஞ்சாங்கங்கள் ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்றன.

சி.ஜி. இராஜன், கடலங்குடி நடேச சாத்திரியார் ஆகிய சோதிடர்கள் பல சோதிட நூல்களைத் தமிழில் எழுதியும், வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதியும் உள்ளனர். சென்னையைச் சேர்ந்த கே.எஸ். கிருஷ்ணமூர்த்தி என்பவர் ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியுள்ளார். இவர் 'கிருஷ்ணமூர்த்தி பத்ததி' என்று ஒன்பது கோள்களின் தசாபுத்தி முறையை மாற்றி 'பத்ததி முறை'யாக்கிப் பல நூல்கள் வெளியிட்டுள்ளார். இதுவும் நட்சத்திர பாதசார முறையே ஆகும். இவர்கள் மூவரும் இருபதாம் நூற்றாண்டில் இருந்து மறைந்தவர்கள்.

பெங்களூரில் உள்ள டாக்டர் பி.வி. இராமன் ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியும், அஸ்டிராலிசிக்கல் மேகசின் எனும் ஆங்கில மாத இதழை வெளியிட்டும் சோதிட நிறுவனம் நடத்தியும் வருகின்றார். இவரது பாட்டனார் திரு. சூரிய நாராயணன் அவர்களுக்குப் பின் இக்குடும்பம் நூற்றாண்டு காலமாக இந்தியச், சோதிட முறைகளை ஆராய்ந்து பல புத்தகங்களை வெளியிட்டு வருகிறது. இக்குடும்பம் சித்த சோதிட முறையை உலகுக்கு அழியாமல் தந்தது எனல் தகும்.

கே.எஸ். கிருஷ்ணமூர்த்தி, கடலங்குடி நடேசனார் ஆகிய இருவரின் வழித் தோன்றல்கள் தமிழ்நாட்டில் சோதிட நிறுவனங்களை நடத்தி வருகின்றனர்; சோதிடம் கணித்துப் பலன் கூறுதல், பஞ்சாங்கம் கணித்து வெளியிடுதல், வடமொழி மூல நூல்களை மொழிபெயர்த்து வெளியிடுதல் முதலிய பணிகளைச் செய்து வருகின்றனர்.

'மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் **1993** முதல் புதிதாகச் சோதிடக் கலையைப் பட்டயப் படிப்பாகச் சேர்த்திருக்கின்றனர். இது திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தில் ஓர் ஆண்டுப் படிப்பாக நடைபெற்று வருகிறது. இதற்கான பாட நூல் தேர்வுக்கு நெல்லை க. வசந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.[5]

பாண்டிச்சேரி பல்கலைக் கழகம் சோதிட ஆய்வு ஒன்றுக்கு டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. பம்பாய் மாநிலத்தில் சோதிடம் கல்லூரியில் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. கேரளாவில் மாநில அரசு பஞ்சாங்கம் வெளியிடுகிறது. இங்கு நம் நாட்டில் வெளிவருவதை விட, வெளிநாட்டில் சோதிடப் பலன்களைத் தாங்கி வரும் பத்திரிகைகளின் எண்ணிக்கை மிகுதி. சோதிடம் தொடர்பான புத்தகங்கள் நம் நாட்டில் வருவதைவிட அங்கு அதிகமாக வருகின்றன. அங்குள்ள கல்லூரிகளில் சோதிடம் ஒரு பாடமாக வைக்கப்பட்டுள்ளது. 'பியூச்சராலஜி' என்ற பெயரில் சோதிட சாத்திரத்தைப் பல்கலைக் கழகங்களில் பாடத் திட்டமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். 'நீங்கள் எந்த இராசியைச் சேர்ந்தவர்? அந்த இராசிப்படி தயாரிக்கப்பட்ட உணவைப் பரிமாறுகிறோம். இராசிக்கேற்ற உணவு தருகிறோம்' என்று அங்குள்ள பத்திரிகைகளில் விளம்பரம் வந்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன்'' என்கிறார் காழியூர் நாராயணன்.[6]

சோதிடம் ஒரு கலையாகத் தொடங்கி, மக்களிடமிருந்து பிரிக்க முடியாத ஒரு வாழ்க்கைப் பகுதியாகவே ஆகி, மக்களோடு இரண்டறக் கலந்து விட்டது. இன்று சோதிடம் மக்கள் தொடர்பு ஊடகங்கள் அனைத்திலும் நீக்கமற நிறைந்து தவிர்க்க முடியாத ஒன்றாக உருவெடுத்து விட்டது. சில நேரங்களில் இதுவே பலரின் தேவைகளை நிறைவு செய்யும் ஒரு தொழிலாக அமைந்துவிட்டது. இன்று நாளிதழ்கள் தொடங்கி அறிவியல் ஏடுகள் வரை, இச்சோதிடத் துறையை விடமுடியாமல் வளர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப் பட்டிருக்கின்றன. மனிதனின் உடலில் குருதி நாளங்கள் எப்படி இன்றியமையாதனவோ அப்படிச் சோதிடம் மக்களுள் பலருக்கு ஒரு குருதி ஓட்டத் துறையாகவே ஆகிவிட்டது எனலாம்.

---

5. தினகரன், *12-6-1993*. 6. சோதிடமும் மந்திரமும், ப.3

## சோதிடர் கடப்பாடும் கேட்போர் உளப்பாங்கும்

மனித நம்பிக்கைக்குக் கைகொடுக்கும் பெரும்பங்கு சோதிடர்க்குண்டு. அத்தகைய பொறுப்பு வாய்ந்தவர்கள் தங்கள் பணிக்கெனக் கடப்பாடாகக் கொள்ள வேண்டிய தகுதிகளை, முறைகளைச் சுட்டுவதும், பொறுப்போடு சொல்லப் பெறும் சோதிடக் குறிப்புகளைக் கேட்க வல்ல மனிதர்கள் தங்கள் குரங்கு மனத்தின் போக்கால் எவ்வெவ்வகையால் சோதிடத்தைக் கேட்கவும் நம்பவும், சோதிக்கவும் செய்கின்றனர் என்பனவற்றைக் காட்டுவதுமாக இப்பகுதி அமைகிறது.

சோதிடர் உளவியல் அறிவு உள்ளவராக இருந்தால் தான் வருபவர்களின் மனப் போக்கிற்கேற்ப எப்படிப் பலன் கூற வேண்டும் என்று அறிந்து செயல்பட முடியும். சோதிடத்தில் தெய்வீகத்தைச் சேர்த்ததற்குக் காரணம் உளவியலே. இறையருளால் தனக்கு வாக்குப் பலிதம் கிட்டும் என்ற நம்பிக்கையுடன் சோதிடர் சோதிடம் கூறுகின்றார். சோதிடம் கேட்பவர்கள் பெரும்பாலும் கடவுள் பக்தியுள்ளவர்களாக இருப்பதால் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்காகக் கடவுளையும் சோதிடர் சேர்த்துக் கொள்கிறார்.

அறியாமை, அலட்சியம், மேலோட்டமாகக் கூறுதல், மனத்தில் தோன்றியவற்றையெல்லாம் கூறுதல், பொய், பித்தலாட்டம் ஆகியன சோதிடரிடம் இருத்தல் கூடாது; அனுபவ அறிவு, நூலறிவு ஆகியவற்றை முழுமையாகப் பெறுவதற்கு முன்பே பொருளாதாரப் பலன் கருதி வியாபார நோக்கில் செயல்படத் தொடங்கி விடுதல் கூடாது; வருமானத்தைப் பெருக்கும் நோக்கில் சாதகமாகக் கூறும் நிலை, தன்னுடைய திறமை, நிலை இன்னதுதான் என்று அறிந்தும் சோதிடம் கேட்போருக்கு ஆழமாகப் பார்க்காமலே பலவித கேள்விகளுக்கும் பலன் கூறும் நிலை ஆகியன கூடாது; பலன் கேட்போரின் மனத்திலுள்ள பயத்தைப் போக்குவதற்குப் பெரிதும் உதவி செய்து, பிற்காலத்தில் நம்பிக்கையுடனும், துணிவுடனும் வாழ்வதற்கான உறுதியை ஏற்படுத்தக் கூடியவராய் சோதிடர் இருத்தல் வேண்டும். தவறான அறிவுரை, தொழில் முடக்கம், மண முறிவு, வில்லங்கம், நோய், பகை, தற்கொலை இவற்றை ஏற்படுத்தி

விடும். கணக்கு, பொறியியல், அறிவியல் முதலியவற்றில் உயர் கல்வி கற்றோர் சோதிட அறிவைப் பெறும் போது அவர்கள் பக்குவம் பெற்ற சோதிடராக மிகுந்த வாய்ப்புண்டு.

அறிவீனர், அகந்தை உடையோர், வீண்வாதம் செய்பவர், குதர்க்கம் பேசி வம்புச் சண்டைக்கு இழுப்பவர் முதலியோருக்குச் சோதிடம் சொல்லக் கூடாது. சொல்ல நேரிட்டால் தாமரை இலைத் தண்ணீர் போல் பதில் சொல்ல வேண்டும். பொதுக் காரியங்களுக்கு, தர்ம காரியங்களுக்கு விரோதமாகப் பலன் சொல்லக் கூடாது. நல்லோர் மனம் நடுங்கும்படி கூறுதல் கூடாது. வலியச் சென்று வழக்கிடு பவருக்கு, பயிரைத் திருடும் தோட்டக் காவல்காரனுக்குக் கூறக்கூடாது. ஒருவரது சாதகத்தைப் பற்றி இன்னொருவர் அவருக்குத் தெரியாமல் கேட்பின் கூறக்கூடாது; நினைவில்லை என்பன போன்ற அடக்கமான பதில்களைக் கூற வேண்டும். அறியாமையால் ஒருவர் புலம்பினால் மௌனமாக இருந்து செயலைச் சாதிக்க வேண்டும்.

இன்று சோதிடம் பார்க்கின்ற அனைவரும் முறையான பயிற்சிக்குப் பின்னர் சோதிடம் பார்த்தலைத் தொழிலாக மேற்கொள்வது இல்லை. அவர்தம் சோதிடப் புலமையை அறிவதற்கான வாய்ப்புகள் மக்களுக்குக் கிடைப்பதில்லை. மேலோட்டமாகப் பார்த்துப் பலன் கூறுவோரையும், தங்களது அறியாமையால் தவறான பலன் கூறுவோரையும் கேட்போரின் மன உணர்வுகளைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் அலட்சியமாக முரண்பட்ட பலன்களைக் கூறுவோரையும் வழக்கில் காணமுடிகிறது. இத்தகைய நிலைகள் மாற வேண்டுமானால் சோதிடவியல் துறை முறையாகப் பல்கலைக் கழகங்கள் வாயிலாகப் பயிற்று விக்கப்பட வேண்டும். இதனால் முழுமையான வெற்றி கிட்டாவிடினும் ‘சோதிடத் தொழில்’ ஒரு வரன் முறைப்படுத்தப்பட்ட நிலையை எட்டும். இன்றும் மக்கள் படிக்காத அனுபவமிக்க நாட்டு வைத்தியர்களை அணுகி மருத்துவம் பார்த்துக் கொண்டிருப்பினும், ‘பட்டம் பெற்ற மருத்துவர்’ சமுதாயத்தில் முக்கியப் பங்கு வகிப்பதை மறுத்தற்கியலாது. எனவே, சோதிடக் கல்வி முறைப் படுத்தப்படும்போது நாளடைவில் இதிலும் இந்நிலை உருவாகும்.

இன்று சோதிடம் கேட்போர் பெருகிக் கொண்டே வருகின்றனர். இத்தகு மக்களிடம் பலவித மனநிலை காணப்படுகின்றது. பெரும்பாலோர் ஏதாவது பிரச்சனைகளோடு வருகின்றனர். இதற்குமுன் சோதிடர் கூறிய பலன்களை இந்தச் சோதிடரும் கூறுகிறாரா என்று சரிபார்க்கவும் வருகின்றனர். சிலர் எதிர்கால விழிப்புணர்வுக்காக வருகின்றனர். இதற்குமுன் பார்த்த சோதிடர் மன நிறைவற்ற பலன்களைக் கூறியதால், நிறைவான பலனுக்காக மனம் ஏங்க அடுத்த சோதிடரை அணுகுகின்றனர்; தன்னுடைய நற்பலன்களை உடனிருக்கும் நண்பர் கேட்பதில் தாம் பெருமைப்படுவதற்காகவும் வருகின்றனர்; அரைகுறை சோதிடம் தெரிந்து, சோதிடரை எடை போடவும் வருகின்றனர்.

எதற்கெடுத்தாலும் சோதிடம் கேட்டல்; கேட்ட ஒன்றையே பல சோதிடரிடம் கேட்டல்; அரசியல்வாதிகள் அரசியல் வாழ்க்கை நிலைக்குமா என்றறிய விரும்புதல், வியாபாரிகளும், செல்வந்தர்களும் மேலும் தங்களுக்குச் செல்வம் சேருமா, தொழில் வளருமா என அறிய முனைதல், இளைய தலைமுறையினர் படிப்பு, வேலை குறித்து வினவுதல், நோய்வாய்ப்பட்டவர்களின் நோய் குணமாதல் பற்றி அறிய எண்ணுதல்; ஏழை மற்றும் குடிசைவாழ் மக்கள் நல்லகாலம் வருமா எனக் கேட்டல் போன்ற செயல்கள் அன்றாட வாழ்க்கையில் மக்களிடையே நிகழ்கின்றன.

இவை மட்டுமன்றி சோதிடத்தில் நம்பிக்கையற்றவர்கள் ஆணோ, பெண்ணோ திருமணம் ஆகாத போது சோதிடத்தின் உதவியை நாடும் நிலையும், நம்பிக்கையுள்ளவர்கள் சோதிடர் கூறுவது நமக்கு வருத்தத்தை உண்டாக்கும் என நினைத்துச் சோதிடத்தைப் புறக்கணிக்கும் நிலையும் காணப்படுகின்றன. சோதிடத்தில் நம்பிக்கையுண்டு என்பதைப் பிறர் அறிந்தால் இழிவு எனக் கருதிப் பிறர் அறியாமல் சோதிடம் பார்க்கும் மக்களும் உண்டு. இங்ஙனம் பல நிலைகளிலும் மக்கள் சோதிடத்தின்பால் ஈடுபாடு கொண்டுள்ளனர் என்பது புலப்படுகிறது.

வாழ்க்கையில் தோல்வியோ வேறு துன்பங்களோ இல்லாதவர்களும் சோதிடத்தை ஏற்றுக் கொண்டால் தங்களது சுய கௌரவத்திற்கு இழுக்கு என்று நினைப்பவர்களும்

சோதிடத்தில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றனர். "செவ்வாய்க்கும் யுரேனசுக்கும் அல்லது செவ்வாய்க்கும் புதனுக்கும் இடையில் தீய பார்வை ஏற்படுகின்ற சாதகத்தை உடையவர்களே, இவ்விதம் சோதிடத்தில் நம்பிக்கை யற்றவர்களாய் இருப்பர்."[7]

சாதகர் தன் வாழ்க்கையில் நடந்த, நடக்கப் போகும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் தெரிந்து கொள்ள முயற்சிப்பதால், சோதிடரும் வேறு வழியின்றி அவர்களை நிறைவுபடுத்தும் பொருட்டுச் சரியான பலன்களோடு சில கருதுகோள் களையும், சில மேலோட்டமான பதில்களையும் சேர்த்து விடுகின்றனர். காட்டாக செவ்வாய் தசாஎனில் (ஏழாண்டு) விபத்து, உடல்நிலை சரியில்லாமல் போக வாய்ப்பு எனப் பொதுப்பலன் கூறிவிடுவர். ஆழமாகப் பார்த்துக் கூறப் பல வழிமுறைகள் இருப்பினும் சோதிடர் அதுசமயம் கையாள விரும்புவதில்லை. எனவே அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியவற்றை மட்டும் அறிய முற்படின், சோதிடர் தமது அறிவைப் பயன்படுத்தி சரியான கருத்துகளைக் கூற முன்வருவார்.

ஒரு கேள்விக்கு ஒரு மணிநேரம் கணிப்புச் செய்து முடியும், முடியாது, நடக்கும், நடக்காது என்ற பதிலைச் சோதிடர் கூறின் அவரது உழைப்பை மக்கள் பொருட்படுத்துவதாக இல்லை. காட்டாக, பலனறியும் ஒரு கடினமுறை பின்வருமாறு அமைகின்றது. ஒரு கோள் ஓர் இராசியில் இருக்கும்போது அவ்விடத்திலிருந்து குறிப்பிட்ட சில இராசிகளையும் சில கோள்களையும் தன்வயப்படுத்தி. சிறிது நன்மையோ தீமையோ பயக்கக் கூடும். இப்பலன்களை அறிவதற்கு 'அஷ்டவர்க்கம்' போட்டு ஒவ்வோர் இராசியிலும் கிடைக்கும் பிந்துகளைக் கொண்டு பலன்களை அறிய வேண்டும். அதிக பிந்துவுள்ள இராசியில் அக்கோள் இருக்கும்போது நற்பலன் கிட்டும். 12 இராசிகளுக்கும் இவ்வாறு கிடைக்கும் பிந்துக்களின் எண் 337. தனித்தனியே சூரியன் முதல் சனி முடியவுள்ள ஏழு கோள்களுக்கும் அஷ்டவர்க்கம் காண்பது 'சர்வாஷ்டவர்க்கம்' எனப்படும். இதில் 25 பிந்துக்களுக்குக் குறைவாகவுள்ள இராசிகள் பொதுவாக நன்மை பயவா.

---

7. பிரஸன்ன சோதிடம், ப.22.

பிந்துக்கள் 30க்கு மேற்படின் உத்தமம். செவ்வாயின் அஷ்டவர்க்கத்தில் எந்த இராசியில் பிந்து சூனியமா யிருக்கிறதோ அந்த இராசியில் செவ்வாய் இருக்கின்ற போது சாதகனுக்கு எதிர்பாராத இடர், இரணச்சிகிச்சை முதலியவற்றைச் சொல்லுவார்.

இராசி, நட்சத்திரம் என்னவென்பதைப் பெரும்பாலான மக்கள் தெரிந்து வைத்துள்ளனர். இவர்களில் பலருக்கு இராசி வீட்டில்தான் சந்திரன் இருப்பான் என்றுகூடத் தெரியாது. சாதகத்தில் 'ல' என்று இருக்கும் இராசி வீடு இலக்னம் என்பதையும் ஒருசிலர் அறிந்து வைத்திருப்பர். பலர் இலக்னம் என்றுகூட ஒன்று உண்டா எனக் கேட்பர். எப்படியிருப்பினும் நாளிதழ், மாத இதழ் போன்றவற்றில் தம்முடைய நாள், வார, ஆண்டுப் பலனை அறிய ஆவலுடன் முற்படுகின்றனர். இவை தவிர, திதி, யோகம், கரணம், மாதம், நாள், தசா இவற்றிற்கும் பொதுப்பலன் இருப்பினும் இவற்றையறியப் பலர் முயல்வதில்லை. பலருக்கு தமக்கு என்ன தசா, புத்தி என்று தெரியாது. சிலர் அவ்வப்போது சோதிடரை அணுகிக் கேட்டு அறிவர். தசாபுத்தியை அறிபவர்களைக் காட்டிலும் குரு, சனி எப்படி இருக்கிறது, ஏழரைச்சனியா, அட்டமச் சனியா, குருபலம் உண்டா என்று அறிபவர்களே மிகுதி.

இழப்பு, ஏமாற்றம், எதிர்காலம் பற்றிய அச்சம் முதலியன ஏற்படும்போது சோதிடரை அணுகுகின்ற சூழ்நிலைகளில் மனஉறுதி குலைந்து மனக்கலக்கம் ஏற்படுவதால் அது சமயம் சோதிடர் கூறுவன பற்றி அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர். மேலும் மனித மூளை எளிதான காரணங்களை அடிப்படையிலேயே சிந்திக்க விரும்புகிறது. பெரும்பாலோருக்குச் சோதிடத்தின் அடிப்படையில் சிந்திக்கும்போது தான் மனித வாழ்க்கை பொருளுடையதாகத் தோன்றுகிறது. சோதிட நம்பிக்கையில்தான் அவர்கள் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனையை அணுகுகின்றனர். எனவே அவர்களால் சோதிட நம்பிக்கையைக் கைவிட முடியவில்லை. சோதிடம் பார்ப்பதால் ஓர் உளவியல் நிம்மதி, பாதுகாப்பு உணர்வு கிடைப்பதாக நினைக்கின்றனர். இளைஞர்களிடையே விரக்தி மனநிலை ஏற்பட்டுக் குழப்ப நிலை உருவாவதனாலும் சோதிடரை நாடுகின்றனர்.

தடைகளைத் தகர்த்து நல்வழி, நம்பிக்கை ஆகியவற்றை மக்களுக்கு ஊட்டவல்ல சோதிடர்களுக்கும், பெறப்பட்ட நம்பிக்கைகளை, காட்டப்பட்ட வழிகளை அறிந்து, சோதிட நம்பிக்கையைத் தங்கள் மனத்தில் பதித்து மனம் மாறாமல், தடுமாறாமல் நடைபோடும் மக்களுக்கும் இப்பகுதி ஒரு காட்டாய் அமைகிறது.

## சோதிடமும் முரண்பாடுகளும்

'இரண்டு மனிதர் சேர்ந்தபோது எண்ணம் வேறாகும்'' என்பது ஆய்வுநோக்கில் ஏற்புடைய ஒன்று. காலங்காட்டிகள் ஒன்றுக்கொன்று விநாடி வேறுபாடுகளைப் பெற்றிருப்பதும் அறிவியல் கண்டுபிடிப்பிலுள்ள வேறுபாடுகளே. சூரியன், சந்திரன் முதலிய கோள்கள் நிலவுலகில் தோன்றும் நேரம் கணிக்கப்படும் பொழுதே மாறுபாடுகள் வந்துவிடுகின்றன. இது மெய், மெய்யன்று என்று தீர்வு காண முடியாத கோட்பாட்டிலே தான் சோதிடப் பலன்கள் சொல்லப்படுகின்றன. அவ்வகையான கருத்து முரண்பாடுகளைத் தொகுத்துக் காண்போம்.

கருத்தறித்த நேரத்தைக் கொண்டு சாதகம் கணிக்க வேண்டும் எனச் சோதிட சாத்திரம் கூறுகிறது. முன்பு பெண்ணின் நாடி அசைவை வைத்து அதன் வழி கருத்தரித்த நேரம் அறியப்பட்டது. அது இயலாது என்பதால் குழந்தையின் தலைப்பகுதியில் முதன் முதலாக ஒளிபடும் நேரம், மூச்சுவிடத் தொடங்கிய நேரம், அழத்தொடங்கிய நேரம் ஆகியவற்றிலொரு நேரத்தை எடுத்துக் கொள்கின்றனர். மருத்துவ மனைகளில் நேரம் தவறாகக் கூறப்படுதல் உண்டு. ஆதலால் அவர்கள் சொல்லும் நேரத்தைக் கொண்டு கணிக்கும்போது பலன்களில் தவறு நேர வாய்ப்புண்டு.

அறுவைச் சிகிச்சையின் வழி வயிற்றைக் கிழித்து வெளிக் கொணரும் குழந்தைகளுக்குச் சரியான நேரம் கண்டு சாதகம் எழுதுவது கடினம். தாயின் வயிற்றைக் கீறிக் குழந்தையை வெளியே எடுக்கும்போது அதன்மீது வெளி ஒளி படும் விநாடியைக் குழந்தை பிறந்த நேரமாகக் கணக்கிடலாம். ஆயின் செயற்கை முறையில் கருத்தரிக்கப்பட்ட குழந்தை களுக்குச் சோதிடப் பலன் சரியாக அமையாது. ஏனெனில்

பிறப்புறுப்பு வழியாகப் பிறந்த குழந்தைகளுக்கே சோதிட சாத்திரம் என்கின்றன சோதிட நூல்கள். இது ஆய்வுக்குரியது.

இவ்வாறு குழந்தை பிறந்த நேரத்தைக் குறிப்பதில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அது மட்டுமன்றி மேற்சொன்ன முறைகளில் நேரத்தைக் குறிப்பதில் போதிய கவனம் செலுத்தாமல் தோராயமாகவே நேரத்தைக் குறிப்பதும் உண்டு. இது போன்ற காரணங்களும் சாதகத்தில் தவறு ஏற்பட வாய்ப்பை ஏற்படுத்தி விடுகின்றன.

பழங்கால சோதிடர்களும், நாட்டுப்புறச் சோதிடர்களும் கணிதம் செய்து எழுதிக் கொடுத்துள்ள சாதகங்களில் பெரும்பாலும், பிறந்த காலத்தில் சூரிய உதயம் கழித்து, சென்ன நாழிகை, விநாடி என்ற புள்ளி விபரம் போடப்பட்டிருக்கும். ஆனால் மணி, நிமிடம் ஆகியன இடம் பெற்றிருக்காது. சாதகர் பிறந்த நேரத்திற்கும், அன்றைய சூரிய உதயத்திற்குமுள்ள இடைவெளி கால மணி நிமிடத்தை 60ஆல் பெருக்கி 24ஆல் வகுத்தால்தான் பிறந்த நாழிகை, விநாடி ஆகியவற்றை அறிய முடியும். தோராயமான சூரிய உதயத்தைப் பயன்படுத்தும் சோதிடர் பிறந்த நாழிகையை மட்டும் போட்டுவிட்டு பிறந்த மணி நிமிடத்தை மறைத்து விடுவர். இதன் காரணமாக இவர்கள் செய்யும் தவறை யாரும் கண்டுபிடிக்க இயலாது. நாழிகை, விநாடி மட்டும் சாதகத்தில் குறிப்பிட்டு பிறந்த நேரம் எழுதப்படாத பல சாதகங்கள் இன்றும் நடைமுறையிலுள்ளன. எனவே இத்தகைய சாதகங்களில் சூரிய உதய காலம் துல்லியமாக இருக்காது. பிறந்த நேரம் இருந்து, பிறந்த நாழிகை, விநாடி குறிப்பிட்டு எழுதி இருந்தால் அது இரண்டும் சரிதானா என்று ஒப்பிட்டு உண்மையான நிலையை அறிய முடியும். சென்ன நாழிகை, விநாடி இல்லாமல் இருந்து பிறந்த நேரம் இருந்தால்கூட உண்மை நிலையை அறிய முடியும். இத்தகைய சாதகங்களில் உள்ள கணிதத் தவறையும் தசாவின் உடுமகா சென்ன கால இருப்பில் ஏற்பட்ட தவறையும் கண்டுபிடிக்க இயலாது.[8]

8. மாத ஜோதிடம், ஏ.எம்.பிள்ளை, பக்.1-25

அந்தக் காலத்தில் நாழிகை அடிப்படையில் நேரத்தை முடிவு செய்ய நாழிகைக் கடிகைகளைப் பலவிதமாக வைத்திருந்தனர். அதைக் கொண்டு குழந்தை பிறந்த நேரத்தைத் துல்லியமாகக் கணித்தனர். அப்போது கடிகார மணியை அப்படியே குழந்தை பிறந்த நேரமாக எடுத்துக்கொண்டு கணக்கீடு செய்யப்படுகிறது. கடிகார மணி என்பது இந்தியப் பொதுமணி, அதாவது 'ஸ்டேண்டர்ட் டைம்'. இது காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையும், பம்பாய் முதல் அஸ்ஸாம் வரையும் ஒரே மணியைத்தான் குறிப்பிடும். ஆனால் உண்மையில் ஒரு குழந்தையானது எத்தனையாவது ரேகாம்சத்தில் பிறந்துள்ளதோ அந்த ரோகாம்சப்படி சுதேச மணியைக் கண்டுபிடித்து அந்தச் சுதேச மணிப்படியும் அடுத்து அட்சாம்சத்துக்குரிய சூரிய உதய நேரத்தையும் கண்டு அந்த இரண்டின் அடிப்படை யிலும்தான் இலக்னம் கணக்கீடு செய்ய வேண்டும். இங்ஙனம் சுதேச மணியை அல்லது சூரிய உதயத்தைக் கணக்கீடு செய்யவில்லையென்றால் பிழையான இலக்னம், மற்றும் தசா இருப்பில் மாறுபாடு ஏற்படும். ஸ்டேண்டர்ட் டைம் மற்றும் சுதேச மணி மாறுபாட்டைக் கவனத்தில் கொள்ளாததால் தவறு நிகழ்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் நிர்வாக வசதியின் பொருட்டு அந்தந்த நாட்டுப் பொது நேரங்கள் பயன்படுத்தப் பெறுகின்றன. நாட்டுப் பொது நேரத்தை உள்ளூர் சராசரி நேரமாக மாற்றிக் கணித்துக் கொண்டு கிரக ஸ்புடக் கணிதம், இலக்னக் கணிதம் முதலியன செய்தல் வேண்டும்.

தொடக்க காலத்தில் தோன்றிய வான நூல்களில் வேறுபாடுகள் அமைந்து விட்டதால் அவற்றின் வழி தோன்றிய பஞ்சாங்கங்களிலும் இவ்வேறுபாடுகள் தோன்றி விட்டன. எனவே, சாதகம் பலரால் பலவிதமாக எழுதப்படும் நிலை ஏற்படுகிறது. இன்று மிகுதியும் பயன்படுத்தப் பெறும் வாக்கியப் பஞ்சாங்கம், திருக்கணிதப் பஞ்சாங்கம். இரண்டுமே துல்லியமானது என்று கூறமுடியாது. உண்மையான கணக்கீட்டிற்கு இரண்டுமே வித்தியாசப் படும். இன்றைய கோள்களின் நிலைகளைப் பார்த்து வானவியலில் ஏற்படும் மாறுதல்களுக்குத் தக்கவாறு, அறிவியல் கருவிகளை வைத்துக் கணிக்கும் முறையைத்

'திருக்கணிதம்' பின்பற்றுகிறது. எனவே உண்மையான கணக்கீட்டிற்கு அருகில் நிற்பது திருக்கணிதம். பல்வேறு மொழிகளில் இந்திய அரசு வெளியிடும் 'ராஷ்ட்ரிய பஞ்சாங்கம்' திருக்கணித அடிப்படையிலானது.

இருபத்தியேழு நட்சத்திரக் கூட்டங்கள் ஒன்பது கோள்களுக்கு மேலே வரும்போது பல ஒளி விலகல்களும், ஒளி முறிவுகளும், ஈர்ப்பு ஒளி முறிவுகளும் ஏற்படுகின்றன. அதனால் பல பஞ்சாங்கங்களில் பாதசார வேறுபாடுகள் உள்ளன. பஞ்சாங்க வேறுபாடு காரணமாய் ஏற்படும் 'திதி' மாறுபாடு பண்டிகைகள் விரதங்கள் ஆகியவற்றில் மாறுபாட்டை ஏற்படுத்துகிறது. நட்சத்திரங்களின் கால அளவு மாறுபாட்டால் தசா, இருப்பு, சில நேரங்களில் பிறந்த நட்சத்திரம், இராசிகூட மாறிவிடுகின்றன. கழிக்க வேண்டிய அயனாம்சமும் பலவிதமாகக் கணக்கிடப்படுகிறது. இங்ஙனம் தசா, இருப்பு, பாதசார அயனாம்ச, வேறுபாடுகளால் பலன்களும் மாறுபடுகின்றன. திருக்கணிதப் பஞ்சாங்கத்தைப் பின்பற்றுவதால் ஓரளவு பிழைகள் குறையுமெனச் சோதிடரில் பலரும் கருதுகின்றனர். அனைத்துச் சோதிடரும் ஒரே விதமான முறையைப் பயன்படுத்தும்போது பலன்களைக் கூறுவதில் கணிப்பதில் தோன்றும் பல்வேறு வேறுபாடுகள் நீங்க வாய்ப்புண்டு.

காலப்போக்கில் சில கோள்களின் அசைவுகள் இயற்கையாகவே மாறுபடக்கூடிய நிலை ஏற்படலாம். பழைய கோள்களின் அசைவுகளுக்கு ஏற்ற சோதிட விதிகளைப் பின்பற்றுவதால் சோதிடப் பலன்களில் சில பிழைகள் ஏற்படுகின்றன. சோதிட விதிகளை மற்ற துறைகளைப்போன்று எளிதில் சோதித்தறிதல் இயலாது. ஏனெனில் கோள்கள் மனிதனுடைய ஆதிக்கத்திலோ கட்டுப்பாட்டிலோ இல்லை. எனவே ஒரு குறிப்பிட்ட கோளின் அசைவால் ஒரு தனி மனித வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பலா பலன்களைச் சோதித்தறிய ஒருவர் தன் வாழ்நாள் முழுதும் முழுமையாக ஆய்வு செய்தாலும் சிறிதளவு வாய்ப்புக் கூடக் கிட்டாமல் போய்விடக்கூடும்.

ஆகையால் குறைவான எண்ணிக்கைகளையுடைய ஒருசில நிகழ்ச்சிகளின் அடிப்படையில் ஏற்படுத்துகின்ற 'பொதுவிதிகள்' இதே விதமான கோள் நிலையையுடைய சில நிகழ்ச்சிகளுக்கு மட்டும் ஒத்து வருகின்றன. சிலவற்றுக்கு ஒத்து வருவதில்லை. ஏனெனில் இவ்விதிகள் போதுமான எண்ணிக்கைகளையுடைய பல நிகழ்ச்சிகளைச் சோதித்து ஏற்படுத்தியது அன்று. பல நிகழ்ச்சிகளைச் சோதித்துக் கூறிய விதியாக இருக்குமேயானால் இவ்விதமாகத் தவறிப் போவதற்கு வாய்ப்பு ஏற்படாது. போதுமான பல நிகழ்ச்சிகளைச் சோதித்து நம் முன்னோர் ஏற்படுத்தியுள்ள சோதிட விதிகள் பெரும்பாலும் உண்மையாகவே இருந்து வருகின்றன. அத்தகைய சரியான முறை கையாளப் படுமேயானால், ஒத்து வராத விதிகள் நாளடைவில் மறைந்துபோக வாய்ப்பேற்படும்.

வான நூல்களிலுள்ள வேறுபாடுகளைப் போலவே சோதிடப் பலன்களைக் கூறும் மூலநூல்களாகிய பல கிரந்த நூல்களிலும், பல தமிழ் நூல்களிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. தமிழில் தோன்றிய மொழிபெயர்ப்பு நூல்களிலும் மொழிபெயர்ப்பின் குறைபாட்டால் பிழைகள் நிகழ்ந்துள்ளன. தொடக்க காலத்தில் சோதிட விதிகளைப் பயன்படுத்திச் சோதிடப்பலன் கூறுவதில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு புதிய பல கருத்துகளைத் தங்களது நூல்களில் அமைத்துக் காட்டிவிட்டனர். அதேபோல் பிற்காலச் சோதிடர்களில் சிலர் தீய கோள்களின் சேர்க்கையால் நன்மை விளைவதாகக் கருதுகின்றனர். தீய கோள்களின் சேர்க்கை தீமை பயக்கும் என்பது சோதிட விதி. பொதுவாகக் குரு நன்மை பயக்கக்கூடிய கோள் என்ற அளவில் சோதிடர் குருவை எடுத்துக் கொண்டு அதன்பின் அதன் நிலையை ஆராய்வர். ஆயின் குரு தீமைக் கோள் என்ற அளவில் எடுக்கும் சோதிடர் தங்கள் அனுபவமே இதற்குக் காரணம் என்கின்றனர். இந்த இரண்டு வகை நிலைக்கும் அடிப்படைக் காரணம் கோள்களின் அமைப்புகளைச் சரியாகக் கணிக்க இயலாமையே. எனவே குறிப்பிட்ட சில கோள்களின் நிலையால் உண்டாகக்கூடிய பலன் தொடர்பாக அமையும் நியமவிதி பல நூல்களில் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவும், வேறுபாடாகவும் கொடுக்கப்படுகிறது.

சோதிடத்தைப் படித்தால் மட்டும் தெரிந்து கொள்ள முடியாமல் குரு, சீடர் வழியாக இரகசியமாக அறிந்து கொள்ளக்கூடிய செய்திகள் நிறைய இருக்கின்றன. அவை சோதிட நூல்களில் இலைமறை காயாகச் சொல்லப் பட்டிருக்கின்றன. சோதிடத்தில் கையாளப்படும் மறைபொருட் சொற்கள், கடினச் சொற்கள் ஆகியவையும், தீயவை நிகழ்வதை மறைத்துச் சொல்லும் வழக்காலும் சோதிடப் பலன் கூறுவதில் தவறுகளை ஏற்படுத்தி விடுகின்றன. இச்சொற்கள் வெளிப்படையாக ஒரு பொருளையும் உட்பொருளாக ஒரு பொருளையும் கொண்டு திகழ்கின்றன. ‘அப்பால் மரணம்’ என்ற தொடருக்குப் பிறகு மரணம் ஏற்படும் என்ற பொருள் வெளிப்படையாக அமைகிறது. அதுவே கையாளவும் படுகிறது. ஆனால் மறை பொருளாகவும் கடினச் சொல்லாகவும் அமையும் ‘அப்பு’ என்ற சொல் ‘நீரால் மரணம்’ என்பதைக் குறிக்கிறது.

பழங்காலச் சோதிட நூல்கள் பல நம்மிடையே இருந்தும் அவை இப்போது மிகப் பழமை அடைந்து விட்டதால் பயன் தருவதில் தவறி விடுகின்றன. அவை கையாளப்பட்டு வந்த முறைகள் தெளிவற்றுச் சிக்கலடைந்துவிட்டன.

ஒரு கோளின் வலிமை ஆறு வகையாகவும், இருபத்தி நான்கு உட்பிரிவுகளாகவும் அமையும். ஒரு சிறு நிகழ்வை முறையாகக் கணித்தறிய இருபது முதல் இருபத்தைந்து நாட்கள் வரை தேவைப்படுகின்றன. இரண்டு கோள்களுக்கு மேற்பட்ட கோள்களின் கூட்டுக் கோள் யோகம் எவ்வளவு தூரம் கணக்கிட்டுப் பார்த்த போதிலும் கிடைத்த முடிவுகளில் இது அதிகம் வலிவுடையதாக இருக்கக் கூடும் என்ற கருதுகோளிற்கு வரவேண்டிய நிலையையே பல சமயம் ஏற்படுத்துகிறது. அது தவறவும் வாய்ப்புண்டு. கணிதம் தெரியாமை, வருவாய்க் குறைவு, உடனுக்குடன் பலன் கூற வேண்டிய கட்டாயம் முதலியவற்றால் இவ்வாழ்ந்த கணிப்பு முறை பெரும்பாலும் கையாளப்படுவதில்லை.

கோள்கள் தங்களுடைய சுழற்சிப் பாதையில் சுற்றும் போது ஏற்படக்கூடிய கண்ணுக்குத் தெரியாத வேறுபாடுகள் தான் வக்கிரம், அஸ்தமனம், வக்கிர அஸ்தமனம் என்பவை. இவற்றைச் சரியான முறையில் கணக்கீட்டிற்கு எடுத்துக்

கொள்ளாமையாலும் சாதகக் குறிப்பில் சொல்லப்படாமலே விட்டுவிடுவதாலும் பலன்களில் மாற்றங்களை ஏற்படுத்தி விடுகின்றன.

சோதிடத்தை மேற்போக்கான முறையில் விளங்கிக் கொண்டிருக்கும் சோதிடர் இராசியினையே பாவகமாக எண்ணிக் கொண்டு பலன் கூறுவர். இதற்கு 'இராசி பாவகம்' என்று பெயர். பாவக அட்டவணை என்னும் நொடிக் கணித நூலை வைத்துக் கொண்டு பாவக அட்டவணையில் கோள்களை அமைப்பதற்குக் கணக்கிடுமுறை கூடுதலான நேரத்தை எடுப்பதால், சோதிடர் பலர் இராசி பாவக முறையையே பயன்படுத்துகின்றனர். சோதிடப் பலன் கூறுவதற்கு இராசிச்சக்கரம் பொதுவானது. பாவகச் சக்கரம் சிறப்பானது. எனவே இராசிகளையே பாவகமாக எடுப்பதால் சோதிடப் பலன்கள் பிழைபடுகின்றன. மேலும் பலன் கணிப்பதற்குப் பொதுப்பலன்களை மட்டுமன்றிச் சிறப்புப் பலன்களையும் விதிவிலக்குகளையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

மூல நூல்களில் கொடுக்கப்பட்டுள்ள பல வழிமுறைகள் பின்பற்றப் படாமல் விடப்படுகின்றன; விரிவான கணிதம் போடாமலே பலன் கூறப்படுகிறது. தசவர்க்கம், பாவஸ்புடம், அஷ்டவர்க்கம், சட்பலம், குளிகாதி நால்வர், தூமாதி ஐவர், காலசக்கரதசா, பஞ்ச மகாதசா, சமயம், மண்டலம், திதி சூன்யம், கிரக அவஸ்தை, தியாச்சியம் போன்ற பலவகைக் கணிதங்களும் காணாமல் போய், இராசி, நவாம்சம், பாதசாரம், உடுமகாதசா அளவுக்குச் சுருங்கிய சோதிடம், தற்போதைய அவசரமிக்க நடைமுறை வாழ்க்கையில் இராசிக் கட்டம் என்ற அளவில், தசாபுத்தி கூடத் தேவையில்லை என்ற வகையில் சுருங்கி விட்டது. இராசிக்கட்டம் மட்டுமே போதுமானது என்றால் மூலநூல்களில் எதற்காக இத்தனை கணிதங்கள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

பராசர ஓரை, வராகர் ஓரை, பலதீபிகை, ஸ்ரீபதிபத்ததி போன்ற மூலநூல்களில் கணிதங்கள் மிக விரிவாகத் தரப்பட்டுள்ளன. வராகமிகிரரின் பிருகத் ஜாதகத்தின் உரையான ஸ்ரீபதிபத்ததி மற்றும் மகேந்திரேசுவரரின் பல தீபிகையில் (3ஆவது அத்தியாயம் வர்க்க விபாகாத்தியாயம்

நான்காவது சட்பல திருபாணாத்தியாயம், இருபத்தி நான்காவது காலச் சக்கிராதி தசாத்யாயம், 23ஆவது அஷ்டவர்காத்யாயம் ஆகியவற்றில்) கணித விளக்கங்கள் தெளிவாக உள்ளன.

இராகு கேதுக்களுக்கு ஆட்சி வீடுகள் கிடையாது. அவை சாதகத்தில் எந்த வீட்டில் இருக்கிறதோ அவையே அவற்றிற்குரிய ஆட்சி வீடுகள் என்று பல சோதிட நூல்கள் கூறுகின்றன. ஆயின் இராகுவிற்கு இடபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், மகரம், கும்பம் ஆகியவற்றில் ஒன்று ஆட்சி வீடாகக் கூறப்படுகின்றது. கேதுவிற்கு இடபம், துலாம், விருச்சிகம், மகரம், மீனம் ஆகியவற்றின் ஒன்று ஆட்சி வீடாகக் கூறப்படுகிறது. இந்தக் கருத்து வேறுபாடு பலன் கூறுவதில் தவறை ஏற்படுத்துகிறது.

28ஆவது நட்சத்திரமான 'அபிசித்து' முன்பு சோதிடக் கணக்கில் இருந்தது எனச் சோதிட நூல்களில் குறிப்பு காணப்படுகிறது. தற்போது 27 ஆக்கப்படும்போது தவறு நிகழ வாய்ப்பு உள்ளது. 13 ஆவது இராசி மண்டலம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பினும் கணக்கில் சேர்த்துக் கொள்ளாததால் பலனில் தவறுகள் நேரலாம். பூப்பு அடையும் சரியான நாளையும் நேரத்தையும் சங்கடப்பட்டுக் கொண்டும், அறியாமையாலும் பெண் குழந்தைகள் சொல்வதில்லை. எனவே பூப்புச் சாதகங்கள் தவறாகிவிடக் கூடும். இன்றும் பல தவறான பூப்புச் சாதகத்திற்கே சோதிடம் பார்க்கப்படுகிறது.

முன்பெல்லாம் பூமியைச் சுற்றிலும் இடி மின்னலால் தோற்றுவிக்கக் கூடிய மின்விசை எப்போதாவது ஒருமுறை ஆங்காங்கு ஏற்பட்டு விலகுவதாக இருந்தது. அதனால் கோள்களின் இயக்கக் கதிர் வீச்சு மக்களைச் சரிவர அடைந்து அவர்களுக்கு உரிய நல்லது தீயது போன்ற பலன்களைக் கொடுத்து வந்தன. ஆனால் 35 ஆண்டுகளாகப் பூமிக்கு அருகாமையில், பூமியைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான ஹைவோல்ட் மின்கதிர் இயக்கத்துடன் சுற்றிக் கொண்டே வருகின்றன. இதனால் மின் காந்த அலை வரிசைகள் பூமியைத் திரையிட்டு மறைப்பதைப் போல, வலை பின்னியது போலச் செயல்பட்டு வருகின்றன.

மக்களை வந்து சேரக்கூடிய 'கோள் இயக்கச் சக்திகள்' மின் காந்த அலைவரிசைகளால் சிதறடிக்கப்பட்டு, அந்தக் கோள் தரக்கூடிய பலன்கள் நடைபெறாமல் தடை செய்யப்படுகிறது. மின் அலை வரிசை என்ற செயற்கைச் சக்திகளின் விளைவால் சோதிடம் பொய்யாகிக் கொண்டே வருகிறது. தற்போது வானவெளியிலுள்ள செயற்கைக் கோள்களை எல்லாம் அகற்றிவிட்டால் சோதிடம் பொய்யாகாமல் நடைபெறும். ஆனால் செயற்கைக் கோள்களை அகற்ற முடியாது. ஆகவே சோதிடம் தனது உண்மைகளை இழக்கத்தான் வேண்டியிருக்கிறது.[9]

பிரசன்ன முறையில் கேள்வி கேட்கும் நேரத்திற்கு இலக்னம் கண்டறிந்து பிறகு கோள் நிலைகளின்படி பதிலளிக்கப் பெறுகின்றது. இதில் பல கேள்விகளுக்குப் பலன் மிகச் சரியாக அமைகின்றன. இங்ஙனம் பலன் சரியாக அமைவதால் சிலவற்றில் மட்டும் ஏன் தவறு நேருகிறது எனச் சிந்திக்க வேண்டியுள்ளது. கிருஷ்ணமூர்த்தி பத்ததியின் 'பிரசன்ன சோதிட நூலை'ப் பயின்று இம்முறையில் பலரும் பலனறிகின்றனர். எனவே நூலைப் பயிலும்பொழுது பொருளைத் தவறாகப் புரிந்து கொள்ள, புரிந்ததைப் பயன்படுத்தும் போது கணக்கீட்டில் தவறு செய்ய வாய்ப்பு உள்ளது. பத்ததி முறையை மேலும் செம்மைப்படுத்தி முழுமைப்படுத்த வேண்டிய நிலையும் காரணமாகலாம். இவை தவறுக்குக் காரணமாவதாலும், கேள்வி கேட்கும் நேரத்திற்குக் கணிக்கப்பட்ட நிம் சாதகம் சரியான பலன்களைப் பெரும்பாலும் தருவதாலும் குழந்தை பிறந்த நேரத்திற்கு அறியும் சாதகப் பலன்களும் சரியாகவே அமையும். தவறு என்பது பிறந்த நேரத்தைக் குறிப்பதில், சாதகம் கணிப்பதில், பலன் கூறுவதில் ஏற்படும் குறைபாடுகளே.

திருமணப் பொருத்தம் பார்க்கும்போது ஒரு சோதிடர் பொருத்தம் வருகிறது என்றும், இன்னொருவர் வரவில்லை என்றும் கூறி மக்களைக் குழப்பும் நிலை ஒருபுறம் இருக்கிறது. இந்நிலையில் திருமணப் பொருத்தம், மணமக்களின் சாதகம் இவற்றையெல்லாம் பார்த்துத் திருமணம் செய்ய முயன்றால்

9. மாத ஜோதிடம், ஏ.எம். பிள்ளை, பக்.17, 18.

நடைமுறையில் இன்று நடக்கும் பல திருமணங்கள் நடைபெற இயலாத நிலையை எட்டும். எனவே, பொருத்தமற்ற திருமணங்கள்கூடப் பொருத்தமான திருமணம் என நம்ப வைக்கப்பட்டு நடத்தப் பெறுவதால்தான் பல திருமணங்கள் தோல்வியைத் தழுவுகின்றனவா, சில சாதக அமைப்புகளின்படி திருமண வாழ்வு எப்படியும் தோல்வியைத் தழுவத்தான் வேண்டுமென்பதால் சோதிடர்கள் திருமணத்திற்கு இசைவு தெரிவித்து விடுகின்றனரா, பல சோதிடர்கள் 'பொருத்தம் வரவில்லை; சாமியிடம் பூக்கேட்டுச் செய்து கொள்ளுங்கள்' என்று கூறுவதும் இதனால்தானா என்பன போன்ற சிக்கல்களும் சோதிடம் பொய்யாவதற்குக் காரணமாகின்றன.

'நாட்டில் விதவைகள் இருப்பதாலேயே கடவுளும் சாத்திரங்களும் சோதிடமும் பொய்யானவை என்று உறுதியாக்கப்படுகின்றன'[10] என்ற பெரியார் கருத்தைச் சோதிட எதிர்ப்பாகக் கொள்ள இயலாது. சோதிடம் ஒருவனுடைய வாழ்வின் நிகழ்வைக் கூற, துன்பத்தைக் குறைக்க உதவுவதாகவே அமைகிறது. ஒருவரது இறப்பு நிகழாமல் போகப் பரிகாரங்களைக் கூறுகின்றதே ஒழிய இறப்பைத் தடுத்து விடுமெனச் சோதிட நூல் அறுதியிட்டுக் கூறவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, "இன்று சோதிடம் முழுமையற்றிருக்கின்றது. நம் முனிவர்களின் கண்டுபிடிப்புகள் அனைத்தையும் அறிந்தோர் எவருமிருப்பதாகத் தெரிய வில்லை. அத்துடன் சரியான சோதிட அறிவைக் கற்பிக்கக் கூடிய குருவும் கிடைக்கும் வாய்ப்பு இல்லை. இன்று கிடைத்துள்ளவை அனைத்தும் அவர்கள் வைத்துப் போன ஒரு சில பகுதிகளே.[11] எனவே ஒரே தன்மை வாய்ந்த கொள்கை முறையினை வகுத்து அவற்றை முறையாக மாணவர்களுக்குக் கற்பித்து அவர்களை ஊக்கப்படுத்துவது இன்றியமையாததாகும்.

காலத்தடுமாற்றம், கருத்து முரண்பாடு, எண்ணியதை ஊன்றியும், மிகைப்படுத்தியும் சொல்லும் ஆர்வம், மக்களைக் கவரப் புனைந்து சொல்லும் கருத்து, போதிய

---

10. குடியரசு, 17-10-1929. 11. பிரஸன்ன சோதிடம், ப.33.

சோதிடக் கணித அறிவின்றிச் சொல்லப்படும் ஆரூடம் என்பனவற்றையெல்லாம் அனுபவித்த மக்களுள் பலர் சோதிடம் பொய்யென்ற நிலைக்கு வந்துவிட்ட நிலையினைப் பார்க்க முடிகின்றது; பொய்யா, மெய்யா என்பது தேவையற்ற ஆய்வாகக்கூட இருக்கலாம். ஆனால் மக்கள் வாழ்க்கையின் இடர்ப்பாடுகளோடு சோதிடம் கலந்திருப் பதால் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயநிலை உருவாகு கின்றது.

### பயன்

அறநெறி இலக்கியங்கள் மனித நேயத்தை, வாழ்க்கை முறையைத் தன் பயன்பாடாக வெளிப்படுத்துகின்றன. பெருங்காப்பியங்கள் மனித வாழ்க்கை அமைய வேண்டிய நெறிமுறைகளை வகுத்துக் கூறுவதன் வழி தன்பயனை வெளிப்படுத்துகின்றன. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று தமிழ் மறை கூறினாலும் முன்வினைப் பயன் என்பது அவ்வவ் உயிருக்குத் தகுந்தாற்போலச் செயல்படும் என்பது இந்துமதக் கோட்பாடு. அவ்வகையில் முன்வினைப் பயனைத் தெளிந்து தெரிந்து கொண்டு தாம்நடக்க வேண்டிய முறைகளைப் பயன்பாடாக வெளிப்படுத்துவது சோதிடம். மேலும் ஒளிமயமான இடத்தைத் தேடுவதே மனிதனின் வாழ்க்கை. இந்தத் தேடலை நிறைவு செய்யவும், நம்பிக்கையூட்டவும் ஏற்படுத்தப்பட்ட இக்கலையின் பயன்பாடுகளை விளக்குவதே இப்பகுதி.

சோதிடக்கலை இயற்கை நிகழ்வுகளால் ஏற்படும் நன்மைகளை மிகுவித்து, தீமைகளைக் குறைத்து மனித வாழ்வை மேம்பாடு அடையச் செய்யும் கலையாகும். இயற்கை விதியை மதியால் மாற்றுவது மனித முயற்சி. அதற்கு மிகமிகப் பயன்படுவது இக்கலை. இதன்வழி எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்பதைக் கோடிட்டுக் காட்ட முடிகின்றது.

அறிவியல் அடிப்படையிலும் கலை அடிப்படையிலும் அமைந்த சோதிடம் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் மட்டுமன்றி ஒவ்வோர் அறிவியல் துறைக்கும் பயன்படக் கூடியது. காட்டாக, ஒரு மனிதனுக்கு வரக்கூடிய நோய்

குணமாகும் காலத்தைச் சோதிடத்தின்வழி அறியும்போது அது மருத்துவ சோதிடமாகின்றது. மழை, பூகம்பம், பஞ்சம் பற்றிக் கூறும்போது வானியல் சோதிடமாகிறது. எனவே சோதிடத்தால் ஒவ்வொரு துறையும் தங்களது பணியை எளிதாக்கிக் கொள்ள முடியும்.

நமக்குள்ள முன்னேற்ற வாய்ப்புகளை முன்கூட்டித் தெரிந்து கொள்வதால் வாழ்க்கையில் ஆர்வம் ஏற்படுகின்றது. குறைபாடுகள், இடர்ப்பாடுகள் இருப்பின் பரிகார முறைகளால் அவற்றிலிருந்து ஓரளவு விடுபட வாய்ப்பு இருக்கிறது. உளவியல் முறையிலான மன ஆறுதலைப் பெறமுடிகிறது. இறைவனைத் துதிப்பதால் தோடம் நீங்குகிறது என்ற நம்பிக்கையைத் தருகிறது. முயன்றால் துன்பத்திலிருந்து விடுபட, துன்பத்தைக் குறைக்க முடியும் என்று நம்புவதால் மன நிறைவுக்குச் சோதிடம் வழிவகுக்கின்றது.

முன்கூட்டி அறிந்த பின்பு அப்படியே நடக்கட்டும் என்று விட்டுவிட்டால் அது வீண் முயற்சி. ஆனால் நடக்கப் போகும் ஒரு நிகழ்ச்சியால் ஏற்படப் போகும் விபரீதங்களையும், கஷ்ட நஷ்டங்களையும் தவிர்ப்பதற்கு என்ன வழி என்று காண்பது ஓர் அறிவு பூர்வமான ஆக்கபூர்வமான முயற்சியாகும். எதிர்காலத்தில் ஏற்படப் போகும் தொல்லைகளிலிருந்து முற்றிலும் விடுபட முடியா விட்டாலும் பெருமளவு பாதிப்பு ஏற்படாமல் சோதிடத்தால் காத்துக் கொள்ள இயலும். இதுதான் நமக்கு அமைந்தது என்ற தெளிவை, மனோதிடத்தை, வன்மையைப் பெறமுடியும். சாதகத்தில் நற்பலன் இருக்குமெனில் முயற்சியும் ஊக்கமும் ஏற்படும். பலன்தான் கிடைக்குமே என்று சோம்பேறியாய் இருப்பின் அப்பலன் கிட்டாமல் போகலாம். அதேபோல் தீய பலன் எனில் மனம் தளர்ந்து போகாமல் இது நடக்காமல் போகவும் வாய்ப்புண்டு எனத் தன்னம்பிக்கையுடன் செயல்படலாம். இடர், கவலை ஏற்படும் காலத்தினை உணர்ந்து அதற்கேற்ற வகையில் மனநிலையை நல்வழியில் செலுத்தினால் தீய விளைவுகள் குறையும். வழி தெரியாதிருப்பின் துன்பம் குறைய வாய்ப்பு இல்லாமல் முழுமையாகத் துன்பத்தை அனுபவித்திருப்போம். எனவே சோதிடம் நம் துன்பத்தைக் குறைத்திருக்கிறது என்ற நிறைவையும் பெறலாம்.

மனிதன் தன் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், துன்பங்களையும், இடையூறுகளையும் சந்திக்க நேருகிறது. இத்தகு நேரத்தில் உடனடி முடிவுகளை எடுக்காமல் சாதகத்தில் அமைந்த குறை, நிறைகளுக்கு ஏற்பச் சோதிடரின் உதவியுடன் செயல் புரிந்தால் மனிதனுடைய வாழ்க்கையில் மேம்பட்ட நிலை நேரும். சாதகத்தைக் கொண்டு சோதிடர் குறிப்பிடும் நல்ல, தீய காலங்களை மனத்தில் கொண்டு, அன்றைய காலக்கட்டத்தில் சுற்றுச் சூழலுக்கு ஏற்ப எடுக்கப்படும் முடிவுகள் மூலம் வாழ்வில் சிறப்பினையும், மகிழ்ச்சியினையும் அடைய முடியும்.

ஒருவருக்குக் (இலக்னத்துக்கு) கெட்டகிரகமாக தசாவுக்குரிய கோள் நடந்தால், கூட்டாளி, சகோதரர், தந்தை, தாய், புத்திரர் ஆகிய (7,3,11,9,4,5) ஆதிபத்தியங்களுக்குத் தசாவுக்குரியது நல்லதா என்று கணித்து அவர் ஒதுங்கிக்கொண்டு மற்றவர்கள் வழி சிலகாலம் செய்யப்படலாம்.

மாந்தீரிகம், தாந்தீரிகம், மையோட்டம், நரபலி என்று சொல்லப்படும் பரிகாரங்களை நம்பவேண்டியதில்லை என்பதை உணர்ந்தால் சோதிடப் பகுத்தறிவு வளரும்.

ஒருவனுக்கு இன்ன தொழில் சிறக்குமென்று தெரிந்தால் அவர்களைச் சிறுவயது முதலே அந்தத் தொழிலில் பயிற்சி செய்வித்துத் தேர்ச்சி அடையச் செய்யலாம். குண நலன்களுக்கு ஏற்றவாறு சிறந்ததாக அமையும் கல்வியினை எடுத்துச் சொல்லலாம். செய்யும் தொழில் சிறப்பு இல்லையென்றால் அதில் மாற்றம் அல்லது வேறு தொழில் ஏற்படுத்திக் கொள்ளலாம். எச்சரிக்கையுடன், விழிப்புணர்வுடன், நிதானத்துடன் செயல்படலாம். நற்பலன் வரக்கூடிய நேரம் எது என அறிந்து அதுபோது முழு முயற்சியோடு செயல்படின் வெற்றி வாய்ப்புகளை மிகுவிக்கலாம். ஒருவன் எவ்வளவு மேன்மையடைய முடியும் எனத் தெரிந்து கொள்ள முடிவதால் ஆசையை ஒரு வரையறைக்குட்படுத்த இயலும். வியாபாரம் செய்து வருபவர் கொடிய தசாவில் முதலீட்டைக் குறைக்கலாம்.

சரியான நேரத்தில் செய்யப்படும் செயல்கள் நற்பலனையடைய முடியும். இத்தகைய செயல்களுக்கு ஏற்ற

காலங்களைக் குறிப்பிட்டுக் காட்டுவது சோதிடம். பாவங்களைப் போக்கிக் கொள்ளவும், பூர்வ புண்ணியங்களை அறிந்து விருத்தி செய்து கொள்ளவும் இது உதவுகிறது.

ஒருவனுக்கு எவ்வளவு துன்பங்கள் நேரிடினும் அவற்றிடையே மனத்திற்கு ஆறுதல் அளிக்கத்தக்க பல வாய்ப்புகள் இருந்துகொண்டே இருக்கும். இவற்றையெல்லாம் மனிதன் நன்கு உணரும் போது சோதிடத்தின்வழி தன் வாழ்வின் பல செயல்களை முன்கூட்டி உணர்ந்து அதன்படி நடக்க முயல்வான். குறித்த தீமை நம்மை ஒன்றும் செய்து விடாது என்ற உள்ளத் துணிவு ஏற்படின் அதனால் நன்மையோ, ஓரளவு நன்மையோ, துன்பக் குறையோ ஏற்படலாம். எனவே தன்னைத்தான் அறிந்தவர்களுக்குத் துன்பம் ஒரு துன்பமில்லை; என்றும் மகிழ்ச்சி குடி கொண்டிருக்கும். மனநிம்மதியிருக்கும்; சோதிடப் பலன்களில் உள்ள கெட்ட நிகழ்ச்சிகள் ஒருக் காலும் இவர்களைப் பாதித்துவிட முடியாது. சோதிட விதிகளைக் கற்றுக் கொண்டால் சோதிடத்தைச் சொல்லி ஏமாற்றுபவர்களிட மிருந்து தப்பித்து ஏமாறாமல் செயல்படலாம். ‘தலை எழுத்து’ என்று சோர்ந்து இராமல் இயற்கையை அனுசரித்துச் செயல்படலாம்.

ஒழுக்க நெறியில், கடமை தவறாது வாழ்பவரின் தலையெழுத்து எவ்வளவு கெடுதலாக இருப்பினும் ஓரளவாவது நற்பலனை அடைய முடியுமென்பது திண்ணம். தனக்கு நல்லதே நடக்குமென்ற மனவலிமையுள்ளவனைத் தீயகோள்களின் கதிர் வீச்சு மிகுதியாகப் பாதிக்காது. மனவலிமை மிகும்போது தலையில் சுரக்கும் ஒரு சுரப்பி தீய கோள்களின் தீமையைத் தணிக்கிறது.

இவ்வகையில் சமுதாயத்தில் மக்களுக்கு ஏற்படும் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களையும் கருத்திற்கு எட்டாத ஊழ்வினை ஆளுமைகளையும் சோதிடம் எடுத்துக் காட்டி, வழிகாட்டும் கலங்கரை விளக்காக அமைகிறது.

## சோதிடத் துறையில் ஆய்வின் தேவை

சோதிடம் மக்களது வாழ்க்கையில் ஒன்றிவிட்ட நீக்க முடியாத கலை என்பதையும், சமுதாயத்தில் இத்துறையின்

விளைவுகளையும் இதுகாறும் கண்டோம். இப்படி நீக்கமற நிறைந்து, மக்களின் உயிர் மூச்சாக இருக்கும் இத்துறை, சில சமயங்களில் மூடத்தனமானது, இயல்புக்கு மாறானது என்ற ஐய உணர்வுக்கும் இடமளிக்கிறது. இந்த முரண்பட்ட நிலையை நீக்க, குறை களைந்து நிறைவுக்கு வழி காணுதல் அவசியமாகிறது. இப்பகுதி சோதிடத் துறையின் வளர்ச்சி, சூழல் ஆகியன அறிந்து செயல்படுத்தத் தேவைப்படும் ஆய்வை எப்படி மேற்கொள்வது, ஏன் மேற்கொள்வது என்பதனை விரித்துரைக்கின்றது.

அறிவியல் முன்னேற்றம் வியக்கத்தக்க அளவில் இருப்பினும் மழைப் பேறு, பருவ கால மாற்றங்கள், வால் நட்சத்திரங்கள், நெருப்பு, கரியில் வைரம், மண்ணில் பொன், கடற் பரப்பிற்குக் கீழே காணும் உஷ்ண நீர் ஊற்று, எரிமலை முதலிய இயற்கை ஆற்றல்கள் மனிதனின் அறிவியல் அறிவுக்குச் சவாலாகவே திகழ்கின்றன. அவ்வகையில் கோள்களுக்கும் பூமிக்கும் இடையேயுள்ள ஈர்ப்பு விசையின் காரணமாக இப்பூமிக்கோளில் வாழும் மனிதர்கள் பாதிக்கப்பட்டு அதனால் அவர்களுக்கு ஏற்படும் இன்ப துன்ப மனோ பாவங்களை எடுத்துக் கூறும் சோதிடவியலும் அறிவியலுக்கு ஒரு சவாலாகவே இருக்கிறது.

அண்டங்களைப் படைத்த ஆண்டவனுக்குக் கட்டுப்பட்டு, கோள்கள் இயங்குகின்றன என்று இறை நேயம் கொண்டவர்கள் எண்ணினர். சூரியனார் கோயில், திருநள்ளாறு, திருநாகைச் சுரம், காளஸ்திரி போன்ற இடங்களுக்கு சென்று இறைவழிபாடு செய்ய எண்ணியதும் கோள்களால் ஏற்படும் தீவினையைப் போக்குவதற்கே. இறையருள் பெறுவதற்குச் சோதிடத்தைப் பார்த்து வழிபாடுகளை நடத்துவது இன்றும் நடைமுறையில் உள்ளது. வாழ்க்கை இடர்ப்பாடுகளைத் தவிர்க்கவும், வரவிருக்கின்ற துன்பங் களைத் தாங்கி முன்னெச்சரிக்கையுடன் செயல் படவும், பக்குவப்படவும், எடுத்த செயல் இனிதே நிறைவேறவும் மக்கள் சோதிடத்தை நாடுகின்றனர்.

வெறும் மூடநம்பிக்கையை மாத்திரம் அடித்தளமாகக் கொண்டு 3000 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு கலை நிலைக்க முடியுமா என்பது ஆய்விற்குரியது. இதில் ஏதோ ஓர் உண்மை இருப்பதால் தான் மக்களும் கற்றறிந்தவர்களில் பலரும்

தொடக்க காலத்திலிருந்து இதன் மேல் ஆர்வமுடையவர்களாக இருந்திருக்கின்றனர். அனைத்து நாட்டைச் சார்ந்த அறிவியல் அறிஞர்களும், அரசியல்வாதிகளும், மருத்துவர்களும், புரோகிதர்களும், வரலாற்று ஆசிரியர்களும் இதில் ஈடுபாடு உடையவர்களாக இருந்திருக்கின்றனர். இந்திய நாட்டி லிருந்து மகரிசிகளும், தீர்க்கதரிசிகளும் சோதிடத்திற்குத் தத்துவங்களை, கொள்கைகளை, விதிகளை ஏற்படுத்தித் தம் காலத்தவர்க்கும், பிற்காலத்தவர்க்கும் பயன்படும்படியாய்ச் செய்திருக்கின்றனர். உலகம் முழுமையும் நல்லது, கெட்டது, நாணயம், ஏமாற்று, வறுமை, செல்வம், ஆத்திகம், நாத்திகம் கலந்ததுதான். எனவே சோதிடத்திலும் தவறுகளுக்கு வாய்ப்பு ஏற்படுதல் என்பது தவிர்க்க முடியாததே. அதைக் களைய ஆய்வு முயற்சிகள் தேவையே யொழிய சோதிடத் துறை புறக்கணிக்கப்படுதல் என்ற நிலை உருவாதல் ஏற்புடைத்தன்று.

சோதிடத்தில் ஆய்வு ஏன் தேவையெனில் மக்களில் பலர் சோதிடத்தின்மீது மூர்க்கத்தனமான நம்பிக்கை உடையவர் களாய் இருக்கின்றனர். எனவே சோதிடத்தில் ஏற்படும் குழப்பங்கள் தெளிவுபடுத்தப்பட்டு சோதிடம் பற்றிய உண்மை நிலை உணர்த்தப்படும் போது வாழ்க்கை என்பது எப்படி நன்மை, தீமை கலந்துதான் இருக்கின்றதோ அதுபோல் தான் சோதிடத்திலும் நன்மை தீமை இரண்டும் கலந்த பலன்களே நடைபெறும். 'கடமைகளை ஒழுங்காகச் செய்து மனத்தை, எண்ணத்தைத் தூய்மையாக்கிச் செயல்படும் போது உள்ளுணர்வின் ஆற்றல் வலுப்பதால் கோள்களினால்ஏற்படும் துன்பம் நம்மைப் பாதிக்க முடியாது' என்று இதுகாறும் சோதிட நம்பிக்கையுடையவர் கூட அதிலிருந்து விடுபட்டுத் தன்னம்பிக்கையுடன் கூடிய வாழ்வைத் தொடங்கலாம்.

சோதிடத்திலிருந்து தன்னை முழுமையாக விடுவித்துக் கொள்ள விரும்பவில்லையெனினும் தன்னுடைய கண் மூடித்தனமான போக்கையாவது மாற்றிக் கொள்வர். தன் குழந்தையைப் பலி கொடுத்தால் புதையல் கிடைக்கும் என்று சோதிடர் கூறியதால் பெற்ற குழந்தையைப் பலிகொடுக்க முன்வரும் அளவிற்குச் சோதிடத்திலுள்ள மூர்க்கத்தனமான இழிவு நிலைகள் நீக்கப்படும்.

மக்கள் தெரிந்தே தான் செய்யும் தவறுகள் பலவற்றிற்கும் தன்னுடைய சாதகம் அப்படி, அதனால் நான் என்ன செய்ய முடியும் என்று கூறித் தப்பித்துக் கொள்ளும் மனநிலை நீங்க வாய்ப்பு ஏற்படும். பெரிய மாற்றத்தை மக்களிடையே விரைவில் எதிர்பார்க்க இயலாது. எனினும் இத்தகைய ஆய்வுகள் மக்களைச் சென்று அடையும் போது குருவி சோதிடம், அரச மரத்தடி சோதிடம் முதலியவற்றை நாடிச் செல்வதை விடுத்துக் கணித அறிவு, ஆராய்ச்சி அறிவு படைத்த சோதிடரை நாடிச் செல்லும் நிலை உருவாகும். அரைகுறைச் சோதிடம் பார்ப்பதைவிடப் பார்க்காமலே செயல்படுவது நன்மையளிக்கும் என்ற உண்மையை அனைவரும் உணரத் தொடங்குவர். மக்கள் தம் அறிவைப் பெருக்கிக் கொள்ளும் ஆர்வத்தையுடையவர்களாய் விளங்குவர். தொழிலுள்ள சிக்கலை, அபாயத்தை உணர்ந்திருந்தும், பொறுப்பின்றிச் செயல்படும் இன்றைய நிலையில் நிச்சயம் மாற்றம் ஏற்பட்டுச் சோதிடர் பலர் கவனமுடன், பொறுப்புடன், விழிப்புணர்வுடன் செயல் படத் தொடங்குவர்.

சோதிடத்தை மறுப்பவர்களில் பலர் ஒன்றிரண்டையாவது காரணமாகக் கூறுகின்றனர். ஆயின் பலரோ சோதிடம் பார்ப்பது முட்டாள்தனம், மூடநம்பிக்கை என்று கூறுவார்களே ஒழிய அதற்கான காரணத்தைச் சொல்லுகின்ற அளவிற்குச் சோதிட அறிவு இருக்காது. சிந்திக்கும் ஆற்றலுடைய நாம் அனைத்தையும் அறிய வேண்டுமென்பதில்லை. ஆயின் ஒன்றைப் பற்றி அறியாமலே குறை கூறுவதென்பது ஏற்புடைத்தன்று. தங்களுக்குப்புரியாத அனைத்தையும் அர்த்தமற்றவை அவசியமற்றவை என்று புறக்கணிக்கும் மன நிலையே பலர் சோதிடம் பொய்யென்று கூறுவதற்கு அடிப்படைக் காரணமாகிறது. இத்தகையவர்களின் அகக்கண்கள் திறக்க வழி ஏற்படும்.

"நான் கர்ப்பமாய் உள்ளேன். குழந்தைக்கு நல்ல சாதகம் அமைய வேண்டுமென்பதால் நல்ல நேரத்தில் சிசேரியன் செய்து குழந்தையைப் பிறக்கச் செய்யலாமா என்று என் கணவர் குடும்பத்தினர் கூறுகின்றனர். அப்படிச் செய்யலாமா?" என்ற கேள்வி 'குமுதம்' (16.11.1995) வார இதழில் 'அம்மா நலமா' என்ற பகுதியில் கேட்கப்பட்டுள்ளது. அறிவியல் துறைகள் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ள

இக்காலத்திலும் இப்படியான கேள்விகள் கேட்கப்படுகின்றன என்றால், மக்கள் சோதிடத்தில் எவ்வளவு தூரம் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதும், அதே நேரத்தில் அது பற்றிய போதிய அறிவின்மையால் எத்தகைய தவறான செயல்களைச் செய்யவும் தயாராகி விடுகின்றனர் என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

மூலம், கேட்டை, பூராடம் முதலிய நட்சத்திரங்களில் பிறப்பதால் மட்டும் தீய பலன் நிகழாது. இராசி, நட்சத்திரபாதம், கோள்களின் நிலை முதலான அனைத்தையும் பார்த்தே முடிவுக்கு வருதல் வேண்டும். நட்சத்திரங்களின் பெயரைக் கேட்டவுடனேயே அத்தகைய பெண்களை ஒதுக்குவதால் அவர்களுக்குத் தாமதத் திருமணம், பொருத்தமற்ற வரன், இரண்டாம், மூன்றாம் மனைவியாக வாழ்க்கைப்படல், திருமணமே நிகழாது போதல் முதலியன நிகழ்ந்து வருகின்றன. இச்சூழ்நிலைக்குச் சமூதாயம் காரணமா? இல்லை, இவர்களது சாதக அமைப்பு இத்தகைய நிலையை ஏற்படுத்திக் கொடுக்கின்றதா?

ஆணுக்கும் பெண்ணுக்கும் நட்சத்திரப் பலன் ஒன்றாக இருக்கும் போது பலன் வேறு வேறாகக் கூறப்படுதல், பூப்புச் சாதகம் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை, பூப்புச் சாதகம் சரிபாதி பலனைச் சொல்லக் கூடியது, பூப்படைந்த பின் பெண்ணின் பிறந்த சாதகம் செயல்படாது, திருமணம் ஆன பின் மனைவி சாதகம் செயல்படாது, எனவே கணவன் சாதகத்தைக் கொண்டும், பிள்ளைகள் பிறந்தபின் பிள்ளைகளின் சாதகத்தைக் கொண்டும் பலன் அறிய வேண்டும் என்பன போன்ற நம்பிக்கைகள்; செவ்வாய்த் தோடம், நாக தோடம், மாங்கல்ய தோடம் இல்லாத பலர் அத்தோடம் இருப்பதாக நினைத்துப் பரிகாரம் போன்ற பல வித இன்னல்களை அனுபவிக்கின்ற நிலை; 30 வயது ஆகிவிட்டால் செவ்வாய்த் தோடம், பிற தோடம் பாதிக்காது என்ற கருத்து முதலியவை நன்கு ஆய்வு செய்யப்பட்டு உண்மைகள் வெளிப்படுத்தப்படுவது இன்றைய நிலையில் மிகத் தேவையான ஒன்றாகும்.

ஆயுள் பலமற்ற ஒருவனுக்கு மாங்கல்ய பலமுடைய பெண் அமைய முடியுமா? இல்லை மாங்கல்ய பலமற்ற பெண்தான் அமைவாளா? ஒரே குடும்ப சாதகம் தந்தைக்குப்

பணக்கஷ்டம், தாய்க்குப் பணக்கஷ்டமின்மை, பிள்ளை சாதகத்தில் வெகு பண வரவு என அமைய வாய்ப்பு உண்டா? அமையின் நடக்கும் பலன் எப்படி இருக்கும்? தந்தைக்குப் பணக்கஷ்டம் சிறிதாவது குறையுமென்றால் பிள்ளையின் வழி குறையும் என்ற குறிப்பும், தந்தையின் சாதகத்திலேயே தெரியுமா? நடைமுறையில் சோதிடர்கள் இவையனைத்தை யும் கருத்தில் கொண்டுதான் பலன் கூறுகின்றனரா? ஒரு சாதகம் இன்னொரு சாதகத்தின் மேல் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதா? இல்லை ஒரு சாதகத்தில் நிகழவிருப்பதை இன்னொரு சாதகத்தில் காட்டுகின்றதா?

சாதகப்படியும், எண்கணிதப்படியும், நவரத்தினங்கள் அணியும் முறைகள் பலவாறாக முரண்பட்டு அமைய, ஒன்றுக்கு மேற்பட்டசோதிடரை அணுகும் மக்கள் குழப்பம் அடைவதோடு தீமையை அடையவும் வாய்ப்பு ஏற்படுதல், கோள்களின் அமைப்பில் நன்மை தீமையை எப்படி முடிவு செய்வது, ஒரு கோள் என்ன தன்மையான பலனைக் குறிக்கிறது, அவை நிகழும் சரியான நேரம், இரட்டைக் குழந்தைகள் ஒரே இடத்தில் சில நிமிட வேறுபாட்டில் பிறப்பதால் இலக்னம், இராசி மண்டலத்திலுள்ள கோள்களின் நிலை, நவாம்ச நிலை, தசா, புத்தி ஒன்றாகவே இருந்தும் அக்குழந்தைகளின் வளர்ச்சியில் வெவ்வேறு பலன்களைக் காணுதல் - இவை யெல்லாம் பற்றித் தெளிவான, நிலையான, சரியான கருத்து இன்னதென வெளிப்படுத்தப்பட சோதிடத்தில் ஆய்வு தேவை.

தசாக்கள் கேது, புதன், சுக்கிரன் என்ற வரிசையில் அமையக் காரணம், இவற்றுக்கு ஆண்டுகள் பிரித்தது எந்த அடிப்படை, இராகுகேதுக்களுக்கு ஏன் வீடுகள் தரப்பட வில்லை, மற்ற கோள்களுக்கு ஆட்சி வீடுகள் எம் முறையில் தரப்பட்டது, சோதிடத்தில் ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு உச்சரிப்பு ஒலிகள் இங்ஙனம் ஏன் அமைகின்றன என்பன புலப்படுத்தப் படவேண்டும். பரணிக்கு எமனும், கிருத்திகைக்கு அக்கினியும், ஆயிலியத் திற்குச் சர்ப்பமும், கேட்டைக்கு இந்திராகினியும் அதிதேவதைகள். இந்த அதிதேவதைகள் உக்கிர சுபாவ முடையவராதலால் இவை நற்செயலுக்கு விலக்கப் படுகிறது. இங்ஙனம் சோதிடத்தில் கூறப்படும் ஒவ்வொரு கூற்றுக்கும்

காரணங்கள் திரட்டப்பட்டு ஆய்வு செய்யப்பட வேண்டும். ஆட்சி உச்சம், நட்பு, பகை முதலிய உறவுகளை, சாதி, பால் முதலிய பாகுபாடுகளை நிர்ணயித்த முறை அறியப்பட வேண்டும். வழக்கிலுள்ள பழமொழிகள் உணர்த்தும் சோதிடச் செய்திகளில், சோதிடம் குறித்து மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளில் தெளிவு ஏற்படும் போது மக்கள் நடைமுறையில் பயனடைய முடியும். சோதிடம் தொடர்பான அனைத்துச் சுவடிகளும் தொகுக்கப்படும் போது இதுவரை வெளிவந்துள்ள மூல நூல்களில் இல்லாத பல புதிய செய்திகள் வெளிப்பட வாய்ப்பு உள்ளன. வெளிவந்த மூல நூல்களில் தெளிவும் திருத்தங்களும் ஏற்பட வாய்ப்பு உள்ளன.

எதிர்காலம் என்பது மனிதனுக்கு முழுவதும் தெரியாத ஒன்றாயினும் அதனை உய்த்துணரப் பல்வேறு வழி முறைகள் பயன்படுத்தப்படுவதைக் காண முடிகிறது. இன்று 'எதிர்காலவியல்' ஆய்வுகள் பல துறைகளில் நடைபெற்று வருகின்றன. உலக நிகழ்வுகள் யாவும் தனிமனிதனுக்கு உரியதாகவோ சமுதாயம் முழுமைக்கும் தொடர்புடையதாகவோ அமைகின்றன. கடந்த காலப் போக்குகளை வைத்து எதிர்காலத்தில் இப்படி இருக்கும் என்று கருதித்தான் மக்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டுகின்றனர்.

இத்தகைய ஆய்வுகள் ஓரளவிற்கு நற்பலன்களைத் தந்து வருகிறது என்றாலும் முழு அளவில் வெற்றி பெறுதல் என்பது இயலாது. சோதிடத்தின் துணையால் இந்நிலையை மாற்றி முழு அளவில் நன்மை அடைய முடியுமா என்ற வகையில் முயற்சித்தல் தவறாகாது. ஆனால் இத்தகைய நிலையை இன்றைய சோதிடம் பெற்றுள்ளதா என்பதை முதலில் தீவிர ஆராய்ச்சியின் வழி தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய நிலையைச் சோதிடம் பெற்றிருக்கின்றது என்ற நிலை நிறுவப் பெறின், சோதிடம் மனிதனுக்குக் கிடைத்துள்ள மிக உன்னதமான ஒரு துறை என்றும், அறிவியல் துறைகளைக் காட்டிலும் சிறந்தது என்றும் ஏற்றுக் கொள்ளப் பெறலாம்.

இந்நிலையை அடைய அடிப்படை நிலையிலேயே பல முயற்சிகள் தேவைப்படுகின்றன. குறிப்புகள் ஒன்று சேர்க்கப்பட வேண்டும். அவற்றை ஆழ்ந்து படிக்க வேண்டும். சோதிட நூலிலுள்ள எதிர்காலக் குறிப்புகளைத் தொகுக்க வேண்டும். எதிர்காலத்திற்கு நிறைவானவற்றையும், நிறைவற்றவற்றையும் குறிப்பிட வேண்டும். மேலும் நிறைவற்ற நிலையிலே இதற்குக் காரணங்கள் என்னவென்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும் ஏன் நிறைவற்ற நிலைக்குப் போய்விட்டது என்பதையும் ஆராய வேண்டும். இம்முயற்சிக்குப் பின்பு ஒரு தனி நம்பிக்கை ஏற்படும். அந்த நிலையில் இத்துறையைத் துணிவுடன் கையாள்வதற்கு வழியேற்படும்.

சோதிடத்திலுள்ள வேறுபாடுகள் களையப்பட்டு முழு அளவில் கணிதமாக்கப்படல் வேண்டும். ஆயுர்வேதம், சித்த மருத்துவம் போல் இதற்கும் பட்டப்படிப்புகள் உருவாக்கப் படவேண்டும்; முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பலர் உருவாக வேண்டும். சோதிடம் அறிவியல் கண்ணோட்டத் தோடு பார்க்கப்பட வேண்டும். வானியல், கணிதம், அறிவியல், தமிழியல் முதலியவற்றில் பயிற்சி பெற்றவர் சோதிடம் கற்று இத்தகைய ஆய்வுகளில் ஈடுபடவேண்டும். எவ்வித ஆய்வுகளின்வழி இவ்வறிவை மேம்படுத்த, முழுமைப்படுத்த இயலும் என்பதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும்.

அடிப்படையான கொள்கைகளை நூல்களின் அனுப வத்தின்வழி நன்கு கவனித்துக் கற்று, மனத்தில் கொண்டு, நன்கு சோதித்தறிந்து, அனுபவத்தின் பலன்களையும் உட்கொண்டு சோதிடம் கூற வேண்டும். எதிர் காலத்தில் சோதிடர் அனைவரும் அறிவியல் அறிஞராக அல்லது அந்நிலையில் இருந்து செயல்படுபவராக உருவாதல் வேண்டும். சோதிடத்தில் பல உட்பிரிவுகள் உள்ளன. பல உட்பிரிவுகளின்கீழ் சிற்சில சிறுபிரிவுகள் இருக்கின்றன. ஆனால் இந்த ஒவ்வோர் உட்பிரிவுக்கும் சிறப்புத் தகுதி உடைய சோதிடர் அமைதல் வேண்டும். ஆய்வு என்பது உண்மையை மெய்ப்பொருளைக் காண்பது, நுண்ணிதின் ஆழ்ந்து பார்ப்பது, நேர்-எதிர் கருத்துகளைக் கணக்கிட்டு ஒரு பயன் தரும் வழிப்பொருள் காண்பது. இதுவே நன்மை

விளைவிக்கும். இப்பகுதி சோதிடத் துறையின் முழுமைக்கும் நன்மைக்கும் ஒரு சில கருத்துகளை r முன் வைத்திருக்கிறது.

சோதிடம் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து வருகிறது என்பது மறுத்தற்கியலாத ஒன்று. வலிமையுள்ளவர்களுக்குச் சோதிடம் தேவையில்லை என்று அறியப்படினும் விதி, சூழ்நிலை மனிதனை ஆட்டிப் படைப்பதால் மனிதன் என்றும் மன வலிமையுடன் இருத்தல் இயலாததாகிறது. எனவே சமுதாயத்தில் சோதிடம் தொடர்பாக நிலவுகின்ற சீர்கேடுகள் முறைமைப்படுத்தப்பட வேண்டும். நாளிதழ், வார இதழ், மாத இதழ், நாவல், வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றில் சோதிட விழிப்புணர்வுக் கருத்துகள் கதைகள் வடிவில் இடம் பெற்று அனைத்து மக்களையும் சென்றடையும் போது மக்கள் விழிப்புணர்வு பெறுவர்.

துல்லியமாக ஆழ்ந்து கணிக்கும் முறை எதிர்காலத்தில் ஏற்படின், கூறப்படும் பலன் நம்பிக்கைக்குரியனவாக அமையலாம். நமது அடிப்படை முறையோடு மேனாட்டு முறைகளையும் பயன்படுத்துவதால் சோதிட முறை நன்கு வளர்ச்சி பெறும். மேலும், மருத்துவத் துறையில் மனிதனுடைய, தனித்தனி உறுப்புகளைப்பற்றிய சிறப்புப் பயிற்சியினை அளிப்பது போன்று, சோதிட முறையிலும் ஆயுள் பாவம், களத்திர பாவம், தொழில் பாவம் முதலான பன்னிரண்டு பாவங்களுக்குரிய பலன்களைக் கணித்துச் சொல்லுதற்குத் தனிப்பயிற்சி பெறும் நிலை உருவாகி வளருமாயின், சோதிடக்கலை நம்பிக்கைக்குரிய ஒன்றாக வளர்ச்சி பெறும்.

பிறப்பு, இறப்பு என்ற இரண்டிற்கும் நடுவே விளங்கும் இல்லறம் என்ற பேரறத்தை நடத்திச் செல்வதற்குத் தக்க அறிவுரைகளை நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது. இருப்பினும் வாழ்க்கைச் சிக்கலுக்குக் காரணமான கோள்களின் தாக்கங்களைச் சோதிடவியலே செம்மை செய்து தருகின்றது. ஆகவேதான் பிறப்பு, கல்வி, தொழில், திருமணம், மூப்பு, இறப்பு முதலியவற்றிலுள்ள சிறு சிறு நிகழ்வுகளுக்கும் சமுதாயம் சோதிடத்தின் கூறுகளை உட்கொண்டே செயல்படுகிறது. சமுதாயப் பயன்பாட்டிற்கு உறுதுணை புரிந்து வருகின்ற சோதிடம், சீர்தூக்கி நிறுத்த வேண்டிய நிலையை அடைந்தே தீர வேண்டும்.

★ ★ ★

# துணை நின்றவை

## நூல்கள் - தமிழ்


அதிர்ஷ்ட ஜோதிட கணிதம், மயிலை ராஜாச்சாரியார், நர்மதா பதிப்பகம், சென்னை, 1992.

அபிதானசிந்தாமணி, ஏசியன் எடுகேஷன்ஸ் சர்வீஸ், புதுதில்லி, மறுபதிப்பு, 1981.

ஆய்வு நோக்கில் நாட்டுப்புற மருத்துவம், க. வேங்கடேசன், சித்தர் கோட்டம், சென்னை, 1976.

ஆயகலைகள் அறுபத்து நான்கு, புலவர் செந்துறை முத்து, நல்வாழ்வுப் பதிப்பகம், சென்னை, 1978.

ஆரூட சோதிடம், டாக்டர் பூ. சுப்பிரமணியம், ஆசிரியர் வெளியீடு, சென்னை, 1989.

இயக்கவியல் பொருள் முதல் வாதம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ.

கருவூரார் பலதிரட்டு, (சித்த வைத்திய நூல்), இரா.நிர்மலாதேவி (பதி.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982.

காலநிலை இயல், தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு, 1965.

குணபாடம், தாது சீவ வகுப்பு (இரண்டாம் மூன்றாம் பகுதிகள்), டாக்டர் ஆர். தியாகராஜன், இந்திய மருத்துவம், மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை, 1992 (பதி.4).

கைரேகை சாஸ்திரம், ரிஷபானந்தர், அநுராகம், சென்னை, 1992.

கோள்களின் கதை, கழக வெளியீடு, சென்னை, 1974.

சங்க கால வாழ்வியல், ந. சுப்பிரமணியன், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1976.

சாதக அலங்காரம் (கீரனூர் நடராசனார்) விளக்க விருத்தியுரை, வேலு நாயகர் தெய்வசிகாமணி உரை, மலர்மகள் விலாசம் பிரஸ், சென்னை, 1996 (பதி.3).

சித்தமருத்துவாங்கச் சுருக்கம், டாக்டர் க.சு.உத்தம ராயன், தமிழ்நாடு அரசு சுத்த அறிவியல் மேம்பாட்டுக் குழு, சென்னை, 1983.

சித்தர் இலக்கியம், மீ.ப.சோமு, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1988.

சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும், உ.வே.சா., கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1969 (பதி.7).

சோதிட சாஸ்திரமும் ஹோமியோபதியும் பயோ கெமிஸ்ட்ரியும், டாக்டர் எஸ்.கே. ராமச்சந்திரன், லலிதாம்பிகை பப்ளிகேஷன்ஸ், சேலம், 1978.

சோதிடம் - யோகம், அரிமேலழகன், தேகாலய ஞானபீடம், சென்னை, 1970.

தத்துவ ஞான விஞ்ஞான குறிப்புகள், மா. சிங்காரவேலு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1975.

தமிழ் இலக்கியத்தில் சித்தமருத்துவம், மூலிகைமணி, டாக்டர் க.வேங்கடேசன், ஸ்ரீசக்தி பதிபகம், சென்னை, 1993.

தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், சோமலெ, பாரி நிலையம், சென்னை, 1974.

தமிழ் லெக்சிகன், தொகுதி 1-6, சென்னைப் பல்கலைக் கழகம்.

தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், கே.கே. பிள்ளை, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1972.

தமிழகம், ந.சி. கந்தையா பிள்ளை, கழகம், சென்னை.

தமிழர் நாகரிகமும் பண்பாடும், அ. தட்சிணாமூர்த்தி, வெற்றிச்செல்வி வெளியீட்டகம், தஞ்சாவூர், 1980 (பதி.2).

தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், டாக்டர் க. காந்தி, உ.த.நி. சென்னை, 1980

திருமணப் பொருத்தம், புலியூர் பாலு, பாரதி பதிப்பகம், சென்னை, 1983.

திருமந்திர ஆராய்ச்சி, இரா. மாணிக்கவாசகம், அன்னை அபிராமி அருள், சென்னை, 1982.

திருமந்திரம், ஜி. வரதராஜன் (உரை), வள்ளுவர் நிலையம், திருச்சிராப்பள்ளி, 1972.

திருவிளையாடற் புராணம் (மதுரைக் காண்டம்) இராய.சொ. (பதி.), அருள்மிகு மீனாட்சிசுந்தரர் திருக்கோயில் வெளியீடு, மதுரை 1973.

நெஞ்சை ஈர்க்கும் வானவியல், வி. கொமரோவ், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1987.

பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள் (இருபகுதிகள்), ப.இராமநாதபிள்ளை (முதற்பகுதி), புலவர் பொ.வே. சோமசுந்தரனார் (இரண்டாம் பகுதி) உரை, கழக வெளியீடு, சென்னை, 1967.

பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை, 1738.

பாட்டியலும் இலக்கிய வகைகளும், ந.வீ. செயராமன், இலக்கியப் பதிப்புகள், சென்னை, 1981.

பிரஸன்ன ஜோதிடம், ஆ. சிவபாதம் (மொழி), மகாபாலா வெளியீடு, சென்னை, 1978.

புதிய ஏற்பாடு, தமிழ்நாடு விவிலிய மறைக் கல்வி நிலையம், திண்டிவனம், 1975.

புதிய பார்வையில் சித்த மருத்துவம், மூலிகைமணி க. வேங்கடேசன், சித்தர் கோட்டம், சென்னை, 1978.

புதுவூர் சக்கரவர்த்தி அம்மானை, மொ. மருதமுத்து, உ.த.நி. சென்னை, 1995.

புள்ளிருக்கு வேளூர்த் தல வரலாறு, தருமையாதீனம், வேளூர் தேவஸ்தானம், 1977.

பெண்ணரசியர் கதை, டாக்டர் கி. ஜெயகுமார், த.பூமிநாகநாதன் (பதி.), ஆசியவியல் ஆய்வு நிறுவனம், சென்னை, 1995.

புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சா., டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1971.

பெருந்தமிழ், 'சித்தர் கட்டுரை', ப.158, ந. சஞ்சீவி (பதி), கழகம், சென்னைப் பல்கலைக் கழகம்.

மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள், தே.ஞானசேகரன், பார்த்திபன் பதிப்பகம், மதுரை, 1987.

மந்திரச் சடங்குகள், ஆ. சிவசுப்பிரமணியன், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1988.

மருத்துவத் திறவுகோல், டாக்டர் எஸ். சிதம்பரதாணுப் பிள்ளை, சித்த மருத்துவ நூல் ஆராய்ச்சி நிலையம், சென்னை, 1982.

மனையடி சாஸ்திரம், டாக்டர் பூ. சுப்பிரமணியம், ஆசிரியர் வெளியீடு, சென்னை, 1995.

யூகி முனிவர் வைத்திய சிந்தாமணி, முதல் பாகம், சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழு, பழநி, 1896.

வாத வைத்தியத்துக்ககராதி முதல் பாகம், வி. பலராமையா, சுவாமி தீனதாஸ், சித்த மருந்துசெய் சாலை, சென்னை, 1967.

வானவியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1973.

வானியலும் சோதிடமும், இராம. தியாகராசன், கலைவாணி வெளியீடு, சென்னை, 1994.

வெற்றிக்கு வழிகாட்டும் அதிர்ஷ்ட எண் சாஸ்திரம், புரொபசர் என்.சாமி, அநுராகம், சென்னை, 1989.

ஜாதக கணிதம், பாகம் ஒன்று, சி.ஜி. ராஜன், டெக்ஸ்ட்புக் கமிட்டி, சென்னை.

ஜாதக சாகரம், வேலு நாயகர், ஆனந்த போதினி பதிப்பு, சென்னை, 1969.

ஜாதக சிரோன்மணி, சி.ஜி.ராஜன், சென்னை, 1930.

ஜாதகமும் ஜோதிடமும், என். சுந்தரராஜன், திருமகள் நிலையம், சென்னை, 1982.

ஜோதிட ஆராய்ச்சித் திரட்டு (இரண்டாம் பாகம்), மு. மாதேஸ்வரன், விஜயா பதிப்பகம், சென்னை, 1987.

சோதிடக்கலை ஓர் ஆய்வு, ஜி.ஜி. ஜெயராமன், கலைச்செல்வி பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1994.

ஜோதிடச் சிந்தனைச் செல்வம், சிவா. மேகநாதன், சகுந்தலை நிலையம், சென்னை, 1991.

ஜோதிட போதினி, பி.வி.ராமன், பொய்யாமொழிப் பதிப்பகம், சென்னை, 1974.

ஜோதிடம் அறிவியலா? வே. தமையந்திரன், பூங்கொடிப் பதிப்பகம், சென்னை.

ஜோதிடம் - கிரக பாவபலன்கள், காழியூர் நாராயணன், கங்கை புத்தக நிலையம், சென்னை, 1994.

ஜோதிட மருத்துவம், எஸ்.வி. ராஜையா, நேஷனல் மெடோ பார்மா வெளியீடு, சென்னை.

ஜோதிடமும் நடைமுறை வாழ்க்கையும், மு. மாதேஸ்வரன், மு. செல்வராசன் வெளியீடு, சென்னை, 1991.

ஜோதிடமும் மந்திரமும், காழியூர் நாராயணன், கங்கை புத்தக நிலையம், சென்னை, 1993.

ஜோதிடமும் மருத்துவமும், காழியூர் நாராயணன், கங்கை புத்தக நிலையம், சென்னை, 1994.

ஜோதிட ரகசியங்கள், மயிலை பூபதிராஜன், ராசி பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1982.

ஜோதிட ரஸார்ணவம், காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், சென்னை, 1980.

ஸப்தரிஷி நாடி (கடக லக்னம்), தமிழ்நாடு அரசு, சென்னை, 1958.

## ஆங்கிலம்

Casting the Horoscope, K.S. Krishnamurthi, Hariman Publications, Madras, 1987.

Fundamental Principles of Astrology, K.S. Krishnamurthi, Hariman Publications, Madras, 1970.

Horary, Astrology, K.S. Krishnamurthi, Hariman Publications, Madras, 1970.

Ideal Sex Life, A.P. Pillai, D.B. Taraporevala Sons & Co.,

Mahabala's Advance Ephemeris, Mrs. Balakrishnamurti Publications, Madras, 1980.

Tamil-English Cyclopaedia Dictionary, T.V. Sambasivam Pillai, The Research Institute of Siddhars Science, Madras, 1938.

Relativity and Man, Progress Publishers, Moscow.

## மலர்

சித்தமருத்துவ ஆய்வுக்கோவை, தமிழக அறிவியல் பேரவை மூன்றாம் கருத்தரங்கம், அரசு சித்த மருத்துவக் கல்லூரி, புதுவைப் பல்கலைக் கழகம், புதுச்சேரி, டிசம்,24, 25, 26, 1994.

"சோதிடமும் மருத்துவமும்", பக்.349-351, டாக்டர் கே. பார்த்தசாரதி, அமுதசுரபி, தீபாவளி மலர், 1990.

தமிழாய்வு - 'திட்பமும் நுட்பமும்', "தமிழ் நூல்களில் காலக்கணிப்பு", பக்.1-58, மு. சண்முகம் பிள்ளை, தாமரைத்திரு நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் பாராட்டு மலர், ந. சஞ்சீவி (பொதுப். பதி.), சென்னைப் பல்கலைக் கழகம், 1976.

Annai Santhanammal V.G.P. International Astrological Expo 90, Madras.

## ஆய்வேடு

கருப்பண்ண சாமி வழிபாட்டில் மந்திரச் சடங்குகள், சு. சுப்புரத்தினம், பிஎச்.டி. ஆய்வேடு, உ.த.நி., சென்னை, 1992.

சித்த மருத்துவத்தில் நஞ்சு முறிவு நூல்களின் ஒப்பாய்வு (நச்சுப் பாம்புகள் மட்டும்), சே. ஜெகநாதன், பிஎச்.டி., ஆய்வேடு, உ.த.நி., சென்னை, 1987.

தமிழ்ச் சோதிட நூல்களில் சாதகக் கணிப்பின் அடிப்படைகள், தனிப்பார்வை சாதக அலங்காரம், பிஎச்.டி., ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1984.

## இதழ்

அறிவியலும் சோதிடமும், அறிக அறிவியல், பக்.8-11, குன்றக்குடி அடிகளார், அணு:3, கதிர்.3, அக்டோபர் 1988.

இருபத்திமூன்று கிரக மண்டலங்கள், மாத ஜோதிடம், பக்.17, 18, ஏ.எம். பிள்ளை, சுவடி.44, ஓலை.10, ஆனி.1993.

சித்த மருத்துவ சோதிடம் சில உண்மைகள், மூலிகைமணி, பக்.24-26, க. வேங்கடேசன், 1993.

சித்த மருத்துவமும் சோதிடமும், டாக்டர் ஜெ. ராமச்சந்திரன், மூலிகைமணி, 1981.

சோதிடமும் அறிவியலும், ஏ. மணிவண்ணன், கலைக்கதிர், நவம்பர், 1988.

ஞாயிற்றுக் குடும்பத்தைப் பற்றிய ஓர் ஆய்வு, கலைக்கதிர், ஆகஸ்டு, 1988.

பஞ்சாங்கம் ஏன்? எதற்கு? எப்படி? தினமணி. பக்.1, 111, மு. ஸ்ரீனிவாசன், தமிழ் புத்தாண்டுச் சிறப்பிதழ், ஏப்ரல் 13, 1996.

பெண் மூலம் நிர்மூலமா? ஆண் மூலம் அரசாளுமா?, டி. மாரிமுத்து, தினகரன், 14.1.1994.

மருத்துவ ஜோதிடம், ஜோதிடச்சுடர், பக்.4-5, டாக்டர் ஹனிபா, சுடர்-1, ஒளி-6, நவம்பர், 1993.

மன இயல்பும் கோள்களும், டாக்டர் சீனி நாராயணன், கலைக்கதிர், ஆகஸ்டு, 1993.

வானசாஸ்திரமும் ஜோதிடக் கலையும், ஜோதிடத் தாமரை, ப.12, கோமகன், மலர் 1, இதழ் 4, கடலோசை அச்சகம், ஆவணி, 1995.

வானியலும் ஜோதிடவியலும், க. சுப்புரத்தினம், வெள்ளிக் கிழமைக் கருத்தரங்கு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 5.5.1989.

ஜோதிடக்கலை ஆன்மீகமா? அறிவியலா? ஜோதிடத் தாமரை, பக்.8-10 (பட்டிமன்ற நிகழ்ச்சித் தொகுப்பு), மலர் 1, இதழ் 5, ஆவணி 1995.

ஜோதிடக் கலையின் பழமை, ஜோதிடத் தாமரை, பக்.18, 21, அ. பாஸ்கர பால்பாண்டியன், மலர் 1, இதழ் 6, புரட்டாசி 1995.

ஜோதிடத்தாமரை, ஜோதிடத்தாமரை, பக்.16, 17, பி.வி. ஜகன்னாத், மலர் 1, இதழ் 4, ஆவணி, 1995.

ஜோதிஷம் எப்படிச் சொல்ல வேண்டும், மாத ஜோதிடம், பக்.21-29, ஏ.எம். பிள்ளை, சித்திரை, 1990.

Researching the Brigu Samhita, Bandhu, Express Star Teller, pp.25, 26, Nov.1995.

★ ★ ★

# கலைச் சொற்கள்

அகம் - Ego
அசரீரி - Oracle
அசுவினி - Aswini
அட்சாம்சம் - Latitude
அட்ட வர்க்கம் - Astavargam
அண்டங்கள் - Galaxy
அத்தம் - Hasta
அதிர்ஷ்டப்புள்ளி - Fortuna
அந்தரம் - Antharam
அமாவாசை - New Moon
அயனாம்சம் - Movement of the Zodiac
அரசியல் நிலைச் சோதிடம் - Political Astrology
அவரோகணம் - Descending
அவிட்டம் - Beta Delphini
அனுசம் - Anuradha
அஸ்தங்கம் - Immersion
ஆக்சான் - Axon
ஆகாயம் - Sky, In the universal space
ஆடு - Ram
ஆதிரை - Aridra
ஆயில்யம் - Aslesha
ஆரோகணம் - Ascending
ஆன்மீகப் புதிரியல் - Spiritual Mysticism
இடபம் - Taurus
இந்தியப் பொதுநேரம் - Indian [Standard Time (IST)]
இயற்கைச் சோதிடம - Natural Astrology
இயற்பியல் -Physics
இரட்டையர் - Twins
இராகு - Ascendant Node
இராசிச்சக்கர வட்டம் - Zodiac Circle
இராசி மண்டலம் - Zodiac
இராசி வட்டம் - Ecliptic
இராசியதிபதி - Sign Lord
இராணுவ சோதிடம் - Military Astrology
இலக்னம் - Ascendant
இறங்கு கோள் சந்தி - Descending node
உட்கோள்கள் - Inner Planets, Interior planets
உச்ச பாகை - Exaltation
உத்தரம் - Uttara phalguni
உத்திரட்டாதி - Uttarabhadra Pada
உத்ராடம் - Uttarashadha
உபயராசி - Common Zodiac
உயர்தர நட்சத்திரச் சோதிடம் - Advanced Stellar Astrology
உயிர்ம - ஒழுங்கு - Bio-rythm
உலகக் கடிகார நேரம் - World Clock Time
உலக நிலைச் சோதிடம் - Mundane Astrology
உள்ளூர்ச் சராசரி நேரம் - Local Mean Time (LMT)
எண் கணித - கைரேகைச் சோதிடம் - Numero - Palmistry
எண் கணித - கைரேகைச் சோதிடர்-Numero Palmist

எண் கணிதம் - Arithmetics
எண்சோதிடம் - Numerology
எனுமா அனு என்லில் - Enuma Anu Enlil
ஏறுகோள் சந்தி - Ascending node
ஒளி வேகம் - Speed of Light
ஓணம் - Alpha Aquilae
ஓரை - Hora
கட்டுப்பாட்டு வளையம் - Speed Braker
கடகம் - Cancer
கணிப்புச் சோதிடம்- Mathematical Astrology
கன்னி - Virgo
கனவுப்பலன் - Dreamology
கார்த்திகை - Krittika
காரகத்துவம் - Dodecatropos
காலக் கணிதம் - Time Calculation
காலக் கணிப்பு முறை - Calenderical System
காளை - Bull
கிர்லான் ஸ்பெக்ட்ரோஸ் கோபி (கருவி) - Kirlan Spectroscopy
கிரக அவஸ்தை - Planetary states of Existence
கிரகக் கூட்டுகள் - Planetary Conjuctions
கிரக நிலைப்படம் - Astrological Chart
கிரகப் பாதைகள் - Planets Orbit
கிரக வீடு - Planets Domicile
கிரீன்விச் சராசரி நேரம் - Greenwich Mean Time (GMT)
கிரீன்விச் ரேகை - Greenwich Line
கிருஷ்ணமூர்த்தி பத்ததி - Krishnamurthy pathathy
குடம் - Water Pot
கும்பம் - Aquarius
குரு - Jupiter
குறி - Oracle
குறுக்குக்கோடு - Latitude
குறுங்கோள்கள் - Asteroids
கைரேகைச் சோதிடம் - Palmistry
கேட்டை - Jyeshta
கேது - Descendant node
கேந்திரம் - Quartile
கேபலச்சோதிடம் - Kabala Astrology
கோச்சாரம் - Transit
கோள்கள் - Planets
கோள்களின் இருப்பு நிலைகள் - Planetary Positions
கோள்களின் ஆட்சி வீடுகள் - Ruling signs of the planets
கோள் தொடர்பான சகுனங்கள் - Planetary Omens
சகுனம், நிமித்தம் - Omen
சதயம் - Satabhisha
சந்திரகிரகணம் - Lunar Eclipse
சந்திரமான ஆண்டு - Lunar Year
சந்திரமான மாதம் - Lunar Month
சந்திரன் - Moon
சந்திரனுடைய பாதை குறுக்கிடும் புள்ளிகள் - Nodes of Moon's Orbit
சர்வரோக நிவாரணி (குரு) - Elixir
சரம் - Saram
சரராசி - Moving Zodiac
சனி - Saturn
சாதக - எண்கணித - கைரேகைச் சோதிடம் - Astro - Numero - Palmistry

சாதக - எண்கணித - கைரேகைச் சோதிடர் - Astro - Numero - Palmist
சாதக - எண்கணிதச் சோதிடம் - Astro - Numerology
சாதக - எண்கணிதச் சோதிடர் - Astro - Numerologist
சாதகச் சக்கரம் - Natal Chart
சாதகச் சோதிடம் - Natal Astrology
சாதகம் - Horoscope
சாமுத்திரிகா இலட்சணம் - Physiognomy
சித்த மருத்துவம் - Siddha Medicine
சித்திரை - Chitra
சித்து - Mystical power
சிம்மம் - Leo
சீட்டுக் கணிதம் - Cartomancy, Phraneology
சுக்கிரன் - Venus
சுவாதி - Alpha Bootis
சுழற்சி - Cycle
சுழற்சிக்கோடு - Ecliptic
சுறா - Goat
சூக்சமம் - Sooksmam
சூரிய கிரகணம் - Solar Eclipse
சூரியமான சராசரி நேரம் - Mean Solar Time
சூரியன் - Sun
செயல்முறை வானவியல் - Practical Astronomy
செவ்வாய் - Mars
சோதிட இயற்பியல் - Astrological Physics
சோதிட உயிரியல் - Astrological Biology
சோதிட உளவியல் - Astrological Psychology
சோதிடக்கணிதம் - Astrological Maths
சோதிடப் பலன் கணிப்பு - Astrological predictions
சோதிட வானிலையியல் Astrological Meteorology
சௌரமான ஆண்டு - Solar Year
சௌரமான மாதம் - Solar Month
டயரிகள் - Diaries
டிட்டான் - Titan
தனுசு - Sagittarius
தசா ஆண்டு - Dasa Period
தசாபுத்தி - Dasa Bukhi
தனாதிபதிகள் - Cash in hand
தியோசோபி - Theosophy
திதி - Thithi
திரிகோணம் - Trine
திருக்கணிதம் - Drik system
தீ - Fire
தீர்க்க தரிசனம், வருங்காலக்காட்சி - Prophecy
துணைக்கோள் - Sub planet
துலாக்கோல் - Scale
துலாம் - Libra
தெய்வீகமான விஞ்ஞானம் - Divine Science
தே.ர் - Scorpion
தோடப்பரிகாரம் - Liturgy
நட்சத்திர அதிபதி - Constellation Lord
நட்சத்திரக் கூட்டங்கள் - Constellation
நட்சத்திரங்கள் - Groups of Stars

நட்சத்திரமான ஆண்டு - Sidereal Year
நட்சத்திரமா— நாள் - Sidereal day
நண்டு - Crab
நவாம்சம் - Navamsa
நிகழ்ச்சி ஆய்வு - Case Study
நிமித்த சோதிடம் - Interogatory Astrology
நிராயன இராசி மண்டலம் - Fixed Zodiac
நிழற்கோள்கள் - Shadow planets
நீச்ச பாகை - Dejection
நியூரான் செல்கள் - Neurons
நீர் - Water
நெடுக்குக் கோடு - Longitude
நெப்டியூன், வருணன் - Neptune
நொடிக் கணித நூல் - Reddy Reckoner
நேர நிர்ணயம் - Time determination
பஞ்சபூதங்கள் - Five Elements of Universe
பஞ்சாங்கக் கணிதம் - Almanac Calculation
பஞ்சாங்கச் சோதிடம் - Catarachic Astrology
பஞ்சாங்கம் - Almanac, Ephemeris
பத்ததி - System
பரணி - Bharani
பார்வை - Aspect
பால்வெளி - Milky way
பாகை - Degree
பாவகச் சக்கரம் - Bhava Chakra
பாவகச் சந்தி - Bhava Sandhi
பாவகத் தூரம் - Length of the Houses
பாவகத் தொடக்க ஸ்புட முறை - Bhava Aramba Sputa
பாவகம், வீடு - House
பாவக மத்திய ஸ்புட முறை - Bhava Madhya Sputa
பாவக முனை - Cusp of the house
பிரசன்ன சோதிடம் - Horary Astrology
பிராணம் - Pranam
பிரபஞ்சம் - Universe
பிருகு இலை - Birgu Leaves
பிறந்த (ஜென்ம) நட்சத்திரம் - Birth Constellation
பீட்டா ஏரிட்டீஸ் - Betqurieties
புதன் - Mercury
புளூட்டோ, குபேரன் - Pluto
புனர்பூசம் - Punarva
பூசம் - Pushya
பூமி, நிலம் - Earth
பூரட்டாதி - Purvabhadra Pada
பூரம் - Purvaphalguni
பூராடம் - Purvashadha
பெண் - Virgin
பெயர் எண் - Name Number
பொதுச் சோதிடம் - - General Astrology
பொறிச்சம், வெளிப்பாடு - Speculation
பேரியல் சோதிடம் - Macro Astrology
பௌர்ணமி - Full Moon
மகம் - Makha
மகரம் - Capricorn
மரபுத்தன்மை - Heredity

மருத்துவச் சோதிடவியல் - Medical Astrology
மனோதத்துவ சோதிடம் - Psycho Astrology
மாந்தி, குளிகன் - Titan
மிதுனம் - Gemini
மிருகசீரிடம் - Mrigasira
மின்காந்த சக்தி - Electro Magnetic Waves
மின் விசை - Electro Dynamics
மீன் - Fish
மீனம் - Pisces
முகூர்த்த சாத்திரம் - Catarachic Astrology, Electional Astrology
மூலம் - Moola
மேடம் - Aries
மேலை மருத்துவம் - Allopathy
மேனாட்டுச் சோதிடம் - Western Astrology
மேனாட்டு முறை - Western System, Sidreal System
யவனர் சோதிடம் - Greek Astrology
யாகங்கள் - Theurgy
யுரேனஸ் (திருதி) -Uranus
யோகம் - Yogam
ரேவதி - Revathi
ரோகிணி - Rohini
ரோசிகுரிசியனிசம் - Rosicrucianism
வக்கிரகதி - Retrograde Motion
வரைவடிவக் கணக்கு - Geomentry
வாக்யக் கணிதம் - Vak System
வாயு - Air
வானமண்டலப் பட்டை - Zodiac
வானவியல் - Astronomy
வானிலை - Meteorology
வானிலைக் கணிப்பு - Astro Meteorology
விசாகம் - Visakha
விண்மீன்கள் - Decan Stars
விண்வெளி ஒளி - Zodical Light
விண்வெளிக் கதிர் - Cosmic Rays
விண்வெளிச் சகுனம் - Celestial Omen
விரிச்சி - Voice
விருச்சிகம் - Scorpio
வில் - Archer
வேதியியல் பொருட்கள் - Chemicals
ஸ்ரீபதி பத்ததி - Sripathy System
ஹோமியோபதி - Homeopathy
ஜூன் - Gene
ஸ்திரராசி - Fixed Zodiac
ஸ்பைகா - Spica

★ ★ ★

# சொல்லடைவு

★ ★ ★

# பின்னிணைப்புகள்

## இணைப்பு : 1

# நாடிசோதிட மருந்தியல்

### (உண்மை நிகழ்ச்சி)

'ஜீவநாடி' எனப்படும் சோதிடம் சார்ந்த சுவடிகளில் மருத்துவக் குறிப்புகள் ஏராளமாக மறைபொருளாகச் சித்தர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன! 'நாடிசோதிட மருந்தியல்' எனும் பெயரில் இவற்றைத் தொகுத்து ஆராய்ந்தால் பல அரிய மருந்துக் குறிப்புகள் உலக மருத்துவ ஆய்வுக்குக் கிடைக்கும். மனித உடம்பிலிருந்து வெளிப்படும் 'ஒலி-ஒளி' அதிர்வு அலைகளின் உதவியால், சிலவகைப் பயிற்சிகள் மூலம் உடலின் உள்ளுறுப்புகளின் கோளாறுகளை ஆராய்ந்தறிந்து, தக்க மருத்துவச் சிகிச்சை மூலம் நிவர்த்திக்கலாம். இதனை "Cosmic-Scan' என்று குறிப்பிடுவது பொருத்தமாகும்.

அப்படிப்பட்ட "Cosmic-Scan' மூலம் அறியப்பட்ட 'இதய நாள இறுக்க நோய்க்கான' அறிகுறிகளும் அதற்கான சிகிச்சை முறை பற்றியும் கீழ்க்கண்டவாறு காணலாம்:

ஸ்ரீ காகபுஜண்ட மகரிஷி என்பவர் பதினெண் சித்தர்களுள் மூத்தவராவார். அவரின் அருள்வாக்கினை நாளும் நாடி சோதிட மருந்தியல் மூலம் படித்துப் பலருக்கும் தீர்வு அளிக்கின்றார் ஞான வாசிஷ்ட சிகரம் ஸ்ரீ ரமணி குருஜி அவர்கள். சென்னையில் கிழக்குத் தாம்பரத்தில் சேலையூரில் எண்.18, ஸ்ரீசக்தி அருட்கூடம் அலமேலுபுரம் எனும் இடத்தில் அமைந்திருக்கும் இத்தலத்தில் நாள்தோறும் காலை, மாலை இத்தகு "Cosmic-Scan' பற்றிய நாடிகள் படிக்கப்படுகின்றன. அரசியல், பொருளியல், நாட்டின் எதிர்காலம், தனிப்பட்ட மனிதர்களின் வாழ்க்கைப் பிரச்னைகள் பற்றியெல்லாம் இத்தகு 'நாடி' சோதிடத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

இவை அறிவியல் ஆய்வுக்கு அப்பாற்பட்டதெனினும், அத்தகு அருள்வாக்குகள் தொல்காப்பியர் காலத்திலிருந்தே நிலவிவருவதைக் கீழ்க்கண்ட நூற்பா குறிப்பிடுகின்றது.

''மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயம்'

இந்த ஆய்வாளர் (டாக்டர் க. வேங்கடேசன்) பலமுறை பல அன்பர்களின் உடல்நிலை பற்றி "Cosmic-Scan' மூலம் பல மருத்துவ ஆய்வுக் குறிப்புகளைப் பதிவு செய்துள்ளார். அவற்றுள் ஒன்று ஈண்டு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டுள்ளது.

வேலூரைச் சேர்ந்த 70 வயது முதிர்ந்த திரு. A. குப்புசாமி என்பவர் 1975 ஆம் ஆண்டிலிருந்து இதயநாள இறுக்க நோயினால் அவதிப்பட்டு வருபவராவார். Ischamic heart disease என்பது அவருடைய E.C.G. ஆய்வறிக்கை தந்த கணிப்பாகும்.

1990ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இவர் உடல்நிலை பாதிக்கப்பட்டபோது இவருடைய மகள் திருமதி ருக்மணி அவர்கள் சென்னையில் ஞானவசிஷ்ட சிகரம் திரு. ரமணி குருஜி அவர்களிடம் தம் தந்தையின் உடல்நிலைப் பற்றிச் சுருக்கமாகக் கூறி அதற்குப் பரிகாரம் கேட்டார். அப்போது திரு. ரமணி குருஜி அவர்கள் ஸ்ரீ புஜண்ட மகரிஷியின் சுவடியைப் பிரித்துப் படித்த அருள்வாக்கு வருமாறு:

**கருணைமலை காகபுஜண்டர் அளிக்கும்**
**இதயநோய் மருந்து!**

'உதிரக் குடுவையின் வலது மேல் உறை தசை நாளத்தின் கீழ்ப்பகுதி அமுக்கம் கொண்டது! நச்சு ஒத்து அழற்சி கொண்டுள்ளது. சுவாச உப்புசத்தின்போது திடீர்த் தடை ஒத்த வேதனை! சோர்வு!

'உதிரக்குடுவை' என்றால் இதயம் என்பதாகும். இதயத்தில் வலதுமேல் உறை தசைநாளத்தின் கீழ்ப்பகுதி கொழுப்புச் சத்து அடைப்பு காரணமாக இறுகி அமுக்கம் கொண்டதால் அந்தப் பகுதி நஞ்சுமயமாகி இரணமாகி வருகிறது. இதன் பாதிப்பால் மூச்சு விடும்போது ரத்த ஓட்டம் திடீர்த் தடையாகி இதயத்தில் வலியும், சோர்வும் ஏற்படுகிறது

-என்று IHD நோயினைத் துல்லியமாக 'நாடி சோதிடம்' மூலம் விளக்கிடும் ஸ்ரீ காகபுஜண்டர் பெருமான், அதற்கு மருத்துவத் தீர்வாக,

**பொன்னாங்கண்ணிக் கீரை**
**அகத்திப்பூ**
**ஆவாரம்பூ**
**செம்பரத்தம்பூ**

இந்த நான்கில் ஒவ்வொன்றையும் தனித்தனியே வேகவைத்து உண்டுவர உள் அழற்சி ஆறி நோய் நீங்கும் என்கின்றார்.

பொன்னாங்கண்ணிக் கீரையை மிளகு, சீரகம், துவரம் பருப்புடன் பொறியல் செய்து சாப்பிடவும்.

அகத்திப் பூவையும் அவ்வாறே பொறியல் செய்து பகல் உணவில் 1 பிடி சாதத்துடன் பிசைந்து உண்ணலாம்.

ஆவாரம்பூவையும் அவ்வாறே பகலுணவில் பாசிப் பருப்பு, பூண்டுடன் அவியலாகச் சமைத்துப் பகல் உணவில் 1 பிடி சாதத்துடன் பிசைந்து சாப்பிடலாம்.

'சொக்கன் மலர்' எனப்படும் 'செம்பரத்தம் பூ'வை 3 எடுத்து 1 குவளைத் தண்ணீரில் காய்ச்சி கஷாயமாக்கி வடிகட்டி தேன் கலந்து வேளை பருகிவர IHD நோயிலிருந்து விடுபடலாம் என்பது மருந்துத் தீர்வாகும்.

மூன்று காலமும் உணர்த்தவல்ல ஸ்ரீ காகபுஜண்ட மகரிஷியின் அருள்வாக்கில் மலர்ந்த இந்த இதயநாள இறுக்க நோய்க்கு மேற்கண்ட 'மூலிகை மருந்தை'த் தயாரித்துச் சாப்பிட்டுவர நிச்சயம் பூரண குணமளிக்கும், ஐயமே வேண்டாம்! பின்விளைவு கடுகளவும் ஏற்படாது!

இத்தகைய 'நாடிஜோதிட மருத்துவக் கணிப்புகளைத்' தொகுத்து ஆய்வாளர் தனிநூலே வெளியிட்டுள்ளார். 'ஸ்ரீ கருணைமலை காகபுஜண்டரின் மருத்துவ முறைகள்' எனும் பெயரில் நூல் வெளிவந்துள்ளது. நவீன மருத்துவ உலகம் அறியாத இந்தத் துறை பல அரிய தகவல்களை மருத்துவப் புதையலாகக் கொண்டுள்ளது.

இத்தகு 'நாடிசோதிட மருத்துவக் குறிப்புகள்' மருத்துவ ஆய்வுக்குப் புதிய பாதையை வகுப்பதாகும்!

தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம்

மூலிகை மணி க. வேங்கடேசன் (பின்னிணைப்பு)

## இணைப்பு: 2

### சென்னை உத்தர, அட்சாம்சம் 13° (Latitude)

| இராசி | சாயனப் படி இராசி நாழிகைகள் நா. - விநா. | நிராயனப் படி இராசி நாழிகைகள் நா. - விநா. | இராசி இனங்கள் |
|---|---|---|---|
| மேடம் | 4-11 | 4-29 | தீ - சரராசி |
| இடபம் | 4-36 | 5-04 | நிலம் - ஸ்திரம் |
| மிதுனம் | 5-13 | 5-27 | காற்று - உபயம் |
| கடகம் | 5-32 | 5-22 | நீர் - சரம் |
| சிம்மம் | 5-20 | 5-08 | தீ - ஸ்திரம் |
| கன்னி | 5-03 | 5-04 | நிலம் - உபயம் |
| துலாம் | 5-03 | 5-16 | காற்று - சரம் |
| விருச்சிகம் | 5-20 | 5-28 | நீர் - ஸ்திரம் |
| தனுசு | 5-32 | 5-19 | தீ - உபயம் |
| மகரம் | 5-13 | 4-46 | நிலம் - சரம் |
| கும்பம் | 4-36 | 4-17 | காற்று - ஸ்திரம் |
| மீனம் | 4-11 | 4-11 | நீர் - உபயம் |
| மொத்தம் | 59-50 | 59-51 | 3 பூதங்கள் |

## இணைப்பு: 3

| விஞ்ஞானத்தின்படி கால அளவுகள் | சோதிடத்தின்படி கால அளவுகள் |
|---|---|
| ஒருநாள் என்பது 24 மணி நேரம்<br>ஒரு மணி நேரம் என்பது 60 நிமிடம்<br>ஒரு நிமிடம் என்பது 60 விநாடிகள்<br>ஒரு மைக்ரோ விநாடி என்பது 10 (இலட்சத்தில் 1 பங்கு) | ஒரு நாள் என்பது 60 நாழிகைகள்<br>ஒரு நாழிகை என்பது 60 விநாழிகைகள்<br>ஒரு விநாழிகை என்பது 60 லிப்தம்<br>ஒரு லிப்தம் என்பது 60 பரா. |
| ஒரு விநாடி என்பது சீசியம் தாது அணுவின் கால வட்ட நேர அதிர்வுகளின் எண்ணிக்கை ஆகும். இது ஒரு விநாடிக்கு 9192631770 அதிர்வுகள் வெளிப்படுத்தும். இவ்வாறாக | ஒரு பரா என்பது 60 தத்பரா அதாவது 777600000 தத்பராக்கள் கொண்டதே ஒரு நாள் ஆகும். இவ்வாறாக நாழிகை அளவு சுருக்கப்படுகிறது. அதேபோல் காலஅளவு பெருக்கப்பட்டு நாழிகை, |

| | |
|---|---|
| ஒரு விநாடி கால அளவு சுருக்கப்படுகிறது. அதேபோல் கால அளவு பெருக்கப்பட்டு ஒரு மணி, 24 மணி, ஒரு வாரம், மாதம், ஆண்டு, காஸ்மிக் ஆண்டு (25 கோடி) எனப் பல பேதமாய்க் காலம் வளர்கின்றது. | முகூர்த்தம், சாமம், பகலிரவு, வாரம், பட்சம், மாதம், அயனம், ருது, ஆண்டு, யுகம், மகாயுகம், தேவயுகம், கற்பம் எனப்பல பேதமாய்க் காலம் வளர்கின்றது. |
| 2 ½ நாழிகை | 1 மணி நேரம் |
| 1 முகூர்த்தம் | 2 ½ நாழிகை |
| 1 நாழிகை | 24 நிமிடங்கள் |
| 1 நிமிடம் | 2 ½ விநாழிகைகள் |
| 60 விநாழிகைகள் | 1 நாழிகை |

## இணைப்பு : 4

### சூரியன் சுழற்சிக்காலம்

| | இராசிகள் | பழைய 12 இராசிகளின் சுழற்சிக்காலம் | புதிய 13 இராசிகளின் சுழற்சிக் காலம் |
|---|---|---|---|
| 1. | மேடம் | மார்ச் 21-ஏப்.20 | ஏப்.19-மே.13 |
| 2. | இடபம் | ஏப்.21-மே 20 | மே 14-ஜூன் 20 |
| 3. | மிதுனம் | மே 21-ஜூன் 20 | ஜூன் 21-ஜூலை 19 |
| 4. | கடகம் | ஜூன் 21-ஜூலை 20 | ஜூலை 20- ஆக. 9 |
| 5. | சிம்மம் | ஜூலை 21-ஆக21 | ஆக. 10-செப்.15 |
| 6. | கன்னி | ஆக.22 - செப்.22 | செப்.16-அக்.30 |
| 7. | துலாம் | செப்.23-அக்.22 | அக்.31-நவ.22 |
| 8. | விருச்சிகம் | அக்.23-நவ.22 | நவ.23-நவ.29 |
| *9. | ஒபியச்சுஸ் | - | நவ.30-டிச.17 |
| 10. | தனுசு | நவ.23-டிச.20 | டிச.18-ஜன.18 |
| 11. | மகரம் | டிச.21-ஜன.19 | ஜன.19-பிப்.15 |
| 12. | கும்பம் | ஜன.20-பிப்.18 | பிப்.16 மார்ச்.11 |
| 13. | மீனம் | பிப்.19-மார்ச்.20 | மார்ச் 12 ஏப்.18 |

# இணைப்பு: 5

| இராசிகள் | உறுப்புகள் | நோய்கள் |
|---|---|---|
| மேடம் | தலை, பெருமூளை | கோமா, சித்தப்பிரமை, மூளை தொடர்பான நோய்கள் |
| இடபம் | கல்லீரல், கழுத்து, காதுகள், கீழ்த்தாடை, சிறுமூளை, தொண்டை, பித்தப்பை | கழுத்து, தொண்டை தொடர்பான நோய்கள், தைராய்டு, மலச்சிக்கல், மாதவிடாய்த் தொந்தரவு, மூலம். |
| மிதுனம் | கைகள், சுவாசக்குழாய், தோள்பட்டை, நுரையீரல்கள், விரல்கள் | ஆஸ்துமா, இருமல், காசநோய், கைகள் தொடர்பான நோய்கள், சளி, வறட்டிருமல் |
| கடகம் | நெஞ்சு, மண்ணீரல், வயிறு | எளிதில் வயிற்றுத் தொந்தரவுகள், இருமல், சித்தப்பிரமை, மஞ்சள் காமாலை, வயிற்றுவலி, வாயுத்தொந்தரவு |
| சிம்மம் | இதயம் | இரத்த ஓட்டம், இரத்த சோகை, நாடித்துடிப்பு, மயக்கம், முதுகுவலி. |
| கன்னி | குடல்கள், நாபிவளை [illegible] | காய்ச்சல், காலரா, குடல் தொடர்பான நோய்கள், வயிற்றுவலி, வைட்டமின் குறைபாடு |
| துலாம் | அடிவயிறு, இடுப்பு, [illegible] மூத்திரக்காய்கள் | கருப்பை வீக்கம், குடலிறக்கம், சிறுநீரகச் சிக்கல்கள், தோல் நோய்கள் |
| விருச்சிகம் | அறையிடுக்குகள், ஆசனம், பிறப்புறுப்புகள், மூத்திரப்பை | கருப்பை, குதம், சிறுகுடல், சிறுநீர்ப்பை, பிறப்புறுப்பு நோய்கள் |
| தனுசு | இடுப்பு, இரத்தக்குழாய், தொடை | சிறுநீர்க் கற்கள், மாதவிலக்குத் தொல்லைகள் |
| மகரம் | முட்டி | சீரணக் குறைபாடுகள், தோல்நோய், தொழுநோய், முடக்குவாதம், முட்டி-முழங்கால் பாதிப்பு. |
| கும்பம் | கால் | இதயம் தொடர்பான தொந்தரவுகள், கால், கால்மூட்டுக் குறைபாடுகள், முடக்குவாதம், யானைக்கால் |
| மீனம் | பாதம் | சிறுகுடல், பாதம் தொடர்பான நோய்கள், போதைப் பொருட்கடிமையாவதால் ஏற்படும் நோய்கள் |

## இணைப்பு: 6

| வீடு | உறுப்புகள் | நோய்கள் |
|---|---|---|
| பிறந்த இலக்னம் அல்லது முதல் வீடு | தலை | சித்தப்பிரமை, தலைவலி, மலேரியா |
| 2 | தொண்டை, தைராய்டு சுரப்பி, நாக்கு, பற்கள், முகம், மூக்கு, வலக்கண் | உடல்பருமன், கட்டிகள், தொண்டை வீக்கம் |
| 3 | தைராய்டு சுரப்பி, வலக்கண் | ஆஸ்துமா, முடக்குவாதம் |
| 4 | நுரையீரல், மார்புக்கூடு, வயிறு, விலா எலும்பு | புற்று நோய் |
| 5 | இதயம், கல்லீரல், குடல் | சீரணக் குறைபாடுகள், நீரிழிவு, மயக்கம் |
| 6 | குதம், சிறுநீரகம் | இரகசிய நோய், வயிற்றுப் போக்கு, பாலுணர்வு |
| 7 | கர்ப்பப்பை | சுளுக்கு, பிரைட்ஸ் நோய் |
| 8 | பிறப்புறுப்புகள் | நரம்புத் தளர்ச்சி, வயிற்றுப்புண் |
| 9 | இடுப்பு, தொடை | பக்கவாதம் |
| 10 | நகம், முழங்கால் | குஷ்டரோகம், தோல் தொடர்பான வியாதி |
| 11 | இரத்த ஓட்டம், கால்கள், வலக்காது | நரம்பு பாதிப்பு |
| 12 | இடக்கண் | காசநோய் |

# இணைப்பு: 7

| கோள்கள் | உறுப்புகள் | நோய்கள் |
|---|---|---|
| சூரியன் | இதயம், தொண்டை, நுரையீரல், மூளை, வலக்கண் | இதய நோய், கண்பாதிப்பு, காக்காவலிப்பு, தலைவலி, படபடப்பு, வழுக்கை |
| சந்திரன் | இடக்கண், கர்ப்பப்பை, சுரப்பிகள், மார்பகம் | உடலின் பலவிதமான திரவம் உற்பத்தியாகும் (இரத்தம், நிணநீர், கழிவுப்பொருள்) பாகங்களில் இதய மற்றும் சுவாச உறுப்புகளின் பாதிப்பு, கர்ப்பப்பை பாதிப்பு, காசநோய், தொண்டை வியாதி, தோல் தொடர்பான வியாதி, மனபாதிப்பு, வயிற்றுப் போக்கு. |
| செவ்வாய் | சிறுநீரகம், தசைநார்கள், பித்தப்பை, மூக்கு | இரணியா, இரத்தம் தொடர்பானவை, இரத்தழுத்தம், தலைவலி, நரம்புத்தளர்ச்சி, இரகசிய நோய்கள், விபத்துகள், வெட்டுக்காயம் |
| புதன் | தோல், நாக்கு, நுரையீரல், முடி, வாய் | ஆண்மைக்குறைவு, ஆஸ்துமா, கழுத்துப்புண், கைநோய், நரம்புத் தொந்தரவு, நாக்கு, வயிறு, வாய் தொடர்பான நோய்கள் |
| குரு | இடக்காது, இடுப்பு, இரத்த ஓட்டம், கல்லீரல், தொடை | அழற்சி, இரத்தச்சோகை, கட்டி, குடல் பாதிப்பு, வேக்காடு |
| சுக்கிரன் | கன்னம், நீர்குண்டிக்காய், முகவாய்க்கட்டை | உறுதியற்ற தன்மை, கண்நோய், சிறுநீரகக் கற்கள், சிறுநீரகத் தொந்தரவு, சூலநோய், தளர்ந்த அல்லது வெளிப்பிதுக்கம், தோல் நோய், பால்நோய் |
| சனி | எலும்புகள், கால், வலக்காது | அசைவுகள் கட்டுப்படுத்தப்படல், குளிர், குரக்களை பிடித்தல், பக்கவாதம், புற்றுநோய் |
| இராகு | முழங்கால், மூட்டு எலும்பு, கீல்கள் | காசநோய், குடல்புண், தொழுநோய், நுரையீரல் தொந்தரவு, மயக்கம், மூச்சுப்பிடிப்பு, விசம் உண்ணல் |
| கேது | உள்ளங்கால் | இரத்தழுத்தம், காது தொந்தரவு, குடல் புழுக்கள், சரியான காரணம் அறிய முடியாத நோய்கள், தொற்றுநோய்கள், மயக்கம், விசம் உண்ணல் |

# இணைப்பு: 8

## மருத்துவம் செய்ய - மாதம், நாள், நட்சத்திரம், திதி, இலக்னம்

### திங்கள்

சித்திரை, வைகாசி உத்தமமான காலம்
ஆனி, ஆடி - மத்தியமான காலம்
இதர மாதங்கள் - தீமை பயக்கும்

### நாட்கள்

ஞாயிறு, திங்கள் - உத்தமம்
செவ்வாய், வியாழன், வெள்ளி - மத்திமம்
புதன், சனி - அதமம்

### நட்சத்திரங்கள்

அசுவினி, கேட்டை, ஆயில்யம், பூரட்டாதி - உத்தமம்.
சுவாதி, மூலம், கார்த்திகை, மிருகசீரிடம்,
மகம், உரோகிணி, பரணி, இரேவதி, திருவோணம்
- மத்திமம்.
மற்றைய நட்சத்திரங்கள் - தீமை பயக்கும்

### திதிகள்

பஞ்சமி, துவிதிகை, அட்டமி, சதுர்த்தி, சப்தமி, தசமி
- உத்தமம்
திருதிகை, துவாதசி, திரியோதசி - மத்திமம்
பிரதமை, சஷ்டி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி,
அமாவாசை - அதமம்

### இலக்னம்

கும்பம், கடகம் - உத்தமம்
இடபம், மேடம், கன்னி, மகரம், துலாம்,
தனுசு, மீனம் - மத்திமம்
சிம்மம், மிதுனம், விருச்சிகம் - அதமம்

# இணைப்பு: 9

## நன்மை தராத மாதமும் நாட்களும்

| | |
|---|---|
| வைகாசி 3, 16, 17 | உடலில் நோய் தோன்றும் |
| ஆனி 1, 6 | உடலில் காயங்கள் உண்டாகும் |
| ஆடி 2, 10, 27 | உடல் தளர்ச்சி, சிற்றிரைப்பு, சோகை, கருச்சிதைவு ஏற்படும் |
| ஆவணி 2, 9, 28 | பெண் பூப்படைந்தால் மலடியாவாள் |
| புரட்டாசி 9, 16, 20 | உண்டாகிய சூல் கலையும், பூப்படைந்தால் கணவனை இழப்பாள் |
| ஐப்பசி 6ஆம் நாள் | பூப்படைந்த பெண்ணின் வாழ்நாள் போம், திருமணம் முடிந்தாலும் துன்பம் தோன்றும் |
| கார்த்திகை முதல் செவ்வாய், 10, 17 ஆகிய நாட்கள் | வாழ்வு குன்றும், கருப்பம் குலையும் |
| மார்கழி 9, 10 கரிநாள் | பூப்படைந்தால் குழந்தை உண்டாதலில் குறை ஏற்படும்; பாதப் பிளவை உண்டாகும். வன்மை குறையும். |
| தை 2, 3, 11 கரிநாள் | பூப்படைந்தால் தீமையடைவர் |
| மாசி 15, 16, 17 | பூப்படைந்தால் தாலியிழப்பர்; வாழ்நாள் குறைவுபடும்; தொடங்கிய பிணி கொன்று விடும். |
| பங்குனி 14, 15, 19 | பூப்பெய்தினால் தாலிக்கு நட்டம் காணும்; பெருமை குலையும்; கருச்சிதைவு ஏற்படும். |

## இணைப்பு: 10

## நட்சத்திரங்களும் நோயும் அதன் தீர்வும்

| | | நோய் தீரும் நாள் | | | |
|---|---|---|---|---|---|
| எண் | நட்சத் திரம் | ஒன்றாங் கால் | இரண்டாங் கால் | மூன்றாங் கால் | நான்காங் கால் |
| 1. | அசுவினி | 9 | கொல்லும் | 15 | கொல்லும் |
| 2. | பரணி | 3 | 7 | 15 | 15 |
| 3. | கார்த்திகை | 9 | 10 | 15 | 48 |
| 4. | உரோகிணி | 10 | 18 | 32 | 82 |
| 5. | மிருகசீரிடம் | 30 | 28 (அல்லது தீராது) | 15 | 35 |
| 6. | திருவாதிரை | 9 | மரணம் | 10 | 25 |
| 7. | புனர்பூசம் | 7 | 10 | 18 | மரணம் |
| 8. | பூசம் | 7 | 12 | 9 | 27 |
| 9. | ஆயில்யம் | 9 | 20 | 20 | 39 |
| 10. | மகம் | மரணம் | 30 | 85 | 5 |
| 11. | பூரம் | மரணம் | 25 | 26 | 81 |
| 12. | உத்திரம் | 8 | 30 | 52 | மரணம் |
| 13. | அத்தம் | 8 | 15 | 28 | 82 |
| 14. | சித்திரை | 9 | 15 | 12 | 41 |
| 15. | சுவாதி | 12 | மரணம் | 88 | 12 |
| 16. | விசாகம் | 9 | 3 | 40 | 81 |
| 17. | அனுசம் | மரணம் | 20 | 90 | 40 |
| 18. | கேட்டை | மரணம் | 29 | 31 | 82 |
| 19. | மூலம் | மரணம் | 9 | 10 | 18 |
| 20. | பூராடம் | 9 | மரணம் | 10 | 54 |
| 21. | உத்திராடம் | 7 | 20 | 50 | 40 |
| 22. | திருவோணம் | 11 | 10 | 8 | மரணம் |
| 23. | அவிட்டம் | 9 | 15 | 32 | 39 |
| 24. | சதயம் | 7 | 10 | 4 | 5 |
| 25. | பூரட்டாதி | மரணம் | 16 | 71 | 41 |
| 26. | உத்திரட்டாதி | 7 | 18 | 7 | 28 |
| 27. | இரேவதி | மரணம் | 11 | 18 | 26 |
| | | | புலிப்பாணி வைத்தியம் — | | 500 |

## இணைப்பு: 11

| நட்சத்திரங்கள் | சரக்குகள் |
|---|---|
| 1. அனுசம் | அமுரியுப்பு |
| 2. அசுவனி | ஆட்டுப்பு |
| 3. கார்த்திகை | குதிரையுப்பு |
| 4. பரணி | மாட்டுப்பு |
| 5. உரோகிணி | கழுதையுப்பு |
| 6. மிருகசீரிடம் | தாளகம் |
| 7. திருவாதிரை | வீரம் |
| 8. புனர்பூசம் | கெவுரி |
| 9. பூசம் | வெள்ளை |
| 10. ஆயில்யம் | லிங்கம் |
| 11. மகம் | மி.சிங்கி |
| 12. பூரம் | இரசகற்பூரம் |
| 13. அஸ்தம் | கெந்தி |
| 14. சித்திரை | காந்தம் |
| 15. சுவாதி | வெள்ளெருக்கு |
| 16. கேட்டை | வெடியுப்பு |
| 17. மூலம் | உவருப்பு |
| 18. பூரம் | கரியுப்பு |
| 19. பூராடம் | சுண்ணாம்பு |
| 20. உத்திரம் | புனுகு |
| 21. உத்திராடம் | சீனம் |
| 22. திருவோணம் | வெண்காரம் |
| 23. அவிட்டம் | நவச்சாரம் |
| 24. சதயம் | துருசு |
| 25. பூரட்டாதி | காதுகுரும்பி |
| 26. உத்திரட்டாதி | சவுக்காரம் |
| 27. இரேவதி | சிப்பிநீர் |

## இணைப்பு: 12

| கோள்கள் | நவரத்தினங்கள் | தீரும் நோய்கள் | உலோகங்கள் | நவதானியங்கள் | மலர்கள் | சமித்துகள் |
|---|---|---|---|---|---|---|
| சூரியன் | மாணிக்கம் | வயிற்றுப்புண் | தாமிரம் | கோதுமை | குங்குமப்பூ | எருக்கு |
| சந்திரன் | முத்து | இதயநோய், காசநோய், மனநோய். | ஈயம் | நெல் | வெள்ளலரி | முறுக்கு |
| செவ்வாய் | பவழம் | தலைவலி | செம்பு | துவரை | சண்பகம் | கருங்காலி |
| புதன் | மரகதம் | ஆஸ்துமா கட்டி, இருமல் | பித்தளை | பச்சைப்பயறு | வெண் காந்தள் | நாயுறுவி |
| வியாழன் | புஷ்பராகம் | மஞ்சள்காமாலை மூட்டு வியாதி | பொன் | பச்சைக்கடலை | முல்லை | அரசு |
| சுக்கிரன் | வைரம் | தோல்-கர்ப்பப் பை வியாதி | வெள்ளி | மொச்சை | வெண் தாமரை | அத்தி |
| சனி | நீலக்கல் | நீடித்த நோய்கள் | இரும்பு | என் | கருங்குவளை | வன்னி |
| இராகு | கோமேதகம் | தோல்நோய்கள் | கருங்கல் | உளுந்து | மந்தாரை | அறுகு |
| கேது | வைடூரியம் | இரத்தக்கொதிப்பு | துருக்கல் | கொள்ளு | செவ்வல்லி | தர்ப்பை |

## இணைப்பு: 13

| 12 இராசிகள் | நவ இரத்தினங்கள் |
|---|---|
| மேடம், விருச்சிகம் | நற்பவளம், பிளட் ஸ்டோன் |
| இடபம், துலாம் | வைரம், டர்கு, வாயஸ் ஜிர்கான் |
| மிதுனம், கன்னி | மரகதம், ஆனெக்ஸ் ஜேடு |
| கடகம் | நல்முத்து, சந்திரகாந்தக்கல் வெண் பவளம், ஓபல் |
| சிம்மம் | சிவப்பு மாணிக்கம், கார்னெட் |
| தனுசு, மீனம் | புஷ்பராகம், கனகபுஷ்பராகம் |
| மகரம், கும்பம் | நீலம், கிருஷ்ணகாந்தக்கல், அயோலைட் |
| காட்டு : | |
| இடபம், துலாம் | நல்ல வைரத்தை வெள்ளி மோதிரத்தில் அணியலாம் |
| மிதுனம், கன்னி | மரகதக் கல்லை ஐம்பொன்னால் செய்த மோதிரம் |
| தனுசு, மீனம் | புஷ்பராகக் கல்லைத் தங்கத்தால் செய்த மோதிரம் |
| மகரம், கும்பம் | நீலக்கல் அல்லது நீல வைரம், கிருஷ்ணகாந்தக்கல், ஐம்பொன் |
| கடகம் | நல்முத்து, வெண்பவளம், சந்திரகாந்தக் கல் - தங்கமோதிரம் |
| சிம்மம் | மாணிக்கம், கார்னெட் - தாமிரத்தால் செய்த மோதிரம் |

## இணைப்பு: 14

| எண் | இராசிகள் | உயிர் உப்புகள் |
|---|---|---|
| 1. | மேடம் | காலி, பாஸ்பாரிகம் |
| 2. | இடபம் | நேட்ரம், சலப்பியூரிகம் |
| 3. | மிதுனம் | காலி, மூரியாடிகம் |
| 4. | கடகம் | கல்கேரியா, புளோரிகம் |
| 5. | சிம்மம் | மெக். பாஸ் |
| 6. | கன்னி | காலி. சல்ப் |
| 7. | துலாம் | நேட்ரம். பாஸ் |
| 8. | விருச்சிகம் | கல்கே. சல்ப் |
| 9. | தனுசு | சிலிகா |
| 10. | மகரம் | கல்கே. பாஸ் |
| 11. | கும்பம் | நேட்ரம், மூரியாடிகம் |
| 12. | மீனம் | பெர்ரம். பாஸ் |

# இணைப்பு: 15

## ஸ்தானப் பலன்கள் (வீட்டுப் பலன்)

| வீட்டு எண் (ஸ்தானம்) | பலன்கள் |
|---|---|
| 1-இலக்னம் | உயிர், ஜீவன், தேகம், தோற்றம், கீர்த்தி, ஜாதி. பந்துக்களால் நலம், ஆசாரம், ஆரோக்கியம், சிரசு முதலியன. |
| 2ஆம் இடம் | நவமணி, நவதானியம், வாக்கு, குடும்பம், தனம், வலக்கண் முதலியன. |
| 3ஆம் இடம் | இளைய சகோதரம், காது, வீரியம், போகம், ஆளடிமை, பொறுமை, சகோதரத்துவம். |
| 4ஆம் இடம் | கல்வி, தாய், சுகம், வீடு, வாகனம், புதையல், கைகள், வியாபாரம் முதலியன. |
| 5ஆம் இடம் | பூர்வபுண்ணியம், புத்தி, மனம், சந்ததி, மாமன், புத்திரம், தவம், யோகம் முதலியன. |
| 6ஆம் இடம் | ரோகம், எதிரி, நோய், திருட்டு, வழக்கு, துன்பம், மறதி, சிறை, கடன் முதலியன. |
| 7ஆம் இடம் | மனைவி, காமம், காதல், சங்கீதம், ஜனவசியம், சினிமா, கூத்து, எலும்பு முதலியன. |
| 8ஆம் இடம் | ஆயுள், மரணவழி, திருட்டு, பாவம், நோய், துக்கம், ஜீவ ஹிம்சை, விபத்து, கோபம் முதலியன. |
| 9ஆம் இடம் | தந்தை, பாக்யஸ்தானம், குருபக்தி, தெய்வம், முன்பிறவி, தவ யாத்திரை, தர்மம், சுபம் முதலியன. |
| 10ஆம் இடம் | தொழில், காரியம், இராஜாதிகாரம், தயை, தானம், யாகம், முழங்கால், மழை முதலியன. |
| 11ஆம் இடம் | லாபம், முதல் சகோதரம், பல மனைவியர், ராஜபல்லக்கு, கோடீஸ்வரன், துக்க நிவர்த்தி, பிறர் பொருளாசை, கணைக்கால், வாகனம் முதலியன. |
| 12ஆம் இடம் | தனச்செலவு, ஜனவிரோதம், ஞானம், மோட்சம், சயனம், நரகம், சொர்க்கம், தீர்த்தயாத்திரை முதலியன. |

## இணைப்பு: 16

# வராகமிகிரர்

விக்ரமாதித்தன் அரசவையில் பல சோதிடர் இருந்தனர். அவர்களுள் மிகிரர் மிகவும் புகழ் பெற்றவராகவும் புத்திசாலித்தனம் உடையவராகவும் திகழ்ந்தார். விக்கிரமாதித்தனுடைய மகனுக்கு மிகிரரும் பிற சோதிடரும் 'சாதகம்' கணித்தனர். மிகிரரைத் தவிர மற்ற சோதிடரனைவரும் இளவரசனுக்குப் பதினெட்டு வயதில் கண்டம் இருப்பதாக, உயிருக்கு ஆபத்து இருப்பதாகக் கூறினர். ஆயின் எவ்வகையான ஆபத்து, எவ்வகையில் உயிர் போகும் என்று கூறியதில் அவர்களிடையே கருத்து வேறுபாடு இருந்தது. ஆயின் மிகிரர், குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் ஆண் காட்டுப் பன்றியினால் இளவரசன் கொல்லப்படுவான் என்று கூறினார். மேலும், எவ்வித மனித முயற்சியும் பரிகாரமும் சாவின் பிடியிலிருந்து இளவரசனைக் காப்பாற்ற முடியாது என்றும் கூறினார். இளவசரசர் நல்ல உடல்நலத்துடன் வளர்ந்து வந்தார். அந்தக் குறிப்பிட்ட ஆண்டின் சில மாதங்களுக்கு முன்பிருந்தே இளவரசருக்கு மிகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது. மிகிரர் முன்பே குறிப்பிட்ட ஆண்டின், குறிப்பிட்ட நாளன்று காலையில் அரசர் அவையைக் கூட்டினார். மிகப்பெரிய கூட்டம் கூடியிருந்தது. அப்பொழுது அரசர் மிகிரரிடம் அவருடைய கணக்கீட்டை மீண்டும் சரிபார்த்துக் கூறும்படி கேட்கிறார். அவரும் முன்னரே முன்னறிவிப்புச் செய்திருந்த இன்றைய நாள் மாலை 4 மணிக்கு இளவசரருடைய உயிர் போகும் என்று தாம் கூறிய பலனை உறுதிப்படுத்திக் கூறினார்.

அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கை களையும் எடுத்து விட்டிருந்ததால் அனைவரும் இந்நிகழ்ச்சி நடைபெற வாய்ப்பில்லை என நம்பினர். ஆண் காட்டுப் பன்றியோ வேறு எந்த ஒரு மிருகமோ இளவரசரை நெருங்க முடியாதபடி இளவரசர் தங்கியிருந்த அரண்மனை இராணுவ வீரர்களால் சூழப்பட்டிருந்தது. இளவரசர் ஏழாவது மாடியில்

அமர்த்தப்பட்டிருந்தார். அரசர் தம் மகன் மிகவும் பாதுகாப்புடன் இருப்பதாக நம்பினார். நேரமோ நெருங்கிக் கொண்டிருந்தது. மிகிரர் கூறியபடி நடந்துவிட்டால் அவருக்கு 'வராகர் பட்டம்' தருவதாக அரசர் அறிவித்தார். வீரர்கள் இளவரசரை அடிக்கடி சென்று பார்த்து வந்தனர். ஐந்து மணி அளவில் இளவரசரைச் சென்று பார்த்துவந்த வீரர்கள் இளவரசர் உயிரோடிருப்பதாக அரசரிடம் கூறினர். உடனே அரசர் மிக்க ஆவலுடன் மிகிரரைப் பார்த்தார். உடனே மிகிரர், "இளவரசர் அறிவிக்கப்பட்டதுபோல் இறந்து கிடக்கிறார்" என்று கூறுகிறார். உடனே அரசரும், அமைச்சரும் விரைந்து சென்று இளவரசரைப் பார்க்க இளவரசர் மாண்டு கிடந்தார். ஒரே இடத்தில் இருக்கப் பிடிக்காமல் பொறுமையிழந்த இளவரசர், நடமாடிக் கொண்டிருந்தபோது அக்குறிப்பிட்ட நேரத்தில் வேகமாக அடித்த காற்றினால் அவ்வறையில் இருந்த காட்டுப்பன்றியின் சிலை அவர்மேல் விழுந்ததனால் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடக்கிறார் என்பதை அரசர் உணர்கிறார். ஆண் காட்டுப்பன்றியால் இறப்பார் என்ற சோதிடச் செய்தி உண்மையாக்கப்பட, ஒருவகைக் காட்டுப் பன்றி என்ற பொருளுடைய வராகன் என்பது மிகிரர் பெயருடன் சேர்க்கப்பட்டு வராகமிகிரர் என்றழைக்கப்பட்டார்.

-Fundamental Principles of Astrology, PP.19-21

## இணைப்பு: 17

# ஜப்பானியரும் நாடி சோதிடமும்

ஜப்பானியர் நாடி சோதிடத்திலும், மகான்களின் மகிமையிலும் நாட்டம் உடையவராய் உள்ளனர்; இவை தொடர்பான நூல்கள் சிலவற்றையும் எழுதியுள்ளனர். இத்தகைய நூல்களுக்கு நல்ல வரவேற்பு இருப்பதால் இத்தன்மைய நூல் ஒன்றினை வெளியிடும் நோக்கில் 'மானிட உடல்சார்ந்த அறிவியல் நிறுவனத்தின் (The Research Institute of Human physical Science, Daiichi VI Bldg -1-30-6, Yoyogi, Shibuya-ku, Tokyo, 151 Japan) தலைவரான கென்மூரிட்டா (Kenmorita) என்பவரும், உடன் பணிபுரிபவரான திருமதி முட்சுகோ நக்கட்டோ (Mrs. Mutsuko Nakato) என்ற ஆய்வாளரும் இந்தியாவிற்குக் களப்பணிக்காக வந்து இருந்தனர். அவர்கள் இமாலயம், டெல்லி, லக்னோ, பெங்களூர் புட்டபர்த்தி, தமிழ்நாடு ஆகிய இடங்களில் களப்பணி மேற்கொண்டனர்.

இவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தருவதற்கு முன்பாக இவர்களது மொழிபெயர்ப்பிற்கு உதவி செய்ய முன்வந்த பெண்மணி வைஜயந்தி என்பவர், அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம் சென்று அங்கு நாடி சோதிடச் சுவடிகள் உண்டா எனக்கேட்டு இருக்கின்றார். அப்போது நூலகக் காப்பாட்சியாளர் டாக்டர் சௌந்தரபாண்டியன், 'என்னை அணுகினால் இது தொடர்பான செய்திகள் கிட்டும்' என்று கூறியதால் அம்மொழிபெயர்ப்பாளர் என்னை வந்து பார்த்தார். அவர் 20.7.96 அல்லது 21.7.96 நாளில் என்னை மீண்டும் களப்பணிக்கு வரும் ஜப்பானியர் இருவருடன் வந்து பார்ப்பதாகக் கூறிச் சென்றார். நாடி சோதிடம் குறித்த களப்பணியைத் தமிழ்நாட்டில் 17.7.96 முதல் 21.7.96 வரை மேற்கொண்ட அம்மூவரும் 21.7.96 அன்று இறுதி நாட் களப்பணியாக என் இல்லத்திற்கு வந்தனர்.

காஞ்சிபுரம், வைத்தீசுவரர் கோவில், தாம்பரம் (அகத்தியர்நாடி) என நாடி பார்க்கும் இடங்கள் பலவற்றிற்குச்

சென்று நாடி கேட்ட இவர்கள் தாம்பரத்தில் அவர்களுக் குரியது என்று கூறிப் படித்துக் காட்டிய சுவடிகளைப் புகைப்படம் எடுத்து வந்திருந்தனர். அப்புகைப்படத்தில் இ.சி.ஜி. (E.C.G.) வரைபடத்தில் வளைவாகக் கோடுகள் இருப்பது போன்று இருந்தன. இவை தமிழ் எழுத்துகளாக மட்டுமல்ல வேற்றுமொழி எழுத்துகளாக இருப்பதற்கும் வாய்ப்பில்லை. இவர்களுக்குரிய இச்சுவடி ஏடுகளைப் படித்துக் காட்டியதுடன் அதிலுள்ள செய்திகளை நோட்டுப் புத்தகத்தில் எடுத்தெழுதிக் கொடுத்துள்ளனர். புகைப் படத்திலுள்ள செய்திதான் நோட்டில் எழுதப் பட்டுள்ளதா என்பதை நன்கு சுவடி படிக்கத் தெரிந்தவர்களும் ஊகிக்கக் கூட முடியாத நிலையே இருந்தது. ஆய்விற்காக வெளிநாட்டிலிருந்து வந்து பெரும் செலவு செய்து திரும்பும் அவர்களுக்குக் கிடைக்கும் செய்தியின் தரம் இவ்வாறு அமைதல் சிந்திக்க வேண்டிய ஒன்று.

அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திற்கு என்னுடன் வந்து அங்குள்ள ஸப்தரிசி நாடிச் சுவடிகளை அவர்கள் படம் எடுத்தபோது தமிழ் புரியவில்லையெனினும் எழுத்துகளின் வடிவம் அனைத்து ஏடுகளிலும் தெளிவாக இருப்பதை அறிந்து மகிழ்ச்சியுற்றனர். பன்னிரண்டு இலக்னங்களுக்கு முள்ள இச்சுவடிகளைச் சுவடி படிக்கத் தெரிந்த அனைவரும் படிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது; சோதிட அறிவு ஓரளவு இருப்பின் பதிப்பிக்கவும் முடியும். ஆயின் அங்குள்ள துருவ நாடி என்ற சோதிடச் சுவடியிலுள்ள எழுத்துகளைப் படிக்க முடியுமே ஒழியப் பதிப்பித்தல் என்பது சோதிடம் தெரிந்தவர்களுக்கும் கடினமான பணியாகவே இருத்தல் கூடும்.

அவர்களுக்குக் கூறப்பட்ட நாடி சோதிடப் பலன் பற்றி வினவியபோது எண்பது விழுக்காடு சரியாக இருந்ததாகக் கூறினர். இருபது விழுக்காடு ஏன் சரியெனப்படவில்லை என்று வினவியபொழுது, ''எதிர்காலம் பற்றிக் கூறும்போது பரிகாரம் செய்வதால் சரியாகிவிடும் என்பதுபோல் கூறியதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை'' என்று கூறினர். மேலும் தாம்பரத்தில் இவர்கள் நாடி சோதிடப் பலன் கேட்ட அன்று அங்குவந்திருந்த வேறு ஒரு ஜப்பானிய மாணவருக்குக் 'கர்மா

காரணமாய் விபத்து ஏற்படப் போவதாகக் கூறி அதற்குப் பரிகாரமாக அவர் ஐந்து கோவில்களுக்குப் பணம் செலுத்தினால் கர்மம் தீரும்' என்று நாடி சோதிடப் பலன் கூறப்பட்டதாகக் கூறிய அவர்கள், பணம் செலுத்துவது போன்ற பரிகாரங்களால் கர்மவினை எப்படித் தீரும்? இதனை எங்களால் ஏற்க முடியவில்லை என்றும் கூறினர். ஆயினும் பரிகாரத்தால் ஒருவேளை அவர் விபத்திலிருந்து தப்பலாம் என்ற நம்பிக்கையும் அவர்களிடையே இல்லாமல் இல்லை. எனவே கர்மவினையை நம்பும் இவர்களுக்குப் பரிகாரத்தால் கர்மவினை எப்படித் தீரும் என்பதைத் தெளிவாக உணர்த்த வேண்டிய கடமை நம்முடையதாகின்றது. ஏனெனில் ஜப்பானியர் மட்டுமன்றி வெளி நாட்டவர் பலரும் இன்றும் இங்குவந்து நாடி பார்த்துச் செல்லும் நிலை நிலவுவதால், நாளடைவில் நாடி சோதிடத்திலுள்ள குறைபாடுகள் இவர்களைச் சென்றடையும் போது இக்குறைபாடுகள் தமிழ்நாட்டிற்கே ஒரு குறைவை ஏற்படுத்தக் கூடிய நிலை உருவாகலாம்

அவர்கள் என்னிடம் பல வினாக்களை, ஐயங்களை வினவினர். களப்பணியை முடித்து மறுநாள் நாடு திரும்ப இருந்த அவர்கள் மனத்தில் ஐயங்களும், குழப்பங்களும் இருந்த போதிலும் தங்களது களப்பணிவழி அறிந்த செய்திகளை, ஐயத்தையும் வினாவையும் எழுப்பியவற்றை ஒதுக்கிவிட்டு நூலை எழுதி யிருப்பர் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் நாடி பார்க்கும் இடங்களில் மட்டுமே அறிந்து சென்று எழுத வந்திருந்த அவர்கள் எதிர்பாராமல் சந்திக்க வாய்ப்புக் கிடைத்ததால் மட்டுமே என்னைப் பயன்படுத்திக் கொண்டனர்.

அகத்தியர் வாழ்ந்த காலம் எது? இவர் தம் வாழ்நாளில் என்ன சாதனை புரிந்தார்? மூலிகை மருத்துவத்திற்கு அவரது சாதனை என்ன? இவர் எப்படி பிறந்த, பிறக்கப் போகும் அனைவர்க்கும் நாடி சோதிடம் எழுதியிருக்க முடியும்? சிவன் கட்டளையிட்டதால் அகத்தியர் நாடி சோதிடத்தை எழுதினார் என்று சொல்லப்படும் புராணச் செய்தி உண்மைதானா? அகத்தியரல்லாத பிறர் நாடி சோதிடம் எழுதி இருக்கின்றனரா? கட்டை விரல்ரேகையை ஏன் எடுக்கின்றனர்? நாடி சோதிடரில்

ஒருசிலர் கேள்வி கேட்கத் தொடங்கியவுடன் அல்லது படம் எடுக்கத் தொடங்கியவுடன் பயப்படத் தொடங்கியது ஏன்? அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ள நாடி சோதிடங்கள் எந்தக் காலத்தில் எழுதப்பட்டவை? எந்தெந்தப் பகுதியில் வாழும் மக்களுக்காக எழுதப் பட்டவை? குறிப்பிட்ட ஒரு சாதகத்திற்குப் பொதுவாக என்னென்ன செய்திகள் தரப்பட்டுள்ளன? சாதகத்திற் குரியவரின் பெயர், ஊர், குடும்பத்தலைவர் பெயர், பற்றி வருகின்றனவா? முற்பிறப்பில் சாதகர் செய்த குற்றங்கள், பாவங்கள் அவற்றைத் தீர்க்கும் பரிகாரங்கள் முதலியன இடம் பெறுகின்றனவா? இந்நூலகம் இச் சுவடிகளை வெளியிட்டதன் நோக்கம் என்ன? அதன் வழி வெளிப்படுத்திய ஆய்வுக் கருத்துகள் என்ன என்பன போன்ற பல கேள்விகளை அவர்கள் கேட்ட போதிலும் நாடி சோதிடத்தின் வழி சரியான பலனை அறிதற்கியலும் என்ற நம்பிக்கை அவர்களிடையே ஆழமாக இருக்கவே செய்தது.

அவர்களது கேள்விகள் பலவற்றிற்கும் பதில் கூறியதோடு நாடி சோதிடம் பற்றிய விளக்கங்கள் பலவற்றையும் கூறி இதில் ஒருசில குறைபாடுகள் காலப்போக்கில் தோன்றி விட்டதே தவிர இது ஓர் உன்னதமான அரிய கலை என்பதைத் தெளிவாக அவர்களுக்கு உணர்த்தினேன். அவர்கள் “நீங்கள் கூறிய செய்திகளை உங்கள் பெயருடன் நாங்கள் வெளியிட இருக்கும் நூலில் எழுதுகிறோம். நூலை வெளியிட்டபின் உங்கட்கு அனுப்பி வைக்கிறோம்” என்றனர். உடனே எனக்கு, நான் சொன்ன பதில்களைச் சரியாக உள்வாங்கி மொழிபெயர்ப்பாளர் கூறியிருப்பாரா, மொழி பெயர்ப்பாளர் கூறியவற்றை ஜப்பானியர் புரிந்து தவறின்றிக் குறிப்பெடுத்துக் கொண்டனரா என்ற ஐயப்பாடு எழுந்ததால் நான் அவர்களிடம், “இது தொடர்பான விளக் கங்களை உங்களுக்குக் கடிதத்தில் எழுதி அனுப்புகிறேன்” என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தேன். அதன்படி 4.8.96 அன்று அவர்களுக்கு ஆறுபக்க அளவிலான குறிப்புகளுடன் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தேன். 21.7.96இல் இங்கு எடுத்த புகைப்படங்கள் சிலவற்றை அவர்கள் அனுப்பி வைத்தனர். அதில் ஜப்பானியர் இருவரும் இடம்பெற்றுள்ள புகைப்படம் ஒன்று இங்கு தரப் பெற்றுள்ளது.

ஜப்பானியர் பலர் இங்குவந்து நாடி சோதிடப் பலனறிந்து மனநிறைவை எட்டியதாகவும், இன்றும் ஜப்பானியர் பலர் இங்குவர நேரும்போது நாடி சோதிடத்தின்வழி ஆர்வத்துடன் பலனறிந்து செல்வதாகவும் அவர்கள் கூறினும், அவர்கள் நாட்டில் குழந்தை பிறந்த நேரத்தைக் கொண்டு கணிக்கும் சாதகச் சோதிடம் பற்றிய அறிவும் சிந்தனையும் இருப்பதாகத் தெரியவில்லை.

நாடி சோதிடத்தை அறிவியலோடு பொருத்திப் பார்த்தல் என்ற நோக்கில் ஆய்வை மேற்கொண்ட இவர்கள், இது பற்றிய ஆய்வு நம் நாட்டில் ஆழமாக இல்லாத நிலையில் என்ன பெரிய ஆய்வு உண்மைகளைக் கூறிவிட முடியும்? மிகக் குறுகிய காலத்தில் மேற்கொண்ட இவ்வாய்வு முடிவுகள் எந்த அளவிற்குச் சரியானதாக அமைய முடியும்! 'நாடி சோதிடர் பலரை நேரில் சென்று பார்த்தோம். அவர்கள் கூறுகின்ற பலன்கள் பலருக்கும் சரியாகவே இருக்கின்றன. பரிகாரத்தால் கர்மவினை தீருமென்பது அவ்வளவு எளிதில் ஏற்கக் கூடியதாய் இல்லை' என்ற மையக் கருத்தைப் படங்களுடன் விளக்கமுற வெளியிட, இலட்சக்கணக்கில் செலவு செய்ய இவர்களை அனுப்பிய நிறுவனம் முன் வந்துள்ளது. இது போன்ற செலவுகள் முன்பும் நடந்துள்ளது. இனியும் தொடரும்.

நம் நாட்டு மக்கள் பலரும்கூட, நாடி சோதிடப் பலன்கள் பெரும்பாலும் சரியாக இருந்தன என்று கூறுவதனை இன்றும் காணமுடிகின்றது. பல இடங்களில் ஓரிரு சுவடிக் கட்டுகளை மட்டுமே வைத்துக்கொண்டு நாடி சோதிடப் பலன் கூறப்படுகின்றது. அவர்களைத் தேடி வரும் நூற்றுக்கணக்கான மக்களின் சாதகம் இவ்வளவு குறைந்த சுவடிக் கட்டுகளுள் எங்ஙனம் அடங்கிவிடமுடியும். நாடி சோதிடம் படிக்கும் பரம்பரையின்வழி வந்தவர்களாக இல்லாத சிலரும் இன்று நாடி படித்துப்பலன் கூறுகின்றனர். நாடி படிப்பதற்குரிய ஆற்றலை மகான்களின் அருளாசியால் பெற்றதாக ஒருசிலர் கூறுகின்றனர். எனவே நாடி படிப்பவரில் ஒருசிலர் எதிரிலுள்ளவரின் வாழ்க்கை நிகழ்வுகளை, குண இயல்புகளைத் தம் உள்ளுணர்வின் ஆற்றலால் அறிந்து கூறும் திறம்பெற்றவராகவும் இருத்தல்



கூடும். இந்நாடி சோதிடத்தில் குறைபாடுகள் பல இருப்பினும் இன்றும் மக்களை வியக்கச் செய்யும் பலன்கள் இதில் கூறப்பட்டு வருவதை மறுத்தற்கியலாது.

காட்டாகச் சில ஆண்டுகளுக்குமுன் ஒரு ஜப்பானியப் பெண்மணி வைத்தீஸ்வரன் கோவிலில் நாடி சோதிடம் கேட்டிருக்கிறார். 'போன பிறவியில் குந்தவையாகப் பிறந்திருக்கின்றாய்' என்ற நாடி செய்தியைக் கேட்ட அவர், 'தனக்குக் கூறிய செய்திகள் சரியாக இருந்ததால் இதுவும் சரியாக இருக்கலாம்' என நினைத்து ஆனந்தப் பரவச மடைந்து தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பெருந்தொகை நன்கொடை அளித்தார். கோயில் நிர்வாகம் அவரைக் கௌரவித்தது.

இதுபோலவே முதுகலை படித்து வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் நாடிகேட்டபோது, நீ தமிழ் நாட்டிலுள்ள ஆதீனத்திற்குப் 'பீடாதிபதி' ஆவாய் என்று கூறப்பட்டது போல அவரும் பீடாதிபதியாகி யுள்ளார்.

மேலும் ஒருவர் நாடி கேட்டபோது தஞ்சையிலுள்ள நூலகம் ஒன்றிற்குக் கீழ்நிலைப் பதவிக்கு வேலைக்காகச்

செல்லும் போது தேர்ந்தெடுக்கப்படமாட்டாய். மீண்டும் அதே நூலகத்தில் உயர்பதவிக்காகச் செல்லும் போது தேர்ந்தெடுக்கப் படுவாய் என்று கூறப்பட்டது போல் நடந்து இன்று தஞ்சையிலுள்ள நூலகத்தில் பணிபுரிகின்றார். இங்ஙனமான பலன்களைத் தொகுத்தால், பல்லாயிரக் கணக்கான பலன்களைத் தொகுத்தல் கூடும்.

பொதுவாகப் பலன்கள் கடந்த காலத்திற்குப் பொருந்தி வருகின்றன. எதிர்காலப் பலன்கள் அவ்வளவு சரியாக வருவதில்லை. நாடிபடிப்போர் தம்முடைய சித்தியைக் (Mystical Power)கொண்டு நாடி படிக்கிறார் என்றும், இது பரம்பரை பரம்பரையாய் ஒரு சில குடும்பத்தவரின் கலைத் தொழிலாய் இருந்து வருகின்றது என்றும், மகான்கள் அல்லது முனிவர்கள் தாங்கள் விரும்பும் ஒருவருக்கு இத்தகைய சித்து சக்தியை அளிக்கிறார் என்றும் நம்பப்படுகின்றன. வெள்ளைத் தாளைக் கையில் கொண்டு சரியாகப் படிக்கும் சித்து பெற்றவரும் உள்ளனர். எனவே, 'நாடிசோதிடம் என்பது முன்பு எழுதப்பட்ட ஒன்று' என்ற அளவில் மட்டும் இதன் ஆய்வுப்பரப்பு நின்றுவிடாது.

சித்து (Mystisium), சித்தர் பற்றி இதுவரை வெளிவந்துள்ள அனைத்து நூல்களையும் திரட்டி அதிலுள்ள அறிவிற்கு ஒப்பக் கூடிய கருத்துகளைத் தொகுத்து அத்தொகுப்பை நாடி சோதிடத்தோடு ஒப்பிட்டு, உயர்நிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவை தமிழிலும், உலகமொழிகள் அனைத்திலும் வெளிவருதல் வேண்டும். தமிழகத்திலுள்ள நாடி சோதிடச் சுவடிகள் அனைத்தின் விபரமும் தொகுக்கப் பெறுதல் வேண்டும்.

மனிதனுடைய உள்மனம் வலிமையுடையது. மனிதன் தன் உண்மையான பலத்தை அறியாதவன் என்பதை ஆய்வுகள் பல உண்மையென நிறுவியுள்ளன. எனவே மனிதனின் உள்மன ஆற்றலுடன் தொடர்புடைய வானவியல், சோதிடவியல், யோகம், தியானம், சித்த மருத்துவம் ஆகியன பற்றிய ஒருங்கிணைந்த சிந்தனைகள் தொகுக்கப்பட்டுத் தமிழில் சிறந்த ஆய்வு நூல்கள் உருவாகி, பின் அவை மொழி பெயர்ப்பின்வழி உலக அரங்கை எட்ட வேண்டும்.

-தி. மகாலட்சுமி

★ ★ ★

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

## வெள்ளிவிழா ஆண்டு வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | Mysticism of love in Saiva Thirumurais | 50.00 |
| 2. | ஆய்வுச் சிக்கல்களும் தீர்வுகளும் | 85.00 |
| 3. | தமிழர் காசு இயல் | 45.00 |
| 4. | திருமுறை இலக்கியம் | 50.00 |
| 5. | அழகியல் சிந்தனைகள் | 30.00 |
| 6. | இலக்கியத்தின் நோக்கமும் பயனும் - தொகுதி 1 | 65.00 |
| 7. | இலக்கியத்தின் நோக்கமும் பயனும் - தொகுதி 2 | 60.00 |
| 8. | சென்னை - 1639க்கு முன் பின் | 35.00 |
| 9. | பெ.நா. அப்புசாமியின் அறிவியல் கட்டுரைகள் | 75.00 |
| 10. | Collected Papers of Thaninayagam Adigal | 100.00 |
| 11. | Silver Jubilee Special Lectures | 60.00 |
| 12. | முத்தாரம்மன் கதை | 85.00 |
| 13. | சந்திரபதன் கதை | 40.00 |
| 14. | கன்னிவாடி நரசிம்ம நாயக்கன் வளமடல் | 20.00 |
| 15. | கருணையம்மன் அந்தாதி | 22.00 |
| 16. | ஒப்பிலக்கியம் - கொள்கைகளும் செயல்முறைகளும் | 15.00 |
| 17. | இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள் | 30.00 |
| 18. | Work Book - Written Tamil | 50.00 |
| 19. | திருக்கோயில்களில் தொழில் - சமுதாய உறவுகள் | 25.00 |
| 20. | விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள் | 30.00 |
| 21. | தமிழ்க் காட்சி நெறியியல் | 46.00 |
| 22. | கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சுவடிகள் அட்டவணை | 85.00 |
| 23. | அமிர்த மதன கூத்து நாடகம் | 90.00 |
| 24. | மூலிகைக் கற்பங்கள் | 80.00 |
| 25. | தொல்காப்பியம் புறத்திணையியல் - பகுதி-1 | 50.00 |
| 26. | தொல்காப்பியம் புறத்திணையியல் - பகுதி-2 | 65.00 |
| 27. | சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 80.00 |
| 28. | சித்த மருத்துவ மணிகள் | 75.00 |
| 29. | காத்தவராய நாடகம் | 30.00 |